# தாய்வீடு

THAIVEEDU JULY 2022 ஜூலை www.thaiveedu.com

## தடைகளைத் தகர்த்த தமிழினப் படுகொலை அறிவூட்டல் கிழமை

-கந்தசாமி கங்காதரன்





## சமூக சமத்துவப் போராளி தெணியான்




## அரசியல், பொருளாதார நெருக்கடியில் இலங்கை

-நெல்லை ஜெயசிங்


NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law


SRI NADARAJASUNDARAM
Sales Representative
416-276-6666
RE/MAX ACE
REALTY INC. BROKERAGE
1286 Kennedy Rd, Unit 3 Toronto, ON, M1P 2L5


Siva Shanmuganathan
Broker
416-545-7482
Joy Selvanayagam
Broker
416-358-6928
Knowledge. Experience. Success
Siva & Joy Real Estate Team
HomeLife/Future Realty Inc., Brokerage *
205-7 Eastvale Dr., Markham ON, L3S 4N8
Bus: 905.201.9977 Fax: 905.201.9229
*Independently Owned and Operated


Your Trusted Realtor
Buying | Selling | Leasing | Investing
RE/ON
Homes Realty Inc.
Brokerage
FREE HOME EVALUATION
Justin William
Broker of Record/ Owner
Dir 416.803.7344
www.reon.ca


RE/MAX ACE
REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Broker
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com


MORTGAGE ALLIANCE
Best Rates & Advice You Can Trust!
Lic# 10530
உங்கள் அனைத்து அடைமானக்கடன் தேவைகளுக்கும்
Purchase | Refinance | Renewal
Ram Krish
MORTGAGE AGENT
416-427-5555
795 Milner Ave D2, Scarborough, ON M1B 3C3


Tennyson Dilipkumar
Realtor
416-896-8989
tennysondilipkumar@gmail.com
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife Galaxy


உடனடி வேலை வாய்ப்பு!
Toronto தொழிற்சாலையில்
காலை, மாலை, இரவு நேர வேலை வாய்ப்புகள்
Shinol inc.
போக்குவரத்து வசதிகள்
வழங்கப்படும்
தொடர்புகளுக்கு - 416-286-6375
(திங்கள் முதல் வெள்ளி 9:00மணி முதல் 5:00மணி வரை)


MORTGAGE ARCHITECTS
THEVEN KANKESU
Mortgage Agent FSCO Lic.: M08008759
1193A Brimley Rd. #7
Toronto, Ontario, M1C 5G3
T: 416.939.8789
F: 416.439.1965
theven.kankesu@mtgarc.ca
thevenk1.tk@gmail.com


Vela Subramaniam
416 786 0760
vela4homes@gmail.com
vela4homes
www.vela4homes.com
HOMELIFE


VENTHAN KANDIAH
Sales Representative
Cell : 6476286109
Residental
Commercial
Investment

**தாய்வீடு**

**Publisher & Editor**
P.J. Dilipkumar
**பதிப்பாளர், ஆசிரியர்**
பி.ஜெ. டிலிப்குமார்

**நிறுவன வரைகலைஞர்**
கருணா

**ஆலோசகர் குழு**
அருண்மொழிவர்மன்,
சேரன்,
துஷி ஞானப்பிரகாசம்,
ஞானம் லெம்பட்,
கந்தசாமி கங்காதரன்,
பொன்னையா விவேகானந்தன்,
ரவிச்சந்திரிகா.

**ஓவியங்கள்**
டிராட்ஸ்கி மருது (இந்தியா),
ஜீவா (இந்தியா),
K. கிருஷ்ணராஜா (இங்கிலாந்து),
ரமணி (இலங்கை),
சௌந்தர் (இங்கிலாந்து),
றஷ்மி (இங்கிலாந்து).
எஸ். தர்மதாஸ் (இலங்கை).

**புகைப்படங்கள்**
K. கிருஷ்ணராஜா (இங்கிலாந்து),
சர்வேசன்,
துசியந்தன் துரைரத்தினம்.

**தட்டச்சு**
சாம் டானியல்.

**ஒப்புநோக்கல்**
கௌரி,
கந்தசாமி கங்காதரன்.

**பொது உறவுத் தொடர்பு**
குமணன் தம்பிஐயா

**ரொறன்ரோ விநியோகம்**
இராமநாதன் ரூபன்,
சசி,
மெய்யழகன்.

**மொன்றியால் தொடர்பு**
சுகுமாரன் சின்னையா.

**ஒட்டாவா தொடர்பு**
அலெக்ஸ் சிவசம்பு: 1-613-276-7253

**அஞ்சல் முகவரி**
Editor
P.O.Box #63581
Woodside Square
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0

Tel :416-646-3422, 416-857-6406
Fax : 416-849-0594
Web : www.thaiveedu.com
E-mail : info@thaiveedu.com



பெயர் தோற்றாத கட்டுரைகளுக்கு ஆசிரியரே பொறுப்பு.
ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியோரே பொறுப்பு.


## மடைமாற்றப்படும் போராட்டம்

அவுஸ்திரேலிய ஆண்கள் துடுப்பாட்ட அணி இலங்கை அணிக்கெதிராகப் போட்டியிடுகிறது. இந்தியப் பெண்கள் துடுப்பாட்ட அணியும் இலங்கைக்கெதிராகப் போட்டிகளிலே ஈடுபட்டுள்ளது. போட்டிகள் கொழும்பிலும் கண்டியிலும் நடைபெறுகின்றன. போட்டி அரங்குகளினுள்ளே கோலாகலமும் குதூகலமுமாக சிங்கக் கொடிகளை உயர்த்தியசைத்த-படி அரங்கம் நிறைந்த இரசிகர்கள் களிப்புடன் காட்சி தருகிறார்கள்.

இந்தக் கொண்டாட்டத்தைப் பார்ப்பவர்கள் காலிமுகத்திடலில் இப்போதும் அதே சிங்கக் கொடிகளுடன் போராட்டத்திலீடுபட்டுள்ள மக்களைப் பற்றி மறந்துவிடுவது எளிது. கொழும்பிலும், கண்டியிலும், மட்டுமல்ல நாட்டின் பிற பாகங்களிலும் எரிபொருளுக்காகவும் உணவுப் பண்டங்களுக்காகவும் மணிக்கணக்காக நாட்கணக்காக வரிசைகளில் நின்றுவாடும் மக்களுக்கும் நாட்டின் இன்னொரு பாகத்தில் இடம்பெறும் இந்தக் களியாட்டங்களில் திளைப்போருக்குமிடையேயான வர்க்கவேறுபாடு வெள்ளிடை மலையாகத் துலங்குகிறது.

இராஜபக்ச அரசுக்கெதிரான போராட்டம் ஆரம்பமானது முதல் போராட்டத்தைத் திசை-திருப்பவும் போராடுபவர்களின் கவனத்தைத் குலைக்கவும் அரசு பல வழிகளிலும் முயன்றே வந்திருக்கிறது. இந்தக் களியாட்டங்களும் அரசின் முயற்சிக்கு உதவும். அதே வேளை, இதைவிடவும் நச்சுத்தனமான ஒரு முயற்சியும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. 'போராட்டத்தின் பின்னணியிலிருந்து நிதியாதரவு வழங்கி அதை இயக்குபவர்கள் புலம்பெயர் நாடுகளிலுள்ள விடுதலைப் புலிகள் ஆதரவுத் தமிழர்களே' என்ற வதந்தி சிங்கள மக்களிடையே பரப்பப்பட்டு வருவதே அது. இதன் மூலம் மீண்டும் தமிழர்களை சிங்கள மக்களுக்கான பொது எதிரிகளாக்கி, அவர்களைத் தம்மிடையேயான வர்க்க வேறுபாடுகளை மறக்கவைத்து ஓரணியில் திரட்டி அதில் குளிர்காய்வதோடு அதிகாரத்தையும் தக்கவைத்துக்கொள்ள அரசு எடுக்கும் முயற்சியிது.

மூன்று மாதங்களுக்கு மேலாகத் தொடரும் 'கோத்தா கோ கம' போராட்டம், எப்போதும் சிங்கள மக்களின் போராட்டமாகவே இருந்துவந்திருக்கிறது. இதே போன்றதொரு போராட்-டத்தை தமிழர்கள் எந்தக் காரணத்தைக் கொண்டும் முன்னெடுக்க முடியாதென்பதும் அப்படி முன்னெடுக்கத் துணிந்தால் அரசு கோரக்கரங்கொண்டு அடக்கும் என்பதும் 1956-இலே தனிச்சிங்களச் சட்டத்துக்கெதிராக இதே காலிமுகத்திடலில் தமிழர்கள் சத்தியாக்கிரகம் நடத்த முற்பட்டபோதே நிறுவப்பட்டுவிட்ட விடயம். இப்போதும் அதில் எந்தவித மாற்றமுமில்லை. ஆகவேதான், சிங்கள மக்களின் இந்தப் போராட்டத்தில் தமிழர்கள் பெரும்பாலும் அக்கறை காட்டவில்லை. ஆதரவு வழங்கிய சில தமிழர்களும் பெரும்பாலும் நேரடியாகப் போராட்டத்தில் ஈடுபடவில்லை. அப்படியிருந்தும், போராட்டத்தின் பின்னணியில் தமிழர்களே உள்ளார்களென அரசு கதை கட்டுவது உள்நோக்கம் மிக்கது.

இதேநேரம், வடக்கிலும் கிழக்கிலும் தாமுண்டு தம்பாடுண்டென அத்தியாவசியப் பொருட்க-ளுக்காக வரிசைகளில் காத்திருக்கும் தமிழர்கள் மீது இராணுவத்தினராலும் காவல்துறை-யினராலும் வன்முறையும் அடாவடித்தனமும் கட்டவிழ்த்து விடப்படுகிறது. காரணகாரியம் எதுவுமின்றி, தமிழ் மக்கள் தாக்கப்பட்ட சம்பவங்கள் பல அண்மைக் காலங்களில் நடந்தேறியுள்ளன. அந்த இடங்களுக்குத் தகவல் திரட்ட விரைந்த தமிழ் ஊடகவியலாளர் களையும் இராணுவத்தினரும் காவல்துறையினரும் தாக்கவும் அச்சுறுத்தவும் முனைந்துள்-ளார்கள். வடக்கிலும் கிழக்கிலும் எத்தனை தமிழர்களுக்கு ஒரு சிங்களப் படையினர் நிறுத்தப்பட்டுள்ளார் என்ற விகிதாசார விபரம் அரசிடமே இருக்கிறதோ தெரியவில்லை.

இன்னொரு புறம், நாட்டின் எந்த மூலையிலும் கட்டுமானப் பணிகளுக்கான மூலப் பொருட்-களுக்கும் எரிபொருட்களுக்கும் மாபெரும் தட்டுப்பாடு நிலவிவரும் நிலையில், தமிழர் பகுதிகளில் புத்தர் சிலைகளை நிறுவுவதற்கும் பௌத்த கோவில்களை நிர்மாணிப்பதற்கும் மட்டும் எங்கிருந்தோ தங்குதடையின்றி வளங்களும் மூலப்பொருட்களும் கிடைக்கின்றன. இதற்கு குருந்தூர்மலை ஓர் உதாரணம் மட்டுமே. அதை விடவும் பல இடங்களிலே இந்தப் பௌத்தமயமாக்கல் நடந்தேறுகிறது. இது தமிழர்களின் நிலத்தை அபகரிக்கும் நடவடிக்கை மட்டுமல்ல. இலங்கைத் தீவிலே தமிழர்களின் வரலாற்றையே மாற்றியெழுதும் முயற்சி. இதுவும் புதிதல்லவே. காலங்காலமாகத் தொடர்வதுதானே.

இவற்றையெல்லாம், தமிழர்களை மீண்டும் ஒரு கொதிநிலைக்குத் தள்ளி, போராடத் தூண்டி, அதன் மூலம் சிங்கள மக்களின் போராட்டத்தைத் திசை திருப்பி, மீண்டும் தமிழர்களைப் பொது எதிரிகளாகச் சிங்கள மக்கள் நோக்கும் நிலைக்கு இட்டுச்செல்லும் முயற்சிகளாகவே நோக்கவேண்டியுள்ளது.

அவுஸ்திரேலியாவின் மெல்பேர்ண் நகரில் இடம்பெற்ற 'கோத்தா கோ கம' ஆதரவுப் போராட்டத்தில், தமிழினப் படுகொலை நினைவுகூரல் துண்டுப்பிரசுரங்களை விநியோகித்த தமிழர்களுக்கு எதிராக அங்கிருந்த சிங்களவர்கள் சிலர் கக்கிய நஞ்சும், ஒன்ராறியோ அரசின் தமிழினப் படுகொலை அறிவூட்டல் கிழமைச் சட்டமூலத்துக்கெதிராகக் கனடாவின் சிங்கள அமைப்புகள் முன்னெடுத்த சட்டப்போராட்டமும், சிங்கள மக்களின் போராட்டத்தைத் தமிழர்கள் மீது திசை திருப்ப இராஜபக்ச அரசு அதிக முயற்சி எடுக்க வேண்டியதில்லை என்பதையே சுட்டுகிறது.

# தாய்வீடு இம்மாதத் தாய்வீட்டில்...


அரசியல், பொருளாதார நெருக்கடியில் இலங்கை 5
- நெல்லை ஜெயசிங்

மக்களின் தேவை:
வரலாற்றை மாற்றவல்ல அரசியலும்
தூரநோக்குள்ள தலைமையும் 9
- எஸ்.கே. விக்னேஸ்வரன்

தடைகளைத் தகர்த்த
தமிழினப் படுகொலை அறிவூட்டல் கிழமை! 12
- கந்தசாமி கங்காதரன்

பூட்டின் புதுக்க ஆற்றிய உரை 14
- மணி வேலுப்பிள்ளை

ஒஸ்கார் அடியும் அலோபீசியாவும் 18
- போல் ஜோசேப்

ஏட்டில் எழுதிவைத்தார்
அங்காதிபாதம் 400 21
- பால. சிவகடாட்சம்

ஒற்றை மாத்திரையில்
உடற் பயிற்சியின் பலன்கள்? 23
- சுப்ரமணியம் ஜெயசீலன்

சிறுதுளி பெருநட்டம் 25
- வேலா சுப்ரமணியம்

அதிவேக நவீன தொடர்வண்டிகள் 28
- குரு அரவிந்தன்

குடும்ப வன்முறை 30
- த. சிவபாலு

வாழ்க்கை வளம் பெற மூன்று கலைகள் 32
- குமார் புனிதவேல்

அக்கறை அக்கரையிலா? 34
சி. நற்குணலிங்கம்

அதிர்ஷ்டம் அழைக்கிறது... 36
- வேதநாயகம் தபேந்திரன்

வணிகவகுப்பும் ரெட்வைனும் 38
- குரு அரவிந்தன்

'Line 5'
நோர்வேஜிய நாடக அரங்கு: 41
- ரூபன் சிவராஜா

உலக வரலாறும் வெடிச்சிரிப்பும் 44
- ஓவியர் ஜீவா

பரஞ்சோதி ஆசிரியர் என்னும்
தன்னலமற்ற தொண்டர் 46
- பொன்னையா விவேகானந்தன்

ஐ.தி. சம்பந்தன் என்னும் தமிழ்த் தொண்டாளன் 48
- அன்னலட்சுமி இராஜதுரை

அங்கதச் சுவையுடன்
கவிதையை அணுகிய பொன். பூபாலன் 52
- மல்லியப்புசந்தி திலகர்

கட்டடக்கலையின் முன்னோடி
வி.எஸ். துரைராஜா 54
- வே. விவேகானந்தன்

றெஜினால்ட் செபரட்ணம் தம்பையா
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்
முதல் நூலகர் 56
- என். செல்வராஜா

சமூக சமத்துவப் போராளி

கொடியில் தலைசீவி நடந்த இளந்தென்றலே! 58
- தேவகி ரமேஸ்வரன்

'தெணியான்' கந்தையா நடேசன் 60
- அ. சண்முகதாஸ்

எனது தெணியான் 61
- எஸ். சிவலிங்கராஜா

தெணியான் சேர் மறைந்தார்! 61
- மேமன் கவி

தெணியானும் சென்றார் 62
- சி. மௌனகுரு

இலக்கியவாதி தெணியான்
ஒரு செயற்பாட்டாளர் 63
மா. கருணாநிதி

தெணியான்:
வடமராட்சி வாழ்வியலின் படைப்பாக்க ஆளுமை 64
- த. கலாமணி

முறையான மார்க்சியப் படைப்பாளி தெணியான் 65
- ந. இரவீந்திரன்

சமூகச் சிற்பியாக விளங்கியவர் 66
- ச. சிவஸ்ரீ

ஈழத்து இலக்கிய வெளியில் தெணியானின் சிறுகதைகள்
'மாத்துவேட்டி' தொகுப்பை முன்வைத்து... 67
- மு. அநாதரட்சகன்

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தில்
தெணியானின் வகிபாகம் 68
- லெ. முருகபூபதி

தேவரையாளிச் சமூக வரலாற்று எழுதியலில்
தெணியானின் வகிபாகம் 69
- இ. இராஜேஸ்கண்ணன்

விடைபெற்றது, இலக்கிய உலகின் பேராளுமை 71
- சிவஞானம் சிறீதரன்

'மரக்கொக்கு'ம்
நிலமேலாண்மைச் சமூகத்தின் சரிவும் 72
- மாதவி சிவலீலன்

ஈழத்து இலக்கிய உலகின்
தூண் ஒன்று சரிந்தது 73
- ந. அனந்தராஜ்

நினைவுத் தூபி 74
- தேவகாந்தன்

ஈழத்தில் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக
ஓங்கி ஒலித்த குரல் - தெணியான்! 75
- க. பரணீதரன்

காலத்தால் சாகாத தெணியானின்
படைப்புலகம் குறித்து ஒரு சிறுபார்வை! 76
- உமா ஷனிகா

வாழ்வை வரைந்த எழுத்தோவியன் தெணியான் 78
- திவ்வியராஜன்

தெணியான் என்னும் இலக்கிய ஆளுமை 79
- தாட்சாயணி

ஆசான் தெணியான் அவர்களுடன்
இறுதிவரை பயணித்தோம்! 80
- ஏ.ஜி. யோகராஜா

தெணியான் Sir! 81
- திரவியம் சர்வேசன்

பரந்த அனுபவம் 82
P. விக்னேஸ்வரன்

தேசிய இனப்பிரச்சினையும்
இலங்கையின் இடதுசாரி இயக்கமும் 88
ஆங்கில மூலம்: குமாரி ஜயவர்த்தன
தமிழாக்கம்: க.சண்முகலிங்கம்

சொல்லியதை எழுத்தில் வைத்தார் 95
- த. சிவபாலு

சொல்லப்படாத கதைகள்
சொல்லித் தீர்ந்தபொழுது 98

ஒரு மருத்துவரின் மருத்துவமனை நாட்கள் 100
- செ. யோகராசா

நீல. பத்மநாபனின் புனைவுலகு 103
- சு. வேணுகோபால்

ஆன்மாவும் புறத்தடங்களும் 106
- நாஞ்சில் நாடன்

பத்துப்பாட்டில் பட்டினப்பாலை 109
- பொன்னையா விவேகானந்தன்

இசைத் தமிழ்ப் பாடற்பரப்பும்
அவற்றின் சமகாலப் பயன்பாட்டு நிலைகளும் 112
- கௌசல்யா சுப்பிரமணியன்

அகழியில் விழுந்த முதலையாகாமல்... 116
- கிருங்கை சேதுபதி

தமிழியல் ஆய்வுகள் - வரலாறும் வளர்ச்சியும் 120
- நா. சுப்பிரமணியன்

கம்பனின் கருவூலம் திறந்து... 126
மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா

ஒத்த மரம் 129
- நிரேஷ் ரட்ணம்

சாம்பரில் திரண்ட சொற்கள் 132
- தேவகாந்தன்

தோப்புக்குள் 138
றியுனோசுகே அகுராகாவா
தமிழில்: என்.கே. மகாலிங்கம்

பனிவிழும் பனைவனம் 143
- செல்வம் அருளானந்தம்

சர்வதேச உறவு 146
- அகரன்

# அரசியல், பொருளாதார நெருக்கடியில் இலங்கை

- நெல்லை ஜெயசிங்

கடலால் சூழப்பட்ட, 65610 சதுர கிலோமீட்டர் பரப்பளவைக் கொண்ட இலங்கை, தமிழகத்திற்கு மிக அருகாமையில் உள்ள ஒரு சிறிய தீவு. 2 கோடிக்கும் சற்று அதிக மக்கள் தொகை கொண்ட இலங்கையில் இன அடிப்படையில் சிங்களவர் 74.9%, இலங்கை தமிழர் 11.2%, இஸ்லாமியத் தமிழர் 9.2%, மலையகத் தமிழர் 4.2% என்ற விகி-தத்தில் வாழ்ந்து வருகின்றனர். சிங்களவர்களைத் தவிர ஏனைய மூன்று வகுப்பினரும் தமிழ் மொழி சார்ந்தவர்களாவர்.

பல இனத்தவர்கள் வாழும் இலங்கையில் வரலாறு காணாத அரசியல், பொருளாதார நெருக்கடி அண்மையில் ஏற்பட்டுள்ளது. ஆசிய கண்டத்தின் சிறிய தீவான இலங்கை வறுமை உள்ள நாடாக கடந்த காலங்களில் இருந்தது இல்லை. இலங்கையின் வளர்ச்சி வீதம் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து வந்தபோதும், 2017ம் ஆண்டு இந்தியாவின் தனிநபர் வருமானம் (G.D.P.) ஆண்டுக்கு 7,200 அமெரிக்க டொலராக இருந்த போது, இலங்கை நாட்டின் தனி நபர் வருமானம் ஆண்டுக்கு 12,900 அமெரிக்க டொலராக இருந்துள்ளது. இதனால் வாழ்க்கை தரத்திலும் கல்வி, வேலை வாய்ப்புகளிலும் ஆசிய கண்டத்தில் உயர்ந்து காணப்பட்டது. இந்நிலையில் ஆட்சியாளர்களின் அண்மைக்கால அரசியல் செயற்பாடுகள் இலங்கையை மேலும் பின்னோக்கி நகரச் செய்திருக்கிறது.

'இலங்கைக்கு நான்தான் ராஜா' என்று இலங்கை முழுவதும் வலம் வந்த மகிந்த ராஜபக்சே இன்று இந்தியா உட்பட உலக நாடுகளிடம் கையேந்தி பிச்சை எடுக்கவேண்டிய அவல நிலைக்கு நாட்டை படுகுழியில் தள்ளியுள்ளார். அதன் விளைவாக இன்று இலங்கையில் 80% குடும்பங்களுக்கு போதிய உணவு கிடைக்கவில்லை என ஐ.நா. கவலை தெரிவித்துள்ளது. மேலும் ஆரோக்கியமான உணவு உட்கொள்ள வழியற்று மக்கள் தவிப்பதாகவும் கூறப்படுகிறது.

## அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடு:

பொருளாதாரம், அரசியல் ஆகிய இருபெரும் காரணிகள் இன மத மொழி பேதமின்றி இலங்கை மக்களின் வாழ்க்கையை சிதைத்துவிட்டன. அதன் விளைவாக சமையல் பொருட்கள், காய்கறிகள், பாற்பொருட்கள், பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு, மின்சாரம், உயிர் காக்கும் மருந்துகள் என அனைத்து வகையான அத்தியாவசிய பொருட்களும் கிடைக்காமல், கிடைக்கின்ற பொருட்களின் விலையும் பல மடங்கு உயர்ந்து இருப்பதால் அனைத்து தரப்பட்ட மக்களும் இரவு பகல் பாராது வீதியில் இறங்கி தொடர் போராட்டங்களை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். ஏராளமான இயற்கை வளங்கள் நிறைந்த இலங்கையில் உற்பத்தியும் இன்று குறைந்து விட்டது. மறுபுறம் எரிபொருள் உட்பட அத்தியாவசிய பொருள் இறக்குமதி செய்வதற்கான வெளிநாட்டு செலாவணியும் தீர்ந்து விட்டது.

கோவிட் 19 தொற்று காரணமாக உலக அளவில் சிறு தொழில் உட்பட பல தொழில்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாயின. இதனால் இலங்கையின் அனைத்து துறைகளும் பெரும் பாதிப்பைச் சந்தித்தன. இதுபோன்ற பெரும் பாதிப்பை சந்தித்த இந்தியா போன்ற நாடுகள் கொரோனாவின் பாதிப்பிலிருந்து போராடி வெளிவந்த நிலையில் இலங்கை அதிலிருந்து மீள்வதற்கு ஆக்கப்பூர்வமான எந்த முயற்சிகளையும் ராஜபக்சே அரசு மேற்கொள்ள வில்லை. அது மட்டுமல்லாமல் ராஜபக்சே அரசின் தவறான பொருளாதார கொள்கை காரணமாக உற்பத்தியும் பெருமளவு குறைந்தது. அதன் காரணமாக ஏற்றுமதியும் பெருமளவு வீழ்ச்சி அடையலாயிற்று. இதனால் வெளிநாட்டு செலாவணி கையிருப்பு முற்றாக குறைந்து அதன் காரணமாக மக்களுக்கு தேவையான மிக அத்தியாவசிய உணவுப் பொருட்கள், எரிவாயுக்கள் உயிர் காக்கும் மருந்து பொருட்கள் உட்பட எதனையும் இறக்குமதி செய்ய வாய்ப்பில்லாத கடுமையான நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது.

தொழில் வளர்ச்சி முடங்கியதன் காரணமாக வருமானத்தை இழந்த பெருந் தோட்ட தொழிலாளர்கள் உட்பட தின உழைப்பாளர்கள் ஒருவேளை உணவை தேடிக் கொள்வதற்கு கடுமையாக போராட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஒரு காலத்தில் ஆசிய நாடுகளில் உயர்ந்த வாழ்க்கைத்தரத்தை கொண்டிருந்த இலங்கை மக்கள் அரசியல் வாதிகளின் தொடர்ச்சியான தவறான வழி காட்டலால் இன்று தலை குனிந்து பஞ்சத்தை எதிர்த்து போராட வலிமை இல்லாதவர்களாக வாழ்ந்து வருகின்றனர்.

## இலங்கையின் தேசிய வருமானம்:

இலங்கையின் தேசிய வருமானமானது

- பெருந் தோட்ட தேயிலை, ரப்பர் உற்பத்தி.
- ஆடை உற்பத்தி.
- சுற்றுலாத் துறை

ஆகிய துறைகளையே பெருமளவு சார்ந்து காணப்படுகிறது. தேயிலை, ஆடைகள், கராம்பு போன்ற வாசனைத் திரவியங்கள், மீன், தேங்காய் பொருட்கள், ரப்பர், அணிகலங்கள், கனிம கற்கள் என்பவற்றின் ஏற்றுமதி ஆண்டுக்கு 7 பில்லியன் டாலராக இருந்து, தற்போது பெரிய அளவில் சரிவு ஏற்பட்டுள்ளது. இதன் விளைவாக வட்டியுடன் வெளிநாட்டு கடன் சுமையும் பெருகலாயிற்று. 2019 நவம்பரில் 7.5 பில்லியன் அமெரிக்க டொலராக இருந்த கையிருப்பு 2021 ஜுலையில் 1.9 பில்லியன் டொலராக குறைந்துள்ளது. மேலும் 51 பில்லியன் டொலருக்கு மேல் கடனுள்ள நிலையில் இவ்வருடம் 7 பில்லியன் டொலரை உடனடியாக திருப்பி செலுத்த வேண்டிய நிலையில், கையிருப்பானது

சில தினங்களுக்கு மட்டுமே போதுமானதாக இருப்பதாக கூறப்படுகிறது. தற்பொழுது எரிபொருள் தட்டுப்பாட்டை சமாளிக்க இந்தியா உட்பட சில நாடுகளில் இருந்து பெருமளவு கடன்களை வாங்கி வருவதால் வெளிநாட்டு கடனும் அதிகரித்துக் கொண்டே வருகிறது. வெளிநாட்டு கடன் மட்டுமல்லாமல் உள்நாட்டு கடன் தொகையும் 81 பில்லியன் அமெரிக்க டொலர்களைவிட அதிகமாக இருப்பதாக குறிப்பிடப்படுகிறது. கடந்த சில ஆண்டுகளாக ஏற்கனவே வாங்கிய கடன்களை அடைப்பதற்காக கூடுதல் வட்டிக்கு புதிய கடன்களை வாங்க வேண்டிய நிலை அதிகரித்துள்ளது. அத்துடன் பொருளாதார சரிவு காரணமாக உலக தரநிர்ணய நிறுவனங்கள் இலங்கைக்கான தர குறியீட்டை குறைக்க முற்படும் போது உலக நாடுகளிடமிருந்து கடன் வாங்கும் வாய்ப்பும் குறைந்துவிடுகிறது.

## வேளாண் உற்பத்தியில் வீழ்ச்சி:

2021ல் முழுமையாக இயற்கை வேளாண்மை என்ற திட்டத்தை அறிவித்த ராஜபக்சே அரசு மாற்று ஏற்பாடுகளுக்கு வழி காணாது இரசாயன உரம், பூச்சி கொல்லி மருந்து என அனைத்து செயற்கை விவசாய உள்ளீடுகளையும் முற்றாக தடை செய்தது. இயற்கை வேளாண்மை வரவேற்கப்பட வேண்டிய ஒன்று என்ற போதும், படிப்படியாக அதனை அமல் நடத்துவதை விடுத்து ஒரே நாளில் நாடு முழுவதும் கொண்டுவர முயன்றதன் விளைவாக உரமின்றி தேயிலை உற்பத்தி கடுமையாக வீழ்ச்சி அடைந்து அதன் ஏற்றுமதியும் கடுமையாக சரிந்தது. இதனால் வேளாண் உற்பத்தியில் ஏற்படப்போகும் சரிவைப்பற்றி நிபுணர்கள் எச்சரித்தபோதும் ராஜபக்சே அரசு அதனை கவனத்தில் கொள்ளவில்லை. இதனால் உணவு உற்பத்தியில் குறிப்பாக நெல் உற்பத்தியில் தன்னிறைவு பெற்றிருந்த நிலையில், இயற்கை வேளாண்மை காரணமாக அதுவும் தடைப்படலாயிற்று. அதனால் மக்களின் பிரதான உணவுப் பொருளான அரிசியின் விலை பல மடங்கு அதிகரித்து காணப்படுகிறது.

வெளிச் செலாவணி குறைந்து மூலப்பொருட்கள் இறக்குமதி தடைப்பட ஆடைகள் தயாரிப்பும் ஏற்றுமதியும் பாதிப்படையலாயிற்று. கொரோனா பரவல் மற்றும் உக்ரைன் போர் சூழல் காரணமாக ஐரோப்பிய நாடுகளுக்கான வழக்கமான ஏற்றுமதிகளுக்கும் தடங்கள் ஏற்படலாற்று. கொரோனா தொற்றைத் தொடர்ந்து பொருளாதார நெருக்கடியால் வருடம் 4.4 பில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் ஈட்டி, தேசிய வருமானத்தில் முக்கிய பங்கு வகித்த சுற்றுலா துறையும் முழுமையாக பாதிக்கப்படலாயிற்று. முடிவில் இலங்கையின் பொருளாதார கட்டமைப்பு உருக்குலைந்த நிலையில் இந்தியா போன்ற நாடுகளிடம் கையேந்த வேண்டிய அவல நிலைக்கு நாடு தள்ளப்பட்டுள்ளது.

## பண மதிப்பு வீழ்ச்சி:

உலகமயம் மற்றும் தாராளமய பொருளாதார வலையில் இலங்கை சிக்கியுள்ளதுடன் மேலதிக பணமும் அவ்வப்போது அச்சிடப்பட டொலருக்கு நிகரான இலங்கை நாணயத்தின் பெறுமதியும் கடும் சரிவை சந்தித்து வருகிறது. 1991 அளவில் இந்தியாவில் பொருளாதார நெருக்கடி உருவானபோது மேற்கொண்டு பணத்தாள்களை அச்சிடுவதற்கு பதிலாக அரசு கையிருப்பில் இருந்த தங்கத்தை விற்பனை செய்து அமெரிக்க டொலர்களை வாங்கி நிலைமையை சமாளித்தது இந்தியா. ஆனால் இலங்கை உள்நாட்டு செலவுக்காகவும் ஊழியர்களுக்கு ஊதியம் வழங்கவும் பணம் அச்சிட முன்வந்துள்ளமையால் இலங்கை நாணயத்தின் பெறுமதி கடுமையான சரிவை சந்திக்க வேண்டி இருக்கிறது. இந்திய ஒரு ரூபாய் இலங்கை ரூபாயில் 4.75 ஆகும். இதனால் கடும் பண வீக்கம் ஏற்பட்டுள்ளது. இவ்வாண்டு மார்ச் மாதம் 18.8%ஆக இருந்த பணவீக்கம் மே மாதமளவில் 39% அதிகரித்துள்ளது. வரும் காலங்களில் பண வீக்கம் மேலும் அதிகரிக்கும் என நிபுணர்கள் எச்சரிக்கின்றனர். கோத்தபய பதவிக்கு வந்த பின் இலங்கையின் ரூபாய் மதிப்பு 20%க்கு மேல் சரிந்ததுடன் பொருளாதாரமும் 4%க்கு மேல் வீழ்ச்சியை கண்டுள்ளது. வரும் மாதங்களில் கடுமையான வீழ்ச்சியை சந்திக்க வேண்டி இருக்கும் எனக் கூறப்படுகிறது.

ராஜபக்சே அரசின் மோசமான நிதிக் கொள்கையும் பொருளாதார பேரழிவுக்கு ஒரு காரணமாகும். தொலை நோக்கு பார்வை இன்றி நீண்டகால திட்டமிடலை கைவிட்டு குறுகிய தற்காலிக திட்டங்களை மேற்கொண்டனர். அரசியல் இலாபத்திற்காக ராஜபக்சே பதவிக்கு வந்ததும் பெருமளவு வரிகள் குறைக்கப்பட்டன. செல்வந்தர்களுக்கான வரி நீக்கப்பட்டன. 15%ஆக இருந்த வரி 8%ஆக குறைக்கப்பட்டது. இதனால் அரசின் வருமானம் வெகுவாக குறைந்தது. இதனால் பட்ஜெட்டில் பற்றாக்குறை 2020ல் 5%ஆக இருந்து 2022ல் 15%ஆக அதிகரித்தது. வாங்கப்பட்ட வெளிநாட்டுக் கடன்கள் பொருளாதார அபிவிருத்திக்கு பயன்படுத்தாமல் சுயநலத்திற்கு செலவிடப்பட்டன. குறிப்பாக ஆடம்பர செலவுடன் அத்தியாவசியமில்லாத கட்டடங்கள் கட்டப்பட்டன. மாத்தறை விமானநிலையம், அம்பாந்தோட்டை துறைமுகம், கிரிக்கெட் ஸ்ரேடியம், கொழும்பு தாமரைத் தடாகக் கோபுரம் என பில்லியன் செலவிலான திட்டங்களை கூறிக் கொண்டே போகலாம். இவற்றுடன், இருந்த வளங்களை அழித்துப் போடப்பட்ட அதி-வேக நெடுஞ்சாலை திட்டங்களில் கையூட்டு பெருமளவில் ராஜ-பக்சே வகையறாக்களுக்கு சென்றுள்ளன எனவும் கூறப்படுகிறது. இலங்கை இன்று அரசியல் வாதிகளின், ஊழியர்களின் ஊழல்களில் சிக்குண்டு தவிக்கிறது. ஊழல் மிகுந்த 180 நாடுகளின் பட்டியலில் இலங்கை 102வது இடத்தை எட்டியுள்ளது. இவ்வாறு கணக்கிலடங்காத ஊழலுடன் பல்லாயிரம் கோடி சொத்துக்களை ராஜபக்சே குடும்பம் தனதாக்கிக் கொண்டதும் பொருளாதார நெருக்கடிக்கு ஒரு காரணமாகவும் கூறப்படுகிறது.

## இனவாத அரசியல்:

பல இன, மத, மொழி மக்கள் வாழும் இலங்கையில் இன்றைய நிலைமைக்கு நீண்டகால அரசியல் செயல்பாடும் முக்கிய காரணமாக அறியப்படுகிறது. சுதந்திரம் பெற்ற 1948 முதல் இன்று வரை ஆட்சி அதிகாரத்திற்காக இன பகைமை ஊட்டி வளர்க்கப்பட்டதன் விளைவாக தேசிய ஐக்கியம் சிதைந்து, இன்றைய பொருளாதார சீரழிவுக்கு அடிப்படையாகியது. இலங்கை வரலாற்று நெடுகிலும் மதக் கலவரங்களும் இன வன்முறைகளும் நிகழ்ந்து வந்துள்ளன.

சிங்கள மொழியை ஆட்சி மொழியாக்குவதாக வாக்குறுதி கொடுத்து சிங்கள பெரும்பான்மையினரின் ஆதரவுடன் 1956ல் ஆட்சிக்கு வந்தார் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் திரு. S.W.R.D. பண்டாரநாயக்கா. சிங்கள மொழி ஆட்சி மொழியான-தால் சிறுபான்மை தமிழ் பேசுவோர் பாதிக்கப்பட்டதைக் குறித்து அவர் சிறிதளவும் கவலைப்படவில்லை. அதே போன்று தமிழர்களுக்கு சுயாட்சி உரிமை அளிக்க தான் விரும்பியதாகவும் ஆனால் சிங்களவர்களின் மேலாதிக்கத்தை தமிழர்களுக்கு விட்டுக் கொடுக்க கூடாது என்பதை பின்னர் தான் உணர்ந்து கொண்டமையால் அதற்கமைய செயல்பட்டதாகவும் ஐக்கிய தேசியக் கட்சி தலைவர் திரு. J.R. ஜெயவர்த்தனா பேட்டி ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். மேலுமவர் வடக்கின் மீது காட்டப்படும் அழுத்தத்தை பொறுத்து சிங்கள மக்கள் மகிழ்ச்சி அடைவார்கள் எனவும் ஊடக பேட்டியொன்றில் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு ஆட்சி அதிகாரமே அவர்களின் தலையாய நோக்கமாக இருந்துள்ளது.

இதுவரை இலங்கையை ஆட்சி செய்த இருபெரும் கட்சிகளும் தங்களின் ஆட்சி அதிகாரத்தை நிலைநிறுத்திக் கொள்ள இன வேற்றுமையை அடிப்படையாக கொண்டிருந்தன என்பது வெளிப்படை அம்சமாகும். சுதந்திரம் பெற்றது முதல் இன்று வரை ஆட்சி செய்த ஆட்சியாளர்களின் செயற்பாடுகள் அனைத்தும் பெரும்பான்மையினத்தவரான சிங்கள மக்களின் வாக்குகளை பெறுவதாக மட்டுமே இருந்துள்ளன. மறுபுறம் சிறுபான்மை மக்க

ளின் உரிமைகளை மறுக்கின்ற திட்டத்தையும் மறைமுகமாக செயல்படுத்தி வந்துள்ளமையையும் காணலாம்.

## ராஜபக்சே குடும்பத்தின் தவறான ஆட்சி நிர்வாகம்:

சுதந்திரம் பெற்றது முதல் எந்த தலைவரும் மக்களை ஒருங்கிணைத்து நாட்டை முன்னேற்ற முனையவில்லை. மாறாக மக்களை ஒருவருக்கொருவர் எதிராக திருப்பி, இனவாதத்தை தூண்டி, சிங்கள பௌத்த பேரினவாதத்தை வளர்ப்பதிலேயே அதிக அக்கறையுடன் செயற்பட்டிருக்கிறார்கள். அதன் அடிப்படையில் மக்களின் வரிப்பணத்தை வாரி இறைத்து உள்நாட்டுப் போரையும் நடத்தினார்கள். பின்னால் வந்த ராஜபக்சே விடுதலைப் புலிகளை 2009ல் தோற்கடித்ததன் மூலம் பௌத்தத்தையும் பெரும்பான்மை சிங்கள மக்களையும் காக்க வந்த ரட்சகராக, எல்லாளன் என்ற தமிழ் மன்னனை தோற்கடித்த சிங்கள துட்டகைமுனுவாக தன்னை காட்டிக் கொண்டார். அதன் வெளிப்பாடே அனுராதபுரத்தில் ராஜபக்சேவின் பதவி ஏற்பு விழா. நாடு துண்டாடப்படாமல் நாட்டை தன்னால் மட்டுமே பாதுகாக்க முடியும் என மக்களை நம்பச் செய்தார். தமிழ் சிங்கள மக்களை பிரித்து தன் குடும்ப ஆட்சியை நிலைநிறுத்திக் கொள்வதில் காட்டிய அக்கறை தேச அபிவிருத்தியில் சற்றேனும் காட்டாதது இன்றைய சீரழிவுக்கு காரணமாகிறது.

30 வருட கால யுத்தம் தராத பேரழிவை ராஜபக்சேவின் குடும்பத்தினர் ஏற்படுத்தி இருக்கிறார்கள் என்பது நிதர்சனமான உண்மை. தேசம் முழுவதையும் ஊழல் மயமாக்கி அதனை அதிகார துஸ்பிரயோகத்தின் மூலம் மறைத்தனர். அரசின் சட்டம், நிர்வாகம், இராணுவம், நீதிமன்றம் என அனைத்தையும் சிங்கள பௌத்த பேரினவாத வரம்புக்குள் உட்படுத்தி மக்களை மாய வலைக்குள் சிக்க வைத்தனர். ஒரு நாட்டின் அரசியல் அமைப்பையே ஒரு குடும்பத்திற்கு மிகவும் சாதகமாக மாற்றிய வரலாற்று தவறுக்கு இலங்கை மக்கள் துணை போயிருப்பது வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

இலங்கை நாடாளுமன்றத்தின் அதிகாரத்தை உறுதிப்படுத்தும் 19வது அரசியல் அமைப்பு திருத்த சட்டத்தை நீக்கிய ராஜபக்சே கட்சி தாவல் தடைச் சட்டம் இலங்கையில் இல்லாத நிலையில் மாற்றுக் கட்சியில் சிலரை விலைக்கு வாங்கி 20வது திருத்தத்தை கொண்டு வந்து அதிபரின் அதிகாரங்களை அபரிமிதமாக அதிகரிக்கச் செய்தார். மேலும், குடும்பத்தின் பலரையும் அமைச்சரவையில் இணைத்துக்கொண்டார். இரட்டை குடியுரிமை இருந்தாலும் நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்படலாம் என திருத்தம் செய்து அமெரிக்க இலங்கை பிரஜையான ராஜபக்சேவின் சகோதரர் பசில் ராஜபக்சவை நிதி அமைச்சராக்கினார். இவ்வாறு சர்வ அதிகாரமும் பொருந்தியவர்களாக ராஜபக்சே குடும்பத்தினர் நடந்து கொண்டமை பேரழிவுக்கு அடித்தளமாகியது.

உள்நாட்டு யுத்தத்தின்போது பணியில் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான படை வீரர்களுக்கு பட்ஜெட்டில் பெருந்தொகை செலவிடப்பட்டதுடன் நிர்வாக பொறுப்புகளிலும் அனுபவமற்ற இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டனர். அரசியல் அனுபவமோ சிவில் நிர்வாகமோ அறிந்திராத, இராணுவ பயிற்சி மட்டும் பெற்றிருந்த கோத்தபய ராஜபக்சே அதிபராக..., அரசாங்க அமைப்புகளின் செயலாளர்களாக பல ராணுவத்தினர் நியமிக்கப்பட்டனர். உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்த பின்னும் வட - கிழக்கு தமிழ் பகுதிகள் கடந்த 13 ஆண்டுகளாக ராணுவ ரீதியிலான கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறு ராணுவத்தின் செல்வாக்கு அபரிதமாக உள்ள ஆட்சியாக இருப்பது எதிர்காலத்தில் ராணுவ ஆட்சிக்கு வழி கோலுவதாக அமைந்துவிடும் என்ற அச்சமும் எழுந்துள்ளது.



வரலாறு காணாத பொருள் தட்டுப்பாடு காரணமாக மக்கள் அனைவரும் இணைந்து வீதியில் இறங்கி போராடிக் கொண்டி ருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் தேசிய ஒற்றுமை என்ற இடத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறார்கள் என்று நம்பப்ப டுகிறது. அனைத்து சமூகத்தவர்களும் இலங்கையர் என்ற ஒற் றைப் புள்ளியில் இணைய வேண்டியது காலத்தின் கட்டாயம். இலங்கையின் இன்றைய அரசியல் பொருளாதார நெருக்கடிக்கு ஆளும் ராஜபக்சே குடும்பமே முழுமுதற் காரணமாக இருப்பதால் எதிர்க்கட்சிகளும் அதிருப்தி ஆளும் தரப்பினரும் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றனர். 'GOTHA GO HOME' என்ற போராட்டத்தின் விளைவாக பிரதமர் ராஜபக்சே பதவி விலகிய நிலையில் ஒரே ஒரு உறுப்பினர் என்ற நிலையை உடைய ஐக் கிய தேசிய கட்சியின் தலைவர் திரு. ரணில் விக்கிரமசிங்க பிரதம ராக பதவி ஏற்றுள்ளார்.

இரட்டை குடியுரிமை உள்ள பசில் ராஜபக்ச தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை துறந்த போதும் அதிபராக உள்ள கோத்த பய ராஜபக்சே பதவி விலக மறுத்து அடுத்து வரும் இரண்டு வரு டமும் அதிபராக இருப்பது உறுதி எனவும் கூறிவருகிறார். இன் றைய ஆட்சியாளர்களில் சிலர் மாற்றப்படுவது மக்களின் கொந்த ளிப்பை போக்குவதற்கான தற்காலிகமான தீர்வாக மட்டுமே இருக் கும். புதிய அமைச்சரவையில் இருப்பவர்களில் பெரும்பாலோர் ராஜபக்சே ஆட்சியில் ஊழல் புரிந்தவர்கள் எனவும் கூறப்படுகி றது. எனவே பிரதமர் மாற்றத்தால் உடனடி பொருளாதார ஏற்றம் ஏற்பட்டுவிடாது. அதற்கு நீண்டகாலம் இலங்கை மக்கள் காத்தி ருக்க வேண்டிவரும்.

## இலங்கை மீதான இந்தியாவின் கவனம்:

உலக வர்த்தகத்தில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நாடாக இலங்கை இருப்பதால் சீனா, இந்தியா, அமெரிக்கா ஆகிய நாடு கள் இலங்கை மீது அதிக கவனம் செலுத்தி வருகின்றன. தென் கிழக்காசியாவில் சீனாவின் ஆதிக்கத்தை தடுத்து நிறுத்துவது இந் திய அமெரிக்க நாடுகளின் நோக்கமாகும். போக்குவரத்து, தகவல் தொடர்பு, ஆடைகள் தயாரிப்பு, எரிசக்தி, அதானியின் மின் உற் பத்தி திட்டம் என பல துறைகளிலும் இந்திய பெருமுதலாளிகள் இலங்கையில் முதலீடு செய்துள்ளனர். எனவே இலங்கை மீதான இந்தியாவின் ஈடுபாடு குறிப்பாக இன்றைய இந்திய அரசின் கவ னம் மிகவும் அதிகரித்துள்ளது. அதன் காரணமாக இந்தியா அதி களவு கடன் உதவியும் பொருள் உதவியும் செய்து வருவதைக் காணலாம்.

உலகநாடுகள், உலக நிதி அமைப்புகள் குறிப்பாக இந்தியா பெருமளவு கடன் உதவிகளை இலங்கைக்கு வழங்கி வருவதன் பின்னணியில் மனிதாபிமானத்தை தாண்டி அரசியல் மறைந்திருப்ப தாக கூறப்படுகிறது. கடந்த காலங்களில் இலங்கை மீதான இந்தி யாவின் இராஜதந்திரம் வெற்றி பெறவில்லை என்பது அனைவரும் அறிந்த ஒன்று. இந்நிலையில் இந்தியா இன்று இலங்கையில் ஏற் பட்டுள்ள அசாதாரண நெருக்கடியை பயன்படுத்தி தனது செல் வாக்கை நிலைநிறுத்த முயன்று வருவதாக கூறப்படுகிறது.

இன்றைய ராஜபக்சே சகோதரர்களின் ஆட்சியே அனைத்து சீரழி வுக்கும் காரணம் என கூறி அதனை அகற்ற ஐக்கிய மக்கள் சக்தி கட்சியை உள்ளடக்கி, எதிர் கட்சிகள் போராடினாலும் உண் மையில் நாடெங்கும் வீதியிலும் காலிமுகத் திடலிலும் ஆவேச மாக போராடிக் கொண்டிருப்பவர்கள் JVP உள்ளடக்கிய முற் போக்கு இளைஞர்களும் பல்கலைக்கழக மாணவர்களுமாவர். இந் நிலையில் இலங்கை தேசமானது முற்போக்கு கருத்தாளர்களின் பக்கம் சிறிதளவேனும் சாய்ந்து விடக்கூடாது என்பதில் சில நாடு கள், வலதுசாரி சக்திகள் காய் நகர்த்தி வருகின்றன. அதன் ஆரம்பமே தீவிர வலதுசாரி போக்குடைய ரணில் விக்கிரமசிங்க-வின் பிரதமர் பதவி நியமனம் என்று கூறப்படுகிறது. இந்நிலை யில் இன வேறுபாடுகளை மறந்து இடதுசாரி இயக்கங்கள் இளை யோர்களுடன் இணைந்து செயல்பட முன்வரவேண்டும்.

இந்தியா உட்பட உலகநாடுகளின் பண உதவியினால் மட்டும் இலங்கையின் பொருளாதாரம் உடனடியாக சீரடைந்து விடப்போ வதில்லை. அது மக்களின் அன்றாட தேவைகளை நிறைவேற்று கின்ற தற்காலிக தீர்வாக மட்டுமே இருக்கும். மாறாக இலங்கை யின் பொருளாதார உட்கட்டமைப்பில் திடமான மாற்றங்கள் செய் வதே நீண்டகால நிரந்தர தீர்வாக இருக்கும். இருக்கின்ற வளத் தைக் கொண்டு பொருளாதார உற்பத்தி முறையை உருவாக்கிக் கொள்ள வேண்டிய கட்டாயம் இலங்கைக்கு ஏற்பட்டுள்ளது. இந் தியா, சீனா மட்டுமல்லாமல் அமெரிக்கா போன்ற முதலாளித்துவ சக்திகள் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இலங்கை மீது செல் வாக்கு செலுத்தி தமது தூண்டிலில் சிக்க வைக்க முயலும் வேளையில், இலங்கை மிகவும் விழிப்புடன் இருக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். தன்னிறைவு தற்சார்பு இல்லாமல் வெளி நாடுகளை முழுவதுமாக எதிர்பார்ப்பது மிகவும் ஆபத்தானது. இதனால் வளம் முழுவதும் வெளிநாடுகளின் சுரண்டலுக்கு உள் ளாகலாம்.

## இன ஒற்றுமை:

இன்றைய நெருக்கடியான சூழ்நிலையில் ஏற்பட்டுவரும் இன ஒற் றுமையானது பொருளாதாரத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு ஏற்ற சிறந்த சமிக்ஞையாகவும் தெரிகிறது. பொருளாதார ஸ்திரத் தன்மைக்கு முன்னேற்பாடாக இனங்களுக்கிடையே ஐக்கியம் அவ சியம் என்பதை நன்கு புரிந்து செயற்பட்டதால், அழிந்து போகும் என எதிர்பார்த்த சிங்கப்பூர் இன்று மேலை நாடுகளுக்கு சவால் விடும் வகையில் வளர்ச்சி கண்டுள்ளது. மாறாக இன முறுவலை வளர்த்துவிட்ட இலங்கை, வளம் இருந்தும் வாழ்விழந்து கிடக்கி றது. இலங்கை தேசிய இனப் பிரச்சினையை இராணுவம் கொண்டு தீர்க்க முயன்றமை மிகப் பெரும் தவறான வழி முறை யாகும்.

இன்றைய நெருக்கடியின் மத்தியில் இன விடியல் கொஞ்சம் தெரி யத் தொடங்கி இருக்கிறது. உள்நாட்டுப் போரில் உயிரிழந்த தமி ழர்களுக்கு அஞ்சலி செலுத்துகின்ற நினைவேந்தல் நிகழ்வுகளில் முதற் தடவையாக சிங்கள மக்களும் கலந்து அஞ்சலி செலுத்தும் அளவிற்கு இனங்களுக்கிடையே கொஞ்சம் புரிதல் உணர்வு ஏற் பட்டுவருகிறது. காலிமுக போராட்டக்களத்தில் தமிழில் தேசிய கீதம் ஒலிக்கத் தொடங்கி இருக்கிறது. எனவே இலங்கையின் இன் றைய போராட்டங்கள் இலங்கையின் ஆன்மாவில் நிலையான-தொரு மாற்றத்தை ஏற்படுத்தும் என்ற நம்பிக்கை துளிர்ப்பதை காணமுடிகிறது.

அதே நேரம் இன்றைய சிங்கள, தமிழ் இன ஐக்கியத்தில் பிளவை உருவாக்க இதுவரை ஆண்டு அனுபவித்த முதலாளித் துவ சக்திகளும் வலதுசாரி அரசியல் வாதிகளும் தீவிரமாக முய லக்கூடும். ராஜபக்சேவினால் விதைக்கப்பட்ட பௌத்த விஸ்தரிப்பு வாதம் முற்றாக மறைந்துவிடவில்லை. அதன் தொடர்ச்சியாக அண்மையில் முல்லைத்தீவில் பௌத்த விகாரை அமைக்கும் முயற்சிகள் நடைபெற்றதாக அறிய முடிகிறது. இந்நிலையில் இது போன்ற இனவாத சக்திகளை முறியடித்து வெற்றி பெற முற் போக்கு சக்திகள் ஒன்றுபட்டு விழிப்புடன் இருக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.

பிரதமராக இருந்த மகிந்த ராஜபக்ச மக்களின் கடும் எதிர்ப்பால் பதவி விலக, கட்சி சாரா நெருக்கடிகால அரசாங்கம் ஏப்ரல் 22ல் பதவி ஏற்றுள்ளது. ஆனால், பிரதமரான ரணிலை சுற்றியுள்ளவர்க ளில் பெரும்பாலோர் கடந்த ஆட்சியில் மிகப் பெரும் ஊழலிலும் குற்றச்செயல்களிலும் ஈடுபட்டவர்களாவர். மறுபுறம் ராஜபக்சேவின் குடும்பத்தையும் அவர்களின் செல்வத்தையும் பாதுகாப்பதற்கான தற்காலிக ஏற்பாடே ரணிலின் நியமனம் எனவும் கூறப்படுகிறது. இதனால் தூய்மையான ஆட்சி நடைபெறுமா என்பது பெரும் சந் தேகமே.

இன, மத வாதத்தை வைத்து அரசியல் செய்தால் பேரழிவும் பெரும் பொருளாதார நெருக்கடியும் ஏற்படும் என்பதற்கு இலங்கை எடுத்துக் காட்டாக இருக்கிறது. இலங்கையின் அனுப வத்தில் இருந்து இந்தியாவும் இந்துத்துவ கட்சிகளும் இந்திய மக் களும் பாடம் கற்றுக்கொள்ள வேண்டும்.



jeyasingh@thaiveedu.com

# மக்களின் தேவை: வரலாற்றை மாற்றவல்ல அரசியலும் தூரநோக்குள்ள தலைமையும்

- எஸ்.கே. விக்னேஸ்வரன்

கடந்த ஆண்டு தாய்வீடு ஓகஸ்ட் மாத இதழில் எழுதிய கட்டுரையில், ராஜபக்ச குடும்பத்தினரின் அரசியற் கோட்பாடு, நடைமுறை என்பவற்றின் போக்குப் பற்றி எழுதியபோது, அவர்கள் இதே பாணியில் தொடர்ந்து இயங்கினால் நாடு எத்தகைய நிலைக்குச் செல்லும் என்பதைக் குறிப்பிட்டு இப்படி எழுதியிருந்தேன்:

'இலங்கையின் இன்றைய ஆட்சியாளர்களது 'மும்மணிகளான' இந்த மூன்று 'தத்துவங்களும்' வெற்றிகரமாக தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படுமாக இருந்தால், நாடு அடுத்த தசாப்தத்தில், 'தெற்காசியாவின் சோமாலியா'வாக மாறுவதற்கான எல்லா வாய்ப்புக்களும் இருக்கவே செய்கின்றன என்பது மிகப்பெரிய வரலாற்று அவலம்!.

அப்போது அவர்கள் நாட்டினதும் மக்களதும் சொத்துக்களைக் கபளீகரம் செய்து வருகிறார்கள் என்பது தெரிந்திருந்தபோதும் எவ்வளவு அளவுக்கு அதைச் செய்கிறார்கள் என்பது பற்றிய மதிப்பீட்டைச் செய்யக்கூடிய ஆதாரபூர்வமான தகவல்கள் வெளியில் தெரிந்திருக்கவில்லை. அதனால் அவர்களது இந்தப்போக்கு நாட்டை இன்றைய நிலைக்குக் கொண்டுவர ஒரு பத்தாண்டு காலம் எடுக்கும் என்று மதிப்பிட்டிருந்தேன். நான் அவர்களைக் குறைத்து மதிப்பிட்டுவிட்டேன் என்பதை இப்போது உணரமுடிகிறது. உண்மையில் அவர்கள் அசகாய சூரர்கள் தான். அவர்கள் நான் பத்தாண்டுகளில் என்று குறிப்பிட்ட அந்தச் சாதனையைப் பத்தே மாதங்களுக்குள் சாதித்து விட்டார்கள். ஆட்சியதிகாரம் வழங்கிய அதே சலுகைகள், பாதுகாப்புக்கள், சுகபோகங்கள் என்று எல்லாமே தம்மிடம் அப்படியே இருக்க, அவ்வளவு விரைவாக அவர்கள் நாட்டுமக்களை உலக நாடுகளிடம் கையேந்திப் பிச்சையெடுக்கும் நிலைக்குத் தள்ளிவிட்டிருக்கிறார்கள்.

'கோதா கோ கம' கோசத்துடன் இளைஞர்கள் ஆரம்பித்த போராட்டம் பரவலான ஆதரவை பெற்ற மக்கள் போராட்டம் என்ற மட்டத்துக்கு வளர்ந்ததுடன், ராஜபக்ச குடும்ப ஆட்சியாளர்களை அம்பலப்படுத்தி பாராளுமன்றத்தில் கவனத்துக்குரிய மாற்றங்கள் ஏற்பட்க் காரணமாக இருந்தது மட்டுமல்லாமல், நாட்டின் பொருளாதார நிலமையின் சீத்துவக்கேட்டை உலகம் பூராவும் அறிந்துகொள்ளும் வாய்ப்பையும் திறந்துவிட்டிருந்தது. நாடு முற்று முழுதாக மீளமுடியா அந்நியக் கடனில் மூழ்கியிருப்பதையும் அதன் விளைவாக மக்கள் நடுத்தெருவுக்கு வரவேண்டிய சூழல் ஏற்பட்டிருப்பதையும் நிதர்சனமாகக் காணும் நிலமை ஏற்பட்டுள்ளது. நாட்டை முழுக்க முழுக்க அந்நிய நாடுகளில் தங்கியிருக்கும் நாடாக மாற்றுகின்ற விதத்தில், திட்டமிட்ட வகையில் உள்நாட்டு உற்பத்திகளை இல்லாமல் செய்யும் சமூக, அரசியல், பொருளாதார கோட்பாடுகளைத் தொடர்ச்சியாகக் கடைப்பிடித்துவந்த 1977க்குப் பிறகான அரசாங்கங்கள் அனைத்தும் ஒன்றுக்கொன்று சளைக்காத விதத்தில் நாட்டை இன்றைய நிலைக்குத் தள்ளிவிட்டுள்ளன. இந்தக் கீழ்நிலைக்கான காரணங்களாக அந்த அரசாங்கங்களின் பொருளாதாரக் கொள்கைகளால் மட்டுமன்றி ஆட்சியாளர்களதும் அதிகார வர்க்கத்தினரதும் தனிப்பட்ட சூறையாடல்களால் மிகவும் வேகமாக இன்றைய இக்கட்டான நிலை ஏற்பட்டுள்ளது.

உண்மையில் இன்றைய இலங்கையின் அரசியல் பொருளாதார நிலமைகள், ராஜபக்ஷ குடும்ப ஆட்சி தூக்கியெறியப்பட்டு





விட்டு, புதிய தலைவர்களுடன் நாட்டின் பாராளுமன்றத்தை
நிறுவி, புதிய அரசாங்கத்தை நிறுவிவிட்டால்கூட நாட்டில் உடனடி
யான எந்த மாற்றத்தையும் கொண்டுவந்துவிட முடியாது என்ப
தைத் தெளிவுபடுத்துகின்றன. தற்போதைய பிரதமர் ரணில் விக்கி
ரமசிங்க முதற்கொண்டு அனைத்துப் பொருளாதார அரசியல்
அறிஞர்களும் இதனைத் திரும்பத்திரும்பச் சொல்லி வருகின்றனர்.
ஆட்சியை எம்மிடம் தந்தால் நாம் இந்தப் பிரச்சினைகளை உடன
டியாகத் தீர்வுக்குக் கொண்டுவருவோம் என்று சஜித் பிரேமதாச
அணியினரும் சரி, ஜே.வி.பி.யின் அனுரகுமாரவும் சரி சொல்லும்
அளவுக்கு அவர்களாலும் இந்த நிலமையை உடனடியாக முடி
வுக்குக் கொண்டுவந்துவிட முடியாது. அவர்களுக்கு, தங்களால்
நாட்டின் ஆட்சியதிகாரத்திற்கு வந்ததும், உடனடியாக ஒரு பாரா-
ளுமன்ற ஜனநாயகத்தன்மையும், ஊழல்கள் அற்றதுமான ஒரு
ஆட்சியமைப்பை உருவாக்கிக் காட்டமுடியும் என்ற நம்பிக்கை
இருக்கிற அளவுக்கு, அதைச் சாதிப்பதற்கான மக்கள் மத்தியி
லான எத்தகைய வேலைத்திட்டங்களும் இற்றைவரை இருப்பதா
கத் தெரியவில்லை. குறைந்தபட்சம் அவற்றை ஏற்படுத்துவதன்
அவசியத்தை உணர்ந்து அதற்கு அவசியமான கொள்கைகள்
வேலைத்திட்டங்கள் என்று எவற்றையும் அவர்கள் வகுத்துள்ளதா
கத் தெரியவில்லை. இன்றைய அரசாங்கத்தின் அரசியல் நடவடிக்
கைகள். ஊழல்கள், மோசடிகள் பற்றியும் தொடர்ச்சியான அம்ப
லப்படுத்தல்களை அவர்கள் செய்து வருகின்றபோதும், தாம்
கூறும் மாற்று அரசியல் என்ன என்பதுபற்றி அவர்கள் பரந்துபட்ட
மக்கள் மத்தியில் எத்தகைய முன்மொழிவையோ, வேலைத்திட்டத்
தையோ முன்வைத்து இயங்குவதாகத் தெரியவில்லை. நாட்டு மக்
கள் எரிபொருளுக்கும், உணவுப் பொருட்களுக்கும் தெருக்களில்
மணிக்கணக்காக வரிசையில் நிற்கின்ற நிலமையில், அவர்கள்
அனைவருக்கும் தெரிந்த ராஜபக்ச குடும்பத்தினதும் அரசாங்கத்தி
னதும் ஊழல்களைப் பற்றிப் பேசுவதிலும் பாராளுமன்ற அமர்வுக
ளில் கலந்துகொள்ளாது வெளிநடப்புச் செய்வதிலும் காட்டும் அக்
கறையை, அந்த மக்களின் இன்னல்களை குறைத்துக் கொள்வ
தற்கான எத்தகைய மாற்றுத் திட்டங்களுடனும் அவர்களிடம் செல்
லவோ அவர்களுடன் உரையாடவோ பெரியளவான அக்கறைக-
ளைக் காட்டவில்லை. நாட்டில் பரந்துபட்ட மக்களிடையே வளர்ந்
துள்ள நெருக்கடிநிலையைச் சமாளிக்கவும், அவற்றினூடாக அவர்
களுக்கு அரசியலூட்டவுமான பணிகள் எவற்றையும் இந்தக் கட்
சித்தலைமைகள் மக்கள் மத்தியிலுள்ள தமது அங்கத்தவர்கள்
மூலமாக செய்யும் முயற்சியில் ஈடுபடுவது பற்றி இந்த நிமிடம்
வரை சிந்திப்பதாகத் தெரியவில்லை.

ஒரு அரசியல் கட்சி என்பதன் பொருள் என்ன? பொதுக்கூட்டங்
களை ஒருங்கமைத்து ஆளும் தரப்பை விமர்சிப்பது, தமது கொள்
கைகளைப் பரவலாக்குவது, ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை நடத்து
வது, சுவரொட்டிகளை ஒட்டுவது என்பது மட்டும்தானா? (தமிழ்
அரசியல் தலைவர்கள் இவற்றைக் கூடச் செய்வதில்லை என்பது
வேறுவிடயம்). இதற்குமேல் ஒரு கட்சிக்கு வேறு பணிகள் எதுவும்
கிடையாதா? இந்தப் பொருளாதார நெருக்கடிக்கு எதிராக மக்
களை அணிதிரட்டுவது என்பது வெறுமனே அதற்கெதிராக வீதிம
றியற் போராட்டங்களை நடத்துவது மட்டுமல்ல, அவர்களை
மாற்று வழிகளில் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்
கான முயற்சிகளில் வழிநடத்துவதும்கூட ஒரு அரசியற் கட்சியின்
பணி அல்லவா? வறுமைக் கோட்டுக்குக் கீழ்ப்பட்ட மக்கள் பசிக்
கொடுமை காரணமாக, குழந்தைகளுக்கு உணவளிக்க முடியாமல்
அவர்களுடன் சேர்ந்து தற்கொலை செய்யும் முயற்சியில் ஈடுபடுவ
தெல்லாம் அரசியல் அதிகாரத்துக்காகப் போராடுவதாகக் கூறும்
ஒரு அரசியற் கட்சியின் கவனத்துக்கு வருவதென்பது வெறுமனே
பாராளுமன்றத்தில் அதுபற்றி உரையாற்ற மட்டும்தானா?. இன்
றைய கோத்தா தலைமையிலான அரசாங்கத்தின் வழிகாட்டுதலின்
கீழ் நடக்கும் தமிழ் மக்களது காணி அபகரிப்பு நடவடிக்கைகள்,
அவர்களது பாரம்பரிய வழிபாட்டு இடத்தில் நீதிமன்ற உத்தரவை
யும் மீறி பௌத்த சிலையை நிறுவுதல் போன்ற விடயங்கள் எல்
லாம் வெறுமனே அந்தப் பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்கள் மட்
டும் எதிர்ப்புக் குரல் எழுப்புவதற்கான விடயங்கள் மட்டும்தானா?
இந்த அரசாங்கத்துக்கு மாற்றாக ஒரு அரசாங்கத்தை உருவாக்
கப் போவதாக கூறும் இக்கட்சிகளது கண்களுக்கு இவையெல்
லாம் எதிர்க்கப்பட வேண்டிய விடயங்களாகத் தோன்றுவதில்
லையா? ‘கோதா கோ கம’ போராட்டம் ஆரம்பமான காலம்
தொட்டு அங்கு செயற்பட்ட இளைஞர்கள் நாடு முழுவதையும்
கிட்டத்தட்ட 60 நாட்களுக்கு மேலாக ஒருவகை எழுச்சி நிலையில்
வைத்திருந்தார்களே, அப்படியான ஒரு கொதிநிலையில் தான்
இன்றுவரை நாடு இருந்துகொண்டிருக்கிறது. ஆனால், அடுத்த
ஆட்சியைத் தாமே அமைப்போம் என்கிற இந்தக் கட்சிகள் மக்
கள் மத்தியில் அது தொடர்பான எந்த பயனுள்ள வேலைகளிலும்
கவனம் செலுத்துவதாகத் தெரியவில்லை. நடப்பிலுள்ள அரசாங்
கமே தனது தோல்விக்குக் காரணமாக இருக்கப் போகிறதென்று
வரும்போது இன்னொரு கட்சி ஆட்சிக்கு வருவது தவிர்க்க முடி
யாமல் நிகழ்ந்துவிடுவதால், இந்தக் கட்சிகளுக்கு மக்கள் மத்தியி
லான வேலை என்பது என்ன என்றே தெரிந்திருக்க வேண்டிய
அவசியம் இல்லை என்று ஆகிவிட்டிருக்கிறது. அதனால் தான்
தாம் ஆட்சியதிகாரத்திற்கு வருவதற்கு மக்கள் ஆதரவளிப்பதற்

காக அவர்கள் மத்தியில் வேலை செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்று அவர்கள் கருதுகிறார்கள்.

உண்மையில் நாட்டில் புரட்சிகரமான மாற்றங்களைக் கொண்டுவர நினைக்குமொரு கட்சிக்கு இன்றைய சூழலைவிட வாய்ப்பான ஒரு சூழல் இதற்குமுன்னர் இலங்கையில் இருந்ததில்லை. 1953ல் அத்தகைய ஒரு நிலை இருந்தது. அன்று ஹர்த்தாலை நடத்தி அரசாங்கத்தை நிலைகுலைய வைத்த கட்சிகளுக்கு, அன்று ஆட்சியதிகாரத்தைத் தமது கரங்களில் எடுத்துக் கொள்ளும் துணிவோ, மக்கள் மீதான நம்பிக்கையோ இருக்கவில்லை. இன்றைய நிலையும் அதுதான். இன்று மக்கள் வந்துள்ள கொதிநிலையில், அவர்களைத் திரட்டி அரச அதிகாரத்தை கைப்பற்றும் ஆற்றல் கொண்ட எத்தகைய புரட்சிகரமான கட்சிகளும் அங்கு இல்லை. கோதா கோ கம போராட்டத்துக்கு வெளிப்படையான ஆதரவை வெளிப்படுத்தி நாடு முழுவதிலுமான ஒரு பேரெழுச்சியை உருவாக்கும் மனநிலைகொண்ட கட்சிகள் எவையும் அங்கு இல்லை. பாராளுமன்றத் தமிழ்க் கட்சிகள் இலங்கையின் அரசியல் வரலாற்றில் இருந்து கற்றுக் கொள்வதில்லை. அங்கு தொடர்ச்சியாக அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள், தமக்கு முன்னவற்றின் தவறுகளை அடிப்படையாகக் கொண்டே ஆட்சி அதிகாரத்தைப் பெற்றுக் கொண்டன. அதனால்த்தான் இனவாதம், மதவாதம் என்பவை மிக வசதியாக பாராளுமன்ற வெற்றிக்குரிய பேசுபொருளாக இருந்தன. நாட்டின் வளர்ச்சிக்கு அவசியமானது நாட்டிலுள்ள அனைத்து மக்களதும் ஐக்கியத்தை முதன்மைப்படுத்தி அவர்களது கூட்டு உழைப்பினூடாக நாட்டைக் கட்டி எழுப்புவதையோ, அதன்வழியாக ஸ்திரமான ஓர் ஆட்சியை நிறுவுவதையோ அக்கட்சிகள் விரும்பவில்லை. மாறாக மக்களிடையே பிளவுகளை ஏற்படுத்துவதன் மூலம் ஆட்சிக்கு வரும் குறுக்கு வழிகளையே அவர்கள் கைக்கொண்டனர். அதற்காகவே இனங்களுக்கிடையே பெரும் பிளவுகளை ஏற்படுத்தினர்.

ஆனால் அந்தப் பிளவுகளின் விளைவுகள்தான் நாட்டின் இன்றைய நிலைக்குக் காரணம் என்று மக்கள் புரிந்துகொள்ளத் தொடங்கிவிட்டார்கள் என்பதற்கான ஒரு எடுத்துக் காட்டுத்தான் இன்று ஏற்பட்டுள்ள நிலை. காலிமுகத்திடல் இளைஞர்களது எழுச்சி அதைத் தெளிவாகவே இனங்காட்டியது. ஆனால் இலங்கையிலுள்ள எந்தக் கட்சிகளும் அதை தத்தமது அரசியலுக்கு ஓர் ஆதரவு நிலையைத் தந்த நிகழ்ச்சியாகப் பார்த்தார்களே ஒழிய, அதிலிருந்து கற்றுக்கொள்ளவோ, அந்தச் சந்தர்ப்பத்தை அடிப்படையாகக் கொண்டு தமது கட்சி நடவடிக்கைகளை மறுபரிசீலனை செய்யவோ, ஒழுங்கமைத்துக் கொள்ளவோ முயலவில்லை. குறைந்தபட்சம் தமது செயற்பாட்டுமுறைகளில் மாற்றங்களைக் கொண்டுவருவது பற்றி சிந்திக்கக்கூட இல்லை. பதிலாக, அது தமது எதிர்கால பாராளுமன்ற ஆட்சியதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளக் கிடைத்துள்ள ஒரு வாய்ப்பாகவே கருதினர் கருதுகின்றனர்.

தமிழ் அரசியற் கட்சிகளும்கூட, உருவாகியுள்ள இந்த நிலைமையின் பின்னணியில் தமது அரசியல் கட்சிகள் எப்படியான வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று சிந்திக்கிறார்களே ஒழிய நாட்டில் ஏற்பட்டுள்ள இந்த நிலை தொடர்பாக மக்களை ஒருங்கிணைப்பது என்று சிந்திப்பதாகத் தெரியவில்லை. இது அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியலின் தன்மையைப் பொறுத்தது. இன்றைய நெருக்கடி காலத்தில் தாம் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் வாழ்வில் எதிர்கொள்ளும் நெருக்கடி நிலை பற்றிய எத்தகைய மதிப்பீடும் அவர்களிடம் இருப்பதாகத்தெரியவில்லை. தமது பிரதேசங்களில் வாழும் மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகளில், அவ்வப் பிரதேசங்களுக்குரிய பிரதேசசபைகள் கிராமிய சபைகள் ஊடாக, அல்லது தமது கட்சிகளின் கிளைகளினூடாக (வாசகர்கள், கிளையா? அப்படியெல்லாம் இருக்கிறதா? என்று கேட்கக்கூடாது) செய்யப்பட வேண்டியவற்றில் செய்யக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பான எத்தகைய வழிகாட்டல்களையோ, குறைந்தபட்ச உரையாடல்களையோகூட இதுவரை செய்ததாகத் தெரியவில்லை. கொரோனாத் தொற்றுக் காரணமாக வந்த நெருக்கடி காலகட்டங்களில் பல தனிப்பட்ட இளைஞர்கள், கல்லூரி பழைய மாணவர்கள் தமது முயற்சிகளால் செய்தளவான உதவிகளைக்கூட இவர்கள் செய்ததாகத் தெரியவில்லை.

உண்மையில் இன்று இலங்கையில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடிகள் தொடர்பாக தொடர்ச்சியாக அனைத்துப் பத்திரிகைகளும் பிற ஊடகங்களும் பல தகவல்களை வெளியிட்டு வருகின்றன. அந்தத் தகவல்கள் அனைத்தினதும் சாரமாக இருப்பதெல்லாம், வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்தமுடியாத நிலைக்குத் திவாலாகிவிட்ட, உலக நாடுகள் பணம் கொடுக்கக் கைவிரிக்கின்ற ஒரு நாடாக இலங்கை மாறிவிட்டது என்பதனால் அது மீள்வதற்கு ஏதாவது அற்புதங்கள் நடந்தால் அன்றி வேறு வழியில்லை என்பது மட்டுமே. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மட்டுமே இன்னும் ஒன்றரை வருடங்களுக்கு நிலமை முன்னேறப் போவதில்லை என்று அறிவித்திருக்கிறார். அவருக்கு அப்படிச் சொல்லாமல் இன்றைய பிரதமர் கதிரையில் தொடர்ந்து இருப்பதை நியாயப்படுத்த முடியாது என்பது உண்மையே என்றாலும், அவரும்கூட உண்மையைச் சொல்லவில்லை. இன்றைய நிலையில் இந்த அரசாங்கம் தொடரும் என்றால், பாராளுமன்றத்தில் அவர்கூட அந்தக் காலம் வரை இருக்க முடியுமா என்பதே கேள்விக் குறிதான். பாராளுமன்ற அரசியல் கட்சிகள் அனைத்தும்கூட ஆட்சியதிகாரம் தம் கைக்கு வந்தால் மட்டுமே அத்தகைய அற்புதத்தை எம்மால் நிகழ்த்த முடியும் என்று கூறி வருகின்றனர். ஆனால், நாட்டின் அரசியற் தலைவர்கள் யாரும் நாட்டிலுள்ள 21 மில்லியன் மக்களது நிலமையிலிருந்து, (அந்த அற்புதங்கள் நடக்கும்வரை) வாழ்வதற்கான ஆதாரத்தை, குறிப்பாக வறுமைக் கோட்டின் கீழ் வாழும் - கிட்டத்தட்ட 2.5 மில்லியன் மக்களின் வாழ்வாதாரத்தை எப்படிச் சமாளிப்பது என்பது பற்றிய எத்தகைய சிந்தனைகளும் அற்றவர்களாகவே இருக்கின்றனர்.

நாடுகள் திவாலாவதும், பின்னர் பழைய நிலைக்குத் திரும்புவதும் புதிதல்ல. பல நாடுகளில் அவ்வாறு நடந்திருக்கிறது. இன்று பெரிய நாடுகளாகப் பேசப்படும் ஜேர்மனி, ரஷ்யா போன்ற நாடுகள் உட்பட பல நாடுகள் அப்படி வீழ்ந்திருக்கின்றன. ஆயினும், அவை மீண்டு எழுந்திருக்கின்றன. அவற்றின் வரலாற்றைக் கவனித்தால், அவை மீண்டெழுந்தது தமது உள்நாட்டு உற்பத்தியிலும் வழங்களின் அபிவிருத்தியிலும்தான். இலங்கை தன்னுள்ளே சிறந்த உள்நாட்டு வளங்களைக் கொண்ட நாடு. அதன் வளங்களை அந்நியருக்கு விற்காமல், வளங்களூடான உற்பத்தியை மையமாகக் கொண்ட தொழிலுற்பத்தியை செய்ய முடிந்தால் அதனால் மீண்டு எழுந்து வரமுடியும். ஆனால் அதற்கான அடிப்படையாக இருப்பது நாட்டின் அடிப்படைக் கொள்கைகளும் மக்களுக்கிடையிலான ஐக்கியமும் உறுதியும் தேச நலனை அடிப்படையாகக் கொண்ட அரச நிர்வாகமும். ஆனால், துரதிர்ஷ்டவசமாக நம்மிடையே இல்லாமல் இருப்பது இந்த இரண்டும் தான்.

இந்த நிலையை மாற்ற வல்ல அரசியலும் தூர நோக்குள்ள தலைமையும் உருவாவதும் இயங்குவதுமே இன்றைய நெருக்கடியிலிருந்து விடுபடுவதற்கான ஒரே வழி.

மக்கள் மட்டுமே வரலாற்றை உருவாக்குபவர்கள். அவர்கள் மத்தியிலிருந்து அது எழுந்து வரும்!

இந்தக் கட்டுரையை எழுதும் இந்தக் கணம் வரை இதுபற்றிய சிந்தனையுள்ள புதிய தலைமை எம்மிடையே உருவாகிவிடவில்லை. ஆனாலும் அது எமது மக்களிடமிருந்து தவிர்க்க முடியாத வீச்சுடன் எழுந்து வரும்! வரவேண்டும்!



vickneaswaran.sk@thaiveedu.com

# தடைகளைத் தகர்த்த

# தமிழினப் படுகொலை அறிவூட்டல் கிழமை!

- கந்தசாமி கங்காதரன்

தமிழினப் படுகொலை அறிவூட்டல் கிழமைக்கான சட்ட மூலம் (Bill 104) ஒன்ராறியோ சட்ட மன்றத்தில் மே, 2021-இல் நிறைவேற்றப்பட்டபோது கனடியத் தமிழ்ச் சமூகம் ஆறுதல் அடைந்தது. ஏப்ரல் 30, 2019-இல், ஸ்கார்பரோ - ரூஜ் பார்க் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் விஜய் தணிகாசலம் சமர்ப்பித்த தனிநபர் சட்டப் பிரேரணை மே 16, 2019-இல் இரண்டாவது வாசிப்பையும் கடந்தது.

அதன் பிறகு இந்தச் சட்டப்பிரேரணை தொடர்பில் மாறுபட்ட கருத்துகள் எழுந்தன.

நிறைவேறுமா? இல்லையா? என்பது பெரும் கேள்வியாகத் தமிழ்ச் சமூகத்தில் எழுந்தது இரண்டு ஆண்டுகள் கழித்து மே 6, 2021-இல் மூன்றாவது வாசிப்பையும் கடந்து, மே 12, 2021-இல் மாகாண ஆளுநரின் ஒப்புதலுடன் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டது.

சட்டமூலத்தின்படி ஒவ்வோர் ஆண்டும் மே 12 - 18 வரையிலான 7 நாள்கள், 'தமிழினப் படுகொலை அறிவூட்டல் கிழமை'யாகக் கடைப்பிடிக்கப்படும். இந்நாள்களில் பள்ளிக்கூடங்களில் மாணவருக்கு தமிழ் இனப்படுகொலை பற்றிய அறிவும் தெளிவும் ஊட்டப் படலாம் பல்வேறு மட்டங்களிலும் இனப்படுகொலை விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்தப்படலாம்.

இது இப்படி இருக்க, ஒன்ராறியோ மக்களால் தெரிவு செய்யப் பட்ட ஒரு சட்டமன்ற உறுப்பினர் சமர்ப்பித்து, ஒன்ராறியோ மக்களால் தெரிவு செய்யப்பட்ட அனைத்துக் கட்சிகள் சார்ந்த சட்ட மன்ற உறுப்பினர்களின் ஒரு மனதான ஒப்புதலுடன் நிறைவேற்றப்பட்ட ஒரு சட்டமூலத்துக்கு எதிர்ப்புக் கிளம்பியது. மிகவும் நேர்த்தியாகத் திட்டமிடப்பட்ட எதிர்ப்பு. அதுவும் ஒன்ராறியோவின் முன்னணிச் சட்டவாளர்கள் சிலரை அமர்த்தி பெருஞ்செலவில் கிளப்பப்பட்ட எதிர்ப்பு.

சிறிலங்கா - கனடியச் செயற்பாட்டுக் கூட்டமைப்பு என்ற கனடா - பிறம்ரன் நகரில் இயங்கும் ஓர் அமைப்பு, வேறு சில இலங்கை அரச ஆதரவு அமைப்புகள், சில தனியாள்கள் இணைவில் ஒன்ராறியோச் சட்ட மன்றம் நிறைவேற்றிய, தமிழினப் படுகொலை அறிவூட்டல் கிழமைக்கான சட்ட மூலம், கனடிய அரசியல் அமைப்பினை மீறியுள்ளதாகவும், உரிமைகள், சுதந்திரத்துக்கான கனடியச் சாசனத்தின் 15வது பிரிவுக்கு முரணாக உள்ளதாகவும், அதனால் தங்கள் அடிப்படை உரிமைகள் மீறப்படுவதாகவும் ஒன்ராறியோ உயர் நீதிமன்றத்தில் மனு ஒன்று தாக்கல் செய்யப் பட்டது.

### சமத்துவ உரிமைகள்:

15 (1) ஒவ்வொரு தனிநபரும் சட்டத்தின் முன்னும் அதன் கீழும் சமமானவர்கள். அத்துடன் எந்தப் பாகுபாடும் இருக்காது, குறிப்பிடும்படியாக, இனம், தேசியம் அல்லது இனமூலம், நிறம், மதம், பால், வயது அல்லது உள, உடல்ரீதியான இயலாமை பற்றிய பாகுபாடு இன்றி சட்டத்தின் சமமான பாதுகாப்பும் சமமான அனுகூலமும் பெறும் உரிமையும் உடையவர்கள்.

மத்திய அரசின் வெளியுறவு, வெளிநாட்டுக் கொள்கைகள், குற்றவியற் சட்டம் ஆகியவற்றின் அடிப்படையில் முடிவெடுக்கப்பட வேண்டிய இனப்படுகொலைத் தீர்மானத்தை மாகாண அரசு முடிவெடுப்பதற்கு அதற்கு அதிகாரம் இல்லை என்பதே எதிர்ப்பாளர் களின் முதன்மை வாதம்.

விடுதலைப்புலிகளின் புலம்பெயர் எச்சங்களின் முயற்சியாலேயே இந்தச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டது என்று சட்டத்தை எதிர்த்தோர் பரப்புரை செய்தனர்.

சட்டமூலம் நிறைவேற்றப்பட்ட சில நாள்களிலேயே 'ஆதாரமற்ற தரவுகளினதும் அப்பட்டமான பொய்களினதும் அடிப்படையில் நிறைவேற்றப்பட்ட சட்டமூலம் இது.' என்று கண்டித்த இலங்கை வெளியுறவு அமைச்சு, 'ஐக்கிய நாடுகள் அவையோ வேறு உலக நாடுகளோ, நட்பு நாடான கனடாவோ கூட சிறீலங்காவில் தமிழர் மீது நிகழ்த்தப்பட்டது. இனப்படுகொலை என ஏற்றுக் கொள்ளவில்லை.' எனவும் சுட்டிக்காட்டியிருந்தது.

இலங்கை வெளியுறவு அமைச்சின் இந்த வாதங்களையும் சிறீலங்கா - கனடியச் செயற்பாட்டுக் கூட்டமைப்பு நீதிமன்றத்தில் முன்வைத்திருந்தது. 'அரசியலமைப்புச் சட்டத்தில் நீண்ட அனுபவம் மிக்க சட்டவாளர்களை எங்களுக்காக வாதாட நியமித்திருக்கிறோம்' என்றும் இந்த அமைப்பு பெருமைப்பட்டுக்கொண்டது.

GoFundMe நிதிசேகரிப்பு இணையத்தளத்தின் ஊடாக $1,50,000 வரையில் சேகரித்திருந்தது, இந்த அமைப்பு.

இந்த எதிர்ப்பாளர்களுக்குப் பல்வேறு வகையிலும் கனடாவின் ஆறு பௌத்த விகாரைகள் பேராதரவும் உதவியும் நல்கியதாக வும் அவர்களே கூறினர்.

'புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் அரசியல், பொருளாதார இலாபங் களுக்காகவே தமிழினப் படுகொலைக் குற்றச்சாட்டு உருவாக்கப் பட்டது. எந்தவித ஆதாரமும் இன்றி, பொய்களை உண்மையாக் கும் வகையில் விடுதலைப்புலிகள் ஆதரவுப் புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தினால் பரப்பப்படும் கட்டுக்கதையே தமிழினப் படுகொலை என்பது. தமிழர்கள் மட்டுமல்லாது, சிங்களவர், முஸ்லிம்கள், மலே, பேர்கர்கள் எனப் பல்வேறு தரப்பினரையும் உள்ளடக்கிய கனடிய சிறிலங்காச் சமூகத்தோடு கலந்தாலோசிக்காமல் ஒருதலைப்பட்சமாக நிறைவேற்றப்பட்ட சட்டமூலம் இது. தமிழ்ச் சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் முன்மொழிந்து நிறைவேற்றப்பட்ட இச்சட்டமூலத்தை ஆராய்ந்து, நீதியை நிலை நாட்டுமாறு நீதி

மன்றத்திடம் வேண்டிக் கொள்கிறோம்.' என்று சட்டமூலத்தை எதிர்த்த சில சிங்கள அமைப்புகளுள் இரண்டு அமைப்புகளின் தலைவர்கள் இணைந்து Toronto Star பத்திரிகைக்கு அனுப்பிய மின்னஞ்சலில் கூறியுள்ளனர்.

இந்த வழக்கு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்ட சமகாலத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் கரி ஆனந்தசங்கரி யின் பெருமுயற்சியால், சிறீலங்காவில் தமிழர்கள் மீது நிகழ்த்தப் பட்டது இனப்படுகொலையே என்றும் ஒவ்வோராண்டும் மே 18ஆம் நாள் தமிழினப் படுகொலை நினைவு நாளாகக் கடைப்பிடிக் கப்படும் என்றும் கனடிய நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறை-வேற்றப்பட்டமை தமிழ் சமூகத்துக்குப் பெரும் ஆறுதலாகவும் வழக்குத் தொடுநர் தரப்புக்கும் இலங்கை அரசுக்கும் பேரதிர்ச்சி யாகவும் அமைந்திருக்கும்.

ஒன்ராறியோ அரசு சார்பில் வாதிட்ட வழக்குரைஞர்கள், 'தமிழின அழிப்பு குறித்து ஒன்ராறியோ மக்களுக்கு எடுத்துக்கூறவும், பாதிக்கப்பட்ட தமது உறவுகளை நினைவுகூரவும் சட்ட அதிகாரம் உள்ளது' என்பதையும் தமது வாதத்தில் வலுவாக முன்வைத்தி ருந்தனர்.

ஜூன் 28, 2022 செவ்வாய்க்கிழமை ஒன்ராறியோ உயர் நீதிமன்ற நீதிபதி ஜஸ்மின் அக்பரலி அம்மையார் வழக்கின் தீர்ப்பை வழங் கினார்.

"இச்சட்டத்தின் நோக்கம் கல்வியூட்டுவதே என நான் கண்டறிந்-ததை கருத்தில் கொண்டு, அது ஒன்ராறியோவின் சட்ட அதிகார வரம்பிற்குள் அரசியலமைப்புச் சட்டம், 1867இன் எஸ். 93 படி கல்வி தொடர்பான சட்டங்களை பிரத்தியேகமாக உருவாக்கும் அடிப்படையிலும், தமிழின அழிப்பை நினைவுகூரவும், கல்வி புகட்டவும் வழிவகுக்கும்.

ஏற்கனவே நடைமுறையிலுள்ள இரண்டாம் உலகப்போரில் யூதர்கள் மீதான இனப்படுகொலையை (Holocaust) அங்கீகரித்து நினைவுகூரும் மாநிலச் சட்டம், உலகப் போர்கள் அல்லது வேறு எந்த சர்வதேச மோதலின் சர்வதேச அம்சங்களை மையமாகக் கொண்ட மாநில கல்விக் கொள்கையிலிருந்து வேறுபட்டதன்று" என்று தனது தீர்ப்பில் நீதிபதி குறிப்பிட்டார்.

'இங்கு இனப்படுகொலைக் குற்றவாளிகளாக ஒன்ராறியோ சட்ட மன்று குறிப்பிடுவது இலங்கை அரசாங்கத்தையே. ஒரு நாட்டின் மீது இனப்படுகொலைக் குற்றம் சுமத்தப்படும்போது அது குறித்த இனத்தவர்களையோ, மதத்தவர்களையோ அந்த அரசில் ஆதிக்கம் செலுத்தும் மக்களையோ குற்றவாளிகளாகக் கருதாது என்று நீதிபதி குறிப்பட்டது கவனத்தில் கொள்ளத்தக்கது.

"தமிழின அழிப்பு நடைபெற்றதை அங்கீகரிப்பதன் மூலம் அது தொடர்பான விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்துவதுடன் மேலும் இது நிகழா வண்ணம் தடுக்கவும், வரலாற்றை அறியவும், பாதிப்புகளிலிருந்து மக்கள் வெளியில் வரவும் உதவும்" என்றும் சுட்டிக்காட்டினார் ஒன்ராறியோ உயர் நீதிமன்ற நீதிபதி ஜஸ்மின் அக்பரலி அம்மையார்.

புலம் பெயர்ந்து வந்தாலும் தமிழர்கள் மீது தமது ஆதிக்கத்தை நிலைநாட்ட முயலும் இலங்கை அரச பயங்கரவாதத்தின் ஒரு முயற்சியாகவே இந்த வழக்கு கருதப்படவேண்டும்.

அரச பயங்கரவாதத்தின் இந்த முயற்சியை முறியடிக்க, அறுபதுக்-கும் மேற்பட்ட தமிழ் அமைப்புகள் ஒன்றிணைந்து சட்டமூலம் - 104ஐப் பாதுகாக்கும் பொருட்டு தம்மையும் இவ்வழக்கில் இணைத் திருந்தமை பாராட்டுக்குரியது.

ஒன்ராறியோ அரச வழக்குரைஞர்களுக்கும் தமிழ்த் தரப்புகள் நிய மித்த Goddard & Shanmugunathan சட்ட நிறுவனத்தின் வழக்குரை-ஞர்களுக்கும் ஏனைய வழக்குரைஞர்களுக்கும் ஒன்றிணைந்து செயற்பட்ட தமிழ் அமைப்புகளுக்கும் சட்டமன்ற உறுப்பினர் விஜய் தணிகாசலத்துக்கும் தமிழ்ச் சமுகத்தின் நன்றியைத் தெரிவிக்க வேண்டிய கடப்பாடு கனடியத் தமிழ்ச் சமூகத்துக்கு உண்டு.



புலம் பெயர்ந்து வந்தாலும் தமிழர்கள் மீது தமது ஆதிக்கத்தை நிலைநாட்ட முயலும் இலங்கை அரச பயங்கரவாதத்தின் ஒரு முயற்சியாகவே இந்த வழக்கு கருதப்படவேண்டும்.

அரச பயங்கரவாதத்தின் இந்த முயற்சியை முறியடிக்க, அறுபதுக் கும் மேற்பட்ட தமிழ் அமைப்புகள் ஒன்றிணைந்து, சட்டமூலம் - 104ஐப் பாதுகாக்கும் பொருட்டு தம்மையும் இவ்வழக்கில் இணைத் திருந்தமை பாராட்டுக்குரியது.

ஏல்லா விடயங்களிலும் இந்த இன ஒற்றுமை தொடரவேண்டும்.



gangatharan.k@thaiveedu.com

# பூட்டின் புதுக்க ஆற்றிய உரை

- மணி வேலுப்பிள்ளை

2022 யூன் 17ம் திகதி 'உலக பொருளாதார அரங்கு' எனும் ரஷ்ய மாநாட்டில் அதிபர் பூட்டின் ஆற்றிய உரையின் ஆங்கில மொழிபெயர்ப்பு அவரது கிரெம்ளின் இணையத்தளத்தில் முழுமையாக இடம்பெற்றுள்ளது.

## மேற்குலகு:

மேலைநாடுகளை வஞ்சப்புகழ்ச்சியுடன் 'எமது மேற்கத்தைய பங்காளிகள்' என்று பூட்டின் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் 'பேராசை




பிடித்தவர்கள், பழங்கால உலக மாயைக்கு உள்ளானவர்கள், உலக வணிக ஒழுங்கினைக் கெடுத்தவர்கள்' என்று சாடியிருக்கிறார்.

அமெரிக்கர் தம்மை 'பூவுலகத்தின் இறைதூதர்' என்று கருதுகிறார்கள். மேற்குலகிற்கு பித்துப் பிடித்திருக்கிறது. ரஷ்யா மீதான காழ்ப்பு அவர்களைப் பிடித்து ஆட்டுகிறது என்று தெரிவித்திருக்கிறார்.

மேற்குலக ஆட்சியாளர்களை 'எமது சகபாடிகள்' என்று நையாண்டி பண்ணிய கையோடு, 'ஆளும் மேட்டிமைக் குழாங்கள்' என்று கண்டித்திருக்கிறார். உலக அரசியலில் மேற்குலகின் ஆதிக்கம் நிலைக்கப் போவதில்லை என்றும் எச்சரித்துள்ளார்.

அவர்கள் மெய்நிலவரத்தை மறுக்கிறார்கள், வரலாற்றை எதிர்த்திசையில் திருப்பிவிட எத்தனிக்கிறார்கள், கழிந்த நூற்றாண்டுக்கான நியதிகளின்படி சிந்திக்கிறார்கள், மற்ற நாடுகளை தாம் கட்டியாளும் நாடுகளாகவும், தமது கோடிப்புறங்களாகவும் கருதுகிறார்கள் என்று கருத்துரைத்துள்ளார்.

ரஷ்யரின் சொத்துகளை முடக்குவதன் மூலமோ, மேற்குலக நிறுவனங்களை ரஷ்யாவிலிருந்து வெளியேற நிர்ப்பந்திப்பதன் மூலமோ ரஷ்யாவின் பொருள்வளத்தையும், தொழில்துறையையும், வங்கியலுவலையும், வணிக உறவையும், வாழ்க்கைத் தரத்தையும் ஒடுக்க முடியாது என்று தெரிவித்துள்ளார்.

ரஷ்யப் பேரரசர் மகா பீட்டரின் வழித்தோன்றலாகத் தன்னை முன்வைக்கும் பூட்டின், அமெரிக்க எழுத்தாளர் மார்க் துவெயினை மேற்கோள் காட்டியிருக்கிறார். 'எனது இறப்பு ஒரு மிகைபடுத்தப்பட்ட செய்தி' என்று மார்க் துவெயின் நகையாடியது போல், 'எனது சுகயீனம் ஒரு மிகைபடுத்தப்பட்ட செய்தி' என்று பூட்டின் நகையாடியிருக்கிறார்.

## கிழக்கு உக்ரேன்:

பூட்டின் ஆற்றிய உரையில் 'டொன்பாசில் விசேட படை நடவடிக்கை' எனும் தொடர் 10 தடவைகள் இடம்பெற்றுள்ளது. டொன்பாஸ் என்பது கிழக்கு உக்ரேனில் பெரும்பாலும் ரஷ்யர்கள் வாழும் டொனெற்ஸ்க், லுஹன்ஸ்க் பிரதேசங்களை உள்ளடக்கிய புலம். உலகப் பொருளாதார நெருக்கடிக்கு 'விசேட படை நடவடிக்கை'யே காரணம் என்ற மேற்குலக வாதம் இதில் நிராகரிக்கப்பட்டுள்ளது.

'விசேட படை நடவடிக்கை' ஒரு கடின முடிவாயினும், அவசிய முடிவு. டொன்பாசை விடுவிப்பதற்கும் உலகப் பொருளாதார நெருக்கடிக்கும் எதுவித சம்பந்தமும் இல்லை. தாம் புரிந்த அசட்டுத்தனங்களுக்கு நியாயம் கற்பிப்பதற்காகவே 'விசேட படை நடவடிக்கையை' மேற்குலகு பயன்படுத்துகிறது என்று அவர் விளக்கமளித்துள்ளார்.

டொன்பாசில் ரஷ்யப் படையினரும், டொன்பாஸ் குடிப்படையினரும் தமது சுதந்திரத்துக்காக மட்டுமல்லாது பாரிய, பல்லின, சுதந்திர ரஷ்யாவின் வருங்காலத்துக்காகவும் போராடுகிறார்கள். ஆதலால் 'விசேட படை நடவடிக்கை'யின் குறிக்கோள் எய்தப்பட்டே தீரும் என்று பூட்டின் முழங்கியிருக்கிறார்.

## நோம் சொம்ஸ்கி:

உக்ரேன் - போரைப் பேசித்தீர்க்க கிடைக்கும் எந்த வாய்ப்பையும் தவற விடக்கூடாது என்று நோம் சொம்ஸ்கி, கிசிஞ்சர் போன்ற திறனாய்வாளர்கள் கூறுகிறார்கள். பிரச்சினையைப் பேசித்தீர்ப்பது என்றால், எட்டப்படும் தீர்வை இரண்டு தரப்புகளும் சகிப்புத்தன்


நோம் சொம்ஸ்கி

மையுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும். தத்தம் இலக்கினை அவை எய்தாவிட்டாலும், எட்டப்படும் தீர்வை அவை சகிப்புத்தன்மையுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்கிறார் நோம் சொம்ஸ்கி.

இங்கு இரண்டு தெரிவுகள் மட்டுமே உண்டு: இரண்டு தரப்புகளும் சகிப்புத்தன்மையுடன் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வினை எட்டுதல் அல்லது ஒரு தரப்பு மண்டியிடும் வரை போரைத் தொடர்ந்து மேற்கொள்ளல். போர் தொடரும் ஆபத்துக்கு அமெரிக்காவின் நிலைப்பாடே காரணம் என்பது நோம் சொம்ஸ்கியின் வாதம்.

## அமெரிக்காவின் நிலைப்பாடு:

அமெரிக்காவின் நிலைப்பாட்டை நோம் சொம்ஸ்கி இப்படி விளக்குகிறார்:

ரஷ்யாவுக்கும் உக்ரேனுக்கும் இடையே பேச்சுவார்த்தை மூலம் தீர்வு எட்டப்படுவதைத் தடுப்பதே அமெரிக்காவின் கொள்கை. அமெரிக்கா பல ஆண்டுகளாக அக்கொள்கையைப் பின்பற்றி வருகிறது. ரஷ்யா திரும்பவும் ஓர் ஆக்கிரமிப்பில் இறங்க முடியாதவாறு சேதமடையும் வண்ணம் போரைத் தொடர்வதே அமெரிக்காவின் கொள்கை.

அதற்கு என்ன பொருள்? போரைத் தொடர்தல், உக்ரேனியரை வருத்துதல், கொல்லுதல், காலநிலை மாற்ற இலக்குகளை எதிர்த்திசையில் திருப்புதல், அணுவாயுதப் போர் எனும் ஆபத்துக்கு வழிவகுத்தல், கோடிக்கணக்கான உலக மக்களை பட்டினிச் சாவுக்கு இட்டுச்செல்லுதல்... எல்லாம் அதற்குள் அடங்கும். ரஷ்யாவைக் கெடுப்பதற்காகவே இப்படி எல்லாம் செய்யப்படுகிறது. இப்படித்தான் ஜேர்மனி மீண்டும் வலிமை அடையாதவாறு, அதனை ஒரு வேளாண்மை நாடாக்கும் நோக்குடன் 1919ல் வேர்சாய் பொருத்தனை செய்யப்பட்டது. ஆனால் 10 ஆண்டுகளுக்குள் ஜேர்மனி வலுப்பெற்றுவிட்டது. அது பழைய கதை. இப்பொழுது ரஷ்யாவை ஒரு பண்ணைச் சமூகமாக மாற்றும் நோக்குடன் போர் புரியப்படுகிறது. இதற்கு என்ன கருத்து? முடிவின்றிப் போரைத் தொடர்வதே இதன் கருத்து.

## தீர்வு:

தீர்வு காண்பது பற்றி நோம் சொம்ஸ்கி இப்படிக் கூறுகிறார்:

போரைத் தொடர்வதா? அல்லது இரண்டு தரப்புகளும் சகிப்புத்தன்மையுடன் ஏற்றுக்கொள்ளும் தீர்வை எட்டுவதா? சரி, பேசித்தீர்க்க முயல வேண்டுமா? முயலக் கூடாது என்கிறது அமெரிக்கா. உக்ரேனுக்கு மட்டுமல்ல, முழு உலகத்துக்கும் பெருங்கேடு விளைவிப்பதே அதன் நோக்கம்.

போகட்டும்! எப்படிப்பட்ட தீர்வை எட்டலாம்? ஒருசில ஆண்டுகளுக்கு முன்னர் உக்ரேன் அதிபர் செலன்ஸ்கி ஒரு தீர்வினை முன்வைத்தார்:

- அமெரிக்க-சோவியத் பகைமை நிலவிய காலத்தில் ஆஸ்திரியா நடுநிலை வகித்தது போல் இப்பொழுது உக்ரேன் நடுநிலை வகித்தல்.
- ரஷ்யா தன்வசப்படுத்திய கிரிமியாவைப் பற்றி காலப்போக்கில் பேசித்தீர்த்தல்.
- மின்ஸ்க் 2 எனப்படும் உடன்படிக்கையில் வகுத்தபடி உக்ரேனின் கிழக்குப் புறத்து தொனெற்ஸ்க், லுஹான்ஸ்க் பிரதேசங்கள் உட்பட தொன்பாஸ் புலத்துக்கு பெல்ஜியத்தில் அல்லது சுவிற்சலாந்தில் அல்லது அமெரிக்காவில் உள்ளது போல் சுயாட்சி அளித்தல்.


செலன்ஸ்கி

ஆனால், உக்ரேன் மீது ரஷ்யா போர் தொடுத்த பிறகு, மேற்படி உடன்படிக்கை கைகூடுவது எங்ஙனம்? ஒருவருக்கும் தெரியாது. ஆனாலும் மேற்படி உடன்படிக்கை போன்ற ஓர் உடன்பாட்டை எட்ட முயன்று பார்க்கலாம்.

## நேட்டோ:

நேட்டொவைக் குறித்து நோம் சொம்ஸ்கி இவ்வாறு தெரிவிக்கிறார்:


நேட்டோ

ரஷ்யா பேரழிவுக்கு உள்ளாகும் வரை போரைத் தொடர்வதற்கு, போர்ச்செருக்கு மிகுந்த அமெரிக்காவும், பிரித்தானியாவும், உறுதி பூண்டுள்ளன. எனினும் ரஷ்யா பேரழிவுக்கு உள்ளாகுமென நான் நினைக்கவில்லை. மாறாக, உக்ரேனே பேரழிவுக்கு உள்ளாகும்.

பிரான்சு, ஜேர்மனி, இத்தாலி முதலிய நாடுகள் நெகிழ்வுப் போக்குடையவை. அவை ரஷ்யாவுடனும், உக்ரேனுடனும் பேசித்தீர்க்க முயன்றபொழுது, அமெரிக்கா அவற்றை அதட்டித் தடுத்துவிட்டது.

ரஷ்யாவும் பூட்டினும் தோல்வியை ஒப்புக்கொண்டு, வாயைப் பொத்திக்கொண்டு, பின்வாங்கக்கூடுமா, அல்லது உக்ரேனை அழித்தொழிப்பதற்குரிய ஆயுதங்களைப் பயன்படுத்தி, அணுவாயுதப் போருக்கு இட்டுச்செல்லக் கூடுமா என்பதை அறிவதற்காக, போர் எனும் கொடிய சூதாட்டம் தொடர்ந்து ஆடப்படுகிறது. அதற்காக அமெரிக்காவின் தலைமையில், பல்வேறு தரப்புகளின் ஆதரவுடன், போர் பரீட்சித்துப் பார்க்கப்படுகிறது.

## அமெரிக்க பாதுகாப்புத் திணைக்களம்:

அமெரிக்க பாதுகாப்புத் திணைக்களம் குறித்து நோம் சொம்ஸ்கி இப்படிக் கூறுகிறார்:

ஆட்சியாளர் நாடும் படுதீவிரமான நிலைப்பாடுகளை அமெரிக்க பாதுகாப்புத் திணைக்களம் நிராகரிக்க நேர்ந்துள்ளது. அந்த வகையில் அது அமெரிக்காவின் அமைதிகாப்புப் படையாக மாறியுள்ளது! அமெரிக்க பேரவையாளர்கள், ஹிலாரி கிளின்டனைப் போன்றவர்கள், 'வான சூனிய வலயம் ஒன்றை ஏற்படுத்துவோம்' என்று முழங்கியுள்ளார்கள்.

உக்ரேன் வான்பரப்பை அமெரிக்காவின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் நடவடிக்கை அது. அதற்கு ரஷ்யாவின் உள்ளே நிலைகொண்டுள்ள விமான எதிர்ப்பு பீரங்கிகளை அமெரிக்கா தாக்கினால் தான் உண்டு. அதன் விளைவு என்னவாகும் என்பது பாதுகாப்புத் திணைக்களத்துக்கு நன்கு விளங்கும்.

அதற்கெல்லாம் ரஷ்யா இடங்கொடுக்குமா? பதிலடி கொடுக்குமா? ரஷ்யா பதிலடி கொடுத்தே தீரும். அப்பொழுது அமெரிக்கா அணுவாயுதப் போரில் இறங்க நேரும். நாங்கள் எல்லோரும் அழிந்தொழிய நேரும்.

நிதானம் படைத்த அமெரிக்க பாதுகாப்புத் திணைக்களம் மேற்படி வான சூனிய வலயக் கோரிக்கையை நிராகரித்துவிட்டது. எவ்வளவு காலத்துக்கு அத்தகைய கோரிக்கையை அத்திணைக்களத்தினால் தடுத்துநிறுத்த முடியும்? இது மிகவும் ஆபத்தான நிலவரம் அல்லவா?

நான் நெடுங்காலமாக உயிர்வாழ்ந்து வருபவன். இன்று போல் என்றுமே அமெரிக்காவில் எதேச்சதிகாரம் ஓங்கியதில்லை. இன்று உளவுப்படை வந்து, என்னை மடக்கிப் பிடித்து, சிறையில் அடைக்கும் என்று நான் கருதவில்லை. அவர்கள் என்னை ஏறெடுத்தும் பார்க்கப் போவதில்லை. ஆனாலும் ஊடகங்கள் எல்லாவற்றையும் இழுத்துப் பூட்டிவிடுவார்கள்.

## ரஷ்யாவின் நிலைப்பாடு:

ரஷ்யாவின் நிலைப்பாடு பற்றி நோம் சொம்ஸ்கி இவ்வாறு கூறுகிறார்:

ரஷ்ய வெளிநாட்டு அமைச்சர் லாவரோவ் சொல்வதை அமெரிக்காவில் செவிமடுக்க அனுமதி இல்லை. ரஷ்யத் தொலைக்காட்சி பார்க்க அனுமதி இல்லை. ரஷ்ய நிலைப்பாட்டை அறிவதற்கு நாங்கள் இந்தியத் தொலைக்காட்சியை அல்லது அல் ஜசீராவைப் பார்க்க வேண்டியுள்ளது. இந்தளவு தணிக்கை இங்கு எந்தக் காலத்திலும் இருந்ததில்லை. இது ஒரு விசித்திரமான, பித்துப்பிடித்த நிலைப்பாடு.

ரஷ்யா சொல்வதை நாங்கள் செவிமடுக்க முற்படுவது இயற்கை. செவிமடுக்க முற்படாதிருப்பது மூடத்தனம். அதை எல்லாம் எமது ஆட்சியாளர் பொருட்படுத்தவில்லை. ரஷ்யச் செய்தி கிடைக்கும் வாய்ப்பை அவர்கள் தடுத்துவிட்டார்கள்.

நான் இப்பொழுது சொல்வதைச் சொல்வோர், அதாவது ஆட்சியாளரின் நிலைப்பாட்டிலிருந்து வழுகுவோர் அனைவரும் படுபாவிகள், பொய்யர்கள், கயிறு திரிப்பவர்கள் என்று தூற்றப்படுகிறார்கள். நாங்கள் ஐரோப்பாவைவிட அமெரிக்காவிலேயே அதிகம் தூற்றப்படுகிறோம்.

நான் சொல்வதெல்லாம் வெளிப்படையான உண்மைகள். மறுபேச்சுக்கு இடங்கொடாத உண்மைகள். ஆனால் அவற்றை எல்லாம் மைய ஊடகங்களில் எடுத்துரைக்க முடியாது. எனது வாழ்நாளில் இந்தளவு தணிக்கையை இதுவரை நான் எதிர்கொண்டதில்லை. இரண்டாம் உலகப் போரின் போதுகூட இவ்வளவு தணிக்கை இடம்பெற்றதில்லை.

உக்ரேனுக்கான நேட்டோவின் ஆயுத விநியோக மார்க்கங்களை ரஷ்யா தாக்கினால், அது நேட்டோ மீதான தாக்குதலுக்கு நிகராகும். அதற்கு நேட்டோ பதிலடி கொடுத்தால், போர் எனும் ஏணியில் இன்னொரு படி எட்டப்படும்.

எடுத்துக்காட்டாக கருங்கடல் வலயத்தில் எல்லா விநியோகங்களும் தடுக்கப்பட்டால், வெளியுலகிற்கு உணவும், உரமும் கிடைக்காமல், கோடிக்கணக்கான மக்கள் பட்டினி கிடந்து சாக நேரும்.

உலகளாவிய பட்டினியைத் தடுக்க இரு வழிகள் உண்டு:

- ரஷ்யா விதிக்கும் விநியோகத் தடையை பலவந்தமாக அகற்றல். அதன் விளைவு என்னவாகும் என்பது உங்களுக்குப் புரியும்.
- வெளியுலகிற்கு உணவும் உரமும் கிடைக்கும் வண்ணம் அமைதிவழியில் பிரச்சனையைப் பேசித்தீர்த்தல்.

ரஷ்ய, உக்ரேனியக் கப்பல்கள், மற்றும் பிற கப்பல்கள் உணவும் உரமும் ஏற்றிச்செல்வதற்கு ஏதுவாக ரஷ்யா மீது விதிக்கப்பட்ட பொருளாதார முட்டுக்கட்டைகளைக் குறைக்கும்படி ரஷ்யா கேட்டுள்ளதாகத் தெரிகிறது. அமெரிக்க ஊடகங்கள் இதை வெளியிடவுமில்லை, கருத்தில் கொள்ளவுமில்லை. எதேச்சதிகாரத்தின் பிடி இங்கு அவ்வளவு தூரம் இறுகியுள்ளது.

## அமெரிக்காவின் ஆயுத உதவி:

அமெரிக்காவின் ஆயுத உதவி பற்றி நோம் சொம்ஸ்கி இப்படிச் சொல்கிறார்:

ரஷ்யப் போர்க்கப்பல்களை மூழ்கடிக்கும் ஏவுகணைகளை உக்ரேனுக்கு அனுப்பிவைக்க அமெரிக்கா எண்ணுவதாகத் தெரிகிறது. ஏற்கெனவே ரஷ்யாவின் முன்னணிப் போர்க்கப்பல் ஒன்று மூழ்கடிக்கப்பட்டுவிட்டது. அதற்கு ரஷ்யா பதிலடி கொடுக்கவில்லை.

இன்னும் செப்பநுட்பமான ஏவுகணைகளையும், படைக்கலங்களையும் அமெரிக்கா அனுப்பிவைக்கலாம். அதற்கு ரஷ்யா ஒன்றில் நன்றி தெரிவிக்கலாம்! 'போகட்டும், எங்கள் போர்க்கப்பல்கள் எங்களுக்குத் தேவையில்லை' என்று தெரிவிக்கலாம். அல்லது பதிலடி கொடுக்கலாம். அணுவாயுதப் போர் மூளலாம். நாங்கள் அழிந்தொழியலாம்.

'வணிகக் கப்பல்கள் ரஷ்ய முட்டுக்கட்டைகளைத் தகர்த்தெறிவதற்கு ஏதுவாக அமெரிக்கப் போர்க்கப்பல்கள் அவற்றுடன் கூடிச் செல்ல வேண்டும்' என்று Wall Street Journal எழுதியுள்ளது! அது சர்வதேயச் சட்டத்துக்கு அமைவான நடவடிக்கை என்றும் அது வலியுறுத்தியுள்ளது.

அதன் விளைவைக் காண நாங்கள் உயிருடன் இருக்கப் போவதில்லை. இது பித்துப்பிடித்தவர்களின் பேச்சென்று சொன்னால், 'நீ பூட்டினை ஆதரிப்பவன் பூட்டினுக்கு விட்டுக்கொடுப்பவன்' என்று கொக்கரிக்கிறார்கள்.

http://en.kremlin.ru/events/president/news/68669



mani.v@thaiveedu.com



# Lower rates.
# Exceptional service.

Connect with an insurance company that puts clients first.
Discover why The Co-operators is the right choice
for your Auto and Home insurance.

Ask us about our significant discounts, 24-hour
Emergency Claims Service, free Identity Theft coverage
with our Home policies, and Accident Forgiveness
Endorsement option. All backed by our
Claims Guarantee.

**Senthooran Punithavel**

Phone: **416-396-0707**
Fax: 416-396-1221
Email: Senthooran_Punithavel@cooperators.ca

We've Moved
Our New Address

10 Milner Business Court - Unit 708
Scarborough, ON M1B 3C3

## குறைந்த கட்டணங்கள்
## பெரும்பயன் நல்கும் சேவைகள்

வாடிக்கையாளர் நலனை முன்னிலைப்படுத்தும்
எம் காப்புறுதி அமைப்போடு தொடர்பு கொள்ளுங்கள்

வீடு, வாகன காப்புறுதி சேவைகளுக்கு உகந்த தெரிவு
The Co-operators நிறுவனமே என்பதைக் கண்டுகொள்ளுங்கள்

உங்களுக்கான கட்டணக் கழிவுகளை பெற்றுக் கொள்ளுங்கள்

24 மணிநேர அவசர கேட்பனவுச் சேவை வழங்கப்படும்

Home Auto Life Investments
Group Business Farm Travel

the co-operators®
A Better Place For You®

# ஒஸ்கார் அடியும் அலோபீசியாவும்

- போல் ஜோசேப்

உலகம் முழுவதும் 16 மில்லியன் கண்கள் அந்த நிகழ்வை உற்று நோக்கிக்கொண்டிருந்தன. ஒஸ்கார் விருதுக்கான விழா உற்சாகமாய் பரபரப்பாக... வழக்கம் போல அரங்கத்தில் திரை நட்சத்திரங்களின் கூட்டம்.

நகைச்சுவையாளர் கிறிஸ்றொக் அறிவிப்பாளராக கலகலப்பாக நிகழ்ச்சியை நடத்திக் கொண்டிருந்தார். அப்போது திரைப்பட பாணியில் எதிர்பாராத சம்பவம் நடைபெற்ற போது... அரங்கமும், நேரலையில் உலகம் முழுவதுதிலும் பார்த்துக் கொண்டிருந்தவர்களும் அதிர்ந்து போயினர்.

திரைப்படத்தில் வருவது போல நிழலா அல்லது நிஜமா என்பது புரியாமல் ஒரு கணப்பொழுது. தனது இருக்கையிலிருந்து எழுந்த



ஹொலிவூட் நடிகர் வில் ஸ்மித் மேடையை நோக்கி சென்று, அறிவிப்பாளரான கிறிஸ் றொக்கின் கன்னத்தில் பளார் என்று ஓர் அறை விடுகிறார்.

அதன் பின்பு புன்முறுவல் முகத்தோடு மெதுவாக நடந்து வந்து இருக்கையில் அமர்ந்து மீண்டும் 'எனது மனைவியின் பெயரை உனது வாயால் உச்சரிக்காதே' என்று தகாத வார்த்தைகளைப் பயன்படுத்தி திட்டுகிறார்.

அப்படி என்னதான் பிரச்சினை.

1997ல் வெளியான 'GI Jane' என்ற திரைப்படத்தின் கதாநாயகி தான் இதற்கு மூலகாரணம். கதாநாயகி டெமி மூர் முதல் பெண்ணாக அமெரிக்க 'Navy Seal' 'கடல்-வான்-தரை' மூன்றிலும் செயற்படும் ஒரு சிறப்புப்படையில் சேர்ந்து பயிற்சி எடுத்து பல எதிரிக் களங்களையும் தன் பெண்மையை மறைத்து மொட்டைத் தலையுடன் பணியாற்றும் போது எதிர் கொள்ளும் இடர்பாடுகளை சித்தரிக்கும் படம்.

ஒஸ்கார் நிகழ்வில் கலந்து கொண்ட பிரபல ஹொலிவூட் நடிகரும் சிறந்த நடிகருக்கான ஒஸ்கார் விருதைப் பெற்றவருமான வில் ஸ்மித் அவர்களின் மனைவி Jade தன் தலையை மொட்டை அடித்து GI Jane படத்தின் கதாநாயகி போன்ற தோற்றத்துடன் வந்திருந்தார். அதற்கான காரணத்தை சில மாதங்களுக்கு முன் வெளியான அவரின் இணையத்தள நேர்காணல்களில் வெளிப்படையாகச் சொல்லியிருந்தார். அதை சாதாரண பொது மக்களே பல மில்லியன் பார்த்திருக்கும் போது, அவரின் ஹொலிவூட் நண்பர்களான நகைச்சுவை நடிகர் கிறிஸ் றொக் பார்க்காமலா இருந்திருப்பார். 2016ல் நடைபெற்ற ஒஸ்கார் விருது விழாவிலும் கிறிஸ்றொக் இதே போல வில்ஸ்மித்தின் மனைவியைப்பற்றி கிண்டல் செய்திருந்தாராம்.

ஒருவரை உடலால் தாக்குவது தவறுதான், வார்த்தைகளால் ஒருவரின் உடலைத் தாக்குவதை என்ன சொல்வது, அது அதைவிட பெருந்தவறு. வள்ளுவன் சொன்னது போல 'தீயினால் சுட்ட புண் உள் ஆறும், ஆறாதே நாவினால் சுட்டவடு'.

வில் ஸ்மித் அவர்களுக்கு 10 ஆண்டுகள் ஒஸ்கார் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள தடைவிதிக்கப்பட்டுள்ளது. இது தான் அவருக்கு அளிக்கப்பட்ட தண்டனை. ஆனால் ஒருவரின் உடல் குறைபாட்டை அவரின் நோயை வைத்து ஒருவரை மனம் நோகச் செய்த கிறிஸ்றொக் அவர்களுக்கு எந்த தண்டனையும் வழங்கப்படவில்லை.

அதைவிட ஒருவரின் மருத்துவரீதியான குறைபாட்டை பொது வெளியில், அந்த நபரின் அனுமதியின்றி விமர்சிப்பது மாபெரும் குற்றமாகும். இதற்காக அந்த குறிப்பிட்ட பாதிக்கப்பட்ட நபர் புகார்கள் எதுவும் அளிக்காமலே தவறு செய்தவரைக் கைது செய்ய சட்டம் அனுமதிக்கிறது.

ஆனால் நடைபெற்றதோ எதிர் மாறான விடயம். எல்லோரும் வில் ஸ்மித் அவர்களைத் தான் விமர்சித்தார்கள், சமூக வலைத்தளங்களில் அவர் மேல் கழுவிக் கழுவி ஊத்தினார்கள் என்று சொல்லலாம். அடிப்பதைத் தவிர்த்து அவரும் அவரின் மனைவியும் விருதை வாங்காமல் எழுந்து வெளி நடப்பு செய்திருக்க வேண்டும். அதுதான் ஒஸ்கார் குழுவுக்கும் நிகழ்ச்சித் தொகுப்பாளருக்கும் ஒரு தண்டனையாகவும் பாடமாகவும் அமைந்திருக்கும்.

சரி அப்படி என்னதான் அந்த தலை போற பிரச்சினை மொட்டை அடித்த தலைக்குப் பின்புலமான பிரச்சினைக்கு காரணம் என்ன? ஆம் அதுதான் 'அலோபீசியா' என்ற திட்டுத் திட்டாக முடிகொட்டும் பிரச்சினை. இதைத் தமிழில் திட்டுச் சொட்டை அல்லது புழுவெட்டு என்று சொல்லுவது வழக்கத்திலுள்ளது. புழுவெட்டு என்பது ஒரு காரணப் பெயர். இதற்கு ஏதாவது புழுக்கள் காரண

மல்ல. ஆனால், ஒரு இலையில் புழுக்கள் வட்டவட்டமாக அரித்து இருக்குமே, அதுபோல் இந்த பெயர் உருவாகியிருக்கலாம். இந்தக் கட்டுரையில் அலோபீசியா என்ற மருத்துவப் பெயரையே பயன்படுத்த விரும்புகின்றேன்.

அதிலும் குறிப்பாக இந்த நோயில் பல வகைகள் உள்ளன. வில் ஸ்மித்தின் மனைவி ஜெடாவுக்கு இருந்தது 'அலோபீசியா ஏரியாட்டா' (Alopecia Areata) என்ற வகை முடிகொட்டுதல் ஆகும். அதனால் தான் அவர் தலையை முழுவதுமாக மழித்து ஒரு புதிய தோற்றத்தில் காட்சியளித்தார்.

இந்த அலோபீசியா ஏரியாட்டா ஒன்றும் ஏதோ ஒரு புதிய நோயல்ல. உலகம் முழுவதும் கிட்டத்தட்ட 147 மில்லயின் பேர் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அமெரிக்காவில் மட்டும் 7 மில்லியன் பேர் இந்த நோய்க்கு ஆளாகி இருக்கலாம் என்கிறது மருத்துவப் புள்ளி விபரங்கள். இந்த நோய்க்காக ஆராய்ச்சிகள் செய்கிறோம். மருந்துகள் விற்பனை செய்கிறோம் என்ற பெயரில் 2020ல் மட்டும் உலக அளவில் 8 பில்லியன் டொலர்கள் வியாபாரம் நடைபெற்றுள்ளது என்றால் பாருங்களேன்.

உக்ரைன் போர், விலைவாசியேற்றம், இலங்கையில் போராட்டங்கள் மும்முரமாக நடைபெறும் இந்த வேளையில் முடிகொட்டுற விஷயம் ஒரு பெரிய விஷயம் இல்லைத்தான், 'முடி' என்பது ஒரு



சாதாரணமாக கடந்து போகக் கூடிய தமிழ்ச் சொல் அல்ல. அகராதியில் முடி முதல் முடிவு வரை கிட்டத்தட்ட நூறு சொற்கள் உள்ளன. உதாரணமாக முடி என்பது தலைமுடி, ஒரு வேலையை முடி, முடிச்சுப் போடு, முடித்துவிடு, ஆளை முடி, கிரீடம் என்ற மணி முடி, கட்டுதல், கெடுதல், சாதல், முற்றுப் பெறுதல், தீர்மானமாக (முடிவு சொல்)... இப்படிப் பல அர்த்தம் ஒரு சொல்லுக்குள்ளே அடங்கியிருப்பது எந்த மொழியிலும் இல்லாத சிறப்பு.

சரி இப்ப நம்ம முடியைப் பற்றி ஒரு முடிவுக்கு வருவம். சிலர் பேச்சு வழக்கில் டாக்டர் உங்களிடம் முடி கொட்டுறத்திற்கு மருந்து இருக்குதா என்று கேட்பார்கள். நான் நகைச்சுவையாகச் சொல்லுவது முடி கொட்டுறத்திற்கு மருந்துதர ஏலாது ஆனா கொட்டுறதை நிற்பாட்ட மருந்து தரலாம் என்று.

அலோபீசியா ஏரியாட்டா என்பது வட்டவட்ட வடிவில் தலையில் அங்குமிங்குமாக முடிகொட்டியிருப்பதாகும். தலையில் மட்டுமல்ல ஆண்களுக்கு தாடி, மீசையிலும் இது போல சிறிய வட்டவடிவில் முடியில்லாதிருக்கும். பொதுவாக எல்லா வயதிலும் ஆண், பெண் பேதமின்றி இந்த நோய் தாக்குகிறது. இந்த நோய்க்கான காரணிகள் ஆய்வுகளில் ஏதும் கண்டு பிடிக்கப்படாததனால் இதை 'Auto Immune Disease' அதாவது நோயை எதிர்க்கும் ஆற்றலானது சிலவேளைகளில் உடலுக்கு எதிராக குழிபறிக்கும் வேலையைச் செய்கின்றது. சில வெண் குருதி கலங்கள் குறிப்பிட்ட இடங்களிலுள்ள முடியின் வேரான Hair Follicles என்ற பகுதியில் எதிர்த்தாக்குதலில் ஈடுபட்டு அந்த முடிகளின் வேரை உடலின் எதிரிப் பொருளாகக் கருதி அவற்றை அழித்து விடுகின்றன. இது போன்ற நிலை மனித உடலில் மூட்டுவாதம் மற்றும் தோல் நோய்கள் போன்ற பல நூற்றுக்கணக்கான நோய்களிலும் நடைபெறுகிறது. நோய்கள் வராது தடுத்து பாதுகாக்கும் நோய் எதிர்ப்பாற்றலே இப்படிப்பட்ட நோய்கள் உருவாக்க காரணமாக இருப்பதால் இவற்றை Auto Immune Diseases என்ற 'நோய் எதிர்ப்பு முரண்பாட்டு நோய்கள்' என்றழைக்கலாம்.

ஆலோபீசியா ஏரியாற்றா பல இணை நோய்களின் பின்னணி காரணமாகவும் உண்டாகலாம் என்பது சில ஆராய்ச்சிகளின் மூலம் தெரிய வந்துள்ளது. உதாரணமாக தைரொயிட் சுரப்பியின் நோய்கள். மூட்டுவாதம் பெருங்குடல் அழற்சி, அனிமியா என்ற இரத்த சோகை, சில மருந்துகளின் பக்க விளைவுகள் தைபொயிற் போன்ற சில கிருமித் தொற்றுக்களின் தாக்கத்தின் பின்னான பாதிப்புகள், கீமோதெரபி சிகிச்சையின் பக்கவிளைவுகள் போன்றவையாகும்.

இது ஒரு தொற்று நோயல்ல. மேலும் ஆஸ்மா என்ற இழைப்பு நோய், அலர்ஜி என்ற ஒவ்வாமை நோய்கள், வெண்புள்ளி என்று தோலில் உண்டாகும் மெலனின் நிறப்பொருள் குறைபாடு (Down Syndrome) என்ற மரபணுக் குறைபாட்டு நோய்கள், போன்றவற்றாலும் சிலருக்கு இந்த நோய் உண்டாகியிருக்கிறது. மற்றும் மனரீதியான கவலை, இழப்புகள், மன அழுத்தம் போன்ற காரணிகளாலும் அலோபிசியா வரலாம்.

இன்னும் சிலருக்கு அவர்கள் தொடர்ச்சியாக பயன்படுத்தும் இரசாயணங்களின் உறுத்தல் காரணமாகவும் அவற்றின் நச்சுத் தன்மையாலும் அலோபீசியா உண்டாக வாய்ப்புள்ளது. வழக்கமாக மனிதர்கள் பயன்படுத்தும் பல இரசாயணங்கள் யாருக்கு எப்போது எப்படியான பாதிப்புகளை ஏற்படுத்தும் என்று உறுதியாக கணிப்பிட முடியாது.

பல வருடங்களுக்கு முன்பு அலோபீசியா பிரச்சினையோடு ஒருவர் வந்தார். அவரைப்பற்றி ஆய்வுகள் செய்து பார்த்ததில் அவர் நீண்ட காலமாக மெர்க்குரி எனும் பாதரசம் பயன்படுத்தும் ஒரு தொழிற்சாலையில் வேலை செய்து வருவதாக குறிப்பிட்டார். ஆனால் அந்த தொழிற்சாலையில் பணிபுரியும் மற்றவர்களுக்கும் தனக்குத் தெரிந்தவரை இதே பிரச்சினை இருப்பதாக இல்லை என்று சொன்னார்.

ஹோமியோபதி மருத்துவ முறையில் அவருக்கு மெர்க்குறிக்கான நச்சு முறிவு மருந்துகள் சிலவற்றை தேர்வு செய்து கொடுத்த பின்பு மூன்று மாதங்களின் பின்பு முடிகொட்டிய இடங்களிலிருந்து மீண்டும் முடி முளைக்கத் தொடங்கியது. அதன் பின்பு அதே தொழிற்சாலையில் அலுவலகப் பிரிவில் பணிமாற்றம் பெற்றார்.

இதே போல, இளம் வயதுப் பெண் ஒருவர் தலையில் ஆங்காங்கே வட்டவடிவான முடியில்லா திட்டுகளோடு வந்தார். அவர், தான் மாதவிடாய் பிரச்சினைகளுக்காக மருத்துவரின் பரிந்துரையுடன் சில காலம் கருத்தடை மருந்துகளை எடுத்து வருவதாகவும், தைரொயிட் சுரப்பியின் குறைபாடு இருப்பதால் அதற்கும் மருந்துகள் எடுப்பதாகவும் தெரிவித்தார். அதன் அடிப்படையில் அவரை ஹோமியோபதி மருத்துவ முறையில் ஆய்வுகள் செய்து சில மருந்துகளைக் கொடுத்த போது, சில வாரங்களிலேயே சொட்டை

யான திட்டுகளில் முடி குருத்துவிடத் தொடங்கியது. அது மட்டுமல்ல சில மாதங்களில் மாதவிடாய் கோளாறும், தைரொயிட் குறைபாடும் முழுமையாகச் சீராகிவிட்டது.

இப்படி நோய்க்கான காரணிகளை ஆய்வு செய்து அதன் அடிப்படையில் சிகிச்சையளிக்கும் போது முடிப்பிரச்சினை ஒரு முடிவுக்குவரும். பலருக்கு மன உளைச்சல், மன அழுத்தம் காரணமாகவும் அலோபீசியா வரலாம். பொதுவாக இளையவர்களில் இதன் தாக்கம் அதிகமாகவுள்ளது. மேலும் மரபணு, பரம்பரை இயல்புகளூடாகவும் அடுத்த தலைமுறைக்கு இந்த நோயானது கடத்தப்படலாம் என்றும் ஆய்வுகளில் தெரிய வந்துள்ளது. ஆயிரம் காரணிகள் இருந்தாலும் சரியான காரணத்தைக் கண்டுபிடித்தால் மட்டுமே அலோபீசியாவை இல்லாமல் செய்ய முடியும். வெறும் கிறீம்களாலும், பூச்சு மருந்துகளாலும், சம்போக்களாலும், குணப்படுத்த முடியாது.

முடிகொட்டிய இடங்களில் தற்காலிக Steroid ஊசிகளையும் மருத்துவர்கள் பரிந்துரைக்கிறார்கள். இவற்றால் சிலருக்கு தற்காலிக தீர்வுகள் வரலாம். அதனால் சில பக்கவிளைவுகளும் இல்லாமல் இல்லை.

2010ல் இது தொடர்பாக நடைபெற்ற ஆய்வுகளில் அலோபீசியாவுக்கு ஒரு குறிப்பிட்ட மரபணுவும் காரணமாக அமையலாம் என்பதும், அது 129 Single Nucleotide Polymorphisms ஆக இருக்கலாம் என்பதும் ஆய்வுகளில் தெரியவந்துள்ளது. இவைதான் பல காரணங்களால் T-Cells என்ற வெள்ளை அணுக்களின் செயற்பாட்டில் சில குழப்பங்களைத் தோற்றுவித்து சில குறிப்பிட்ட இடங்களில் முடிகளின் வேர்களுக்கும் இந்த வெள்ளை அணுக்களுக்கும் சண்டையை மூட்டிவிட்டு, முடியை முடித்து முடிவுக்குக் கொண்டு வருவதால் முடி கொட்டுகிறது என்பதுதான் அந்த ஆராய்ச்சியின் முடிவாகும்.

மேலும் சிலருக்கு உள்ள இயல்பான சத்துக் குறைபாடு, இரும்புச் சத்துக் குறைபாடு, போலிக் அசிட் குறைவு, விற்றமின் குறைவு போன்றவற்றாலும் பொதுவான முடிகொட்டுதல் ஏற்படலாம். அலர்ஜி என்ற ஒவ்வாமையாலும் கூட அலோபீசியா வரலாம்.

ஒரு இயற்கை மருத்துவர் தனது அனுபவத்தையும் பல ஆண்டுகளுக்கு முன்பு என்னுடன் பகிர்ந்து கொண்டார். அதில் பல சிகிச்சை முறைகளை தெரிவித்தார். அதில் இலகுவானதும் பலருக்கும் தெரிந்ததும் பக்க விளைவுகள் வர வாய்ப்பில்லாத ஒரு முறை என்னவென்றால் சின்ன வெங்காயத்தை பாதியாக வெட்டி உப்புத்தூளில் தொட்டு தினமும் இரண்டுமுறை முடிகொட்டிய திட்டுக்களில் சில வாரங்கள் தேய்த்தால் நல்ல பலன் தெரியலாம் என்பதுதான். இது வழக்கமான வழுக்கைத் தலைக்குப் பயன்படாது என்பதையும் குறிப்பிடுகின்றேன்.

அலோபீசியாவுக்கு நாங்கள் பரிந்துரைக்கும் மருந்துகளோடு பலருக்கு மேற்குறிப்பிட்ட வழிமுறைகளையும் கூடவே செய்யச் சொல்லுவது வழக்கம். எப்படியோ பாதிப்பு இல்லாத வழிமுறைகளில் முடிப்பிரச்சினைக்கு ஒரு முடிவு வந்தால் நல்லதுதானே.

புற்று நோய்க்கான கீமோ தெரபி, கதிர்விச்சு ரேடியோதெரபி போன்ற சிகிச்சை முறைகளின் போது பலருக்கு தற்காலிக முடிகொட்டுதல் ஏற்படும். அது பின்பு சிகிச்சையின் தாக்கம் குறைவடையும் போது மீண்டும் பலருக்கு முடிவளரத் தொடங்கும்.

நான் இங்கு குறிப்பிட்டது 'அலோபீசியா' என்ற குறிப்பிட்ட ஒரு தலைமுடிப் பிரச்சினையைப் பற்றித்தான். வழக்கமான தலைமுடி கொட்டுதல் அல்லது வழுக்கைத் தலை பற்றியது அல்ல என்பதை வாசகர்கள் புரிந்து கொள்ளவேண்டும். சிகிச்சை முறைகள் பற்றி முதலில் உங்களின் மருத்துவரிடம் ஆலோசனைகள் பெறுவது முக்கியமானதாகும்.

நன்றி



paul.joseph@thaiveedu.com



ஏட்டில் எழுதிவைத்தார்

07

# அங்காதிபாதம் 400

இன்னமும் ஏட்டுச்சுவடிகளில் மட்டுமே காணப்படும் எமது முன்னோரின் படைப்புக்களைக் எண்ணிமப்படுத்தும் பணிகளை தற்போது நூலக நிறுவனத்தினர் முன்னெடுத்து வருகின்றனர். இவற்றுள் இதுவரை அச்சில் வெளிவந்திராத ஒருசிலவற்றையேனும் வாசித்துத் தமிழ்கூறும் நல்லுலகத்திற்கு அறியத்தரும் ஒரு முயற்சியாக நாடிவிதி மற்றும் அங்காதிபாதம் ஆகிய நூல்களைத் தாய்வீடு' இதழில் வெளியிடத் தீர்மானித்தேன்.

நூலகத்தினரின் EAP1260_CO65_F004.pdf என்னும் இலக்கத்தில் உள்ள சுவடிகளின் பாடல்களே இங்கு தரப்பட்டுள்ளன.

- பால. சிவகடாட்சம்

*வரிசையாம் தசவாய்வின் குணமதாகும்*
*வாய்வுகளுக் காதார மாயிருக்கும்*
*துரிசிலாத் தசநாடி தன்னைக் கேளு*
*சுழுமுனையோ டிடைகலைபிங் கலைகாந் தாரி*
*சரியான சிங்குவலம் புருடன் அத்தி*
*சங்கினியாம் குகுதன் இவை பத்தும்*
*பிரியாது மூலாதா ரத்திற்றோன்றும்*
*பேசக்கேள் சுழுமுனையின் சூட்சந்தானே* 57

பத்து வாயுக்களின் குணங்களுக்கும் ஆதாரமாய் இருக்கும் குற்றமில்லாத பத்துநாடிகள் பற்றிக் கூறுகின்றேன் கேட்பாயாக. சுழுமுனை (சுழிமுனை), இடகலை, பிங்கலை, காந்தாரி, சிங்குவை, அலம்புடை, புருடன், அத்தி, சங்கினி, குகு எனப்படும் நாடிகள் பத்தும் மூலாதாரத்திற் தோன்றும்.

*சூட்சமாம் நாடி சுழுனை குய்ய வடி மூலத்திற்*
*றோன்றியே கம்பமதாய் எழுந்து மேல்போய்*
*ஆட்சியாயா மாதார மாறுஞ் சென்று*
*அசைவற்றுச் சிரசளவா யமர்ந்து நிற்கும்*
*மாட்சியா மிடகலை பிங்கலை யிரண்டும்*
*மன்னியே கத்தரிக் கோல் மாறலாகி*
*நீட்சியாஞ் சுழுமுனையைச் சுற்றிப் பேணி*
*நெட்டிட்டே சிரசளவாய் நேருந் தானே* 58

சுழுமுனை என்னும் நாடி அடி வயிற்றின் கீழ் பிறப்புறுப்பின் அடிமூலத்தில் தோன்றி கம்பம் போல் நேராக நடுவிலே மேலெழுந்து ஆதாரம் ஆறிலும் (மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆஞ்ஞை என்பவை) சென்று அசைவற்று சிரசிலே அளவுடன் அமர்ந்து நிற்கும். வலதுகாற் பெருவிரலில் இருந்து தோன்றும் இடகலை நாடி மூலாதாரத்தில் இடப்பக்கமாக மாறி அங்கிருந்து சுழுமுனையின் வலது இடப்புறமாக ஓடி புருவமத்தி வரை வந்து நெற்றியில் ஏறி மீண்டும் கீழ்நோக்கி வளைந்து வந்து இடது நாசியினூடாக ஓடும். இடதுகாற் பெருவிரலில் இருந்து தோன்றும் பிங்கலை நாடி மூலாதாரத்தில் வலப்பக்கமாக மாறி அங்கிருந்து சுழுமுனையின் வலது பக்கமாக ஏறி புருவமத்தி வரை வந்து நெற்றியில் ஏறி மீண்டும் கீழ்நோக்கி வளைந்து வலது நாசியினூடாக ஓடும்.

*நேரான மூக்கு நடுப் புருவந் நெற்றி*
*நின்றுமே நாசியிரு மூலம் புக்கும்*
*பேரான காந்தாரி நாபியுற்று*
*பெருநரம்பு வளியெங்கு முலாவி யேறி*
*சீரான சிரசளவாய் கண்டஞ் சேர்ந்து*
*செப்பிய வேழிசைக் குருவாய் நாவி னின்று*
*நீரான ததைப் பொசித்துக் கசியப் பண்ணும்*
*நிலையான வத்திதனை நிகழ்த்து வேனே* 59

காந்தாரி என்னும் நாடியானது நாபியில் தோன்றி பெரு நரம்புகள், வாயுக்கள் எங்கும் சென்று உலாவி, ஏறிச் சுரம் ஏழுக்கும் உருவம் தருகின்ற நாடியாய்க் கண்டத்திற் சேரும். நாவில் நின்று நீரைப் பொசித்துக் கசியப்பண்ணும். அடுத்து அத்தி எனும் நாடி




பற்றிக்கூறுவேன்.

*நிகழ்த்துவேன் சிங்குவத்தி மூலந் தன்னில்*
*நின்று நரம்பு எவற்றினும்போய்க் கலந்து லாவி*
*மகத்தான செவிகள் இரண்டினுலும் தொட்டு*
*வலமிடமாய் கண்களிலே மருவிச் சேர்ந்து*
*அகத்திலே வருமவத்தை நான்கி னுள்ளும்*

*அளவாகி நின்றிடுமங் கறிந்து கொள்ளு*
*சுகத்தான வலனுடனே புருடன்றானும்*
*சுளித்திடும் உந்திக் கீளாய்த் தோற்றுந் தானே* 60

சிங்குவை அத்தி என்னும் நாடிகள் மூலத்தில் இருந்து நரம்புகளில் போய்க் கலந்து பயணித்து செவிகள் இரண்டையும் தொட்டு வலம் இடமாகக் கண்களைத் தழுவிச்சேர்ந்து (விழிப்பு,




கனவு, உறக்கம், திரியம் என்னும்) அவத்தை நான்கினுள்ளும் அளவுடன் நிற்குமென அறிந்து கொள்வாய். அலம்புடையும் புருடனும் சுழிக்கும் தொப்பூள் கீழாய்த் தோன்றும்.

*தோன்றியே நரம்பு வழி விலாவூ டோடி*
*தோளொடுகைக் குளிபுக்கி நயனத் துற்ற*
*ஆன்றசெவி தன்னில் வலமிடமாய் நின்ற நால்*
*களிவை வசமாக்கியே அமருங் கண்டாய்*
*ஏன்ற குகு நாபிபி தானத்தில் நின்று*
*ஈரல் பற்றியே குடலைக் குமட்டு வித்தல்*
*கூன்றிய வாயால் தண்ணீர் குளுகுளென்றே*
*யோட்டுவிப்பன் சங்கினி மீதுண்மை தானே* 61

தொப்பூளின் கீழே தோன்றி விலா தோள் அக்குள் ஊடாகக் கண்களுக்குச் சென்று காதுகளில் வலம் இடமாக நின்று நான்கையும் வசமாக்கி அமரும். குகு என்னும் நாடி நாபிதானத்தில் நின்று ஈரலைப் பற்றி குடலைக் குமட்டுவித்தல் தண்ணீரை வாயால் குளுகுளுவென்று ஓட்டுவித்தல்களைச் செய்யும்.

*உண்மைகேள் சங்கினியாம் நாடி குய்யத்*
*துறுதியாம் நின்றுடலில் தத்துவங்கள்*
*வண்மையாங் கருவிகளை மிஞ்சொட்டாமல்*
*வசப்படுத்திக் கொண்டிடுவன் வரிசையாக*
*வெண்மையாங் கலை நிறைந்த மதியம்போல*
*விளங்குமெழின் முகம் படைத்த மின்னினாளே*
*திண்மையாம் நாடியிவை பத்தின் பேரும்*
*செய்யகுறி குணங்களையும் தேர்ந்து பாரேன்* 62

சங்கினி என்னும் நாடி அடிவயிற்றின் கீழ் பிறப்புறுப்பின் அடியில் உறுதியாக நின்று உடலின் கூறுகள், பொறிகள் அளவுக்கு அதிகமாகச் செயற்படாமல் அவற்றை முறைப்படி தன்வயப்படுத்திக் கொள்ளும். முழுநிலவு போன்ற முகத்துடன் ஒளிர்பவளே, நாடிகள் இவை பத்தும் செய்யும் குறிகுணங்களை அறிந்து கொள்வாய்.

**நன்றி:** தசநாடிகள் தொடர்பான பாடல்களுக்கு உரை எழுதும் போது எனக்கு ஏற்பட்ட சந்தேகங்களைத் தீர்த்துவைத்து உரை திருத்தமாக வெளிவர உதவிய டொக்டர் இராமநாதன் இலம்போதரன் அவர்கட்கு எனது மனமார்ந்த நன்றிகள்.



Sivakadadcham@thaiveedu.com

ரொறன்ரோ தமிழ்ச் சங்கம்
நடத்தும்
இணைய வழிக் கலந்துரையாடல்
"நவீன தமிழிலக்கியத்தின் அழகியல்
- புனைகதை மற்றும் நவீன கவிதை
தொடர்பான சிந்தனைகள்"
நாள் : 22 ஜூலை வெள்ளிக்கிழமை 2022
நேரம் : இரவு 8:00 – 10:00 மணி ( கனடா ரொறன்ரோ )
நாள் : 23 ஜூலை சனிக்கிழமை 2022
நேரம் : காலை 1:00 – 3:00 மணி ( இலண்டன் )
காலை 5:30 – 7:30 மணி (இலங்கை, இந்திய )
காலை 10:00 – 12:00 மணி(அவுஸ்திரேலியா சிட்னி)

பேசுபவர்: பேராசிரியர் நா.சுப்பிரமணியன்
Zoom ID: 84777257162 Passcode: 554268

# ஒற்றை மாத்திரையில் உடற் பயிற்சியின் பலன்கள்?

- சுப்ரமணியம் ஜெயசீலன்

அவசர உலகில் மனிதர்கள் தங்களுடைய அன்றாட தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கும் பணிகளை முன்னெடுப்பதற்குமான போராட்டங்களை வார்த்தைகளில் விபரிப்பது அத்தனை எளியதல்ல. உழைப்பினை நோக்கிய ஓட்டம் உள்ளிட்ட அநேக ஏதுக்களினால் ஒவ்வொரு மனிதரும் தன்னுடைய உடல் நலனை பராமரித்துக் கொள்வதில் பெரும் சவால்களை எதிர்நோக்க நேரிட்டுள்ளது. உடல் பயிற்சி மிகவும் இன்றியமையாதது என்பது நம்மில் பலருக்கு அப்பட்டமாகத் தெரிந்திருந்தும் அதற்கான நேரத்தை ஒதுக்கி ஆரோக்கியமான வாழ்க்கை முறையை பின்பற்றுவது என்பது பகீரதப் பிரயத்தனமாகவே காணப்படுகின்றது.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில் உடல் பயிற்சியின் மூலம் கிடைக்கும் அனைத்து நலன்களையும் பலன்களையும் ஒற்றை மாத்திரையில் கிடைத்தால் எப்படி இருக்கும் என சிந்தித்து பாருங்கள், ஆம் விஞ்ஞான ஆய்வுகள் அவ்வாறான ஒரு மாத்திரையை கண்டு பிடிக்கும் முயற்சிகளில் வெற்றிக்கனியை எட்டிப் பிடிக்கும் எல்லையை தொட்டுவிட்டதாக ஆய்வாளர்கள் நம்பிக்கையூட்டுவது ஆச்சரியத்தையும், ஆசுவாசத்தையும் ஏற்படுத்தி நிற்கின்றது.

உடல் பயிற்சியில் ஈடுபடும் போது இரத்தத்தில் உருவாகும் ஒரு மூலப்பொருளானது உணவு உட்கொள்வதனை கட்டுப்படுத்துவதுடன், உடற் பருமனையும் குறைப்பதாகவும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. எலிகளிடம் மேற்கொண்ட பரிசோதனைகளின் ஊடாக இந்த விடயத்தை ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

உடற்பயிற்சிக்கும் பசிக்கும் இடையிலான உளவியல் ரீதியான செயன்முறையை புரிந்து கொள்வதற்கு இந்த புதிய ஆய்வு முடிவுகள் எமக்கு உதவுகின்றன. அமெரிக்காவின் கலிபோர்னியாவில் அமைந்துள்ள ஸ்டான்போர்ட் பல்கலைக்கழகம் மற்றும் டெக்ஸாஸில் அமைந்துள்ள பேய்லோர் மருத்துவ கல்லூரி என்பனவற்றினால் முன்னெடுக்கப்பட்ட ஆய்வுகள் மூலம் இந்த விடயம் தெரிய வந்துள்ளது.

சீரான உடற்பயிற்சியானது உடல் எடையை குறைப்பதற்கும், பசியார்வத்தை கட்டுப்படுத்தவும், வளர்ச்சிதை மாற்றத்தை மேம்படுத்தவும் உதவுகின்றது. குறிப்பாக உடல் எடை கூடிய அல்லது உடல் பருமனானவர்களுக்கு உடல் பயிற்சி மிகவும் இன்றியமையாததாகின்றது என பேய்லர் மருத்துவ கல்லூரியின் பேராசிரியர் டொக்டர் யொங் சூ தெரிவித்துள்ளார்.

உடற்பயிற்சியின் மூலம் இந்த நலன்கள் எவ்வாறு உந்தப்படுகின்றன என்ற பொறிமுறைமையை கண்டறிந்தால் பலரது உடல் ஆரோக்கியத்தினை மேம்படுத்தக் கூடிய சாத்தியங்கள் பிரகாசமாகும் என்பதில் துளியும் மாற்றுக்கருத்து கிடையாது.

உடற்பயிற்சி செய்யும் போது கிடைக்கப் பெறும் நலன்கள் மூலக்கூறுகளில் எவ்வாறு தொழிற்படுகின்றது என்பது பற்றிய துல்லியமான தகவல்களை திரட்டிக் கொள்ள வேண்டுமென ஸ்டான்போர்ட் மருத்துவ கல்லூரியின் பேராசிரியர் டொக்டர் ஜொனதன் லோங் தெரிவிக்கின்றார்.

உடற்பயிற்சியின் போதான உடலின் இரசாயன மாற்றங்களை கட்டம் கட்டமாக கண்டறிந்து கொள்வதன் மூலம் உடல் பயிற்சி செய்ய திராணியற்ற நோயாளிகள், வயோதிபர்களுக்கு மருந்து-மாத்திரை மூலம் உடற்பயிற்சியின் நலன்களை வழங்க முடியும் என்கிறார்.

திரட் மில்லில் மிக வேகமாக ஓடிய எலியொன்றின் இரத்த மாதிரியை ஆய்வாளர்கள் மிக நுணுக்கமாக ஆய்வுக்கு உட்படுத்தியுள்ளனர். இவ்வாறு உடற் பயிற்சியில் ஈடுபடும் போது எலிகளின் இரத்தத்தில் திரிபடைந்த அமினோ அமிலம் அதாவது லாக்-பீ (Lac-Phe)என்னும் பொருள் உருவாவதனை ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

இது லாக்டேட் (தசைகளில் எரியும் உணர்வுக்கு காரணமான கடுமையான உடற்பயிற்சியின் துணைத் தயாரிப்பு) மற்றும் ஃபெனிலாலனைன் (புரதங்களின் கட்டுமானத் தொகுதிகளில் ஒன்றான அமினோ அமிலம்) ஆகியவற்றிலிருந்து ஒருங்கிணைக்கப்படுகிறது.

உடல் எடை கூடிய எலியொன்றுக்கு திரிபடைந்த அமினோ அமிலப் பொருளான லாக்-பீ கூடுதல் அளவில் வழங்கப்பட்ட போது எலிகள் உணவு உட்கொள்வதனை 50 வீததினால் குறைத்துக் கொண்டுள்ளது. எந்தவிதமான நடமாட்டமும் இன்றி இந்த எலிகள் இவ்வாறு உணவு எடுத்துக் கொள்வதனை குறைத்துக் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. பத்து நாட்களுக்கு இந்த லாக்-பீ அமினோ அமிலத் திரிபு மூலப்பொருளை வழங்கியதன் மூலம் எலிகளின் உணவு உட்கொள்ளும் அளவு குறைவடைந்துள்ளதுடன் உடல் எடையும் வீழ்ச்சியடைந்துள்ளது. மேலும் குளுகோஸ் சமநிலையும் உடலில் மேம்படுத்தப்படுவதனை ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

CNDP2 என்னும் நொதியத்தினால் லாக்-பீ என்னும் திரிபடைந்த அமினோ அமில உற்பத்தி முன்னெடுக்கப்படுகின்றது என்பதனை ஆய்வாளர்கள் கண்டு பிடித்துள்ளனர். இந்த வகை நொதியம் குறைவாக காணப்படும் எலிகளினால் உடல் எடையை குறைக்கவோ அல்லது உணவு உட்கொள்வதனை கட்டுப்படுத்தவோ



முடியவில்லை.

உடல் பயிற்சியில் ஈடுபடும் மனிதர்கள் மற்றும் பந்தயத்தில் ஓடும் குதிரைகளிடமும் இந்த வகை லாக்-பீ பொருள் காணப்படுவ தனை ஆய்வாளர்கள் கண்டு பிடித்துள்ளனர். மனிதரில் வேகமாக ஓடும் போது இந்த வகை லாக்-பீ பொருள் மித மிஞ்சிய அளவில் அதிகரிப்பதனை ஆய்வாளர்கள் அவதானித்துள்ளனர்.

இதன் மூலம் லாக்-பீ என்னும் பொருள் உயிரினங்களின் உடல் செயற்பாடுகள் மற்றும் உணவு உட்கொள்ளல் என்பனவற்றில் பாரியளவு தாக்கத்தை செலுத்துகின்றது என்பது வெளிப்படையா கின்றது என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அடுத்த கட்டமாக இந்த ஆய்வின் மூலம் லாக்-பீ பற்றிய மேல திக விபரங்களை கண்டறிவதும் அது எவ்வாறு மூளை உள்ளிட்ட உடலில் தாக்கம் செலுத்துகின்றது என்பது குறித்தும் விரிவாக ஆராயப்பட உள்ளதாக குறிப்பிடுகின்றனர்.

உடல் பயிற்சியின் போது கிடைக்கப் பெறும் நலன்களை வழங் கக் கூடிய மருந்து மாத்திரைகளை உருவாக்கும் நோக்கில் தமது ஆய்வுப் பயணம் முன்னெடுக்கப்படுகின்றது எனவும், அதற்கான சகல முனைப்புக்களும் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் ஆய் வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

இதேவேளை, அவுஸ்திரேலிய தேசிய பல்கலைக்கழகத்திலும் உடல் பயிற்சியில் ஈடுபடும் போது எமக்கு கிடைக்கும் நலன் களை பெற்றுக் கொள்ளக்கூடிய ஒரு மூலப்பொருளொன்று மூளை யுடன் தொடர்பாடி ஆரோக்கிய நலன்களை தருவதாக அவுஸ்தி-ரேலிய பல்கலைக்கழக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த மூலப் பொருட்களை மாத்திரைகளாக உருவாக்க முடியும் என அவுஸ்திரேலிய பல்கலைக்கழகத்தின் ஆய்வாளர் பேராசிரி யர் ரிக்கார்டோ நடோலி தெரிவித்துள்ளார்.

உடல் பயிற்சியில் ஈடுபடும் போது அதன் நன்மைகள் பற்றிய நல்ல செய்திகள் அடங்கிய சமிக்ஞைகள் மத்திய நரம்பு மண்ட லத்திற்கு அனுப்பி வைக்கப்படுகின்றது என குறிப்பிட்டுள்ளார்.

உடல் பயிற்சியில் ஈடுபடுவதற்கு உடல் ரீதியான வலுவற்றவர்கள் உடல் பயிற்சியின் போது கிடைக்கப்பெறும் நன்மைகளை அடைந்து கொள்வதற்காக, குறித்த மூலப் பொருட்களைக் கொண்ட மாத்திரைகளை தயாரித்து வழங்க முடியும் என அவுஸ் திரேலிய ஆய்வாளர்களும் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

வயது மூப்பு ஏற்படுவதுடன் தசைகளுக்கும் விழித்திரைக்கும் இடையிலான தொடர்பாடல் நலிவடைந்து செல்வதாக குறிப்பிடு கின்றனர். மரபணு ரீதியாகவோ அல்லது மருந்துப் பொருட்கள் ஊடாகவும் இந்த தொடர்பாடலை மீளவும் உருவாக்க முடியும் என ஆய்வாளர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

உடல் பயிற்சி செய்யும் போது எந்த மூலப்பொருள் எவ்வாறு மூளையுடன் தொடர்பாடுகின்றது என்பதனை துல்லியமாக கண்ட றிந்து கொண்டால் அதன் அடிப்படையில் மருந்து மாத்திரைகளை உருவாக்கி கோடிக் கணக்கான மக்களுக்கு நலன்களை வழங்க முடியும் என ஆய்வாளர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ள னர்.

உடல் பயிற்சியில் ஈடுபடும் போது கண்கள் அதனை பார்த்து மூளைக்கு சாதகமான சமிக்ஞைகளை அனுப்பி வைப்பதனால் பாரியளவில் ஆரோக்கிய நலன்களை நாம் அடைந்து கொள்வ தாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அல்சைமர், பார்கின்சன் போன்ற நரம்பியல் ரீதியான நோய்களி னால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடற் பயிற்சி மூலம் கிடைக்கப் பெறும் நலன்களை பெற்றுக்கொள்வதற்கான எளிய வழிமுறை யாக இந்த சிகிச்சை முறைமைகள் எதிர்வரும் காலங்களில் பயன் படுத்தப்படக்கூடிய சாத்தியங்களை மறுப்பதற்கில்லை என ஆய் வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே எதிர்வரும் காலங்களில் அவசரமான இந்த உலகில் உடல் பயிற்சிக்காக நேரத்தை ஒதுக்கீடு செய்ய முடியாதவர்கள், உடல் ரீதியாக பாதிக்கப்பட்டவர்கள் என பலருக்கும் உடற் பயிற் சியினால் கிடைக்கும் அனைத்து நலன்களையும் மாத்திரைகளி னால் பெற்றுக் கொள்ள முடியும் என்ற மகிழ்ச்சியான செய்தி விரைவில் எமக்கு கிடைக்கும் சாத்தியப்பாடுகள் பிரகாசமானதா கவே தென்படுகின்றது.



jeyaseelan.s@thaiveedu.com

# சிறுதுளி பெருநட்டம்

- வேலா சுப்ரமணியம்

நாளுக்கு நாள் வாழ்க்கைச் செலவு அதிகரித்துக் கொண்டு போகும் இக்காலகட்டத்தில் எவ்வாறு மேலதிக செலவுகளைக் குறைக்கலாம் அல்லது வீணான செலவுகளைத் தவிர்க்கலாம் என்பது ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டியதொன்று. பொதுவாக சொந்த வீட்டில் வாழ்ப-வர்களாக இருந்தாலும் சரி, அல்லது வாடகை வீட்டில் வசிப்பவர் களாக இருந்தாலும் சரி வருடா வருடம் மின்கட்டண உயர்வு, தண்ணீர்ப் பாவனைக் கட்டண உயர்வு, எரிவாய்வுக்கான கட்டண உயர்வு என்பவற்றை அவதானித்திருக்கலாம். பணவீக்கம் போன்ற பலவித காரணிகளால் ஏற்படும் இத்தகைய மேலதிகச் செலவுகள் தவிர்க்க முடியாதவை. ஆனால், இவற்றுள் தேவையற்ற அல்லது தவிர்க்கக்கூடிய பல செலவுகள் ஏற்படுவதை எவ்வாறு தவிர்க்க லாம், பல நூறு டொலர்களை எவ்வாறு சேமிக்கலாம் என்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

எனது அனுபவத்தில் தங்களை அறியாமலே பலர் தண்ணீர்ப் பாவனைக்கென தேவையற்ற முறையில் பல நூறு அல்லது ஆயி ரம் டொலர்களைக் கட்டணமாகச் செலுத்தி வருவதை அவதானித் திருக்கிறேன். எனவேதான் தண்ணீர் விரயம் வீடுகளில் எவ்வாறு ஏற்படுகிறது என்பதைச் சற்று விரிவாகக் குறிப்பிட விளைகிறேன்.

ஒவ்வொரு வீட்டிலும் பாவிக்கப்படும் தண்ணீரை அளவிடுவதற் கான மீற்றர் பொருத்தப்பட்டிருக்கும். பொதுவாக நிலக்கீழ் அறை யில் (Basement) பிரதான தண்ணீர் குழாயின் தொடக்கத்தில் இது பொருத்தப் பட்டிருக்கும். இதன் நடுப்பகுதியில் பாவிக்கப்படும் தண்ணீரின் அளவு கனமீற்றரில் (M3) கணிப்பிடப்படுவதை அவ தானிக்கலாம்.

கீழ்க்காணும் படத்தில் குறிப்பிடப்பட்டிருப்பது போல் ஒரு பக்கத் தில் சிவப்பு நிறத்தில் சுழன்று கொண்டிருக்கக்கூடிய ஒரு முக்கோ ணவடிவைக் காணலாம். இதற்குப் பெயரே ‘கசிவு அறிவுறுத்தி’ (Leak Detector). அதாவது தண்ணீர் பாவனையில் இல்லாதபோது இது சுழன்று கொண்டிருக்குமாயின் வீட்டில் எங்கேயோ தண்ணீர் விரயமாகிக் கொண்டிருக்கின்றது என்பது அர்த்தமாகும்.

வீட்டுரிமையாளர்கள் செய்ய வேண்டியமுக்கிய பணிகளில் ஒன்று மாதாமாதம் தண்ணீர்ப் பாவனையற்ற நேரங்களில் இந்த முக்கோ ணம் சுழன்று கொண்டிருக்கின்றதா என்று பார்க்க வேண்டியது. தவறும் பட்சத்தில் 2 - 3 மாதங்கள் கழித்து $700 - 1200 டொலர் என பில் (Bill) வந்தபிறகு விழுந்தடித்து ஓடுவதில் பலனில்லை. அவ்வாறு தொடர்ந்து சுழன்று கொண்டிருப்பது அவதானிக்கப்பட் டால் எங்கு தண்ணீர் விரயமாகிறது என்று ஆராய வேண்டியது 2வது கட்டம்.

1 மில்லிமீற்றர் தடிப்பில் ஏற்படக்கூடிய தொடர்ச்சியான மெல்லிய கசிவால் 440 கனமீற்றர் (96,700 கலன்கள்) வருடத்தில் விரயமா கும் எனவும் இதற்கு $1,100 டொலர்கள் வரை செலவாகும் என வும் கணிப்பிடப்பட்டுள்ளது. 3 மில்லிமீற்றர் தடிப்பில் ஏற்படும் கசி வால் வருடத்தில் 870,600 கலன்கள் விரயமாகும் எனவும் இதற்கு $10,000 டொலர்கள் வரை செலவாகும் எனவும் கணிப்பிடப்பட் டுள்ளது.

சாதாரணமாக ஒரு வீட்டில் ஏற்படக்கூடிய தண்ணீர்ப் பாவனையை எடுத்துக்கொண்டால் அவற்றில் 45% கழிப்பறைக்காகவும், 25% உடுப்பு தோய்ப்பதற்காகவும், 30% குளியலுக்காகவும், 5% சமை யல், குடிநீர் பாவனைக்காகவும் பயன்படுத்தப்படுவதாக பலரின் ஆய்வுகள் மூலம் அறியக்கிடக்கின்றது. எனவே தண்ணீர்ப்பா வனை கழிப்பறைக்கு அதிகமாகத் தேவைப்படுகிறது என்பதும் இது தவிர்க்க முடியாதது என்பதும் உண்மை. அதேவேளை வீண் விரயத்திற்கான வாய்ப்பில் 90% பங்கும் இங்குதான் காணப்படுகி றது.

எமது கண்களுக்கோ அல்லது செவிகளுக்கோ புலனாகாத வகை




யில் கழிப்பறை நீர்த்தொட்டி வழியாக தண்ணீர் விரயமாவதற்கான வாய்ப்பு மிக அதிகமாக இருக்கின்றது. முக்கியமாக 3 விதமாக இத்தகைய தண்ணீர் விரயம் ஏற்படலாம்.

- Flapper Valve
- உயர் நீர்மட்டம் (High Water Level)

● கைபிடி (Handles)

Flapper Valve என்பது கழிப்பறை நீர்த் தொட்டியின் அடியில் இருக்கும் திறந்து மூடக்கூடிய பிளாஸ்டிக்கிலான தகடு போன்ற ஒரு பொருள். தண்ணீர் தேவையென்ற போது முற்றாகத் திறந்து விடுவதும், பின்னர் இறுக்கமாக மூடிக்கொள்ள வேண்டியதும்தான் இதன் வேலை. ஆனால், தண்ணீரைத் திறந்துவிட்டவுடன் திரும்ப வும் இறுக்கமாக மூடிக்கொள்வதில்தான் பிரச்சினை இருக்கிறது. தண்ணீருக்குள்ளேயே மூழ்கிக்கிடக்கும் இத்தகைய Flapper கள் சில ஆண்டுகளில் அதன் மென்மைத் தன்மையை இழந்துவிடுகின் றன. தண்ணீரில் இருக்கக்கூடிய குளோறின் மற்றும் கனிமப் பொருட்களின் தாக்கத்தால் பிளாஸ்டிக் செயலிழந்து போவது தவிர்க்க முடியாதது. இதன் மென்மைத்தன்மை குறையக் குறைய இறுக்கமாக மூடும் தன்மையும் குறைவடைந்து தண்ணீர்க் கசிவு ஏற்படத் தொடங்கி காலப்போக்கில் தண்ணீர்ப்போக்காக மாற்றமடையும். ஆனால் இத்தகைய தண்ணீர்க் கசிவை பார்த்து அல்லது கேட்டு உணர்வதற்கான வாய்ப்பு குறைவாகவே காணப்படுகிறது. அவ்வாறாயின் இதனைக் கண்டுபிடிப்பது எப்படி?

முதற் கட்டமாக 'Leak Detector' மூலம் தண்ணீர் விரயமாகின்றது என்பதை உறுதி செய்து விட்டால் செய்ய வேண்டிய முதலாவது வேலை கழிப்பறை நீர்த்தொட்டிக்கும் (Toilet Tank) சுவருக்கும் இடையில் இருக்கக் கூடிய கட்டுப்படுத்தியை (Shutoff Valve) மூடிவிடலாம். அதன் பின்னரும் முக்கோணம் சுழன்று கொண்டிருந் தால் பிரச்சினை வேறு இடத்தில் இருக்கிறது என்பது தெளிவு.

Shutoff Valve பொருத்தப்பட்டிருக்காத பழைய வீடுகளாக இருந் தால் தண்ணீர்க் கசிவைக் கண்டறிய மாற்றுவழிகளைப் பயன்படுத் தலாம். அதாவது தண்ணீர் தொட்டிக்கான மூடியைத்திறந்து 4, 5 துளி உணவுக்குப் பயன்படுத்தப்படும் நிறங்களை (Food Colouring) கலந்துவிட்டபின் 5-10 நிமிடங்கள் கழித்து Toilet ன் உட்பகு தியைப் பார்த்து அத்தகைய நிறமாற்றம் தண்ணீரில் காணப்பட் டால் அதன் மூலம் தண்ணீரக்கசிவு இருப்பதை உறுதி செய்து கொள்ளலாம்.

Flapper மூலம் தண்ணீர்க்கசிவு ஏற்படுவது உறுதி செய்யப்பட்டால் பொருத்தமான Flapper / Home depot, Canadian Tire போன்ற இடங்களில் வாங்கி நாங்களே மாற்றிக்கொள்ளலாம். இதற்கு 5-12 டொலர்கள் வரை மட்டுமே செலவாகும். சில ஆண்டுகளுக் கொருமுறை எல்லாப் Flapper களையும் ஒரேயடியாக மாற்றிவி டும் வருமுன் காப்போர்களும் இருக்கிறார்கள் என்பது குறிப்பிடத் தக்கது. வேகமாக மூடக்கூடிய விதத்தில் புதிய தொழில் நுட்பங் கள் உட்புகுத்தப்பட்ட Flapperகள் வினைத்திறன் கொண்டவை யாக உள்ளன. ஆனால் அதற்கேற்ப விலையும் சற்று அதிகமாக இருக்கும் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

தண்ணீர் தொட்டியில் தவறுதலாக தண்ணீர் மட்டம் உயர்ந்த அள வுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தால் மேலதிக நீர் வெளியேறும் குழாய் (Over Flow) மூலம் தண்ணீர் தொடர்ந்து ஓடிக்கொண்டே இருக்கும். மேலதிக நீர் வெளியேறும் குழாயின் விளிம்பில் இருந்து 1 சென்ரிமீற்றருக்கு கீழே நீர் மட்டம் இருத்தல்வேண்டும். தண்ணீர் தொட்டியின் மூடியைத் திறந்து பார்ப்பதன் மூலம் இத னைக் கண்டறிந்து சரிசெய்து கொள்ளலாம். உரிய Screwகளை திருப்புவதன் மூலமோ அல்லது மிதப்பிகளின் (Float Ball) நீளத் தைச் சரி செய்வதன் மூலமோ சரியான தண்ணீரின் மட்டத்தை மிக இலகுவாகக்கூட்டி அல்லது குறைத்துக்கொள்ளலாம்.

தண்ணீரைத் தள்ளிவிட்ட (Flush பண்ணிய) பின்னர் கைபிடிகள் பழைய நிலைக்குப் திரும்புதல் வேண்டும். இவை சரியாக இயங் காத பட்சத்தில் கைபிடிகள் அரை வழி தூரத்தில் சிக்கிக் கொள் ளும். அத்தகையை சந்தர்ப்பத்தில் தண்ணீர் வீணாக, ஓடிக் கொண்டே இருக்கும். கைபிடியையும் Flapperஐயும் இணைத்திருக் கும் சங்கிலி சில சந்தர்ப்பங்களில் சிக்கிவிடுவதும் உண்டு. இவற்றை அவதானித்து சரி செய்ய வேண்டியது அவசியம். புதிய Toiletகளாக இருந்தால் கைபிடிக்குப் பதிலாக Button கள் தான் இருக்கும். எனவே அவை சிக்கும் சந்தர்ப்பம் குறைவாக இருந்த போதும் சரியான நிலைக்கு மீழ்கிறதா என்பதை அவதானித்தல் அவசியம்.

## Trap Primer:

பொதுவாக Laundry Sinkக்குரிய Faucetஇன் பின் புறமாக ஒரு வெள்ளை நிற சிறிய பிளாஸ்ரிக் குழாய் (1/4') நிலக்கீழ் அறை யின் நிலத்தில் உள்ள கறுப்புநிற பிளாஸ்ரிக்குடன் இணைக்கப்





பட்டிருக்கும். இதற்கு 'Trap Primer' என்று பெயர். (படத்தைப் பார்க்கவும்)

Toilet ற்கு அடுத்த படியாக இதன் வழியாகவே அதிகளவு தண் ணீர் விரயமாகிறது. அதாவது Laundry Sinkல் உள்ள Tapஐ மிக இறுக்கமாக மூடிவிடத் தவறினால் வெளியில் தண்ணீர் போவது தெரியாது ஆனால் உள்ளே தண்ணீர் ஓடிக் கொண்டே இருக்கும். கிட்ட நின்று அவதானித்தால் மட்டுமே சிறு சத்தத்தைக் கேட்க முடியும். கிழமைக்கணக்கில் அல்லது மாதக்கணக்கில் மீண்டும் Laundryக்கு போகாவிட்டால் இது சரிசெய்யப்பட வாய்ப்பு இல்லை. தண்ணீர் தொடர்ந்து ஓடிக்கொண்டே இருக்கும்.

2-3 மாதம் கழித்து Bill வந்த பிறகு தான் கண்டு பிடிக்க வேண்டி யிருக்கும். எனவே இந்த Tapஐ மிக இறுக்கமாக மூடுவது பற்றி வீட்டில் உள்ள அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டியது அவ சியம்.

## தண்ணீர் வடிகட்டி (Water Filter):

பலவிதமான தண்ணீர் வடிகட்டிகள் சந்தைப்படுத்தப்படுகின்றன. இவை நன்மை தரக்கூடியவை என்றாலும் அவை சரியான முறை யில், தராதரம் உள்ளவர்களால் பொருத்தப்படுகிறதா என்பதை உறுதி செய்தல் மிக அவசியம். குறிப்பாக Under Sink water filterகள் பிரபல்யமானவை. அவற்றைப் பல நிறுவனங்கள் தங்க ளது பிரதிநிதிகள் மூலம் பொருத்திக் கொடுக்கிறார்கள். இந்த வடிகட்டிகளிலிருந்து மேலதிக தண்ணீர் (Over flow) வெளிச் செல் வதற்காக ஏற்கனவே வீட்டில் உள்ள கழிவு நீர் போகும் கறுப்பு நிற PVCயுடன் பொருத்தப்படுவது வழக்கம். ஆனால் இந்த வடி

கட்டிகளில் சிக்கல்கள், பிழைகள் இருந்தாலோ அல்லது முறையாகப் பொருத்தப்படாது விட்டாலோ தண்ணீர் தொடர்ச்சியாக வெளியேறிக் கொண்டே இருக்கும். இதனை யாரும் கண்டு



கொள்ள வாய்ப்பில்லை. எனவே இத்தகைய கருவிகள் பொருத்தப்பட்டிருப்பின் கட்டாயமாக மாதமொரு முறையாது Leak Detectord; துணை கொண்டு அவதானிப்புடன் இருந்து தண்ணீர் விரயமின்மையை உறுதிசெய்ய வேண்டியது மிக அவசியம்.

### உண்மைச் சம்பவம்:

2018இல் புதிய வீடுகளின் வருட இறுதி உத்தரவாதத்திற்கான பரிசோதனைக்காக Stouffvilleற்குச் சென்றிருந்தேன். அந்த வீட்டில் சுமார் ஒரு வருடத்திற்கு முன்னர் இத்தகைய Water Filter ஒன்றை ஒரு பிரபல்யமான நிறுவனத்தின் மூலம் பொருத்தியிருந்தார்கள். ஆனால் நான் சென்றபோது கடந்தமுறை வந்த தண்ணீர் கட்டணம் (Water Bill) $699.00 க்கு மேல் வந்திருப்பதாகவும் போடப்பட்ட புதிய புற்றரைக்கு தண்ணீர் விட்டதால் இத்தகைய தொகை வந்திருக்கும் என்று நம்புவதாகவும் கூறினார்கள். அது பிழையான எண்ணம் என்பதைப் புரிந்துகொண்டு பரிசோதனை செய்தபோது தொடர்ச்சியாக தண்ணீர், கழிவு நீர்க் குழாய்க்குள் சென்று கொண்டிருந்ததைக் காணமுடிந்தது. தொடர்ந்து இடம் பெற்ற கலந்துரையாடலின் மூலம் ஆரம்ப காலத்தில் இருந்து 1 வருடமாகத் தண்ணீருக்கு மாதந்த கட்டணமாக $150.00 மேல்தான் செலுத்திக் கொண்டிருப்பதாக கூறினார்கள். ஆக மொத்தத்தில் ஏறக்குறைய $1,000 டொலர்களுக்கு மேல் விரயமாக்கப்பட்டிருக்கிறது என்பது தெட்டத்தெளிவு. இடைப்பட்ட காலத்திற்கான மேலதிக கட்டணத்தை மேலும் எதிர்பார்க்கலாம்.

அன்றைய தினமே Water Filter முற்றாக நிறுத்தப்பட்டு, அதனைப் பொருத்திய நிறுவனத்துடனான பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டு பின்னர் அவர்களால் திருத்திக் கொடுக்கப்பட்டது. முடிவு...? Hardware problem என்று கூறி இதுபற்றி தங்களுக்கு ஆரம்பத்திலேயே தெரியப்படுத்தியிருந்தால் மேலதிகமாக ஏற்பட்ட செலவைத் தவிர்த்திருக்கலாம் என வாதிட்டு அதனைப் பொருத்தியவர்கள் நழுவிவிட்டார்கள். Small claim court என்று அலைய யாரால் முடியும்? எது எப்படி இருப்பினும் விரயமான தண்ணீருக்குரிய கட்டணத்தைச் செலுத்த வேண்டியது வீட்டுரிமையாளரின் பொறுப்பே ஆகும்.

### சராசரி மாதாந்த தண்ணீர் கட்டணம் எவ்வளவு?

வீட்டில் இருக்கக்கூடிய அங்கத்தவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்தும், பாவனைகளைப் பொறுத்தும் மாதாந்தத் தண்ணீர்க் கட்டணம் வேறுபடலாம். சாதாரணமாக நோக்கினால் ஒரு குடும்பத்திற்கான தண்ணீர்ப் பாவனைக்கான மொத்தச் செலவு $80-120 டொலர்கள் வரை இருக்கும். இதில் தண்ணீர்ப்பாவனைக்கான நேரடிக் கட்டணம் மிகக் குறைவாகவே இருக்கும். ஆனால் அதற்கான சேவைக்கட்டணம், கழிவுநீர் கட்டணம், கழிவுநீர் சேவைக்கட்டணம் என்று கூட்டி மொத்த கட்டணமாக அதிக தொகையை மாநகரசபைகள் அறவிடுகின்றன.

இதனைப் பற்றிய புரிந்துணர்விற்காக Durham மாநகர சபையால் கணிக்கப்பட்ட 3 மாதங்களுக்குரிய கட்டண விபரம் கீழே தரப்படுகிறது.




**2022 Billing Rates:**

| | |
|---|---|
| **Water consumption:** | $1.148 for every cubic metre<br>$5.217 for every 1000 gallons |
| **Water service charge:** | $57.87 quarterly for standard size meter |
| **Sewer usage:** | $1.925 for every cubic metre<br>$8.750 for every 1000 gallons |
| **Sewer service charge:** | $22.65 quarterly for standard size meter |

Service charges apply even if you do not use any water. See the rates for water and sewer consumption block and service charges. You can compare your bill to an average customer below:

**Average 2022 residential quarterly billing**
(Based on 61 cubic metres)

| | |
|---|---|
| Water Consumption: | $70.03 |
| Water Service Charge: | $57.87 |
| Total Water Charges: | $127.90 |
| Sanitary Sewer Usage Charge: | $117.43 |
| Sanitary Sewer Service Charge: | $22.65 |
| Total Sewer Charges: | $140.08 |
| **Total Quarterly Billing:** | $267.98 |

**நினைவில் வைத்திருங்கள்:**

- நீர்க்கசிவு கண்ணுக்குத் தெரியாது. காதுக்கு கேட்காது.
- கட்புலனுக்கு அடங்காத கசிவால் ஏற்படக்கூடிய செலவு ஒரு கழிப்பறை (Toilet)க்கு ஆண்டுக்கு $1,000 டொலருக்கு மேலாக இருக்கும்.
- பெரும்பாலான நீர்க்கசிவுகள் சத்தமில்லாதவை, நிலத்தில் கூட நீரைக்காண முடியாது.
- ஒழுங்கு முறையாக Water Meterஐ அவதானித்து தண்ணீர் கசிவை உறுதிசெய்துகொள்ளுங்கள். கசிவைக் கண்டால் உடனே சரிசெய்துகொள்ளுங்கள் இல்லையேல் இதன் விளைவு அதிக பணச் செலவு.



velasubramaniam@thaiveedu.com

# அதிவேக நவீன தொடர்வண்டிகள்

- குரு அரவிந்தன்

அதிவேக நவீன தொடர் வண்டிகள் இப்போது அனேகமான நாடுகளில் அறிமுகமாகத் தொடங்கிவிட்டன. மோட்டார் வண்டிகளையும், விமானங்களையும்விடத் தொடர்வண்டிகள் பாதுகாப்பானது என்பதால் இப்போது சில நாடுகளில் உள்ளூர் விமான சேவைகளின் இடத்தை இந்த அதிவேக தொடர்வண்டிகள் பிடித்துக்கொண்டுவிட்டன. பெருந்தெருக்களின் வாகனநெருக்கடியும் ஓரளவு இதனால் குறைந்திருக்கிறது. வெகுவிரையில் அதிவேக தொடர் வண்டிகள் இன்னும் பல நாடுகளில் அறிமுகமாகலாம்.

தொடக்க காலத்தில் மனிதர் நடந்துதான் தனது பயணத்தைத் தொடர்ந்தனர். அதன்பின் தனது பயணத்திற்கு மிருகங்களைப் பாவித்தனர். குதிரைகளைப் பயன்படுத்தி வேகமாகச் செல்ல முடியும் என்பதை அனுபவம் மூலம் தெரிந்து கொண்டனர். குதிரை வண்டில், மாட்டு வண்டில், ஒட்டக வண்டில் என்று தனது வசதிக்கு ஏற்ப வண்டிகளைப் பயன்படுத்தினர். அதன்பின் கப்பல்கள், துவிச்சக்கரவண்டிகள், மோட்டார் வண்டிகள், தொடர்வண்டிகள், விமானங்கள் என்று பாவனைக்கு வந்தன. இதை எல்லாம் கடந்து இன்று ரொக்கெட் யுகத்தில் நாங்கள் இருக்கின்றோம். ஒரு காலத்தில் நினைத்துமே பார்த்திராத சந்திரனில் மனிதர் காலடி பதிக்கவும், செவ்வாய் கிரகத்தில் ஹொலிகொப்டரைப் பறக்க விடவும் அறிவியல் வளர்ச்சி காரணமாக மனிதரால் சாதிக்க முடிந்தது.

தொடர் வண்டிகள் என்றதும் எங்களுக்கு இலங்கையில் முதன் முதலாகப் பார்த்த தொடர் வண்டிகளின் ஞாபகம் தான் வரும். எங்கள் காலத்தில் அதைப் புகைவண்டி என்று அழைத்தார்கள். காரணம் நிலக்கரியை எரிப்பதால் ஏற்படும் நீராவி உதவியுடன் அந்தக் கறுப்பு நிறமான வண்டிகள் இயங்கியதால், அது புகை கக்கிக்கொண்டே செல்லும். அதனால்தான் அதைப் புகைவண்டி என்று அழைத்தார்கள். பொதுவாகக் காங்கேசந்துறையில் இருந்து கொழும்புவரை செல்லும் புகைவண்டிகள்தான் அதிகம் எமக்குப் பழக்கமானதாக இருந்தன. மாலை நேரத்தில் காங்கேசந்துறையில் இருந்து புறப்படும் இந்த வண்டி ஒவ்வொரு தரிப்பிடமாக நின்று கொழும்பு வந்துசேர, மறுநாள் அதிகாலையாகிவிடும். இதே போல கொழும்பில் இருந்து மாலை நேரம் புறப்படும் தபால் வண்டி மறுநாள் காலைதான் காங்கேசந்துறையை வந்தடையும். மின்னஞ்சலுக்குப் பதிலாக அந்த நாட்களில் தபால் அனுப்பும் முறைதான் பிரபலமாக இருந்தது. இந்த வண்டிகளின் பயணத்திற்கு சுமார் 12 மணி நேரம் எடுத்தன. ஒரு காலகட்டத்தில் கனடாவில் இருந்து 1954ம் ஆண்டு அன்பளிப்பாகக் கிடைத்த டீசல் எஞ்சின்கள் கரி இஞ்சின்களுக்குப் பதிலாக மாற்றப்பட்டன. கரி இஞ்சின்கள் உள்ளூர் பயணங்களுக்காகப் பாவிக்கப்பட்டன. அதனால்தான் டீசல் இன்சின்கள் பாவனைக்கு வந்ததும் புகைவண்டி, தொடர்வண்டி என்ற புதிய பெயரைப் பெற்றுக்கொண்டது. எமது காலத்தில் கனடா அன்பளிப்பு செய்த டீசல் இஞ்சின்கள் பாவிக்கப்பட்டதால், அங்கே தொடர்வண்டி சுமார் 256 மைல்கள் தூரத்தைக் கடக்க, அதாவது காங்கேசந்துறையில் இருந்து தலைநகரான கொழும்பு செல்வதற்குச் சுமார் எட்டு மணி நேரம் எடுத்திருந்தது.

இப்போது இருக்கும் தொடர்வண்டிகளில் அதிவேகமாகச் செல்லக் கூடிய வண்டி பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்தது. வர்த்தகப் போக்குவரத்திற்காகப் பாவிக்கப்படும் இத்தொடர்வண்டி 574.8 கிலோ மீட்டர் வேகத்தில் செல்லக்கூடியது. 2007ம் ஆண்டு ஏப்ரல் மாதம் இந்தத் தொடர்வண்டி அறிமுகப்படுத்தப்பட்டது.

முதலாவது அதிவேகத் தொடர்வண்டி யப்பான் நாட்டால் 1964ம் ஆண்டு 210 கிலோ மீட்டர் வேகத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.



இப்போது சுமார் 26 நாடுகள் அதிவேக தொடர்வண்டிகளைப் பாவிக்கத் தொடங்கிவிட்டன.

பயணிகளுக்காகப் பாவிக்கப்படும் அதிவேக தொடர்வண்டிகளில் சீனாதான் முதலிடம் வகிக்கின்றது. சீனாவின் அதிவேக தொடர் வண்டியான புலட்ரெயின் என்று சொல்லப்படுகின்ற ஜி-7 பக்ஸ் ஸிங் தொடர்வண்டி 2018ம் ஆண்டு அறிமுகமானது. இந்த தொடர் வண்டி பீஜிங்கில் இருந்து சங்காய்வரை செல்வதற்கு நான்கு மணிநேரம் எடுக்கின்றது. மணித்தியாலத்திற்கு சராசரி 350 கிலோ மீட்டர் வேகத்தில் செல்லும் இந்த தொடர்வண்டி 400 கிலோ மீட்டர் வேகத்தில் செல்லும் சக்தி படைத்தது. வேகமாகச் செல்லும் போது காற்றை எதிர் கொள்ளக்கூடிய வகையில் இஞ்சின் முகப்பு அமைக்கப்பட்டுள்ளது, இதைவிட குறைந்தளவு எரிபொருளைப் பாவிப்பதாகவும் இருக்கிறது. இதில் இரண்டு வகையான தொடர் வண்டிகள் இருக்கின்றன. ஒரு தொடர்வண்டி எட்டுப் பெட்டிகளைக் கொண்டது, மற்றத் தொடர்வண்டி பதினாறு பெட்டிகளைக்

கொண்டது. எட்டுப் பெட்டிகளைக் கொண்ட தொடர் வண்டி 209 மீட்டர் நீளமும், 3.36 மீட்டர் அகலமும் கொண்டது. ஆகக்கூடிய 17 தொன் எடையுள்ள அல்லது 556 பயணிகளை கொண்டு செல் லவல்லது. 16 பெட்டிகளைக் கொண்ட தொடர்வண்டி 416.26 மீட் டர் நீளமானதாகவும், 3.36 மீட்டர் அகலமானதாகவும் இருக்கிறது. இதில் 1200 பயணிகள் பயணிக்கக்கூடியது. வசதியான இருக்கை களும், பயணிகள் மடிக்கணனி, செல்போன் போன்றவற்றைப் பாவிக்கக்கூடிய வசதிகளும் ஒவ்வொரு இருக்கைக்கும் உண்டு. முதலாம் வகுப்பில் உள்ள இருக்கைகள் தேவைக்கேற்பப் படுக்கை போலவும் மாற்றக்கூடியன. வேகக்கட்டுப்பாட்டைக் கண் காணிகச் சுமார் 2500 இடங்களில் எலக்ரோனிக் கருவிகள் ஆங் காங்கே பொருத்தப்பட்டுள்ளன. சுமார் 38,000 கிலோ மீட்டர் தூர மான பாதைகளை அதிவேக தொடர்வண்டிகள் சீனாவில் பாவிக் கின்றன.

யப்பானின் அதிவேக தொடர்வண்டியை ஹயாபுஸா என்று அழைக்கிறார்கள். இத்தொடர் வண்டி 320 கிலோ மீட்டர் வேகத் தில் செல்லக்கூடியது. யப்பானின் தலைநகரான ரோக்கியோவில் இருந்து ஸின்-ஓமோரி என்ற இடத்திற்கு செல்ல மின்சாரத்தில் இயங்கும் இத்தொடர்வண்டி 189 நிமிடங்கள் எடுக்கின்றது. இதில் பயணம் செய்வதற்கு முன்கூட்டியே பதிவு செய்ய வேண்டும். 2021ம் ஆண்டு பரீட்சார்த்த ஓட்டத்தின் போது இந்தத் தொடர் வண்டி 602 கிலோ மீட்டர் வேகத்தில் சென்று சாதனை படைத்தது. அதாவது இந்த வேகத்தில் நியூயோர்க்கில் இருந்து மொன்றிய லுக்கு ஒரு மணி நேரத்தில் செல்லக்கூடியது. 2024ம் ஆண்டு 60 ஆண்டு நிறைவைக் கொண்டாட இருக்கிறார்கள்.

2022ம் ஆண்டு உலகில் உள்ள அதிவேகப் பயணிகளின் தொடர் வண்டிகள் என்று பார்த்தால் சீனாவில் உள்ள சங்காய் மக்லீவ் என்ற தொடர்வண்டியே தற்போது அதிவேக தொடர்வண்டியாக இருக் கின்றது. சராசரி 267 மைல் வேகத்தில் செல்லும் இந்தத் தொடர் வண்டி சங்காய் விமான நிலையத்தில் இருந்து சிற்றிசென்ரர் வரை செல்கின்றது. இந்தத் தொடர்வண்டிக்குச் சக்கரங்கள் இல்லை என்பதும் அதிசயமானது. மின்காந்த அழுத்தத்தினால் (magnetic levitation) அதற்கான பாதைவழியே வேகமாக நகருகின்றது. சுமார் 20 மைல் தூரத்தை ஏழு நிமிடங்களில் கடந்து விடுகின்றது. இந்த தொடர்வண்டியில் இலங்கையின் வடக்கே உள்ள காங்கே சந்துறை தொடர்வண்டி நிலையத்தில் இருந்து இலங்கையின் தலைநகரான கொழும்புக்குச் செல்வதானால், ஒரு மணி நேரத்தில் சென்றுவிடும். தற்போது இலங்கையில் உள்ள சூழ்நிலையில் இந் தப் பயணத்திற்குக் குறைந்தது ஆறு மணி நேரமாவது எடுக்கி றது. இரண்டாவது அதிவேக வண்டியும் சங்காய்க்கும் நான்ஜிங் என்ற இடத்திற்கும் இடையே சீனாவில்தான் சேவையில் ஈடுபட்டு இருக்கின்றது. மீன்தலை போன்ற முகப்பைக் கொண்ட ஹாமோனி சிஆர்எச் 380ஏ என்ற இந்த தொடர்வண்டி சராசரி 236.12 மைல் வேகத்தில் குலுக்கம் இல்லாமல் செல்லக்கூடியது. மூன்றாவது வேகமான தொடர்வண்டியும் சீனா நாட்டைச் சேர்ந்ததே. பக்ஸிங் ஹாவோ சிஆர்400 என்ற இந்தத் தொடர்வண்டி சராசரி 220 மைல் வேகத்தில் செல்லக்கூடியது. ஆக முதல் மூன்று இடத்தைப் பெறும் அதிவேகத் தொடர் வண்டிகள் மூன்றும் சீனாவிலேயே சேவையில் ஈடுபடுகின்றன. ஆனாலும், அதிவேகமான இன்ஜின் கள் பாவனையில் இருந்தாலும், பயணிகளின் பாதுகாப்புக் கருதி அங்கே அனேகமான தொடர்வண்டிகளுக்கு 217 மைல் வேகக் கட் டுப்பாட்டை வைத்திருக்கிறார்கள்.

நான்காவது அதிவேகத் தொடர்வண்டி ஜப்பானில் சேவையில் ஈடு படுகின்றது. ஸின்கான்சென் எச்5 என்ற இந்தத் தொடர்வண்டி சரா சரி 224 மைல் வேகத்தில் செல்லக்கூடியது. ஐந்தாவது அதிவே கத் தொடர்வண்டி இத்தாலியில் இருக்கின்றது. ஏவிஜி இற்றாலோ என்ற இந்தத் தொடர்வண்டி சராசரி 223.6 மைல் வேகத்தில் செல் லக்கூடியது. ஐரோப்பாவில் அதிவேகமான தொடர்வண்டி இது தான். ஆறாவது வேகத் தொடர்வண்டி ஸ்பெயின் நாட்டில் சேவை யில் ஈடுபட்டிருக்கின்றது. ரென்பி ஏவிஇ என்ற இந்தத் தொடர் வண்டி சராசரி 217 மைல் வேகத்தில் செல்லக்கூடியது. ஏழாவது அதிவேகத் தொடர்வண்டி சவூதிஅரேபியாவில் இருக்கின்றது. ஹராமெயின் என்ற இதன் வேகமும் சராசரி 217 மைல்களாகும். எட்டாவது வேகமாக தொடர்வண்டி ஐசிஇ என்று சொல்லப்படு கின்ற இன்ரசிற்றி எக்ஸ்பிரஸ் ஜெர்மனியிலும், ஒன்பதாவது கோரெ யில் கேரிஎக்ஸ் தென்கொரியாவிலும், பத்தாவது ஈரோஸ்டார் 320 ஐக்கிய இராச்சியத்திலும் சேவையில் ஈடுபட்டிருக்கின்றன. இதை விட ஐரோப்பிய நாடுகளில் பெல்ஜியத்திலும் தாலிஸ் என்ற அதி- வேக தொடர்வண்டிகளும், ஆபிரிக்காவில் மொறக்கோவில் அல் பொறாக் என்ற அதிவேக தொடர்வண்டியும் பாவனையில் இருக் கின்றன.

தொழில் நுட்பத்தில் முன்னணியில் நிற்கும் வட அமெரிக்காவில் இதுபோன்ற அதிவேக தொடர்வண்டிகள் இன்னமும் அறிமுகமாக வில்லை. அரசியல் வாதிகள் மோட்டார் வண்டி விற்பனையாளர் களை நம்பி இருப்பதால், தொடர்வண்டிகளை அறிமுகப்படுத்த விரும்பவில்லை. ஐஸ்லாந்து நாட்டுக்குச் சென்றிருந்தபோது, அங்கே தொடர்வண்டியே பவனையில் இல்லை என்பது தெரிய வந்தது. உலகிலே தொடர்வண்டி பாவனையில் இல்லாத நாடு இது ஒன்றுதான் என்று நினைக்கின்றேன். ஆனால் அதற்குப் பதி லாக அந்தத் தீவைச் சுற்றி வரக்கூடியதாகச் சிறந்த பெருந்தெருக் களை உருவாக்கி இருக்கிறார்கள். வாடகை வண்டியை எடுத்துக் கொண்டு அந்தத் தீவைச் சுற்றி வந்து பார்த்தது மறக்கமுடியாத அனுபவமாக இப்பொழுதும் இருக்கின்றது. போத்துக்கல் நாட் டுக்குச் சென்ற போது பழைய நீராவி இஞ்சினை இப்பொழுதும் சனிக்கிழமைகளில் பாவிக்கிறார்கள். பெற்றோரும் பிள்ளைகளும் குடும்பமாக அதில் மகிழ்ச்சியோடு பயணிக்கிறார்கள். நான் அங்கே நின்றபோது, பான்ட் இசை வாசிக்கப்பட்டு, பலூன்களால் அலங்கரிக்கப்பட்டு நீராவி இஞ்சின் தொடர்வண்டியில் பயணி- களை ஏற்றிச் சென்றதைக் காணமுடிந்தது. தலைநகர் லிஸ்பனில் இருந்து போட்டோ நகரத்திற்குச் செல்வதற்கு அல்பா பென்டுலர் தொடர்வண்டியைப் பாவிக்கிறார்கள். 97 நீராவி இஞ்சின்கள் இப் பொழுதும் பாவனை இல்லாமல் காட்சிப் பொருளாக அங்கே இருக்கின்றன. சீனா நாடு மட்டும்தான் இப்பொழுதும் சுமார் 400 நீராவி இஞ்சின்களை பயணிகளின் நாளாந்த தேவைகளுக்காகப் பாவிக்கின்றது.

வாகனப் போக்குவரத்து நெரிசலை இத்தகைய அதிவேகத் தொடர்வண்டிகள் மூலம் இலகுவாகப் போக்கிவிடலாம் என்று நம் பும் நாடுகள் இத்தகைய தொடர்வண்டிகளை அறிமுகம் செய்ய விரும்புகின்றன. அதிவேகப் பெருந்தெருக்களில் உள்ள வண்டிக ளின் நெருக்கடியை இதன் மூலம் ஓரளவு குறைக்கமுடியும். இந்த தொடர்வண்டிகளில் நவீன தொழில் நுட்பம் அறிமுகம் செய்யப் பட்டிருப்பதால் இதில் பயணிப்பது பாதுகாப்பானது மட்டுமல்ல, வசதியாகவும் இருக்கும். 1960ல் கனடா கரிஇஞ்சின் பாவனையை நிறுத்தி இருந்தது. மக்கள் விரும்பினால் கனடாவிலும் அதிவேக தொடர்வண்டிகள் அறிமுகமாகலாம்.

அதிவேகமாகச் செல்லும் தொடர்வண்டியைப் பற்றிச் சொல்லி விட்டு உலகிலே மிகவும் மெதுவாகச் செல்லும் தொடர்வண்டி பற் றிச் சொல்லாமல் விடக்கூடாது. மிகமெதுவாகச் செல்லும் தொடர் வண்டி என்றால் 'கிளேஸியர் எக்ஸ்பிரஸ்' என்ற தொடர் வண்டி தான். மற்ரகோன் என்ற இடத்தில் இருந்து பிஸ்பேர்ணியா என்ற இடத்திற்குச் சேவையில் ஈடுபடுகின்றது. இந்தத் தொடர்வண்டி சுவிஸ் நாட்டில் அல்ப்ஸ் மலைப்பகுதியில் 291 பாலங்களையும், 91 குகைகளையும் கடந்து செல்கிறது. 1930ம் ஆண்டு யூன் மாதத் தில் இருந்து இந்தத் தொடர்வண்டி இங்கே சேவையில் ஈடுபட்டி ருக்கின்றது. ஒவ்வொரு வருடமும் சராசரி இரண்டரை லட்சம் பய ணிகள் அழகிய அல்ப்ஸ் மலைக்காட்சிகளைப் பார்ப்தற்காக இந்த தொடர்வண்டியில் பயணிக்கிறார்கள்.

**உசாத்துணை:**

https://www.phoneworld.com.pk/fastest-trains-in-the-world/



kuruaravindan@thaiveedu.com

# குடும்ப வன்முறை

- த. சிவபாலு

ஆண், பெண் இருவருமே உடலியலால் வேறுபட்டவர்கள். இயல் பாகவே ஆண் உடலியல் ரீதியில் பலசாலியாகவும், கடினமான தொழில்களைச் செய்யும் வலிமைகொண்ட உடலமைப்பை உடையவராகவும், பெண் மென்மையான உடலமைப்பினைக் கொண்டதோடு மட்டுமல்லாமல் இனவிருத்திக்கான மூலமாகவும் விளங்குகின்றாள். பிள்ளையைத் தனது வயிற்றில் சுமத்தல், பெற்றெடுத்தல், பால்கொடுத்தல் போன்ற செயல்களோடு உடலமைப்பிலும் மாறுபட்டவளாகக் காணப்படுகின்றாள். இரு பாலாரும் அவரவர் தன்மைகளில் வலிமையானவர்களே.

இருந்தும், பெண்கள் எதிர்நோக்கும் குடும்ப வன்முறை, வேலைத்தள துன்புறுத்துதல், பாலியல் துன்புறுத்துதல், பாலியல்த் தொல்லை போன்றனவும் பெண்களுக்கு எதிராக இடம்பெறும் தீங்கிழைப்புக்களாகும். சர்லொட் பஞ் (Charlotte Bunch) என்னும் ஆய்வாளர் 'பெண்களுக்கும் பெண்பிள்ளைகளுக்கும் எதிரான வன்முறைகள் உலகின் மனித உரிமை மீறல்களில் மிகவேகமாகப் பரவிவரும் வன்முறையாகும். இதன் வடிவங்கள் முனைப்பானதும் தெளிவற்றதுமானதும் இதன் விருத்தியின் ஆழ்தடங்களின் விளைவுகளையும் கொண்டுள்ளது. ஆனால் இது உலகிலுள்ள பண்பாடுகளில் வெளிப்படாத அளவிற்கு ஆழப்பதிந்துள்ளது. இன்னும் இந்த கொடுரச்செயல் அகற்றமுடியாததாகவுள்ளது' என்றார்.

ஒட்டுமொத்தமாக கனடாவில் கோவிட் காலத்தில் கொலை, கொள்ளை, வீடுடைப்பு போன்ற குற்றச் செயல்கள் 8 விழுக்காடால் குறைந்துள்ளமையை பொலிஸ்திணைக்கள அறிக்கை எடுத்துக்காட்டுகின்றது. எனினும், குடும்ப வன்முறைகள் பதிவிடப்படாமல் உள்ளமையும், வெளியே சொல்லாமல் மூடிமறைக்கப்படுவதும் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது. மனநலம் இக்காலகட்டத்தில் அதிகூடியளவு பாதிக்கப்பட்டுள்ளமையும், பாடசாலைகளில் மாணவர்களின் நடத்தைகளில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளமையையும் அவற்றைக் கட்டுப்படுத்த முடியாமல் பாடசாலை நிர்வாகங்கள் திண்டாடுவதும் நாளாந்தம் பத்திரிகைகளில் வெளியாகும் தகவல்களாக உள்ளன.

கனடாவின் புள்ளிவிபரத் திணைக்களம் ஜனவரி 18, 2022ல் வெளியிட்ட புதிய ஆய்வின் அடிப்படையில், 2021ல், 18 வயதிற்கு மேற்பட்ட ஐந்தில் ஒரு பங்கினரான கனடியர்கள், குறைந்தது மிக மோசமான பிரச்சினைக்கு ஆளாகியுள்ளனர் எனத் தெரிவிக்கின்றது. கோவிட் காலத்தில் குடும்ப வன்முறைகள் அதிகரித்துள்ளமையினை இந்த ஆய்வு தேசிய ரீதியில் ஆய்வு செய்து வெளிக்கொண்டுவந்துள்ளது. இரண்டு முக்கிய ஆதாரங்களின் அடிப்படையில் இது அணுகப்பட்டுள்ளது.

வாழும் மாகாணங்களில் இலகுவில் தீர்த்துக்கொள்ளமுடியாத சட்டப்படியான குற்றவியல் விசாரணைகளுக்கு இட்டுச்செல்வதாக உள்ளது. குறிப்பாக, பொருட்களை வாங்கமுடியாத கொள்வனவுக்கான பற்றாக்குறை நிலை, குடும்ப வன்முறை மற்றும் பராமரித்தல் என்பன தொடர்பானவையாக உள்ளன.

மிகப் பாரதூரமான பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய ஆய்வினை அடிப்படையாகக் கொண்டு வாழ்வாதாரத்திற்கான உதவியினை நல்கும் தனிப்பட்டவர்கள், சமூகநல உதவிகள் என்பனவற்றிற்கான நிதி அமைப்பு அனுகூலாமானதாகவும் தாக்கமுள்ளதாகவும் உள்ளதா என்பது பற்றிய கேள்விகளை முன்வைத்துள்ளது.

இதனடிப்படையில் அயலவர் தொடர்பான பொருட்களை நாசப்படுத்துவது தொடர்பாக 21% ஆகவும், துன்புறுத்தல் தொடர்பாக 16% ஆகவும், இனஒதுக்கல் தொடர்பான 16% ஆகவும், மிகக் குறைந்தளவான மருத்துவ அல்லது தவறான பரிகாரங்கள் 16% ஆகவும், பெண்களுக்குப் பொதுவான மிக மோசமான பிரச்சினைகள் 18%ஆகவும் ஆண்களுக்கானதாக 18% ஆகவும் காணப்படுவதாக அறிக்கை எடுத்துக்காட்டுகின்றது.

உடலியல் வேறுபாடுகள் காரணமாக ஆண்கள் அதிகாரம் செலுத்தப் பிறந்தவர்கள் பெண்கள் அடங்கிப்போக வேண்டியவர்கள் என்னும் கருத்து மிக நீண்டநெடுங்காலமாக எமது சமுதாயத்தில் நிலைகொண்டுவிட்டது. ஆனாலும், தாயைத் தெய்வமாக மதிக்கும் பண்பினைக்கொண்டது எமது சமுதாயம். மனைவியைப் பெண்பிள்ளைகளை ஏன் சகோதரிகளைக் கூட சமத்துவமானவர்களாக மதியாத நிலை இன்றும் காணப்படுகின்றது. தாயிடம் அளவிலாப் பாசத்தினைக் கொண்டுள்ள ஆண்கள் ஏனைய பெண்களை தாயின் ஸ்தானத்திலிருத்திப் பார்க்க மறந்துவிடுகின்றார்கள். குடும்பத்தில் பெண்கள் தமக்குப் பாரமானவர்கள் என்ற எண்ணம் தந்தை, சகோதரர்களிடையே நிலவுவதனையும் காணக்கூடியதாகவுள்ளது. 'தாய்க்குப்பின் தாரம்' என்னும் முதுமொழி எமது பண்பாட்டோடு இரண்டறக்கலந்தவொன்று, ஆனால் எம்மில் பலர் தாய்க்கு அடுத்த நிலையில் வைத்து தாரத்தைப்பார்க்கத் தவறுகின்றோம். அதன்விளைவாக பல குடும்பங்களில் பிணக்குக்கள் ஏற்படுகின்றன. இவை குடும்ப வன்முறைகளாகவும் வெடிக்கின்றன.

'குடும்ப வன்முறை' என்பது பல வேறு வகைப்பட்ட தன்மைகளைக்கொண்ட தீமைசெய்யும் தன்மையைக்கொண்ட பதமாகும். தவறாக நடத்துதல், கவனியாதுவிடுதல், தவறான உணர்ச்சிகளுக்கு அடிமைப்பட்டுத் தீங்கிழைத்தல், தாக்குதல் அல்லது அடித்தல், உடலுக்கு ஊறுவிளைவிக்கக் கூடியவகையில் தாக்குதல், உடன்பாடற்ற பாலியல் வல்லுறவு, உடன்பாடற்ற பாலுறவினால் உடலுக்குத் தீங்குவிளைத்தல், குற்றவியல்சார்ந்த பாதகமான துன்புறுத்துதல், போலிக்குற்றம் சுமத்தித் துன்புறுத்தல், ஏசுதல் அல்லது மிரட்டிப் பயமுறுத்துதல், தொல்லைகொடுத்தல், தொந்தரவுசெய்தல், வேடிக்கை செய்தல், கேலிசெய்தல், வசைமொழிதல், அடக்குதல், பணியவைத்தல், கொலைமுயற்சி, கொலை போன்றவற்றை உள்ளடக்கியதாகும். குடும்ப வன்முறை

என்பது பொதுவாக வெளியே தெரிவதில்லை. கணவனுக்கும் மனைவிக்குமிடையே இடம்பெறுவதாக அல்லது ஒன்றாக இருக்கும் குடும்ப உறுப்பினர்களிடையே ஏற்படுவதாகவும் அமைந்துவிடுகின்றது. இதனால் இவை முறையீடுசெய்யாத நிலையில் வெளியே வருவதில்லை. குடும்ப நிலை கருதி பெரும்பாலான குடும்ப வன்முறைகள் மூடி மறைக்கப்படுகின்றன. குடும்ப அங்கத்தவர்களிடையே உள்ள தொடர்புகளின் காரணமாக இவை வெளியே தெரிவதில்லை. குடும்ப வன்முறை என்பது சட்டத்திற்கு முரணானது என்றாலும் வளர்ச்சியடைந்த நாடுகளில் உள்ள சட்ட அமைப்புக்களுக்கும், இறுக்கமான நடைமுறைகளுக்கும் கீழை நாடுகளில் உள்ள சட்ட அமைப்புக்குமிடையே வேறுபாடுகள் காணப்படுகின்றன. சட்டத்திற்கு எதிரானதாக குடும்ப வன்முறை காணப்பட்டபோதிலும் அவை நாட்டுக்கு நாடு வேறுபட்டதாகக் காணப்படுகின்றது. 1999ம் ஆண்டு கனடாவில் மேற்கொள்ளப்பட்ட பொதுச் சமூக கணிப்பீட்டின்படி திருமணமான அல்லது பொது உடன்பாட்டில் சேர்ந்துவாழுகின்ற சோடிகளிடையே 1999க்கு முந்திய ஐந்து ஆண்டு காலப்பகுதியில் கனடாவில் 690,000 பெண்களும், 549,000 ஆண்களும் ஏதோ ஒருவகையில் குடும்ப வன்முறைக்கு ஆளாகியுள்ளார்கள் என்பதனை ஆய்வு காட்டுகின்றது.

மேற்கூறிய குடும்ப வன்முறைகளைவிட பெண்கள் பாலியல் ரீதியாக பாதிப்புக்குள்ளாக்கப் படுகின்றனர். எடுத்துக்காட்டாக தொடர்ந்து பாலியல் வன்முறை, பாலியல் அடிமைமுறை, விருப்பினடிப்படையிலான சிறை, துன்புறுத்துதல், ஏசுதல், வசைமொழிதல், உறுப்பை நீக்குதல், உருச்சிதைவுசெய்தல், கொலைப்பயமுறுத்தல், கொலைசெய்தல் என்பன அவர்கள் பெண் இனத்தைச் சார்ந்தவர்கள் என்பதனால் மேற்கொள்ளப்படுகின்றன எனப்படுகின்றது. இதுதவிர வீடுகள், வேலையிடங்கள், பாடசாலை வகுப்பறைகள், காட்சி அரங்கங்கள், விளையாட்டு அரங்கங்கள், வணக்கத்தலங்கள், நாடக அரங்கங்கள் போன்றவற்றில் பெண்கள் பாலியல் ரீதியாகப் பாதிப்பிற்குள்ளாகின்றனர். அமைப்புரீதியான இனஒதுக்கற் கொள்கைகள் நடைமுறைகள், அவமானப்படுத்துதல், உதாசீனம் செய்தல் போன்றன இளம் வயதினரிடையே அதிகமாகவுள்ளது.

குழந்தைகளைப் பாலியல் ரீதியாக தொந்தரவு செய்தல், பாலியற் படத்திற்கு அல்லது இழிநிலைப் படமாக்கலுக்குக் குழந்தைகளைப் பாவித்தல், குழந்தைகளை விலைமாதர்களாகப் பயன்படுத்துதல், பாலியல் வல்லுறவு என்பன ஒப்பீட்டளவில் பெண்பிள்ளைகளே கூடியளவில் பாதிக்கப்படுகின்றார்கள் எனினும், ஆண்பிள்ளைகளும் இவ்வித பாதிப்புக்களுக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள் என்பதனை அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன. பாலியல் முறைகேடு அல்லது தாக்குதல் என்பதனை உலக நாடுகள் அனைத்தும் சட்டப்படி குற்றமாக குற்றவியல் சட்டக்கோப்பில் பதிந்து நடைமுறைப்படுத்துகின்றன எனினும், இது நாட்டுக்கு நாடு, கலாச்சாரத்திற்குக் கலாச்சாரம் வேறுபட்டதாகக் காணப்படுகின்றது. பொதுவாக பாலியல் குற்றமிழைத்தல் என்பதனைக் கனடிய குற்றவியற் கோவை பின்வருமாறு வரையறுக்கின்றது.

- **பாலியல் வன்முறை (1ம் நிலை):** இது அதிகூடியளவு 10 வருடங்கள் வரையான சிறைத்தண்டனைத் தருகின்றது.
- **பாலியல் வன்முறை(2ம் நிலை):** இது அதிகூடியளவு 14 வருடங்கள் வரையான சிறைத்தண்டனையைப் பெற்றுத் தருகின்றது.

பாலியல் வன்முறைகள் நாட்டுக்கு நாடு, கலாச்சாரத்திற்குக் கலாச்சாரம் வேறுபடுவதனைக் காணலாம். சில நாடுகளில் பாலியல் வன்முறை பாரதூரமான குற்றமாகக் கணிக்கப்பட, சில நாடுகளில் அவை சாதாரணமானவையாகக் கருதப்படுகின்றன. சில கலாச்சார இனக்குழுமங்களிடையே பாலியல் தொந்தரவினை பாரதூரமான ஒன்றாகக் கொள்வதில்லை. மாறாக அவை மூடிமறைக்கப்படுகின்றன அல்லது உதாசீனம் செய்யப்படுகின்றன. குழந்தைப்பருவத்தில் மேற்கொள்ளப்படும் குழந்தைகள் மீதான பாலியல் தகாத நடத்தைகள் கண்டுகொள்ளப்படாமலேயிருக்கின்றன. தந்தையோ, தாயோ குடும்பத்தின் நெருங்கிய உறவினர்களோ குழந்தைகளின் பாலுறுப்புக்களைத் தீண்டி விளையாடுவது அல்லது விளையாட வைப்பது அவர்களைப் பாதிக்கின்றது என்பதனைச் சிலர் உணர்ந்துகொள்வதேயில்லை. அதுமட்டுமன்றி பல ஆண்கள் பிள்ளைகளை தங்கள் கால்களுக்கு இடையே நெருக்கமாக வைத்திருந்து முத்தமழை பொழிவது, அவர்களைக் கூச்சம் காட்டுவது போன்றன பாலியல் சார்ந்த நடைமுறைகள் என்பதனை உணர்வதில்லை. அல்லது, உணர்ந்தும் தங்கள் இச்சைகளைத் தீர்த்துக்கொள்வதற்காக மேற்கொள்கின்றார்கள். இவற்றைப் சில நாடுகள் குற்றமாகக் கண்டுகொள்வது மிகக் குறைவே.

இந்தியா போன்ற நாடுகளில் மிகக்குறைந்த வயதிலேயே திருமணம் செய்து வைக்கப்படும் நிலை இன்றும் காணப்படுகின்றது. சில பெண்பிள்ளைகள் 13 அல்லது 14 வயதை அடையமுன்னரே திருமணம் செய்து கொடுக்கப்படுகின்றார்கள். அத்தோடு மட்டுமன்றி பொருளுக்காக மிகவும் வயது கூடியவர்களுக்கு மணம் முடித்துக் கொடுக்கும் நிலை காணப்படுவது பெண்களுக்குத் தீமை இளைக்கப்படுவதாகவே அமைகின்றது.

பாலியல் வன்முறை என்பது பெண்பிள்ளைகளுக்கு அல்லது பெண்களுக்கு மட்டும் எதிரானதாகவே கருதப்பட்டுவந்துள்ளது. ஆனால் இன்று அந்த எண்ணக்கருவில் மாற்றம் உள்ளது என்பதனை பல ஆய்வுகளும் முறையீடுகளும் எமக்குத் துல்லியமாக எடுத்துக்காட்டுகின்றன. ஸ்காபுரோ பாலியல் வன்முறைக்குப் பாதிக்கப்பட்டவர்களைக் கவனிக்கும் நிலையத்தின் கருத்தின்படி 'பெண்கள்மீதான பாலியல் வன்முறை அல்லது தாக்குதல் கூடிய ளவு இடம்பெறுகின்றது, எனினும் இது ஆண்களுக்கும் இடம்பெறுகின்றது. 18 வயதினை அடைவதற்கு முன்னர் ஏறக்குறைய நான்கு பெண்களில் ஒருவரும் ஆறு ஆண்களில் ஒருவரும் தாக்கப்படுகின்றார்கள். பாலியல் தாக்குதல் அல்லது வன்முறை யாருக்கும் ஏற்படலாம்' என அதன் தகவல் தெரிவிக்கின்றது. அத்தோடு இவ்விதம் பாதிக்கப்பட்ட எவரும் இங்கு உதவியினைப்பெறலாம் எனவும் தெரிகின்றது.

கணவனுடன் அல்லது காதலனுடன் உடலுறவு கொண்ட பெண், பின்னர் அதே கணவனால் அல்லது காதலனால் வல்லுறவுசெய்ய முடியாது என்னும் எண்ணக்கரு நிலைபெற்றிருந்தது. ஒன்ராறியோ அரசாங்கம் 32 வைத்திய நிலையங்களில் பாலியல் வல்லுறவினால் பாதிக்கப்பட்டவர்களைப் பாராமரிக்கும் நிலையங்ளுக்கு நிதியளிக்கின்றது. அதாவது ஒரு மனைவி விரும்பாதவிடத்து கணவனால் உடலுறவு கொள்ளுதல் சட்டப்படி குற்றமாகும்.

பாலியல் வன்முறை இன்று ஒரு மிகமுக்கியமான உடல்நலம் சார்ந்த ஒரு பிரச்சினையாக, இப்போதுள்ளவர்களுக்கு மட்டுமன்றி எதிர்காலச்சந்ததியினருக்கும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது. இத்தகைய பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுத்தல் அல்லது இல்லாதொழித்தல் முக்கியமானதொன்றாகும். 'வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப்போம் என்ற விந்தை மனிதர்கள் தலைகுனிந்தார்' என்று மகாகவி பாரதி பாடிப் பல தசாப்தங்கள் கடந்தவேளையிலும் இன்னும் சுதந்திர பாரதத்தில் பெண்ணடிமைச் சாயல்களைக் காணக்கூடியதாக உள்ளது. பெண்பிள்ளைகள் பிறப்பதே தமக்கு சுமை என நினைக்கும் பெற்றோர் அவர்களை சிசுவிலேயே அழிக்க இன்று விஞ்ஞானம் வாய்ப்பளிக்கின்றது. அவற்றின் பயனாக பெண் சிசுக்களைப் பிறக்குமுன்னரே அழித்துவிடும் நிலை பல நாடுகளில் குறிப்பாக இந்தியா, சீனா, தாய்லாந்து போன்ற நாடுகளில் இவ்வித நிலை காணப்படுகிறது.

கோவிட் கால வன்முறைகளில் முக்கியமாகக் கவனம் செலுத்தப்பட்ட பகுதி உடல் நலக்குறைவு உள்ளவர்கள்மீது மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளாகும். மூன்றில் ஒரு பங்கினர் தாங்கள் மிகமோசமான பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்ததாகக் குறிப்பிட்டுள்ளனர். அதாவது 33% ஆன குறைவிருத்தியுள்ளவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது தெரியவருகின்றது. ஒப்பீட்டு ரீதியாகப் பாதிக்கப்பட்டவர்களில் சாதாரணமானவர்களைவிட உடல்விருத்தி குன்றியவர்கள் இரண்டு மடங்கு அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.



sivapalu@thaiveedu.com

# வாழ்க்கை வளம் பெற மூன்று கலைகள்

**- குமார் புனிதவேல்**

கலைகள் என்றவுடன் அனைவரின் மனதிலும் தோன்றுவது இசை, நடனம், கவிதை, ஓவியம், சிற்பம், எழுத்து எனும் ஒரு நீண்ட பட்டியலே. ஆனால், அடிப்படையாக, உறுதியான அத்திபாரமாக மூன்று கலைகள் இல்லாவிடில் மற்றெந்தக் கலைகளும் அர்த்த மில்லாமலேயே போய்விடும்.

கேட்டல், பார்த்தல், கற்றல் ஆகிய மூன்று கலைகளே மேற்குறிப்பிட்ட அனைத்துக் கலைகளையும் அவற்றிற்குரிய இடங்களில் ஒழுங்கமைக்கின்றன. எனவே, உறுதியான அத்திபாரத்திற்கு ஆதாரமாக அமையும் இம்மூன்று கலைகளையும் ஒவ்வொன்றாகக் கவனிப்போம்.

## கேட்கும் கலை:

பெரும்பாலும், நாம் இன்னொருவருடன் உரையாடும் பொழுது, அவர் கூறுவதனை அவதானிப்பதில்லை. அவர் கூறி முடிக்கும் முன்னரேயே, 'இதைத்தான் அவர் சொல்லப்போகிறார்' என்று முடிவு செய்வது மட்டுமன்றி, 'அதற்கு என்ன பதில் சொல்லலாம்?' என்பதிலும் நம் கவனம் திசை திருப்பப்படுகின்றது.

இதனால், அடுத்தவர் கூறிக் கொண்டிருக்கும் பல கருத்துக்களையும் உள்வாங்கத் தவறி விடுகின்றோம். இத்தகைய தருணங்களில்தான் 'கேட்கும் கலை' எமக்குக் கைகொடுக்கின்றது. எனது கருத்துகள், நான் அறிந்த செய்திகள், எடுத்த முடிவுகள் அனைத்தையுமே ஒதுக்கி வைத்துவிட்டு, அவர் கூறுவதில் மட்டுமே நம் கவனத்தை செலுத்த வேண்டும். 'கேட்கும் கலை' என்பது மற்றவர் கூறுவதைப் பாரபட்சமின்றி, அவதானமாக, காய்தல் - உவத்தல் இன்றிக் கேட்பதாகும். கிரகிக்கும் வல்லமையை வளர்த்துக் கொண்டால் மட்டுமே சம்பாஷணை பயனுடையதாக அமையும். தவறான முடிவுகளுக்கும், தப்பபிப்பிராயங்களுக்கும் இடம் இருக்காது. வாழ்க்கை என்பது மனிதர்களின் கருத்துப் பரிமாற்றங்களி-லேயே தங்கியுள்ளது. இன்றைய உலகத்தில் பல பகைகள், போராட்டங்கள், யுத்தங்கள், வன்முறைகள் ஆகியன மலிந்து உள்ள காலகட்டத்தில், இரண்டு மனிதர் இணைந்து செயற்படுவதால் மட்டுமே அமைதி காண முடியும். செவி கொடுத்துக் கேட்க வேண்டியதன் முக்கியத்துவத்தை உண்மையாக உணர்ந்தவர், வேறு யாருமல்ல, திருவள்ளுவப் பெருமானே. 'கேள்வி' என ஓர் அதிகாரத்தை ஒதுக்கி, அதில் முதலாவதாக அவர் தந்துள்ள குறள்,

***செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்***
***செல்வத்து ளெல்லாம் தலை***

- குறள் - 411

செவியால் கேட்டுப் பெறும் செல்வமே உலகத்தில் உள்ள மற்றைய செல்வங்கள் எல்லாவற்றிலும் மிக மிக உயர்ந்த செல்வம் என்கிறார். அடுத்த குறளிலேயே, செவிக்கு உணவு இல்லாத போது வயிற்றுக்கும் கொஞ்சம் கொடுக்கலாம் என்கிறார். எனவே, கேட்கும் கலையைக் கற்றுக் கொள்வது வாழ்க்கை வளம் பெற அடிப்படையாகும்.

## பார்க்கும் கலை:

ஒரே காட்சியை இருவர் இரு வகையாகக் காண்பது இயல்பு. இதனால்தான் சேக்கிழார் பெருமான் தொண்டர்களது சிறப்புக் கூறுகையில், 'ஓடும் செம்பொன் ஒக்கவே நோக்குவார்' என்கிறார். எமது மனதில் உள்ள முன் உள உணர்வினால், காட்சிகள் மாறு



பட்டுத் தெரிவதை யாவரும் அறிவீர்கள். உதாரணமாக, 'காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு'. பொதுவாக, தனது பிள்ளை செய்யும் தவறான செயல்களையும் 'குறும்பு' என்று முத்திரை குத்தி மகிழும் பெற்றோர், பிறர் குழந்தைகள் செய்யும் அதே தவறுகளை குற்றம் எனக் கைகாட்டுதல். எனவே, காட்சியில் - பார்

வையில் - நடுவு நிலைமை என்பது மிகவும் அத்தியாவசியமாகிறது. இதனால், வாழ்க்கையும் செழுமை அடையும். என் இனத்தவன், என் குடும்பத்தவன் என்று நோக்கினாலும் பார்வை சிதைவுறுவதற்கு சந்தர்ப்பங்கள் அதிகம். எனவே, எமது பார்வை சம நோக்கில் அமைவதற்கு காய்தல், உவத்தல் இன்றி இருத்தல் அவசியம். மேற்கூறிய கருத்து, திருவள்ளுவரின் 118வது குறளில் மிகவும் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது.

***சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல அமைந்தொருபாற்***
***கோடாமை சான்றோர்க் கணி***

அதாவது, முதலில் சமமாக நின்று, பின் தன் மீது வைக்கப்பட்ட பாரத்தை நிறுத்துக் காட்டும் தராசு போல, நீதிக்குரிய இலக்கணங்களால் அமைந்து, ஓரம் சார்ந்து விடாமல் இருப்பது சான்றோர்க்கு அழகு. வைக்கப்பட்ட பொருள் தங்கமானாலும், தாமிரமானாலும் உண்மை எடையை உள்ளபடி தருவது அவசியம். எனவே, நாமும் காய்தல், உவத்தல் இல்லாத பார்வைக் கலையைச் சிறக்கக் கற்க வேண்டும். அதனால் ஏற்படும் செயற்பாடுகளின் சிறப்பாலும், புகழாலும் தக்கவர் என்ற பெருமையைப் பெறலாம்.

## கல்விக் கலை:

மூன்றாவதாக வரும் கல்விக்கலை, ஒவ்வொரு மனிதராலும் போற்றிப், பழகி, நிச்சயமாக அடையவேண்டிய ஒரு முக்கியமான கலையாகும். எனவேதான், 'ஏற்பது இகழ்ச்சி' என்று பாடிய ஒளவைப்பாட்டி கூட, 'பிச்சை புகினும் கற்கை நன்றே' என அறிவுரை வழங்கினார். முதலில், கற்பது என்பது மனனம் செய்வது அல்ல, அறிவும் அல்ல என்பதை அனைவரும் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். கல்வி என்று இங்கு குறிப்பிடப்படுவது ஏட்டுச் சுரைக்காயை அல்ல. நாம் கேட்கும், பார்க்கும் ஒவ்வொரு விடயத்தையும் அலசி, ஆராய்ந்து உண்மை நிலையை அறிவது தான் அறிவு. தெய்வப் புலவர் திருவள்ளுவர், எடுத்த எடுப்பிலேயே 'கண்ணுடையவர் என்பவர் கற்றோர்' என்கிறார். அப்படிக் கல்விக்கலை இல்லாதவர், கண் இல்லாதவர் என்று கூடச் சொல்லவில்லை. முகத்தில் இரண்டு புண்களை உடையவர் என்கிறார். மேலும், அவர் தனது 'கல்வி' எனும் அதிகாரத்தில் கற்கை முறையையும் கூறுகிறார்.

***கற்க கசடறக் கற்பவை கற்றபின்***
***நிற்க அதற்குத் தக***

- குறள் 391

நாம் எந்தக் கலையைக் கற்றாலும், பிழையில்லாமலும், நிறைவாகவும் கற்கவேண்டும் என்றும், கற்றபின்னர் அதன்படி ஒழுகவேண்டும் என்றும் அறிவுறுத்துகின்றார். கேட்டல், பார்த்தல், கற்றல் என்ற மூன்று கலைகளோடு அனுபவம் எனும் ஞானம் சேர்ந்து வரும் வேளையில், சிகரம் வைத்தது போல, அறிவு எனும் பெருங் கலையை அடைகின்றோம். மனிதரின் வாழ்க்கை, அறிவு எனும் கலையில் நடக்கும் பெரும் பயணமே. இந்த அறிவுக் கலையே செல்வங்கள் யாவற்றிலும் மிக உயர்ந்த செல்வம். இந்தக் கருத்தைத் திருவள்ளுவர் தமது திருக்குறளின் 'அறிவுடைமை' எனும் அதிகாரத்தில் 430வது குறளாகக் குறிப்பிட்டிருக்கின்றார்.

***அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்***
***என்னுடைய ரேனும் இலர்***

kumar.punithavel@thaiveedu.com












# அக்கறை அக்கரையிலா?

- சி. நற்குணலிங்கம்

ஒரு துறையில் அல்லது ஒருவர்மேல் ஈடுபாடு, நாட்டம், சிரத்தை, கரிசனம் காட்டுவது, கவனம் செலுத்துதல், கருத்துச் செலுத்துதல் அக்கறை எனப்படும். அக்கறை மௌனம் ஆகலாம், ஆனால் உறங்கிப்போகாது. இது ஒரு போதை. பழகிவிட்டால் விட்டுவிடுவது சிரமம். அக்கறையோடு நடந்துகொள்பவருக்கு எந்த ஓர் உபதேசமும் வேண்டியதில்லை. அன்புக்கு அக்கறை இருக்கும், நட்புக்கு நம்பிக்கை இருக்கும், பக்திக்கு அடக்கம் இருக்கும் மனிதருக்கு இவை மூன்றும் அமைந்துவிட்டால் வாழ்வில் ஆனந்தம் இருக்கும். பிடிக்காத விஷயத்தை கண்டுகொள்ளாமலும், வேண்டாத விஷயங்களில் அக்கறை செலுத்தாமலும், தேவையற்ற கேள்விகளுக்கு பதில்

> **உன்னைப்பற்றி**
> **அக்கறை எடுத்துக்கொள்ளும்**
> **உறவை புறக்கணிக்காதே.**
> **ஒரு நாள்**
> **அவர்களை நீ தேடும்போது**
> **வெகுதூரம்**
> **சென்றிருப்பார்கள்.**

சொல்லாமலும் இருந்தால் உடலும், மனமும் ஆரோக்கியமாக இருக்கும். அதிகமாக தேவைப்படுவது அதீத பிரியங்களைக் காட்டிலும் அவசியமானது அக்கறையே. நமது அக்கறை மற்றவர்களுடைய விழிப்புணர்வுக்கு ஒரு பாதையாக அமையவேண்டும். போலி மனிதர்கள் தங்களைப்பற்றி மட்டும்தான் அக்கறையாக இருப்பார்கள்.

என் வாழ்க்கை, என் குடும்பம், என் குழந்தை என்ற உணர்வு எப்படி நம் மனதில் ஆணித்தனமாகப் பதிந்துள்ளதோ, அதேபோல என் மக்கள், என் நாடு, என் சமுதாயம் என்ற உணர்வும் நாம் சுவாசிக்கும் இறுதி மூச்சுவரை இருக்கவேண்டும். உன்னைப்பற்றி அக்கறை எடுத்துக்கொள்ளும் உறவை புறக்கணிக்காதே. ஒரு நாள் அவர்களை நீ தேடும்போது வெகுதூரம் சென்றிருப்பார்கள். அக்கறை, அரவணைப்பு, பாசம், தியாகம், நேசம் ஆகிய எல்லா உணர்வுகளையும் ஒரே இடத்தில் பெற முடிந்தால் அதுதான் உண்மையான தாய். குடும்பத்தில் பொறுப்பானவருக்கு, தன் குடும்பத்தில் ஏற்படும் கோபத்தை அவர் கோபிக்கும்போது நாம் சற்றுச் சிந்திக்கவும் வேண்டும். தன் குடும்ப நலனில் மிகுந்த அக்கறைகொண்டதன் தாக்கமே பொறுப்பானவரின் கோபம். சற்று யோசித்துப்பார்த்தால் அவரின் கோபத்திலும் நியாயம் கலந்திருக்கும். உங்கள்மீது அக்கறை காட்டும் அன்பை உதாசீனப்படுத்தி கடந்து போகாதீர்கள். அவர்கள் படும் வலியை உங்களால் உணரமுடியாது.

அன்பு காட்டவும், நற்செயல்கள் செய்யவும் ஒருவரை ஒருவர் தூண்டி எழுப்பி ஒருவர்மீது ஒருவர் ஆழ்ந்த அக்கறை காண்பிக்க வேண்டும். ஒருவர்மீது நமக்கு அன்பும், அக்கறையும் இருப்பதை அவர் புரிந்துகொள்ள வேண்டும் என்றால் அதைச் சொல்லிலும், செயலிலும் காட்டவேண்டும். ஒருவர்மீதோ, குடும்பம்மீதோ காட்டும் அக்கறையைவிட, சமுதாயத்திலும் நாட்டிலும் கவனம் ஈர்க்கப்படவேண்டும். பூந்தோட்டம் போன்ற சமுதாயத்தை சமூக அக்கறையுடன் காப்பாற்றுவது நம் கடமை என்பதை மறக்கக்கூடாது. நாட்டின் வளர்ச்சியில்கூட இளைஞர்களின் பங்கு மிக அவசியம். அவர்கள் அக்கறையுடன் இதனை நோக்கவேண்டும்.

இன்றைய நவீன உலகில் மனித உறவுகள் சிதைந்து விஞ்ஞானத்தோடு உறவுகள் வளர்ந்துவருகிறது. காணாமல்போகும் உறவுகள்தான் அதிகம். அதாவது திறன்பேசி இருந்தால்போதும் என்ற மனநிலையில் வாழ்ந்துவருவதால் உறவுகளுக்கான அக்கறை காணாமல் போகின்றது. கெட்டபழக்கத்துக்கு அடிமையானவர்கள் தமக்கான ஒரு உலகத்தை படைத்து அதில் வாழ்வதால் அக்கறை கொள்ள வேண்டியவற்றிலிருந்து விலகிச்செல்கிறார்கள். வெற்றி என்பது கடினமாக உழைப்பதில் அல்ல. கவனமாக அக்கறையுடன் உழைப்பதில்த்தான் தங்கியுள்ளது. அக்கறை உள்ளவர் பொய்யான அன்பு கொள்ளமாட்டார். போலியாக அக்கறைமாதிரி நடிப்பவர்களும் வாழைமரமும் ஒன்றுதான். ஒருவரை தேவைப்படும்வரை தன்னுடன் வைத்திருப்பார்கள். தேவை முடிந்த பின் வெட்டி வீசிவிடுவார்கள். தேவையற்ற விடயங்களில் அக்கறை செலுத்துவதை தவிர்த்துக்கொள்ள வேண்டும். உங்கள் மனச்சாட்சியுடன் பேசி இதில் அக்கறை கொள்ளலாமா? வேண்டாமா என்பதை தீர்மானிக்க வேண்டும். இது சரி, அது தவறு என உங்களுக்குள் சொல்லுகிற, உங்களை ஆதரிக்கிற, அல்லது உங்களை குற்றப்படுத்துகிற ஓர் உணர்வுதான் மனச்சாட்சி. நம்முடைய மனச்சாட்சிக்கு நாம் உதவவேண்டுமானால் அதற்கு நாம் செவிசாய்க்க வேண்டும். மனச்சாட்சி நமக்கு ஓர் எச்சரிக்கை கொடுக்குமானால் அந்த விடயத்தில் நாம் அக்கறை செலுத்துவதைத் தவிர்க்க வேண்டும்.

அக்கறை இல்லாத பலரிடம் பொய் பேசக் கற்றுக்கொள்ளலாம். பொருத்தமாக பொய் பேசக்கூடியவர்தான் இவ் உலகில் பரமயோக்கியர்மாதிரி வலம் வருகிறார்கள். கனிவான ஒரு வார்த்தை கல்லையும் கரைத்துவிடும். இனிமையான ஒரு வார்த்தை இரும்பையும் வளைத்துவிடும். அக்கறைகொண்ட அன்பை விதையுங்கள் அது ஆயிரம் மடங்காகி உங்களிடமே திரும்பிவரும். அக்



கறை இல்லாது இயங்குபவர் எதிலும் தோற்கிறார். இதனால் இவர் வெற்றியின் சுவையை இழக்கிறார். அக்கறையுடன் தொழிற்படுபவர் எந்த விஷயத்திலும் வலிமையை நழுவ விடமாட்டார். ‘சிறிய விஷயத்திலும் உண்மையாக இருங்கள். ஏனெனில் அதில்தான் உங்கள் வலிமை இருக்கிறது’. இது அன்னைதெரேசா கூற்று. உணவு என்பது மருந்து, ஆடை என்பது மானம், பணம் என்பது தேவை, ஆனந்தம் என்பது ஆயுள், சினம் என்பது நோய், துன்பம் என்பது பரீட்சை, தோல்வி என்பது பாடம், குடும்பம் என்பது அக்கறையுடனான பற்று.

கண்டிக்காத பிள்ளை கெடும், கடன்பட்ட வாழ்க்கை கெடும், பிரிவால் இன்பம் கெடும், பணத்தால் அமைதி கெடும், அக்கறையற்ற குடும்பம் கெடும். நல்ல விடயங்களை அக்கறையுடன் அணுகுபவருடன் தோழமை கொள்வது சிறப்பு. கோயில்க் குளத்தில் விழும் மழைநீர் தீர்த்தமாகிறது, வீதிகளில் விழும் நீர் சேறாகிறது. அதேபோல் நாம் சேரும் இடத்தைப் பொறுத்தே நமது தரமும் அமையும். பட்டுப்போன மரத்துக்கு பறவைகளும் வருவதில்லை. அக்கறை உங்களிடம் உள்ள நல்ல விடயம். அக்கறையுடன் நடந்து பார் எல்லாம் முறையோடு கிடைக்கும். முறையோடு கிடைக்கும் எதுவும் அளவோடுதான் இருக்கும். அக்கறை உள்ளம் படைத்தவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள். ஏழையிடம் நீ வாங்கும் சாபமும், பணக்காரரிடம் நீ வாங்கும் பாராட்டும் ஆபத்தானவை என்பார்கள். நீ நீயாக இரு. நமக்கு வேண்டியவர்களிடம் நாம் பொய் சொல்லி எப்போது நடிக்கத் தொடங்குகிறோமோ அப்போதே எமது உறவு செத்து அக்கறை இழந்துவிடுகிறது. மனிதம் மிதிக்கப்படக் கூடாது. சிந்தித்து செயல்படு. சிந்தனை என்பது மூளையின் மொழி.

அக்கறை என்ற நிழல் உங்களைத் தொடர்ந்துகொண்டே இருக்கும் பாசம் என்ற வெளிச்சம் உள்ளவரை. எடுத்த காரியத்தில் அக்கறையற்றுச் செயல்படுவது தானே தன் வாழ்க்கையை பாதாளத்தில் தள்ளுவதாகும். பங்குபற்றுதல் அக்கறையுடன் இருப்பின் வலியிருக்காது. அக்கறை இல்லாமலும் சிலவற்றில் ஜெயிக்கலாம் என்பார்கள். ஆனால் ஜெயிச்சுக்கொண்டே இருக்க முடியாது. ‘உறுதியுடன் இரு அதற்கு மேலாக தூய்மையானவராகவும், முழு அளவில் சிரத்தை உள்ளவராகவும் இரு’ என்கிறார் விவேகானந்தர். அக்கறையை ஒருமுறை கைவிட்டால் அது பழக்கமாகிவிடும். அதை வழக்கமாக்கிக்கொள்ளாதே.

அக்கறை எல்லாவற்றிலும் செல்வாக்குச் செலுத்துகின்றது. மாணவர்களது கற்றல் அதாவது, மாணவர்களின் கற்றலில் பிரிக்கப்பட்ட கவனம், நிலைத்துநிற்கக்கூடிய கவனம் என இரண்டும் செல்வாக்கு செலுத்துகின்றது. பிரிக்கப்பட்ட கவனத்தால் மாணவரின் கற்றலுக்கு பிரச்சினைகள் ஏற்படும். அக்கறையுடனான கற்றலில் நிலைத்துநிற்கக்கூடிய சாதகமான கவனம் இருக்கும். மாணவர்களது கற்பித்தலில் அக்கறையற்ற ஆசிரியர்களால் சமூகத்துக்கு ஒவ்வாத மனிதர்கள் சமூகத்தில் நிரம்பி உள்ளனர். வேலை செய்பவர்களிலும்கூட இரண்டு வகை உண்டு. வேலையை விருப்பத்தோடு, அக்கறையோடு செய்பவர்கள். இவர்கள் வேலைப்பிரியர்கள் ஆகும். இன்னொருவகை வேலை வெறியர்கள். இவர்கள் மற்றவர்கள் பாராட்ட வேண்டும், மக்கள் மத்தியில் தான் தெரியவேண்டும் என்ற நோக்குடன் தொழிற்படுபவர்கள். பெற்றார் பிள்ளை தொடர்பான அக்கறையில், பெற்றாரில் அக்கறை இல்லாத பிள்ளைகளால் பெற்றோர் தமது முதுமையை முதியோர் இல்லங்களில் சோகத்துடன் செலவுசெய்கிறார்கள். அதேபோல் பிள்ளைகளில் அக்கறையற்ற பெற்றோரால் பிள்ளைகள் சீரழிந்துபோனதையும் காணமுடிகின்றது. எனவே ஒவ்வொருவரும் தம்மில் தாம் அக்கறையாக இருத்தல் வேண்டும்.

பெற்றார் பிள்ளை அக்கறைக்கு, ஜப்பான் நாட்டு பழைய நிகழ்வொன்றை நோக்கின், ஜப்பான் நாட்டில் பழங் காலத்தில் ஒரு விசித்திரமான பழக்கம் ஒன்று இருந்தது. பெற்றோர் வயதாகி முதுமை அடைந்து ஆற்றல் குறைந்து எவ்வித பயனும் அளிக்க முடியாத நிலையில் அவர்களை பிள்ளைகள் தூக்கிச் சென்று உயரமான மலையின்மேல் வைத்துவிட்டு வந்துவிடுவார்கள். உணவின்றி, நீரின்றி வாடிவதங்கி மடிந்துபோவார்கள். இங்கே எங்கே போனது பிள்ளையின் அக்கறை? ஒரு நாள் மகன் இப்படியாக தன்தாயை மலைக்குகொண்டு செல்லும்போது தாய் முதுமையிலும்கூட போகும் வழியில் உள்ள மணம்கொண்ட மரங்களின் சின்னச்சின்ன கிளைகளை கீழே போட்டபடி மலை உச்சியை அடையும்போது, மகன் தாயைப் பார்த்து ஏன் இப்படி மரக்கிளைகளைப் போட்டபடி வந்தது என்று கேட்டான். தாயார், மகனே! நீ மலைமீது என்னை விட்டுவிட்டு திரும்பி செல்லும்போது வழி தெரியாமல் திண்டாடக்கூடாதல்லவா. நீ பாதுகாப்பாக வீடுபோய்ச் சேரவேண்டும் என்பதற்காக என்றாள். இங்கே தாயின் அக்கறையை பார்த்தீர்களா? வாடகை கொடுக்க முடியாத தாயின் கருவறையில் பிள்ளைகள் அக்கறை கொள்ளாமலிருப்பது வருந்தத்தக்க விடயம் அல்லவா. வாழ்க்கையில் அக்கறை மரணம்வரை இருக்க வேண்டும். அக்கறை எவ்வளவு முக்கியம் என்பதை உணர்ந்தீர்களா? எங்கும், எதிலும் அக்கறை வேண்டும். அக்கறையை எந்தச் சந்தர்ப்பத்திலும் அக்கரைக்கு தள்ளிவிடாதீர்கள்.



natkunalingam@thaiveedu.com

# அதிர்ஷ்டம் அழைக்கிறது...

- வேதநாயகம் தபேந்திரன்

அதிஸ்டம், துரதிஷ்டம் இந்தச் சொற்கள் மனித வாழ்வில் சாதாரணமாகப் புழங்கும் சொற்களாகும். நன்மை நிகழ்ந்தால் அதிர்ஷ்டம் எனவும், தீமை நிகழ்ந்தால் துரதிஷ்டம் எனவும் பெரும்பாலான மனித மனங்கள் நினைக்கின்றது.

எமது சின்னஞ்சிறார் காலத்தில் அதிர்ஷ்டம் பார்த்த அழகான நினைவுகளை இரை மீட்டிப் பார்க்கிறேன். கடந்து போய் விட்ட மீண்டும் வரமுடியாத அழகான பொழுதுகள் அவை.

அது போல ஒரு காலத்தில் சுவீப் ரிக்கெற் எனப்பட்ட அதிர்ஷ்ட இலாபச் சீட்டுக்களின் விற்பனை போர்க்காலத்தில் மங்கிப்போனது. சில காலங்களில் சில பிரதேசங்களில் முற்றாகவே தடைப் பட்டுப்போனது.

ஆனால், 2009மே மாதத்தின் பின்னர் அது மெல்ல மெல்ல மீண்டெழுந்தது. இன்று அதிக இடங்களில் பெரும் சில்லறை வியாபாரமாக உள்ளது.

சின்னம் சிறார்களை மகிழ்வித்த லொத்தர் மட்டைக் காலத்தின் நினைவுகளில் முதலில் நடந்து பயணிப்போம்.

சின்னச் சின்னப் பொருள்கள் கிடைத்தால் பென்னாம் பெரிதாகச் சந்தோசப்படும் பருவமல்லவா சிறுவர் பருவம். அதிலும் வறுமை உயர்வாக இருந்த ஒரு சமூகத்தில் பென்சில், பேனா, அழிறப்பர், கரண்டி என்பவையெல்லாம் அதிர்ஷ்டத்தில் கிடைத்த போது பெரும் பணக்கார நினைவு வரும்.

ஒரு காலத்தில் லொத்தர் மட்டைகள் தயாரித்து விற்றல் எனும் கைத்தொழில் எமது பிரதேசங்களில் பரவலாக இருந்தது.

வருடத்தின் டிசம்பர், ஜனவரி மாதங்களில் லொத்தர் மட்டைகள் பெருமளவு புழக்கத்தில் இருக்கும். 1970, 1980களில் இந்த வியாபாரம் உச்சம் பெற்றிருந்தது. உள்நாட்டுப் போர் தீவிரம் பெற்ற போது இம்முறையும் படிப்படியாக வழக்கொழிந்து காணாமல் போனது. பணவசதி உள்ள சமூகம் பரவலாக உருவானதும் இவை காணாமல் போக ஒரு காரணம்.

இந்த லொத்தர் மட்டைகள் கிறிஸ்மஸ் பண்டிகையை ஒட்டி கடைகளில் தொங்கும். சில வேளைகளில் வேலிக் கரைகளில் ஒருவர் லொத்தர் மட்டையை வைத்தபடி வியாபாரம் செய்வார். பெரும்பாலும் 25 சதம், லொத்தர் துண்டு ஒன்றின் விலையாக இருக்கும். பின்னாளில் இது ஐம்பது சதம், ஒரு ரூபா வரையில் உயர்ந்தது.

வெள்ளை நிற ‘பிறிஸ்டல் போட்’ மட்டையின் மேல் அரைவாசிப் பகுதியில் பரிசுப் பொருள்கள் பொருத்தப்பட்டிருக்கும். பரிசுப் பொருள்களின் மேல் இலக்கம் இடப்பட்டிருக்கும். பரிசுப் பொருள் ஒழுங்கில் 1, 2, 3 என 15 வரையான பரிசுப் பொருள்களின் மேல் கலண்டர் திகதியின் இலக்கமே ஒட்டப்பட்டிருக்கும்.

சோப் கேஸ், பேனா, பென்சில், அழிறப்பர், பென்சில் சீவும் கட்டர், பம்மம்மா குழல் (அம்மம்மா குழல் என்போரும் உள்ளனர்), பவுடர் ஸ்பொஞ்ச், பிளாஸ்ரிக் மணிக்கூடு எனச் சிறுவர்கள் விரும்பும் பொருள்களே லொத்தர் மட்டையில் இருக்கும்.

லொத்தர் மட்டையின் கீழ் அரைவாசிப் பகுதியில் அதிர்ஷ்டம் பார்ப்பதற்கு கிழித்து எடுக்க வேண்டிய சிறிய சரை போன்ற சதுரப் பேப்பர் கூடு ஒட்டப்பட்டிருக்கும். பெரும்பாலும் அது வெள்ளை நிறத்தில் இருக்கும்.

அதைக் கிழித்துவிட்டுப் பார்த்தால் அதனுள் ஒரு அரிசியுடன் அல்லது பருப்புடன் பேப்பர் துண்டு இருக்கும். சில வேளைகளில் அந்தப் பேப்பர் துண்டுடன் வெற்றி இலக்கம் இருக்கும். இருந்தால் அந்த இலக்கத்திற்குரிய பரிசுப் பொருள் கொடுப்பார்கள்.

இலக்கம் இல்லாவிட்டால் ஒரு வெற்றுப் பேப்பர் துண்டு இருக்கும். அப்படி இருந்தால் பரிசு இல்லை.

பரிசுக்குரிய இலக்கப் பேப்பர் துண்டும் பரிசு இல்லாத பேப்பர் துண்டும் சம அளவில் வருமாறு பார்த்துக் கொள்வார்கள். ஏனெனில் லொத்தர் துண்டு எடுக்கக் காசு கொடுத்த ஒருவர் சதுர வடிவிலான லொத்தர் துண்டில் பரிசு உள்ள துண்டு சற்று மொத்தமாக இருந்தால் அதை அமர்த்திப் பார்த்து எடுத்து விடுவார்கள்.

ஒருவர் பரிசு விழக்கூடிய கூடுகளை அடுத்தடுத்து அமர்த்திப் பார்த்து லொத்தர் எடுத்தால் முழுப் பரிசுகளும் விழுந்து விடும். லொத்தர் மட்டையின் பத்து வீதக் காசும் வர முன்பாக முழுப் பரிசுகளும் விழுந்த சம்பவங்களும் உண்டு.

அதனால் பரிசுத் துண்டும், பரிசு இல்லாத வெறும் துண்டும் சம நிறையிலாக இருக்கக் கூடியதாகப் பார்த்துக் கொண்டார்கள்.

பரிசு இலக்கம் மாதக் கலண்டர் துண்டின் இலக்கமாகவே இருக்கும். அதனால் சில விண்ணர்கள் எண்ணெய் பிரண்ட கையால் அமத்திப் பார்த்து இலக்கம் உள்ள துண்டைத் தெரிந்து பார்த்து விடுவார்கள். பின்னர் அதனை இழுத்துக் கிழித்துப் பரிசை வென்றுவிடுவார்கள். அதனால் எண்ணெய் படிந்த கையால் லொத்தர் கிழிக்க விடமாட்டார்கள்.

லொத்தர் மட்டை தயாரிக்கும் வியாபாரத்தைச் செய்பவர்கள் பரிசுக்குரிய துண்டுகளின் பின்புறமாக ரகசியமாக ஒரு அடையாளத்தை வைத்துவிடுவார்கள். தங்களுக்கு வேண்டப்பட்ட நண்பர்களுக்குச் சொல்லிக் கொடுத்து விடுவார்கள்.

அவர்கள் அச்சொட்டாக அந்தத் துண்டுகளைக் கிழித்துப் பரிசுகளை வென்று விடுவார்கள். இதனால் லொத்தர் மட்டையை வாங்கியவர் பெரும் நட்டப்பட்டு விடுவார். இதனால் லொத்தர் தயாரிப்பாளருக்கும், வாங்கி விற்கும் வியாபாரிக்கும் பெரிய அடிபிடி

சண்டையும் நடந்தது உண்டு.

லொத்தர் மட்டையில் 15 பரிசுப் பொருட்கள் பொருத்தப்பட்டிருந்தால் 13 பரிசுப் பொருள்களுக்கே வெற்றி இலக்கங்கள் துண்டுகளில் இருக்கும். கவர்ச்சிகரமான இரண்டு பொருள்களுக்கு இலக்கத் துண்டு இருக்காது. அப்பொருள்களும் பரிசாகக் கிடைக்கும் என ஆரம்ப காலங்களில் நம்பினார்கள். ஆனால் அப்பரிசு விழமாட்டாது எனத் தெரிந்த பின்னர் லொத்தர் மட்டை அப்படியே தொங்கிக் கொண்டிருக்கும். துண்டுகள் இருந்தாலும் லொத்தர் கிழிக்க வரமாட்டார்கள். இதனால் மிகச் சிறு இலாபத்துடன் அல்லது நட்டத்துடன் லொத்தர் மட்டை வியாபாரம் முடிவுக்கு வந்துவிடும்.

சிறுவர்கள் தமது பெற்றோரிடம் காசு வாங்கியோ அல்லது பெற்றோரை அழைத்துச் சென்றோ லொத்தர் துண்டு எடுப்பார்கள். சிலவேளை பரிசு விழவேண்டுமெனத் தாம் ஆசைப்பட்ட பொருளை விலையைவிட கூடிய தொகையை லொத்தருக்கு செலவழிப்பார்கள்.

பரிசு கிடைத்த போது அந்தச் சின்னம் சிறார்கள் படும் சந்தோசத்தின் எல்லை உச்சமானது. இந்த லொத்தர் துண்டுகளைக் கிழிப்பதற்காக தமது கைச்செலவுக்கு அகப்படும் பணம் முழுவதையுமே பெற்றோருக்குத் தெரியாமல் கள்ளமாகச் செலவழித்தோரும் உண்டு.



இலங்கைத் தீவைப் போர் மேகங்கள் 1983 யூலையின் பின்னர் முழுமையாகவே சூழ்ந்து கொண்டது. அதற்கு முன்னர் சுவீப் ரிக்கெற் விற்கும் தொழில் பெருநகரங்கள், சிறுநகரங்களில் எல்லாம் சாதாரணமாக இருந்தது.

அன்றாடம் உழைத்துப் பணக்காரராக முடியாத தமது நிலைமை சுவீப் ரிக்கெற்றில் பணம் விழுந்து ஒரே நாளில் இலட்சாதிபதியாகி விடலாமென நம்பும் சிறுதொகையினர் அன்றும் இருந்தார்கள். இன்றும் இருக்கிறார்கள்.

அன்றைய நாட்களில் ஆகக் கூடிய பரிசுத் தொகை ஒரு இலட்சம் ரூபாவாக இருந்தது. அதனால், 'போனால் ஒரு ரூபா, வந்தால் ஒரு இலட்சம், இன்றே இலட்சாதிபதியாகலாம். வாருங்கள், வாருங்கள்...' எனக் கூவி அழைப்பார்கள்.

மிகவும் வறுமையான ஏழைக் குடும்பம் ஒன்று ஒரு இலட்சம் ரூபாப் பரிசைப்பெற்று அதனை முகாமை செய்யத் தெரியாமல் குடியிருந்த காணியையும் இழந்ததை அறிவேன். அந்தக் குடும்பத்தின் பெயர் இன்றளவும் 'சுவீப் மணி' என அழைக்கப்படுகிறது.

2009 மே மாதத்தின் பின்னரான காலப் பகுதியில் வடக்கு மாகாணத்தின் பெரும் பகுதிகளில் அதிர்ஷ்ட இலாபச் சீட்டு விற்கும் வியாபாரம் மீண்டும் தொடங்கியது.

ஆரம்பத்தில் ஆமி, பொலிஸ், நேவி, எயார்போஸ் இல்லையென்றால் சுவீப் ரிக்கெற் விற்க முடியாது என்ற நிலை இருந்தது.

மெல்ல மெல்ல நிலைமை மாறி இன்று தமிழ் மக்களும் மிகப் பெருமளவில் ரிக்கெற் வாங்கும் நிலைமையும் வந்துள்ளது.

சீட்டுப் பொருளாதாரச் சேமிப்பு முறையிலும் இன்று அதிர்ஷ்ட இலாபச் சீட்டு முறை வந்துள்ளது. அதிலும் ஏலச்சீட்டு (கூறல் சீட்டு) எனும் முறையும் உள்ளது.

போர் நடந்த காலத்திலும் போர் நடக்காத காலத்திலும் பொது அமைப்புகள் நிதி திரட்டுவதற்காக அதிர்ஷ்ட இலாபச் சீட்டுக்களை விற்பது இன்றளவும் தொடர்கின்றது. இதற்கான ஆதரவு அதிர்ஷ்டம் தொடர்பாக அலட்டிக் கொள்ளாத மக்களிடமும் உள்ளது குறிப்பிடத்தக்கது.

அன்றாட மனிதர் ஒருவரது வாழ்வில் வரும் சுக துக்கங்களை ஏற்று வாழ வேண்டும். அதிர்ஷ்டத்தை மட்டும் நம்பி, முயற்சி செய் யாத மனிதரைத் தான் துரதிஷ்டம் தொடர்ந்தும் துரத்திக் கொண்டே இருக்கும்.

எது எப்படியோ அதிர்ஷ்டம் என்றோ ஒரு நாள் கிடைக்குமென்ற மனித உளப்பாங்கு நிறைய மனிதர்களிடம் உள்ளது என்பது மறுக்க முடியாத உண்மையே.



thabendran.v@thaiveedu.com

STAY ONE STEP AHEAD OF CRA
X-CRA Officers are on staff.
SARVAA CPA
PROFESSIONAL CORPORATION
Our passion is to solve your tax problems:
- Unfiled Tax Returns - Last ten years (2011 - 2021)
- Appeals, Audits and Adjustments
- GST/HST Owner-Built & Rental Rebates
- Negotiate Collection, Garnishment and Payment Plan
- Voluntary Disclosure Program (VDP)
- Estate, Trust & Non-Residents
- US Tax (PTIN) - IRS 1040 & State Returns
CPA CHARTERED PROFESSIONAL ACCOUNTANTS
Shawn Y. Sarvaa, CPA, CGA
2750 14th Ave., Suite 206
Markham ON L3R 0B6
ideas@sarvaacpa.ca
TECHNICAL EXCELLENCE | INTEGRITY | PROFESSIONALISM
VANCOUVER 604 398 7272
TORONTO 647 219 3110
CALGARY 403 879 7272

# வணிகவகுப்பும் ரெட்வைனும்

- குரு அரவிந்தன்

அன்று விமானம் மூன்று மணிநேரம் தாமதம் என்று மின்னஞ்சல் மூலம் அறிவித்தார்கள். ஏற்கனவே போர்த்துக்கல் தலைநகரான லிஸ்பனில் உள்ள சர்வதேச விமானநிலையமான ஹம்பேர்ட்டோ டெல்காடோ விமான நிலையத்திற்கு வந்திருந்தபடியால், வணிக வகுப்பினர் தங்குமிடத்தில் தங்கியிருந்தேன். வாடகைக்கு எடுத்த வண்டியையும் திருப்பிக் கொடுத்திருந்ததால், வேறு எங்கும் செல்ல மனம் வரவில்லை.

விரும்பிய அளவு தேவையான உணவு வகைகளை எடுத்து இலவசமாகச் சாப்பிடக் கூடிய வசதிகளை ஏற்படுத்தி இருந்தனர். உணவு பிடித்ததோ இல்லையோ, வெளிநாடுகளுக்குச் செல்லும் போது அங்கு கிடைத்ததைச் சாப்பிடப் பழகி வைத்திருந்தேன். ஓய்வெடுப்பதற்கு வசதியான இருக்கைகளும் போட்டிருந்தார்கள். முக்கியமாக மடிக்கணினி, செல்போன்களுக்கான தொடர்பு வசதிகளும் அங்கே போதிய அளவு இருந்தன. அங்கிருந்த அனேகமானவர்கள் குடும்பத்தை மறந்து செல்போனோடு தங்கள் பொழுதைப் போக்கிக் கொண்டிருந்தார்கள்.

வணிக வகுப்பு என்றால் என்ன என்ற கேள்வி உங்களுக்கு எழலாம். விமானத்தில் பயணிக்கத் தகுதி பெற்ற யாரும் இந்த வணிகவகுப்பில் பயணிக்கலாம். பொதுவாகப் பணம் படைத்த வர்த்தகர்களும், உயர் அரசபணியாளர்களும், அரசியல்வாதிகளும்தான் இதில் பயணிப்பதுண்டு. சக பயணிகளின் தொந்தரவு இல்லாமல், விமானத்தில் தனிக் கபின் போல, கை காலை நீட்டிப் படுத்துக் கொண்டு வசதியாகச் செல்லக்கூடியதாக உங்கள் இருக்கை உங்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும்.

வசதி என்றால் என்ன என்ற கேள்விக்கு நான் பதில்தரவும் முனையவில்லை. தொடர்வண்டியில் பயணிக்கும்போது, உங்களுக்கான ஒரு இருக்கையை ஒதுக்குவதற்கோ, அல்லது பயணத்தின் போது படுத்துக் கொண்டு செல்வதற்கோ வசதிகள் இருப்பது போல, விமானத்தில் பயணிக்கும் போதும் அது போன்ற சில வசதிகளைப் பெற்றுக் கொள்ளலாம். வசதிகள்தான் முக்கியம் என்று பார்த்தால், நிம்மதியாகப் பயணிக்க என்ன கொஞ்சம் பணம் அதிகமாகச் செலவாகும், அவ்வளவுதான்.

தொழில் சம்பந்தமாக விமானத்தில் பயணிக்கும் போதெல்லாம், இந்த வணிக வகுப்பில்தான் பயணிப்பதுண்டு. நிறுவனத்தின் செலவில் இந்த வசதிகள் கிடைப்பதற்குக் காரணம் அவர்களுக்கும் எங்களின் தேவைகள் இருப்பதால், அவர்கள் இறால் போட்டு சுறாபிடிக்கும் கதைதான்.

விமானநிலையத்தில் உள்ள தங்குமறைக்கு வந்த நான் தேவையான உணவை எடுத்துக் கொண்டு எனக்கு ஏற்ற இருக்கை ஒன்றைத் தெரிவு செய்து அமர்ந்து கொண்டேன். என்னைச் சுற்றிவர என்ன நடக்கிறது என்று அவதானித்தேன். ஒருவர் அங்குமிங்கும் நடந்தபடி வீடியோ உரையாடல் மேற்கொண்டிருந்தார். ஆர்வம் காரணமாக அவர் என்னைக் கடந்து செல்லும் போதெல்லாம் எட்டிப் பார்த்தேன். வெள்ளைத் தாடி வைத்த ஒருவரின் முகம்தான் அதில் தெரிந்தது. சுமார் ஒரு மணித்தியாலத்திற்கும் மேலாக அவர் கதைத்துக் கொண்டிருந்தார். வணிகம் சார்ந்த உரையாடலாக இருக்கலாம், அவருக்குக் கடைசி அழைப்பு வந்ததைக்கூட அவர் கவனிக்கவில்லை. நல்ல காலம், வணிக வகுப்பு என்பதால் அங்கேதான் இருக்கலாம் என்ற நம்பிக்கையில் அங்கே வந்து அவரைத் தேடிப்பிடித்து அவசரமாக அழைத்துச் சென்றார்கள்.

அருகே இருந்த ஒருவர் தானும் அவரைக் கவனித்ததாகச் சொன்னார். எங்களுக்கான அறிமுகம் அப்போதுதான் ஆரம்பமானது. அவர் ஒரு போத்துக்கேயர், நன்றாக ஆங்கிலம் கதைத்தார். றொட்றிக்கோ என்று தனது பெயரை அறிமுகம் செய்தார். மதுபான வர்த்தக விடயமாக உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட லண்டன் செல்வதாகக் குறிப்பிட்டார். தனது விமானமும் தாமதமாகிவிட்டது என்று குறிப்பிட்டார். நானும் என்னை அறிமுகம் செய்து கொண்டேன்.

1505ம் ஆண்டு போர்த்துக்கேயர் இலங்கையின் கோட்டை இராச்சியத்தைக் கைப்பற்றிய போது, கரையோரப் பகுதி மக்களைக் கத்தோலிக்கர்களாக மதம் மாற்றிச் சில்வா, பெர்னான்டோ, பெரேரா, மாட்டின், மரியா என்று தங்கள் பெயர்களையே அந்த மக்களுக்கும் சூட்டினார்கள் என்பது நினைவில் வந்தது. அதனால்தான் இங்கே சந்தித்த போர்த்துக்கேய மக்களின் பெயர்களும் எனக்குப் பழக்கமான பெயர்களாக இருந்தன. நண்பர் வைன் வர்த்தகத்தில் ஈடுபட்டவர் என்பதால் எங்கள் உரையாடலும் அது சம்பந்தமானதாகவே அமைந்தது.

‘நீங்க போட்டோப் பகுதியைச் சேர்ந்தவரா?’ என்று கேட்டேன்.

‘ஆமாம் உங்களுக்கு எப்படித் தெரியும்?’

‘இல்லை, போட் வைன் உலகப் பிரசித்தி பெற்றது, அதனால்தான் கேட்டேன்’ என்றேன்.

‘அங்கே போட்டோவுக்கு வந்திருந்தீர்களா?’

‘ஆமாம், நானும் நண்பனும் குவின்ராவுக்கு வந்திருந்தோம்’ என்றேன்.

‘நீங்க அங்கே வந்து பார்த்ததில் மகிழ்ச்சி, உங்களுக்குப் போட்டோ பிடித்திருந்ததா?’

‘ரொம்பவே பிடித்திருந்தது. இலங்கையில் மலையகத்தில் தேயிலைத் தோட்டங்களைப் பார்த்தது போன்ற உணர்வு ஏற்பட்டது. அங்கேயும் மலைச்சரிவுகளில் தேயிலை செடிகள் நிரையாக இருப்பதைப் போல, இங்கேயும் திராட்சைக் கொடிகள் மலைச்சரிவுகளில் நிரையாக நிற்பதைப் பார்த்து ரசிக்கக்கூடியதாக இருந்தது.’

‘இங்கே உள்ள ‘வின்யாட்’ என்று சொல்லப்படுகின்ற திராட்சைத் தோட்டங்கள் உள்ள இடங்களைச் சுமார் 14 பகுதிகளாகப் பிரித்திருக்கிறார்கள். முக்கியமாக போட்டோப் பகுதியைத் திராட்சைத் தோட்டங்களுக்கான மரபுரிமைப் பகுதியாக ஐக்கியநாடுகள் மரபுரிமை அமையம் அறிவித்திருப்பது எங்களுக்குப் பெருமையாக இருக்கின்றது.’



'உங்க நாட்டு வைன் உற்பத்தி எவ்வளவு இருக்கும்?'

'நாங்க ஐரோப்பிய ஒன்றியத்தில் 5வது இடத்தில் அதிக வைன் ஏற்றுமதியாளர்களாக இருக்கிறோம். உலகச் சந்தையைப் பொறுத்தவரையில் 10வது இடத்தில், பின்னால்தான் இருக்கிறோம். சரியாகத் தெரியவில்லை கடந்த வருடம் சுமார் 936 மில்லியன் டொலர் வரை பெறுமதியான 306 மில்லியன் லிற்ரேஸ் வைன் ஏற்றுமதி செய்திருக்கிறோம் என நினைக்கின்றேன்' என்றார்.

'உங்க போட் வைன்தான் சிறந்தது என்று நினைக்கிறீர்களா?'

'நிச்சயமாக, இதில் நான் விட்டுக் கொடுக்க மாட்டேன். யார் என்ன சொன்னாலும் வைனுக்கு எங்கள் பரம்பரை வாழ்ந்த டோரோ போட்டோதான் பிரபலமானது. இதை டோரோ பள்ளத் தாக்கில் உள்ள என்னைப் போன்ற சிலர் குடும்ப வியாபாரமாகவே தொடர்ந்து செய்து கொண்டிருக்கின்றோம். இதைவிட லிஸ்போவா, அல்என்ரியோ போன்ற பகுதிகளிலும் வைன் உற்பத்தி செய்கின்றார்கள். இதைவிடச் சுற்றுலாப் பயணிகளின் தேவைகளுக்காகக் கொஞ்சம் வைன் இறக்குமதியும் செய்கின்றோம்' என்றார்.

'லிஸ்பனில் ஆற்றங்கரையில் வைன் பீப்பாக்கள் ஏற்றிய படகுகளைப் பார்த்தேன். அப்பொழுதுதான் விசாரித்தபோது, நீண்டகாலமாகப் போட்டோப் பகுதியில் இருந்து படகுகள் மூலம் வைன் கொண்டு வருவதாகச் சொன்னார்கள், இது உண்மையா?'

'ஆமாம், அது எமது நீண்டகால பாரம்பரியம், அப்போது வீதிப் போக்குவரத்துக்கள் குறைவான காலம் என்பதால் வைன் பீப்பாக்களைக் கொண்டு செல்வதற்குப் படகுகளைத்தான் பயன் படுத்தினார்கள். அதனால்தான் இங்கே அனேகமான மதுச்சாலைகள் ஆற்றங்கரைகளில் இருக்கின்றன' என்றார்.

'சிறந்த வைன் என்று நீங்கள் எதைச் சிபார்சு செய்வீங்க?'

'எனக்குப் பிடித்தமானது என்றால் போட்வைன்தான். இன்னும் சொல்வதென்றால் TourigaNacional, Aragonez, Alfrocheiro , Trincadeira போன்றவற்றைச் சொல்லலாம்' என்றார்.

'யார் எல்லாம் உங்க வைனை வாங்குகிறார்கள்?'

'முக்கியமாகப் பிரான்ஸ், ஜெர்மனி, சீனா, அங்கோலா போன்ற நாடுகள் அதிகம் வாங்குகின்றன. இப்போ கனடா, பிரித்தானியா, அமெரிக்கா, பிரேசில் போன்ற நாடுகளும் புதிதாக எங்களுடன் வைன் வர்த்தகத்தில் ஈடுபடுகின்றன, அது சம்பந்தமாகத்தான் லண்டன் போகிறேன். கனடாவில் எங்கள் வைனுக்கு வரவேற்பிருக்கா?' என்றார்.

'இருக்கு, எங்கள் இனப் பெண்கள் முன்பு பொது இடங்களில் மதுபானமே அருந்துவதில்லை, இப்போது உங்கள் ரெட்வைன் அறிமுகத்தால், உடலாரோக்கியத்திற்கு நல்லதென்று சமூக நிகழ்ச்சிகளில் 'ரெட்வைன்' அருந்தத் தொடங்கி விட்டார்கள்' என்றேன்.

'நல்லது, அதனாலே எங்களுக்கு வருமானம்தானே, ஆமா என்ன பிராண்ட் வைன் பாவிக்கிறாங்க' என்றார்.

'தெரியலை, நான் நினைக்கிறேன் உங்க 'பைராடா டிஓசி' ரெட் வைனைத்தான் விரும்பிச் சாப்பிடுவாங்க என்று, ஆமா கோவிட் காலத்தில் இங்கேயும் வைன் உற்பத்தி பாதிக்கப்பட்டதா?'

'பெரிதாக இல்லை, காலநிலை சீர்கேடு, மற்றும் கோவிட்-19 காரணமாக சென்றவருடம் உற்பத்தி இரண்டு வீதத்தால் குறைந்திருக்கிறது. உணவு விடுதிகள், மதுச்சாலைகள் தற்காலிகமாக மூடப்பட்டதாலும், போக்குவரத்து தடைப்பட்டதாலும் வைன்பாவனையும் குறைந்திருந்தது. திரும்பவும் பழையபடி எங்கள் சந்தையைப் பிடிக்க வேண்டும்' என்றார்.

'வைனுக்குப் புதிய சந்தைகள் ஏதாவது கிடைத்தனவா?'

'பெல்ஜியம், டென்மார்க், உக்ரைன், மெக்சிக்கோ போன்ற நாடுகள் ஆர்வம் காட்டியிருக்கின்றன. சந்தைப்படுத்துவது இப்போது நடக்கும் உக்ரைன் போரால் சற்றுத் தாமதமாகிறது' என்றவர், 'சரி இவ்வளவு கேள்விகளையும் கேட்டீர்களே, அங்கே வந்தபோது வைன் ரேஸ்ட் பண்ணிப் பார்த்தீங்களா? உங்களுக்கு எந்த வைன் பிடித்திருந்தது? அது பிடித்ததற்குக் காரணம் என்ன?' என்று கேட்டார்.

நான் சிரித்துவிட்டுச் சொன்னேன் 'நான் மதுபானம் அருந்துவதில்லை, திராட்சைப்பழம் சாப்பிட்டுப் பார்த்தேன் ருசியாக இருந்தது. நண்பர்தான் அங்கே வைனை ருசிபார்த்துவிட்டு நன்றாக இருப்பதாகச் சொன்னார்' என்றேன்.

'நீங்கள் திராட்சைப் பழத்தை விரும்பிச் சாப்பிட்டதாகச் சொன்னீங்க, அப்போ ஏன் வைன் குடிக்க மாட்டேன் என்று சொல்றீங்க?'

அவர் வைன் வணிகர் என்பதால் தனது வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையைக் கூட்டுவதிலேயே கவனமாக இருந்தார்.

‘நீங்கள் கேட்டதும் எனக்கு எங்க ஆன்மீகத் துறவி சுவாமி விவேகானந்தர் சொன்னதொரு கதை நினைவுக்கு வருகிறது. அது என்னவென்றால் சுவாமியின் சீடன் ஒருநாள் அவருக்கு இரவு உணவின்போது திராட்சைப்பழங்களைப் பரிமாறினான். அதை அவர் சாப்பிடும் போது ‘சுவாமி எனக்கொரு சந்தேகம்’ என்றான். ‘என்ன சந்தேகம் கேள்’ என்று சுவாமி கேட்டார்.

அதற்கு அவன் ‘நீங்கள் திராட்சைப்பழம் சாப்பிடலாம் என்றால் ஏன் அதன் சாற்றைப் பதப்படுத்திச் செய்யும் வைன் சாப்பிட மாட்டேன் என்று சொல்கிறீர்கள், இரண்டும் ஒன்றுதானே?’ என்றான். சுவாமி இரண்டுக்கும் உள்ள வித்தியாசத்தை விளங்கப் படுத்தினாலும் சீடன் அதை ஏற்றுக் கொள்ளவில்லை.

மறுநாள் காலையில் சுவாமி எல்லா சீடர்களையும் அழைத்தார். கேள்வி கேட்ட சீடனை மட்டும் தண்ணீர் தொட்டிக்கு அருகே அமரச் சொன்னார். அந்தச் சீடன் கேட்ட கேள்வியை எல்லாச் சீடர்களுக்கும் சொன்னார், அப்புறம் ஒவ்வொரு சீடனாக கேள்வி கேட்ட சீடனின் தலையில் அங்கே உள்ள செம்மண்ணைக் கையால் அள்ளிக் கொட்டச் சொன்னார். ஒவ்வொரு முறையும் ‘நோகுதா’ என்று கேட்ட போது சீடன் இல்லை என்று பதிலளித்தான். அதே போல தண்ணீரையும் கோப்பையில் எடுத்துத் தலையில் ஊற்றச் சொன்னார், அப்பொழுதும் சீடன் நோகவில்லை என்று சொல்லிச் சிரித்தான். இப்போது அருகே இருந்த செங்கட்டிகளை ஒவ்வொன்றாக எடுத்து சீடனின் தலையிலே போடச் சொன்னார். உடனே சீடனோ தலையிலே கை வைத்துக் கொண்டு ‘வேண்டாம்’ என்று கத்தினான். ‘அதே மண்ணும், அதே தண்ணியும் சேர்ந்து உருவானதுதானே இந்தச் செங்கட்டி ஏன் இதை மட்டும் நோகும் என்கிறாய்’ என்று சுவாமி கேட்டார். சீடன் உண்மையைப் புரிந்து கொண்டதால் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டான்.

கதையைச் சொல்லிவிட்டு அவரைப் பார்த்தேன்.

‘புரியுது, இது உங்க கலாச்சாரத்திற்கு ஏற்ற கதையாக இருக்கலாம், ஆனால் இங்கே வைன் எங்க வாழ்க்கையோடு கலந்து விட்டது, எங்க வியாபாரமே இதில் தானே தங்கியிருக்கின்றது!’ என்றார்.

‘நான் கணக்காளராக இருந்தாலும், ஒரு எழுத்தாளனாகவும் இருக்கின்றேன். அதனால்தான் இவற்றை அறிந்து வைத்திருந்தேன். எனது நண்பர் வைனைப்பற்றிச் சொன்ன விடயங்களும், உங்களைப் போன்ற அனுபவசாலிகளிடம் பெற்ற விடயங்களும் ஒரு கதைக்கு வலுவூட்டக் கூடியன’ என்றேன்.

‘அப்போ, நீங்கள் எழுதப்போகும் கதையில் எனக்கும் பங்குண்டு’ என்றவர், நேரத்தைப் பார்த்துவிட்டு, பயணத்திற்கான நேரம் வந்துவிட்டதாகச் சொல்லி விடைபெற்றார்.

எனக்கும் நேரமாகிவிட்டதால் விமானத்தை நோக்கிப் புறப்பட்டேன். வணிக வகுப்பில் எல்லோருக்கும் வைன் பரிமாறினார்கள், போத்துக்கேயரின் போட் வைனாகக்கூட இருக்கலாம்.

விமானப்பணிப்பெண் சிரித்த முகத்தோடு வைன் போத்தல்களைக் காட்டி எது வேண்டும் என்று கேட்டபோது, சுவாமி விவேகானந்தர் தான் கண்ணுக்குள் நின்றார், ‘வேண்டாம்’ என்று சொன்னேன், ஆச்சரியமாகப் பார்த்த அவள் தலையை அசைத்துவிட்டு அடுத்தவரிடம் சென்றாள். வணிக வகுப்பில் இப்படியும் ஒரு பயணியா என்று அவள் மனதுக்குள் வியந்தபடி என்னைக் கடந்து போயிருக்கலாம். மற்றப் பயணிகள் விரும்பிய வைனைக் கேட்டுவாங்கி அருந்தினார்கள், சுவாமி விவேகானந்தர் சொன்ன, எனக்குத் தெரிந்த கதை அவர்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை.



kuruaravindan@thaiveedu.com



# ‘Line 5’

# நோர்வேஜிய நாடக அரங்கு:

- றூபன் சிவராஜா

ஒரு சமூக மற்றும், இயல்புவாத நாடகத்திற்குரிய பண்புகளையும் பொதுத்தன்மைகளையும் அதிகம் கொண்டிருக்கின்ற இந்நாடகத்தில் ஆங்காங்கே குறியீடுகளும் படிமங்களும் கொண்டுவரப்பட்டுள்ளன.

கொரோனாப் பெருந்தொற்றின் சமூக முடக்கத்தினால் பாதிக்கப்பட்ட துறைகளில் ஒன்று கலைத்துறை. குறிப்பாக அரங்கத்துறை. இரண்டாண்டுகளாக நீடித்த முடக்கநிலை தளர்த்தப்பட்டதையடுத்துச் சமீப காலங்களில் கலை செய்யவும் கலைகளை அனுபவிக்கவுமான வாய்ப்பு மீண்டிருக்கின்றது.

நோர்வேயில் நாடக அரங்கு என்பது மிகுந்த முக்கியத்துவத்திற்குரிய கலைத்துறை. அரசாங்கமும் அதன் கலை பண்பாட்டு

> **இந்தத் தொடருந்திற்குப் பேசத் தெரிந்திருந்தால்... அது என்னென்ன கதைகளைச் சொல்லியிருக்கும்’ என்பதே இந்நாடகத்தின் அடிநாதம். கிட்டத்தட்ட ஒன்றரை மணி நேர நீளம். அதில் நடித்தவர்கள் வெறும் 8 பேர் மட்டுமே. ஆனால் அவர்கள் ஒரு சனத்திரளின் பயணத்தைப் பிரதிபலித்தார்கள், ஒரு பெருநகரத்து வாழ்வை வாழ்ந்தார்கள்.**

அமைச்சகமும் பெரும்நிதியை ஒதுக்கி அத்துறையைப் பல்வேறு பரிமாணங்களுக்கும் படிநிலைகளுக்கும் உயர்த்தி வருகின்றது. ஒவ்வொரு நாடகமும் நாடளாவிய ரீதியில் பல்வேறு நகரங்களின் அரங்குகளில் தொடர்ச்சியாக ஆற்றுகை செய்யப்படுகின்ற நடைமுறைச் சூழல் நிலவிவருகின்றது. பல வருடங்களாகத் தொடர்ச்சியாக அதற்குரிய அரங்குகள் ஒதுக்கப்பட்டு நிகழ்த்தப்படும். குறித்த கால இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் தொடர்ச்சியாக மேடையேற்றப்படும். ‘Line 5’ என்ற, இங்கு பேசப்படவுள்ள நாடகம் 2020ல் தொடங்கி இரண்டு ஆண்டுகள் பலமுறை மேடையேற்றப்பட்டிருந்தது. நான் பார்த்தபோது அது கடைசிக்கு முதல்முறை மேடையேற்றம் கண்டிருந்தது.

**உணர்வுகள் - அனுபவங்கள் - மனிதர்கள் - சம்பவங்கள்:**

ஒரு பெருநகரத்தின் உள்ளூர்ப் பயணத்தையும் அந்தப் பயணத்தின் மனிதர்களையும் உணர்வுகளையும் சம்பவங்களையும் அனுபவங்களையும் அரங்கக் கலையாகச் செய்ய முடியுமா? உயிர்ப்புடன் பார்வையாளர்களுக்குக் கடத்த முடியுமா? முடியும். பெரும் பொருட்செலவுகள் இன்றி, நேர்த்தியாக, இயல்புத்தன்மையோடு அதனைக் கலையாக்க முடியுமென்பதையும் - சிறந்த காட்சியனுபவத்தையும் பிரதிபலிப்பினையும் பார்வையாளருக்குக் கொடுக்க முடியுமென்பதையும் உணரவைத்தது அண்மையில் (27.04.22) ஒஸ்லோ றொம்மன் அரங்கில்(Rommen Scene) பார்க்கக் கிடைத்த நோர்வேஜிய நாடகம்.

நோர்வேஜிய மொழியில் ‘Linje 5’ அதன் தலைப்பு. ஆங்கிலத்தில் ‘Line 5’ எனலாம். இந்த நாடகம் பயணம் குறித்துப் பேசுகின்றது. பயணமென்றால் வெளிநாட்டுப் பயணம் அல்ல. உள்ளூர்ப் பயணம்தான். ஆனால் நெடும் பயணமுமல்ல. இன்னும் தெளிவாகச் சொல்வதானால் நாளாந்தப் பயணம். அதற்கும் மேலாக அதனை வாழ்க்கைப் பயணம் என்று சொல்வது கூடுதல் பொருத்தமாகப்படுகிறது. அதற்குள் பலநூறு கதைகள், பல்லாயிரம் மனிதர்கள், உணர்வுகள், அனுபவங்கள், கேள்விகள் சங்கமிக்கின்ற நகரத்தையும் புறநகர்களையும் இணைக்கின்ற தொடருந்துப்பயணம் அது.

ஒஸ்லோ வாழ் மக்களின் பொதுப்போக்குவரத்துச் சேவைகளில் நிலக்கீழ் தொடருந்துச் சேவை தலையாயது. நகரத்தின் எல்லாத் திசைகளிலிருந்தும் பயணிகளை நகரத்தின் மையப்பகுதிக்கும் ஏனைய பிரதேசங்களுக்கும் ஏற்றி இறக்குகின்ற பயணச்சேவை அது. ‘Linje 5’ என்பது ஒஸ்லோவின் கிழக்கையும் மேற்கையும் இணைக்கின்ற நிலக்கீழ் தொடருந்துச் சேவையின் அடையாள இலக்கம். கிழக்கின் இறுதித் தரிப்பிடம் Vestli. நகர மையத்தை ஊடறுத்துச் சென்று வடக்கில் அதன் இறுதித் தரிப்பிடம் Sognsvann.

**பல்லினச் சூழலின் பிரதிபலிப்பு:**

ஒஸ்லோவில் மக்கள் செறிந்து வாழும், குறிப்பாக பல்லின வெளிநாட்டு மக்கள் அதிகமாக வாழும் Groruddalen பிரதேசத்திலிருந்து நகரத்திற்குச் சென்றுவரும் நிலக்கீழ் தொடருந்து சேவை இதுவென்பதும், நாளாந்தம் பல்லாயிரக்கணக்கான மனிதர்கள் இதில் பயணம் செய்கின்றனர் என்பதும் இதன் தனித்துவம்.

**பிரதியை எழுதியவர்கள் - நெறியாளர்கள்:**

இதற்கான பிரதியை எழுதியவர்கள் எழுத்தாளர் Zeshan Shakar மற்றும் சொல்லிசை - ஹிப் ஹாப் கலைஞர் Don Martin. Cici


photoes from : https://www.detnorsketeatret.no

Henriksen மற்றும் Hedda Sandvig ஆகிய இருவரும் நாடகத்தை நெறியாள்கை செய்திருந்தனர். இருவரும் நடிப்புத்துறையில் கற்றவர்கள் என்பதோடு கடந்த பல ஆண்டுகளாக நாடகத்துறையில் நடிகர்களாகவும் பணியாற்றிவருபவர்கள். Cici Henriksen நோர்வேயின் தேசிய கலைக்கல்லூரியிலும் (National Academy of the Arts), Hedda Sandvig லண்டன் இசை மற்றும் அரங்கக்கலைக் கல்லூரியிலும் (London Academy of Music and Dramatic Art) நாடகத்துறையில் கற்றவர்கள்.

Zeshan Shakar சமகாலத்தில் நோர்வேயின் புகழ்பெற்ற எழுத்தாளர்களில் ஒருவர். நோர்வேயில் பிறந்து வளர்ந்த பாகிஸ்தானியப் பின்னணியையுடையவர். 2017ல் இவரது முதலாவது நாவல் (Tante Ulrikkes vei) வெளிவந்தது. அது 150,000 பிரதிகள் விற்பனையானது. இதுவொரு பெரும் சாதனை. அந்நாவல் நாடகமாகவும் பல அரங்குகளைக் கண்டிருக்கிறது. அவருடைய இரண்டாவது நாவல் 2020ல் வெளிவந்தது.

Don Martin புகழ்பெற்ற சொல்லிசை மற்றும் ஹிப்ஹாப் கலைஞர் என்பதோடு நாடக நடிகருமாவார். பல இசைத்தொகுப்புகளை வெளியிட்டுள்ளார். 2018ல் தனது சுயசரிதை நாடகத்தை எழுதி அதில் நடித்துமிருந்தார். இந்நாடகத்தின் பிரதியாக்கத்திலும் நடிப்பிலும் இவர் பங்களித்துள்ளார். காட்சிகளை ஒன்றோடொன்று தொடர்புபடுத்துகின்ற கதைசொல்லியாகவும் (கதை நகர்த்தியாகவும்) மிகுதி நேரங்கள் முழுவதும் ஒரு பயணியாகவும் வருகின்றார்.

**காட்சிக் கோர்வைகள்:**

காட்சிகள் சொல்லிசைப் பாடல்கள் மூலம் ஒன்றோடொன்று கோர்க்கப்படுகின்றன. தனிவட்ட ஒளியில் நின்று அவர் பாடுகின்றார். மேடையின் ஏனைய பகுதிகளில் குறைந்த ஒளி. பாடல் பாடப்படும் குறுகிய நேர அவகாசத்திற்குள் காட்சி மாற்றத்திற்குரிய வேலைகள் நடக்கின்றன. தொடரூந்துப் பெட்டிகளை வித்தியாசமாகக் காட்டுவதற்குரிய மாற்றங்கள் சொல்லிசைப் பாடல் பாடப்படும்போது நிகழ்கிறது. ஆற்றுகையாளர்கள் வெவ்வேறு பாத்திரங்களாக மாறுகின்றனர். இரண்டு தோழிகள் மாத்திரம் நாடகத்தின் பெரும்பகுதியில் வேறு பாத்திரங்களாக மாறாமல் ஒரே பாத்திரத்தில் வருகின்றனர்.

பல்லாயிரக்கணக்கானவர்கள் நாளாந்தம் பயணம் செய்கின்றனர். அவர்கள் ஒவ்வொருவருக்குள்ளும் பல கதைகளும் வாழ்வனுபவங்களும் இருக்கின்றன. குடும்பம், நட்பு, மனித உறவுகள், மனிதருக்கும் சமூகத்திற்குமான உறவு, மனிதருக்கும் அரசியலுக்குமான உறவு, மனிதருக்கும் இயற்கைக்குமான உறவு என பல அடுக்குகளில் பல்வேறு கூறுகளைக் கொண்ட கதைகள், அனுபவங்கள், உணர்வுகளின் சாட்சியமாக இருக்கின்றது இந்தத் தொடருந்து. அவற்றில் சிலவற்றைத் தெரிவுசெய்து மனித உணர்வுகளை, வாழ்வின் பக்கங்களை, அனுபவங்களை, சமூகத்தை, அரசியலை, பல்லினப் பன்மைத்துவத்தைப் பிரதிபலிக்கின்றது நாடகம்.

**முற்றுப் பெற்றதும் பெறாததுமான சம்பவங்கள்:**

காதல் முறிவு ஒன்று நிகழ்கிறது. அதே காதல் இன்னொரு தருணத்தில் மீண்டும் புதுப்பிக்கப்படுகிறது. மணக்கோலத்தில் தொடரூந்தில் ஏறுவதற்காக ஓடி வந்த பெண் அதனைத் தவறவிடுகின்றாள். குடிகார வயோதிபர் ஒருவர், தனிமையில் வாழும் தாய் ஒருவர், கர்ப்பிணிப்பெண் ஒருவர், சட்டங்களுக்குள் சிந்திக்கும் ஓர் அதிகாரி, கொண்டாட்ட நிகழ்வொன்றுக்குச் சென்றுகொண்டிருக்கும் இரண்டு இளம் தோழிகள், தொடருந்தில் பயணக்கட்டணப் பரிசோதகர்கள் என பல்வேறு பாத்திரங்களைத் தரிசிக்கக் கிடைக்கின்றது.

நாடகத்தில் நிகழ்த்திக் காட்டப்பட்ட சம்பவங்களில் சில கதைகள் மட்டுமே கோர்வையாகச் சொல்லப்பட்டு முற்றுப்பெறுகின்றன. சில கதைகள் மிகச்சிறு தருணங்களாக மட்டும் காட்டப்படுகின்றன. சில கதைகள் முற்றுப்பெறாமல் தொக்கிநிற்கின்றன. மணப்பெண் கோலத்தில் தொடருந்து பிடிப்பதற்காக ஓடி வருகின்றார். அதற்குள் தொடரூந்தின் கதவுகள் மூடப்படுகின்றன. அவர் அதனைத் தவறவிட்டதனால் எரிச்சலடைகிறார். பின்னர் அடுத்த தொடருந்தில் ஏறிக்கொள்கிறார். இதற்கு மேல் அந்த மணப்பெண் பற்றிய வேறு காட்சிகள் இல்லை. அப்பாத்திரத்தின் பின்னணி குறித்தோ, அக்காட்சிக்கு முன் என்ன நடந்தது, பின் என்ன நடந்தது என்பது குறித்த தகவலோ காட்சியோ இல்லை. அந்த வகையில் இதுவொரு பொருத்தமான படிமமாகப் பார்க்கக்கூடியது. எத்தனையோ மனிதர்கள் பயணிக்கின்றார்கள், பகிரப்படாத, சொல்லப்படாத, அறியப்படாத எத்தனையோ கதைகள், எத்தனையோ உணர்வுகள், அனுபவங்கள் உள்ளன என்பதன் குறியீடாக அக்காட்சியை நான் புரிந்துகொள்கிறேன்.

**சுவாரஸ்யமும் முரண்களும்:**

சுவாரஸ்யமும் கலகலப்புமிக்கதாகவும் அதேவேளை முரண்களைப் சித்தரிக்கும் வகையிலும் உருவாக்கப்பட்டிருக்கின்றன இரண்டு தோழிகளின் பாத்திரங்கள். அவர்கள் நோர்வேயில் பிறந்துவளரும் புலம்பெயர் பின்னணியைக் கொண்டவர்கள். அவர்களே நாடகத்தை நகர்த்திச் செல்கின்ற முதன்மைப் பாத்திரங்களாகவும் அதேவேளை கிட்டத்தட்ட ஏனைய அனைத்துப் பாத்திரங்களுடனும் ஊடாடுகின்றவர்களாகவும் வருகின்றனர். அவர்களின் ஊடாகவே சமூக, அரசியல், கலாச்சார முரண்பாடுகள், பன்மைத்துவம் பற்றிய உரையாடல்கள் முன்னெடுக்கப்படுகின்றன, கேள்விகள் எழுப்பப்படுகின்றன.

வெளிநாட்டவர்கள் நோர்வேஜிய மொழியைப் பேசுகின்ற, உச்சரிக்கின்ற முறைமை தொடர்பான ஒரு நேர்மறையான முத்திரைகுத்தப்பட்ட போக்கு நோர்வேஜியச் சூழலில், குறிப்பாக ஒஸ்லோவில் நிலவிவருகின்றது. அது விடயம் தொடர்பான ஒரு உரையாடல் அல்லது விவாதம் மொழிப் பயன்பாடு பற்றியதும் மொழி அரசியல் பற்றிய விவாதமாக வளர்கிறது. தோலின் நிறத்திற்கும் மொழி வழக்கிற்கும் சம்பந்தமில்லை. அது வாழிடத்தோடு தொடர்புபட்டது. கொச்சை மொழி என்பது வெளிநாட்டவர்கள் மத்தியில் மட்டுமல்ல, நோர்வேஜிய மக்கள் மத்தியிலும் அந்த வழக்கு நிலவுகின்றது என்கிறார்கள் தோழிகள்.

நீக்ரோ (Negro/Neger) என்ற சொல் எவ்வாறு ஆபிரிக்க மக்களை இழிவுபடுத்தவும் இனவாத மனநிலையிலும் பல மட்டங்களில் பயன்படுத்தப்படுகின்றது என்பதாக வளர்ந்த விவாதம், வரலாற்றுப் பாடப்புத்தகங்களில் கறுப்பின வரலாறு எப்படியான சித்தரிப்புக

ளைக் கொண்டுள்ளன என்பதையும் வகுப்பறை அனுபவ மீட்டலாக இளம்பெண் பகிர்கின்றாள்.

ஒரு காட்சியில் இளம்பெண்ணின் அழகை ஒரு நடிகையுடன் ஒப்பிட்ட 'குடிகாரக் கிழவன்' என்று விளிக்கின்றார். அவர் நேர்மறையாக புகழ்ந்தபோதும் அந்தச் சொல் அவளுக்குக் கோபத்தினை ஏற்படுத்துகிறது. அப்படி இனி ஒருவரையும் நீ அழைக்காதே என எச்சரிக்கிறாள். தான் பிழையான அர்த்தத்தில் கூறவில்லை எனக் கிழவர் வாதிடுகிறார். அது சொற்போராக மாறி இறுதியில் கிழவனைத் தள்ளி விழுத்துகிறாள். தோலின் நிறத்தினை வைத்து விளிப்பதைத் தீவிரமாக எதிர்க்கின்ற காட்சி அது.

### இன-நிற-மொழி-கலாச்சாரப் பன்மைத்துவம்:

நோர்வேயில் இலக்கியங்களில் அண்மைக்காலங்களில் இன-நிற-மொழி-கலாச்சாரப் பன்மைத்துவம் பற்றிய படைப்புகள் கவனம் பெற்று வருகின்றன. அது சார்ந்த பேசுபொருட்களுடன் நாவல்கள், சுயசரிதை நூல்கள், திரைப்படங்கள், நாடகங்கள் வெளிவருகின்றன. இருகலாச்சாரப் பின்னணியைக் கொண்டவர்கள் நாடக மற்றும் அரங்கவியல் கல்வித்துறைகளிலும், நடிப்புத்துறையிலும், நாடகப்படைப்புகளிலும் ஈடுபாடு அதிகரித்து வருகின்றது. 70களின் வர்க்கப் போராட்டம் முதல் சமகால இன-நிறவாத விவாதங்கள் வரையான பிரதிபலிப்பினை நாடகம் கொண்டிருக்கின்றது.

விரல்நுனியில் தகவல்களும் என்றான தற்போதைய தொழில்நுட்ப வளர்ச்சி, ஸ்மாட் ஃபோன் பாவனை, சமூக ஊடகப் பாவனை,



டியிற்றல் உலகம் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன என்பதுகூட ஒரு குறியீடாகக் காட்சிப்படுத்தப்படுகிறது. பயணக் கட்டணப் பரிசோதகர்கள் கட்டணம் செலுத்தாத பயணியொருவரை மடக்கிப்பிடித்து தரையில் வீழ்த்தி அமுக்கியதை கைத்தொலைபேசி மூலம் படம்பிடிப்பது அடக்குமுறையை அம்பலப்படுத்துகின்ற ஆவணப்படுத்தலாக நோக்கத்தக்கது. அதேவேளை இருவரின் தனிப்பட்ட அந்தரங்க உரையாடலை தொலைபேசியில் வீடியோ எடுக்கின்ற காட்சியை தொழில்நுட்ப வளர்ச்சியின் எதிர்மறையான விளைவுகளின் குறியீடாகக் காணலாம்.

சீருடை அணிந்த பயணக்கட்டணப் பரிசோதர்கள் ஒரு பெரும் சுற்றிவளைப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதுபோன்ற தோரணையுடன் ரோச் லைற்றுகளுடன் பிரவேசிக்கின்றனர். அதிகாரத்தோடு பயணிகளை அணுகுகின்றனர், கடுமையாக நடத்துகின்றனர். சீருடை, அவர்கள் பிரவேசித்த தோரணை, ரோச் லைற்றுகள் ஆயுதங்கள் போன்றிருந்தமை என ஒரு எதேச்சாதிகாரத்தின் வெளிப்பாடாக அக்காட்சி நெறிப்படுத்தப்பட்டிருந்தது. உண்மையில் பயணக்கட்டணப் பரிசோதகர்கள் அப்படியாக அதிகாரம் செலுத்துவதோ, வன்முறையில் ஈடுபடுவதோ இல்லை. சில சம்பவங்கள் நடந்திருக்கின்றன. அதுவொரு பொதுப்போக்கு இல்லை. ஆனால் இக்காட்சிச் சித்தரிப்பு என்பது பொதுவான அரச நிறுவனங்கள் பொதுமக்கள் சார்ந்து செலுத்தக்கூடிய பல்வேறு வடிவங்களிலான அதிகாரத்துவம் மீதான ஒரு விமர்சன வெளிப்பாடு எனவாகப் புரிந்து கொள்ளலாம்.

### மேடையமைப்பு - ஒலி - ஒளி - இசை - உரையாடல் - உடல்மொழி:

பயணிகள் ஏறுவதும் இறங்குவதுமான தரிப்பிட நிறுத்தங்கள் தவிர்ந்த நேரங்களில் ஓடிக்கொண்டிருக்கும் தொடருந்துப் பெட்டிகளுக்குள் கதை நிகழ்கிறது. மேடையமைப்பில் பெரிதாகப் பிரமாண்டங்கள் எதுவும் செய்யப்படவில்லை. ஒரு தொடருந்து என அடையாளப்படுத்தக்கூடிய இருக்கைகள், தொடருந்து நகர்ந்து கொண்டிருக்கின்றது என்பதை உணர்த்த நிலக்கீழ் பாதைச் சுவர்களில் காணக்கூடிய மின்குழல் வெளிச்சம் அமைக்கப்பட்டிருந்தது. எப்படியான அசைவுகள், நகர்வுகள் அந்த இடம் ஓடிக்கொண்டிருக்கின்ற தொடருந்து எனப் பார்வையாளர்களை உணரவைக்குமோ அதற்குரிய அசைவுகள், உடல்மொழியினை நடிகர்கள் வெளிப்படுத்தியிருந்தார்கள். வெவ்வேறு பெட்டிகள் எனக் காட்டும் பொருட்டு காட்சி மாற்றங்களின் போது, இருக்கைகள் சற்றுத் திசை, இடம்மாற்றி வைக்கப்பட்டன. அவ்வளவே அரங்கப்பொருள் சார்ந்த வேலைப்பாடுகள்.

உரையாடல்களின் போது பின்னணி இசை இசைக்கப்படவில்லை. காட்சி மாற்றம், அடுத்த தரிப்பிடம் பற்றிய அறிவிப்பு, கதவு திறந்து மூடுகின்ற அறிவிப்பு, மக்கள் திரளின் இரைச்சல், தரிப்பிடமேடைக்கும் தொடருந்திற்குமிடையிலான இடைவெளியை உணர்த்துவது போன்ற அறிவுறுத்தல்கள் என்பன பதிவுசெய்யப்பட்ட ஒலிகளாக வருகின்றன. நடிகர்கள் ஒலிவாங்கி பயன்படுத்தவில்லை. மேடைக்கும் பார்வையாளர்களுக்குமிடையிலான இடைவெளி குறைவாக இருந்தபோதும், ஒலிவாங்கி பயன்படுத்தப்பட்டிருந்தால் இன்னும் துல்லியமாக உரையாடல்களும் சொற்களும் செவிகளை எட்டியிருக்கும்.

### சமூக - இயல்புவாத நாடகம்:

நடிகர்கள் மிக இயல்பான நடிப்பு, உடல்மொழி, அசைவுகள், உரையாடல் வெளிப்பாடுகளைக் கொண்டிருந்தனர். மற்ற எல்லா அம்சங்களையும் விட, அதாவது அரங்க அமைப்பு, ஒளியமைப்பு, இசை போன்ற நாடகத்திற்கு மெருகேற்றக்கூடிய துணைக்கூறுகளைவிட நடிகர்களின் இயல்பான, நேர்த்தியும் உயிர்ப்பும் மிக்க ஆற்றுகைத் திறனே நாடகத்தை அதிகம் தூக்கி நிறுத்திய அம்சமாக இருந்தது.

ஒரு சமூக மற்றும், இயல்புவாத நாடகத்திற்குரிய பண்புகளையும் பொதுத்தன்மைகளையும் அதிகம் கொண்டிருக்கின்ற இந்நாடகத்தில் ஆங்காங்கே குறியீடுகளும் படிமங்களும் கொண்டுவரப்பட்டுள்ளன. பயணச்சீட்டுப் பரிசோதகர்கள் காட்சியில் ஒரு வகை மிகைப்படுத்தல் உள்ளது. அபத்தநாடக உத்திகள் அக்காட்சியில் கையாளப்பட்டுள்ளன.

'இந்தத் தொடருந்திற்குப் பேசத் தெரிந்திருந்தால்' அது என்னென்ன கதைகளைச் சொல்லியிருக்கும்' என்பதே இந்நாடகத்தின் அடிநாதம். கிட்டத்தட்ட ஒன்றரை மணி நேர நீளம். அதில் நடித்தவர்கள் வெறும் 8 பேர் மட்டுமே. ஆனால் அவர்கள் ஒரு சனத்திரளின் பயணத்தைப் பிரதிபலித்தார்கள். ஒரு பெருநகரத்து வாழ்வை வாழ்ந்தார்கள். பிரமாண்டங்களால் மட்டும் கலை நேர்த்தி சாத்தியப்படுவதில்லை. சிறந்த படைப்பினை உருவாக்குவதற்கு எளிமையும் படைப்பு உத்தியின் செழுமையும் போதுமானதென்பதை உணர்த்தியது.

அது பல்வேறு மனிதர்களின் உணர்வுகளையும் வாழ்வின் பக்கங்களையும் பேசியது. சமூக, அரசியல் பிரதிபலிப்பினைக் கொண்டிருந்தது. அதன் காட்சிப்படுத்தலை, உத்திகளை, ஒலி-ஒளிக் கையாளலை, அரங்க அமைப்பினை, ஆற்றுகையாளர்களின் திறனை, நெறியாள்கையை, பார்வையாளருக்குத் தந்த அனுபவத்தினை எனப் பல்வேறு அம்சங்களை விரிவாகப் பேச முடியும். பார்வையாளர்கள் தமது சொந்த அனுபவத்தோடு தொடர்புபடுத்தக்கூடிய சம்பவங்களின் பிரதிபலிப்புகளும் நிறைந்துள்ளன.



rooban.s@thaiveedu.com

# உலக வரலாறும் வெடிச்சிரிப்பும்

- ஓவியர் ஜீவா

திரைப்படங்கள் கண்டுபிடிக்கப்பட்ட காலத்திலிருந்தே நகைச்சுவை ரசம் அவற்றில் இரண்டறக் கலந்து விட்டிருந்தது. பஸ்டர் கீட்டன், சார்லி சாப்ளின், லாரல் ஹார்டி ஜோடி என்று ஏராளமான நகைச்சுவை நட்சத்திரங்களும் இயக்குனர்களும் நம் கண்முன் தோன்றுவர். இவர்கள் காலத்துக்கு பின்னும் ஏராளமான நகைச்சுவையாளர்கள் தோன்றினார். இவர் களில் நம்மால் மறக்க இயலாத இருவரில் ஒருவர் மெல் ப்ரூக்ஸ். இன்னொருவர் வுடி ஆலன். ஒரு சர்க்கஸில் கோமாளிக்கு எல்லா வேலைகளும் தெரியுமாம். அதே போல இயக்குனர், திரைக்கதா-



சிரியர், வசனகர்த்தா, தயாரிப்பாளர் என்ற பல கிரீடங்கள் தரித்திருந்தாலும் ப்ரூக்ஸ் ஒரு நல்ல நடிகரும் கூட. புகழ் பெற்ற திரைப்படங்களையும், திரைப்பட பாணிகளையும் அங்கதம் செய்து நகைச்சுவை திரைப்படங்கள் எடுப்பது இவர் பாணி. ஆரம்ப காலத்தில் தன் வாழ்க்கையிலிருந்தே சம்பவங்களை தேர்ந்தெடுத்து கோர்த்து திரைக்கதைகள் அமைத்து வந்தார்.

ப்ரூக்ஸ் இயக்கிய முதல் படம் 'தி புரொடியூசர்ஸ்'. ஒரு பிராட்வே இயக்குனரும், அவருடைய கணக்காளரும் ஒரு மோசடி திட் டத்தை அரங்கேற்ற திட்டமிடுகிறார்கள். இயக்குனருக்கு ஏகப்பட்ட கடன். கடன் தந்தவர்களை ஏமாற்றவும், மேலும் நிதி திரட்டி, புதிய முதலீட்டாளர்களை ஏமாற்றவும் சதி செய்கின்றனர். ஒரு நாடகத்தை இயற்றி, கிட்டத்தட்ட இருநூறு மடங்கு அசல் மதிப் புக்கு அதிகமாக பங்குகளை விற்கிறார்கள். நாடகம் வெற்றிய டைந்தால்தானே லாபத்தையும் முதலீட்டையும் திருப்பி தர முடி யும், தோல்வியடைந்தால் எங்கிருந்து தருவது! ஆகவே திட்ட மிட்டு ஒரு தோல்விப் படைப்பை தருவதற்கான முயற்சிகளில் ஈடு படுகிறார்கள். அதன் முடிவு என்னானது என்பதுதான் திரைப்படத் தின் போக்கு.

இன்னொரு புகழ் பெற்ற திரைப்படம் 'ப்ளேசிங் சாடெல்ஸ்' (எரி யும் சேணங்கள்) வெஸ்டர்ன் மூவீஸ் என்றழைக்கப்பட்ட கவ்பாய் திரைப்படங்களின் பின்னணியில் இயக்கப்பட்ட திரைப்படம். படு ரகளையான கிளைமாக்ஸ் கொண்டது.

'யங் பிரான்கென்ஸ்டைன்' என்றொரு திரைப்படம், அமானுஷ்ய படங்களை நகைச்சுவையாக பகடி செய்த திரைப்படம். நகைச் சுவை என்றால் மலிவாக எண்ணக்கூடாது. முப்பதுகளின் பழைய பிரான்கென்ஸ்டைன் திரைப்படங்களின் அரங்க அமைப்புகளை மீண்டும் புனரமைத்து, பழைய பரிசோதனைசாலை பொருட்களை மீண்டும் ஸ்டுடியோவிலிருந்து கண்டெடுத்து, படத்தின் மர்மத்தன் மைக்காகவும் பழமையின் வாடைக்காகவும் கறுப்பு வெள்ளையில் படமாக்கி வெளியானது. மேரி ஷெல்லியின், இருண்டதொரு புதி னத்தை நகைச்சுவையாக தயாரிப்பது அவ்வளவு எளிதான காரி யம் அல்ல. இந்த உத்திகளை, 40களில் தமிழில் கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் கையாண்டிருக்கிறார். நந்தனார் சரிதத்தை உருமாற்றி கிந்தனார் சரிதம் என்று காலட்சேபம் செய்தார் கலை-வாணர். அலிபாபாவும் நாற்பது திருடர்களை அப்படியே உல்டா செய்து வெளியிட்டார். பொய் பேசியறியாத அரிச்சந்திரனை, உண்மையே பேசாதவனாக மாற்றி 'சந்திரஹரி' என்ற திரைப்பட மாக எடுத்தார். யங் பிரான்கென்ஸ்டைன் படத்தில் டாக்டர் பிரான்-கென்ஸ்டைன் ஆக ப்ரூக்ஸின் அபிமான நடிகர் ஜீன் வைல்டரும், அவர் உருவாக்கும் ராட்சத மனிதனாக பீட்டர் பாயிலும், டாக்ட ரின் உதவியாளர், கோராக முட்டைக்கண்ணர் மார்ட்டி பெல்ட்ம னும் அசத்தியிருந்தனர். படத்தின் சில்லிடவைக்கும் இசையை பழம்பெரும் இசையமைப்பாளர் ஜான் மாரிஸ் நல்கினார். படத் தின் டைட்டில் ஓடுவதும், காட்சிகள் மாறும்போது துடைத்தது போல மாறுவதும், ஒரு காட்சி மங்கி அடுத்த காட்சி தோன்றுவ தும் என முப்பதுகளின் திரைப்பட பாணியிலேயே ப்ரூக்ஸ் இயக் கியிருந்தார்.

மெல் ப்ரூக்ஸ் இயக்கிய திரைப்படங்களில் பெரும் புகழ் பெற்ற திரைப்படங்கள் இரண்டில் ஒன்று 'சைலன்ட் மூவி'. இது திரையு லகை பின்புலமாக கொண்ட ஒரு திரைக்கதையை கொண்டது. குடியில் தன்னை அழித்துக்கொண்ட ஓர் இயக்குனர், தான் மீண்டு வருவதற்காக ஒரு புதிய படத்தை உருவாக்கும் திட்டத்தில் இருக் கிறார். அவருக்கு உறுதுணையாக இரு தோழர்கள். நொடிந்து கொண்டிருக்கும் ஒரு ஸ்டுடியோ அதிபரை தயாரிப்பாளராக கோரி தனது புதிய திரைக்கதையை சமர்ப்பிக்கிறார். தனது ஸ்டு டியோவை கடன் பாக்கிக்காக கபளீகரம் செய்யக் காத்துக் கொண்டிருக்கும் எதிரி முகாம் வில்லன்களிடமிருந்து ஸ்டுடி-யோவை காத்துக்கொள்ள அவருக்கும் ஒரு சூப்பர் ஹிட் திரைப் படம் தேவையாக இருக்கிறது! திரைக்கதையை புதுமையாக அமைக்கிறார் இயக்குனர். திரைப்படங்கள் பேசத்தொடங்கிய 40 வருடங்களுக்கு பிறகு வசனங்கள் இல்லாத மௌனப்படம்!! ஸ்டு டியோ அதிபருக்கு தயக்கம். பிரபல நட்சத்திரங்களை ஓரிரு காட்

சியிலாவது தோன்ற வைக்கிறேன் என்று வாக்கு தந்த பின்பு படத் தயாரிப்பு துவங்குகிறது. பல நகைச்சுவையான சாகசங்கள் மூலம் பால் நியூமன், பர்ட் ரினால்ட்ஸ், ஜேம்ஸ் கேன், லிசா மின்னெலி, ஆனி பான்கிராப்ட் போன்ற நடிகர்களை அணுகுகிறார்கள். அவர்களும் ஒப்புக்கொள்கிறார்கள். மார்ஸல் மார்சியூ என்ற மைம் கலைஞர் மட்டும் ஒப்புக்கொள்ளவில்லை. இந்த படத்தில் ஒலிக்கும் ஒரே வசனமான 'நோன்', இல்லை என்பதை அந்த மௌனக் கலைஞர் பேசுவது போல அமைத்தது ஒரு பெரும் புதுமை. திரைப்படம் ஒரு வழியாக முடிந்து திரையரங்குக்கு செல்லும் போது வில்லன்களின் இடையூறு, எப்படி அது திரையரங்கில் வரவேற்பு அடைகிறது என்பதையெல்லாம், மௌனப்பட நாயகர்கள் சாப்ளின், பஸ்டர் கீட்டன், மாக் சென்னட் பாணியில் ஸ்லாப்ஸ்டிக் வடிவத்தில் தருகிறார் ப்ரூக்ஸ். மௌன வசனங்களுக்கு சப் டைட்டில் வேறு!!

ஹை ஆன்சைட்டி என்ற திரைப்படம் முழுக்க முழுக்க மர்ம திரைப்படங்களை கிண்டல் செய்து எடுக்கப்பட்ட திரைப்படம். வெர்டிகோ மற்றும் அக்ரோபோபியா என்னும் உயரத்தை கண்டு பயப்படும் நோயால் பாதிக்கப்பட்ட நாயகனாக மெல் ப்ரூக்ஸ் நடித்திருந்தார். பெரும்பாலும் ஹிட்ச்காக் திரைப்படங்களில் நாம் கண்ட திடுக்கிடும் காட்சிகள் எல்லாமே ப்ரூக்ஸ் பாணியில் மீண்டும் படமாக்கப்பட்டதை இந்த திரைப்படத்தில் காணலாம். வெர்டிகோ, சைக்கோ, ஸ்பெல்பவுண்ட், தி பேர்ட்ஸ் என்று அவர் படங்களின் காட்சிகளை கிண்டல் செய்திருந்தாலும், இந்த திரைப்படம் அவருக்குத்தான் சமர்பிக்கப்பட்டிருந்தது. திரைக்கதையிலும் ஹிட்ச்காக்கின் ஆலோசனைகள் பயன்பட்டிருந்தன. கூடவே மைக்கலேஞ்சலோ அன்டோனியோனியின் 'ப்ளோ அப்', ஆர்சன் வெல்ஸின் 'சிட்டிசன் கேன்', ஜேம்ஸ் பேண்ட் பட வில்லன் இரும்புப் பற்களுடைய ஜாஸ் என்று எவரையும் விட்டு வைக்கவில்லை.

ஹிஸ்டரி ஆப் தி ஒர்ல்டு - பார்ட் 1 ப்ரூக்சின் திரைப்படங்களில் மிகப்புகழ் பெற்றது. வால்டர் ராலே இதே தலைப்பில் எழுதிய நூல் திரைப்படத்தின் தலைப்பும் ஆனது. பெரும் செலவிலும் ஏராளமான நடிகர்கள் நடித்து உருவானது இந்த திரைப்படம். முதல் பாகம் என்பதே ஒரு நகைச்சுவை குறிப்புதான். இன்றுவரை இன்னொரு பாகம் எடுக்க அவர் தயாராக இல்லை. 40 வருடங்களுக்கு பிறகு இப்போது எடுக்கப்போவதாக வதந்திகள் கிளம்பியிருக்கின்றன. அந்தாலஜி பாணியில் நான்கைந்து பாகங்களையும் கதைப்போக்கையும் கொண்டது இந்தப்படம். இடையிடையே பல்வேறு வரலாற்று நிகழ்வுகள் பகடி செய்யப்படுகின்றன.

ஆதிமனிதர் என்பது முதல் பகுதி. கற்கால வாழ்வு, நெருப்பின் கண்டுபிடிப்பு, முதல் ஓவியர், அவர் தோன்றியபோதே உதயமாகும் முதல் விமர்சகர், முதல் திருமணம் (அதில் ஒரு பாலர் மணமும் உண்டு), முதல் ஆயுதங்கள், முதல் இறுதிச் சடங்குகள் என்று நகைச்சுவை நிகழ்வுகள். இசை எப்படி தோன்றியது என்ற காட்சி வெடிச்சிரிப்பை தரும், கால்களின் மீது விதவிதமான கால இடைவெளிகளில் பாறாங்கல்லை தூக்கிப்போடும்போது பிறக்கும் அலறல் சத்தங்கள் இசையாய் மலர்ந்தன என்பது ப்ரூக்ஸ் சொல்லும் செய்தி!

பழைய ஏற்பாடு என்ற பகுதியில் மோசஸ், கடவுளின் 15 கட்டளைகள் அடங்கிய மூன்று கற்பலகைகளை மவுண்ட் சினாயிலிருந்து ஏந்தி வருகிறார். அவர் அதை ஒரு பிரகடனமாக 'ஜெஹோவா தந்த பதினைந்து கட்டளைகளை' என்று கூவும் போதே ஒரு பலகை விழுந்து உடைகிறது. சடாரென்று சுதாரித்துக்கொண்ட மோசஸ் உடனே அதை பத்து கட்டளைகளாக மாற்றி அறிவித்து விடுகிறார்.

ரோம் சாம்ராஜ்யம் என்ற அடுத்த பகுதி வெகு சுவாரசியமானது. இந்த படத்தில் ஐந்து வேடங்களில் நடிக்கும் ப்ரூக்ஸ், இந்த பகுதியில் காமிக்கஸ் என்ற ஸ்டான்ட் அப் காமெடியன் வேடத்தில் வருகிறார். அடிமை சந்தை, சோம்பேறி பெருந்தீனி அரசன் நீரோ, அவன் மனைவி அரசி நிம்ஃபோ, கிளேடியேட்டர்கள், மிராக்கிள் என்று பெயரிடப்பட்ட குதிரை, அரண்மனை, அந்தப்புரம், காவலுக்கு இருக்கும் திருநங்கைகள், சாரியட் துரத்தல்கள், பாய்ந்து வரும் சாரியட்டை நீரை பிளந்து பயணிக்க உதவும் மோசஸ், ராட்ஷத பாப்பிரஸ் சுருள்களில் பொதியப்பட்ட எரியும் கஞ்சா புகை, என்று போய்க்கொண்டிருக்கும் படத்தில்... திடீரென்று ஓர் அறைக்குள் நுழையும் காமிக்கஸ் காண்பது, யேசுவையும் அவரது சீடர்களையும். இயேசு சொல்கிறார், 'உங்களில் யாரோ என்னை காட்டிக்கொடுக்கிறீர்கள்'. அடுத்த வசனம் காமிக்கஸிடமிருந்து வருகிறது... 'ஜுடாஸ்...' ஜுடாஸ் பதறியடித்து எழும்போது காமிக்கஸ் தொடர்கிறார்... உங்களுக்கு இன்னும் வைன் வேணுமா? இதற்கிடையில் இவர்களை 'லாஸ்ட் சப்பர்' க்ரூப் ஓவியமாக வரைய லியானோ டா டாவின்சி உள்ளே வர, தொடரும் காட்சி பகடியின் உச்சம்.

ஸ்பானிஷ் இன்க்விசிஷன் என்ற அடுத்த பகுதி மியூசிகல் திரைப் படங்களை கிண்டல் செய்வது. கன்னியாஸ்திரிகள் ஆடும் குழு நடனங்கள், மதவெறியர்கள் அடுத்தவர்கள் மீது நிகழ்த்தும் சித்திர வதைகள் என்று இசைப்பின்னணியில் நடைபெறும்.

அடுத்ததாக பிரெஞ்ச் புரட்சி... வறுமை சூழ்ந்த நாட்டில் ஆடம்பர வாழ்வு வாழும் அரச குடும்பத்தினர். மூத்திர சட்டி சுமக்கும் வேலையாட்கள், கடும் பஞ்சம், கில்லட்டின் பலி வாங்கும் தலைகள் என்ற அவல சம்பவங்களையும் நகைச்சுவையாக சித்தரித்திருப்பார் இயக்குனர். இந்த பகுதியில் அவருக்கு அரசன் லூயி வேடம். இறுதியாக அடுத்த பாகத்தின் முன்னோட்டத்தில் பனிச் சறுக்கு விளையாடும் ஹிட்லர் உட்பட சில யூகங்களை தருகிறார். படத்தின் பின்னணியில் கதைசொல்லியாக குரல் தருபவர், மாபெரும் இயக்குனர் ஆர்சன் வெல்ஸ். படத்தின் இசை ஜான் மோரிஸ்.

இத்துடன் ஸ்டார் வார்ஸ் போன்ற விண்வெளி சாகச படங்களை பகடி செய்து 'ஸ்பேஸ்பால்ஸ்', ராபின் ஹுட் சாகசங்களை நகைச்சுவையாக சொன்ன 'ராபின் ஹுட் - மென் இன் டைட்ஸ், டிராகுலா திரைப்படங்களை கிண்டல் செய்த 'டிராகுலா- டெட் அண்ட் லவிங்க் இட்' போன்ற சில படங்களையும் ப்ரூக்ஸ் இயக்கினார். எதையும் பகடி செய்யாமல் 'லைஃப் ஸ்டிங்க்ஸ்' என்ற திரைப்படம் அவர் இயக்கி நடித்த மாறுபட்ட படங்களில் ஒன்று. அவர் எழுதாமல், இயக்காமல் நடித்த ஒரு திரைப்படம் 'டு பி ஆர் நொட் டு பி'. நாஜி ஜெர்மனி காலத்து வாழ்க்கையை ஒரு நாடகக்குழுவின் பின்னணியில் அலசிய ஓர் ஆள்மாறாட்ட திரைப்படம். புகழ் பெற்ற ஒரு பழைய திரைப்படத்தின் மறு ஆக்கம். இதில் ப்ரூக்ஸ் ஹிட்லராக சக்கை போடு போடுவார். அவர் மனைவி ஆனி பான்கிராப்ட் முக்கிய வேடத்தில் நடித்திருந்தார்.

மெல் ப்ரூக்ஸை ஒரு சாதாரண நகைச்சுவை இயக்குனராக ஒதுக்கிவிட முடியாது. திரைப்படங்களை அங்கதம் செய்யும் திரைப்படங்கள் ஏற்கனவே நிறையவே வந்திருக்கின்றன. ஆனால், இவருடைய திரைப்படங்களில் ஓர் உயர்தர நகைச்சுவையும் கடவுளர் முதல் அடிமைகள் வரை எதையும் பாரபட்சமின்றி கேலி செய்யும் துணிவும் இருக்கும்.

ப்ரூக்ஸ் திரைப்படம் என்றால் சில நடிகர்கள் கட்டாயம் நம் கண் முன் தோன்றுவார்கள். ஜீன் வைல்டர், மாடலின் கான், டாம் டி-லூயிஸ், மார்ட்டி பெல்ட்மேன், டெரி கர், பீட்டர் பாயல், சிட்-சீஸர், ஜான் கேண்டி, கிரிகோரி ஹைன்ஸ் போன்ற புகழ் பெற்ற நடிகர்கள் எல்லாம், இவரது கம்பெனி ஆர்டிஸ்ட்கள் போல படங்களில் நடித்திருப்பார்கள்.

திரைப்பட தயாரிப்பாளராக ப்ரூக்ஸ், கொஞ்சம் வித்தியாசமான முகம் படைத்தவர். அவர் இயக்காமல் தயாரித்த Fatso, மை பே-வரிட் இயர் போன்ற நகைச்சுவை படங்கள் அல்லாமல், பிரான்-செஸ், எலிஃபண்ட் மேன், தி ஃப்ளை போன்ற வெகு சீரியஸான திரைப்படங்களையும் தயாரித்துள்ளார். இவற்றில் எலிஃபண்ட் மேன் ஒரு கருப்பு வெள்ளை காவியம். ஜான் ஹர்ட், ஆண்டனி ஹாப்கின்ஸ், ஆனி பான்கிராப்ட் போன்ற அற்புத நடிகர்கள் நடித்தது!

இன்னும் ஓரிரு வருடங்களில் நூறு வயதை தொடுகிறார் இந்த அற்புதக்கலைஞர். மேலும் வாழ்க என வாழ்த்துவோம்.!



jeeva@thaiveedu.com

# பரஞ்சோதி ஆசிரியர் என்னும் தன்னலமற்ற தொண்டர்

**- பொன்னையா விவேகானந்தன்**

கனடாத் தமிழ் சமூகம் பலமும் வளமும் பெற்றுத் தன்னை நிலை நிறுத்தி வரும் அதேவேளை, சமூகத்தின் ஏற்றத்துக்கான ஈடுபாட்டுடன் பணியாற்றிய தொண்டுணர்வாளர்களின் இழப்புகளும் தவிர்க்க முடியாதாகி விடுகின்றது.

இந்த இழப்புகளின் தொடர்ச்சியில் கடந்த மாதம் கனடாத் தமிழ் சமூகத்திடமிருந்து விடைபெற்றுக் கொண்டவர் 'ரீச்சர்' எனப் பலராலும் அன்போடு அழைக்கப்பட்ட திருமதி சோதிமலர் பரஞ்சோதி அவர்கள்.

இலங்கையின் தொண்டைமானாறு என்ற ஊரில் இருந்து ரமணன், பிரகல் என்ற இரு மகன்மாருடன் தொண்ணூறுகளின் தொடக்கத்தில் கனடாவுக்குப் பெயர்ந்தவர் பரஞ்சோதி ஆசிரியர். தாயகத்தில் வளமான குடும்பத்தில் பிறந்த இவர், கல்வியில் தேர்ந்து ஆசிரியராகப் பணியாற்றியவர். சிறுவயதிலேயே துருதுருப்பும் சுறுசுறுப்பும் மிக்கவராக இருந்தார். அந்த வயதிலேயே நான் லொறி ஓடியவள், எனக்குப் பயம் கிடையாது என அடிக்கடி கூறுவார்.

கடந்த ஜுன் மாதம் 16ம் நாள், அவர் தன்னுடைய 77வது வயதில், கனடா - ரொறன்ரோவில் இவ்வுலக வாழ்வை நீத்திருந்தார். அவருடைய பணிகளையும் ஆளுமைகளையும் பதிவு செய்வதாக இக் கட்டுரை அமைகின்றது.

தொண்ணூறுகளின் தொடக்கத்தில் கனடாவுக்குப் புலம் பெயர்ந்த இவர், புலம்பெயர்ந்த நாள் முதலே பல்வேறு சமூகப் பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். குறிப்பாகத் தாயக விடுதலை சார்ந்து நடைபெற்ற நிகழ்வுகளில் ஒரு பங்காளராகவே இயங்கினார்.

ரொறன்ரோவில் தொண்ணூறுகளின் தொடக்கத்தில் மாவீரர்நாள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளில் அரங்கேறிய நாடகங்களில் ஒரு நடிகையாகச் சிறந்து விளங்கினார். விடுதலை உணர்வு சார்ந்து உணர்ச்சிமயமான கதாபாத்திரங்களில் நடிப்பதில் வல்லவராகத்



திகழ்ந்தார். இந்த நிகழ்வுகள் குறித்து இன்றும் கூடப் பலரும் பேசிக்கொள்கின்றனர்.

கனடாவில் இயங்கிய புனர்வாழ்வுக் கழகத்தின் ஒரு தொண்டராக இணைந்து கொண்ட இவர், தாயகம் நோக்கிய பல்வேறு நலத்திட்டப் பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். குறிப்பாக அங்கு நடைபெற்ற பல்வேறு புனர்வாழ்வுப் பணிகளுக்கு இவருடைய பங்கு மிக முக்கியமானதாக இருந்தது.



சமூகப்பணிகள் ஒருபுறமிருக்க மறுபுறத்தில் நல்லதொரு தமிழ் ஆசிரியையாகத் திகழ்ந்தார். தாயகத்தில் ஆசிரியராகப் பணியாற்றி இவர், இயல்பாகவே ஆசிரியருக்குரிய இயல்புகளைக் கொண்டிருந்தார். பீல் கல்விச் சபையிலும் ரொறன்ரோ மாவட்டக் கல்விச் சபையிலும் தமிழாசிரியராகக் கணிசமான காலம் பணியாற்றினார். குறிப்பாகக் குழந்தைகளுக்கு மொழியைக் கற்பிப்பதில் மிகச்சிறப்பாகச் செயலாற்றினார்.

நான் ரொறன்ரோ மாவட்டக் கல்விச்சபையில் ஆசிரியர் பணியைத் தொடங்கியபோது குறித்த ஒரு பள்ளியில் நான் முதன்முதலில் இவருடன்தான் பணியாற்றினேன். அங்கு மொழி கற்பிக்கும் நுணுக்கங்களையும், மாணவரையும் பெற்றோரையும் எவ்வாறு அணுக வேண்டும்? என்பதையும் எனக்கு கற்று தந்தவர் திருமதி பரஞ்சோதி ஆசிரியர்தான்.

இரண்டாயிரத்தின் நடுப்பகுதியில் ஆசிரியப் பணிகளை துறந்த பரஞ்சோதி ஆசிரியர், தாயகம் சென்று அங்கு வாழும் மக்களுக்கும் நடைபெறும் போராட்டத்திற்கும் உதவ வேண்டும் என்று விரும்பினார். எனக்கு தெரிந்து 2006 முதல் 2008 வரையிலான காலகட்டங்களில் இவர் வன்னிப் பகுதியில் பல்வேறு சமூகப் பணிகளில் ஈடுபட்டிருந்ததோடு, போராளிகளோடும் கலந்துலாவி அவர்களுக்கு வேண்டிய அறிவூட்டல்களையும் செய்திருக்கின்றார்.

2008ல் போராட்டச் சூழல் கடுமையடைந்ததையடுத்து, அவர் கனடா திரும்பியிருந்தார். கனடா திரும்பிய பிறகும் ஓய்வின்றித் தாயகப் பணிகளுக்காகாப் பலவழிகளிலும் செயற்பட்டார்.

இறைவழிபாட்டிலும் பெரும் ஈடுபாடு கொண்ட இவர் ரொறன்ரோவில் அமைந்திருக்கின்ற செல்வச்சந்நிதி ஆலயத்தில் தன்னுடைய தொண்டுகளைக் குறைவின்றிச் செய்தார். பிறருக்கு உணவிட்டு மகிழ்வதில் இவருக்கு இணை வேறு யாரும் இல்லை என்று கூடச் சொல்லலாம்.

2009ல் முள்ளிவாய்க்காலில் இனப்படுகொலைப் பெருந்துயர் நடைபெற்றதையடுத்து உருக்குலைந்த பலருள் இவரும் ஒருவர். எனினும் பலரைப் போல இவர் துவண்டு ஒதுங்கிவிடவில்லை. கடுமையாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ வேண்டும் என்ற துடிப்போடிருந்தார்.

ஓரளவு நிலைமை வழமைக்கு திரும்பியதையடுத்து தாயகம் சென்றார். குறிப்பாகக் கிழக்கு மாகாணத்துக்குச் சென்ற இவர் அங்கு எல்லைப்புற கிராமங்களில் வாழும் தமிழ்மக்களின் இடர் மிக்க வாழ்வைக் கண்டார். பேரினவாதத்தின் ஆக்கிரமிப்புக்குட்படும் எல்லைக் கிராமங்களில் வாழும் மக்கள் அங்கிருந்து வெளியேறுவதை அவதானித்த இவர் அவர்களுக்கு உதவுவதையே குறிக்கோளாகக் கொண்டார். அந்த மக்களோடு பேசி அந்த மக்களை அங்கேயே வாழும்படி செய்து அவர்களுக்கு வேண்டிய உதவிகளை புலம்பெயர்ந்த மக்களைக் கொண்டு செய்வித்தார். அங்கு வாழும் இளையோருக்குக் கல்வி புகட்டும் ஆசிரியராகவும் இயங்கினார்.

இவ்வாறு அவரால் சில கிராமங்களில் காப்பாற்றப்பட்டன என்ற செய்தியை நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் கனடாவில் வாழும் திரு. இராசரத்தினம் அவர்களிடம் தெரிவித்திருக்கின்றார்.

போருக்குப் பின்னான சூழலில், வாழ்வாதாரம் தேவைப்பட்ட மக்களை இனம்கண்டு அவர்களுக்கு உதவுவதையே தன் முழுநேரப் பணியாகக் கொண்டிருந்தார். தனக்குத் தெரிந்த தமிழ்த்தேசிய உணர்வுமிக்கோரிடம் உதவிகளைப் பெற்று தன்னுடைய நலத்திட்டங்களை நிறைவேற்றினார். அவர் முன்னெடுத்த பல செயற்றிட்டங்கள் இன்றும் தொய்வின்றி இயங்கி வருகின்றன.

உடல் சற்று நோய்வாய்ப்படவே அவர் கனடா திரும்பினார். இங்கு அவர் திரும்பிய பின்னரும் ஓய்வாக இருக்கவில்லை. பலரோடும் பேசியபடி தாயகச் செயற்பாடுகளை ஊக்குவித்துக் கொண்டிருந்தார்.

2017ல் நான் இலக்கியத் தோட்டம் என்ற அமைப்புக்காக ஒரு நாடகத்தை எழுதி இயக்கினேன். அந்த நாடகத்தில் நடிப்பதற்கு ஒரு முதிர்ந்த பண்பட்ட நடிகை தேவைப்பட்டபோது, இவரைக் கடந்து என்னால் யாரையும் நினைத்துப் பார்க்க முடியவில்லை. இவரை அணுகினேன். மகிழ்வோடு ஒத்துக்கொண்டார். அந்த நாடகத்தில் தன்னுடைய தாயக உணர்வுமிக்க கருத்துகளையும் வெளிப்படுத்திச் சிறப்பாக நடித்திருந்தார். அதுவே அவர் பங்கேற்ற இறுதி நாடகமாகவும் அமைந்தது.

பின்னாட்களில் அவர் தாயகம் செல்ல விரும்பினாலும் அவர் உடல்நிலை இடம் கொடுக்கவில்லை. எனினும் சீரான மருத்துவத்தைப் பெற்ற இவர், மருத்துவர் அனுமதியுடன் தாயகம் சென்று இரண்டு வாரம் தங்கிவர விரும்பியிருந்தார். அதற்கிடையே உறக்கநிலையிலேயே இவ்வுலகத்தை விட்டுப் பிரிந்தார்.

இவரது மறைவையடுத்து, அனைத்துலகத் தமிழர் தலைமைப் பணியகம் அவருக்கு நாட்டுப்பற்றாளர் என்ற உயரிய மதிப்பை வழங்கி, அவருடைய தன்னலமற்ற பணிகளைப் போற்றியது.

பரஞ்சோதி ஆசிரியர் அவர்கள், தன்னலமற்ற தொண்டர் மட்டுமல்ல, வாழும் பலருக்கும் வழிகாட்டியாகத் திகழ்ந்தவர். உரம் மிக்க வீரப் பெண்ணாக வாழ்ந்தவர். அவர் வாழ்வு அவரை நேசிக்கும் அனைவராலும் போற்றப்படும்.



vivekanandan.p@thaiveedu.com

# ஐ.தி. சம்பந்தன் என்னும் தமிழ்த் தொண்டாளன்

- அன்னலட்சுமி இராஜதுரை

*'பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்*
*கருமமே கட்டளைக் கல்'*

என்னும் வள்ளுவர் வாய் மொழிக்கேற்ப, தன் உயரிய கருமங்க ளால் பெருமகனாய் விளங்கிய தமிழ்ப்பற்றாளர், எழுத்தாளர், சமூக சேவையாளர், சஞ்சிகை ஆசிரியர், நூலாசிரியர், நூற்பதிப் பாளர், சைவத் தொண்டர் எனப் பல்வேறு நிலைகளில் மனப்பூர் வமாகப் பாடுபட்டு, மக்கள் தம் உள்ளம் கவர்ந்த ஐ.தி. சம்பந்-தன் அவர்களை, அன்னார் அமரராகி, இரு மாதங்கள் கடந்து விட்ட நிலையில், நினைவுகூர்வது சாலப் பொருத்தமே.



யார் இந்தச் சம்பந்தன்? அவரை ஏன் நினைவுகூர வேண்டும்? என உன்னிப்பாய்ச் சிந்திக்கின்ற போதுதான், தனக்கென வாழாப் பெருந்தகையாளர் ஒருவரின் தளர்வறியாத் தமிழ்ப்பணிகள், சோர் விலாச் சமூகப் பணிகள், 'சடசட'வென்று மேலெழுந்து வரும்!

யாழ்ப்பாணத்தில், சைவமும் தமிழும் செழிப்புற்றோங்கும் காரைந கர் சம்பந்தன் அவர்களின் பிறந்த ஊராகும். முருக பக்தராய், கந்த புராணத்துக்குப் பயன் சொல்லும் பணியை நீண்டகாலமாக மேற்கொண்டுவந்த பௌராணிகரான ஐயம்பிள்ளை - மாரிமுத்து இணையரின் இரண்டாவது மகனாக 1935ம் ஆண்டு ஜுன் மாதம் 26ம் திகதி பிறந்தவர். சிறுவயதிலேயே தாய், தந்தையை இழந்து, தந்தையின் உடன்பிறப்புக்களான மூன்று சகோதரர்களால் வளர்க் கப்பட்டவர்.

ஆரம்பக் கல்வியை காரைநகர் சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியா லயத்திலும், இடைநிலைக் கல்வியை, காரைநகர் இந்துக் கல்லூ ரியிலும் கற்று, எஸ்.எஸ்.ஸி. பரீட்சையில் சித்திபெற்றவர். பின் மருதானை தொழில்நுட்பக் கல்லூரியிலும் சிலகாலம் கல்வி கற்று, கொழும்பில் சிறிது காலம் தொழில் பார்த்தவர்.

அக்காலக்கட்டத்தில் ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டம் காரணமாக, இனக் கலவரம் வெடித்த போது, கொழும்புத் தமிழர்கள் அகதி முகாம்க ளில் தஞ்சம் புகுந்தனர். இவர்களுக்கு உதவும் ஒரு தொண்டரா கச் செயற்பட்டவர் சம்பந்தன். பின் அகதிகளுடன் பருத்தித்துறை துறைமுகத்தில் வந்திறங்கிய இவர், சிறிது காலம் யாழ்ப்பாணம் பாலாவோடைத் தமிழ்க் கலவன் பாடசாலையில் உதவி ஆங்கில ஆசிரியராகவும் பணியாற்றினார். இக்காலகட்டத்தில், சம்பந்தன் 'தினகரன்' ஆசிரியருக்குக் கடிதம் எழுத ஆரம்பித்ததில் இருந்து, எழுத்துத்துறையில் இவருக்கு ஆர்வம் அதிகரித்தது.

இதன்பயனாக, அன்று பிரபலம் பெற்றிருந்த 'சிற்பி' சிவசரவண-பவன் அவர்களின் 'கலைச்செல்வி' சஞ்சிகையில் சேர்ந்து தம் எழுத்துத்திறனை வளர்த்துக்கொள்ளவும், பத்திரிகை தொடர்பான அனுபவங்களைப் பெற்றுக்கொள்ளவும் விரும்பினார்.

'கலைச்செல்வி' சஞ்சிகையில் மதிப்புக்கொண்டிருந்த சம்பந்தன், 'சிற்பி' அவர்கள் அளித்த ஊக்கத்தில் கலைச்செல்வியின் வளர்ச் சிக்கு விளம்பரங்கள் சேகரித்துக் கொடுத்தது உட்பட தம்மாலான பங்களிப்பினை வழங்கியதோடு, அதில் கட்டுரைகளையும் எழுதி னார். சம்பந்தன் அவர்களின் கலைச்செல்விப் பணிகளை 'சிற்பி' பின்னர் நினைவு கூர்கையில், 'எழுத்துலகில் தான் முன்னேறுவதற் கும், பத்திரிகை ஒன்றை நடத்தும் பக்குவம் தனக்கு ஏற்படுவதற் கும், 'கலைச்செல்வி'யே பெருமளவில் காரணமாக இருந்தது என அவர் அடிக்கடி குறிப்பிடுவதும், தான் வெளியிட்டுவரும் 'சுட-ரொளி' இதழின் கௌரவ ஆசிரியர் என என்னுடைய பெயரைப் பொறித்திருப்பதும், அவருடைய நன்றி உணர்ச்சியின் வெளிப்பா டுகளாகி, எனக்குப் பெருமை சேர்க்கின்றன' எனக் குறிப்பிட்டதும், அவரது பத்திரிகைப் பணியின் சிறப்பையும் ஆழ்ந்த நன்றி உணர்வினையும் காட்டும்.

வருமானத்தின் அவசியம் கருதி 1964ம் ஆண்டு, துறைமுகக் கூட் டுத்தாபனத்தில் எழுதுவினைஞராகச் சேர்ந்து கொண்ட இவர், ஆங்கிலத் தேர்ச்சியும் கொண்டிருந்த காரணத்தினால், பின்னர்

மொழிபெயர்ப்பாளராகவும் கடமைபுரிந்தார். அவ்வேளை அரச தமிழ் ஊழியர்கள் சிங்களம் மட்டும் சட்டம் உட்பட பாரபட்ச நட வடிக்கைகளால் எதிர்நோக்கிய கஷ்டங்களைக்கண்டு, தீவிர இனப் பற்றும், பொதுநல ஆர்வமும் மிக்க சம்பந்தன், ஊழியர்களின் கஷ்டங்களை நிவர்த்தி செய்யும் நோக்கில் உருவாக்கப்பட்ட அரச கூட்டுத்தாபன ஊழியர் சங்கத்தின் செயலாளராகவும், 1974ம் ஆண்டு தமிழ்த் தொழிற்சங்கக் கூட்டணியின் செயலாளராகவும் செயற்பட்டார். அவ்வேளை தீவிர தொழிற்சங்கவாதிகளாக விளங் கிய கோடீஸ்வரன், இராமநாதன், இராசரத்தினம், சிவஞான சுந்த ரம் ஆகியோருடன் நெருங்கிய தொடர்பு அவருக்கு இருந்ததும் குறிப்பிடத்தக்கது. இவர்கள் மூலம் மொழிவழித் தொழிற்சங்க நட வடிக்கையை பலப்படுத்திக் கொண்டதோடு தமிழரசுக்கட்சித் தலைவர் தந்தை எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்களுடனான தொடர்பும் ஏற்பட்டது.

1964ம் ஆண்டில் இருந்து 1983ம் ஆண்டுவரை அவர் அரசியல், தொழிற்சங்கம், சமயம் ஆகிய துறைகளில் தீவிரமாகச் செயற்பட் டார். 1983ம் ஆண்டின் இனக்கலவரக் காலம் வரை துறைமுக அதிகாரசபையில் கடமை புரிந்தார். இவர் சிங்களம் கற்காத கார ணத்தினால் பத்துக்கு மேற்பட்ட சம்பள உயர்வுகளையும், பதவி உயர்வுகளையும் இழந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது. எனினும் இப்பொதுப் பணியாளனான இனப்பற்றாளன், தளர்ந்துபோய்விட வில்லை. தாம் கொண்ட உயர் இலட்சியங்களில் இருந்து வேறுப டவுமில்லை. அத்துணை மனத்திண்மை இவரிடம் இருந்தது என் பது சிறப்புக்குரியது.

இவரது அரசியல் ஆர்வம் காரைநகர் இந்துக்கல்லூரியில் கற்கும் காலத்திலேயே துளிர்விட்ட ஒன்றாகும். தமிழரசுக்கட்சி வட்டுக் கோட்டைத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் அமிர்தலிங்கம் அவர்களது பேச்சினால் மிகவும் கவரப்பட்டு அரசியல் மேடைகளி லும் தோன்றிப் பேச ஆரம்பித்தார். இயல்பிலேயே தமிழ்ப் பற்றா ளனான இவர், தமிழர் தாயகம், தன்னாட்சி, தமிழ் மொழி உரிமை ஆகிய கொள்கைகளைக் கொண்டிருந்த தமிழரசுக்கட்சியின்பால் ஈர்க்கப்பட்டார். 1956ல் இடம் பெற்ற சிங்கள எதிர்ப்புப் போராட் டங்கள், தேர்தல் நடவடிக்கைகள், 1961ல் யாழ்ப்பாணத்தில் நடை- பெற்ற தமிழரசுக்கட்சியின் உண்ணாவிரதப் போராட்டம் உட்பட பல்வேறு கட்சியின் நடவடிக்கைகளிலும் இளைஞனான சம்பந்தன் விசுவாசமான ஒரு தொண்டராகப் பணியாற்றியதன் மூலம் தந்தை செல்வநாயகம், வன்னியசிங்கம், அமிர்தலிங்கம் ஆகியோருட னான தொடர்பும் வலுப்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

1970களில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ், சிறைவைக்கப்பட்ட சுமார் எழுபது இளைஞர்களில் ஒருவராக யாழ்ப்பாணம் சிறைச்சா லையில் அடைக்கப்பட்டு, மூன்று மாதங்களுக்கு மேல் சிறையில் இருந்து மீண்ட செம்மலாகவும் சம்பந்தன் விளக்குகிறார். இவரு டன் அவ்வேளை ஈழவேந்தன் (இலங்கை மத்திய வங்கி), கோவை மகேசன் (சுதந்திரன் ஆசிரியர்), நா. சந்திரமோகன், பேபி பரராஜ- சிங்கம், இரகுபதி பாலஸ்ரீதரன், ஆகியோரும் இருந்துள்ளனர். இவர்கள் சிறையில் இருந்த வேளை கந்த ஷஷ்டி விரத காலம் வந்ததெனவும் இவர்களில் பலர் கந்த ஷஷ்டி விரதம் அனுஷ்டித்த னர் எனவும் அவ்வேளை தமக்கு சிறை உணவுக்கு பதிலாகப் பாலும் பழமும் தரவேண்டும் எனக் கோரினர் எனவும் அப்படி வழங்கச் சட்டம் எதுவுமில்லை என சிறை அதிகாரிகள் மறுத்தனர் எனவும், இதனால் உண்ணாவிரதம் மேற்கொண்ட விரதிகள், தமக்கு உணவுக்குச் செலவாகும் பணத்தை இரவில் பாலும் பழ மும் தரச் செலவிடுமாறு, மனுக்கொடுத்தார்கள் எனவும் அந்த மனுவில் முதலாவதாக கையெழுத்திட்டவர் அஞ்சா நெஞ்சன் சம் பந்தனே எனக் குறிப்பிடப்படுவதுங்கூட இங்கு விசேடமாகக் கூறத் தக்கது.

தமிழ் மக்களுக்கு எதிரான எல்லா இனக்கலவரங்களிலும் அதா வது 1958, 1971, 1977, 1983 என ஏற்பட்ட எல்லா இனக்கலவரங் களிலும் இவர் அகப்பட்டுத் தப்பிப் பிழைத்துள்ளார் என்பதும், இவற்றின் சாட்சியாகத் தன்னை, பல முக்கிய விசாரணைகள், பதி வுகள், எழுத்துக்கள், போராட்டங்கள், அரசியல் இயக்கங்களில் பதிவு செய்துள்ளார் என்பதும் அவரது பொதுவாழ்வின் மற்றொரு விசேட பக்கமாகும்.

அரசியல் செயற்பாடுகளாலும் மற்றும் பொதுச் செயற்பாடுகளா லும், தொழிலையும் இழந்தார்.

இத்தகையதோர் அனுபவப் பின்னணியில், சம்பந்தன் அவர்களால் 1980களில் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டதே, 'சுடரொளி' வெளியீட்டுக்கழகமும் பத்திரிகையுமாகும்.

ஆரம்பத்தில் 'சுடரொளி' தமிழ்த் தொழிலாளர்களின் நலன்கருதி விடயங்களை வெளியிட்டு வந்தது. பின்னர் கலை, கலாசாரம், சமூகம், அரசியல் ஆகிய விடயங்களைக் கொண்டு வெளிவர ஆரம்பித்தது.

இலக்கிய நூல்களோடு தமிழர் தம் அருமருந்தன்ன வரலாறுக- ளைக் கொண்ட நூல்களும் ஆவணப்படுத்தப்படவேண்டும் என பெரு வேட்கை கொண்டிருந்த இவர், சுடரொளி வெளியீட்டுக்க ழகத்தை, அதற்கேற்றவாறு முறையாகப் பயன்படுத்தப் பின்நிற்க வில்லை. இக்கழகம் மூலமாக, தமிழறிஞர் க.சி. குலரத்தினம் அவர்களது 'தமிழ் தந்த தாதாக்கள்', 'செந்தமிழ் வளர்த்த செம் மல்கள்' என்னும் நூல்களை 1980களின் பிற்பகுதியில், மறுபதிப் புகளாக வெளியிட்டதுடன் வேறு நூல்களையும் வெளியிட்டார். தாமும் காத்திரமான சமூக விடயங்களை எழுதவும் முற்பட்டார்.

சுறுசுறுப்பான அரசியல் செயற்பாட்டாளராகவும், சமூக சேவையா- ளராகவும் அங்கு இயங்கிக் கொண்டிருந்த சம்பந்தன், அவ் வேளை அங்கு நிலவிய அசாதாரண சூழல் காரணமாக, பெரும் இடர்ப்பாடுகளை எதிர்நோக்கினார். சுடரொளி பதிப்பகமும் பாதிப் புக்குள்ளானது. உயிராபத்தும் ஏற்பட்டது. இனியும் அங்கு வாழ்ந் திருக்க இயலாது என்னும் நிலையில் இவர் 1990ல் லண்டனுக்குப் புலம் பெயர்ந்தார்.

'தமிழுக்கு தொண்டு செய்வோன் சாவதில்லை' என்பது கற்றுணர்ந் தோர் வாக்கு. புதியநாடு, புதியசூழல் என்ற போதும் சம்பந்தன் சோர்ந்து போனதில்லை. தமது மேம்பாட்டு நடவடிக்கைகளை மேலும் தொடர்ந்து நடத்த வேண்டும் என்னும் ஆர்வத்தில், புலம் பெயர்ந்த நம்மவர்களின் ஆதரவையும் நல்லுறவையும் பெறச் செயற்பட்டார். அதேவேளை 'வொல்தம் போறஸ்ட்' என்னும் இடத் தில் இயங்கிவந்த தமிழ்ப் பாடசாலையில் தலைமை ஆசிரியராக கடமையாற்றக் கிடைத்த வாய்ப்பை, அரிய முறையில் பயன்படுத் திப் பாடசாலையை, அன்பர்கள் உதவியுடன் ஊக்குவித்தவர். தமி ழையும் தமிழ்க் கலைகளையும் கற்பிக்கும் பொருட்டு உருவாக் கப்பட்ட இப்பாடசாலையில் நான்கு வருடங்கள் சிறப்பாகப் பணி புரிந்தார்.

1994ல் சுவாமி விபுலானந்தர், தனிநாயகம் அடிகளார் ஆகியோ ரின் நினைவு தினங்களை சுடரொளி வெளியீட்டுக் கழகத்தின் மூலம், கருத்தரங்குகளை நடத்தியதோடு, லண்டனில் இவர் தமது இலக்கியப்பணியையும் எழுத்துப்பணியையும் ஆரம்பித்தார். இவ் விடயங்களில் தமக்கு அப்போது திரு. பற்றிமாகரன் என்னும் தமிழ் அறிஞர் பெரிதும் உதவியாக இருந்தார் எனக் குறிப்பிட்டி ருக்கிறார்.

அத்துடன் 1995ம் ஆண்டு சம்பந்தன் அவர்கள் மிகுந்த துணிச்சலு டன் 'சுடரொளி' இதழை லண்டனில் வெளியிட ஆரம்பித்தார். இவ் விதழ் இவர் எடுத்துக்கொண்ட பல்வேறு ஆக்க முயற்சிகளின் பய னாக நம்மவர்கள் புலம் பெயர்ந்து வாழ்ந்த நாடுகளிலும் வரவேற் புப் பெற்ற ஓர் இதழாக விளங்கியது எனவும் சம்பந்தன் அவர் களே ஒரு நேர்முகத்தில் குறிப்பிட்டிருக்கின்றார்.

அத்துடன் 'சுடரொளி' வெளியீட்டுக் கழகம் மூலம், இவர் எழுதிய 'தமிழ் அகதிகளின் சோக வரலாறு', 'கறுப்பு ஜூலை 1983: குற்றச் சாட்டு', 'குமுதினிப் படகுக் கொலைகள்', 'தியாகராஜா மகேஸ்வ ரன் - அரசியல் வாழ்வும் தமிழர் பிரச்சினையும்', திரு. வே.ச. குண ரத்தினத்துடன் சேர்ந்து எழுதித் தொகுத்த 'ஒப்பற்ற தலைவர் தந்தை செல்வா', மூத்த பத்திரிகையாளர் பொன். பாலசுந்தரம் எழுதிய 'பிரித்தானியாவும் ஈழத் தமிழும்', சம்பந்தனின் 'ஒரு வேரின் சுவாசம்', 'நீங்காத நினைவுகள்' உட்பட இருபத்திரண்டு நூல்கள் வெளியிடப்பட்டன. 'கறுப்பு ஜூலை' நூல் லண்டன், கனடா, மலேசியா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் வெளியீடு களைக் கண்டது. சில நூல்கள் லண்டனிலும் கொழும்பிலும் வெளியிட்டு வைக்கப்பட்டன. 'செந்தமிழ் வளர்த்த செம்மல்கள்'




சென்னையில் வெளியீட்டைக் கண்டது. இவற்றோடு சிறப்பாகத் தமிழ் வளர்த்த பெரியார்கள் சிலரது பணிகளை எடுத்துக் காட்டும் வகையில் சம்பந்தன் அவர்கள் சிறப்பு மலர்களையும் வெளியிட்டிருக்கிறார். மாநாட்டு சிறப்பு மலர்களும் வெளியிடப்பட்டுள்ளன.

**உலகத் தமிழ் கவிதைப்போட்டி:**

'சுடரொளி' வெளியீட்டுக் கழகம் வெற்றிகரமாக நடத்தி முடித்த, உலகத் தமிழ்க் கவிதைப் போட்டிகளும், சிறப்பாகக் குறிப்பிடத் தக்கன.

2000ம் ஆண்டு மிலேனியம் ஆண்டாகக் கணிக்கப்பட்டது. உலகெலாம் பெரும் மாற்றங்கள் ஏற்படும் எனப் பெரும் பரபரப்பு இருந்த ஆண்டு. மிலேனியத்தை நினைவுகூரும் முகமாக உலக நாடுகள் நினைவுச் சின்னங்களை எழுப்பி, இந்த ஆண்டை கோலாகலமாகக் கொண்டாடின. இந்த ஆண்டு உலகத் தமிழருக்கும், குறிப்பாக விடுதலைக்காகப் போராடிக்கொண்டிருக்கும் ஈழத் தமிழருக்கும், ஒரு நல்ல காலம் பிறக்க வேண்டும் என்பதற்காக கவிதைப் போட்டி ஒன்றை நடத்த சுடரொளி வெளியீட்டுக் கழகத்தினர் தீர்மானித்தனர்.

கவிஞர் க. இராஜமனோகரன், பொன். பாலசுந்தரம், எஸ். திருச்செல்வம் ஆகியோர் கொண்ட குழு 'வருக தமிழர் பொற்காலம்' என்ற தலைப்பில் கவிதைகள் ஆக்கப்பட வேண்டும் எனத் தீர்மானித்தது என சம்பந்தன் தமது 'நீங்காத நினைவுகள்' நூலில் நினைவு கூருகிறார்.

உலகெங்கணும் இருந்து மொத்தம் 275 கவிதைகள் வந்து சேர்ந்தன. கவிஞர் கலாநிதி தலைமையிலான குழு, பரிசுக்குரிய கவிதைகளைத் தேர்ந்தெடுத்து, தமிழ் நாடு அறிஞர்கள் சிலரது உற்சாகமான ஒத்துழைப்புடன் சென்னையில் விழா சிறப்பாக நடைபெற்றது.

கவிநாயகர் வி. கந்தவனம் அவர்களது ஆலோசனைக்கமைய இரண்டாவது உலகக் கவிதைப் போட்டி, 2004ம் ஆண்டு அறிவிக்கப்பட்டது. 'புதுயுகத் தமிழர்' என்னும் தலைப்பிலான இப்போட்டியில் 400 உலகக் கவிஞர்களின் கவிதைகள் கிடைக்கப்பெற்றன. இதன் பரிசளிப்பும் சென்னையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இலங்கையிலும் நடத்தப்பட்டது. இவை யாவற்றினதும் சூத்திரதாரி பொறுப்பாளி சம்பந்தன் அவர்களே. இவ்விழாக்களின் சிறப்பு தமிழக முதல்வர் கருணாநிதியையே வியப்படைய வைத்து, சுடரொளி வெளியீட்டுக் கழகத்தினரை அழைத்துப் பாராட்ட வைத் தது.

சைவமும், தமிழும் பொலிந்து விளங்கும் காரைநகர் மண்ணின் மைந்தனான ஐ.தி. சம்பந்தன் இயல்பாகவே நாட்டுப் பற்றும், இனப்பற்றும், மொழிப்பற்றும், சமயப்பற்றும் கொண்டவர். இளமையில் இருந்தே காரை கிழக்கு இந்து இளைஞர் மன்றம், கொழும்பு இந்து வாலிபர் சங்கம், இந்து இளைஞர் பேரவை, கொழும்பு விவேகானந்த சபை, அகில இலங்கை இந்து மாமன்றம், பின்னாளில் பிரித்தானிய சைவ முன்னேற்றச்சங்கம் ஆகியவற்றில் சேர்ந்து தமது மனப்பூர்வமான பங்களிப்பினை வழங்கியவர்.

இவரது மற்றொரு சமூகப்பணியாகவும், சமயப் பணியாகவும் விளங்குவது சிவத்தமிழ்ச் செல்வி, துர்க்கா துரந்தரி செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களது சமய, சமூகத் திருப்பணிகளை எடுத்துக்கூறும் அறிஞர்களது பத்தொன்பது கட்டுரைகளைத் தேர்ந்தெடுத்தும், அம்மையாரின் பேருரைகள் மற்றும் ஆக்கங்களிலிருந்தும் அவர் தேடித் தொகுத்த ஒன்பது கட்டுரைகளையும் சேர்த்து வெளியிட்ட 'சிவத் தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி வாழ்வியற் பணிகள்' என்னும் நூலாகும்.

கொழும்புத் தமிழ்ச்சங்கம், கொழும்பு விவேகானந்த சபை ஆகியவற்றிலும் இணைந்து நின்று தம்மாலான பங்களிப்பை நல்கியவர் சம்பந்தன்.

இத்தொண்டாளனின் 80ம் அகவையை முன்னிட்டு, சுடரொளி வெளியீட்டுக்கழகம் 2016ம் ஆண்டில் வெளியிட்ட 'சாதனையாளன் ஐ.தி. சம்பந்தன்' என்னும் தலைப்பில் வெளியிட்டுள்ள சிறப்புமலர் தமிழ், சமயம், சமூகம், அரசியல் ஆகியவற்றில் இவரது சேவை குறித்து, அறிஞர்கள் பலரது ஆக்கங்கள், ஐ.தி.சம்பந்தன் என்பவர் யார்? என்பதனைத் துல்லியமாக வெளிப்படுத்தும். அத்தோடு இதற்கு முதல் 2011ம் ஆண்டில், சுடரொளி வெளியீட்டுக் கழகத்தால் வெளியிடப்பட்ட 'ஒரு வேரின் சுவாசம் - ஐ.தி. சம்பந்தனின் மனப் பதிவுகள்' என்னும் நூல், அவரது ஆக்கங்களைக் கொண்டதாக அவரது சேவை நலன்களை எடுத்துக்காட்டுகின்றன.

தமிழும் சைவமும் இரு கண்கள் என வாழ்ந்திருந்த இவரது அரிய தொண்டுகளுக்கு, இவரது துணைவியார் திருமதி. செல்வதி அவர்கள் பெரிதும் பக்கபலமாக விளங்கினார் என்பர். மூன்று புத்திரர்களின் தந்தையாரான இவர், ஒரு சிறந்த குடும்பத் தலைவராகவும், அனைவரையும் அன்புடனும் பண்புடனும் அரவணைத்துப் போற்றும் பண்பாளனாகவும் விளங்கினார்.

ஈழத்தமிழரின் வாழ்வுநிலை அனைத்தும் ஆவணப்படுத்தப்பட வேண்டும் என்னும் வேணவாவில் தாமும் செயற்பட்டும், ஏனைய தக்கோரைத் தூண்டியும் செயற்பட்ட இத்தமிழ்த் தொண்டாளன் தமது 87ம் அகவையில் கடந்த மே மாதம் (2022) இவ்வுலக வாழ்வை நீத்து அமரரானார். அன்னாரின் மறைவு ஒரு பேரிழப்பு எனில் மிகையில்லை.



annaluxmi.rajadurai@thaiveedu.com


உங்கள் நம்பிக்கையோடு
எங்கள் 18 ஆண்டுகால சேவை...
STANDARD MORTGAGES INC
• Mortgages
• Refinance
• Second Mortgages
• Short Term Secured Loans
SMI
STANDARD
MORTGAGES INC.
Residential & Commercial
சுமையான கடன்களை சுகமான அனுபவமாக்கிட
Raj Subrayam AMP
Director
80 Corporate Drive, Suite # 307 Toronto, Ontario, M1H 3G5
Tel: 416 298 1700
Fax: 416 754 8651
www.standardmortgagesinc.com
raj@smi4loan.com

## மலையகக் கவிதை இலக்கியச் செல்நெறி

# அங்கதச் சுவையுடன் கவிதையை அணுகிய பொன். பூபாலன்

**24**

**- மல்லியப்புசந்தி திலகர்**

அறுபதுகளில் மலையகக் கவிதைச் செல்நெறியில் இளைஞராக இணைந்துகொண்டவர் கவிஞர் பொன். பூபாலன். கண்டி மாவட்டம் பன்விலை மடுல்கல்ல பகுதியில் இருந்து 1960களில் இருந்து இலக்கியம் படைத்தவர்களான கவிஞர் மலைத்தம்பி (ஐசக்), கவிஞர் பன்னீர்ச்செல்வம், அரு. சிவானந்தன், மு.சி. கந்தையா போன்றோர் வரிசையில் வருபவர் பொன். பூபாலன். இவர்களது வரிசையில் இதே ஊரிலிருந்து வந்தவராக இப்போதும் எழுதிக்கொண்டிருப்பவர் கவிஞர் கனிவுமதி.



1940ம் ஆண்டு நவம்பர் 5ம் திகதி பன்விலயில் பிறந்த பொன். பூபாலன் பாடசாலைக் காலத்தில் இருந்தே கவிதை, இசைப்பாடல், குறுநாடகம், நாடகம், ஓவியம் என பல துறைகளில் ஆர்வம் மிக்கவராக இருந்துள்ளார். கரவெட்டி ஆ.க. சுப்பிரமணியம், அவரது துணைவியார் பகவதி ஆகியோரை தமது குருவாகப் பெற்றதனால் தனக்கு கலைத்துறை ஈடுபாடு அதிகமானது என்றும் பதிவு செய்கிறார் கவிஞர் பூபாலன். தவத்திரு குன்றக்குடி அடிகளார் தனது திறமையைப் பாராட்டி வழங்கிய இரண்டு ரூபாய், கோடி ரூபா பெறுமதியானது என்றும், அந்தப்பணத்தைக் கொண்டு தான் வாங்கிய பாரதி கவிதைகள் நூலின் பெறுமதி விலைமதிப்பற்றது என்றும் எழுதும் அவரது கலையார்வம் புரிந்து கொள்ளக்கூடியதே. 1967ல் வேலை தேடி அலைந்த காலத்தில் மாத்தளையில் நடைபெற்ற கவியரங்கில் கவிபாடக் கிடைத்த வாய்ப்பு தனது வாழ்வில் திருப்பத்தை ஏற்படுத்தியது என, தனது கலையார்வத்தை உயர்ந்த எண்ணத்தில் வைத்துள்ளார் கவிஞர் பூபாலன். (இதயமுள்ள பாரதி - என்னுரை).

அந்தக் கவியரங்கிற்கு தலைமை வகித்தவர் மகாகவி பாரதியின் பேத்தி திருமதி. விஜயபாரதி சுந்தரராஜன் என்பதுடன் கவிஞர் வி. கந்தவனம் அவர்களுடன் இணைந்து ஓர் அரங்கில் கவிபாடியதும் பேறு எனக் கருதுகிறார். அதே விழாவுக்கு தமிழக எழுத்தாளர் கு. அழகிரிசாமியும் முன்னிலை வகித்தார் என்பதும் பதிவாகிறது. வீரசேகரி பத்திரிகையின் 50வது நூற்பிரசுர கவியரங்கில் பேராசிரியர் தவத்திரு தனிநாயாகம் அடிகளார் தலைமையிலும் கவிபாடிய பெருமைக்குரியவராகிறார் பொன். பூபாலன். மறுபுறத்தில் மலைமுரசு க.ப. சிவம், கவிஞர். ஈழக்குமார், செய்தி ரா.மு. நாகலிங்கம், அதிபர் எஸ். திருச்செந்தூரன் போன்ற சமகால ஆளுமைகளுடனும் கூட சேர்ந்து இயங்கியுள்ளார் (அந்தனிஜீவா - இதயமுள்ள பாரதி. பின்னட்டை).

கண்டிப் பிரதேச பாடசாலைகள் பலவற்றில் ஆசிரியராகக் கடமையாற்றிய பூபாலன் கண்டி, தவளந்தன்ன, கந்தகெட்டிய பாடசாலையின் அதிபராகவும் பணியாற்றி ஓய்வுபெற்றவராவார். 'இதயமுள்ள பாரதி' (புரவலர் புத்தகப் பூங்கா வெளியீடு), 'கவிதை அரங்கேறும் கோலம்' ஆகிய இரண்டு கவிதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளார்.

மலையகக் கவிஞர்களுக்குள் அதிகமாகவே அங்கதச் சுவையைக் கையாண்டவர் என கவிஞர் பொன். பூபாலனை அடையாளம் காட்டமுடியும். 'இவர் கவியரங்க மேடையில் ஏறிவிட்டால் சபையில் சிரிப்புக்குப் பஞ்சம் இருக்காது' என பலரும் கூறுவதுண்டு. 1965இல் வெளியான 'குறிஞ்சிப்பூ' மலையகக் கவிஞர்களின் தொகுப்பு நூலிலும் இடம்பெற்ற இவரது கவிதை ஒன்றுக்கு 'ஊரே சிரிக்குது!' என அவரே தலைப்பிட்டுள்ளார். அந்தக் கவிதை இவ்வாறு அமைகிறது:

*ஊரே சிரிக்குது!*
*தேயிலைப் பச்சை வளர்ந்திருக்கு - அத்தை*
*வாயிலே வெத்தல சிவந்திருக்கு*
*போயிலை பையிலே காத்திருக்கு - அந்தி*
*சாயிற வேளையும் வந்திருக்கு*

*மாமன் மகளங்கு வந்திருக்காள் - ஏனோ*
*காமன் கணையினைத் தொடுத்திருக்காள்!*
*சாமம் பூராவும் நினைச்சிருக்கேன் - அவள்*
*சாயலை எண்ணியே வாழ்ந்திருக்கேன்!*

*சாயத் தண்ணியும் கொண்டுவந்தாள் - அதைப்*
*பாயசம் என்றவள் வார்க்க வந்தாள்!*
*தாயோடு சேர்த்தே குடித்து நின்றாள் - எந்தன்*
*வாயோடு சேர்த்துக் குடிப்பாளோ!*

*காயிற வாயில் சருகைப் போட்டாள் - எந்தன்*
*காயிற நெஞ்சுக் கெதனைப் போட்டாள்!*
*ஏவியே அத்தை சமைக்கச் சொன்னாள் - எந்தன்*
*ஆவியைப் போட்டா பொசுக்கச் சொன்னாள்!*

*சீமைத்துரை மகள் போல கண்ணு - என்னைத்*
*தீர்த்துக் கட்டவோ வந்த பொண்ணு!*
*ஊமை மொழியவள் பாடும் பாட்டு - இந்த*
*ஊரே சிரிக்குது ஆட்டம் பார்த்து!*

தோட்டத்துச் சூழலை நாட்டார் அழகியலுடன் எடுத்துச் சொல்லும் இவரது நடை வித்தியாசமானது.

2009ம் ஆண்டு புலவர் புத்தகப் பூங்கா வெளியிட்ட 'இதயமுள்ள பாரதி' கவிதை நூலில் 'ஆளவாங்க அண்ணாச்சி' எனும் தலைப்பில் எழுதிய கவிதை இவ்வாறு அமைகிறது:

*பத்துமணி எட்டுமணி ஆச்சு பார்*
*பாட்டாளர் சட்டபடி ஆட்சி பார்*
*பித்தரென்பார் பேயரென்பார் கலங்காதே!*
*பொதுவுடைமைக்கொடி பறக்கும் தயங்காதே!*

*பச்சை மரம் பால் சுரக்கும் நம்மாலே*
*பால் பொங்கும் பானை எங்க கையாலே*
*பச்சைத் தளிர் வடிக்கும் சாறாக!*
*புதுத் தெம்பு உடன் பிறக்கும் ஆறாக!*

*பச்சை கொழுந்து கிள்ளும் பாப்பாத்தி, நீ*
*பட்டுடுத்தி பறக்கணுன்டி ராசாத்தி!*
*புல்லு வெட்டிக் கல்லுடைக்கும் ராமண்ணே*
*புது விழியால் உலகளக்க வாங்கண்ணே!*

*உனக்கென்று ஒரு நிழலும் ஆச்சு பார்*
*உனக்கென்று உழுநிலமும் ஆக்கிப்பார்!*
*பிறருக்கென்று வாழ்வதுதான் வாழ்வாகும்*
*பிறப்புரிமை போலியென்றால் தாழ்வாகும்!*

*பண்ணைவளம் தென்னை வளம் உன்னாலே*
*பெண்கள் நலம் கண்கள் வளம் காட்சி பார்!*
*எண்ணப்படி எவரெவரோ ஆண்டாச்சு, இனி*
*எம்மையே நாம் ஆண்டிடுவோம் அண்ணாச்சி!*

என மிக எளிமையாக அரசியல் கருத்துக்களையும் மக்களுக்கான கனவாக விதைத்துள்ளார் கவிஞர் பூபாலன்.

'பூக்கட்டும் ஆயிரம் புது மலர்கள்' எனும் கவிதையிலே,

*ஆக்கிடுவோம் மலர் ஆயிரமாய் - அதில்*
*அவனிக்கு எட்டட்டும் புத்துணர்வே!*
*தாக்குப் பட்டோ மன்று தமிழரினம் - இனி*
*தலையே மலரட்டும் தாமரையாய்!*

*பூக்கட்டும் ஆயிரம் புதுமலர்கள் - அதில்*
*பொன்னென்று மின்னட்டும் மலையினொளி!*
*தேயிலைத் தேனாடும் வண்டெனவே - வையகம்*
*தேடிப்பெருகவே கை கொட்டிடுவோம்!*

என இளைய தலைமுறையை ஊக்குவிக்கும் இவரது வரிகளைப் போலவே பல நூறு மாணவர்களை உருவாக்கிய ஆசிரியர் என பேராதனைப் பல்கலைக்கழக கல்விசார் பிரதி நூலகர் இரா.-மகேஷ்வரன் தெரிவிக்கிறார் (கவிதை அரங்கேறும் கோலம் - பின்னட்டை).




'கவிதை அரங்கேறும் கோலம்' எனும் தனது நூலில், 'எழுத்தாணி ஓய்வதில்லை' எனும் கவிதையில் இவ்வாறு எழுதகிறார்.

*இனியும் எழுதுவேன்*
*இன்றும் எழுதுவேன்!*
*உயிருள்ளவரை!*
*உயிர்பிரிந்தாலும்*
*உயிர்வாழும்*
*உழைப்பின் எழுத்து!*

என எழுத்தை உயிர் மூச்சாகக் கொண்டு வாழ்ந்த கவிஞர் பொன். பூபாலன், 2022 ஜுன் மாதம் 02ம் திகதி இவ்வுலகை நீத்தார். சுமார் அறுபதாண்டுகாலம் மூன்று தலைமுறைகளிடையே ஊடாடிய கவிஞர் பூபாலனின் அர்ப்பணிப்பும், அங்கதச்சுவை நிறைந்த எழுத்தும் அவரது படைப்புகள் ஊடே மலையகக் கவிதை இலக்கியச் செல்நெறியில் அணிசேர்க்கும் என்பதில் ஐயமில்லை.

(தொடரும்...)



thilagar@thaiveedu.com

# கட்டடக்கலையின் முன்னோடி வி.எஸ். துரைராஜா

- வே. விவேகானந்தன்

ஈழத்திருநாட்டிலே தமிழ் கட்டடக் கலைஞர்களின் முன்னோடியாகத் திகழ்ந்தவர் அமரர் வி.எஸ். துரைராஜா அவர்கள். இவர் யாழ்ப்பாணம் நவாலியில் வாழ்ந்து வந்த வேலுப்பிள்ளை சுப்பையா - தங்கச்சிமுத்து இணையருக்கு, எட்டுப் பிள்ளைகளில் ஏழாவது பிள்ளையாக, எட்டாம் திகதி ஆகஸ்ட் மாதம் 1927ம் ஆண்டு பிறந்தார்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை, வரலாற்றுக் காலத்தில் பெரியபுலம் என அழைக்கப்பட்ட மானிப்பாயில், புகழ்பெற்ற கிறீன் மெமோரியல் பாடசாலையில் ஆரம்பித்தார். உயர் கல்வியை மானிப்பாய் இந்துக் கல்லூரியில் பெற்றார். இலங்கை சிலோன் என அழைக்கப்பட்ட காலத்தில், குறிப்பாக கட்டடக்கலை தொடர்பான எந்தவொரு கற்கை நெறியும் இலங்கைப் பல்கலைக்கழகத்



தில் ஆரம்பிக்கப்படாத காலகட்டத்தில், தான் ஒரு கட்டடக் கலைஞனாக வரவேண்டும் என ஆர்வம் கொண்டார். எனவே இந்தியாவில் அன்றைய பொம்பே நகரில் அமைந்திருந்த ஜேஜே கலைக் கல்லூரியில் (JJ School of Arts Bombay) 1948ம் ஆண்டு கட்டடக் கலை கற்கை நெறியில் இணைந்து கொண்டார். மூன்று ஆண்டுகள் அக்கற்கை நெறியினைப் பூர்த்தி செய்து 1951ம் ஆண்டு இலங்கை திரும்பினார்.

அதே ஆண்டு இலங்கைப் பொது வேலைகள் திணைக்களத்தில் (Public Works Department) இளநிலை கட்டடக் கலைஞராகப் பணியாற்றத் தொடங்கினார். துரைராஜா அவர்களின் திறமையை அடையாளம் கண்ட இத்திணைக்களம் அவரை, கொழும்புத் திட்டப் புலமைப் பரிசில் மூலம் உயர்கல்வி பெற, 1954ம் ஆண்டு பிரித்தானியாவுக்கு அனுப்பியது. அங்கு லண்டனில் AAS என அழைக்கப்படும் (Architectural Association School) கட்டடக்கலைக் கல்லூரியில் AA Diploma பட்டத்தையும், பட்டப்பின் படிப்பாக உலர்வலய கட்டடக் கலையினையும் பயின்று புலமைப் பரிசில் கற்கை நெறியைப் பூர்த்தி செய்தார். 1957ம் ஆண்டு இலங்கை திரும்பிய அவர் மீண்டும் பொது வேலைகள் திணைக்களத்தில் கட்டடக் கலைஞராகப் பணிபுரியத் தொடங்கினார். எட்டு ஆண்டுகள் பணியாற்றிய அவர், அக்காலகட்டத்தில் அரசுப் பணியாளர்கள் சிங்கள மொழியில் கட்டாயம் தேர்ச்சி பெற வேண்டும் என்ற அரசின் கொள்கையை விரும்பாது அரசுப்பணியிலிருந்து விலகி 1964ம் ஆண்டு 'துரைராஜா அசோசியேட்ஸ்' (Thurairajah Associates) என்னும் தனது சொந்த நிறுவனத்தை உருவாக்கினார். இந்த நிறுவனம் கட்டடவடிவமைப்பு ஆலோசக நிறுவனமாக செயற்படத் தொடங்கியது.

இலங்கையிலும் இந்தியா, மத்திய கிழக்கு நாடுகள், அவுஸ்திரேலியா போன்ற வெளி நாடுகளிலும் பல அரச தனியார் கட்டடங்களைக் கலைநயத்தோடு வடிவமைத்த பெருமை இவரைச் சாரும். யாழ்ப்பாணம் நவீன சந்தை, தந்தை செல்வா நினைவுத்தூபி, கைதடி வயோதிபர் இல்லக் கட்டடம், யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடம், விஞ்ஞானபீடக் கட்டடம், நுண்கலைப்பீடக் கட்டடம், சுபாஸ் உணவகம், யாழ். மாநகரசபை விளையாட்டரங்கு, வீரசிங்கம் மண்டபம், பம்பலப்பிட்டி பிள்ளையார் கோயில், அகில இலங்கை இந்து மாமன்றம், விவேகானந்த சபை, இராமகிருஸ்ண மண்டபம், கொழும்பு தமிழ்ச் சங்கம் போன்ற கட்டடங்களை அழகுற வடிவமைத்துக் கொடுத்தார்.

துரைராஜா அவர்கள் பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் கட்டடக்கலை வடிவமைப்புத் தொடர்பாகப் பல கட்டுரைகளை எழுதியுள்ளார். 1973 முதல் 1975 வரை ஈழநாடு பத்திரிகை நிறுவனத்தின் தலைவராகப் பணியாற்றினார். Architecture and Arts in Ceylon என்னும் காலாண்டு சஞ்சிகையினை 1975 முதல் 1983 வரை பதிப்பித்தார்.

யாழ்ப்பாணத்தின் மிக உயர்ந்த அடையாளங்களில் ஒன்றாக விளங்கிய யாழ். பொதுசன நூலகம் 1981ம் ஆண்டு ஜுன் மாதம் முதலாம் திகதி சிங்களக் குண்டர்களால் தீக்கிரையாக்கப்பட்ட போது மிகவும் வேதனை அடைந்த அவர் அதன் மீள் நிர்மாணத்துக்கு ஆற்றிய பணி அளவிடற்கரியது. அரசாங்கத்தின் உதவியை எதிர்பாராது தனது தனிப்பட்ட செலவில் பல பணிகளைச் செய்தார். யாழ். நூலகத்தின் வரலாற்றை The Jaffna Public Library Rises From Its Ashes என ஆங்கிலத்தில் எழுதி, நூலாக வெளியிட்ட துரைராஜா, அந்நூலின் விற்பனை மூலம் கிடைத்த நிதி

அனைத்தையும் அந்நூலகத்துக்கே எழுதிக் கொடுத்தார். இந்நூல் இலங்கையில் மட்டுமின்றி அவுஸ்திரேலியா, கனடா போன்ற நாடு களிலும் வெளியிடப்பட்டன. அத்துடன் இதே நூலை, பிரபல எழுத்தாளர் காவலூர் ராஜதுரையைக் கொண்டு 'யாழ். பொது நூலகம் அதன் சாம்பலில் இருந்து எழுகின்றது' எனத் தமிழிலும் மொழிபெயர்த்து நூலாக வெளியிட்டார். துரைராஜா அவர்கள் தான் நூல்களை எழுதியதோடு மட்டுமின்றி ஏனையவர்களையும் நூல்களை எழுத ஊக்கமளித்தார். குறிப்பாக இவர் அளித்த உற் சாகத்தினால் மறவன்புலவு க. சச்சிதானந்தன் அவர்கள் 'எனது யாழ்ப்பாணமே' என்னும் நூலை எழுதினார். இந்நூல் 1974ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற அனைத்துலக தமிழா ராய்ச்சி மகாநாட்டு நிகழ்வுகளின் தொகுப்பாக அமைந்தது.

ஈழம் தந்த மூத்த கட்டடக் கலைஞரான துரைராஜா அவர்கள் தமிழ் மொழி மீதும் அளவிலாப் பற்றுக் கொண்டவர். இலங்கை, இந்தியா, மலேசியா, பிரான்ஸ் போன்ற நாடுகளில் தமிழாராய்ச்சி மகாநாடுகளை நடத்தி வந்த, அனைத்துலக தமிழாராய்ச்சி மன் றத்தினது இலங்கைக் கிளையின் செயலாளராகப் பணியாற்றி மகாநாடுகளை நெறிப்படுத்தினார். நான்காவது தமிழாராய்ச்சி மகாநாட்டுக் குழுவில் இடம்பெற்ற இவர், அந்த மகாநாடு யாழ்ப் பாணத்தில் நடைபெற வேண்டும் என்பதில் தீவிரமாக செயற்பட் டார். தனது கட்டடக்கலை செயலகத்தினை மகாநாட்டுச் செயலக மாக செயற்பட உதவினார்.

கலைகளில் மிகவும் ஈடுபாடு கொண்ட துரைராஜா அவர்கள் யாழ்ப்பாணத்துக்குரிய சமூகப் பிரச்சினைகளை கருப்பொருளாகக் கொண்டு, யாழ்ப்பாணத்துப் பேச்சு வழக்கில் 1972ம் ஆண்டு 'குத் துவிளக்கு' என்னும் திரைப்படத்தினைத் தயாரித்தார். ஈழத்துக் கலைஞர்களை ஊக்குவிக்க வேண்டும் எனக் கருதி அவர்களை இணைத்துக் கொண்டார். அத்துடன் இலங்கையிலேயே படப்பிடிப் பையும் மேற்கொண்டார். நல்லூர்க் கந்தசாமி கோயில், செல்வச் சந்நிதி முருகன் கோயில் திருவிழாக் காட்சிகளை ஒளிப்பதிவு செய்து படத்துடன் இணைத்தார். யாழ்ப்பாணத்தில் வின்சர் படமா ளிகையில் இத்திரைப்படத்தின் வெளியீட்டு விழா கோலாகலமாக நடைபெற்றதையடுத்து, இலங்கையில் ஆறு நகரங்களில் திரையி டப்பட்டது. யாழ். மாவட்டத்தில், சுன்னாகம் நகரில், 100வது தினத் தைக் கொண்டாடிய முதலாவது இலங்கைத் தமிழ் திரைப்படம் என்னும் பெயரைக் 'குத்துவிளக்கு' பெற்றுக் கொண்டது. 35 வரு டங்களின் பின்னர் அதனை இறுவட்டு வடிவிலும் வெளியிட்டார். இத்திரைப்படத்தின் வரலாற்றை தம்பிஜயா தேவதாஸ் என்பவர் 'குத்துவிளக்கு மீள்வாசிப்பு' என்னும் பெயரில் நூலாக எழுதி வெளியிட்டார். மேலும், 'இலங்கை திரையுலக சாதனையாளர்கள்', இலங்கைத் திரையுலக முன்னோடிகள்' ஆகிய இரு நூல்களில் துரைராஜா அவர்களின் திரைப்பட முயற்சிகள் குறித்து விபரமாக எழுதியுள்ளார்.

சிறு வயதிலேயே தந்தையாரை இழந்த துரைராஜா அவர்கள் பல் வேறு சிரமங்களையும் சவால்களாக ஏற்று, கட்டடக்கலைத் துறை யில் உச்சம் தொட்டார். இலங்கை, இந்தியா, பிரித்தானியா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளின் அரச கட்டடக்கலை நிறுவ னங்கள், தங்கள் அமைப்புசாரா அங்கத்தவராக (Fellow) ஏற்று அவரை கௌரவித்துள்ளன. அவுஸ்திரேலியாவுக்குக் குடிபெ யர்ந்து சிட்னி நகரில் வாழ்ந்தபோது, அங்கும் தனது கட்டடக் கலை வடிவமைப்புப் பணியைத் தொடர்ந்தார்.

இலங்கையின் மூத்த தமிழ் கட்டடக் கலைஞர், தமிழ்ப் பற்றாளர், பதிப்பாசிரியர், நூலாசிரியர், திரைப்படத் தயாரிப்பாளர் எனப் பன்முக ஆளுமை கொண்ட வி.எஸ். துரைராஜா அவர்கள் 2011ம் ஆண்டு, டிசம்பர் 14ம் திகதி அவுஸ்திரேலியாவில் சிட்னி நகரில் அமரத்துவம் அடைந்தார். அவரால் கலை நுட்பத்துடன் வடிவ மைத்துக் கட்டப்பட்ட வானுயர்ந்த அழகிய கட்டடங்கள் அவரது நாமத்தை என்றும் நிலை பெறச் செய்யும்.



vivekananthan.v@thaiveedu.com

DEBT FREE CREDIT SOLUTION

Seeking freedom from DEBT?
We offer Total Debt
FREE SOLUTIONS



Elankeeran .T
Certified Insolvency Counsellor
By Canadian Association of Insolvency and Restructuring Professionals (CAIRP)

- கடன் தொகையினை 80% வரை குறைத்து அதனை வட்டியின்றி ஒரு மாதத் தவணையில் கட்ட ஏற்பாடு செய்தல்.
  We provide expert advice on how to consolidate and reduce debt payments safely without borrowing money.
- பாதுகாப்பான முறையில் கடனை அடைப்பது பற்றிய அறிவுரையும் ஆலோசனையும் தரப்படும்.
  We shield you from your creditors and offer you a guranteed protection.

SETTLEMENT
CONSUMER PROPOSAL
BANKRUPTCY

Cell. 416.834.7227 Fax. 1.877.800.789
Tel. 416.434.1522 freedebt.toro@gmail.com

Head Office:
10 Milner Business Court, Suite 334
Toronto, ON. M1B 3C6

Branch Office:
101 Palstan Road
Mississauga, ON. L4Y 4E7

www.TotalDebtFree.ca

# ரெஜினால்ட் செபரட்ணம் தம்பையா யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதல் நூலகர்

- என். செல்வராஜா

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதலாவது நூலகர் என்ற வகையிலும், இலங்கை நூலகச் சங்கத்தின் ஸ்தாபக முன்னோடி என்ற வகையிலும் அமரர் ஆர்.எஸ். தம்பையாவின் (ரெஜினால்ட் செபரட்ணம் தம்பையா) பெயர் ஈழத்துத் தமிழ் நூலகவியல் வரலாற்றில் நிரந்தரப் பதிவாகியுள்ளது.

அமரர் ஆர்.எஸ். தம்பையா (2.2.1927 - 7.6.2020) அவர்கள் மலையகத் தலைநகர் கண்டியில் பிறந்தவர். நான்கு வயதிலேயே தன்



அன்னையை இழந்தவர். அதன் பின் தந்தையாரின் ஊரான அச்சுவேலிக்குத் திரும்பி, அங்கே அவரது தமக்கையின் அரவணைப்பில் இறைபக்தியுள்ள குடும்பப் பின்னணியில் வளர்ந்து வந்தார். அவரது சகோதரி மேபல் தம்பையா, யாழ். வேம்படி மகளிர் கல்லூரியின் அதிபராக நீண்டகாலம் பணியாற்றி ஓய்வுபெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. மேலைத்தேய வெஸ்லியன் மிசனரிமாரின் ஆதிக்கத்திலிருந்த அதிபர் பதவியை தனதாக்கிக்கொண்ட முதலாவது சுதேசிய அதிபராக இவர் மதிக்கப்படுகின்றார்.

ஆர்.எஸ். தம்பையா அவர்கள் தனது ஆரம்பக் கல்வியை சென். ஜோன்ஸ் கல்லூரியில் பெற்ற பின்னர் மட்ராஸ் பிரஸிடென்சி கல்லூரியில் உயர்கல்வியைப் பெற்றுத் திரும்பினார். அதன் பின்னர் 1955ல் புவியியல் ஆசிரியராக வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் இணைந்து, சில காலத்தின் பின்னர் நூலகத்துறையின்பால் கொண்ட ஈடுபாடு காரணமாக, யாழ்ப்பாணக் கல்லூரியின் நூலகராகவும் பணியாற்றியுள்ளார். வட்டுக்கோட்டையில் அவர் பணியாற்றிய வேளையில் 1957-1958 காலகட்டத்தில் நூலகத்துறைக்கான தனது எம்.ஏ. பட்டத்தையும் ஐக்கிய அமெரிக்காவின் இல்லிநொய்ஸ் (Illinois) பல்கலைக்கழகத்தில் பெற்றுக்கொண்டார். 1958ல் பட்டப் படிப்பிற்காக அமெரிக்காவில் தங்கியிருந்த வேளையில் 1958ல் 'மதம்சார் அரங்கியல்' பாடத்துறையில் நியூயோர்க்கிலுள்ள Union Theological Seminary in New York என்ற கல்வி நிறுவனத்தில் பயின்று தேர்ச்சி பெற்றார். அரங்கியல்துறையின்பாற் கொண்ட இவரது ஈடுபாடு பின்னாளில் பல ஆங்கில தமிழ் நாடகங்களை இவர் மேடையேற்ற வழிவகுத்தது.

1966-1968 காலகட்டத்தில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் ஓராண்டு விடுப்புப் பெற்று அமெரிக்காவுக்குச் சென்று அங்குள்ள கன்ஸாஸ் பல்கலைக்கழகத்தில் (Kansas University) புவியியல் பாடத்தை கற்பித்ததுடன், அப்பல்கலைக்கழகத்தின் தென் ஆசியப் பிரிவின் நூலகராகவும் சிறிதுகாலம் பணியாற்றியிருந்தார். அதுவே பின்னாளில் கல்லூரி நூலகராக இருந்த இவரது கவனத்தை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை நோக்கித் திருப்பியிருந்தது.

1972ல் இலங்கை சுதந்திரக் கட்சி வெற்றிபெற்று சிறிமாவோ பண்டாரநாயக்கா பிரதமரான பின்னர் 1974ம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகமொன்றை நிறுவினார். வட்டுக்கோட்டையில் உள்ள யாழ்ப்பாணக் கல்லூரி வளவிலமைந்துள்ள வெளிநிலைப் பட்டப்படிப்புகள் அலகினையும் (Undergraduate Section) 1921ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் சேர். பொன்னம்பலம் இராமநாதனால் திருநெல்வேலியில் அமைக்கப்பட்டிருந்த பரமேசுவராக் கல்லூரியையும் இணைப்பதன் மூலம் 1.8.1974 அன்று இலங்கைப் பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண வளாகம் நிறுவப்பட்டது. கலாநிதி க. கைலாசபதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதல் தலைவராக நியமிக்கப்பட்டார். ஆரம்பத்தில் விஞ்ஞான பீடம், மனிதப் பண்பியற் பீடம் என்பவற்றுடன் மாத்திரம் ஆரம்பிக்கப்பட்ட யாழ்ப்பாண வளாகத்தின் முதல் போதனைசார் ஊழியர்களாக 1974 செப்ரெம்பர் 1ம் திகதியன்று வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் பணியாற்றிய சில ஆசிரியர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

யாழ்ப்பாணக் கல்லூரி வெளிநிலைப் பட்டப்படிப்புகள் அலகின் நூலக வளங்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்திற்குள் உள்வாங்கப்பட்ட வேளை ஆர்.எஸ். தம்பையாவும் யாழ்ப்பாணக் கல்லூரியிலிருந்து நீங்கி, பல்கலைக்கழக நூலகர் பதவியை பெற்றுக்கொண்டார். ஆரம்ப காலத்தில், பரமேஸ்வராக் கல்லூரியில் தற்காலிகமாக ஒரு கட்டடத்தில் மனிதப் பண்பியல் பீடத்திற்கான நூலகமும், வட்டுக்கோட்டையில் அறிவியல் பீட நூலகமும் ஆரம்பிக்கப்பட்டன. பல்கலைக்கழக கல்வித் தகுதி அடிப்படையில் அவருக்கு பதில் நூலகர் தரத்திலேயே பணியாற்ற முடிந்தது. அங்கு அவர் 1974-1981 காலகட்டத்தில் பணியாற்றி பல்கலைக்கழக நூலகமொன்றின் ஆரம்பகட்ட கட்டமைப்பினை வெற்றிகரமாகச் செய்துமுடித்தார். இவரது காலத்திலேயே யாழ். பல்கலைக்கழக நூலகம் விஞ்ஞான பீடத்திற்கும் கலைப்பீடத்திற்கும் நடு

வில் பார்வதி பரமேஸ்வரன் ஆலயத்திற்கு தென்மேற்கில் இராம நாதன் வீதியை நோக்கி அமைந்த இடத்தில் 1980ம் ஆண்டில் அடிக்கல் நாட்டப்பட்டு 2000ம் ஆண்டளவில் 67,718 சதுர அடிகள் கொண்ட சதுர நிலப்பரப்பில் கட்டி முடிக்கப்பட்டது. நவீன நூல கக் கட்டடத்தில் சேவையாற்றும் வாய்ப்பினை ஆர்.எஸ். தம்-பையா அவர்கள் பெற்றிராத போதிலும், வரையறுக்கப்பட்ட நிதி, ஊழியர் வசதிகளுடன் ஒரு பல்கலைக்கழகத்திற்கான அறிவியல் சேர்க்கையை உள்ளடக்கிய ஆரம்பகட்ட அடிப்படை கட்டமைப் பினை வெற்றிகரமாக ஏற்படுத்தியிருந்தார். பரமேஸ்வராக் கல்லூரி யில் சேர். பொன். இராமநாதன் அவர்களின் நூலகத்தில் இருந்த அரிய நூல்களையும் யாழ்ப்பாணக் கல்லூரி நூலகம் கொண்டி ருந்த 30,000 வரையிலான நூல்களையும் மேலும் பருவ இதழ்கள், அரச ஆவணங்கள், சிறு பிரசுரங்கள் போன்றவற்றையும் கொண்டு யாழ். வளாகம் தன் நூலகச் சேர்க்கைகளைக் கட்டியெழுப்பத் தொடங்கியது. நூலக சேர்க்கையையும் தளபாட வசதியையும் படிப்படியாக வளர்த்துச் சென்று பின்னாளில் பிரதம நூலகராகப் பதவியேற்ற சி. முருகவேள் அவர்களிடம் ஒப்படைத்துவிட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலிருந்து அவர் விலகிக்கொண் டார்.

பல்கலைக்கழக நூலகராகப் பணியாற்றிய வேளையில் யாழ்ப்பா ணப் பொது நூலக ஆலோசகர் குழுவிலும் 70களில் அவர் சேவையாற்றி வந்தார்.

அவர் பல்கலைக்கழகத்தில் இணையும் வேளை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் நூலகச் சேர்க்கைகளின் பெரும்பகு தியை பல்கலைக்கழகம் உள்ளீர்த்துக் கொண்டதால், யாழ்ப்பா ணக் கல்லூரி நிர்வாகம் அவற்றைத் திரும்பிப் பெற இலங்கை அரசாங்கத்துடன் நீண்டகாலம் போராடி 1980ல் தமது நூற்சேர்க் கையின் ஒரு பகுதியை மட்டும் மீளப்பெற்றுக்கொண்டது. இக்கால கட்டத்தில் திரு. ஆர்.எஸ். தம்பையா அவர்கள் யாழ்ப்பாணக் கல் லூரியின் பல நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து வந்ததை அவ ரது நூலகவியல்துறைப் பிரிவின் மாணவர்களாகப் பயின்றுவந்த அவ்வேளையில் அவர் எம்மிடம் வருத்தத்துடன் பகிர்ந்துகொண்டி ருந்தார்.

திருநெல்வேலியில் இருந்த அவரது இல்லத்தின் பெயர் 'ஷாலொம்' என்பதாகும். எனது நூலகவியல் இடைநிலைப் பரீட் சைக்கான ஆய்வுத் தேவைக்கென நான் தயாரித்த யாழ்ப்பாணக் கல்லூரி ஆண்டுமலர்களின் கட்டுரை வழிகாட்டி ஃசுட்டி (Jaffna College Miscellany) தயாரிப்புப் பணியில் அவரையே எனது வழி காட்டியாக இலங்கை நூலகச் சங்கம் நியமித்திருந்தது. அதன் காரணமாக அடிக்கடி அவரது இல்லத்துக்கு நான் சென்று வர வேண்டியிருந்தது. அழகான உள்ளக அலங்கரிப்புடன், கிறிஸ்தவ மதச் சின்னங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்த அந்த வீட்டுக்கு அன்புடனும் ஆதரவுடனும் என்னை வரவேற்று உபசரித்து வந் தார். அவரது 'ஷலோம்' இல்லத்துக்குச் செல்லும் வாய்ப்புக் கிட் டிய எவருக்கும் அவரது தீவிரமான மத நம்பிக்கை துலக்கமாகத் தெரிந்திருக்கும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலிருந்து 1981ல் நீங்கிய ஆர்.-எஸ். தம்பையா அவர்கள், நைஜீரியாவுக்குச் சென்று அங்கு Maiduguri பல்கலைக்கழகத்தில் (University of Maiduguri, Nigeria) 1981 முதல் 1995 வரை நூலகவியல் தகவல் விஞ்ஞானத்து றையில் விரிவுரையாளராகப் பணியாற்றிவந்தார். 1995ல் பணியிலி ருந்து ஓய்வுபெறும் வேளையில் அவர் அப்பல்கலைக்கழகத்தின் நூலகவியல் தகவல் விஞ்ஞானத் துறைத் தலைவராகப் பணியாற் றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நைஜீரியாவில் 1995ல் பணி ஓய்வுபெற்றதும் பிரித்தானியாவுக்கு வந்து தனது குடும்பத்தினருடன் தனது ஓய்வு காலத்தினை அமை தியாகக் கழித்துவந்தார்.

யாழ்ப்பாணக் கல்லூரியில் பணியாற்றிய காலத்திலும், யாழ்ப்பா ணப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய காலத்திலும் பின்னர் நைஜீரியாவில் நூலகவியல்துறை விரிவுரையாளராகப் பணியாற் றிய காலத்திலும் அமரர் ஆர்.எஸ். தம்பையா அவர்கள் தனது பெயரில் துறைசார்ந்த நூல்கள் எதனையும் வெளியிட்டிராதது ஒரு பெரும் குறையாகும். குறைந்தபட்சம் யாழ்ப்பாணப் பல்கலைக்க ழகத்தின் வரலாற்றையாவது, அதன் ஆரம்பகால உள்வீட்டுப் பிள்ளை என்ற வகையில் பதிவுசெய்து வைத்திருந்திருக்கலாம். குறிப்பிடத்தகுந்த ஓரிரு கட்டுரைகளை மட்டுமே துறைசார்ந்து அவர் எழுதியிருக்கிறார் என அறியமுடிகின்றது. நூலக தகவல் விஞ்ஞானக் கலைக்களஞ்சியத் தொகுப்பில் (Encyclopedia of Library and Information Science published by M.Dekkar. New York) இவர் எழுதியிருக்கும் 'Chain Indexing' என்ற கட்டுரை வாயிலாக இவரது பெயர் நூலகவியல்துறை மாணவர்களிடையேயாவது நின்று நிலைத்திருக்கும்.

ஓய்வுகாலத்தில் தனது குடும்பத்தினருடன் நெருக்கமாக வாழ்ந்து வந்ததுடன், தான் சார்ந்த கிறிஸ்தவ சமூகத்தினருடன் லண்டனில் நெருங்கிய உறவைப் பேணிவந்தார். இவரது துணைவியாரை (தவம்) இவர் டிசம்பர் 1956ல் கரம் பற்றினார். திருமதி தம்பையா அவர்களும் யாழ்ப்பாணக் கல்லூரியில் 1955ம் ஆண்டு முதல் இல்லப் பொருளியல் ஆசிரியையாக பணியாற்றி ஓய்வுபெற்றவர். தன் கணவருடன் 1966-1968 காலகட்டத்தில் அமெரிக்காவுக்குச் சென்றிருந்த வேளையில் இவரும் அங்குள்ள கன்ஸாஸ் பல்க லைக்கழகத்தில் இல்லப் பொருளியலில் தனது எம்.ஏ. பட்டத் தைப் பெற்றிருந்தார். பின்னர் திரு. தம்பையா அவர்கள் நைஜீரி யாவில் பணியாற்றிய காலத்திலும் அங்குள்ள ஆசிரிய பயிற்சிக் கான உயர் கல்லூரியிலும் இல்லப் பொருளியல் ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார்.

ஓய்வின் பின்னர் லண்டனில் மகளின் குடும்பத்தினருடன் வாழ்ந்து வருகிறார். இவர்களுக்கு காயத்திரி, வைதேகி, டானியல் ஜெபகு-மார் ஆகிய மூன்று பிள்ளைகள் உள்ளனர். மூத்தவரான மேரி காயத்திரி தர்மச்சந்திரன் வேல்ஸ் (University of Aberystwyth) பல் கலைக்கழகத்தில் பட்டப் பின்படிப்பை பூர்த்தி செய்தபின் லண்ட னில் தனது கணவர், இரு ஆண் பிள்ளைகளுடன் வாழ்ந்து வருகி-றார். இரண்டாவது மகளான கிரேஸ் வைதேகி மத்தியூ, லிவர்பூல் பல்கலைக்கழகத்தில் தனது கலாநிதிப் பட்டத்தைப் பெற்று தற் போது ஐக்கிய அமெரிக்காவில் தனது கணவர், இரண்டு பிள்ளை-களுடன் வாழ்ந்து வருகிறார்.

அவர்களது மகன் டானியல் ஜெபக்குமார் தனது பட்டப்பின் படிப்பை ரெடிங் பல்கலைக்கழகத்தில் (University of Reading England) பூர்த்தி செய்தபின்னர் தன் குடும்பத்தினருடன் அவுஸ்தி-ரேலியாவில் வாழ்ந்து வருகிறார்.

அமரர் ஆர்.எஸ். தம்பையாவின் இறுதிக் காலத்தில் நூலகப்ப ணிகளைவிட அவரிடம் தான் சார்ந்த கிறிஸ்தவ, சமூக நிறுவனங் களுடன் இணைந்து மேற்கொண்ட சமயம் மற்றும் சமூகம் சார்ந்த பணிகளே முனைப்புப் பெற்றிருந்தன.

லண்டனில் வாழ்ந்த வேளையில் தமிழ் அகதிகள் நலன் சார்ந்த மொழிபெயர்ப்புப் பணிகளில் தன் வாழ்வை பயனுறு வகையில் கழித்து வந்துள்ளார். வெளிநாட்டு அகதிகளுக்காக ஆங்கில வகுப்புகளையும் சமூக அமைப்புகளுடன் இணைந்து நடத்தி வந் துள்ளார்.

அவரை நீண்டகாலத்திற்குப் பின்னர் 2019ல் ஜுன் 1ம் திகதி லண் டன் ஈலிங் கனகதுர்க்கை அம்மன் ஆலய மண்டபத்தில் ஒரு நூல் வெளியீட்டு விழா மேடையில் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டியிருந் தது. அன்று அவருடன் உரையாடிய பொழுதில் 1979ல் யாழ்ப்பா ணத்தில் அவரது நூலகவியல் துறை மாணவனாக இருந்ததையும், எனது இடைநிலைப் பரீட்சைக்கான ஆய்வேடான Jaffna College Miscellany யின் நெறிப்படுத்துநராக அவர் பணியாற்றியிருந்ததை யும் நினைவூட்டியிருந்தேன். அவரது ஆழ்நினைவுகளை மீட்டெ டுப்பதில் அவர் மிகுந்த சிரமப்படுவதை என்னால் உணர முடிந் தது. அவர் இன்னும் இரண்டு வருடங்களில் எம்மைவிட்டுப் பிரிந் துவிடுவார் என்று எள்ளளவும் நான் கருதியிருக்கவில்லை. அமரர் ஆர்.எஸ். தம்பையா மறையும் வேளை அவருக்கு வயது 93.



selvarajah.n@thaiveedu.com




# கொடியில் தலைசீவி நடந்த இளந்தென்றலே!

**- தேவகி ரமேஸ்வரன்**

எண்பத்தேழு நடுப்பகுதியில் ஒருநாள் இரவு. செவிப்பறைகளைத் தாக்கின பேரதிர்வுகள். வானவேடிக்கைகளாகக் குண்டுகளின் ஒளி வீச்சுகள். பேரவலம் ஒன்றின் ஒத்திகை! நாங்கள் கலங்கினோம். என்ன செய்வது? எங்கே போவது? ஆசைமாமா (தெணியான்) வந்தார். அவர்தான் முடிவெடுப்பார். ‘அல்வாய்க்குப் போவோம்’ என்றார். அன்ரிமார், பெரியமாமா, ஆசைமாமா, நாங்கள் எல்லோரும் மூட்டை முடிச்சுகளுடன் அல்வாயில் தஞ்சமடைந்தோம். எங்கள் பேர்த்தியாரின் பூர்வீக நிலம் அது. அப்பாவின் பிறப்பிடமும் அங்கேதான். தொடர்ந்து ஓரிரு நாட்கள்மட்டுமே அங்கே தங்கமுடிந்தது. சுற்றியிருந்தவர்கள் எல்லாரும் புறப்பட்டு, வெவ்வேறிடங்க



ளுக்குத் தப்பி ஓடிப்போனார்கள். மாமா ஆழ்ந்து யோசித்தார். 'யாழ்ப்பாணம் போவம்' என்றார். மீண்டும் பயணம் தொடர்ந்தது. கால் நடையாக. தலைக்குமேல் உலங்கு வானூர்தி சுற்றியது. மரணபயம். கிலிகொண்ட நெஞ்சங்கள். வரிசையாகப் போனோம். நவிண்டில் கடந்து உடுப்பிட்டி வீதியில் ஒரு வீட்டில் தண்ணீர் வாங்கிக் குடித்தோம். நாம் சென்ற சில மணி நேரத்தில் அவ்வீட்டில் துப்பாக்கிகள் கோரத்தாண்டவமாடின.



ஆசைமாமாவின் சையிக்கிள் சத்தம் எமக்குத் தெரியும். மாமா வருவார். ஷேர்ட்டைக் கழற்றி சுவரிலுள்ள மான்கொம்பில் கொழுவுவார். தன் தங்கைமாரோடு பலதும் பத்தும் கதைப்பார். அவர் பேச்சில் மனிதர்கள் வருவார்கள். சம்பவங்கள் விபரிக்கப்படும். இடையிடையே ஏச்சும் பேச்சும்கூட இருக்கும். சின்னப் பருவத்தில் எங்கள் பொலிஸ், மாமாதான். எங்கள் குழப்படிகள் கூடிப்போனால் உடனே மாமாவுக்குச் செய்தி போகும். ஆனாலும் மாமா எம்மீது மிகுந்த அன்புடையவர். 'ஆச்சி' என்றுதான் சொல்லுவார். எனக்கு நல்ல ஞாபகம், எனது முதற் குழந்தைப்பேறு சிக்கல் மிகுந்ததாக இருந்தபோது ஆஸ்பத்திரிக்கு வந்த மாமா, நான் பிரசவவேதனையுடன் போராடிக் கூக்குரலிட்டு ஓவென்று அழுததைக் கேட்டுத் தாங்கமுடியாமல் தவித்து, வீடு திரும்பியிருந்தாராம். என்

அம்மாமீது அவருக்குத் தனிப்பிரியம். 'தங்கச்சி' என்று கூப்பிடும் விதமே தனியழகு. ஆசைமாமா பட்டிமன்றப் பேச்சாளராகக் காற்றோடு சமர்புரிந்த காலங்களில், இரவு நெடுநேரம்கடந்து வீடு திரும்புவார். அந்நேரங்களிலெல்லாம் அவரது சையிக்கிளின் பின்னே மெதுவாக எந்தவித அசுமாத்தமும் இல்லாமல் இருட்டில் ஒரு சையிக்கிள் பின்தொடர்ந்து ஊர்ந்துவரும். அது பெரியமாமாவின் சையிக்கிள். தன் தம்பியின் பாதுகாப்பில் பெரியமாமாவுக்கு அவ்வளவு கவனம்.

எனது சின்னமாமா (க. நவம்) கல்வித்துறையில் மேலெழுந்ததோடு, எழுத்துத்துறையிலும் கால் பதிக்கத் தொடங்கியமை கண்டு ஆசைமாமா பெருமைகொண்டார், தன் தம்பி நிறையவே சாதிக்கவேண்டும் என்று கனவுகண்டார். சின்னமாமா தனது 'நான் காவது பரிமாணம்' என்ற வெளியீட்டின் ஊடாக 'மரக்கொக்கு' நாவலை வெளியிட்டிருந்தார். 'குடிமைகள்' நாவல் இந்தியாவில் வெளிவருவதற்கும், 'பார்க்கப்படாத பக்கங்கள்' (2014) கட்டுரைத் தொகுப்பு ஊரில் வெளிவருவதற்கும் காரணமாய் இருந்தார். எண்பதுகளின் நடுப்பகுதியில் 'கழுகுகள்' நாவலின் கையெழுத்துப்பிரதி தமிழ்நாட்டுப் பிரசுரகளமொன்றில் கிடந்து இழுபறிப்பட்டபோது, அப்போது தமிழ்நாட்டில் வசித்துவந்த அத்தையின்(சியாமளா நவம்) அயராத தொடர் முயற்சியின் உதவியுடன் அதனை மீட்டெடுத்து அது நூலாக வெளிவர உதவியிருந்தார். தன் அண்ணனின் ஆர்வங்களிலும் ஈடுபாடுகளிலும் சின்னமாமாவுக்கு அவ்வளவு அக்கறை!

1994ல் சின்னமாமா கனடாவிலிருந்து குடும்பத்தோடு கொழும்பு வந்திருந்தார். அவ்வேளையில் அவர்களைப் பார்க்க ஆசைமாமா தலைமையில் ஐந்து சகோதரர்களும் உயிரைப் பணயம்வைத்து கிளாலிப்பாதை தாண்டிக் கொழும்பு புறப்பட்டுச்சென்றார்கள். 10 வருடங்களின்பின் பார்க்கக் கிடைத்த சின்ன மாமாவைச் சுற்றியிருந்து 'மலர்ந்தும் மலராத' என்ற பாசமலர்ப் பாடலை அவர் பாடக்கேட்டு, கலங்கிய கண்களோடுதான் ஊர் திரும்பி வந்தார்கள். சகோதரபாசம் என்பதை இவர்களைப் பார்த்துத்தான் நாங்கள் கற்றுக்கொண்டோம்.

ஆசைமாமாவின் எழுத்துலகம் நின்று நிதானித்துத் தொடர என்றும் துணைநின்றவர் மாமிதான். மாமியின் பெயர் மரகதம். எனக்குத் தெரிந்த முதற் கம்பராமாயணப் பாடல் 'வெய்யோனொளி தன்மேனியின்...' என்பதுதான். அதில்தான் 'மையோ மரகதமோ மறிகடலோ மழைமுகிலோ...' என வருகிறது. இதுவும் மாமா சொல்லித்தான் எனக்குத் தெரியவந்தது. குடும்பச்சுமையைத் தனியே சுமந்தவர் மாமி. மாமாவின் வீட்டுக்குச் சென்றால் அவர்கள் இருவருக்கும் இடையிலான கேலியும் கிண்டலும் கலந்த உரையாடல்களைக் கேட்டு மகிழ்வோம். மிக்க அந்நியோன்யமான வாழ்க்கை அவர்களுடையது.

மாமா துன்பம் கண்டு துவண்டுபோகும் ஒருவரல்ல. கலங்குவார். மறுநொடியே நிதானிப்பார். மற்றையவரையும் தேற்றுவார். இடம்பெயர்வுக் காலங்களிலெல்லாம் மாமா நிறையவே கலங்கி இருந்தவர். ஆனாலும் செட்டைக்குள் வைத்துக் காக்கும் தாய்க்கோழியாய் எம்மைக் காத்தவர்.

எங்கள் வீடு 'தெணியகம்'. 1950களில் கட்டப்பட்ட வீடு. இன்று பழையவீடு. அதனருகில் புதியவீடு ஒன்றைக் கட்டியுள்ளோம். புதியவீடு மாமாவுக்குத் தெரியாது. அவ்வீட்டின் புதுமனை புகுவிழாவிற்கு ஆசைமாமாவைச் சென்று அழைத்துவர எண்ணியிருந்தேன்.

இன்று அவ்வெண்ணமிழந்தேன்.

ஆசைமாமாதான் இப்போது இல்லையே!



info@thaiveedu.com

# ‘தெணியான்’ கந்தையா நடேசன்

**- அ. சண்முகதாஸ்**

ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றில் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம், யாழ்ப்பாணம் கரவெட்டி இலக்கியப் புல மைக்குழு என்னும் இரண்டையும் நாம் அறிவோம். இவை இரண் டையும் சார்ந்தவர் தெணியான் என்னும் ஈழத்து மூத்த தமிழ் எழுத் தாளர். ‘பொற்சிறையில் வாடும் புனிதர்கள்’ என்னும் அவருடைய எழுத்துருவை நான் படித்தபோது தெணியானுடைய சமூக இலக்கி யப் போக்கினை நன்கு விளங்கிக்கொள்ளக்கூடியதாக இருந்தது.

டொமினிக் ஜீவா, டானியல், தெணியான் ஆகிய மூவரும் ஒரே காலத்தில் சமூக விடுதலைக்காகத் தம் எழுத்தினைப் பயன்படுத் தியவர்கள். மற்றவர்கள் தாழ்ந்த சாதியினராகக் கருதிய குழுவுக் குள், ‘பொற்சிறையில் வாடிய புனிதர்’களையும் அடக்கித் தன் இலக்கியப் பார்வையைப் பரவவிட்டவர் தெணியான். ஈழத்துத் தமிழ்ச் சமுதாய அமைப்பினை, குறிப்பாக யாழ்ப்பாணச் சமூக அமைப்பினை நன்கு விளங்கிக்கொண்டவர்களுக்கே இந்தப் பார் வையை விளங்கமுடியும். யாழ்ப்பாணத்துச் சமூகத்தில் பிராமணரு டைய இருப்பு ஒரு காலத்தில் மிகவும் தாழ்நிலையாக இருந்தது. டானியல் ‘கரையல் புக்கை தின்னிப் பிராமணி’ என்று உயர்சாதி யைச் சேர்ந்த ஒருவர் சொல்லுவதாகக் குறிப்பிடும்போது அப்புனி தர்கள் நிலையைச் சிறிதாகக் காட்டினார். ஆனால் தெணியான் அந்நிலையைத் தன்னுடைய அரசியல்-சித்தாந்த அடிப்படையிலே நோக்கி பொற்சிறையில் வாடும் புனிதர்ளைச்சித்திரிக்கிறார். இது அவருடைய தனித்துவப் பண்பாகும். லெ. முருகபூபதி அதனைப் பொருத்தமான முறையிலே பின்வருமாறு விமரிசிக்கிறார்: ‘இலங் கையின் வடபுலத்தில் கோயில்களில் பூசைசெய்துவரும் பிராமண சமூகத்தைச் சேர்ந்தவர்கள் கோயில் நிருவாகஸ்தர்களினாலும் முத லாளிமாரினாலும் எப்படி பாதிக்கப்படுகிறார்கள்? என்பதைச் சித்தி ரித்து அவர்களுக்கு சோசலிஸ யதார்த்தப்பார்வையில் தெணி யான் தந்த தீர்வுகுறித்துப்பேசுகிறது அந்த நாவல்.’

டானியலுடன் நாம் நெருங்கிய தொடர்புகொண்டவர்களாக இருந் தோம். அவருக்கும் தெணியானுக்குமிடையே இருந்த நெருக்க மான நட்பினை நன்கு அறிவோம். தெணியானின் மறைவு தொடர் பாக எழுதிய ஜெயமோகனும் லெ. முருகபூபதியும் டானியலுடைய ‘பஞ்சமர்’ நாவலை நினைவுகூருவதைப் பார்க்கும்போது, அந்தத் தொடர்பு எனக்கு நினைவூட்டப்பட்டது. மார்க்சியக் கோட்பாட்டில் ஈடுபாடு கொண்டிருந்த தெணியான் பேராசிரியர் கா. சிவத்தம்பியு டன் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினராக இருந்தவர். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளைச்செயலாளராகப் பணிசெய்தவர். இதேவேளை டானியல் சீன கம்யூனிச சித்தாந்தத்தைத் தழுவியவர். எனினும் மொஸ்கோ கம்யூனிசமும் பீகிங் கம்யூனிசமும் அடிப்படையில் ஒற்றுமை வாய்ந்த சித்தாந்தத்தை உடையது என்பதை டானியல்-தெணியான் நட்பு எனக்கு உணர்த்தியது.

ஒருவருக்கு அவருடைய இளமை, இடைநிலை வயதுக் காலங்க ளிலே பலருடைய நட்புக் கிடைக்கும். ஆனால் முதுமைக் காலத் திலும் அவரைச் சுற்றி பலரும் இருப்பார்களாயின், அவருடைய வாழ்வும் வளமும் எப்படிப்பட்டது என்று நான் கூறத்தேவை யில்லை. தெணியானுக்குப் பலர் இருந்தாலும் ஒன்றை நான் சிறப்பாகக் குறிப்பிட விரும்புகிறேன். அது ‘ஜீவநதி’, அதன் ஆசி ரியர் க. பரணீதரன். தெணியானின் எழுத்தாக்கங்களின் விமரிசனங் களை ஜீவநதி தவறாமல் வெளிக்கொணர்ந்தது. ஏனைய வெளியீ டுகள் வருமாறு:

தெணியானின் ஜீவநதிச் சிறுகதைகள் 2012
தெணியானின் ‘குடிமைகள்’ ஜீவநதி, வெளியீடு 2014
தெணியான் பவளவிழா சிறப்பிதழ், ஜீவநதி வெளியீடு 2013
‘தெணியானின் படைப்புகள் மீதான பார்வைகள்’,ஜீவநதி வெளியீடு 2012

ஜீவநதியின் மதியுரைஞராக இருந்து அதனை வழிநடத்திய பெருமை தெணியானுக்கு உண்டு. முதுமை நிலையில் என்ன செய்யவேண்டும் என்பதை நன்கு உணர்ந்து அவர் செயற்பட்டார். அவருடைய தம்பி க. நவமும் ஒரு நல்ல எழுத்தாளர். கனடாவில் வாழ்ந்தாலும் அண்ணனுக்குப் பக்கபலமாக இருப்பவர்.

தமிழ்த்துறை சார்ந்த கலாநிதிகள் சிலர் இலக்கிய விமரிசனம், கட்டு ரைகள் எழுதுதுதல் ஆகியவற்றிலும் ஈடுபட்டபோது ஒரு கட்டத்தில் அவர்கள் கண்டனத்துக்குள்ளாகினர். என்போன்ற கலாநிதிகளை ‘கல்லாநிதிகள்’ என்று தெணியான் எழுதியிருந்தார். என்னை அது பற்றிச் சிலர் கேட்டனர். நான் அதற்கு ‘நாங்கள் இன்னும் கற்ப தற்கு நிறைய இருக்கிறது. அதனைத்தான் ‘கல்லாநிதி’ என்று கூறி நினைவுபடுத்தப்பட்டுள்ளோம்.’ என்று கூறி மகிழ்ந்தேன்.

தெணியானின் ஆக்கங்களை அறிந்த காலந்தொடக்கம் அவர் எழுதிய ‘பொற்சிறையில் வாடும் புனிதர்கள்’ என்னும் ஆக்கம் என் மனம்விட்டு அகலாத ஒன்றாக இருந்துவருகிறது. லெ. முருக பூபதி போன்ற விமரிசகர்கள் அதனுடைய சிறப்பினை மிகப் பொருத்தமாக எழுதியுள்ளனர். ஈழத்தின் தலைசிறந்த தமிழ் எழுத் தாளர்களுள் ஒருவராகத் தெணியான் திகழ்கிறார். அவர் எழுதிய ஈழத்து நவீன தமிழ் இலக்கியங்களாகிய சிறுகதையும் நாவலும் அவர் திறன்களைத் தாங்கிநிற்கின்றன.



shanmugathas@thaiveedu.com





# எனது தெணியான்

**- எஸ். சிவலிங்கராஜா**

அமரர் தெணியான் என்னுடன் நெருக்கமான உறவைக் கொண்டிருந்தவர். நான் அவரது படைப்புக்கள் பலவற்றைப் படித்திருக்கிறேன். அவருடன் அவை பற்றி உரையாடி இருக்கிறேன். தான் எழுதத் தொடங்கியதன் நோக்கத்தை எங்கும் வெளிப்படையாகக்




கூறிவருபவர். அந்த நோக்கத்தில் இருந்து சிறிதும் வழுவாது எழுதி வந்தவர். தனது படைப்புக்களில் வரும் பாத்திரங்கள் பற்றி, அந்தச் சூழல்களைப் பற்றியெல்லாம் என்னுடன் உரையாடியுள்ளார். புதுமைப்பித்தனின் மொழியிலே சொல்வதானால் 'அவர் கண்டது, கேட்டது, காண விரும்பியது, காண விரும்பாதது' அவற்றைத்தான் இலக்கியமாகப் படைத்தார். அவரது இலக்கிய ஆக்கம் பற்றி பல்வேறு ஆய்வுகள் செய்யப்பட்டுள்ளன. நான் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றியபோது தெணியானின் படைப்புக்கள் பற்றிய பல ஆய்வுகளை மாணவர்களைக்கொண்டு செய்வித்திருக்கிறேன்.

தெணியான் பல்பரிமாண ஆளுமை உடையவர். நாவல், சிறுகதை, கட்டுரை, விமர்சனம், மேடைப்பேச்சு முதலான பல துறைகளிலும் முத்திரை பதித்தவர். அவர் மிகச் சிறந்த தமிழ் ஆசிரியர். மாணவர்களுக்குச் சிறப்பாகக் கற்பித்துப் பெரும் புகழ் பெற்றவர். இவரது கற்பித்தற் திறமை பற்றி இவரிடம் பயின்ற மாணவர்கள் வாயூற ஊறக் குறிப்பிடுவார்கள்.

அவரது கம்பீரமான தோற்றம், செம்மையான சிறப்பான ஆடை அணியும் வழக்கம், நெஞ்சிற்பட்டதை - தான் சரியானதெனக் கண்டதை அஞ்சாது கூறும் ஆளுமை, மனம் விட்டுப்பழகும் மாண்பு, மதிக்க வேண்டியவர்களை மதித்துப் பழகுதல், நண்பர்களின் வெற்றியைக் கண்டு மகிழ்தல், பாராட்டுதல், இளைய தலைமுறையினரை ஊக்குவித்து உரமூட்டி வளர்த்தல் முதலான பல நற்பண்புகளை நான் அவரிடம் கண்டேன்.

அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறேன்.



info@thaiveedu.com

# தெணியான் சேர் மறைந்தார்!

**- மேமன் கவி**

தெணியான் அவர்கள் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் பெற்றுத்தந்த உறவு. அதற்கு முன்னதாக ஒரு வாசகனாக நின்று அவரை அறிவேன் அவரது படைப்புகள்மூலம். மூத்த தலைமுறையினரின் மறைவு தடுக்க முடியாதது என்றாலும், எனக்கெல்லாம் அவர்களின் இழப்பு பேரிழப்புத்தான்.

தெணியான் அவர்களிடம் இருந்த இரண்டு அம்சங்கள் மிக முக்கியமானவை:

ஒன்று - அவர் வாழ்ந்த சூழலான யாழ்ப்பாணத்தில் முற்போக்குச் சக்திகளுக்கு ஏற்பட்ட நெருக்கடிகளுக்கு மத்தியிலும் சொந்த மண்ணைவிட்டு விலகாது போராடியவர். அவ்வப்போது முற்போக்கு இலக்கியத்திற்கு எதிரான, அவதூறுகள், கருத்துகள், பிரச்சினைகள் வந்தபொழுது, தனது பலமான கருத்துகளை முன்வைப்பதில் பின் நிற்கவில்லை, மௌனம் காக்கவில்லை.

இரண்டு - ஒடுக்கப்பட்ட மக்களுக்காகக் குரல் கொடுத்தவர். அதுவும் வெறும் கோஷம், பிரசாரம் என்பதற்கு மேலாகத் தன் படைப்புகள் மூலம் முற்றுமுழுவதுமாக அச்சமூகத்திற்காக எழுதியவர்.

அதுமட்டுமல்ல முற்போக்குச் சக்திகளுக்கு எதிரான பிற்போக்குச் சக்திகளை எதிர்த்துப் போராடியவர். சாதித்திமிர் பிடித்த சக்திகளுக்கு எதிராகக் குரல் கொடுத்தவர்.

இவ்வளவுக்கும் யாழ்ப்பாணச் சூழலில் விட்டுவிலகாது இறுதிவரை தன்னைத் தக்கவைத்துக் கொண்டவர்.

ஈழத்து தமிழ் இலக்கியத் தளத்தில் முற்போக்கு சிந்தனையுடனும். சாதிய அரசியலின் கொடூரத்தைப்பற்றி எழுதியவர்களான டானியல், டொமினிக் ஜீவா ஆகியோருடன் இணைத்துத் தவிர்க்க முடியாமல் பேசப்பட்டவர்.

என்மீது மாறாத அன்பு கொண்டவர். மல்லிகையில் எனது அட்டைப்படம் வந்தபொழுது, ஜீவா அவர்கள் என்னிடம் யாரைக் கொண்டு அட்டைப்படக் கட்டுரை எழுதுவது என்று உரையாடிய பொழுது, எடுத்தவுடன் நான் தெணியான் அவர்களின் பேரைச் சொன்னேன். அந்தக் கட்டுரையில் முழுமையாக என்னை எடுத்துக்காட்டி இருந்தார்.

ஜீவா மீது அவர் பெரும் அன்பையும் மதிப்பையும் கொண்டிருந்தார். அதை நான் நேரில் பார்த்தவன். ஜீவா யாழிலிருந்து மல்லிகை வெளியிட்ட காலகட்டத்தில் மல்லிகை நடத்த பெரும் உதவியாக இருந்தவர். இப்படி தெணியான் அவர்களைப் பற்றி நீண்டதாகப் பேசலாம்.

ஜீவா, நந்தினி சேவியர் ஆகியோரின் இழப்பைத் தொடர்ந்து, தெணியான் அவர்களின் மறைவு என்னைத் தனிமைப்படுத்தி இருக்கிறது.

அவரது மறைவுக்காக இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் சார்பாகவும், முற்போக்கு இயக்கத்தின் சார்பாகவும் எனது ஆழ்ந்த அஞ்சலியை முன்வைக்கிறேன்.



info@thaiveedu.com

# தெணியானும் சென்றார்

- சி. மௌனகுரு

தெணியானை சில வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் போன போது பொலிகண்டியிலுள்ள அவரது வீடு சென்று பார்த்து வந்தேன். பின்னர் அவரது 'குடிமைகள்' நாவலுக்கு கொடகே பரிசு கிடைத்தபோது 2014ல் கொழும்பில் அவரைக்கண்டு பேசினேன். அதுவே அவரை நான் சந்திக்கும் இறுதிச் சந்திப்பு என நினைத்திருக்கவில்லை. கொடகே நிறுவனம் 2014ல் சில சிங்கள, தமிழ், இஸ்லாமிய மக்களிலிருந்து வயது முதிர்ந்த சில கலை, இலக்கியவாதிகளைத் தெரிந்தெடுத்து, அவர்களின் வாழ்நாள் செயல்களுகாகக் கௌரவித்தது. அக்கௌரவம் எனக்கும் தரப்பட்டது. அந்த விழாவில் சிறந்த நூல்களுக்கான விருதுகளும் வழங்கப்பட்டன. நூலாசிரியர்களைக் கௌரவித்து சின்னம் வழங்கும் பொறுப்புகள் ஏற்கனவே கௌரவிக்கப்பட்டு, மேடையிலமர்ந்திருந்த சிலரிடம் ஒப்படைக்கப்பட்டன.

அவ்விழாவில் தெணியான் தனது 'குடிமைகள்' எனும் நாவலுக்கான பரிசு பெற வந்திருந்தார். அவர்க்கான சின்னம் வழங்க என்



னையே அழைத்தனர். அது எனக்குக் கிடைத்த ஓர் அரிய சந்தர்ப்பம் ஆகும். வழங்கும் போது நான் அவரிடம் நான் கூறினேன்.

'உங்களுக்கு இந்த விருதை வழங்கக் கிடைத்த சந்தர்ப்பத்தையிட்டு நான் மிகவும் மகிழ்கிறேன்.' பரிசுச் சின்னத்தை என்னிடமிருந்து பெற்ற அவர் பின் வருமாறு கூறினார். 'உங்கள் கையால் இதனைப் பெறுவதற்காக நான் மிகமிக மகிழ்கிறேன்.'

இருவருமே மகிழ்ந்த இனிய பொழுது அது! அதுவே எமது இறுதிச் சந்திப்பு.

அடக்கப்பட்ட மக்களின் துன்பதுயரங்களை வாழ்நாள் பூராவும் தன் நூல்களில் கொணர்ந்தமை மாத்திரமன்றி, போராட்டக் களத்திலும் நின்றவர் தெணியான்.

அடக்கப்படுவோர் அனைவர்க்காகவும் பேசும் தெளிவு அவரிடமிருந்தது. அவரது 'பொற்சிறையில் வாடும் புனிதர்கள்' எனும் நூல் பாரம்பரியம் எனும் பழக்கத்தாலும் சமூக சம்பிரதாயங்கள் எனும் பொன்விலங்காலும் வாழமுடியாது துயருறும் ஏழைப் பிராமணர்களைப் பற்றியது. அடக்கப்படுவோர் எங்கிருந்தாலும் அவர்கள் யாராயினும் அவர்கள் பக்கமே தெணியான் நின்றார். இதனைப் புரிந்தால்தான் தெணியானையும் புரிந்துகொள்ளலாம்.

தெணியானை முதன்முதலில் நான் 1975களில் சந்திக்கிறேன். இற்றைக்கு 47 வருடங்களுக்கு முன்னர். சந்தித்த இடம் ஸ்ரான்லி ரோட் ஸ்ரார் கறாஜ். கராஜின் உரிமையாளர் நாவலாசிரியர் டானியல். டானியலே எனக்கு தெணியானை அறிமுகம் செய்து வைக்கிறார்.
பின்னர் நான் யாழ். பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக இருந்தபோது தெணியான் பேராசிரியர் சிவத்தம்பியைச் சந்திக்க நுண்கலைத்துறை அறைக்கு அடிக்கடி வருவார். நீண்ட நேரம் இருவரும் பேசுவர். தெணியான் மீது சிவத்தம்பி மிகுந்த மதிப்பும் அன்பும் கொண்டிருந்தமையை நான் நேரில் கண்டேன். 'என் நண்பனடா, அயல் ஊரவனடா' என்று சிவத்தம்பி கூறுவார். தெணியான் பற்றி டானியல் என்னிடம் கூறியவை அதிகம்.

டானியலின் 'பஞ்சமர்' நாவல், யாழ்ப்பாண வாழ்க்கைப் பரிச்சயமற்ற எமக்கு யாழ்ப்பாணப் பண்பாட்டின் இன்னொரு பக்கத்தைக் காட்டியது. அது பேசாப்பொருள்.

அவை பேசப்பட்டபோது தமிழ்ச்சமூகம் அதிர்ந்து போனது. அந்நாவலில் கூறப்படும் சம்பவங்கள், கதைகள் அனைத்தும் டானியலின் கற்பனை எனச் சிலர் என்னிடம் கூறியும் உள்ளனர். ஆனால் அவை அத்தனையும் 'நான் கண்டும் கேட்டுமுள்ள உண்மைகள்' என்பார் டானியல். நாவலில் கூறாத பல கதைகளை அவர் எம்மிடம் கூறியுள்ளார். 'பஞ்சமர்' நாவல் சனாதனிகளினதும் பண்பாட்டுக் காவலர்களினதும் பலத்த கண்டனத்திற்குள்ளானது. எதிர்வாதங்களைப் பலர் புரிந்தனர், அது இலக்கியமே இல்லை எனவும் கூறினர், வக்கிரம் என்றனர்.

அவர்களின் கண்டனத்திற்கு டானியலின் பதில் 'பஞ்சமர்' இரண்டாம் பாகம் எழுதியதுதான். மூன்றாம் பாகமும் எழுத அவர் எண்ணியிருந்தார். அவரது உடல் நிலை அதற்கு இடம் தரவில்லை. 'மூன்றாம் பாகத்தை எழுதும் வல்லமையும் துணிவும் விடயஞானமும் உள்ளவர் தெணியானே' எனப் பகிரங்கமாக டானியல் கூறியுமுள்ளார்.

டானியலின் போர்க்குணங்கள் சமூக அங்கதம் எனும் குணாதிசயங்கள் தெணியானிலும் உண்டு. அவ்வகையில் டானியலின் வாரிசு தெணியான் என்பதில் தவறில்லை என்றே நினைக்கிறேன். 'குடிமைகள்' எனும் தெணியானின் நாவல் அவர் டானியலின் வாரிசு என்பதற்கான நிரூபணம்.

சமூகப் பிரச்சினைகளினது ஆணிவேரை இனம் கண்டு எழுதியோருள் தெணியானும் ஒருவரானார். தெணியான் என்னைவிட ஒரு வயது மூத்தவர். அவ்வகையில் அண்ணர். 'பழுத்த ஓலைகள் விழுவது நியதி' என முன்னரும் எழுதியுள்ளேன். இப்போது இன்னொரு பழுத்த ஓலையும் விழுந்தது.

டானியலின் வாரிசு தெணியானானால், தெணியானின் வாரிசு யார் என்ற கேள்வியும் எழுகிறது.

'அமைதியான மனம் ஆரோக்கியமற்ற மனம். அமைதியற்றுக் கொதிக்கும் மனமே ஆரோக்கியமான மனம்' எனச் சொன்னவர் டால்ஸ்டாய்.

சமூகக் கொடுமைகள் கண்டதனால், அனுபவித்தமையினால் வரும் மனக் கொதிநிலை அது.

ஆரோக்கியமான, மிகுந்த ஆரோக்கியமான மனம் கொண்ட நண்பர் தெணியான் அவர்களே - காலம் உங்களுக்கிட்ட கடமை முடித்துச் செல்கிறீர்கள். சென்று வாருங்கள்.

உங்கள் உடலை எரிப்பார்களோ புதைப்பார்களோ அறியேன். புதைப்பின் - அந்தப் புதைகுழி அமைதியின்மையினால் அதிரும்! எரித்தால் - அந்தத் தீச்சுவாலை அமைதியின்மையினால் அதிரும்! அந்த அதிர்வில் தெணியான் தெரிவார்!



maunaguru@thaiveedu.com



# இலக்கியவாதி தெணியான் ஒரு செயற்பாட்டாளர்

- மா. கருணாநிதி

சமுதாயத்திலே ஒடுக்கப்படுவோர் தாம் ஒடுக்கப்படுகின்றனர் என்பதை அறிய இடமளிக்காத வரையில், அவர்கள்மீது ஒடுக்குவோர் தமது அதிகாரத்தைச் செலுத்துவரென பிரேசில் நாட்டுத் தத்துவவியலாளரும் சமூகவியலாளரும் கல்வியியலாளருமான போலொ-பிரெய்றி முன்வைத்த கருத்தானது, ஒடுக்கப்படுவோர் மத்தியில் அவர்களுடைய உரிமைகள் தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுதல் வேண்டும் என்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தி நிற்கிறது. சமூகச் செற்பாட்டாளரான அமரர் க. நடேசு (தெணியான்) அவர்கள் தமது கல்வி மற்றும் இலக்கியப் பணிகள் ஊடாக மனித உரிமைகளை மக்கள் நியாயபூர்வமாக அனுபவிக்கக்கூடிய சமத்துவ சமூதாயமொன்றை நோக்கியதாகத் தமது செயற்பாடுகளை விரிவுபடுத்தியவர். எழுத்தும் வாழ்வும் இரண்டல்ல, அவை ஒரே திசையில் பயணித்தல் வேண்டும் என்ற



கொள்கையை தம்முள் வரித்துக்கொண்ட தெணியான் அவர்கள், சிறுகதைகள் மற்றும் நாவல்கள் வாயிலாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் விதைத்த கருத்துகள், சமூக மாற்றங்கள் பற்றிய சிந்தனைகளுக்குத் தூண்டுதல் அளித்தன.

தொழில்முறை ரீதியாக ஓர் ஆசிரியராக விளங்கிய இவர், இலங்கையின் பல பாகங்களிலும் சேவையாற்றியதன்மூலம் மாணவர்கள், சக ஆசிரியர்கள் மற்றும் பாடசாலைச் சமூகத்தின் நன்மதிப்பைப் பெற்றவர். தமிழ் இலக்கணம் மற்றும் இலக்கியம் ஆகியவற்றைக் கற்பித்தலில் சிறந்த தேர்ச்சியடைய தெணியான், மாணவர்கள் சிறப்புச் சித்திகளை அடைவதற்குத் தூண்டுதலாக இருந்தது மட்டுமல்லாமல், மாணவர்களில் மறைந்திருந்த ஆற்றல்களை வெளிக்கொணர்வதற்கும் மாணவர்களைப் படைப்பாளிகளாக வெளிக்காட்டுவதற்கும் வித்திட்டவர். மாணவர்கள் கல்வியினூடாக சமூகத்தில் மேம்பாடடையும்போது, அவர்கள் மேலேயுள்ளவர்களை மட்டும் பார்க்காமல் கீழேயுள்ளவர்கள் மீதும் அக்கறை கொண்டவர்களாக இருக்கும் தருணத்தில், சமூக மாற்றத்திற்குத் தூண்டுதலாக இருப்பார்கள் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டவர்.

சமூக சமத்துவம் நோக்கி எமது சமூகங்களில் வாழ்ந்த கவிஞர் மு. செல்லையா முதலிய மூத்த தலைமுறையினர் சாத்வீகரீதியாகக் கையாண்ட அணுகுமுறைகள் உரிமைகள் சார்ந்த பல வெற்றிகளைத் தேடித் தந்தனவாயினும் அவற்றின் விளைவுகள் பரந்தளவிலான உரிமைகளை அனுபவிப்பதற்கு இடமளிக்கவில்லை. பல சந்தர்ப்பங்களில் சமூகக் கட்டுப்பாடுகள் வெவ்வேறு வடிவங்களைப் பெற்ற வேளையில் அவற்றை வென்றெடுப்பதற்குப் போராட்டங்களே வினைத்திறனுள்ள வழிமுறையாக அமையும் என்பது, இடதுசாரிக் கொள்கையை ஏற்றுக் கொண்டவர்களின் நம்பிக்கையாக உருப்பெற்றது. இத்தகைய செல்நெறிகளால் உந்தப்பட்ட இளந்தலைமுறையினருள் அமரர் தெணியான் முன்னிலை வகித்தவர். 1970, 80களில் வடமராட்சியில் ஒடுக்கப்பட்ட மக்களின் வழிபாட்டுரிமையை உறுதிப்படுத்தி, அதனை அனுபவிக்கும் நோக்கில் பல ஆலயங்களைத் திறந்துவிடும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. தெணியான் அவர்கள் அவற்றில் ஈடுபட்டு வெற்றியும் கண்டவர். ஆயினும், இந்தப் பிரச்சினை இன்னும் முழுமையாகத் தீர்க்கப்படவில்லை.

வடமராட்சியிலே தேவரையாளி இந்துக் கல்லூரியானது கல்வியினூடாக சைவப் பாரம்பரியத்தையும் அதன்வழியே சமூக அசைவியக்கத்திற்கு வழிகோலுவதையும் நோக்கமாகக் கொண்ட ஒரு சமூக நிறுவனமாகச் செயற்பட்டது. இந்தக் கல்லூரியின் அதிபராக இருந்த அமரர் எம்.எஸ். சீனித்தம்பி அவர்கள் மேற்கூறிய நோக்கங்களுக்கு மத்தியிலும் இடதுசாரிக் கொள்கையுடையோரின் செயற்பாடுகளுக்குத் தடையாக இருந்ததில்லை என அறியக் கிடைத்துள்ளது. பாடசாலையிலே இடதுசாரிக் கொள்கையோடு செயலாற்றிய திருவாளர்கள் தெணியான், செ. சதானந்தன் மற்றும் சி.க. இராசேந்திரன் ஆகியோருடைய சமூக மேம்பாட்டுச் சிந்தனைகளுக்கு அவர் ஊக்குவிப்புகளை வழங்கியமையும் குறிப்பிடத்தக்கது. அவர்கள் பாடசாலையின் அடிப்படை நோக்கங்களுக்கு முரண்படாதவாறு சமூகவிடுதலைப் போராட்டங்களில் ஈடுபடுவதற்கு வாய்ப்புகள் இருந்தன.

1980களிலே எமது கிராமங்களில் வாழ்ந்த படித்த இளைஞர்கள் பலர் முக்கியமாக வேலையின்மைப் பிரச்சினையை எதிர்கொண்டனர். வதிரி அபிவிருத்தி நிறுவனத்தின் சார்பில், அதன் தலைவர் எம்.எஸ். சீனித்தம்பி அவர்களின் தலைமையில் இளைஞர்களின் பிரச்சினைகளுடன் சமூக உரிமைகள் தொடர்பானவற்றையும் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபருடன் கலந்துரையாடவெனச் சென்ற தூதுக்குழுவில் அமரர் தெணியான் அவர்களும் பங்கு கொண்டு பல ஆக்கபூர்வமான கருத்துகளை முன்வைத்திருந்தார்.

படைப்பாற்றல் நுண்ணறிவு வெளிப்பாடுகளில் ஒன்று. தெணியான் அவர்கள் தமது ஆற்றலைப் படைப்பாற்றல் திறனுடன் கலந்து சமூகமாற்றம் நோக்கியதாகச் சிந்தித்தவர். அத்தகைய வளமான சிந்தனைகளை வெறும் பொழுதுபோக்கிலான விமர்சனங்களாக இல்லாமல் உண்மையில் அச்சிந்தனையின் தாக்கங்களை உணர்ந்து, அவற்றை யதார்த்த நிலையில் காணமுற்படுதல் இலக்கிய உலகமும் பரந்த சமூகமும் தெணியான் அவர்களுக்கு வழங்குகின்ற உண்மையான மதிப்பாக அமையும்.

தெணியான் அவர்களின் சிந்தனைகளின் வெற்றிக்கும் ஆத்ம சாந்திக்கும் இறைவனைப் பிரார்த்திப்போமாக.



info@thaiveedu.com

# தெணியான்:
# வடமராட்சி வாழ்வியலின் படைப்பாக்க ஆளுமை

- த. கலாமணி

எமது இலக்கிய வரலாற்றில், வாழிடச் சூழலின் உண்மை நிலையை விளங்கிக் கொள்ளாது படைக்கப்பட்ட ஆரம்பகாலப் படைப்புகள் சமூக யதார்த்தத்தைப் புறந்தள்ளியவை. மனோரதிய நிலையில் அல்லது கற்பனா ரீதியில் படைக்கப்பட்ட படைப்புகள் காவிய மரபை அடியொற்றி எழுந்தவையாகும். அவை காவிய நாயகரைப்போன்று கதாபாத்திரங்களை முன்னிலைப்படுத்தி, மனித வாழ்வின் இருண்மையான பகுதிகளை மறைத்து பிரதான கதாபாத்திரங்களைப் புனிதராகக் கொண்டு அவர்களை மகிமைப் படுத்தும் களப்பின்னணியில் அமைந்தவை. இதனால் எமது அடிநிலை மக்களின் துன்பங்களையும் துயரங்களையும் வாழ்வியல் நிலையையும் அன்றைய இலக்கியங்களில் தரிசிக்க முடியாமற் போயிற்று. கால ஓட்டத்தில் இலக்கிய வரலாற்றில், அடிநிலை மக்களுக்கும் வாழ்வியல் ஒன்று உள்ளது என்ற உண்மை உணர்த்தப்படாமலே சமூக வரலாறு பதிவு செய்யப்பட்டது. இதன் காரணமாகவே மார்க்ஸிய சித்தாந்தத்தை வரித்துக்கொண்ட முற்



போக்கு எழுத்தாளர்கள் அடிநிலை மக்களின் வாழ்வியற் தரிசனங்களினூடாக அவர்கள் வாழ்வில் நிகழும் சிறு சிறு சம்பவங்களையும் வாழ்வையும் 'புனைவுகளாக' வெளிப்படுத்தத் தொடங்கினர்.

அடிநிலை மக்களின் வாழ்வியல் யதார்த்தங்களை வெளிப்படுத்தி அவர்களின் உரிமைகளை வென்றெடுக்கும் நோக்கமே அன்றைய காலத்தேவையாகக் கொள்ளப்பட்டதால், முதலாம் தலைமுறையையும் இரண்டாம் தலைமுறையையும் சேர்ந்த முற்போக்கு எழுத்தாளர்களின் படைப்புகளில் கலையழகின்றி பிரசார வாடையே ஓங்கித் தெரிகின்றது என்ற விமர்சனம் எழுந்தது. இந்நிலையில் 1970களில் உருவாகிய மூன்றாம் தலைமுறையைச் சேர்ந்த முற்போக்கு எழுத்தாளர்கள் தமது எழுத்துகளின் உள்ளார்ந்த நோக்கோடு கலை அழகிலும் கவனம் செலுத்தத் தொடங்கினர். இவ்வாறு மூன்றாம் தலைமுறையில் உருவாகி, தமது படைப்புகளின் உள்ளடக்கத்தில் மாத்திரமன்றி படிப்படியாக கலை நேர்த்தியிலும் அதிக அக்கறை கொண்டு அடிநிலை மக்களின் யதார்த்த வாழ்வையும் அவ்வாழ்வியலிலுள்ள அழகியல் அம்சங்களையும் கலை நேர்த்தியோடு படைத்துக் காட்டமுடியும் என்று நிறுவியவர்தான் படைப்பாளி தெணியான் அவர்கள்.

தெணியான் ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்தவர். குடும்பத்தில் மிகுந்த வாஞ்சை உடையவர். சகோதரிகளுக்கும் சகோதரர்களுக்கும் நல்ல வாழ்க்கை அமைய வேண்டும் என்று தமது வாழ்வையே அர்ப்பணித்தவர். தமிழ் ஆசிரியராகப் பணிபுரிந்த இவர், தமிழைச் சிறப்புறக் கற்பிக்கும் ஆற்றலால் மாணவர்களைக் கவர்ந்தவர். சிறுவயதிலேயே வாசிப்பில் ஈடுபாடுகொண்ட இவருக்கு, இவரது தொழில் வாழ்க்கை (Profession) இவர் மேலும் இலக்கியத்தில் ஈடுபாடுகொள்ள வழிவகுத்தது. முற்போக்குச் சிந்தனையாளர்களுடன் கொண்ட தொடர்பு, மார்க்ஸிஸ தத்துவத்தைத் தமது எழுத்தின் அடிநாதமாகக் கொண்டு, அடிநிலை மக்களின் வாழ்வியலை, வரலாற்றைப் பதிவு செய்தலையே தமது இலக்கியப் பணியின் நோக்காக வரித்துக்கொள்ள வழிவகுத்தது. சாதிக் கொடுமைகளும் ஒடுக்குமுறைகளும் கால மாற்றத்திலும் கூட எவ்வாறு புதுப்புது வடிவங்கள் எடுக்கும் என்பதைத் தோலுரித்துக் காட்ட விரும்பிய தெணியான், சிறுகதைகளிலும் நாவல்களிலும் கட்டுரைகளிலும் அவற்றைப் பதிவு செய்தார். 'சாதிக் கொடுமைகள் வழக்கொழிந்து விட்டன' என்ற சாதிச் சழக்கர்களின் குரலை மறுதலித்து அது இன்று நீறு பூத்த நெருப்பாக இருக்கின்றது என்பதை எடுத்துக்காட்டி, தன் படைப்புகளிலும் கருத்துரைகளிலும் வெளிப்படுத்தினார்.

தெணியான் நிறையவே எழுதினார். நூற்றைம்பதுக்கும் மேலான சிறுகதைகள், 14 நாவல்கள் (மூன்று குறுநாவல்கள் உட்பட) ஐம்பதுக்கும் மேலான கட்டுரைகள் என அரைநூற்றாண்டுக்கும் மேலாக எழுதிக்கொண்டே இருந்தார். தமது வாழ்வனுபவங்களையும் இலக்கிய அனுபவங்களையும் தொடர் கட்டுரைகளாக எழுதி, தமது படைப்புகளுக்கு அனுபந்தமாகக் (Supplement) கொண்டார். ஈழத்தில் சாதியம் பற்றிய அதிக எண்ணிக்கையான சிறுகதைகளைப் படைத்தவர் இவரே ஆவார். இவரது படைப்புகளின் பேசுபொருளாக சாதியம் மாத்திரமே எடுத்தாளப்படவில்லை. சமூகத்தின் இழிநிலைகள், குடும்பங்களின் சிதைவுகள், சமூக அவலங்கள் போன்றவற்றை மனிதாபிமான உணர்வுநிலையில் நின்று படைப்புகளாகத் தந்தார். யாழ்ப்பாணத்து நிலமானிய சமுதாய அமைப்பில் 'பொற்சிறையில் வாடும் புனிதர்களாக' பிராமண சமூகத்தின் அவலநிலையையும்கூட தெணியான் அழகுற வெளிக்கொணர்ந்தார்.

தெணியான் தமது வாழிடமான வடமராட்சி மக்களின் வாழ்வியலையே அதிகமாக எழுதினார். வடமராட்சி மண்ணிலான நீண்டகால வாழ்வனுபவத்தில் அவர் பெற்றுக்கொண்டவை அவரது படைப்புகளில் கலைநயத்தோடு வெளிப்படுத்தப்பட்டன. 'தெணியானின் புனைகதைகள் இல்லையெனின் வடமராட்சியின் சமூக வரலாற்றில் ஒரு மிக முக்கியமான பகுதி தெரியாமலே போய்விடும்' என பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் குறிப்பிடும் அளவுக்கு 'வடமராட்சி வாழ்க்கையின் முன்னிலைப் புனைகதை ஆசிரியர்' தெணியான் ஒருவரே. தெணியானின் இறுதி நாவல்களான 'குடிமைகள்', 'ஏதனம்', 'மூவுலகு' ஆகிய மூன்றும்கூட வடமராட்சி மக்களின் வாழ்க்கையைப் பிரதிபலிப்பனவே. வடமராட்சி மக்கள் பயன்படுத்திய ஏதனங்களின் (utensils) பின்புலத்தில் அம்மக்களின் வாழ்வை ஒரு நாவலாகக் கொண்டுவர முடியும் என்ற புதுமையை நிகழ்த்திக் காட்டியமை தெணியானின் படைப்பாக்க ஆளுமைக்கு நல்லதொரு சான்றாகும்.

தெணியானின் எழுத்துவாழ்க்கையில் பலர் சம்பந்தப்பட்டிருப்பினும், முக்கியமான ஒரு சிலரைக் குறிப்பிட முடியும். இவ்வகையில், அவரது துணைவியார் மரகதம், எழுத்தாளர்கள் கே. டானியல், 'மல்லிகை' ஜீவா, சகோதரர் கணேஷ் அண்ணன், சகோதரர் எழுத்தாளர் க. நவம், ஜீவநதி பரணீதரன் ஆகியோர் முக்கியமானவர்கள். எண்பதாண்டுகள் வாழ்ந்து, ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக எழுத்தூழியம் மேற்கொண்ட படைப்பாக்க ஆளுமையான தெணியானின் மறைவு இலக்கிய உலகுக்கு ஒரு பேரிழப்பாகும்.



info@thaiveedu.com



# முறையான மார்க்சியப் படைப்பாளி தெணியான்

- ந. இரவீந்திரன்

ஒரு மார்க்சிய நிலைப்பட்ட இலக்கிய கர்த்தாவாகத் தெணியானை இனங்காண முற்பட்டபோது தவிர்க்க இயலாத வகையில் 'முறையான மார்க்சியப் படைப்பாளி' என்ற தலைப்பு வந்தமைந்து விட்டது. 'மார்க்சிய முறைசாராத மார்க்சியப் படைப்பாளிகள்' உலாவர இயலுமாக இருப்பதனால் இப்படி!

தம்மளவில் மார்க்சியப் பார்வையை வரித்துக்கொண்டு இலக்கிய வெளிப்பாட்டை மேற்கொள்பவர்களை 'மார்க்சியப் படைப்பாளிகளாக' வகைப்படுத்துவது அவசியமானது. அவ்வாறு அவர்கள் வெளிப்படுத்திய ஆக்கங்கள் எந்தளவுக்கு மார்க்சிய நோக்கு



நிலைக்கு உரியனவாக அமைந்து வெற்றி பெற்றிருக்கின்றன என மதிப்பீடு செய்து பல தளங்களிலான விவாதங்களை முன்னெடுத்து வந்திருக்கிறோம்.

வரலாற்றுச் செல்நெறி மாற்றங்களும் கால-இட வேறுபாடுகளும் கவனத்தில் எடுக்கப்படாமலே சமூக நிலவரங்கள் படைப்பாக்கப்படும் அவலநிலை இருந்து வந்துள்ளது. 'சமூகம் வர்க்கங்களாகப் பிளவுபட்டுள்ளன - வர்க்கங்களுக்கு இடையேயான போராட்டங்கள் வாயிலாக சமூக மாற்றங்கள் நடந்தேறிவந்துள்ளன - பாட்டாளி வர்க்கப் புரட்சி வாயிலாக நாடுகள் ஒவ்வொன்றும் சோசலிசத்தை வென்றெடுக்கும்' என வலியுறுத்துவதே மார்க்சியம் என்ற புரிதலுடன் இயங்கி வந்துள்ளோம்.

புரட்சியின் கோரிக்கை இன்னொரு வகையாக அமைந்து - ஒடுக்கப்பட்ட தேசங்கள் ஏகாதிபத்தியப் பிணைப்பைத் தகர்த்து சமத்துவ சமூகத்தை (சோசலிசத்தை) வென்றெடுக்கும் வேறொரு வரலாற்று இயங்குமுறை மேலெழுந்து வந்த பின்னரும் - பாட்டாளி வர்க்கம் கட்டி எழுப்பும் சோசலிச முறைக்கான அளவுகோலுடன் அல்லாடுகிற மார்க்சியர்கள் பலர் உள்ளனர்.

மார்க்சிய மூலவர்களின் வசனங்களில் முடங்கிப்போனவர் 'வர்க்கப் புரட்சி மட்டுமே சமூக மாற்றக் கருவி' என வாதிடுவார். 'ஒடுக்கப்படும் தேசங்கள்' சமூக மாற்றக் கருவியாக அமைந்துள்ள இன்றைய வரலாற்று மாற்றப்போக்கு நிலையில், சாதி ஒடுக்கு முறை வடிவிலான சுரண்டல் மேற்கொள்ளப்பட்டு வந்த எமக்கான மார்க்சியப் பிரயோகம் தனிவகையானது என்ற புரிதலை வந்தடைவோம்!

வசனங்களுக்குள் கட்டுப்படாமல் சமூக மாற்ற இயக்கப் போக்கை, அது எவ்வகையில் இயங்கிவந்ததோ அதே வடிவில் மார்க்சிய முறையைத் தனக்கான நோக்கு நிலையாகத் தெணியான் வரித்துக்கொண்டு இருந்தார். 'சாதி அமைப்புத் தகரட்டும், சமத்துவ நீதி ஓங்கட்டும்' என்ற முழக்கத்துடன் ஒக்ரோபர் 21 எழுச்சி மார்க்கம் (1966) முடுக்கிவிட்ட போராட்டக் களங்களை 'பஞ்சமர்' என்ற நாவலாக 1974ல் டானியல் வெளிப்படுத்திய கையோடு தெணியானின் எழுத்துகள் சாதி அமைப்புச் சார்ந்த பல வேறு தளப் பரிமாணங்களைப் பேச ஆரம்பித்துவிட்டது!

தெணியானின் இந்தப் பங்களிப்பின் வீச்சுக் காரணமாகத் தன்னால் எழுதி நிறைவு செய்ய இயலாமல் போகலாம் என இருந்த 'தண்ணீர்' நாவலை நிறைவு செய்யும் பொறுப்பைத் தெணியான் ஏற்க வேண்டும் எனக் கோரியிருந்தார் டானியல் (தோழர் தங்கவடிவேல் அவர்களும் அவ்வாறு கோரப்பட்டு இருந்தார். நோயிலிருந்து டானியல் மீண்டெழுந்து நாவலை நிறைவு செய்த காரணத்தால் மாற்றீட்டுக்கான அவசியம் ஏற்படவில்லை).

'பஞ்சமர் நூல் வரிசை' நாவல்கள் காரணமாக தலித் இலக்கிய முன்னோடியாக டானியல் இனங்காணப்படுகிறார். அதேயளவுக்குப் பங்களிப்புகளை அந்தத் தளத்தில் மேற்கொண்டிருந்த தெணியான் அவ்வகையில் போதியளவு கவனம்பெறவில்லை. பின்னர் 'ஒடுக்கப்பட்டோர்' சிறுகதைகள் தொகுக்கப்பட்டு வெளியிடப்பட்ட போதிலும் தெணியான் எத்தகைய மதிப்பீட்டைப் பெற ஏற்றவர் என்ற தெளிவீனம் திறனாய்வாளர்களிடையே உண்டு.

டானியலுடைய ஆக்கங்களில் சாதிய வாதம் சற்றுத்தூக்கலாக வெளிப்பட்டதாக 'பஞ்சமர்' நாவல் வெளிவந்த சமகாலத்திலேயே விமரிசனங்கள் முன்வைக்கப்பட்டு இருந்தன - அவருடன் ஒன்றிணைந்து இயங்கிய தோழர்களே அந்தக் கண்டன விமரிசனங்களை வெளிப்படுத்தினர். தொடர்ந்த பஞ்சமர் வரிசை நாவல்கள் மீதும் அத்தகைய விமரிசனங்கள் முன்வைக்கப்பட்டன. இந்தத் தளத்தில் தெணியான் போதிய கவனம் பெறவில்லை என்பதைப் போலவே, சாதியத் தளம் சார்ந்த அவரது எந்தப் படைப்பும் 'சாதியவாத நிலைப்பட்டது' என்ற கண்டனங்களை முகங்கொண்டதில்லை!

'பொற்சிறையில் வாடும் புனிதர்கள்', 'மரக்கொக்கு' எனும் அவரது இரு நாவல்கள் சாதியத் தளப் படைப்புகள் அல்ல என்ற கருத்து திறனாய்வாளர்களிடம் உண்டு. சாதியத்தின் இன்னொரு பரிமாணத்துக்கு உரிய பேசுபொருள் அந்த நாவல்களில் வெளிப்பட்டு இருந்தன.

சாதிய வாத நோக்குத் தலைதூக்க இடந்தராமல், சாதி அமைப்பின் இயங்கு முறைகளைப் படைப்பாக்குவதில் தெணியானின் மார்க்சியப் பார்வை வீச்சுக் காத்திரமிக்கதாக அமைந்துள்ளது என்பதே கவனிப்புக்கு உரியது. இறுதிப் படைப்புகளில் ஒன்றான

‘குடிமைகள்’ நாவல் சாதி ஒடுக்குமுறை உச்சமாக இருந்த காலத்தின் மாற்றச் செல்நெறிக்கான போராட்ட வாழ்வியல் நெருக்கடிகளைக் காட்டிச் சென்றது. வரலாற்று நிகழ்வில் அனைத்துச் சாதிப் பிரிவினரும் ஒன்றுபட்டுப் போராடி ஏற்படுத்திய மாற்றம் அந்தப் படைப்பில் மிகச் சிறப்பாக வெளிப்படுத்தப்பட்டு இருப்பதனை இனங்காணலாம்.

‘இவையெல்லாம் பழங்கதைகள் இப்போது யாரும் சாதி பார்ப்பதில்லை’ எனச் சொல்லப்படுகிற கருத்தின் போலித்தனதனத்தைத் தோலுரித்துக் காட்ட எழுதப்பட்ட ‘ஏதனம்’ எனும் நாவலும் எந்தவகையான வலிந்து கோடலுடனான மிகைப்படுத்தல் இல்லாமலே இன்றைய சாதிபேத வேறுபடுத்தல்களை வெளிக்காட்டி இருந்தது.

மாறிச்செல்லும் வரலாற்று நெருக்கடியாக, ஈழத் தமிழ்த் தேசியத்துக்கு எதிராக மேலாதிக்க சக்திகள் முன்னெடுத்த யுத்தக் கொடுரங்கள் பற்றித் தெணியான் அதிகம் எழுதி இருக்கவில்லை. வாசிகசாலை ஒன்றினுள் எழுபது பேர்வரை குண்டுவைத்துக் கொல்லப்பட்ட அவல நிகழ்வைச் சிறுகதை ஆக்கி இருந்தார் ‘எங்கடை ஆக்கள் ஒருதரும் அகப்படேல்லை. கொல்லப்பட்டது எல்லாம் அந்தப் பக்கத்தார்’ என்று கொலை பாதகக் கொடூரத்திலும் ஆதிக்க சாதி மனோபாவம் வெளிப்படும் மனோநிலையைத்தான் தெணியான் அம்பலப்படுத்தி இருந்தார்.

மேலாதிக்க ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்தில் ஒடுக்கப்பட்ட சமூகப் போராளிகளே மிகப் பெரும்பான்மையாகக் களப்பலி ஆகியிருந்தனர். பலவகை அழிவுகளுக்கு அதிகம் முகங்கொடுத்தவர்கள் ஒடுக்கப்பட்ட சாதிப்பிரிவினரே. அதற்கும் அப்பால், பேரினவாத - மேலாதிக்க ஒடுக்குமுறைக் கொடூரங்களுக்கு முகங்கொடுத்து அல்லற்பட்ட அனைத்து மக்களது வாழ்வியல் நெருக்கடிகளையும் மீட்சிக்கான போராட்டங்களையும் படைப்பாக்கவேண்டிய பொறுப்பு மார்க்சிய இலக்கிய கர்த்தாவுக்கு விதிக்கப்பட்டு இருப்பதனை மனங்கொள்வது அவசியம்!

இனத்தேசிய ஒடுக்கு முறைக்கான போராட்ட இலக்கிய வடிவத்துக்கு வேகவேகமாக மாறிய மார்க்சியப் படைப்பாளிகள் இருக்கின்றனர். அவர்கள் சாதி ஒடுக்கு முறைக்கு எதிரான எந்தவொரு ஆக்கத்தையும் வெளிப்படுத்தி இருக்கவில்லை. இன்று தலித் இலக்கியம் பெரிதும் பேசப்படுகிற நிலை ஏற்பட்டு இருப்பதனால் ‘சாதியத்தளம் சார்ந்து ஒரு படைப்பையும் எழுதாது இருந்ததற்காக வருந்துகிறேன்’ என்று சொல்லும் நிலையில் அவர்கள் அதுகூட, தமது உன்னதப் படைப்பாக்க வீச்சுக்கு ஒரு மணிமகுடமாகத் தலித் படைப்பும் வந்தமைந்து இருந்திருக்க வேண்டும் என்ற ஆதங்கத்தின்பாற்பட்டதே!

அனைத்துவகை மேலாதிக்க ஒடுக்குமுறைகளையும் தகர்த்து, விடுதலைத் தேசியச் சோசலிசத்தை வென்றெடுப்பதற்கான மார்க்சிய முறையினை தெணியான் வரித்துக்கொண்டு இருந்துள்ளார். அந்த வகையில் மார்க்சியப் படைப்பாளிகளில் முதல் வரிசைக்கு உரியவராகத் திகழ்கிறார் - மிக விரிவாக ஆய்வுக்கு உட்படுத்தும் போது இந்த உண்மை மேலும் துலக்கமுறும்!



raveendran.n@thaiveedu.com

# சமூகச் சிற்பியாக விளங்கியவர்

**- ச. சிவஶ்ரீ**

ஈழத்தின் புகழ்பூத்த எழுத்தாளரான க. நடேசு என்ற இயற்பெயரை உடைய தெணியான் அவர்களின் மறைவுக்கு எனது ஆழ்ந்த இரங்கலை முதற்கண் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தெணியான் என்ற பெயரைக் கேட்டவுடனே அவரது கம்பீரமான தோற்றமும் குரலுமே எனது ஞாபகத்திற்கு வந்து சேர்கின்றது. கரவெட்டி பிரதேச செயலராகப் பணியாற்றிய காலத்தில் அவரோடு மிக நெருங்கிப்பழகும் வாய்ப்புக்கிடைத்தது. கலாசாரப் பேரவையின் செயற்பாடுகளிலும் திருவுடையாள் மலர் வெளியீட்டிலும்



அவரது பங்களிப்புக் கணிசமானது. எதையும் அஞ்சாது நேரேகதைக்கும் துணிவும் சரியானதைச் செய்யவேண்டும் என்ற தெளிவும் அவரிடம் முதன்மைபெற்றிருப்பதைக் கண்டிருக்கின்றேன்.

1973ம் ஆண்டு விடிவை நோக்கி என்ற நாவல் வெளியீட்டில் இருந்து ஐந்து தசாப்தகாலமாகத் தனது நூல்களாலும் எழுத்துகளாலும் சமூகத்தை ஊடுருவி வெளிப்படுத்திய ஒரு சாதனையாளரின் மறைவு எமது சமூகத்திற்கு நேர்ந்திருக்கும் பேரிழப்பு ஆகும். ஒடுக்கப்பட்டவர்களுக்கு எதிரான தனது குரலை யாருக்காகவும் குறைத்துவிடாமல் முற்போக்கு அணியின் எழுத்தாளராகத் தன்னைப் பரிணமிக்கச் செய்தவர். பேராசிரியர் கா. சிவத்தம்பி முதலான பேராசிரியர்களின் நேசத்தினைப் பெற்றவர். கே. டானியல், டொமினிக் ஜீவா ஆகிய ஜாம்பவான்களோடு சமதையாகத் தன்னையும் விகசிக்க வைத்துத் தனக்கான இடத்தினை நிறுவியவர்.

கரவெட்டிப் பிரதேச செயலகத்தில் நான் பிரதேச செயலாளராகப் பணியாற்றிய காலத்திலேயே (2013) அரசின் உயர்விருதான ‘சாகித்திய ரத்னா’ விருது இவருக்கு வழங்கப்பட்டிருந்தது. கரவெட்டிக்குத் தேசிய ரீதியில் பெருமையினைத் தேடித்தந்த மூத்த எழுத்தாளர் இன்று எம்மத்தியில் இல்லை என்பது வேதனையைத் தருகின்றது. பதினான்கு நாவல்களையும், பல சிறுகதைத் தொகுதிகளையும், கட்டுரைத்தொகுதிகளையும் வெளியிட்டு சமூகத்தினைப் பற்றிய தனது சிந்தனைகளை வெளிப்படுத்திக்கொண்டே இருந்தவர். மேடைகளில் ‘கேட்டார் பிணிக்கும் தகையவாய் கேளாரும் வேட்ப மொழியும்’ ஒருவராக விளங்கினார். சொல்லாலும் எழுத்துகளாலும் சமூகச் சிற்பியாக விளங்கிய இவர், தார்மீகக் கோபத்தையும், சிந்தனைகளையும் இயல்பாகவே கொண்டிருந்தார் என்பதை அவரது எழுத்துகளில் காணமுடிகின்றது.

என்னோடு உரையாடும் போதெல்லாம் அவரது பிரதேசம் பற்றிய கனவுகளையும், ஆவணமாக்கல் தொடர்பான ஆசைகளையும் கேட்டிருக்கின்றேன். அவர் நம் மத்தியில் இல்லை என்றாலும் அவரது எழுத்துகள் சமூகத்தை நோக்கிய உரையாடல்களை நிகழ்த்திக்கொண்டே இருக்குமென்பது ஓர் ஆறுதலைத் தருகின்றது.

அவரது மறைவால் வாடியிருக்கும் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



info@thaiveedu.com



# ஈழத்து இலக்கிய வெளியில் தெணியானின் சிறுகதைகள் ‘மாத்துவேட்டி’ தொகுப்பை முன்வைத்து…

- மு. அநாதரட்சகன்

ஈழத்து நவீன தமிழ் இலக்கிய உலகில் தனித்துவமான ஆளுமையாக அடையாளப்படுத்தப்படுபவர், அண்மையில் காலமாகிய தெணியான். ஈழத்து இலக்கியம் பற்றிப் பேசும்போது அவரது பங்களிப்பினைத் தவிர்த்துவிட முடியாது. படைப்புத்துறையின் பல தளங்களையும் அலங்கரித்த ஒரு படைப்பாளி, பன்முக ஆளுமையாளர் தெணியான். ‘விவேகி’ என்ற சிற்றிதழில் ‘பிணைப்பு’ என்ற சிறுகதையுடன் 1964ல் இலக்கிய உலகில் பிரவேசித்தவர். இதுவரையில் நூற்றைம்பதுக்கு மேற்பட்ட சிறுகதைகளைப் படைத்துள்ளார். அவை சொத்து (1994), மாத்துவேட்டி (1996), இன்னொரு புதிய கோணம் (2007), ஒடுக்கப்பட்டவர்கள் (2010), தெணியானின் ஜீவ நதிக்கதைகள் (2012) - சிறுகதைத் தொகுப்புக்களாக வெளிவந்துள்ளன. அனைத்திலும் சமூக வாழ்வின் மானுடக்கூறுகளை பதிவுசெய்துள்ளார். அவை அனைத்தைப்பற்றியும் இதில் கூறுவது சாத்தியமற்றது. அவ்வகையில் மல்லிகைப்பந்தல் வெளியீடாக 1996ல் வந்த ‘மாத்துவேட்டி’ தொகுப்பிலுள்ள சிறுகதைகளை முன்வைத்துச் சில குறிப்புக்களை இப்பதிவு தருகிறது.

இக்கதைகள் தர்க்கபூர்வமான சமூகக்கூறுகளைக் கொண்டவை. தெணியான் தான் வாழ்ந்த யுகத்துக்குரிய முற்போக்கான சமூக விமர்சனங்களிலிருந்து தன்னை முற்றாக விலக்கிக் கொண்டவரல்ல. தனது முற்போக்கான சிந்தனைகளுக்கு சிறுகதையை ஒரு வாகனமாக ஆக்கிக் கொண்டவர். சிறுகதை பற்றிய பிரக்ஞை கொண்ட தெணியானிடம் சமூகம்பற்றிய பார்வைத் தெளிவு இருந்தது. சமூக முரண்கள் மீதான விமர்சனம் இருந்தது. அதன் வழிநின்று பல சிறுதைகளைத் தந்தவர் தெணியான்.

இத்தொகுப்பிலுள்ள மகுடக்கதை ‘மாத்துவேட்டி’ என்பது. இக்கதை எமது சமூகத்தில் ஒரு வழக்காறாக இருந்த சலவைத்தொழிலாளிகளிடம் மாத்து உடை வாங்கி உடுத்தும் மரபினை சாதியப்படிநிலை உறவின் ஒரு கூறாக ஆவணப்படுத்தியுள்ளார். இக்கதையில் யாழ்ப்பாணத்து வாழ்வியலின் இருண்ட பகுதியைப் பதிவுசெய்துள்ளார். இத்தகைய வாழ்வியல் முறையுடன் பிணைந்த இன்னொன்று, அதிகார மேலாண்மையாகும். குறிப்பாக, கிராமங்களில் விதானையாரின் அதிகாரங்கள் வன்மையாகவும் நிலைத்துவிடுகிறது. இதனை ‘உள் அழுகல்’ என்ற கதை பதிவு செய்துள்ளது. விதானையாருக்குப் பதவிவழிவந்த மனோபாவங்கள், வன்நடத்தைகளை இது அழகாகக் கூறுகிறது. அத்துடன் அதிகார மேலாண்மையின் நீட்சி, சாதியத்துடன் எவ்வாறு பிணைந்துள்ளது என்பதை வெளிப்படுத்துகிறது.

தொகுப்பின் இன்னொரு கதை ‘ஆண்மை’. சமூகத்தில் பாலியல் வரம்புகளும், மீறல்களும் அதன் நிரந்தரமான பிரச்சினைகளே என்பதைக் கூறுகிறது. சமூகத்தில் முழுநிறைவான வாழ்க்கை வாழும் ஆண்கள் - பெண்கள் என யாரும் இல்லை என்பதை அழகாகப் பதிவு செய்கிறது. சிக்கலானதும் வெளியே பேசமுடியாததுமான பாலியல் விடயத்தை வக்கிரம் இல்லாமல் இக்கதை வெளிப்படுத்துகின்றமை இதன் சிறப்பு.

அடிநிலை மக்களின் துன்ப துயரங்களை மனிதநேயத்துடன் வெளிப்படுத்தியவர் தெணியான். மனிதத்தின் வீழ்ச்சியையும், பிறழ்வையும், தடுமாற்றத்தையும், அனுதாபத்துடன் பார்த்தவர். ஏற்றத்தாழ்வான சமூக அமைப்பின்மீது அதிகக்குறைகளைக் கண்டவர் தெணியான். நெருக்கடிமிக்க போர்க்கால வாழ்விலும் ஏற்றத்தாழ்வினை மனிதர்கள் கைவிடவில்லை என்ற யதார்த்தத்தை ‘இன்னுமா’ என்பது சித்தரிக்கிறது. இதில் போர் நெருக்கீடுகளுக்குள்ளும் சாதியத்தைத் தக்கவைத்திருக்கும் தேசியத்தை கேள்விக்குட்படுத்துகிறார்.

‘மனிதம்’ என்ற கதை வடமராட்சி ‘ஒப்பரேசன் லிபரேசன்’ என்ற போர் நடவடிக்கையின் பின்புலத்தில் எழுதப்பட்டது. மனிதர்களின் பொய்முகங்களை இனங்காட்டும் கதையிது. இன்னொன்று ‘பூதம்’ என்ற கதை. ஐரோப்பிய நாடுகளுக்குப் புலம் பெயர்ந்தவர்களது குடும்பங்களின் வாழ்வியல் மாற்றங்கள், அதன் விளைவுகளை நுட்பமாகப் பதிவு செய்கிற கதையிது.

இத்தொகுப்பிலுள்ள ‘உவப்பு’, ‘நான் ஆளப்பட வேண்டும்’ என்கிற கதைகள் தெணியானின் அபூர்வமான அழகுணர்ச்சியையும், ரசணையில் திளைக்கின்ற மனோபாவத்தையும் காட்டுபவை. ‘உவப்பு’ காகங்களைப் பாத்திரங்களாக உருவகித்து, போரின் கொடுமையால் மனிதப்பிணங்கள் தெருத்தெருவாய் மீந்துபோன அவலத்தை மிகுந்த அழகியல் தன்மையோடு பதிவு செய்கிறது. குடும்ப உறவுகளின்பால் அன்பின் நெகிழ்ச்சியில் உருகும் மனம் தெணியானுடையது. போர் நெருக்கடியிலும், வாழ்வின் அழகுகளில் பரவசம் கொண்டு, உறவுகளின் இருப்பில் குதூகலம் கொள்ளும் அவரது மனதை ‘நான் ஆளப்பட வேண்டும்’ என்ற கதை நேர்த்தியுடன் பதிவு செய்கிறது.

தொகுப்பில் ‘காலத்தால் சாகாதது’ என்கிற கதை சாதியத்தின் இயங்குநிலை இந்துக்களின் சமயாசார வாழ்வுடன் இணைந்து, பண்பாட்டின் முக்கிய கூறாக நிலைத்துள்ளமைபற்றிக் கூறுகிறது. சாதித்தூய்மை சடங்காசாரங்களுடன் நிலைபெற்ற அவலத்தைப் பதிவு செய்கிறது.

தெணியான் தனது சிறுகதைகளில் முரண்களை உருவாக்கி, நல்ல அனுபவங்களை வாசகரிடத்தில் தொற்றவைப்பதில் கைதேர்ந்தவர். அவை முன்முடிவுகளைக் கொண்டவை. எனினும் அவரது சிறுகதைகளில் அனுபவச்செறிவும், யதார்த்தப்பண்பும் செழுமை கொண்டிருக்கும். அவற்றில் எதை, எப்படி, யாருக்குச் சொல்ல வருகிறேன் என்கிற தெளிவும் தீர்மானமும் இருக்கும். இறுதிவரை சலிப்பின்றி எழுதியவர். கால ஓட்டத்தில் தேங்கி விடாது, புதியவற்றை உள்வாங்கிப் புத்துணர்வுடன் இலக்கியவெளியில் இயங்கியவர். தனது படைப்புக்களில் மொழி, வடிவம், உள்ளடக்கம், உத்தி என்பவற்றில் புதுமைசெய்ய முனைந்துநின்ற படைப்பாளி தெணியான்.

தெணியானுக்கும் எனக்குமிடையிலான உறவு பவித்திரமானது. ஆத்மார்த்தமானது. காலத்தின் மடியில் நிறைவேறாமல் தேங்கிய அவரது வேண்டுதல்கள், என்னுள் இன்னும் கனவாகவே எஞ்சி நிற்கின்றன. மனதுக்கு நெருக்கமாக இருந்தவரின் மரணத்திற்குப் பின் இச்சிறிய பதிவினை அவரது நினைவுகளில் சமர்ப்பிக்க முடிந்தது ஓர் ஆறுதலைத் தருகிறது.



info@thaiveedu.com

# இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தில் தெணியானின் வகிபாகம்

- லெ. முருகபூபதி

ஈழத்து நவீன தமிழ் இலக்கிய வளர்ச்சியில் தெணியான் மூன்றாவது தலைமுறையைச்சேர்ந்த படைப்பாளி.

அவர் 1964ல் இலக்கியப்பிரவேசம் செய்கிறார். அதற்குப் பத்தாண்டுகளுக்கு முன்னர் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் 1954ம் ஆண்டு கொழும்பில் உதயமாகிறது.

இச்சங்கத்தில் இணைந்திருந்த டொமினிக் ஜீவா, 1966ல் யாழ்ப்பாணத்திலிருந்து மல்லிகை கலை, இலக்கிய மாத இதழை ஆரம்பிக்கின்றார்.

தெணியானும் முற்போக்கான சிறுகதைகளை அக்காலப்பகுதியில் எழுதத் தொடங்குகிறார். முற்போக்கு எழுத்தாளர் சங்கம்,




கொழும்பில் தொடங்கப்பட்டிருந்தாலும் படிப்படியாக அதன் பணிகளை வடக்கு, கிழக்கு, மலையகம், தென்னிலங்கை எங்கும் விஸ்தரிக்கின்றது. அத்துடன் 'புதுமை இலக்கியம்' என்ற இதழையும் வெளியிட்டுக் காலத்துக்குக் காலம் சிறப்பு மலர்களையும் வரவாக்கியது.

இச்சங்கத்தில் அரசியல் சார்ந்து இயங்கியவர்கள் பெரும்பாலும் இடதுசாரிகளாகவும், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களாகவும் இருந்தனர்.

வடபுலத்தில் அடிநிலை மக்களின் குரலாகவும் இவர்கள் செயற்பட்டபோது, தெணியானும் அவர்களில் ஒருவராகின்றார்.

எனினும் சர்வதேச ரீதியாக கம்யூனிஸ இயக்கம் வலது - இடது என பிரிந்தபோது, தெணியான் ரஷ்யசார்பு நிலையை எடுக்கிறார். எனினும் இரண்டு அணிகளையும் சேர்ந்தவர்கள் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தில் ஒன்றுபட்டிருந்தனர்.

இச்சங்கம் இலக்கிய இயக்கமாக மாத்திரமன்றி, தேசிய இனப்பிரச்சினை குறித்தும் ஆக்கபூர்வமாகச் சிந்தித்துச் செயலாற்றியது. அதற்காக 12 அம்சத் திட்டத்தை முன்மொழிந்து, 1974ம் ஆண்டு கொழும்பில் இரண்டு நாட்கள் தேசிய ஒருமைப்பாட்டு மாநாட்டையும் நடத்தியது. இக்காலப்பகுதியில் வடக்கில் சங்கத்தின் கிளையில் தெணியானும் இணைந்து செயலாற்றினார். கருத்தியல் ரீதியில் கே. டானியல் சங்கத்துடன் முரண்பட்ட இக்காலப்பகுதியில், அவருடன் இலக்கிய ரீதியில் உறவைத் தொடர்ந்து பேணியவாறே தெணியான் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்துடன் தனது நெருக்கத்தைக் கொண்டிருந்தார்.

டொமினிக் ஜீவா, 'மல்லிகை' இதழில் தனது கவனத்தை முழுநேரமும் குவித்திருந்தமையால், சங்கத்தின் யாழ். கிளையின் செயலாளருக்கான பொறுப்பினை தெணியான் ஏற்கநேர்ந்தது.

1983ம் ஆண்டு தொடக்கத்தில் சங்கம் நாடளாவிய ரீதியில் பாரதி நூற்றாண்டை கொண்டாடுவதற்கு ஆயத்தமானபோது தெணியான் அதற்கான பணிகளை யாழ்ப்பாணத்தில் முன்னெடுத்தார். பாரதி இயல் ஆய்வாளர்களான தொ.மு.சி. ரகுநாதன், பேராசிரியர் எஸ்.-இராமகிருஷ்ணன், எழுத்தாளர் ராஜம் கிருஷ்ணன் ஆகியோர் தமிழகத்திலிருந்து சங்கத்தால் அழைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களின் வடமாகாண பயணங்களின்போது, தெணியான் அங்கு சந்திப்புகள், பொதுக்கூட்டங்கள் முதலானவற்றை ஒழுங்கு செய்ததுடன், குறிப்பிட்ட நிகழ்வுகளுக்கு தேவைப்பட்ட நிதியையும் திரட்டிக்கொடுத்தார்.

தமிழக பேச்சாளர்களின் உரைகள் யாழ். வீரசிங்கம் மண்டபத்திலும் யாழ். பல்கலைக்கழகத்திலும் நடந்தன. மானிப்பாய் எம்.பி. வி. தருமலிங்கம் தலைமையில் வீரசிங்கம் மண்டபத்திலும் துணை வேந்தர் சு. வித்தியானந்தன் தலைமையில் பல்கலைக்கழகத்திலும் நடைபெற்றதிலிருந்து ஒரு விடயத்தைப் புரிந்துகொள்ள முடியும். இவர்கள் இருவரும் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்துடன் நெருக்கமானவர்கள் அல்ல. தமிழரசுக்கட்சியுடனும் தமிழர் கூட்டணியுடனும் அரசியல் ரீதியில் நெருக்கமானவர்கள். மாற்றுக்கருத்துக்களுக்கு அப்பால், தெணியான் இவர்களுடனும் ஆரோக்கியமான உறவைப் பேணியிருந்தவர். அதனாலும் இது சாத்தியமானது.

தெணியானின் இந்த இயல்புகளை அவர், உடுப்பிட்டி தொகுதியில் இராசலிங்கம் அவர்கள் கூட்டணியின் சார்பில் போட்டியிட்டபோது, அவரது வெற்றிக்காக தேர்தல் மேடைகளில் பேசியதன் மூலம் காண்பித்துமிருந்தவர். சிறுபான்மை மக்கள் பிரதிநிதியின் குரல் நாடாளுமன்றில் ஒலிக்கவேண்டும் என்ற சிந்தனையை அன்று தெணியானிடம் கண்டோம்.

'படைப்பாளி தனது படைப்பினைவிட மேலோங்கியிருக்கவேண்டும்' என்பார் மாக்சிம்கோர்க்கி. அவ்வாறு வாழ்ந்தவர் தெணியான். அதனால்தான் மாற்றுக்கருத்தியல் கொண்டிருந்தவர்களுடனும் அவரால் நெகிழ்வுத்தன்மையுடன் உறவாட முடிந்தது.

முற்போக்கு எழுத்தாளர் சங்கம் 1975களில் கொழும்பில் மாதாந்த கருத்தரங்குகளை நடத்தியது. அதேகாலப்பகுதியில் நடந்த க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் தோற்றிய மாணவர்களின் விடைத்தாள்களை மதிப்பீடு செய்வதற்காக தெணியான் கொழும்புக்கு வந்திருந்தார். அக்காலப்பகுதியில் தெணியான் தொகுத்திருந்த வடமராட்சி எழுத்தாளர்களின் சிறுகதைத் தொகுப்பு பேராசிரியர் கா. சிவத்தம்பியின் முன்னுரையுடன் வெளியாகியிருந்தது.

இந்த நூலை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் பேசுபொருளாக எடுத்து கொழும்பு பிரதான வீதி, முஸ்லிம் லீக் வாலிப முன்னணி மண்டபத்தில் ஒரு அறிமுக நிகழ்வை நடத்தியபோது தெணியானும் உரையாற்றினார். அந்த நூலில் சிவத்தம்பியின் முன்னுரை வாதப் பிரதிவாதங்களை எழுப்பியபோது, தெணியான் தெளிவு-படுத்தினார்.

1986ம் ஆண்டு நவம்பர் மாதம் வடக்கில் போர் மேகங்கள் சூழ்ந்திருந்தபோது, இராணுவத்தினர் யாழ். கோட்டையில் முடக்கப்பட்டிருந்தனர். முழு யாழ். குடாநாடும் விடுதலை இயக்கங்களினது கட்டுப்பாட்டில் இருந்தது. அச்சமயம் நல்லூர் நாவலர் மண்டபத்தில் தேசிய இனப்பிரச்சினையில் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் நிலைப்பாட்டினை விளக்கும் மாநாடு நடந்தது. அதன் பின்னணியிலும் தெணியானின் பங்களிப்பு முக்கியமானது. இம்மாநாட்டில் கவிஞர்கள் புதுவை இரத்தினதுரை, சேரன், முருகையன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

அந்த மாநாட்டிற்கு எதிராகவும் சிலர் 'யாழ். ஈழநாடு'இல் அறிக்கை வெளியிட்டனர். எனினும் மாநாடு திட்டமிட்டவாறு சிறப்பாக நடந்தது.

முற்போக்கு எழுத்தாளர் சங்கம் எதிர்நோக்கிய சவால்களின் பேதெல்லாம் தெணியான் உறுதியோடு
செயல்பட்டார் என்பதற்கு நானும் ஒரு சாட்சி.



murugaboopathi@thaiveedu.com



# தேவரையாளிச் சமூக வரலாற்று எழுதியலில் தெணியானின் வகிபாகம்

- இ. இராஜேஸ்கண்ணன்

ஒடுக்கப்பட்டோரின் வரலாற்று எழுதியலில் புனைகதை ஆசிரியர்களின் பங்கு மிக முதன்மையானதாக இருந்துவந்துள்ளது. குறிப்பாக ஒடுக்கப்பட்டோரின் வாழ்வை நாவல்களாக எழுதியுள்ள எழுத்தாளர்கள் பலரும் அந்தச் சமூகங்கள் தொடர்பான ஆழமான சமூக வரலாற்றுப் புரிதலுடன் தங்கள் புனைவுகளைத் தந்துள்ளனர். காலனிய காலத்து ஆய்வுகள் முன்னிறுத்திய மையநிலைச் சமூகங்கள் பற்றிய ஆய்வுகளில் மறைந்துபோன பல ஒடுக்கப்பட்ட சமூகங்களின் வரலாறு பின்னாளில் நாவல்களில் வெளிப்பட்டமைக்கு உலகளாவிய எடுத்துக்காட்டுகள் பல உள்ளன. அத்தகைய எழுத்துக்கள் ஒடுக்கப்பட்ட சமூகங்கள் பற்றிய காலனிய நீக்கம் செய்யப்பட்ட வரலாற்றை கறுப்பு-வெள்ளைப் பிரதிகளாக தந்தன. அவை புனைவுகள் என்று புறந்தள்ளிவிட முடியாத சமூக வரலாற்று ஆவணங்களாக மதிப்பளிக்கப்படுகின்றன. அவை சம நேரத்தில் புனைவுகளாகவும் வரலாற்று ஆவணங்களாகவும் இரட்டை மதிப்புடன் நிலைபெற்றன. தமிழ்ச் சூழலிலும் இது குறிப்பிடத்தக்களவு நிகழ்ந்துள்ளது. குறிப்பாக இந்தியத் தமிழ் இலக்கியச் சூழலில் கணிசமான அளவிலும், இலங்கைத் தமிழ் இலக்கியச் சூழலில் ஓரளவிலும் இது சாத்தியமாகியுள்ளது. ஈழத்தில் இதற்கான இலக்கிய வாயிலைத் திறந்துவிட்டதில் மிகமுக்கிய பங்கு இடதுசாரிய சிந்தனையோடு இலக்கியம் படைத்தவர்களுக்கு உண்டு.

பின்-காலனிய சமூக மாற்றத்தையும் அது உருவாக்கிய விளைவுகளையும் அவற்றின் வழியான நுட்பமான சமூக மீள்-கட்டமைப்பாக்கத்தையும் மிக ஆழமான விஞ்ஞானபூர்வமான கண்ணோட்டத்துடன் ஆராய்ந்து அவற்றை சமூக வரலாற்று ஆய்வுகளாக முன்வைத்த இடதுசாரிய கொள்கை நாட்டமுள்ள புலமைசார் எழுத்துக்கள் குறிப்பிடத்தக்களவு வெளிவந்த சமகாலத்தில், இன்னொரு தளத்தில் புனைவிலக்கியங்களைப் படைத்தவர்களும் அதே கருத்துநிலைகள் கொண்ட இலக்கியங்களைப் படைத்தனர். குறிப்பாக நாவலிலக்கியங்கள் சமூக வரலாற்றைக் கலைத்துவத்துடன் பதிவாக்கும் ஆவணங்களாக உருப்பெற்றன. இலங்கையைப் பொறுத்தவரை இந்த இரட்டை தடத்திலான ஓட்டம் தமிழ்ச் சூழலில் மட்டுமன்றி சிங்களச் சூழலிலும் நன்கு அடையாளப்படுத்



தத்தக்க செழிப்புடன் இருந்தது. இதற்கு உறுதுணையான இடது சாரிய அரசியல் சூழலும் வாய்த்திருந்தது. புலமை, புனைவு, ஆட்சி ஆகிய மூன்றும் ஒன்று இன்னொன்றுக்கு அனுசரணையாக இருந்த காலத்தில்தான் இடதுசாரிய இயக்கங்களிலிருந்து பல படைப்பாளிகள் தோன்றினர். அவ்வாறு தோன்றியவர்களின் சமூ கம் பற்றிய பார்வை தனித்தன்மைகளோடு புனைவுகளில் வெளிப் பட்டன. அத்தகைய எழுத்தாளர்களில் ஒருவரான தெணியான் தனது நாவல்களைச் சமூக வரலாற்றுப் பதிவுகளாகவே வெளிக் கொணர்ந்திருந்தார். சிதைவுகள், மரக்கொக்கு, பரம்பரை அகதி கள், ஏதனம், குடிமைகள் போன்ற நாவல்களில் மாத்திரமன்றி அவரது பல சிறுகதைகளிலும் கட்டுரைகளிலும் தெணியானை ஒரு சமூக வரலாற்று ஆசிரியனாகத் தரிசிக்க முடியும். இது பற்றி இந்தக் கட்டுரை ஆசிரியர் எழுதிய சமூக வரலாற்று ஆசிரியனாக நாவலாசிரியன்: தெணியானின் நாவல்களை முன்வைத்த புரிதல்' (பார்க்க: நயம்பட: படைப்பு - படைப்பாளி - படிப்பு (2020) பக்.5-14) எனும் கட்டுரையும் விரிவாகக் குறிப்பிடுகிறது.

கடந்த ஐம்பது ஆண்டுகாலத்து யாழ்ப்பாண சமூகத்தின் மாற்றங் களை புரிந்துகொள்வதற்கான புனைவு நிலைப்பட்ட ஆய்வுத் துணைமூலங்களாக தெணியானின் நாவல்கள் அமையும் என்ப தற்கு அப்பால், தெணியான் நேரடியாக தான் வாழ்ந்த சமூகத்தின் வரலாற்று எழுதியலில் எந்தளவுக்கு முக்கியத்துவமுடையவராக விளங்கினார் என்பது தனித்துப் பார்க்கப்படவேண்டிய ஒரு விடய மாகும். இதற்கு அவரது புனைவல்லா எழுத்துக்களை ஆழமாக பகுப்பாய்வு செய்யவேண்டியுள்ளது. 'இன்னும் சொல்லாதவை', 'பூச்சியம் பூச்சியமல்ல' எனும் தெணியானின் தன் வரலாற்று நூல் களையும் உதிரிகளாக அவரால் எழுதப்பட்ட ஆழமான கருத்து நிலை அடித்தளத்துடன் கூடிய கட்டுரைகளையும் ஒருங்குவைத்து ஆராய்தல் அவசிமாகின்றது. 'தேவரையாளிச் சமூகம்' என கா.சிவத்தம்பி போன்ற புலமையாளர்களால் அடையாளப்படுத்தப் பட்ட சமூகத்தின் வரலாற்றை தனது மாணவப் பருவத்திலிருந்தே அனுபவரீதியாகவும் அறிவியல் அடிப்படைகளுடனும் பதிவாக்க வல்ல தேட்டம் தெணியானிடமிருந்தது.

இலங்கையில் வடக்கேயுள்ள பிராந்தியமான யாழ்ப்பாணத்தின் வடக்கில் வடமராட்சிப் பிரதேசத்தில் வதிரி எனும் ஊரில் 1914ல் உருவாகிய திண்ணைப்பள்ளி மரபிலமைந்த வித்தியாசாலை, பின் னர் 1917ல் வதிரி, வடக்கு மற்றும் தெற்கு அல்வாய், கொற்றா வத்தை, தேவரையாளி, நவிண்டில், சமரபாகு முதலான அருகருகி லுள்ள கூட்டுக் கிராமங்களின் மையத்திலமைந்த தேவரையாளி எனும் ஊரில், இந்த ஊர்கள் யாவற்றையும் ஒரு சமூகமாகக் கருதி 'தேவரையாளி சைவ வித்தியாசாலை' என்ற பெயருடன் சைவப்பெரியார் திரு. கா. சூரன் அவர்களால் தாபிக்கப்பட்டது. இன்று அந்தப் பாடசாலை 'தேவரையாளி இந்துக் கல்லூரி' என்று அறியக்கிடக்கிறது. குறிப்பிட்ட ஊர்களில் வாழ்ந்துவரும் மக்கள் யாவரும் தொழில்சார் உறவில் தனித்துவமான வேறுபாடுக ளைக் கொண்டவர்கள் எனினும் சாதி ரீதியாக ஒரே சமூகமாக அடையாளப்படுத்தப்பட்டவர்கள். குறிப்பிட்ட ஊர்களின் பிள்ளைக ளும், அதற்கு அப்பாலுமுள்ள சாதிரீதியான நெருக்கமுள்ள சமூ கங்களிலிருந்து வந்த பிள்ளைகளும் அங்குதான் கற்றுவந்தனர். அந்த ஊர்களில் சாதிய சமூகக் கட்டமைப்பில் ஏற்பட்டிருந்த அசைவியக்கத்துக்கு அந்தப் பாடசாலை பிரதான காரணமாகவும் களமாகவும் அமைந்தது. இதனால்தான் அந்தச் சமூகம் 'தேவரை யாளிச் சமூகம்' என்று அடையாளப்படுத்தப்பட்டது. தெணியான் அந்தப் பாடசாலையின் மாணவன், அந்தப் பாடசாலையின் ஆசிரி யன், அந்தச் சமூகத்தின் பிரதிநிதி, அந்தச் சமூகத்திலிருந்து உருவான முன்னணிப் படைப்பாளன் எனும் அடிப்படைகளில் அந்தச் சமூகத்தின் தாரதம்மியங்களையும், ஆழஅகலங்களையும், பலம் பலவீனங்களையும் நுணுக்கமாக பகுத்தாய்ந்து பதிவாக்கும் வீரியம்மிக்க எழுத்தாளனாக இருந்து வந்துள்ளார்.

தேவரையாளிச் சமூகத்தின் இருப்பையும் அதன் அசைவியக்கத் தையும் பதிவாக்குவதற்கான அவரது முயற்சியில் பல்வேறு விட யங்கள் உள்ளடங்கியிருந்தன. அவற்றில் சில முதன்மையான விடயங்களைச் சுருக்கமாக குறிப்பிடலாம்.

தேவரையாளி சைவ வித்தியாசாலையில் தெணியானின் ஆசிரியர் களாக அல்லது முன்னோடிகளாக இருந்தவர்களின் கருத்துநிலை களின் சுவறல்களும், அவர்களின் கருத்துநிலைகள் தொடர்பான விமர்சனப் பார்வைகளும் தெணியானுக்கு தேவரையாளிச் சமூகத் தின் போக்குகளை நுணுக்கமாக ஆராய வழிவகுத்தது. கா. சூரன் அவர்களின் சுவட்டில் இயங்கிய அல்வையூர் கவிஞர் மு. செல்-லையா, வதிரி சைவப்புலவர் சி. வல்லிபுரம், வட அல்வை க.முருகேசு வாத்தியார், வதிரி ஆ.ம. செல்லத்துரை ஆசிரியர் முதலானவர்களிடம் கல்வி கற்றவர். தேவரையாளிச் சமூகத்தின் முன்னோடிகளான அவர்கள் அந்தச் சமூகத்தின் கற்ற முன்னோடி களாக உருவெடுப்பதில் எதிர்கொண்ட சவால்களை மாணவனாக உடனிருந்து அறிந்து பதிவாக்கும் தெளிவு தெணியானிடம் இருந் தது.

குறித்த ஆசிரியர்கள் கடைப்பிடித்த காந்தியக் கொள்கை, சைவப் பாரம்பரியம் என்பவற்றின் காலகட்டப் பொருத்தம் மிக்க வழிமு றைகளின் தேவைகளை உணர்ந்த நிலையிலும், பின்னாளில் அவர்கள் பின்பற்றிய கொள்கைகளை விமர்சிக்கவும் தலைப்பட்ட வர். அந்த விமர்சனங்களை தனது எழுத்துக்களிலும் பேச்சுக்களி லும் பதிவாக்கியிருந்தார். ஒடுக்கப்பட்ட மக்களது விடுதலைக்கான வழிமுறையாக காந்தியம் அமைந்துவிட முடியாது என்பதை தான் சார்ந்த மாக்ஸியக் கருத்துநிலையை மையப்படுத்தி விளக்கியிருந் தார். இதனால் தேவரையாளிச் சமூகத்தில் எழுச்சிபெற்றிருந்த காந்தியம், தேசியவாதம், இடதுசாரியம் ஆகிய கொள்கைகளுக் கும் அந்தச் சமூகத்தின் விடுதலைக்குமான தொடர்பினை அவற் றுக்கிடையிலான முரண்நகைகளுடன் ஆழமாக விவாதித்தவராக விளங்கியிருந்தார்.

தேவரையாளிச் சமூகத்தின் கல்விகற்ற முதல் சந்ததியைச் சேர்ந்த வர்களான காந்திய வாதிகளிடம் கற்ற மாணவரான தெணியான், சமூக விடுதலைக்கான போராட்டத்தின் ஆரம்பம் அந்த ஆசிரியர் களிடத்திலிருந்துதான் உருவானது என்பதை அழுத்தமாக உரைத் திருந்தார். எனினும் அவர்கள் ஆலய நுழைவுப் போராட்டங்களில் கம்யூனிட்டுக்களின் தலையீட்டை நிராகரித்திருந்ததைச் சுட்டிக்காட் டியிருந்தார். குறிப்பாக மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் நுழைவுப் போராட்டத்துக்கு முன்பே தேவரையாளிச் சமூகத்தின் ஆசிரிய முன்னோடிகளால் 1956ம் ஆண்டில் பரந்த நோக்கில் முன்னெடுக் கப்பட்ட ஆலயநுழைவு முன்னெடுப்புகள் வெற்றிகரமாக நிகழ்ந் ததைக் குறிப்பிடுகின்றார். இதன் மூலம் ஒடுக்கப்பட்ட சமூகத்தின் விடுதலைக்கான வழிமுறைகள் தொடர்பில் தேவரையாளிச் சமூகத் தில் நிலவிய 'இரட்டை போக்குகளை' விமர்சனப் பாங்கில் விளக் கியிருந்தார்.

தேவரையாளிச் சமூகத்தின் அசைவியக்கத்தில் கல்வி மற்றும் சம யத்தின் வகிபாகம் தொடர்பாக தெணியான் ஆழ்ந்த தரிசனங்க ளைக் கொண்டிருந்தார். தேவரையாளிச் சைவ வித்தியாசாலையின் உருவாக்கமும் சமூக அசைவியக்கத்தில் அதன் பங்கும் தொடர் பில் நீண்டகாலத்து வரலாற்றுப் பதிவுகளை தெணியான் தனது எழுத்துக்களில் கொண்டுவந்துள்ளார். குறிப்பாக 'ஒடுக்கப்பட்ட மக்களின் ஏகத்தலைவன் எம்.சி.'(2004), 'சமூக ஜனநாயக மறும லர்ச்சித் தந்தை'(1995), தேவரையாளிச் சமூகமும் ஆசிரியர் க. முருகேசு அவர்களும்'(1993) போன்ற இன்னும் பல கட்டுரைகள் மூலமும் தேவரையாளிச் சமூகம் தொடர்பான முதன்மையான வர லாற்றுப் பதிவுகளைத் தந்துள்ளார்.

மேற்குறித்த விடயங்கள் விரிவஞ்சி சுருக்கமாக குறிப்பிடப்பட்டா லும், அவை புனைகதை ஆசிரியனாகவும், சமூக வரலாற்று ஆசி ரியனாகவும் தெணியானை இனங்கண்டுகொள்வதற்கான அடிப்ப டைகளைத் தருகின்றன. பெருந்தளத்தில் யாழ்ப்பாண சமூக வர லாற்றை நோக்குபவர்களுக்கு அவரது நாவல்கள் எந்தளவுக்கு ஆதாரங்களாக அமைகின்றனவோ, அந்தளவுக்கு அவரது புனைவு சார் எழுத்துக்கள் பல தேவரையாளிச் சமூக வரலாற்றை நோக்க முனைபவர்களுக்கு ஆதாரங்களாக அமைகின்றன. இதனால் தேவரையாளிச் சமூகத்தின் வரலாற்று எழுதியலில் தெணியானின் பங்கைத் தவிர்த்துவிட்டு அதன் முழுமையை அடையமுடியாது எனலாம்.



info@thaiveedu.com



# விடைபெற்றது, இலக்கிய உலகின் பேராளுமை

- சிவஞானம் சிறீதரன்

ஈழத்து இலக்கியப் பரப்பின் முதுபெரும் ஆளுமையான 'தெணியான்' என்று அறியப்படும் ஓய்வுநிலை ஆசிரியர் திரு. கந்தையா-நடேசன் அவர்கள் தனது 80வது அகவையில் மறைந்த செய்தி கலை, இலக்கியப் பரப்பினரிடையேயும், அவரையும் அவரது படைப்புக்களையும் ஆழ நேசித்தவர்களிடையேயும் ஆழ்ந்த கவலையை ஏற்படுத்தியிருக்கிறது.

யாழ். வடமராட்சி, பொலிகண்டிப் பிரதேசத்தின் 'தெணி' என்னும் சிற்றூரைப் பூர்வீகமாகவும், வாழ்விடமாகவும் கொண்டிருந்த இவர், 1964ல் 'விவேகி' என்னும் சிற்றிதழில் வெளியான 'பிணைப்பு' சிறு-கதை மூலம் தனது எழுத்துலகப் பிரவேசத்தை ஆரம்பிக்கும் போது, 'தெணி' என்னும் தன் ஊரின் அடையாளத்தை 'தெணியான்' என்னும் தனக்கான அடையாளமாக்கியிருந்தார். ஆனால் ஓரிரு ஆண்டுகளிலேயே அந்த ஊரின் அடையாளமாகத் தானே மாறி, பின்வந்த நாட்களில் பரந்துவிரிந்த தமிழிலக்கியப் பரப்பின் ஒரு தனித்த அடையாளமாகத், தவிர்க்க முடியாத ஆளுமையாக மாறிப்போயிருந்தார்.

அக்கால யாழ்ப்பாணச் சமூகத்தோடு பின்னிப் பிணைந்திருந்த சாதிய ஒடுக்குமுறைக்கும், வர்க்க முரண்பாடுகளுக்கும் எதிரான முற்போக்கு எழுத்தாளர்களாக யாழ்ப்பாணத்திலிருந்தே முகிழ்ப்புப்பெற்ற கே. டானியல், பேராசிரியர் கா. சிவத்தம்பி, மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா உள்ளிட்ட முற்போக்கு எழுத்தாளர்கள் வரிசையில், ஈழத்து முற்போக்கு இலக்கியத்தின் செல்நெறி வெளிப்பாடுகளை மையப்படுத்தி யாழ்ப்பாணச் சமூகத்தின் வெவ்வேறுபட்ட உணர்திறன்களை, வாழ்வியல் போக்குகளை அடையாளம் காட்டுவனவாக அமைந்திருந்த இவரது படைப்புக்கள் பெரும்பாலும் சாதியத்தின் பிடிக்குள்ளான மனித வாழ்வின் அழுத்தங்களாலும், துடிப்புக்களாலும், போராட்டங்களாலும் கட்டமைக்கப்பட்டிருந்தமையே அவை அடித்தட்டு மக்களையும் சென்றடையக் காரணம்.

வெறுமனே ஒரு கலை இலக்கியப் படைப்பாளியாக அல்லாமல், மானிட விடுதலை நோக்கிய சமூக ஒன்றிணைவின் குரலாகவே அரை நூற்றாண்டுக்கும் மேலான தனது இலக்கியப் பணியை அவர் ஆற்றிச் சென்றிருக்கிறார். இலங்கை அரசின் மதிப்புறு உயர் விருதான 'சாகித்திய ரத்னா' மற்றும் 'கலாபூஷணம்' உள்ளிட்ட பல விருதுகளைத் தனதாக்கிக் கொண்ட தெணியான், 150ற்கும் மேற்பட்ட சிறுகதைகள், 30ற்கும் அதிகமான கவிதைகள், 14 நாவல்கள் - குறுநாவல்கள், 5 வானொலி நாடகங்கள் என்பவற்றோடு, நூற்றுக்கணக்கான கட்டுரைகள் மற்றும் விமர்சனங்களைப் படைத்தளித்ததனூடு, ஈழத்துக் கலை இலக்கியப் பரப்பில் என்றென்றைக்கும் நீங்கா இடம் பிடித்துள்ளமை, ஒரு படைப்பாளியாக அவரது படைப்புக்களுக்குக் கிட்டியிருக்கின்ற வெகுமதியும், அங்கீகாரமுமே!

இருந்தபோதும், ஈழ இலக்கிய வெளிக்கு அப்பால் தமிழக வாசகர்களையும் தனது படைப்புக்களால் கவர்ந்திழுத்த தெணியா-னுக்கும், அவரது படைப்புக்களுக்கும் இலங்கையில் சரியான அங்கீகாரம் வழங்கப்படவில்லையோ என்ற ஆதங்கமும் எம் நெஞ்சை நெருடாமலில்லை. ஆனால், கலாநிதி அல்லைப்பிட்டி திருநாவுக்கரசு அவர்கள் தனது முனைவர் பட்டப்படிப்புக்காக ஈழத்து இக்கிய முன்னோடியான டானியலின் படைப்புக்களை முழுமையாக ஆய்வுசெய்ததைப் போன்று, இனிவரும் காலங்களில் தெணியானின் படைப்புக்களும் ஆய்வுக்கு உட்படுத்தப்படுவதன் மூலம், அவரும் அவரது படைப்புக்களும் இப்போதிருப்பதைக் காட்டிலும் இன்னும் அதிகமாக ஆராதிக்கப்படும் என்ற ஆழ்மன நம்பிக்கையோடு, அன்னாரது ஆத்மா அமைதிபெறப் பிரார்த்திக்கும் அதேவேளை, இப்பேரிழப்பால் பரிதவித்து நிற்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும், இலக்கிய உறவுகளுக்கும் என் அனுதாபங்களைப் பகிர்ந்து கொள்கிறேன்.



info@thaiveedu.com



# ‘மரக்கொக்கு’ம் நிலமேலாண்மைச் சமூகத்தின் சரிவும்

**- மாதவி சிவலீலன்**

நிலவுடைமை, பொருளாதாரம் என்பன சார்ந்த அதிகாரத்தின் சிதைவு, சாதியத் திமிரையே தளம்ப வைக்கின்றது என்பதனை மையப்படுத்தியதே எழுத்தாளர் தெணியான் அவர்களது ‘மரக் கொக்கு’ நாவலாகும். ஈழத்துத் தமிழ் மக்களின் வாழ்வியலை நிலம் சார்ந்து, அவர்களது சமூகப்பாகுபாடுகள் சார்ந்து எழுதிய முக்கிய எழுத்தாளர்களில் ஒருவராக இவரைக் கொள்ளலாம். அந் தவகையில் இவரது படைப்புலகமென்பது ஒடுக்கப்பட்ட மக்களுக் கான குரலாக இருந்திருக்கின்றது.

யாழ்ப்பாணச் சமூகத்தில் புரையோடிக் கிடக்கும் ‘சாதியம்’ என் பது மிகவும் வலிமை பொருந்திய சொல்லும், கருத்தியலுமாகும். தன்னையொத்த இன்னொரு மனிதரை அடிமையாக்குவதும் தன்னை மேன்மையானவராகப் பாவனை செய்வதும் அருவருக்கத் தக்க விடயமாகும். மானிட விடுதலையை நாடும் எவருமே இதனை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். ஆனாலும் இவற்றையெல் லாம் எந்தக் கூச்சமுமின்றி யாழ்ப்பாண நிலப்பிரபுத்துவ மேட்டுக்



குடிகள் தற்பெருமையுடன் செய்துவந்துள்ளன. இன்றும் நீறுபூத்த நெருப்பாக அது தணல் கக்கிய வண்ணமேயுள்ளது. சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் சுவாலைவிட்டு எரியத் தயங்கியது மில்லை. காலத்துக்குக் காலம் இச்சாதியம் தன்னை மாற்றிக் கொண்டு உயிர்ப்புடன் விளங்குவதைக் காணலாம். அத்துடன் எதுவுமில்லாமல் இச்சாதியத்தை மட்டும் தமக்குரிய அடையாள மென எண்ணும் பலர் இன்றும் அது தரக்குறைவான விடயமெனும் அறிவின்றி வாழக் காணலாம். மேலும் சாதிக்குள் சாதி பார்க்கும் மனோபாவமும் இன்னும் எம்மிடையே விலகிப் போகவில்லை. இவற்றின் அடிப்படையிலேயே மரக்கொக்கு நாவலை அணுக வேண்டியுள்ளது,

நிலவுடைமையாளர்களால் நிலபுலன்களும் சொத்துக்களும் எவ் வாறு வாரிச் சுருட்டப்பட்டதென்பதனையும் அவற்றின் சரிவென் பது, சாதிய மனோபாவத்தில் எத்தகைய தளம்பல் நிலைமைக ளைத் தோற்றுவித்ததென்பதையும் ஆசிரியர் தன் உயிரோட்டமான எழுத்தின் மூலம் வெளிக்கொணர்ந்திருக்கின்றார். பல வருடங்க ளுக்கு முன்னதாக எழுதப்பட்டாலும் 1994ம் ஆண்டே இது நூலாக முதல் பதிப்புக் கண்டிருக்கின்றது.

யாழ்ப்பாணத்து வடமராட்சி மண்ணைக் கதைக்களமாகக் கொண்ட இந்நாவல் மணியகாரக் குடும்பத்துப் பெண்ணான விஜயலக்ஷ் மியை மையக் கதாபாத்திரமாக வடிவமைத்திருக்கின்றது. மணிய காரக் குடும்பம் என்ற கட்டுக்குள் நின்று வெளிவராத விஜய-லக்ஷ்மி பொருளாதார நெருக்கடியாலும் தன் குடும்பத் தகுதிக் கேற்ற மணமகன் இல்லாமலும் திருமணமின்றி வாழ்கின்றாள். பரம்பரைச் சாதியப் பெருமை பேணும் இப்பெண், சமூகங்களுக் கிடையிலான மாற்றத்தை, அது குடும்பத்தில் ஏற்படுத்தும் தாக் கத்தை ஏற்றுக் கொள்ளாத மனிதர்களின் பிரதிநிதியாக விளங்கு கின்றாள். இவளூடாக மணியகாரக் குடும்பத்தின் வரலாற்றுப் பின் னணியும், அவளது காலத்தில் அது ஆட்டம் கண்டபோதும் தனக் குள்ளே ஒரு போலிக் கர்வம் கொண்டு அவள் வாழ முற்படுவ தும், அது பலனின்றிப் போவதும் ஆசிரியரால் சித்திரிக்கப்பட்டி ருக்கின்றது. இவள் கண்முன்னே அனைத்தும் சிதிலமடைந்து அவ ளது குடும்பத்தினரும் மாற்றமடைக்கின்றனர். ஆனால், இவள் தனித்து விடப்படுகின்றாள். இவ்வாறு ஒரு மணியகாரக் குடும்பம் மட்டுமல்ல யாழ்ப்பாண சமூகத்தில் பல குடும்பங்கள், குறிப்பா கப் பெண்கள், வாழ்வின்றி அழிந்து போனவர்களாக உள்ளனர்.

இக்கதையில் பல பெண்கள் வருகின்றார்கள் ஒவ்வொருவருமே சமூக ஊடாட்டங்கள் ஒவ்வொன்றைப் பிரதிபலிக்கின்றனர். கணவ னுக்கு முன் எதிர்த்துப் பேசாத மீனாட்சியம்மா. ஊரறிய குடும்பப் பெருமையுடன் திருமணம் செய்த வரலக்ஷ்மி, அதே குடும்ப வறட்டுக் கௌரவத்துக்காக, ஒரு பெண் குழந்தையுடன் வாழா வெட்டியாக வாழ்கின்றாள். காதலுக்காக குடும்ப மேன்மை என்ப தனை உதறி அன்னலக்ஷ்மி கொழும்பில் வாழ்கின்றாள். இவள் சமூக மாற்றங்களைப் புரிந்து கொண்டாலும் தன் குடும்பமென வருகின்றபோது சாதிய மனோபாவத்தில் இருந்து விடுபடாதவளாக இருக்கின்றாள். காகம் எங்கு பறந்தாலும் கறுப்பாகத்தான் இருக் குமென்பதற்கு இவள் உதாரணமாகின்றாள். தனலக்ஷ்மி தனக்கு ஒரு ஆதரவு வேண்டிப் பனையேறும் ஒரு இளைஞனோடு பழகு கின்றாள். ஆனால் சந்தர்ப்பம் கிடைக்கும் போது அதனை உதறி விட்டுக் குடும்பவலைக்குள் போய்விடுகின்றாள். இவர்களது வீட் டில் குடிமைவேலை செய்யும் சின்னி, எவ்வாறு இக்குடும்பத்தின ரால் சுரண்டப்படுகின்றாள் என்பதனையும், இவள் மட்டுமல்ல இவ ளது பரம்பரையும் எவ்வாறு நம்பவைத்துச் சுரண்டப்பட்டதென்ப தையும் ஆசிரியர் விபரித்திருக்கின்றார்.

சின்னராசன் சொல்வதாகப் பின்வரும் வார்த்தைகள் வரும், ‘இந் தப் பல்லக்கு என்ரை தகப்பன்ரை தோளில் ஏறிச் சவாரி போயி ருக்குமோ எனக்குத் தெரியாது, நிச்சயமாக என்ரை பாட்டன்ரை தோள்மீது சவாரிவிட்டிருக்கும். இது உங்களுக்கு அதிகாரத்தின் சின்னம். எங்களுக்கு அடிமைச் சின்னம்.’ இவை முற்றிலும் உண் மையான வாசகங்களாகும்.

தெணியான் அவர்கள் தனது கதையினூடாக வரலாற்றுச் சம்பவங் களையும் பதிவு செய்திருக்கின்றார். அரசியல் தலைவர்களது ஏமாற்று வேலைகள், ஆலயப் பிரவேசத்துக்கு ஏற்பட்ட தடைகள் என்பன குறிப்பிடத்தக்கனவாகும். வடமராட்சி மண்ணில் ஒடுக்கப் பட்ட மக்களின் எழுச்சி வரலாற்றையும் இந்நாவல் பதிவு செய்யத் தவறவில்லை. அதிகார மையம் கொண்டு குறிப்பிட்ட மக்களை ஒடுக்கியோர்வாழ்வு நிலைகுலையும்போது, ஒடுக்கப்பட்ட மக்கள் விடுதலை நோக்கி முன்னேறி வருகின்றனரென்பதைச் சிறு சிறு சம்பவங்களின் மூலம் கோடிட்டுக் காட்டிச் செல்கின்றார். தெணி-யான் அவர்களது எழுத்து வக்கிரமற்று, பெண்களைத் தரம் தாழ்த் தாத வகையில் பண்பட்டு அமைந்திருக்கின்றது. அதேசமயம் தான் வாழ்ந்த காலத்து மக்களை, அவர்களது வாழ்வியலை சாதி யம் சார்ந்து பதிவுசெய்வதற்கு இவர்களைப் பயன்படுத்தியுள்ளது.

இன்று சாதிய ஒடுக்குமுறை சார்ந்த பல நவீனங்களும் ஆய்வுக ளும் விழிப்புணர்ச்சியும் முன்னெடுக்கப்பட்டு வந்துகொண்டிருக் கின்றன. ஆனால் இத்தகைய எழுத்துக்களைத் தோற்றுவித்துப் பேசு பொருளாக்கியவர்களில் தெணியானுக்கும் முக்கியபங் குண்டு. எப்போதும் சமூகத்தின் மாற்றத்திற்கான எழுத்தாகவே இவரது ஆக்கங்கள் அமைந்திருக்கின்றன. அந்த மாற்றத்திற்கான எழுத்தென்பது அதிகாரத்தை எதிர்த்த எழுத்துப் போராளியின் போராட்டமாக அமைந்து, சமூகத்தின் நுணுக்கமான அசைவுக ளைப் பதிவாக்கியிருக்கின்றது. அந்தவகையில் மரக்கொக்கு ஒரு கால வரலாற்றையும் உணர்த்தி நிற்கின்றது.



info@thaiveedu.com



# ஈழத்து இலக்கிய உலகின் தூண் ஒன்று சரிந்தது

**- ந. அனந்தராஜ்**

மூத்த எழுத்தாளர் தெணியான் மே 22, 2022 - ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

ஈழத்தின் மூத்த எழுத்தாளர்களில் ஒருவரும் ஓய்வுபெற்ற ஆசிரியரும், வடமராட்சியின் புகழ் பூத்த தேவரையாளி இந்துக் கல்லூரியின் முன்னாள் உபஅதிபரும், வல்வைக் கல்வி மன்றத்தின் முன்னாள் தமிழ் ஆசிரியருமான 'தெணியான்' என்று அழைக்கப்படும் வடமராட்சி, பொலிகண்டி, தெணி என்ற இடத்தைச் சேர்ந்த எங்கள் அன்புக்கும் மதிப்புக்கும் உரிய திரு. கந்தையா நடேசன் அவர்கள் தனது 80வது வயதில் காலமானார் என்ற அந்தத் துன்பியல் செய்தி, ஈழத்து எழுத்தாளர்கள் மற்றும் கல்வித் துறைசார்ந்தவர்களிடையே மிகுந்த அதிர்ச்சியையும் சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

தமிழ் இலக்கியத் துறையில் அவரது சாதனைகளைக் கௌரவிக்கும் வகையில் கலாசார அலுவல்கள் அமைச்சினால் 'கலாபூசணம்', 'சாகித்திய இரத்தினா' போன்ற பல்வேறு விருதுகளையும், அவரது நூல்கள் பலவற்றிற்குச் சிறந்த நூல்களுக்காக வழங்கப்படும் 'சாகித்திய இலக்கிய விருது' என்ற உயர் விருதுகளைப் பல தடவைகளும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

சமூகத்தில் நலிவடைந்து பல்வேறு துன்பங்களைத் தாங்கி வாழும் மக்களுக்காகவே இவரது பேனாமுனை திரும்பியிருந்தது. அது, சாதிய ஒடுக்குமுறைகள் மற்றும் வர்க்க முரண்பாடுகளுக்குள்ளாகித் திசைதெரியாது தத்தளித்துக் கொண்டிருந்த ஒரு சமூகத்தின் குரலாக ஒலித்து. அவர்களுக்கான ஒரு நம்பிக்கை ஒளியாகத் திகழ்ந்த தெணியானின் எழுத்துக்கள் கூர் ஆயுதங்களாகப் பிற்போக்குவாதிகளைத் தாக்கியதால், அவரது எழுத்தைக் கண்டு அஞ்சியவர்கள், அவரின் முன்னால் வாயே திறக்கமுடியாது இருந்ததைப் பார்த்திருக்கின்றோம். முற்போக்கு எழுத்தாளர்களின் வரிசையில் டானியல், தங்கவடிவேல் மாஸ்ரர், பேராசிரியர் கா. சிவத்தம்பி, டொமினிக் ஜீவா, நந்தினி சேவியர் போன்ற சமூகப் போராளிகளின் வரிசையில், இன்று அண்ணன் தெணியான் அவர்களும் எங்களைவிட்டுப் பிரிந்துவிட்டார்.

ஈழத்தின் இளம் எழுத்தாளர்களை ஊக்குவிப்பதுடன், புதிதாக எழுத வருபவர்களுக்கும் வழிகாட்டி, அவர்களுக்கான பல சிறுகதைப் பயிற்சிப் பட்டறைகளை எங்களுடன் இணைந்து நடத்தி, அவர்களை இந்த மண்ணில் எழுத்தாளர்கள் ஆக்கிய பெருமைக்குரிய தெணியான், எப்பொழுதும் சிரித்த முகத்துடனும், பண்பாகவும், அன்பாகவும் பழகக்கூடிய ஒரு உன்னதமான மனிதராகவே வாழ்ந்தார்.

வடமராட்சியின் பொலிகண்டி கிராமத்தின் 'தெணி' என்னும் பகுதியில் சந்ததி சந்ததியாகப் பல காலம் வாழ்ந்துவந்த இவரது குடும்பத்தவர்களை, பொலிகண்டிக் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் 'தெணியார்' என அழைக்கும் வழக்கம் இருந்தமையால், நடேசன் மாஸ்ரர், 'தெணியான்' என்ற புனைபெயரையே தனக்கும் சூட்டிக் கொண்டு, தனக்கும் தான் பிறந்த ஊருக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

அவர் இன்று எங்களைவிட்டு மறைந்தாலும் சமூகத்தை நேசிக்கும் அவரது ஆழமான எழுத்துக்கள் என்றும் வாழ்ந்துகொண்டேயிருக்கும்.

தெணியானின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது அன்புக்குரிய குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள், இலக்கியத்துறையைச் சேர்ந்த ஆர்வலர்கள், கல்வித்துறை சார்ந்தவர்கள் அனைவருக்கும் எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இலக்கிய உலகில் சாதனைகள் படைத்த அன்னாரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.



anantharaj@thaiveedu.com



# நினைவுத் தூபி

**- தேவகாந்தன்**

யாழ்ப்பாணம் வடமராட்சியைச் சேர்ந்த கந்தையா நடேசு (தை 06, 1942 - வைகாசி 22, 2022) காலமாகிவிட்டாரென்பது ஒரு சாதாரண னைப் பொறுத்தவரை ஒரு செய்தி மட்டுமே. ஆனால் இலங்கைத் தமிழ்ப் புலமெங்கும் அறியப்பட்ட ஓர் இலக்கியவாதியான தெணி யானின் மரணமென்பது ஒரு வாசகனுக்கும் ஒரு சகபடைப்பாளிக் கும் அதற்கும் மேலானது. தெணியானின் மறைவு அவரது உறவி னர் நண்பர்களை மட்டுமில்லை, சகபடைப்பாளிகளையும் அதிர வைத்தது. பருத்தித்துறையிலுள்ள நண்பனான பாஸ்கரனின் மூல மாய் வட்ஸ் அப் குறுஞ்செய்தியில் விபரம் ஓர் அதிகாலை என்னை வந்தடைந்தபோது நானுமே அதிர்ந்தேன்.

அவர் விட்டுச்சென்ற இருபதளவான படைப்புக்களில் சிலவேனும் அவரது ஞாபக தூபிகளாய் நிலைக்கக் கூடியவையென்பது ஆறு தலான விஷயம். ஓர் இலக்கியவாதியைப் பொறுத்தவரை



அவையே அவரது சிறந்த ஞாபக தூபிகளாகவும் ஆகவேண்டும். அவற்றை அடையாளப்படுத்த எடுக்கும் முயற்சியின் இத்தருண மானது, கௌரவ மதிப்பீடாய்க் கணிக்கப்படக்கூடிய ஆபத்துக் கொண்டது. அந்த அவதானத்துடனேயே சிலவற்றை இங்கு பதி விட முயல்கிறேன்.

1964ல் 'பிணைப்பு' சிறுகதையுடன் ஆரம்பிக்கும் தெணியானின் படைப்புலகில் அடையாளப் படுத்தப்படக்கூடிய முயற்சிகள் நாவல்களிலேயே இருந்திருக்கின்றன. 'விடிவை நோக்கி' (வீரகே சரி வெளியீடு, 1973), 'கழுகுகள்' (நர்மதா பதிப்பகம், 1981), 'மரக்கொக்கு' (நான்காவது பரிமாணம், 1994) ஆகியவற்றை முக் கியமான நாவல்களாய் அடையாளப்படுத்த முடியுமாயினும், என் வாசிப்பின் ரசனையும், சமூக அக்கறையும் தேர்வாக்குவது 'குடி மைகள்' நாவலையே. அந்நாவல் 2014ல் ஜீவநதி வெளியீடாக ஒரு பதிப்பும், 2016ல் கருப்புப் பிரதிகள் பதிப்பாக ஒன்றுமாய் குறுகிய காலத்திலேயே இரண்டு பதிப்புக்களைக் கண்டது. சமூ கத்தின் மிகவும் புரையோடிப்போன சாதி அடக்குமுறையின் இன் னொரு வடிவமான குடிமை முறைபற்றிப் பேசுகிற நாவலிது.

சாதிப் பிரச்சினையென்னும்போது அது முரண்கொண்ட இரு சமூ கப் பிரிவினரிடையே மூர்க்கமாகக் கிளர்வதான தோற்றம் காட்டுவ தாய் இருக்கும். ஆனால் குடிமை முறையென்பது மிக்க நொய் மையுடன் தானே விலங்கணிந்து வந்து, தானே விலங்கைக் கழற் றிவிட்டு தொழிலை முடித்த பின், மறுபடி தானே விலங்கைப் போட்டுக்கொண்டு அமைந்துவிடும் தன்மை வாய்ந்தது. ஒரு தூண் டுதல், கிளர்ச்சிக்கான ஒரு தருணம் இல்லையேல் சாந்துணையும் அந்த அடிமை நிலைக்கு முடிவிருக்காது. அவ்வகையில் பறை முழக்குவோர், சவரம் செய்வோர், துணி வெளுப்போரென பல வகையினர் குடிமைகளாக இருந்திருக்கிறார்கள். அவர்களுக்கு தொழில் முடிந்தவுடன் கூலிகூடக் கிடைப்பதில்லை. ஆண்டுக்கு ஒருமுறை அல்லது இரண்டு முறையான கூலிகள்தான். அதுவும் பணமாகக் கிடைப்பது அரிது.

இவ்வாறு வலுவான ஒரு பொருளைப் பேசத்தான் 'குடிமைகள்' நாவல் முயன்றிருந்தது. ஆரம்ப கால இந்திய தலித் நாவல்க ளான லட்சுமண் மானேவின் 'உபாரா', லட்சுமண் கெய்க்வாடின் 'உச்சாலியா', கிஷோர் சாந்தாபாய் காலேவின் 'குலாத்தி' ஆகிய நாவல்கள் பேசிய பொருட் தீவிரம் இதனிலும் இருந்திருந்தது. ஆனால் நாவல் அந்தளவு கட்டுமான, மொழி, நடை வன்மைகள் கொண்டிருந்ததாகச் சொல்ல முடியாவிடினும், தமிழின் சிறந்த தலித் இலக்கிய நாவல்களில் ஒன்றாகக் 'குடிமைக'ளைக் கொள் ளமுடியும். இலங்கைத் தமிழிலும் செ. கணேசலிங்கனின் 'நீண்ட பயணம்', டானியலின் 'கானல்', 'தண்ணீர்' போன்ற நாவல்களுக்கு இணையாக இது நிற்கக்கூடியதே.

தெணியானின் சற்றொப்ப ஐம்பது வருஷ கால இலக்கிய முயற்சி இலங்கையில் சரி, பிற தமிழ்ப் புலங்களில் சரி பெரிதாகக் கண்டு கொள்ளப்படவில்லை என்பது புதிர். 'மரக்கொக்கு' ஒரு குறுநாவ லளவு தேங்கிப் போனதென்றாலும், அது சொற்செட்டுடன் விரித்த களம் சிறப்பு. அதை ஓரளவு விஞ்சியதாய் 'குடிமைகள்' படைப் பாகியிருக்கிறதென்பது மெய். எடுத்துக்கொண்ட பொருளினை தெளிவுடன் பதிவுசெய்ய, முந்திய நாவல்களில் கையாளாத ஒரு நடையை படைப்பாளி இந்நாவலில் தேர்ந்தெடுத்திருப்பதாகவே தெரிகிறது. அதேவேளை தனது கருதுகோளுக்கு மாறின்றி, அது வரை பயில்விலிருக்கும் யதார்த்த இலக்கிய முறைமையிலும் பரீட் சார்த்தமான ஒரு தலையீட்டினை அவர் இந்த நாவலில் செய்தி ருக்கிறாரென்று எண்ண முடியும். கடந்த ஆண்டு 'காலச்சுவடு' பதிப்பாக வெளிவந்த 'இலங்கைத் தமிழ்நாவல் இலக்கியம்' என்ற எனது நூலில் புலத்தின் படைப்புக்கள் என்ற அதிகாரத்தில் தேர் வாகிய சில நாவல்களுடன் 'குடிமைகள்' நாவலையும் குறிப்பிட்டி ருக்கிறேன், இதே காரணங்களுக்காகவே.

முத்தன் என்கிற சவரத் தொழிலாளியின் தம்பி மணியன் பது ளைக்கு சலூன் ஒன்றிலே வேலைசெய்யப் புறப்படுவதிலிருந்து தொடங்கும் நாவல், இரண்டு உடன்பிறப்புக்களை சாதிவெறிக்குப் பறிகொடுப்பதோடு, தனது சவரக் கடையை முதலிலும், தனது வீட்டைப் பின்னாலும் இழந்துபோகின்ற முத்தன் தனது மனைவி வள்ளிக்கொடியுடன் குடிமை முறையை ஊரிலே செய்ய மறுத்து தனக்கு வீடுமில்லை, ஊருமில்லை என்பதுபோல் கொழும்புக்கு புகைவண்டி ஏறுவதுடன் நிறைவடைகிறது.

ஒரு குடும்பத்தின் உணர்வுமயமான கதைதான் இது. எனினும் சொல்லப்படுவது ஒரு கிராமத்தின் கதையாகவும் விரிகிறது. கிரா மத்தின் கதையாகவன்றி, பிரதேசத்தினது சமூக ஏற்றத் தாழ்வுக ளின் வரலாறாகவும் நாவல் பதிவாகிப்போவது முக்கியம்.

சமூக வரலாற்றைப் பதிவுசெய்த இலக்கியமாய் இறுமாந்து நிற் கும் 'குடிமைகள்', தெணியானின் பேரை காலத்துக்கும் சொல்லிக் கொண்டிருக்குமென நம்பலாம்.



devakanthan@thaiveedu.com



# ஈழத்தில் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக ஓங்கி ஒலித்த குரல் - தெணியான்!

**- க. பரணீதரன்**

எனது 3 வயது முதல் இன்று வரை - 35 வருட காலம் தெணியான் சேருக்கு செல்லப்பிள்ளை, நான். கேட்கும் அனைவருக்கும் என்னுடைய பேரன் என்று தான் சொல்லுவார்...

'ஜீவநதி சஞ்சிகை ஆரம்பிக்க போகிறோம், அதற்குப் பிரதம ஆலோசகராக இருக்க வேண்டும்' என நான் கேட்கப்போனதோடு எங்கள் இலக்கிய உறவு ஆரம்பித்தது. குறைந்தது வாரத்துக்கு 2 தடவையாவது சந்தித்துப் பேசிக் கொள்வோம். 2007 ஜீவநதி ஆரம்பித்த காலம் முதல் 2019 வரையில் ஒரு கிழமைக்கு 2 தடவை, குறைந்து 2 மணித்தியாலமாவது இருவரும் பேசிக்கொள்வோம். ஆனால் குடும்பம் பெரிதாக, நேர நெருக்கடிகளால்




வாரம் 2 தடவை சந்தித்த நாங்கள், மாதம் ஒரு தடவை சந்தித்துக் கொண்டோம். அதற்கு இடையில் -

அப்பு என்னடா செய்யிறாய்...

'வீட்டை ஒருக்கா வந்துட்டு போடா...'

'அடேய், எங்கயடா ஆளைக் காணம், கொம்மம்வாவும் கேட்டவா வந்துட்டு போடா...'

'அப்பன் என்ன செய்யிறாய்...'

'ஐயா என்னடா செய்யிறாய்...'

ஒரு மாதத்துக்கு ஒரு தடவை பார்க்காவிட்டாலும் தொலைபேசியில் இருந்து அழைப்பு வரும்.

இனி இந்த அழைப்பு வராது... எனது தொலைபேசியில் அந்தக் கம்பீரமான குரல் கேட்காது... உரிமையோடு என்னைப் பேசும் அந்தக் குரலை இனிக் கேட்க முடியாது...

எனது இலக்கியப் பயணத்தில் வழிகாட்டியாய், முன்னுதாரணமாய் வாழ்ந்தவர் தெணியான் சேர்...

'தெணியான் சேர் எனது 60ற்கு மேற்பட்ட கூட்டங்களுக்குத் தலைமை தாங்கியவர்.

'தெணியான் இருக்கின்ற மேடைகளில் ஜீவநதி மீதோ, பரணி மீதோ யாரும் சொறிய முடியாது இருந்தது...

'தெணியான் சேரை பல கூட்டங்களுக்கு மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் சென்று இருக்கிறேன்... அங்கு எல்லாம், இது என்ரை பேரன், இவன் தான் இப்ப எல்லாம் என்று சொல்லுவார்.

தெணியான் சேரின் 50 வருடகால இலக்கிய வாழ்வைக் கௌரவித்து ஜீவநதி 'தெணியானின் படைப்புகள் மீதான பார்வைகள்' என்னும் நூலை வெளியீடு செய்தது.

'எங்கள் அவையின் பெரும் தலைவர்.'

'கலாபூசணம்', 'சாகித்தியரத்னா' விருது பெற்றபோது அவையில் கௌரவிப்பு.

தெணியானின் பவளவிழாவை முன்னிட்டு, மிகப் பிரமாண்டமாய் ஜீவநதியின் 106வது இதழ் 'தெணியான் பவளவிழா சிறப்பிதழ்' வெளியானது. அத்துடன் தெணியானின் 'வெந்து தணிந்தது' குறு நாவல் வெளியானது.

**ஜீவநதி வெளியீடாக வெளியான தெணியானின் நூல்கள்:**

- குடிமைகள் (நாவல்) - சாகித்திய விருது
- பார்க்கப்படாத பக்கங்கள் (கட்டுரைகள்)
- வெந்து தணிந்தது (குறு நாவல்)
- தெணியானின் ஜீவநதி சிறுகதைகள் (இலக்கிய வட்டப் பரிசு பெற்றது)
- தெணியானின் படைப்புகள் மீதான பார்வைகள்

மேலும் -

* ஒடுக்கபட்ட மக்களுக்காக தெணியான் தனது படைப்புகள் வாயிலாகப் போராடியவர்
* சாதிய எதிர்ப்புப் போராட்டங்களில் முன்னின்றவர்.
* மாலிசந்தி பிள்ளையார் கோயில், பொலிகண்டி கந்தவனக் கோவில், வேவிலந்தை முத்துமாரி அம்மன் ஆலயப் பிரவேசம் போன்ற, கோயில் பிரவேசங்களில் முன்னின்றவர்.
* தனித்த குரலாக ஒடுக்கப்பட்ட மக்களுக்காகக் குரல் கொடுத்தவர்...
* ஆரம்பம் முதல் இறுதி வரை, சாதியத்துக்கு எதிரான குரலை எந்தத் தயக்கமும் தளம்பலும் இன்றிக் கொடுத்தவர்.
* தெணியான் இல்லாத வடமராட்சியின் கூட்டங்கள் சுவை இல்லாதவை...
* தெணியான் மேடைக்குவரும் ஸ்டைல் தனித்துவமானது...
* தமிழில் தெணியானின் அறிவு வியக்கக்கூடியது...

* மிகவும் எளிமையாக எல்லோருடனும் பழகக்கூடியவர்...
* தான் வந்த பாதையை மறக்காதவர்.
* தனது அப்பா அம்மாவில், சகோதரர்களில், குறிப்பாகப் பெண் சகோதரர்களில் அதிக அன்பு உடையவர். கதைக்கும் நேரங்களில் எல்லாம் நவம் சேர் பற்றியும் கதைப்பார். அண்ணன் பற்றியும் கதைப்பார். அவரது பாசத்தைக் கண்டு வியந்திருக்கிறேன்.
* சேரின் உடை மிக நேர்த்தியாக இருக்கும். simple ஆக, neat ஆக இருக்கும். 6 அடி உயரமான மனிதர் சும்மா மேடைக்கு வந்தாலே மேடை அழகு பெறும்.
* சேரின் இலக்கிய முயற்சிகளுக்கு எந்த இடையூறும் வராதவாறு அம்மம்மா (மரகதம்) குடும்பத்தைப் பார்த்து கொண்டதையும் குறிப்பிட வேண்டும்.
* எழுத்தாளர்களோடு கோட்பாடுகள், இசங்களுக்கு அப்பால் மனித நேயத்துடன் பழகியவர்.
* எமது சமூகத்தின் ஆலமரம்.
* வடமராட்சி மண்ணின் இலக்கிய இமயம்
* இலக்கியக்காரனுக்குக் கிடைக்க வேண்டிய அனைத்து விருதையும் பெற்றவர்.
* எமது சமூகத்தின் பெரும் சொத்து தெணியான் சேர் அவர்கள்.
* எழுத்தாளர்கள் மத்தியில் ஈழத்தில் தெணியான் என்ற பெயரை அறியாதவர்கள் கிடையாது.
* எங்கடை பிரதேசத்துக்குத் தெணியான் சேர் அவர்களால் என்றும் பெருமைதான் கிடைத்து.
* சாதிய ஒடுக்குமுறை சார்ந்த எத்தனை அனுபவங்களை என்னுடன் பகிர்ந்தவர். அந்த விடயங்களைப் பார்த்துக் கொதித்த போது எல்லாம் 'கொஞ்சம் பொறுமையா இரு' என்பார்.

15 ஆண்டுகளாக எல்லோரையும்விட என்னுடன் இலக்கிய உலகில் மிக நெருக்கமாக இருந்துள்ள தெணியான் சேர்... இனி இல்லை. ஆனால் அவரது நூல்களும், செயல்பாடுகளும் அவரை அழிய விடாது. சேரிடம் இருந்து பெற்ற அனுபவங்கள் அளவிடப்பட முடியாதவை. எந்த இடத்திலும் என்னை விட்டுக்கொடுக்காதவர்...

என்ன சொல்லி நான் ஆறுதல் அடைவது...!



info@thaiveedu.com

# காலத்தால் சாகாத தெணியானின் படைப்புலகம் குறித்து ஒரு சிறுபார்வை!

**- உமா ஷனிகா**

ஒடுக்கப்படும் மக்களை நோக்கி 'கல்வி கற்க, அமைப்பாகுக, கிளர்ந்தெழுக' என்று அறைகூவலிட்ட டாக்டர் அம்பேத்கரின் வாசகங்களை மெய்ப்பித்துத் தனது அரசியல் மற்றும் இலக்கியப் பயணத்தினூடாக வாழ்வை வாழ்ந்து காட்டியவராகவே மூத்த எழுத்தாளர் தெணியானைப் பார்க்கமுடிகிறது.

தெணியான் அவர்களின் படைப்புலகத்தின் சமூகநோக்கானது பேதங்களற்ற மானிட சமுதாயத்தை வலியுறுத்துவதாகவும், முக்கியமாக யாழ்ப்பாணச் சமூகத்தில் புரையோடி இன்னும் மாறாதும் மறையாதும் காணப்படும் சாதியக் கொடுமைகளையும், ஆதிக்கச் சாதிய மனநிலையையும், அதனூடகச் செயற்படும் நுண்ணரசியலையும் அப்பட்டமாகத் தோலுரித்துக் காட்டுபவையாகவும் அமைகின்றது.

'இப்போது ஒருவரும் சாதி பார்ப்பதில்லை, அது அழிந்து விட்டது' என்ற கருத்துருவாக்கத்தை வலிந்து உருவாக்க முனைபவர்களின் முகத்தில் ஓங்கி அறையும்படியாக அவரது பேச்சுகளும், எழுத்துகளும் இறுதிவரை இருந்திருக்கின்றன.

காலப்போக்கில் ஒடுக்குமுறைகளின் வடிவங்கள் மாறினாலும், ஆதிக்க சாதிய மனநிலையானது சமுகப்பரப்பில் நிறுவனமயப்படுத்தப்பட்டு அழிந்துவிடாமல் செயற்பட்டு வருகின்றதென்பதை அவர் தொடர்ந்து வலியுறுத்தி வந்திருக்கிறார்.

'ஒடுக்கப்பட்டவர்கள்' என்ற அவரது சிறுகதை தொகுப்பின் முன்னுரையில் அவர் இவ்வாறு குறிப்பிடுகிறார் - 'சாதிய ஒடுக்குமுறைகள், அவமதிப்புகள், தடைகள், நிராகரிப்புகள் என்பன தீரும் வரை சாதியத்திற்கு எதிரான இலக்கியங்கள் படைக்கப்பட வேண்டும். மேற்பூச்சு நாகரிகத்தினால், ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக் குரல் நசுக்கப்படக்கூடாது. ஊசி மூலம் இரகசியமாக நஞ்சினை உடலில் செலுத்துவது போல, இன்று சமுதாயத்தில் சாதியத்தை வளர்ப்பவர்களை இனங்கண்டு வெளிப்படுத்தவேண்டும். ஈழத்தின் கடந்தகால அரசியல் சூழ்நிலைகள் 'தமிழ் மக்கள் மத்தியில் இருந்து வந்த சாதியப் பிரச்சினைகள் தீர்ந்து விட்டன' என்று வாய்ப்பாடாகச் சொல்லிக் கொண்டிருப்பதற்கு வாய்ப்பாக அமைந்துவிட்டன. 'தமிழ் மக்களின் எந்தப் பிரச்சினையும் தீரவில்லை' எனச் சொல்லிக் கொண்டிருப்பவர்கள் சாதியம் மட்டும் அழிந்துவிட்டதாகக் கூறுவது ஒரு வேடிக்கை தான்! இந்தப் பொய்மைக்கு எதிராக வர்க்க, முற்போக்குச் சிந்தனையுள்ள அனைவரும் தங்கள் பேனாக்களை பயன்படுத்தவேண்டும்.' இறுதிக்காலத்தில் அவரால் படைக்கப்பட்ட நாவல்கள், சிறுகதைகள் இந்தக் கூற்றை நிரூபிக்கும்படியாகவே அமைந்திருந்தன.

வடபுலத்தில் நிலவும் சாதியக் கட்டமைப்பினூடாக ஆதிக்க நிலையிலிருந்த சமூகத்தினரால் ஒடுக்கப்பட்ட சமூகங்கள் மீது பிரயோகிக்கப்பட்ட கொடுமைகள், பாரபட்சங்கள், உளவியல் அழுத்தங்கள் என்பனவற்றை இவரது 'இன்னும் சொல்லாதவை' என்ற வாழ்பனுபவங்களின் தொகுப்பினூடகவும், நாவல்கள், சிறுகதைகளில் பேசும் கருப்பொருட்களினூடாவும் துல்லியமாகப் புரிந்துகொள்ள முடிகிறது. தெணியான் அவர்களின் படைப்புலகம் யாழ்ப்பாண உயர்வேளாள ஆதிக்க மனநிலையை ஒடுக்குபவரினதும், ஒடுக்கப்படுபவர்களினதும் உளவியலினூடாகக் காட்சிப்படுத்துகின்றது. யாழ்ப்பாண ஆதிக்கச் சமூகம் எவ்வாறு பூடகமாகத் தனது கருத்தியலை தமக்குக் கீழ்படிந்தவர்கள், குடிமைகள் எனக் கருதுபவர்களிடம் திணிக்கிறது என்பதை இவர் தனது படைப்புகளினூடாக வெளிப்படுத்தியிருக்கிறார்.

'இன்னும் சொல்லாதவை' என்ற அவரது வாழ்வனுபவத் தொகுப்பில் குறிப்பிடப்பட்டிருக்கும் மண்வெட்டி மயில்வாகனம் என்பவர், தனது தந்தைக்கு ஒத்தாசையாகக் கள்ளு விற்பதில் ஈடுபடுவதை அவதானித்துவிட்டு மனப்பூரிப்போடு, படிப்பை விட்டுட்டியா என்று வினவுவதும், 'தன் தொழில் விட்டவன் சாதியில் எளியவன்' என்றும் இவரிடம் சொல்வது போன்ற சம்பவங்களினூடாகச் சாதியப் படிநிலைகளைப் பேணுவதற்கான ஆதிக்கச் சாதிய மனோபாவத்தினைப் பதிவாக்கியிருப்பது போலவே - 'இவன் மிச்சம் நல்லவன்' என்ற சிறுகதையிலும் புதிதாகவரும் ஆசிரியரின் சாதியைக் கண்டுபிடித்த ஆதிக்கச் சாதியைச் சேர்ந்த இன்னொரு ஆசிரியர் அவருடன் பழகும்விதம், பாடசாலை தொடர்பான வேலைகளைப் பிரிக்கும்போது மண்டபம் அலங்காரம் செய்யும் வேலைகளை அவர் பொறுப்பில் விடுவதும், தான் உணவு தயாரிப்பது போன்ற பொறுப்புகளை எடுத்துகொள்வதும், அந்த ஆசிரி



யர் வீட்டிற்கு வருவதைத் தடுப்பதற்காக இன்னொரு ஆசிரியரை உதாரணம் காட்டி, அவர் தான் வசித்த அறையின் கட்டிலில்கூட அமரமாட்டார் எனச் சொல்வதும், அதன்பிற்பாடு புதிதாக வந்த ஆசிரியர் இவர் வீட்டிற்கு வராமல் விடுவதும் சாதியப் பாகுபாட்டினூடாகத் தீண்டாமையைத் தக்கவைத்துக் கொள்வதற்காக ஆதிக்கச் சாதியினரால் திட்டமிடப்படும் எத்தனங்களுக்குச் சிறந்த உதாரணங்களாகும்.

60களில் சாதிவெறி தாண்டவமாடிய ஒரு காலகட்டத்தில் என்.கே. ரகுநாதன் அவர்களால் படைக்கப்பட்ட ‘நிலவிலே பேசுவோம்’ என்ற சிறுகதையில் பேசப்பட்ட ஒரே விடயத்தை 2006ல் தெணியானால் எழுதப்பட்ட ‘வெளியில் எல்லாம் பேசலாம்’ என்ற சிறுகதை, இன்னொரு கோணத்தில் பேசவேண்டியிருப்பது சாதியத்தின் வேர்கள் இன்னும் ஆழமாகப் பதிந்திருக்கின்றது என்பதையே உறுதிப்படுத்துகிறது.

‘குடிமைகள்’ நாவலில் சித்தரிக்கப்பட்டிருப்பது போல, ஒடுக்கப்படுகின்ற சமூகங்களுக்கிடையில் வர்க்கரீதியான முரண்பாடுகள் நிலைகொண்டிருந்தாலும் சாதியம், தீண்டாமை என்ற கூர்மைப்படுத்தப்பட்ட ஒடுக்கும் வடிவம், வர்க்க ஒற்றுமைக்கு அப்பால் மூர்க்கமாகவும் வெளிப்படையாகவும் எவ்வாறு இயங்குகின்றதென்பதை இவரது ‘ஏதனம்’ நாவலும், ‘மூன்று தலைமுறைகள்’, ‘காலத்தால் சாகாது’, ‘மாற்றம் வந்துவிட்டது’ போன்ற சிறுகதைகளும் கோடிட்டுக் காட்டுகின்றன.

தீண்டாமையின் வடிவங்களின் மாற்றமென்பது அகரீதியாக எந்தத் தாக்கத்தினையும் ஏற்படுத்தாத நிலையில், சமூக ரீதியான கருத்தியல் மாற்றத்திற்கு வழிகோலாதென்பதையே இந்தச் செயல்கள் நிருபிக்கின்றன.

தெணியான் அவர்கள் தொடர்ந்தும் வலியுறுத்திவரும் இன்னொரு கருத்தானது தமிழ் தேசியப் போரட்டம் ஆரம்பிக்கப்பட்டு 30 வருடகாலமாக நீடித்த யுத்தச் சூழலிலும் சாதியத்திற்கெதிரான போராட்டங்கள் தன்னெழுச்சியாக நடத்தப்படுவது முடக்கப்பட்டதேயன்றி எல்லாக் காலகட்டங்களிலும் சாதியப்பாகுபாடுகள் அதே முனைப்புடன் மாறாமல் இருந்தது என்பதையே. தமிழ்த்தேசியம் என்ற ஒற்றைச் சொல்லாடலுக்குள் சாதிய முரண்பாடுகள் அகமுரண் பாடுகளாக மட்டும் காண்பிக்கப்பட்டு, அதற்கெதிராகப் போராட்டவடிவங்கள் நசுக்கப்பட்டன என்பதை இவரது ‘சிதைவுகள்’ நாவலும் மற்றும் ‘இன்னுமா’ போன்ற சிறுகதையும் பேசிநிற்கின்றன.

ஒடுக்கப்படும் மக்களின் குணவியல்புகள் மரபணுக்களால் கடத்தப்படுகின்றன என்பது ஆதிக்க நிலையில் இருப்பவர்கள் வலிந்து நிருபிக்க முனையும் ஒரு கருத்தாக இருந்து வருகிறது. ‘அவன் சாதிக்குணத்தைக் காட்டிவிட்டான்,’ ‘ஒழுக்கம், கண்ணியம் என்பன ஆதிக்கநிலை சாதியினருக்கானது’ என்ற கருத்தியலை உடைத்தெறிகின்றது ‘பொருந்தாத தீர்மானங்கள்’ போன்ற இவரது சிறுகதைகள்.

மனிதாபிமானமிக்க ஒரு சமூகத்தை உருவாக்குவதற்காக களையப்படவேண்டிய அடிப்படைக் காரணிகளான சாதிய, வர்க்க, இன, பால்நிலை ரீதியான ஒடுக்குமுறைகளை இனங்கண்டு, அதற்கான நடைமுறைசார்ந்த கோட்பாட்டு ரீதியான செயல்வடிவங்களினூடாக அமைப்பாதலின் அவசியம் இவரது படைப்புகளின் அடிநாதமாக அமைகின்றதென்பதை மறுப்பதற்கில்லை.

சாதியத்திற்கெதிரான சமூகப் பொதுக்கருத்தியலை உருவாக்குவதற்காக ஆதிக்கப் படிநிலையில் இருப்பவர்களின் இயல்பான மனமாற்றம் மட்டும்தான் தீர்வாக அமையும் என்பதை மறுதலித்து, ஒடுக்கப்படுகின்ற மக்களின் வெளிப்படையான எதிர்ப்பியக்கமும் அவசியமென்பதே தெணியான் அவர்கள் தனது பேனா முனையால் எழுதிச் சென்ற செய்தியாகும்.



info@thaiveedu.com



# வாழ்வை வரைந்த எழுத்தோவியன் தெணியான்

**- திவ்வியராஜன்**

தெணியான் அவர்கள் பேச்சாலும் எழுத்தாலும் செயலாலும் ஒரே திசையில் பயணித்த ஒரு மனிதர். அவரது பேச்சிலும் எழுத்திலும் செயலிலும் சத்தியம் இருந்தது. உழைக்கும் மக்களின் விடியலுக்கான ஒளிக்கீற்றுக்களை அவரது பேச்சு, எழுத்து, செயல் மூன்றும் கொண்டிருந்தன. சமூக ஒடுக்குமுறைகளால் கீழ்நிலையில் தள்ளப்பட்டிருந்த மக்களின் விடியலை நோக்கிய, வீறுகொண்ட பயணம் தெணியான் அவர்களின் வாழ்க்கையாக இருந்தது.

அடக்குமுறைகளுக்கு எதிரான போர்க்குரல் அவரது குரல். பல நூறு ஆண்டுகளாக இறுகப் பிணைத்திருந்த அடிமைச் சங்கிலியை அறுக்கும் கூரிய ஆயுதமாகவே அவர் கையிலேந்திய பேனா விளங்கியது. பசி பட்டினியில் புகைந்துகொண்டிருந்த மக்களின் வறுமைத் துயர்களும் கண்ணீரும் அவரது கதைகளின் கருக்களாயின. நலிந்த மக்களின் கதைகளை அவரது நாவல்கள் காவியங்களாக்கின. அவர் விருதுகளுக்காக எழுதியவரல்ல. என்றாலும், பல விருதுகள் அவரை நாடி வந்தன.

1980ளில் நான் திருமணமாகி கரவெட்டியில் வாழ்ந்த காலம். தெணியான் ஆசிரியர் அவர்களைப்பற்றி முன்பே கேள்விப்பட்டிருந்தபோதும் நேரடியாக அவரை சந்திக்கும் வாய்ப்புகள் அங்குதான் ஏற்பட்டன. எனது துணைவியாரின் குடும்பத்துடன் மிக நெருக்கமான ஒருவராக தெணியான் அவர்கள் இருந்தார். அக்காலத்தில் எனது துணைவியாரின் அக்கா, சிவம் நாகமுத்து அவர்களும் தெணியான் ஆசிரியர் அவர்களும் கரவெட்டி ஸ்ரீ நாரதா வித்தியாசாலையில் ஒன்றாகக் கற்பித்து வந்தனர். திரு. நாகமுத்து அவர்களும் தெணியான் அவர்களும் கம்யூனிஸ்ட் கட்சியின் வடபகுதிக் கிளையில், கரவெட்டிப் பிரதேசத்தில் ஒன்றாக இயங்கி வந்தனர். கரவெட்டியில் உச்சில் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளராக நான் சமூகப் பணிபுரிந்த அக்காலத்தில், அதன் ஆண்டுவிழா நிகழ்ச்சிப் பேச்சாளராக திரு. தெணியான் அவர்களையும் அழைத்திருந்தோம். நகைச்சுவையும் கருத்தாழமும் மிக்க, கம்பீரமான அவரது பேச்சை அன்றுதான் நான் நேரடியாகக் கேட்டேன். அவர் ஒரு மிகச்சிறந்த பேச்சாளர் என்பது பலரும் அறிந்ததே.

எமது தந்தையார் 1990ல் காலமாகியபோது, அவரது நினைவஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றுவதற்காகத் தெணியான் அவர்களையும் அழைத்திருந்தோம். யாழ்ப்பாணத் தமிழ்ச் சமூகம் பற்றியும் அதன் சாதிக் கொடுமைகள், ஏற்றத் தாழ்வுகள் பற்றியும் அவற்றைத் தகர்ப்பதற்கெனக் காலம்காலமாக எடுக்கப்பட்ட முற்சிகள் பற்றியும் ஒரு சமத்துவ சமுதாயத்தை கட்டி எழுப்புதற்கு ஆற்ற வேண்டிய பணிகள் பற்றியும் விரிவாகவே எம் தந்தையாரின் நினைவஞ்சலி உரையில் அவர் பேசியது இன்றும் என் நினைவில் இறுக்கமாகப் பதிந்துள்ளது.

கனடாவில் எமது ‘கவின்கலாலயா’ நிறுவனத்தால் தயாரித்து வெளியிடப்பட்ட ‘சகா’ திரைப்படத்தினைத் தாயகத்தில் 2005ல் நெல்லியடி மகாத்மா திரையரங்கிலும், ‘உறவு’ திரைப்படத்தினை 2010ல் தேவரையாளி இந்துக் கல்லூரியிலும் திரையிட்ட சமயங்களில் சிறப்பு அதிதியாக வருகைதந்த தெணியான் அவர்கள், அவ்விரு திரைப்படங்கள் பற்றியும் சிறந்த மதிப்பீட்டு உரைகளை வழங்கிப் பாராட்டியமையையும் நாம் நன்றியோடு இச்சந்தர்ப்பத்தில் நினைவில் மீட்டுகிறோம். தாயகத்துக்குச் சென்றிருந்த சமயம் தெணியான் அவர்கள் விருதுகள் பெற்ற பாராட்டுவிழா ஒன்றிலும் நான் கலந்துகொண்டு அவரை வாழ்த்தக் கிடைத்த வாய்ப்பினையும் இப்போது நினைவுகூருகின்றேன்.

2018 ஆவணி மாதம் தெணியான் அவர்களை நானும் துணைவியாரும் அவரது இல்லத்தில் சென்று சந்தித்து உரையாடினோம். அப்போது அவரது உடல் சற்று தளர்ந்திருந்தபோதும் தளராமனவுறுதியோடு பல்வேறு கருத்துக்களையும் அவர் எங்களோடு பகிர்ந்துகொண்டார். அவரது பேச்சின் கம்பீரம் குறையவே இல்லை. தெணியான் அவர்களின் துணைவியாரும் உடனிருந்து விருந்தோம்பினார். எங்கள் குடும்பத்தினரின் சுகநலன்களையும் அக்கறையோடு விசாரித்தனர். அதுவே அவரை நாம் இறுதியாகச் சந்தித்த சந்திப்பாகும்.

தெணியான் அவர்கள் எழுத்திலும் பேச்சிலும் மட்டும் இன்றி, சாதியத்திற்கு எதிரான போராட்டக் களங்களிலும் தன்னைப் பிணைத்துக்கொண்டு செயற்பட்டுவந்த செயற்பாட்டாளர்களில் ஒருவர் என்பதையும் நாம் நினைவுகூர வேண்டும். தெணியான் அவர்களின் குரல் ஈழத்தில் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக ஓங்கி ஒலித்த போர்க்குரல். சாதியம் அற்ற சமத்துவ சமுதாயத்துக்காக ஓயாது கர்ச்சித்த கம்பீரக்குரல். நீதிக்கும் சமத்துவ வாழ்வுக்குமான ஆத்மார்த்தக்குரல்.

ஓயாது எழுதிய தெணியானின் கரங்கள் ஓய்ந்துவிட்டாலும் அவரது எழுத்துக்கள் சாதியக்கோட்டைகளைத் தகர்க்கும் பீரங்கிகளாய் மிக உறுதியாய் நிலைத்து நிற்கின்றன. தெணியான் எனும் சமூகப் போராளியின் இழப்பு எமது மனதுக்கு மிகவும் பாரமானது. அவரது எழுத்துக்கள் என்றும் உயிர்ப்பாய் வாழும்.
அவரை ஆத்மார்த்தமாக நினைக்கின்றோம்.



thiviyarajah@thaiveedu.com





# தெணியான் என்னும் இலக்கிய ஆளுமை

- தாட்சாயணி

ஈழத்து இலக்கியப் பரப்பில் அதிலும் முற்போக்கு இலக்கியம் பற்றிப் பேசப் புகுந்தால், தெணியான் எனும் பெயரைத் தவிர்க்கவே முடியாது. அத்தகைய ஓர் எழுத்தாளருடனான அறிமுகம் எவ்வாறு நிகழ்ந்ததென எண்ணிப் பார்க்கிறபோது, என் நினைவில் எழுகின்ற நாவல் 'பொற்சிறையில் வாடும் புனிதர்கள்.'

இந்நாவலை நான் என் சிறு வயதில் வாசித்திருக்கிறேன். கதையும், கதை மாந்தர்களும் மனதில் பதிந்தது போலவே, அதனை எழுதியவரும் மனதில் நின்று விடுகிறார். அதற்குப் பிறகான காலங்களில் 'சிதைவுகள்', 'தவறிப்போனவன் கதை' போன்றவற்றைப் பத்திரிகையில் தொடர்கதையாய் வந்த போது காத்திருந்து வாசித்தது நினைவிற்கு வருகிறது.

வழமையாக முற்போக்குப் படைப்புக்கள் என்றால், எப்படியும் ஒரு பிரசார வாடை இருப்பது போல, வாசிப்பிற்கு முன்னமே? தோன்றத் தொடங்கிவிடும். ஆனால், தெணியானின் கதைகள் அவ்வாறானதல்ல. செழுமையான கதையம்சமிக்க அக்கதைகளோடு வாசகர் எளிதில் ஒன்ற முடியும். வாசிப்பின் முடிவில் யோசிக்கும் போது தான் அந்தப் பாத்திரங்களின் வாழ்க்கைச் சித்திரத்தினுள் எவ்வகையான முற்போக்குக் கருத்துக்கள் பொதிந்து கிடந்தன என உணர முடியும்.

2004ம் ஆண்டளவில் வடமராட்சியிலிருந்து வெளிவந்த 'ஏகலைவன்' இதழில் 'விடுபடல்' என்னும் சிறுகதை ஒன்றை எழுதியிருந்தேன். இவ்விதழ் வெளிவந்த சில வாரங்களில் அந்தச் சிறுகதையைப் படித்துச் சிலாகித்து எனக்கு அனுப்பப்பட்டிருந்த கடிதம் ஒன்றைப் பார்த்து மெய் சிலிர்த்துப் போனேன். ஏனெனில் அந்தக் கடிதத்தைத் தெணியான் அவர்கள் எனக்கு எழுதியிருந்தார். எனது சிறுகதையைத் தனது மகளிடம் கொடுத்து அதனைப் படிக்கச் சொல்லியதாகவும் அதில் குறிப்பிட்டிருந்தார். எழுத்தாளர் எனும் அங்கீகாரத்தை அப்போது தான் பெறத்தொடங்கியிருந்த எனக்கு, இமயம் என நான் எண்ணியிருந்த ஒருவரிடமிருந்து கிடைத்த பாராட்டு, மிகுந்த உத்வேகத்தையும், எழுதுவதற்கான உந்துசக்தியையும் வழங்குவதாயிருந்தது. மகிழ்ச்சியோடு அக்கடிதத்திற்குப் பதில் எழுதி அனுப்பினேன். அதன் பின்னர் தொடர்ந்தும் கடிதங்கள் மூலம் இலக்கியத் தகவல்களைப் பரிமாறுவதுடன், என் படைப்புக்கள் பற்றிய கருத்துக்களையும் தெரியப்படுத்துவார்.

அதன் பின்னர் 2009ல் எனது 'தூரப்போகும் நாரைகள்' சிறுகதைத் தொகுப்பிற்கான வெளியீட்டு விழா யாழ். பல்கலைக்கழக நூலக மண்டபத்தில் நடைபெற்றபோது, அவ்வெளியீட்டு விழாவில் எனது சிறுகதைத் தொகுப்பு பற்றிய காத்திரமான உரையொன்றையும் ஆற்றியிருந்தார்.

எழுத்திற்கும், வாழ்க்கைக்கும் தொடர்பற்று வாழும் பலரின் மத்தியில் சொல்லுக்கும், செயலுக்கும் வேறுபாடின்றி வாழ்ந்தவராகத் தெணியான் அவர்களைச் சுட்ட முடியும். எழுத்தாளர் என்பதற்கு அப்பால் அவர் ஒரு ஆசிரியராகப் பல மாணவர்களை வழிப்படுத்தியவர். கொள்கைக்காகப் பல போராட்டங்களில் தன்னை ஈடுபடுத்தியவர். நல்லதொரு குடும்பத் தலைவராகத் தன் பிள்ளைகளை அவர்களுக்குரிய திறமைகளோடு நிலைநிறுத்தியவர். இத்தகைய பல்பரிமாண ஆளுமையைக் கொண்டிருந்த தெணியான் சக எழுத்தாளர்களிடத்திலும் அன்பும் அக்கறையும் கொண்டிருந்தவர் என்பதையும் அவருடனான உரையாடல்களில் நான் அறிந்திருக்கிறேன்.

சமூக மட்டத்தில் இருக்கின்ற ஏற்றத்தாழ்வுகள், சாதி, சமய, மத வேறுபாடுகள் போன்றவற்றுக்கெதிராக அவரது எழுத்துக்கள் தமது புனைவை அமைத்துக் கொண்டன. தனியே தாழ்த்தப்பட்ட சாதிகளுக்காக மட்டுமன்றி, சமூகத்தில் உயர் நிலையிலிருந்தாலும் ஒடுக்கப்படும் ஒரு சமூகமாகக் காணப்படுகின்ற பிராமண சமூகத்தின் ஒடுக்குதலைத்தான் 'பொற் சிறையில் வாடும் புனிதர்கள்' அற்புதமாகப் பிரதிபலிக்கின்றது.

போர்க்காலம் தமிழர்களை எவ்வாறு உலுப்பியது என்பதையும், இடப்பெயர்வு மக்களை எவ்வாறு அலைக்கழித்தது என்பதையும் தனது நாவல்களில் முன்வைக்கும் தெணியான், உளவியல் ரீதியான சில கூறுகளை முன்னிலைப்படுத்தியும் சில கதைகளைப் படைத்துள்ளார். சமுதாயத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களையும் அதற்குக் காரணமாகும் சந்தர்ப்ப சூழ்நிலைகளையும் கலாபூர்வமான படைப்புக்களாக வெளிப்படுத்தியுள்ளார்.

இறுதியாக, தனது எண்பதாவது அகவைக்குள் சமூக ஏற்றத்தாழ்வுகளற்ற சமுதாயத்திற்காகப் போராடி, எழுத்து மூலம் தன் எண்ணங்களை இளைய சமுதாயத்திடம் சேர்ப்பித்து, மறைந்த தெணியான் அவர்களது கனவு ஈடேற வேண்டும். அவருடைய பாதையில் எமது பயணங்களைத் தொடர்வோம்.



info@thaiveedu.com



# ஆசான் தெணியான் அவர்களுடன் இறுதிவரை பயணித்தோம்!

- ஏ.ஜி. யோகராஜா

**1968** - ஒரு கோடை ஞாயிற்றுக்கிழமை அல்வாய் வடக்கு, பௌத்த பாடசாலையில் நடைபெற்ற தமிழ் விழாவில் ஓர் எழுத்தாளராக தெணியான் அவர்கள் எமக்கு அறிமுகமானார். இந்நிகழ்வையடுத்து தெணியானுக்கும் வட அல்வை இளந்தலைமுறை இலக்கிய ஆர்வலர்களுக்குமான உறவு நெருங்கியது. வட அல்வை கலை இலக்கிய அரசியல் விமர்சனக் கழகம் சார்பில் நிகழ்ந்த கருத்தரங்கு ஒன்றில் 'மக்கள் இலக்கியம்' குறித்து தெளிவான உரையைத் தெணியான் தந்திருந்தார். பின்னர் 'குருத்துக்கள்' கலை இலக்கிய வட்டம் நிகழ்த்திய ஈழவாணனின் 'அக்கினி' கவிதைச் சஞ்சிகை அறிமுக விழாவிற்குப் பிரதம பேச்சாளராகத் தெணியானை அழைத்திருந்தோம். இந்நிகழ்வில் எம்மால் கையெழுத்துப் பிரதியாக வெளிக்கொணரப்பட்ட 'புதுமை' கலை இலக்கிய மாத இதழ் மற்றும் வட அல்வை கலை இலக்கிய ஆர்வம்மிகு இளைஞர்களின் பொதுநிலைச் செயற்பாட்டுத்திறன் குறித்துச் சிறப்பாக உரையாற்றியிருந்தார்.

1968ல் இருந்து 1976ம் ஆண்டு காலப்பகுதிவரை, எமக்கும் தெணியான் அவர்களுக்குமான இலக்கிய உறவு நெருக்கம் பெற்றிருந்தது. வாலிபர்கள் பலரும் முதிர்நிலை இளமையை அடைந்தமையை அடுத்து ஏற்பட்ட வாழ்வியல் நெருக்கடிகளினால், பகுதியளவு வாலிபங்கள் நீங்கலாக, இளைஞர்கள் பலரதும் வெளிநிலைச் செயற்பாடுகளில் தளர்வுநிலை ஏற்பட்டது. ஆனால் தெணியான் அல்வாய் சிறீலங்கா வித்தியாசாலைக்கு மாற்றலாகி வந்திருந்தமையை அடுத்து அல்வாய் வடக்குடனான உறவு நெருக்கமடைந்தது. 1979ல் நிகழ்ந்த சிறீலங்கா வித்தியாசாலையின் வெள்ளிவிழா நிகழ்வில் பிரதம பட்டிமன்றப் பேச்சாளராக மிளிர்ந்தார். சமூகத்தில் மார்க்ஸிய புரட்சிகரக் கருத்துகளை விதைக்கும் பொருட்டு கே. தங்கவடிவேல் ஆசிரியருடன் என்னையும் இணைத்துக்கொண்டு, கிராமங்கள் தோறும் பல பட்டிமன்ற நிகழ்வுகள் இடம்பெறுவதற்கு முன்னோடியாக இருந்தார்.

1980ல் என்னால் ஆரம்பிக்கப்பட்ட 'டார்வின் கல்வி நிலையத்தில்' சம்பளமின்றி, ஒரு சமூகக் கடமையாக, சிறிதுபெரிது பார்க்காமல் அனைத்து வகுப்பு மாணவர்க்கும் சிறந்த முறையில் தமிழைக் கற்பித்து உயர்ந்த மதிப்பெண்களைப் பெறுவதற்கு வழிகோலியவர் ஆசான் தெணியான். 1995ல் வெளிவந்த வட அல்வை முருகேசனார் அவர்களின் பவளவிழா மலருக்கு, கந்தையா நடேசன் எனும் பெயரில், 'உயர்திரு. க. முருகேசு அவர்கள்'இன் வாழ்க்கையோடு இழைந்த ஒரு சமூக வரலாற்றைத் தொகுத்தளித்தவர், தெணியான். இப்படைப்பு தெணியானின் எழுத்தனுபவத்தின் முழுத்தொகுப்பு. இதன் முக்கியத்துவம் கருதி, பிரான்சிலிருந்து வெளிவந்த 'உயிர் நிழல்' சஞ்சிகையிலும் இது பிரசுரமானது.

இடைவெளியின்றித் தொடர்பில் இருந்தவர், தெணியானின் இறுதிக் கிரியைகள் வரை உறவாடிய எழுத்தாளர், விமர்சகர் மு. அநாதரட்சகன் அவர்கள். அவருடனான உறவு குறித்து தமது 'குடிமைகள்' நாவலிலும் தெணியான் குறிப்பிட்டிருக்கின்றார். என்றும் எம்முடன் இணைந்த சமூக, இலக்கிய ஆர்வலர், வயல் மு. நவம் அவர்களும் ஊரின், உறவின் நிமித்தம் தெணியானின் இறுதி யாத்திரைவரை தொடர்ந்து பயணித்தவர். கனடாவில் வசிப்பவரான இரா. சிவரத்தினம், ஆசான் தெணியானுக்கும் எமக்குமான உறவு, தெணியானின் எழுத்துக்கள் என்பன குறித்த முழுநினைவுகளுடன் இருப்பவர். இலங்கைக்கு வரும் சந்தர்ப்பங்களிலெல்லாம் தெணியானைத் தரிசித்துச் செல்பவர்.

நான் சுவிற்சலாந்திற்கு வந்ததைத் தொடர்ந்து சில காலம் தெணியானுடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்டிருந்தன. 2003ம் ஆண்டு சுவிஸ் தொலைக்காட்சி நிறுவனத்தின் சார்பில் மரியான் பிளச்சர் என்பவரால் தயாரிக்கப்பட்ட, எனதும் எனது குடும்பத்தைப் பற்றியதுமான ஆவணப்படம் அல்வாயில் எனது தம்பியார் ஞானதாஸ் அவர்களால் திரையிடப்பட்டது. அந் நிகழ்வுக்குச் சமூகமளித்திருந்த தெணியான் அதற்கான வாழ்த்துரையை எனது தம்பியார் மூலம் எனக்கு அறிவித்திருந்தார்.

இலங்கையில் யுத்தம் முடிந்ததை அடுத்து அடிக்கடி இலங்கைக்குச் செல்கின்ற நான், தெணியானைச் சந்திப்பதை எனது முக்கிய பணிகளில் ஒன்றாகக் கருதினேன். 'சாகித்ய ரத்தினா' விருது கிடைக்கப்பெற்றபோது அவரது வாழ்விடம் சென்று அவரை வாழ்த்தியிருந்தேன். 2017ல் வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நிகழ்ந்த 'சமூக சமத்துவம், அடுத்தகட்ட நகர்வு' குறித்த கருத்தரங்கிற்கும், 2020ல் நிகழ்ந்த எனது 'எழுவோம் நிமிர்வோம் திரள்வோம்' நூல் வெளியீட்டிற்கும் வந்திருந்த தெணியான், வெளிப்படையான தமது கருத்துகளை முன்வைத்துத் தெளிவாக உரையாற்றியமையை என்றும் மறந்துவிட முடியாது!

இறுதியாக, இவ்வருடமும் இலங்கை சென்றிருந்த நான், தெணியான் அவர்களைத் தரிசிப்பதற்கு முன்பாகவே, அவர் தனது இறுதி அத்தியாயத்தை முடித்துக்கொண்டதையிட்டு மிகுந்த துயருற்றேன். இருந்தும், தெணியான் அவர்களது இறுதி யாத்திரைவரை பயணித்தமை எனக்குப் பெருமையே!



info@thaiveedu.com





# தெணியான் Sir!

**- திரவியம் சர்வேசன்**

வெள்ளை வேட்டி, மெல்லிய நிறத்தில் பெரும்பாலும் அரைக்கை ஷேர்ட், தடித்த கறுப்புப் ஃப்பிறேம் போட்ட மெல்லிய நீலவர்ணக் கண்ணாடி, மேலதிக புரதமோ, கொழுப்போ திரளாத திடமான உடல், சராசரியைவிடச் சற்று உயர்ந்த - மிக மிடுக்கான தோற்றம், பிசிரற்ற கணீரென்ற இயற்கையான குரல், இவற்றின் உடமையாளர்தான் எங்கள் Sir, ஊருலகம் போற்றும் 'தெணியான்'. என்னவோ தெரியவில்லை... அவரைத் 'தெணியான்' என்று என்னால் விழிக்க முடியவில்லை. அவர் எப்போதும் எனக்கு Sirதான். இப்பவும் அதே பயம், எனக்குள்!

கல்வி, தொழில் நிமித்தம் ஊரைவிட்டு வெளியூர்களுக்குச் சென்றதன் காரணமாக - நான் வளர்ந்து பெரியவனாகி வாசிப்பிலும் எழுத்திலும் இலக்கியத்திலும் சற்றுப் பிடிப்பு வந்த காலங்களில் -Sirருடன் பழக வாய்ப்புக்கள் இல்லாமல் போயின. ஊரிலேயே நான் இருந்திருந்தால் அவரது தீவிர விசிறியாக மட்டும் அல்லாமல், அவரது சிந்தனைகளாலும் எழுத்துக்களாலும் ஆகர்ஷிக்கப்பட்டு எழுத ஆரம்பித்திருப்பேனோ என்னவோ! ஏன், தூரதேசவாசியாக இருந்தும் அவரின் சில சிந்தனைகள், கருத்துக்கள் என்னை வெகுவாகப் பாதித்திருப்பதை உணர்கிறேன். குறிப்பாக, ஆறுமுக நாவலரை நான் வணங்குவதுமில்லை, வழிபடுவது பின்பற்றுவதுமில்லை. இது எனது Sirஇன் சிவப்புச் சிந்தனைகளின் பக்கவிளைவு என்பதில் எனக்கு வெட்கமில்லை, பெருமையுண்டு!

தேவரையாளி இந்துக் கல்லூரியில் அவர் ஆரம்பித்துவைத்த கணிதம்தான் என்னைக் கனடாவரை கொண்டுவந்திருக்கிறது. இன்றுவரை நான் பாவிக்கும் தமிழ் மொழியின் செழிப்புக்கும் செந்தலிப்புக்கும் அவர்தான் சொந்தக்காரன். தமிழை அழகாகவும் உறுதியாகவும் வற்புறுத்தி என் மண்டைக்குள் புகுத்திய புண்ணியம் அவருக்கே உரியது. என் நல்லகாலம் அவர் என் ஆசானாக கிடைத்தமை. என் மனம் கவர்ந்த Sir பற்றிச் சொல்வதற்கு ஏராளம் அனுபவங்களும் சம்பவங்களும் என் மனக்கிடங்கில் ஆழப் புதைந்து கிடக்கின்றன. இது அதற்கான தருணமல்ல.

'Sir மிகவும் கண்டிப்பானவர்' என்பதற்கு உதாரணமாக ஒரேயொரு சம்பவம் மட்டும் - ஒருநாள் பாடசாலை இடைவேளை. அயலிலுள்ள கண்ணகை அம்மன் கோயிலுக்கு நண்பர்களுடன் உலாப் போனேன். அது ஒரு மாரிகாலம். கோயிலைச் சுற்றி மழை வெள்ளம் கடல்போல நிரம்பி வழிந்துகொண்டிருந்தது. பட்டமரக்குற்றி ஒன்றை மிதக்கவிட்டு அதன் மேலேறி அமர்ந்து, வள்ளத்தில் சவாரி செய்வது போல, வெள்ளத்தில் விளையாடினோம். பின்னர் பிரச்சினையேதுமின்றி மீண்டும் வகுப்புக்குள் வந்தமர்ந்தோம். அடுத்த பாடம் Sirருடையது. வகுப்புக்குள் வந்ததும் 'வெள்ளம் விளையாடப் போனவர்கள் எழும்பி முன்னுக்கு வரலாம்' என்றார். எமக்கோ திகைப்பு! எப்படித் தெரிந்தது, இவருக்கு! இனியும் மறைப்பது சாத்தியம் இல்லை, எல்லோரும் முன்னே சொன்றோம். கரும்பலகையைப் பார்க்கும் வண்ணம் வரிசையாக நிறுத்தப்பட்டோம். எல்லோருக்கும் பிருஷ்டத்தில் பிரம்பால் எண்ணற்ற அடிகள் இடிகளாக இறங்கின. அப்படி ஒரு அடியை வேறெங்கும் வாங்கியதில்லை. எல்லாம் முடிய, அவர் எமக்கு சொன்ன செய்தியால் நாங்கள் அதிர்ந்து போனோம். ஆறுபோல வழிந்தோடும் மழை வெள்ளதுக்கு அடியிலே ஆங்காங்கே ஆழமான கிடங்குகளைக் கொண்ட அப்பிரதேசத்தில், பட்டமரக் கொட்டுகளிலேறிக் கப்பலோட்டி விளையாடி, வெள்ளத்தோடு வெள்ளமாய் அள்ளுண்டு அமிழ்ந்து மாண்டுபோகும் ஆபத்தினை எடுத்துச் சொன்னார். அன்று ஏதோ, தலை தப்பியது தம்பிரான் புண்ணியம்! அடுத்தடுத்த நாட்களிலும் அதே காரியத்தைச் செய்யவிடாமல், அடித்துத் திருத்தி எங்கள் உயிர்காத்த Sirக்கு எப்படி நன்றி நான் சொல்வேன்!

முன்யோசனை மிக்க ஒப்பற்ற பண்புகளும் ஆற்றல்களும் வாய்ந்த எனது Sir, அடிநிலை மக்களுக்காகக் குரல் கொடுக்கும் தனது ஆவேசத்தில் சற்றேனும் தளராத சமூக விடுதலைப் போராளி. அடக்கியொடுக்கப்பட்டவர்கள் தம் இருப்புக்களையும் அடையாளங்களையும் பூடகமாகப் பூட்டி மறைத்து வைத்துப் போலியாக நடித்துத் திரிந்தபோது, அவர் துணிவாகத் தன் சிந்தனைகளைச் சமூகத்தில் பீறிட்டுப் பட்டுத்தெறிக்கவிட்டவர்.

அவரது மறைவு சுரண்டப்பட்ட மக்களுக்கு ஏற்பட்ட ஒரு பேரிழப்பு. அவரது சிந்தனைகளும் சமூக செயற்பாடுகளும் எழுத்துக்களும் இளைய தலைமுறையினரது மனதில் புதுவித உத்வேகத்தை எற்படுத்தும் என்ற நம்பிக்கையுடன், எனது மதிப்புக்குரிய Sirக்கு விடை கொடுத்து வழியனுப்புகின்றேன்.

உங்கள் சேவைகள் அனைத்திற்கும் நன்றி,
போய்வாருங்கள், என் அன்புள்ள Sir!



sarvesan@thaiveedu.com






# பரந்த அனுபவம்

ஊடகத்துறையில் பணியாற்றுபவர்கள் பெரும்பாலும் ஊடகவியலாளர்களென்று அறியப்பட்டாலும் அவர்களில்ப்பலர் பன்முக ஆளுமைகொண்டவர்களாக இருப்பதைப் பார்க்கிறோம். நான் இலங்கையிலிருந்தபோது வானொலி, தொலைக்காட்சி ஊடகரென்று மட்டுமே அறியப்பட்டிருந்தேன். நான் வானொலியிலும் தொலைக்காட்சியிலும் நாடகங்கள், மற்றும் நிகழ்ச்சிகளுக்கான பிரதிகளை எழுதியிருந்தாலும் பத்திரிகைகளில் எழுதாத காரணத்தால் எழுத்தாளராக அறியப்படவில்லை. ஆனால், கனடாவுக்கு வந்தபின்னர் இந்த முப்பத்தொரு வருட காலத்தில் பத்திரிகைகளில் எழுதுபவராகவும் மேடைகளில் பேசுபவராகவும் எனது செயற்பாடுகள் விரிவடைந்திருக்கின்றன. அவைபற்றிய சில தகவல்களையும் எனது கருத்துகளையும் இங்கே தருகிறேன்.

நான் எனது சிறுவயதுக்காலத்தில் பேச்சுப்போட்டி, நாடகப்போட்டியென்று பங்குபற்றிப் பரிசுகள் பெற்றிருந்தாலும் எழுத்துத்துறையில் ஈடுபாடு காட்டவில்லை. அதற்கான காரணம், கல்லூரி நாட்களில் நான் பலதுறைகளிலும் ஈடுபாடுகாட்டியதால், இருந்து சிந்தித்து எழுதுவதற்குப் போதிய நேரம் எனக்குக் கிடைப்பதில்லை. ஆனால், மிக அதிகளவில் வாசித்திருக்கிறேன். வாசிப்பால்த் தூண்டப்பெற்று அவ்வப்போது எழுதுவதற்கு நினைத்தாலும் அதற்கான நேரம் கிடைக்கவில்லை. அப்படியிருந்தும் எனது பதின்ம வயதுகளில் ஒரு சிறுகதை எழுதி, வீரகேசரிப் பத்திரிகைக்கு அனுப்பியிருந்தேன். அதுபற்றிய எந்தவித தகவலும் அப்பத்திரிகையிலிருந்து அப்போது கிடைக்கவில்லை. அதைச்சரியான முகவரிக்குத்தான் அனுப்பினேனாவென்பதும் தெரியவில்லை. 1969ம் ஆண்டு, அரியாலை சுதேசியத் திருநாள்ப் பொன்விழாவுக்கென நடத்தப்பட்ட சிறுகதைப்போட்டியில் பங்குபற்றி முதற்பரிசு பெற்றமை எனது எழுதும் ஆற்றலில் எனக்கு நம்பிக்கையை ஏற்படுத்தியது. ஆனால், நான் சிறுகதை, நாடகம் முதலியவற்றை எழுதுவதில் விருப்பம் கொண்டிருந்தாலும் கவிதை எழுதுவதற்கு ஒரு போதும் முயன்றதில்லை. என்னுடைய கல்லூரி நண்பர்கள் சிலர் அந்த வயதிலேயே கவியரங்குகளில் பங்குபற்றுமளவுக்குத் திறமைசாலிகளாக இருந்தார்கள்.

## கவிதை:

கவிதை எழுதுவதற்கு மிகுந்த ஆற்றல் வேண்டுமென்று கருதுபவன் நான். கவிதைகள் மூலம் சொல்லும் விடயங்கள் எவ்வளவு முக்கியமோ அதைவிட முக்கியமானது அவற்றைச் சொல்வதற்கான மொழிநடை. ஒரு விடயத்தை அல்லது கருத்தைக் கட்டுரையாக எழுதிவிடலாம். ஆனால், கவிதையாக எழுதுவதென்பது விசேட ஆற்றல். எண்ணத்தை, கருத்தை உணர்வுடன் கவிதைகளாக வெளிப்படுத்துவதற்கு மிகுந்த மொழிப்புலமை வேண்டும். நினைத்த மாத்திரத்தில் கவிதை பொங்கிப் பிரவகிக்கவேண்டுமென்று எப்பொழுதுமே நினைப்பேன். நான் சிறுவயதிலிருந்து கேட்ட கவியரங்கங்கள் குறிப்பாக, பொங்கல் நாளன்று சென்னை, திருச்சி வானொலி நிலையங்களிலிருந்து ஒலிபரப்பாகும் கவியரங்கங்கள், காங்கேசன்துறையில் எமது இளந்தமிழர் மன்றம் வருடாந்தம் நடத்தும் பாரதி விழாவில் கவிஞர்கள் கந்தவனம், அம்பிகைபாகன், நாகராஜன், காரை சுந்தரம்பிள்ளை, பார்வதிநாதசிவம், சச்சிதானந்தம் போன்றோர் நிகழ்த்தும் கவியரங்கங்களில் நான் கேட்ட கவிதைகள் மொழியின் அழகை வெளிப்படுத்துவனவாக அமைந்து, கவிதைகளென்றால் அழகிய மொழிநடை என்ற எண்ணத்தை என் மனதில் ஆழமாகப் பதித்துவிட்டது. எனது இந்தக் கருத்தோடு தீவிர நவீன கவிதை விமர்சகர்கள் உடன்படமாட்டார்கள் என்பதை அறிவேன். ஆனால், கவிதைபற்றி விவாதிப்பதல்ல என் நோக்கம். அழகிய மொழிநடைதான் கவிதைகளின் அடையாளம் என்ற எண்ணம் சிறுவயதிலிருந்து எனக்கிருப்பதால், அந்த மொழிநடை கைவரப்பெறாத என்னால் கவிதை எழுத முடியவில்லை என்பதைத் தெரிவிப்பதே என் நோக்கமாகும்.

பாரதியார், பாரதிதாசன், சுரதா, கவிக்கோ ரகுமான் ஆகியோரது கவிதைத் தொகுப்புகளை நான் வாய்விட்டு வாசித்து அவற்றின் சந்தத்தையும் ஓசை நயத்தையும் இரசிப்பது வழக்கம். தமிழ் மாத்திரமல்ல, எந்த மொழியாக இருந்தாலும் கவிதைகளை அவற்றின் ஒலிநயத்திற்காக இரசிக்கலாம். ஒரு சொல்லுக்குக்கூடப் பொருள் விழங்காவிட்டாலும் ஓசை நயத்தைக்கொண்டு கவிதையை இனங்காணமுடியும். உருதுமொழிக் கவிதை நிகழ்ச்சிகளை நான் விரும்பிக் கேட்பதுண்டு. அந்த ஓசையை இரசிக்கலாம். ஒழுங்கமைக்கப்பட்ட ஒலி அல்லது ஓசை தரும் இன்பம் அற்புதமானது. என்னால் எந்தமொழிப் பாடல்களையும் இரசிக்கமுடியும். மொழி புரியவேண்டிய அவசியமில்லை. மொழியும் புரியுமானால் அந்த அனுபவம் மிக உயர்வாக இருக்கும்.

ஒருவர் ஒரு மொழியைப் பேசும் ஓசையைக் கேட்டு அவர் அந்த மொழியைச் சரியாகப் பேசுகிறாராவென்பதைக் கண்டுபிடித்துவிடலாம். ஒருமுறை ரூபவாஹினியில் தமிழ் அறிவிப்பாளர்களுக்கான தெரிவு நடைபெற்றபோது தெரிவுக்குழுவில் என்னுடன் பிரபல ஆங்கில அறிவிப்பாளர் ஷேர்ளி பெரேராவும் இருந்தார். அவருக்குத் தமிழ் தெரியாத போதும் ரூபவாஹினியில் அவர் உயர் பதவியிலிருந்ததாலும் ஆங்கில அறிவிப்புத்துறையில் நீண்டகால அனுபவத்தைக் கொண்டிருந்ததாலும் அவர் தமிழ் அறிவிப்பாளர் தெரிவுக்குழுவில் இடம்பெற்றிருந்தார். தேர்வுக்குத் தோற்றியவர்கள் கலையகத்திற்குள்ளிருந்து அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட செய்திப்பிரதிகளை வாசித்தார்கள். மறுபக்கத்திலுள்ள கட்டுப்பாட்டறையிலிருந்து நாம் கேட்டுக்கொண்டிருந்தோம். தேர்வுக்கு வந்தவர்கள் யாரேனும் சரியாக வாசித்துவிட்டால் ஷேர்ளி பெரேரா அவர்கள் உடனேயே என்பக்கம் திரும்பி, ‘அவர் நன்றாக வாசிக்கிறார்’ (He is good) என்று சொல்வார். அவரிடம் ‘உங்களுக்குத் தமிழ் புரியுமா?’ என்று நான் வியந்து கேட்டபோது, ‘ஒருவர் வாசிக்கும் ஓசையிலிருந்து அவர் நன்றாக வாசிக்கிறாரா இல்லையாவென்று சொல்லிவிட முடியும்’ என்றார். அது முற்றிலும் உண்மை. ஓசைகளோடு தினமும் பழகுபவர்களுக்கு இது புரியும். கவிதைகளும் ஓசையின்பத்தைக் கொடுக்கின்றன.

சிறந்த மொழிநடையிலமைந்த கவிதைகளைக் கேட்டுப் பிரமிக்கும் எனக்கு, அத்தகைய ஓசை நயத்துடன் கவிதைபுனையும் திறன்

என்னிடமில்லையென்று உணர்வதால், நான் கவிதை எழுதுவதற்கான எந்த முயற்சிகளையும் மேற்கொள்வதில்லை. மூளையைப் பிசைந்து சொற்களைக் கண்டுபிடித்து அவற்றைக் கொண்டு கவிதையை உருவாக்குவதில் எனக்கு உடன்பாடு கிடையாது. வாயைத்திறந்தால் கவிதை பிரவகிக்க வேண்டும். ஈழத்துப் பாடல்கள் சிலவற்றைக் கேட்கும்போது சிலர் வலிந்து இடக்குமுடக்காகச் சொற்களை முறித்துப் பாடல்களை எழுதியிருக்கிறார்களென்று நான் நினைப்பதுண்டு. கவிதை எழுதுவதற்குத் தனித்திறமை வேண்டுமெனில் திரைப்படங்களில் காட்சிகளுக்கேற்ற விதத்திலும் மெட்டுகளுக்கேற்பவும் அர்த்தத்தோடு பாடல்களை எழுதுவதற்கு மிகுந்ததிறமை வேண்டும். கண்ணதாசன், வாலி, வைரமுத்து, முத்துக்குமார் போன்றவர்களின் சினிமாப் பாடல்கள் என்னை எப்போதும் வியப்பில் ஆழ்த்தும். அவர்களது அனேகமான திரைப்படப் பாடல்களை மெட்டில்லாவிட்டாலுங்கூடக் கவிதையாக வாசிக்கலாம். இவ்வாறு நான் கவிதைகள், பாடல்கள் மீது கொண்ட பிரமிப்பின் காரணமாக அவற்றை எழுதுவதற்கு என்னால் நினைத்துக் கூடப்பார்க்க முடியாதென்று கருதி, இன்றுவரை நான் ஒரு கவிதையையோ ஏன் ஈழத்துப்பாடலையோகூட எழுதியதில்லை.

## பிற படைப்பிலக்கியங்கள்:

கவிதை எழுதுவதற்கு நான் முயற்சிசெய்யாவிட்டாலும் கதை, நாடகம், கட்டுரைகள் எழுதும் எழுத்தாளராக என்னை இனங்காணப் போதுமான அளவுக்கு நான் எழுதியிருக்கிறேன். எனது பத்தொன்பதாவது வயதுவரை நான் ஒரேயொரு சிறுகதை மாத்திரமே எழுதியிருந்தாலும் நான் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் சேர்ந்த முதல் வருடத்திலேயே உரைச்சித்திரத் தயாரிப்புப் போட்டியில் பங்குபற்றி அதன் பிரதியை நானே எழுதி, அந்தப் போட்டியில் பரிசுபெற்றதன்மூலம் எனது எழுத்து வன்மையில் எனக்கு நம்பிக்கையேற்பட்டது. தொடர்ந்து, ஒலிபரப்புக்காகப் பல நிகழ்ச்சிகளுக்குப் பிரதிகளை எழுதியிருக்கிறேன். குறிப்பாக, தேசியசேவையில் வார இறுதி நாளில் காலை பத்துமணிக்கு ஒலிபரப்பான 'தொகுப்பிசை' என்ற நிகழ்ச்சிக்குப் பல பிரதிகளை எழுதி ஒலிபரப்பினேன். ஏதாவதொரு பொருளில் (theme) சினிமாப் பாடல்களைத் தொகுத்து வழங்குவதே தொகுப்பிசை நிகழ்ச்சி. அப்போது தேசியசேவையில் இந்தத் தொகுப்பிசையிலும் நாள்தோறும் நண்பகல் பன்னிரண்டு மணிமுதல் ஒன்றரை மணிவரை இடம்பெறும் ஒலிபரப்பிலும் வாரத்தில் இரண்டு நாட்கள் இரவு பத்துமணிக்கு இடம்பெறும் நேயர் விருப்பத்திலும் அரைமணித்தியாலத்திற்கு சினிமாப்பாடல்கள் ஒலிபரப்பப்பட்டன. நான் முதல் முதலில் தயாரிக்கத் தொடங்கிய இரசமஞ்சரி என்ற நிகழ்ச்சிக்கான பிரதிகளை நானே எழுதினேன். எனது வானொலிக் காலத்தில் நாடகங்கள் எழுதுவதில் மிகுந்த கவனத்தைச் செலுத்தினேன். குறிப்பாக, நான் பரீட்சார்த்த நாடகங்கள் தயாரித்தபோது ஒன்றிரண்டு நாடகங்களைத் தவிர அனைத்து நாடகங்களையும் நான் எழுதினேன். எனது நாடக எழுத்துக்கான உச்சக்கட்ட அங்கீகாரமாக இலங்கைத் திரைப்படக் கூட்டுத்தாபனம் நடத்திய திரைக்கதைப்பிரதியெழுதும் போட்டியில் எனக்கு முதற்பரிசு கிடைத்தமையைக் கருதலாம்.

## பத்திரிகைகளுக்கு எழுதுதல்:

வானொலியில் எனது சேவைக்காலத்தில் நாடகம், மற்றும் நிகழ்ச்சிகளின் பிரதிகளை நான் எழுதினாலும் பத்திரிகைகளுக்கு எதுவுமே எழுதியதில்லை. வானொலியில் பணியாற்றும்போது அங்கு பணிபுரிபவர்கள் பத்திரிகைகளுக்கு எழுதுவதோ அவற்றுக்குப் பேட்டிகொடுப்பதோ சாதாரணமாக அனுமதிக்கப்படுவதில்லை. அப்படி ஏதும் பத்திரிகைகளில் எழுதுவதென்றாலோ பேட்டிகொடுப்பதென்றாலோ மேலிடத்தில் அனுமதி பெறவேண்டும். வானொலி நிகழ்ச்சிகளை அல்லது வானொலி நிலையத்தினால் நடத்தப்படும் நிகழ்ச்சிகளைத் தவிரப் பிற நிகழ்ச்சிகளில் அறிவிப்பாளர்கள் அறிவிப்புச் செய்யவோ அல்லது தொகுத்து வழங்கவோ மேலிடத்து அனுமதி பெறவேண்டும். நான் 1979ம் ஆண்டு, இராஜசுந்தரம் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க வீணை அரங்கேற்றமொன்றில் அறிவிப்பாளராக மேலிடத்து அனுமதி-பெற்றே கலந்துகொண்டேன். இப்படி வெளிநிகழ்ச்சிகளில் பங்குபற்றுவதற்கோ பத்திரிகைகளில் எழுதுவதற்கோ முன்னனுமதி பெறவேண்டுமென்ற நிலையிருந்ததால் வானொலியில்ப் பணியாற்றியவர்கள் வெளிநிகழ்ச்சிகளில் பங்குபற்றுவதற்கோ பத்திரிகைகளில் எழுதுவதற்கோ அனேகமாக ஆர்வம் காட்டுவதில்லை. குறிப்பாக, நான் ஆர்வம் காட்டவில்லை.

ஆனால், நான் ரூபவாஹினிக்குச் சென்றபின்னர் இந்த நிலையில் மாற்றமேற்பட்டது. இலங்கையின் புதிய ஊடகம். அதன் செயற்பாடுகள் பற்றி அறிந்துகொள்வதில்ப் பொதுமக்கள் மிகுந்த ஆர்வம் காட்டினார்கள். எனவே, பத்திரிகைகளும் மிகுந்த ஆர்வம் காட்டின. குறிப்பாக, தமிழ் மக்களிடம் தமிழ் நிகழ்ச்சிகள் பற்றிய பலத்த எதிர்பார்ப்பும் மனக்குறையும் இருந்தது. எனவே, பத்திரிகைகளின் கேள்விகளுக்குப் பதிலளிப்பதற்கும் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் ரூபவாஹினித் தமிழ்நிகழ்ச்சிகள் பற்றிய கட்டுரைகளை எழுதுவதற்கும் தொலைக்காட்சிபற்றிய கருத்தரங்குகளில் பங்குபற்றுவதற்குமான அவசியமேற்பட்டது. அதனால் ஞானம் இரத்தினம் அவர்கள் ரூபவாஹினியின் தலைவர் எம்.ஜே.-பெரேரா அவர்களின் அனுமதிபெற்று, ரூபவாஹினித் தமிழ்நிகழ்ச்சிகள்பற்றிய கருத்தரங்குகளில் பங்குபற்றுதல், பத்திரிகைகள், சஞ்சிகைகளில் கட்டுரைகள் எழுதுதல், செவ்விகள் கொடுத்தல் போன்ற பணிகளைச் செய்யுமாறு என்னைப் பணித்தார். ரூபவாஹினிக்கு எந்தவிதமான சட்டச்சிக்கல்களை ஏற்படுத்தாத விதத்திலும் அனாவசியமான பிரச்சினைகளை உண்டாக்காத வகையிலும் அந்தப் பணியைச் செய்யக்கூடிய முதிர்ச்சி எனக்கிருப்பதாக ஞானம்-இரத்தினம் அவர்கள் கணித்திருந்தார். அதற்கமைய நான் ரூபவாஹினியில் பணியாற்றிய காலத்தில் அந்தப் பணியைச் செய்தேன். ஆனால், மிக அளவுடன், மிக அவசியமென்று தோன்றும் பட்சத்தில் மட்டுமே அவற்றைச் செய்தேன். நான் ரூபவாஹினியில் பணியாற்றியபோது மிக அவதானமாக இருந்தேன். குறிப்பாக, நான் முற்றுமுழுதாகத் தமிழ்நிகழ்ச்சிப் பிரிவின் தலைவராகப் பொறுப்பேற்றபின்னர் சிலவேளைகளில்ப் பத்திரிகைகளில் வெளிவரும் விமர்சனங்களுக்குப் பதில் எழுதுவது நன்மைபயக்குமென்று கருதினால், நான் நேரடியாகப் பதிலெழுதி வாக்குவாதத்தில் ஈடுபடாது, நண்பர்களைக்கொண்டும் எழுதுவித்தேன். அந்தக் காலகட்டத்தில் நான் பண்டைய கிரேக்க, உரோம நாடகம்பற்றி எழுதிய கட்டுரை 'வீரகேசரி' வாரமஞ்சரியில் 1989ம் ஆண்டு, டிசம்பர் மாதம் 3ம், 10ம் திகதிகளில் வெளிவந்தது. இதுவே நான் ரூபவாஹினி பற்றியல்லாது பிற விடயம் பற்றி எழுதிப் பத்திரிகையில் வெளிவந்த முதல்க் கட்டுரை.


Chairman/DDG(P)/D(P)/H (D)

I request your permission to write articles on Tamil Drama (specially script writing) in Tamil papers.

Since I am in this field for the past 15 years (stage,radio and TV) I feel sharing my thoughts and experience with Tamil writers through newspapers will be usefulto refresh our drama field.

Thank you,

P Wikneswaran
PRODUCER

பத்திரிகையில் எழுதுவதற்கு அனுமதி வேண்டி ரூபவாஹினி மேலிடத்துக்கு எழுதிய கடிதம்


R/1/15/08(88)

Admin Division
SLRC Colombo 07.

22 Aug. 1988.

Mr. P Wigneswaran
Asst. Dir/Tamil Programmes

Thro' DDG/GP

SEMINAR ON "MASS COMMUNICATION AND SOCIAL DEVELOPMENT
TO BE HELD FROM 22ND TO 25TH AUG. 1988

S.L.F.I has invited you to deliver a lecture on "the impact of Television on Scoiety", at the above Seminar from 1545 hrs to 1715 hrs on 23rd Aug. 1988.

Permission is granted to undertake this work, pls.

Director Admin

c.c. DDG/GP : For information

தொலைக்காட்சி பற்றிய கருத்தரங்குகளில் பேசுவதற்கான அழைப்புகளில் ஒன்று.


சிந்தாமணி
CHINTAMANI
Illustrated Tamil News Weekly

7. 7. 1988.

AN INDEPENDENT NEWSPAPERS LTD. PUBLICATION

எனது நாடகம் பற்றிய கட்டுரை கேட்டு அனுப்பிய கடிதம்

## கனடாவில் எழுத்துப்பணி:

நான் 1991ம் ஆண்டு கனடாவுக்கு வந்தபின்னர் ரொறன்ரோவில் வெளிவந்த, வெளிவரும் சில தமிழ்ப்பத்திரிகைகள், சஞ்சிகைகளில் அவ்வப்போது கட்டுரைகள் எழுதிவருகிறேன். அதைக்கூட எனது

வழக்கப்படி அதிகளவில் செய்யாமல் அவசியமென்று கருதும் போதும் பத்திரிகைகள், சஞ்சிகைகள் முதலியவற்றின் ஆசிரியர்களின் வேண்டுகோளுக்கிணங்கவுமே எழுதிவருகிறேன். இலங்கையிலிருக்கும்வரை வானொலி, தொலைக்காட்சி ஊடகங்களின் வாயிலாக மட்டுமே அறியப்பட்ட நான், கனடா வந்தபின்னர் பத்திரிகை ஊடகத்திலும் எனது பங்களிப்பைத் தொடர்ந்து செய்துவருகிறேன். நாடகம், கட்டுரைகள் என்று எழுதுவதோடு, எனது பல செவ்விகளும் கடந்த முப்பத்தொரு ஆண்டுகளில் இங்கு பத்திரிகைகளில் பிரசுரமாகியிருக்கின்றன. இந்த செவ்விகளில் அனேகமாக எனது ஊடகத்துறை, மற்றும் நாடகத்துறை அனுபவங்கள்பற்றிப் பேசியிருக்கிறேன்.

கனடாவில் எனது முதல்க் கட்டுரை 1992ம் ஆண்டு D.B.S. ஜெயராஜ் ஆசிரியராக இருந்த ‘செந்தாமரை’ப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது. அப்போது வெளிவந்த மணிரத்தினம் அவர்களின் ‘ரோஜா’ திரைப்படம் பற்றிய விமர்சனத்தை எழுதியிருந்தேன். அந்தத் திரைப்படத்திற்குத்தான் ஏ.ஆர். ரகுமான் முதல்முதலாக இசையமைத்தார். அந்த இசையை மிகவும் பாராட்டியிருந்தேன்.

நான் ரொறன்ரோவுக்கு வந்த காலட்டத்தில், அப்போது இங்கு வாழ்ந்த தமிழ்ச்சமூகத்தினர் சிலரின் வாழ்க்கை நடைமுறைகளால் தூண்டப்பட்டு ‘இனி ஒரு எதிர்காலம்’ என்ற மேடை நாடகத்தை எழுதினேன். அது மேலை நாட்டு வகைப்படுத்தலில் ‘டார்க் கொமெடி’ (dark comedy) வகையைச்சேர்ந்த யதார்த்த நாடகம். அந்த நாடகத்தை அப்போது மேடையேற்றுவதற்கான ஆட்பலமில்லாத காரணத்தால் அதை ஒரு பத்திரிகையில் பிரசுரிக்கலாமென்று நினைத்து, அப்போது ‘சூரியன்’ என்ற பெயரில் பத்திரிகை நடத்திக்கொண்டிருந்த ஆர்.என். லோகேந்திரலிங்கம் அவர்



‘கனடா உதயன்’ ஆசிரியர் திரு. ஆர்.என். லோகேந்திரலிங்கம்

களிடம் கொடுத்தபோது, அவர் அதைத் தனது பத்திரிகையில் தொடராக வெளியிட்டார். இந்த நாடகம் சூரியன் பத்திரிகையில் 1995ம் ஆண்டு தொடராகப் பிரசுரிக்கப்பட்டது. சூரியன் பத்திரிகையை லோகேந்திரலிங்கம் நந்தகுமார் என்பவருடன் இணைந்து ஆரம்பித்திருந்தார்.

D.B.S. ஜெயராஜ் அவர்கள் ஆசிரியராக இருந்து வெளியிட்ட ‘செந்தாமரை’, ‘மஞ்சரி’ ஆகிய வாராந்தப் பத்திரிகைகளில் நான் எழுதிய பல கட்டுரைகள் பிரசுரமாகின. அவற்றில் எழுதிய கட்டுரைகள் சிலவற்றை மிக முக்கியமானவையாக நான் கருதுகிறேன். அந்தக் காலகட்டத்தில் 1992ம் ஆண்டு நடந்த தேடகத்தின் நாடக விழாவைத் தொடர்ந்து, ஈழத்தமிழர்கள் மேடை நாடகங்களில் அக்கறையோடு ஈடுபட்டால் அக்கலையில் சிறந்துவிளங்கலாமென்ற எனது எண்ணம் தீவிரமாகியது. ஈழத்தமிழர்களுக்குச் சாத்தியமான கலையாகத் திகழக்கூடியது மேடை நாடகம்தானென்பது எனது நிலைப்பாடு. ஏனெனில், சினிமா பார்க்கும் ஈழத்தமிழர்களின் தொகை ஒரு சினிமாத் தயாரிப்புக்காகும் செலவை மீட்டெடுக்கப் போதுமான வருவாயைத் தரக்கூடிய அளவுக்குப் பெரியதல்ல. அது மிகுந்த பொருட்செலவில் தயாரிக்கப்படும் ஜனரஞ்சகத் திரைப்படமாகவோ அல்லது குறைந்த செலவில் தயாரிக்கக்கூடிய கலைப்படங்களாகவோ இருக்கலாம். ஜனரஞ்சகப் படங்களின் தயாரிப்புக்கான செலவை மீளப் பெறக்கூடியதற்கான பெரும்பான்மை இரசிகர்களோ அல்லது கலைப்படங்களின் தயாரிப்புச் செலவை மீளப்பெறக்கூடிய அளவுக்குக் கலைப்பட இரசிகர்களோ ஈழத்தமிழர்கள் மத்தியில் இல்லையென்றே கருதுகிறேன். எந்தத் திரைப்படங்களைத் தயாரிப்பதற்கான செலவுகளையும் மீட்டெடுப்பதற்குப் போதுமான சனத்தொகை எம்மிடம் இல்லையென்பது உண்மை. சிலவேளைகளில் ஒரு அரிய நிகழ்வாக அல்லது விதிவிலக்காக அப்படி இலாபம் தரும் வகையில் ஒரு தயாரிப்பு அமையலாம். ஆனால், நிச்சயமாக ஒரு தொழில்த்துறையாக ஈழத்தமிழர்கள் மத்தியில் சினிமா வளரமுடியாதென்பது எனது கணிப்பாக அப்போது இருந்தது. இப்போது O.T.T. என்ற தளங்களின்மூலம் திரைப்படங்கள் மக்களைச் சென்றடையத் தொடங்கியிருப்பதால் நிலைமைகளில் மாற்றமேற்பட்டிருக்கிறதென்று நம்பினாலும், ஓ.ரீ.ரீ-யின் செயற்பாடுகள்கூட சிறு தயாரிப்புகளுக்கு உகந்தவையென்ற நிலை மாறிவருவதாக சினிமாத்துறை சார்ந்தவர்கள் சொல்வதையும் நான் இப்போது கேட்கிறேன். நான் கூறுவது முழுக்கமுழுக்கப் பொருளாதாரரீதியான சாத்திய, அசாத்தியங்கள்பற்றியதே. சினிமாக் கலையில் எமக்குள்ள திறமைபற்றிப் பேசவில்லை. அது நிச்சயம் அலசி ஆராயப்படவேண்டிய பெரிய விடயம். அதற்குட்போகாமல் பொருளாதார ரீதியாக என்று மட்டுமே பார்ப்போமானால் சினிமா எமக்குக் கட்டுப்படியாகாத ஒரு கலை. ஆனால், மேடை நாடகங்களை நாம் சிறப்பாகத் தயாரிப்பதற்கான வருவாயைப் பெறுவதற்கு ஈழத்தமிழர்களின் பலம் போதுமானது. இதை விளக்கி 1994ம் ஆண்டு, ஒக்ரோபர் மாதம் 13ம் திகதி வெளிவந்த ‘மஞ்சரி’யில் ஒரு கட்டுரை எழுதியிருந்தேன். கனடாவாழ் தமிழ் மக்களிடமிருந்து மாதம் ஒரு டொலர் நன்கொடையாகப் பெற்றாலே (crowd funding) சிறப்பான மேடை நாடகங்களைத் தயாரித்து, மேடை நாடகங்கள் மீதான தமிழ்மக்களின் இரசனையை விருத்தி செய்யலாம். அவ்வாறு தொடர்ந்து இயங்கினால் நாளடைவில் மேடை நாடகக்கலை ஈழத்தமிழர்களின் ஆதரவுபெற்று எமக்கான தனித்துவமான மேடைநாடகத் துறையை உருவாக்கக்கூடிய சாத்தியமிருப்பதாகக் கருதினேன். மஞ்சரிப் பத்திரிகையில் இந்தத் திட்டத்தைக் கட்டுரையாக எழுதி, அத்திட்டத்தை ஓர் இயக்கமாக ஆரம்பிக்கவேண்டுமென்றும் அதில் ஆர்வமுள்ளவர்கள் என்னைத் தொடர்புகொள்ளுமாறு கேட்டும் எனது தொலைபேசி இலக்கத்தைத் தெரிவித்திருந்தேன். அதற்கான பிரதிபலிப்பு, இப்போது தாய்வீடு பத்திரிகையின் பிரதம ஆசிரியராகவிருக்கும் டிலிப்குமாரிடமிருந்து தவிர வேறு எவரிடமிருந்தும் கிடைக்கவில்லை. நானும் ஓர் அமைப்பை உருவாக்கி, அந்தத் திட்டத்தில் தீவிரமாக இறங்கவில்லை. பின்னர் ‘மனவெளி’, அதைத் தொடர்ந்து வேறு சில நாடக அமைப்புகளும் உருவாகிக் கனடாவில் தமிழ் மேடை நாடகத்துறை ஓரளவு உயிர்ப்படைந்தாலும் நான் எதிர்பார்க்கும் தொழில்முறைக் கலைத்துறையாக இன்னமும் வளர்ச்சியடையவில்லை.

1995ம் ஆண்டு, செப்ரெம்பர் மாதம் 9ம், 10ம் திகதிகளில் ரொறன்ரோவில் நிகழ்ந்த 20வது இலக்கியச் சந்திப்பின்போது ‘தமிழரும் சினிமாவும்’ என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதி, வாசித்தேன். அந்தக் கட்டுரை 1996ம் ஆண்டு, ஏப்ரல் மாதம் 3ம் திகதி வெளிவந்த மஞ்சரியில் பிரசுரிக்கப்பட்டது. நான் பத்திரிகையில் பிரசுரிப்பதற்கென முதல்முதலாக ‘சுதந்திரம்’ என்றதொரு சிறுகதையை எழுதியிருந்தேன். அந்தச் சிறுகதையும் ஜெயராஜின் மஞ்சரிப் பத்திரிகையில் பிரசுரமானது. அதன்பின்னர் பல ஆண்டுகள் கழித்து நான் எழுதிய ‘எதுவும் கடந்துபோகும்’ என்ற சிறுகதை தாய்வீடு பத்திரிகையில் சென்ற வருடம் பிரசுரமானது.

ரொறன்ரோவில் நான் வாழ்ந்துகொண்டிருக்கும் இந்த முப்பத்தொரு வருடங்களில் இங்கு அவ்வப்போது வெளிவந்த, வெளிவந்துகொண்டிருக்கும் பத்திரிகைகள், சஞ்சிகைகளில் பல கட்டுரைகளை எழுதியிருக்கிறேன். அவற்றில் பெரும்பாலானவை நான் ஈடுபாடுகாட்டும் ஊடக, நாடகத் துறைகள் பற்றிய கட்டுரைகள். அவற்றில் மிகக்குறிப்பிட்டுச் சொல்வதாயின் திரு. திருச்செல்வம் அவர்களின் 'தமிழர் தகவல்' சஞ்சிகையின் ஆண்டுவிழா மலர்களில் கடந்த பல வருடங்களாக நான் எழுதிவரும் கட்டுரைகளைச் சொல்லலாம். இக்கட்டுரைகள் பற்றிய நல்ல பிரதிபலிப்புகள் அவ்வப்போது வாசகர்களிடமிருந்து கிடைக்கின்றன. அத்தகைய பிரதிபலிப்புகள் மிகக்குறைவானவையாக இருக்கின்றபோதும் எனது ஊடகத்துறை அனுபவத்தைக்கொண்டு பார்க்கும்போது அக்கட்டுரைகள் வாசிப்பவர்களின் நல்லபிப்பிராயத்தை நிச்சயமாகப் பெறுகின்றனவென்று என்னால் கூறமுடியும். பொதுவாக, ஈழத்தமிழர்களின் வாசிப்புப் பழக்கம் மிகக்குறைவாக இருப்பதாலும் அப்படி வாசிப்பவர்களும் தமது அபிப்பிராயங்களை வெளியிடாமலிருப்பதாலும் எமது எழுத்தாளர்களது படைப்புகளுக்குக் கிடைக்கும் வெளிப்படையான பாராட்டுகள் மிகக்குறைவானவையாகவே இருக்கும். இந்தக் குறைவான பிரதிபலிப்புகளை வைத்துக்கொண்டே ஈழத்தமிழ்ப் படைப்பாளிகளின் ஆக்கங்கள் வாசகர்களிடையே பெறும் வரவேற்பை அனுமானிக்க முடியும். அதுபோல் ரொறன்ரோவில் வெளியாகும் 'தாய்வீடு' மாதாந்தப் பத்திரிகையில் எனது ஊடக வாழ்க்கை பற்றிய எனது நினைவுகளையும் கருத்துகளையும் 'நினைவு நல்லது' என்ற தலைப்பில் 2017ம் ஆண்டு, ஃபெப்பிரவரி மாதம் தொடக்கம் தொடர்ந்து எழுதிவருகிறேன். இப்போது முடிவடையும் கட்டத்தையடையும் இக்கட்டுரைத் தொடருக்குப் பரவலாக நல்ல வரவேற்பிருப்பதை, ஒருசில வாசகர்கள் கிரமமாக என்னுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு தெரிவிப்பதிலிருந்தும் பொதுநிகழ்ச்சிகளில் என்னைக் காணும் பலர் என்னிடம் நேரடியாகத் தெரிவிப்பதிலிருந்தும் அறிந்துகொள்ளக்கூடியதாக இருக்கிறது. இக்கட்டுரை மிகவிரைவில் நூலுருவில் வெளிவரவிருக்கிறது.



'தமிழர் தகவல்' ஆசிரியர் திரு. எஸ். திருச்செல்வம்

### மேடைப்பேச்சு:

எனது கல்லூரிக் காலத்தில் பேச்சுப்போட்டி, விவாதம் முதலியவற்றிற்காக மேடையேறியிருந்தபோதும் பொதுமேடைகளில் பேசியதில்லை. எனது வகுப்புத் தோழர்கள் சிறுவயதிலேயே அரசியல் கட்சி மேடைகளில்க்கூடப் பேச்சாளர்களாக இருந்திருக்கிறார்கள். நான் எனது கல்லூரிக் காலத்தில் ஒரேயொரு பொதுமேடை நிகழ்ச்சியில் பேசியிருக்கிறேன். 1969ம் ஆண்டு, அப்போதைய தமிழ்நாட்டு முதலமைச்சர் பேரறிஞர். அண்ணா அவர்களது மறைவையொட்டி, எமது இளந்தமிழர் மன்றம் ஏற்பாடு செய்திருந்த இரங்கல்க்கூட்டத்தில் மேடையில்ப் பேசினேன். பேசிவிட்டு மேடையிலிருந்து இறங்கியதுமே எனக்கு மிகுந்த கூச்சமாக இருந்தது. நான் சரியாகப் பேசவில்லையென்று உணர்ந்தேன். அந்தச் சங்கடமான மனஉணர்வு எனக்குப் பல நாட்கள் நீடித்தது. எனது பலவீனமும் பலமும் எனது இந்த சுயவிமர்சனத்தன்மையென்பதை நான் பெரிதும் உணர்கிறேன். அத்தன்மை என்னைப் பலவிடயங்களைச் செய்யவிடாமல் தடுக்கிறது. அப்படிச் செய்யவிடாமல்த் தடுப்பதால் எனது சுயமரியாதை காப்பாற்றப்படுவதாகவும் நான் பலவேளைகளில் உணர்கிறேன்.

எனது ரூபவாஹினிக் காலத்தில் தமிழ்நிகழ்ச்சிப்பிரிவின் தலைவரென்ற வகையிலும் நிகழ்ச்சித் தயாரிப்பாளரென்ற வகையிலும் மிகக்குறைவான மேடைநிகழ்ச்சிகளில் பேசியிருக்கிறேன். ஆனால், இலங்கைத் தொலைக்காட்சிப் பயிற்சி நிலையத்தாலும் இலங்கை மன்றக் கல்லூரியாலும் நடத்தப்பட்ட தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பு, செய்தி வாசிப்புப்பற்றிய பயிற்சிப் பட்டறைகளிலும் கருத்தரங்குகளிலும் துறைசார் வல்லுனராகக்கலந்துகொண்டு பேசியிருக்கிறேன். ஆனால், அவற்றை மேடைப்பேச்சென்று சொல்லமுடியாது. கனடாவுக்கு வந்தபின்னர் மேடைநிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு பேசுவதும் சிலவற்றுக்குத் தலைமையேற்று நடத்துவதும் இயல்பாகிவிட்டது. ஆனாலும் அவற்றைக்கூட மிக மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே செய்கிறேன்.

நான் ரொறன்ரோவில் கலந்துகொண்ட முதல் மேடை நிகழ்ச்சி தேமதுரம் வானொலிச்சேவையின் ஆண்டு விழா. 1992ம் ஆண்டு, ஒன்ராரியோ சயன்ஸ் சென்ரரில் நடைபெற்ற அந்த நிகழ்ச்சியில் பங்குபற்றிப் பேசியபின்னர் கவிஞர். கந்தவனம் அவர்களின் மணிவிழாவில் ஒரு பேச்சாளராகக் கலந்துகொண்டு பேசினேன். எஸ். ஜெகதீசன் அவர்கள் ஒழுங்குசெய்து நடத்திய இந்த மணிவிழா, 1993ம் ஆண்டு, நவம்பர் மாதம் 20ம் திகதி நடைபெற்றது. நான் எனது கல்லூரி நாட்களில் இளந்தமிழர் மன்றம் என்னும் கல்லூரிக்கு வெளியேயான மன்றத்தில் இணைந்து செயலாற்றியபோது,



கவிஞர் வி. கந்தவனம்

அது வருடாந்தம் நடத்தும் பாரதிவிழாவிலே கலந்துகொள்ளும் கவிஞர். கந்தவனம் அவர்கள்மீது மிகுந்த மரியாதைவைத்திருந்த எனக்கு, அவரது மணிவிழாவில் கலந்துகொண்டு உரையாற்றி யமை மிகுந்த மனத்திருப்தியைத் தந்தது. கவிஞர். கந்தவனம் அவர்களை எனது கல்லூரி நாட்களிலிருந்து அறிவேனென்றாலும் அப்போது சிறுவனாக இருந்த என்னை அவர் நினைவில் வைத்தி ருக்கமாட்டாரென்றே நினைத்திருந்தேன். கனடா வந்த பின்னர் தேமதுரம் வானொலியில் அவர் தொடர்ந்து உரை நிகழ்ச்சி-யொன்றை வழங்கியபோது அவருடன் நெருங்கிப் பழகும் சந்தர்ப் பம் கிடைத்தது. தொடர்ந்து, நான் தமிழோசை வானொலிக்கென எழுதித் தயாரித்த 'வாழ்ந்து பார்க்கலாம்' வானொலித் தொடர் நாடகத்தில் அவர் முக்கிய பாத்திரத்தில் நடித்தபோது மேலும் நெருக்கமானார். நான் தமிழில் எனக்கேற்படும் சந்தேகங்களை அவ்வப்போது அவரிடம் கேட்டு நிவர்த்திசெய்துகொள்வது வழக் கம். ஆசிரியர், கவிஞர், எழுத்தாளர், நாடகர் என்ற பல முகங்க ளைக்கொண்ட அவர், 2010ம் ஆண்டு, தனது நாடகத்துறைசார் அனுபவங்களை 'நாடக அனுபவங்கள்' என்ற தலைப்பில் நூலாக வெளியிட்டபோது அதற்கு அணிந்துரை எழுதும் வாய்ப்பை எனக்கு வழங்கி என்னைப் பெருமைப்படுத்தினார். அவருடன் ரொறன்ரோவில் இன்றுவரை தொடர்ந்து பழகுவதற்கான சந்தர்ப் பத்தை ஏற்படுத்தித் தந்தது அவரது மணிவிழா நிகழ்ச்சி.

தேமதுரம் வானொலி நிகழ்ச்சியின் ஓராண்டு நிகழ்வு, கவிஞர். கந்-தவனம் அவர்களின் மணிவிழா ஆகியவற்றில் நான் மிக இயல் பாகப் பேசினேன். ஆனால், நான் ரொறன்ரோவில் ஒரு பொது மேடையில் பொதுவான சமூக விடயம்பற்றிப் பேசியது, ஆர்.என். லோகேந்திரலிங்கம் அவர்களின் 'புன்னகை' சஞ்சிகை வெளியீட்டு விழாவில். லோகேந்திரலிங்கம் சூரியன் பத்திரிகையை ஆரம்பிப்ப தற்கு முன்னர் 'புன்னகை' என்ற பெயரில் ஒரு சஞ்சிகையை வெளியிட எத்தனித்து, அதற்கான ஆரம்ப விழாவை நடத்தினார். இந்நிகழ்ச்சி 1993ம் ஆண்டுப் பிற்பகுதியில் நடைபெற்றது. அப் போது எனக்கு லோகேந்திரலிங்கம் அவர்களுடன் நேரடியான பழக்கம் இருந்ததில்லை. நண்பர் ரதனும் லோகேந்திரலிங்கமும் எனது வீட்டுக்குவந்து புன்னகை சஞ்சிகையின் அறிமுகவிழாவில் உரையாற்றுமாறு அழைத்ததற்கிணங்கி அதில் நான் ஒரு பேச்சா ளராகக் கலந்துகொண்டேன். ரொறன்ரோப் பல்கலைக்கழக, ஸ்கா பரோ வளாக மண்டபத்தில் நடந்த இந்த நிகழ்ச்சிக்கு மூத்த பத் திரிகையாளர் திரு. திருச்செல்வம் தலைமைதாங்கினார்.

பொதுவாக மேடைகளில் பேசுபவர்கள் என்ன பேசுகிறோம், எவ்வ ளவு நேரம் பேசுகிறோமென்பது குறித்து மிகுந்த அவதானமாக இருக்கவேண்டும் என்று நினைப்பேன். தமிழ் மேடைநிகழ்ச்சிகளில் பேசுபவர்களில் அனேகமானவர்கள், பார்வையாளர்கள் பற்றிய எந் தவித கரிசனையுமில்லாமல் தாம் நினைத்தபாட்டுக்குப் பேசி முடிப்பார்கள். அது பார்வையாளர்களை எவ்வளவு அசௌகரியத் துக்குள்ளாக்குமென்று சிறிதும் பொருட்படுத்தமாட்டார்கள். அத்த கையவர்கள் பேசுவதற்கு எழுந்தாலே அவர்களைப்பற்றி அறிந்த வர்கள் ஏழனமாகப் புன்னகைப்பதைப் பார்த்து, நான் அவ்வாறு மற்றவர்களின் ஏளனத்துக்கு ஆளாகக்கூடாதென்று கருதுவதால், நான் மேடைகளில் பேசும்போது, சிறிது நேரத்திலேயே நான் அதி கம் பேசுகிறேனோவென்ற கேள்வி என் மனதில் எழுந்துவிடும். உடனேயே பேச்சை முடித்துவிடுவேன். இதனால், பல தடவைகள் நான் பேச நினைத்திருந்தவற்றை முழுவதுமாகப் பேசாமலேயே எனது பேச்சை முடித்திருக்கிறேன்.

ஆனால், லோகேந்திரலிங்கம் அவர்களது புன்னகை சஞ்சிகையின் அறிமுகவிழாவின்போது, நான் கனடியத் தமிழர்களின் வாழ்க்கை முறையை ஊன்றி அவதானித்து, 'இனி ஒரு எதிர்காலம்' நாட கத்தை எழுதிக்கொண்டிருந்தமையால், ஒரு தமிழ்ச் சஞ்சிகையின் வெளியீட்டு விழாவில் தமிழ்ச் சமூகத்தைப்பற்றிப் பேசுவது பொருத்தமானதென்றெண்ணிப் பேசத் தொடங்கிய நான் சற்று அதிகநேரம் பேசிவிட்டேன். தலைமைவகித்த திருச்செல்வம் அவர் கள் நான் அதிக நேரமெடுத்ததை நாசூக்காகச் சுட்டிக்காட்டினார். அது எனக்கு ஒருவித குற்றஉணர்வை ஏற்படுத்திய போதும், நிகழ்ச்சி முடிவில் பலர் என்னிடம் வந்து, எனது பேச்சைப் பாராட் டிப் 'பல விடயங்களைப் பேசினீர்கள், மேலும் பேசியிருக்கலாம்' என்று கூறியபோது மனதுக்கு ஆறுதலாக இருந்தது. பாராட்டிய வர்களில் குறிப்பாக, அப்போது கனடியத் தமிழ்ப் பத்திரிகைக-ளில் எழுதிக்கொண்டிருந்தவரும் பின்னர் 'சக்தி' பத்திரிகையின் ஆசிரியராகவிருந்து வெளியிட்டவருமான ராவுத்தர் என்பவர் என்னை மிகவும் பாராட்டிப் பத்திரிகைகளில் எழுதுமாறு உற்சா கப்படுத்தியமை முப்பது வருடங்கள் கழித்து இப்போதும் ஞாப கத்திலிருக்கிறது. நான் அன்று சற்றுநேரம் அதிகமெடுத்துப் பேசி யபோதும் அவசியமில்லாதவற்றைப் பேசவில்லையென்று மனத்தி ருப்தி கொண்டேன். இருந்த போதிலும் நான் இப்போதும் மேடை-களில் பேசுவதற்கு அழைத்தால் நேரத்தில் மிக அவதானமாகவே இருக்கிறேன். எனக்குத் தெரிந்து ஒருசில கூட்டங்களில் சற்று அதி கமாகப் பேசியிருப்பேன். ஆனால், நான் பேசவந்த விடயத்தைவிட வேறுவிடயங்களை அநாவசியமாகப் பேசுவதில்லையென்று மற்ற வர்கள் பாராட்டும் போது எனக்கு நிம்மதியாக இருக்கும்.

நான் முதலில் கூறியது போல் நேரம் கருதி நான் நினைத்திருந் தவற்றைப் பேசாது பேச்சை முடித்துக்கொண்டபின்னர் அதைப்பே சவில்லையே, இதைப்பேசவில்லையேயென்று சில சமயங்களில் மனம் சஞ்சலப்பட்டாலும் நான் பேசியவற்றைப் பார்வையாளர்கள் பாராட்டும்போது நான் பேசாது விட்டவற்றைப்பற்றிக் கவலைப்படு வதை நிறுத்திக்கொண்டேன். ஏனெனில், நான் எவற்றைப் பேசாது விட்டேன் அல்லது தவறவிட்டேன் என்பது பற்றி எனக்கு மட்டுமே தெரியும். பார்வையாளர்களுக்குத் தெரியாது. எனவே, பேசாது விட்ட விடயங்கள்பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. பார்வை யாளர்களுக்கு அலுப்புக் கொடுக்காதவகையில் அளவாகப் பேசு வதே முக்கியமானதென்றெண்ணித் திருப்திப்பட்டுக்கொள்கிறேன்.

பல பேச்சாளர்கள் அதிகம் பேசினால்த்தான் சிறந்த பேச்சென்று கருதியோ அல்லது பேசுவதற்குச் சரியான தயார்ப்படுத்தலின் றியோ வந்து மேடையேறியதும் எடுத்துக்கொண்ட விடயத்திற்கு சம்பந்தமில்லாத விடயங்களையெல்லாம் வலிந்து சம்பந்தப்ப டுத்தி நீட்டிமுழக்கிப் பேசுவார்கள். ஒருவரைப் பாராட்டவேண்டு மாயின் பாராட்டப்படுபவரின் உண்மையான தகுதிக்குமீறி வான-ளாவப் புகழ்ந்து பாராட்டுவார்கள். அது சுயமதிப்பீடு செய்யக் கூடிய அறிவுடைய பாராட்டப்படுபவருக்கும், பாராட்டப்படுபவரின் உண்மையான திறமைகளையோ சாதனைகளையோ நன்கறிந்த சபையோருக்கும் மிகுந்த சங்கடத்தை ஏற்படுத்தும். அதன் விளைவு, பேச்சாளரை அனைவரும் ஏளனமாகப் பார்க்கும் நிலை ஏற்படும். இதைப் பல பேச்சாளர்கள் உணர்ந்துகொள்வதே யில்லை.

அளவோடு பேசுவது ஒலிபரப்பில் நான் கற்றுக்கொண்ட பாடம். எனது இயல்பும் அதுதானென்றபோதிலும் ஒலிபரப்பு என்னை இந்த விடயத்தில் மிகவும் கூர்மைப்படுத்தியது. தற்கால ஊடகவி யலாளர்கள் போலல்லாது எமது காலத்தில் அறிவிப்பாளர்கள் தம் மிச்சையாக எதையும் வானலைகளில் பேசமுடியாது. எதைப் பேசி னாலும் அதை முதலில் வசனப் பிழைகளில்லாது எழுதிவைத்துத் தான் பேசவேண்டுமென்று கண்டிப்பாக அறிவுறுத்தப்பட்டது. வர்த் தகசேவையில் பணிபுரியும் அறிவிப்பாளர்கள் சரளமாகப் பேசுவது போலத் தோன்றினாலும் அவர்கள் தமது நிகழ்ச்சிகளைப் பிரதிக-ளாக எழுதிவைத்தே அவற்றை சுயமாகப் பேசுவதுபோலப் பேசு வார்கள். இராஜேஸ்வரி சண்முகம் அவர்கள் 'பொங்கும் பூம்புனல்' நிகழ்ச்சிகளின்போது பாடல்களின் அறிமுகத்தைச் சிறு கவிதைக-ளின் வடிவில் செய்வதை அக்கால நேயர்கள் கேட்டிருப்பீர்கள். அவையெல்லாம் பிரதிகளாக எழுதிவைத்தே பேசப்பட்டன. சிறு சிறு அறிவிப்புகளை வானலையில் செய்தாலும் முதலில் அந்த அறிவிப்பைத் தமக்குள் சொல்லிப்பார்த்து உறுதிப்படுத்திக் கொண்டே ஒலிவாங்கியைத் திறக்கவேண்டுமென்று அறிவிப்பாளர் கள் அறிவுறுத்தப்பட்டார்கள். தேசியசேவை அறிவிப்பாளர்கள் கியூஷீற் என்று சொல்லப்படுகின்ற நிகழ்ச்சி நிரல்ப்படிவத்தில் அச்சிடப்பட்டிருக்கும் ஆரம்ப, முடிவு அறிவிப்புகளை மட்டுமே வாசிக்கவேண்டும். தேசியசேவையில் ஒலிபரப்பப்படும் அனேக நிகழ்ச்சிகள், ஏற்கனவே ஒலிப்பதிவுசெய்யப்பட்டிருப்பதால் அவை ஆரம்ப, முடிவு அறிவிப்புகளோடு பூரணமான நிகழ்ச்சிகளாக இருக்கும். தேசியசேவை அறிவிப்பாளரின் பணி அனேகமாக நிலையத்தின் பெயரைச் சொல்வதாக மட்டுமே இருக்கும். ஒலிப்ப

திவு செய்யாத இசைத்தட்டுகள்மூலம் ஒலிபரப்பப்படும் நேயர் விருப்பம் நிகழ்ச்சிக்கு படத்தின்பெயர், பாடகரின் பெயர் என்பன மட்டுமே கியூஷீற்றில் தரப்பட்டிருக்கும். அவற்றை மாத்திரமே அறிவிக்கவேண்டும். குரல்வகை போன்ற கர்நாடக இசை நிகழ்ச்சிகளாயின் பாடகரின் பெயர், பாடலின் முதல்வரி, பாடலின் இராகம் முதலியன கியூஷீற்றில் அச்சிடப்பட்டு, நிகழ்ச்சி வழங்கல்ப் பிரிவின் கட்டுப்பாட்டாளர், தமிழ்ச்சேவையின் இயக்குனர் ஆகியோரின் கையெழுத்துடன் வழங்கப்பட்டிருக்கும். கியூஷீற்றில் குறிப்பிடப்பட்டிருக்கும் அறிவிப்புகளைத்தவிர வேறெவற்றையும் சொல்லக்கூடாது. செய்திகள், செய்திச்சுருக்கம் போன்ற நிகழ்ச்சிகள் அச்சிடப்பட்டுக் கொடுக்கப்படும். அவற்றையே அறிவிப்பாளர்கள் வாசிப்பார்கள். நேர்முகவர்ணனைகள் செய்பவர்கள் மட்டுமே சுயமாகப் பேசலாம். அதனால்தான் நேர்முகவர்ணனை செய்வதற்கு அனுபவம்வாய்ந்த மூத்த அறிவிப்பாளர்களும் நேர்முகவர்ணனை செய்யப்படும் நிகழ்ச்சிகள் பற்றிய ஆழ்ந்த அறிவுள்ள அறிஞர்களும் அப்பணிக்கு அமர்த்தப்படுகிறார்கள். இவ்வளவு கட்டுப்பாடுகளுக்கும் காரணம் ஒலிபரப்பில் இம்மியளவும் பிழை ஏற்பட்டுவிடக்கூடாதென்பதே. குறிப்பாக, அறிவிப்புகளில் எந்தவித தமிழ் பிழைகளும் நேரக்கூடாது. அப்படிப் பிழைகள் எதுவுமற்ற அறிவிப்புகளைச் செய்யும் போதுதான் நேயர்கள் அந்த ஒலிபரப்புச் சேவைகளை மதிப்பார்கள். அறிவிப்பாளர்கள் எந்தவித தவறுகளையும் தமது அறிவிப்புகளில் செய்யமாட்டார்கள் என்ற உயர்வான பிம்பம் நேயர்களிடம் ஏற்படும். ஆனால். இப்போது தனியார் வானொலிகள் அதிகரித்து, அறிவிப்பாளர் தெரிவிலோ அல்லது அவர்கள் அன்றாடம் செய்யும் அறிவிப்புகளிலோ தொழில்முறைக் கண்காணிப்பு அற்றுவிட்ட நிலையில், அறிவிப்பாளர்கள் சுதந்திரமாகப் பேசுவதாக நினைத்து, மிகச் சாதாரண பேச்சிலக்கண விதிகளைக்கூடப் பின்பற்றாது, வாயில் வந்தவற்றைப் பேசி, தாம் தங்குதடையின்றிப் பேசுகின்றவர்களென்ற பிம்பத்தைத் தோற்றுவிக்க நினைக்கிறார்கள். இந்தியப் பண்பலை வானொலிகளில் பேசும் அறிவிப்பாளர்கள் மிகவும் விரைவாகப் பேசுவதுதான் சிறந்த அறிவிப்பென்ற ஒரு நிலையை ஏற்படுத்திவிட்டார்கள். அந்த நிலை ஈழத் தமிழ் ஊடகங்களில் அவ்வளவாக இல்லையென்றாலும் சிலர் இந்தியப் பாணியைப் பின்பற்ற முனைகிறார்கள். வசனத்தை ஆரம்பித்துவிட்டு முடிக்கத் தெரியாது திணறுபவர்களையும் மிகப் பொருத்தமான சொற்கள் தெரியாமல் வாயில் வந்த சொற்களைப் போட்டு விரைவாகப் பேசுவதுமட்டுமே அறிவிப்பு என்று கருதும் அறிவிப்பாளர்களையும் நாம் பார்க்கக்கூடியதாக இருக்கிறது.

நாம் மிகக் கண்டிப்பான ஒலிபரப்புச் சூழலில் பணியாற்றியவர்களென்ற காரணத்தால் பேசுவதில் இயல்பாகவே ஒரு கட்டுப்பாடு ஏற்பட்டுவிட்டது. அது மேடையில் பேசும்போதும் என்போன்றவர்களைக் கட்டுப்படுத்துகின்றது. இலங்கை வானொலியில் எந்தக் கலைஞர்களையோ அல்லது பங்குபற்றும் பேச்சாளர்களையோ அறிஞர்களையோ அறிமுகப்படுத்தும்போது அவர்களது பட்டப் பெயர்களைச் சொல்லமுடியாது. அவர்களது சொந்தப் பெயர்களை மாத்திரமே அறிவிக்கவேண்டுமென்ற விதி இருந்தது. ஆனால், தற்போது ஒருவரை அறிமுகம் செய்யும் போது அவரை மகிழ்ச்சிப்படுத்தும் விதத்தில் அறிவிப்பாளர்கள் எல்லைமீறிப் புகழ்வதை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது. இந்தப் பழக்கம் மேடையிலிருந்து வானொலிக்குத் தொற்றிவிட்டதென்று சொல்லலாம். மேடைகளில் ஒரு துறையிலுள்ளவரை அறிமுகப்படுத்தும் போதோ பாராட்டும் போதோ அத்துறையில் அதி உச்சத்திலுள்ள மேதாவியொருவரைப் பாராட்டுவதுபோன்று சொற்களைப் பிரயோகித்துப் பாராட்டுகிறார்கள். பாராட்டப்படுபவர் அத்துறையில் மிகச்சாதாரணமான நிலையில் இருப்பார். பாராட்டைப் பெறுவதற்குரிய தகுதிகளற்றவர்கள்கூட அத்தகைய பாராட்டுகளுக்குத் தாம் தகுதியுடையவர்கள்தானாவென்பதைப் பற்றிச் சிந்திப்பதில்லை. பாராட்டுபவரும் எந்தவித மனச்சாட்சியுமில்லாமல்ப் பாராட்டுவார். பாராட்டப்படுபவரும் எந்தவித மனச்சாட்சியுமில்லாது அந்தப் பாராட்டுகளுக்குத் தான் முற்றிலும் தகுதியானவர் போன்று புளகாங்கிதமடைவார். இவையெல்லாம் நான் தமிழர் மேடைகளில்ப் பார்த்துக் கூச்சப்படும் விடயங்கள். தமிழிலே வார்த்தைகள் இருக்கின்றனவென்பதற்காக அவற்றை வேண்டியவாறெல்லாம் பிரயோகித்தால் நாளடைவில் அந்த வார்த்தைகளுக்குரிய சரியான அர்த்தம் பலவீனமடைந்துவிடுமென்று நான் கருதுவதால், வார்த்தைப் பிரயோகங்களில் நான் மிகக் கவனமாக இருப்பேன். இதனால் நான் எவரையும் அளவுக்குமீறிப் புகழ்வது கிடையாது. இது என்னைப் பேச அழைக்கும் சிலருக்கு அதிருப்தியை ஏற்படுத்தலாம். ஆனால், பார்வையாளர்களுக்கு அசௌகரியம் ஏற்படாதென்பதை நான் நன்கு அறிவேன்.

மேடைகளில் பேசும்போது எடுத்துக்கொண்ட விடயத்தை மாத்திரமே பேசுவதற்கும், அனாவசியச் சொற்பிரயோகங்களை மேற்கொள்ளாமல் மிகச் சரியான சொற்களைப் பாவிப்பதற்கும், பேச நினைத்தவற்றைத் தவறவிடாது பேசுவதற்கு மேற்ற சிறந்த முறை, பேச்சை எழுதிவைத்துப் பேசுவது. எழுதிவைத்திருந்தாலும் அதை வாசிப்பது போலல்லாது பேசுவதுபோல் வாசிக்கவேண்டும். இந்த முறையை நான் ரொறன்ரோவில் நடந்த 20வது இலக்கியச் சந்திப்பின் போதும் வீ.என். மதிஅழகன் அவர்களின் நூல் வெளியீடுகளின்போதும் கடைப்பிடித்தேன். அந்தப் பேச்சுகளுக்காக மிகுந்த பாராட்டைப் பெற்றேன்.

மிகப் பரிச்சயமான விடயங்களாயின் எந்தவித தயார்ப்படுத்தலுமின்றியே மனதில் எவற்றைப் பேசவேண்டுமென்பதை நினைத்து வைத்துக்கொண்டு அவற்றை மட்டுமே பேசி சிறப்பாக உரையாற்றலாம். மேடைப் பேச்சுகளின் போது எதுகை மோனையுடன் பேசுவது, அடுக்கு வசனங்களின் பேசுவது போன்றவை அவசியமற்றவை. சொல்லுகின்ற கருத்துகளே மிக முக்கியமானவை. அனைவருக்கும் விளங்கக்கூடிய சொற்களைப் பாவித்து மிகத் தெளிவாக, அமைதியாகப் பேசவேண்டும். அத்தகையதொரு உரையை 1999ம் ஆண்டு, மே மாதம் 8ம் திகதி நடைபெற்ற எஸ்.கே. பரராஜசிங்கம் அவர்களின் பாடல்களைக்கொண்ட இறுவெட்டு (CD) வெளியீட்டு நிகழ்ச்சியில் நிகழ்த்தினேன். ரொறன்ரோவில் கலைமுயற்சிகளில் ஈடுபாடுகொண்டிருந்த காலஞ்சென்ற பாபு அவர்கள், தனது ‘அருவி’ வெளியீட்டகம்மூலம் ‘குளிரும் நிலவு’ என்ற தலைப்பில் எஸ்.கே. பரராஜசிங்கம் அவர்களின் சில பாடல்களைத் தொகுத்து இறுவெட்டாக வெளியிட்டார். சீ.வீ. இராஜசுந்தரம் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்ச்சியில் ‘ஈழத்து மெல்லிசைப்பாடல்கள்’ பற்றி உரையாற்றினேன். இந்த உரையை 1999ம் ஆண்டு, மே மாதம் 14ம் திகதி வெளிவந்த ‘முழக்கம்’ பத்திரிகையில் ஈழத்து மெல்லிசை வரலாற்றையே மிகக் குறுகிய நேரத்தில் எளிமையாகவும் இனிமையாகவும் தந்தார் என்று பாராட்டி எழுதியிருந்தார்கள். அதுமட்டுமல்ல, முழக்கம் பத்திரிகை கேட்டுக்கொண்டதற்கிணங்க, ஈழத்து மெல்லிசைப் பாடல்கள் பற்றிய ஒரு கட்டுரையை நான் கொடுக்க, அதை அவர்கள் 1999ம் ஆண்டு, ஜூன் மாதம் 17ம் திகதியிலிருந்து மூன்று பகுதிகளாகத் தமது பத்திரிகையில் பிரசுரித்தார்கள். இந்த நீண்ட கட்டுரை, இலங்கையில் ரூபவாஹினியில் தயாரிப்பாளராகவும், பின்னர் சுயாதீன தொலைக்காட்சி, சக்தி தொலைக்காட்சிகளில் உயர்பதவிகளை வகித்து, இப்போது நியூசிலாந்தில் வாழ்ந்துகொண்டிருக்கும் எம். வரதராஜன், தனது தாயாரின் மறைவையொட்டி ஒரு நூலை 2005ம் ஆண்டு வெளியிட்டபோது அந்த நூலிலும் பிரசுரிக்கப்பட்டது.

இலங்கையிலிருந்து ஒலி, ஒளிபரப்பு ஊடகவியலாளராகப் புறப்பட்ட நான், எனது எதிர்காலம் எப்படி இருக்கப்போகிறதென்று தெரியாத நிலையில் கனடாவுக்கு வந்தபோது இங்கு எழுத்து, பேச்சு, மேடை நாடகம் என்று மேலும் பல துறைகளில் ஈடுபட்டு அவற்றிலும் அனுபவம் பெறுவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தமை எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது. அதுமட்டுமல்ல, எனது வானொலி, தொலைக்காட்சி ஊடக அனுபவத்தைக்கொண்டு கனடாவில் வானொலி, தொலைக்காட்சி ஊடகத்துறைகளில் மேலும் பல தமிழ் இளைஞர்கள் பயனடையும் வகையில் அவர்களுக்குப் பயிற்சியளித்து எனது அனுபவத்தை மேலும் விரிவடையச்செய்யக் கிடைத்த சந்தர்ப்பம் குறித்து அடுத்த அங்கத்தில் விளக்குவேன்.



*wikneswaran.p@thaiveedu.com*

# தேசிய இனப்பிரச்சினையும் இலங்கையின் இடதுசாரி இயக்கமும்

ஆங்கில மூலம்: குமாரி ஜயவர்த்தன
தமிழில்: க. சண்முகலிங்கம்

### 1930 - 1946 காலம்:

1930 - 1946 காலத்தை இடதுசாரி இயக்கத்தின் தொடக்ககாலம் எனக்கூறலாம். இக்காலத்தில் இலங்கையின் இனக்குழுமங்கள் பற்றி இடதுசாரிகள் கொண்டிருந்த கொள்கையை தீர்மானித்த காரணிகளாக மூன்றைக் குறிப்பிடலாம்.

- இலங்கையில் அக்காலத்தில் தொழிலாளர் வர்க்கத்தின் இனக் குழுமக் கட்டமைப்பு
- இடதுசாரித் தலைவர்களதும், இடதுசாரி அறிவாளிகளினதும் வர்க்கப் பின்புலமும், இயல்புகளும்
- இடதுசாரி இயக்கத்தின் மீது குட்டி முதலாளித்துவ வர்க்கக் கருத்தியலின் தாக்கம்.

பிரித்தானிய காலனி ஆட்சியின் போது பெருந்தொகையான தொழிலாளர்கள் தென்இந்தியாவில் இருந்து இலங்கைக்கு கொண்டு வரப்பட்டனர். இவர்கள் பெருந்தோட்டங்களிலும், நகரப் பகுதிகளிலும் கூலித்தொழிலாளர்களாக வேலை செய்தனர். 1921ல் பெருந்தோட்டங்களின் இந்திய தொழிலாளர்களதும் அவர்களில் தங்கியிருப்போரதும் சனத்தொகை 490,000ஆக இருந்தது. பெருந் தோட்டத்துறை அல்லாத பிறதுறைகளில் இந்தியர்களின் சனத் தொகை 47,000ஆகும். 1946ம் ஆண்டில் இந்தியர்களின் மொத்த சனத்தொகை 780,000ஆக இருந்தது. இத்தொகையில் பெரும் பங்கு பெருந்தோட்டத் தொழிலாளர்களையும், அவர்களது தங்கியி ருப்போரையும் உள்ளடக்கியிருந்தது. இந்தியத் தொழிலாளர்கள் இவ்வாறாக நாட்டின் தொழிலாளர் வர்க்கத்தின் பெரும்பங்கினராக இருந்தனர். ஆயினும் பெருந்தோட்டத்துறையில் இந்தியத் தொழி லாளர்கள் தோட்டங்களுக்கு உள்ளேயே அடைத்து வைக்கப்பட்ட வர்களாக இருந்தனர். அவர்கள் தொழிற்சங்கங்கள் மூலமோ வேறு வகையிலோ ஒழுங்கமைக்கப்பட்டவர்களாகவும் இருக்க வில்லை. அவர்களிடம் 1930வரை தொழிலாளர்வர்க்க உணர்வும் இருக்கவில்லை.

1930களில் நகரத் தொழிலாளர் வர்க்கத்தினரில் இந்தியாவில் இருந்து வந்த தொழிலாளர்களின் வீதாசாரம் மிக அதிகமாக இருந்தது. குறிப்பாக இந்தியத் தமிழர்களும், கேரளத்தில் இருந்து வந்த மலையாளிகளும் பெரும் எண்ணிக்கையில் காணப்பட்டனர். இவர்களில் பெரும்பங்கினர் அரசாங்க திணைக்களங்களில் பயிற் றப்படாத தொழிலாளர்களாக வேலை செய்தனர். துறைமுகம், ரெயில்வே என்பவற்றிலும் முனிசிப்பல் சபையின் சேவைத் துறைக ளிலும் இவ்விந்தியர்கள் பயிற்றப்படாத தொழிலாளர்களாக வேலை செய்தனர். இதனைவிட தனியார் தொழிற்சாலைகள், பொதுவான சமயாசமய ஊழியர்கள், வீட்டுப் பணியாளர்கள் என்ற வகையினராகவும் இந்தியத் தொழிலாளர்கள் பணியாற்றினர். 1936ம் ஆண்டில் அரசாங்க திணைக்களங்களின் தொழிலாளர்க ளில் 26 வீதத்தினர் இந்தியர்களாக இருந்தனர். (தமிழர்களும், மலையாளிகளுமான) இவ் இந்தியர் தொகை 1939ல் 19 வீதமாகக் குறைந்தது. இவ்வாறு குறைவடைந்ததற்குக் காரணம் இந்தியத் தொழிலாளர்கள் 1931 - 1936ற்கு இடையில் திருப்பி அனுப்பப்பட் டமையாகும். நகரத்தொழிலாளர்களில் இலங்கைத் தமிழர்கள், முஸ்லிம்கள், பறங்கியர் ஆகிய சிறுபான்மை இனத்தவர்களும் இருந்தனர்.

1930களில் சிங்களவர் அல்லாதவர் கூடிய வீதாசாரத்தில் தொழி லாளர்களாக இருந்தமையும், அவர்களின் வேலையின் இயல்பும் தொழிலாளர்வர்க்க இயக்கத்தில் சில விசேட தாக்கங்களை ஏற்ப டுத்தியது. தோட்டத்தொழிலாளர்கள் கூலி உழைப்பாளர்கள் என்ற வகைமைக்குரிய இயல்புகளில் சில இல்லாதவர்களாக இருந்த னர். அத்தொழிலாளர்கள் வேலைசெய்யும் தோட்டங்களிலேயே 'லைன்' வீடுகளில் குடியமர்த்தப்பட்டிருந்தனர். வேலையிடத்துடன் இவ்வாறு பிணைக்கப்படுதல் அரைநிலமானிய உறவுகளின் தன் மையுடையது. அவர்களின் கூலியின் ஒருபகுதி பண்டங்களாக வழங்கப்பட்டது. கங்காணிகளின் மேற்பார்வைக்கு கட்டுப்பட்டவர்க ளாக இருந்தனர். அத்தியாவசியப் பொருட்கள் தோட்ட முதலாளி களால் அல்லது கங்காணியால் வழங்கப்பட்டது. அதன் பெறுமதி கூலியில் இருந்து கழிக்கப்பட்டது. இவையாவும் கூலித்தொழிலா ளர் (Wage Labour) என்ற தன்மையில்லாத அரைநிலமானியப் பண்புகளைக் கொண்டிருந்தது. இத்தொழிலாளர்கள் நகரத் தொழி லாளர் வர்க்கத்துடன் திட்டமிட்ட வகையில் தனிமைப்படுத்தி வைக்கப்பட்டனர். தோட்டங்களில் கடுமையான பாதுகாப்பு நடவ டிக்கைகள் இருந்தன. இதனால் வெளியே இவர்களிற்கு செல்வ தற்கு கட்டுப்பாடுகள் இருந்தன. 'அந்நியர்கள்' தோட்டங்களிற்குள் நுழைவதற்கும் சட்ட ரீதியான தடை இருந்தது. இத்தொழிலாளர் கள் கல்வியறிவு அற்றவர்களாகவும் இருந்தனர். தோட்டங்களிற் குள்ளேயே கள்ளுத் தவறணைகளையும், கோவில்களையும் அமைத்துக் கொடுத்து தொழிலாளர்களை தோட்டத்திற்குள்ளேயே தடுத்து வைத்திருந்தனர். முகாமைத்துவத்தின் நேரடிக் கட்டுப்பாட் டிற்குள் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கை அமைந்தது. பெருந்தோட்டத் தொழிலாளர்களை தொழிற்சங்கங்களில் அணி சேர்ப்பது மிகவும் கடினமான பணியாக இருந்தது.

மேற்குறித்தவற்றில் இருந்து ஓர் உண்மை வெளிப்படுகிறது. தொடக்கத்தில் இருந்தே தொழிலாளர் வர்க்கம் இனக்குழுமப் பன்மைத்துவம் உடையதாக இருந்தது. இலங்கையின் பொருளாதார வளர்ச்சியின் பிரத்தியேகமான இயல்புகள் வர்க்கம் - இனக்குழுமம் தொடர்பை சிக்கலாக்கியது. தொழிலாளர் வர்க்கத்தின் பெரும் பங்கினர், i. இறக்குமதி செய்யப்பட்ட இடம் பெயர்ந்த தொழிலாளர்களாய் இருந்தனர். ii. அவர்கள் பெருந்தோட்டங்களின் எல்லைக்குள் தனிமைப் படுத்தப்பட்டிருந்தனர்.

மேற்குறித்த இரு காரணங்களாலும் இத்தொழிலாளர்களின் பிரச்சினைகள் பொதுவான பிரச்சினைகளில் இருந்து வேறுபட்டிருந்தன.

- இத்தொழிலாளர்களின் குடியுரிமை
- வாக்குரிமை
- வேலை நிபந்தனைகள்

என்பன பற்றிய அடிப்படைப் பிரச்சினைகளில் இடதுசாரிகள் கவனம் செலுத்த வேண்டியிருந்தது. இந்தியத் தொழிலாளர்களின் மேற்கூறிய பிரச்சினைகள் சுதேசிகளின் நலன்களிற்கும் எதிரானவையாக இருந்தன. சிங்கள அரசியல்வாதிகளும், ஏ.ஈ. குணசிங்க போன்ற தொழிற்சங்கத் தலைவர்களும் 'அந்நியத்தொழிலாளர்களி'ற்கு எதிரான என்ற கூச்சலை கிளப்பினர். இக்கூச்சல்கள் 1920களிலும் 1930களிலும் கிளம்பின. அந்நியத் தொழிலாளர்கள் சிங்களத் தொழிலாளர்களின் வேலைவாய்ப்பைப் பறிக்கின்றனர் அந்நியர்களை வேலையில் நிரந்தரமாக்குவதிலும், அவர்களுக்கு குடியுரிமை வழங்குவதிலும் உள்ள அரசியல் ஆபத்துக்கள் என்றரீதியில் கூக்குரல் எழுந்தது. இனவாதக் கூச்சல்கள் எழுந்த பின்னணியில் இடதுசாரிகள் இக்கட்டான நிலை ஒன்றிற்குத் தள்ளப்பட்டனர். மார்க்சிய, இடதுசாரி இயக்கத்தின் தொழிலாளர் வர்க்க சர்வதேசியம் என்ற கொள்கைக்கு ஏற்ப அந்நிய தொழிலாளர்களின் உரிமைகளுக்காக பணியாற்றுவதா அல்லது இலங்கை மக்களின் ஆதரவைத் திரட்டுவதற்காக சிங்களத் தொழிலாளர்களின் நலன்களுக்கு அமைவாக இனவாதக் கொள்கைகளை ஆதரிப்பதா என்பதே இடதுசாரிகள் எதிர்நோக்கிய இக்கட்டான நிலையாகும். 1930க்கு முந்திய காலத்தில் இலங்கையின் இடதுசாரி இயக்கம் இவ்விரண்டு கொள்கைகளில் தொழிலாளர் வர்க்க சர்வதேசியம் என்ற கொள்கையை ஏற்றுச் செயற்பட்டனர்.

### மலையாளிகளுக்கு எதிரான இனவாதம்:

1930களில் முதற்தடவையாக கொழும்பு நகரின் தொழிலாளி வர்க்கத்தின் ஒரு பிரிவினரான மலையாளிகளுக்கு எதிரான இனவாத கூக்குரலை தொடக்கினர். ஒழுங்கமைக்கப்பட்ட வடிவத்தில் எழுந்த இந்த இனவாத எதிர்ப்பை இடதுசாரி இயக்கம் எதிர்கொள்ள வேண்டியேற்பட்டது. அக்காலத்தின் பொருளாதார மந்தம் வேலையின்மையை அதிகரித்ததால் இறக்குமதி செய்யப்பட்ட இந்தியத் தொழிலாளர்களுக்கு எதிரான கோஷங்கள் எழுந்தன. அந்நியர்கள் 'மண்ணின் புதல்வர்களான' சிங்களவர்களின் வேலைகள், வர்த்தக முயற்சிகள் என்பனவற்றை தட்டிப் பறிப்பதாகவும் வஞ்சிப்பதாகவும் குற்றம் சாட்டப்பட்டது. அந்நியர்கள் சிங்களப் பெண்களைக் கவர்ந்து கொள்வதாகவும் கூறப்பட்டது. (ஜெயவர்த்தன 1985: 25 - 37)

விஷமத்தனமான இந்தப் பிரசாரம் 1930 களில் உச்சக்கட்டத்தை எய்தியது. ஏ.ஈ. குணசிங்கவின் தினசரியான 'விராய' இப்பிரசாரத்தை முன்னின்று தொடர்ந்தது. மலையாளிகளை 'கொச்சியா' என்று ஏளனம் செய்து, அவர்களை நாடுகடத்த வேண்டும் என்றும் பிரசாரம் செய்யப்பட்டது. மலையாளித் தொழிலாளர்களுக்குச் சார்பாகச் செயற்பட்ட சமசமாஜக் கட்சித் தலைவர்களையும் ஏ.ஈ.-குணசிங்க தாக்கிப் பேசினார். மலையாளிகளுக்கு எதிரான இயக்கத்தில் இன்னொரு அம்சமும் கவனிப்புக்குரிய ஒன்றாகியது.

கேரளாவின் கம்யூனிஸ்ட்டுகளுடன் லங்கா சமசமாஜக்கட்சியில் இருந்து 1940ல் விலக்கப்பட்ட 'ஸ்டாலினிசவாதிகள்' தொடர்புகளை வைத்திருந்தனர். சமசமாஜக் கட்சியில் இருந்து வெளியேறப்பட்டவர்கள் கொழும்பு தொழிலாளர் கழகம் (Colombo Workers Club) என்ற அமைப்பை உருவாக்கினர். பின்னர் இக்கழகம் ஐக்கிய சோஷலிசக் கட்சி எனப் பெயர் மாற்றம் பெற்றது. இறுதியில் 1943ல் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி என இது பெயர் மாற்றம் பெற்றது. இக்காலத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் தொழிற் சங்கத்தின் அரைப்பங்கினர் மலையாளிகளான தொழிலாளர்களாக இருந்தனர். கொழும்பு நகரின் மலையாளித் தொழிலாளர்களும், மலையாளிக் கள்ளிறக்கும் தொழிலாளர்களின் தொழிற் சங்கமும் (அகில இலங்கை கள்ளிறக்கும் தொழிலாளர் சங்கம்) கம்யூனிஸ்ட் கட்சியின் 'இலங்கை தொழிலாளர் சங்கங்களின் சம்மேளனத்தின் (இ.தொ.ச.ச. - CTUF) முக்கிய தூண்போன்று 1940 களில் விளங்கின.

### பெருந்தோட்டங்களின் இந்தியத் தமிழ் தொழிலாளர்கள்:

இந்தியத் தொழிலாளர்கள் தமது கூலி, வேலைத்தள நிலைமைகள் முதலியனவற்றிற்காகவும், வாக்குரிமை போன்ற அரசியல் உரிமைகளுக்காகவும் போராடுவதற்கு இடதுசாரிகள் உதவத் தொடங்கினர். சிங்கள முதலாளி வர்க்கம் தோட்டத் தொழிலாளர்களின் வாக்குரிமையை மறுப்பதில் முனைப்புடன் செயற்பட்டது. அதற்கு தமிழ், முஸ்லிம் முதலாளி வர்க்கங்களின் ஆதரவையும் பெற்றுக்கொண்டு பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு உள்ளூராட்சி மட்டத்திலும், சட்டசபை தேர்தல்களின் போதும் வாக்குரிமையை வழங்கக் கூடாது என்பதில் சிங்கள முதலாளி வகுப்பு உறுதியாக இருந்தது. இதற்கு அத்தொழிலாளர்கள் தமிழர்களாக இருந்தமை ஒரு காரணம், மற்றது அவர்கள் தொழிலாளர் வர்க்கத்தினராக இருந்தமை இன்னொரு காரணம். இவ்விதமாக வர்க்கம், இனக்குழுமம் என்ற இரண்டு காரணங்களின் அடிப்படையில் வாக்குரிமையை மறுக்கும் இனவாதப் பிரசாரம் தொடங்கப்பட்டது. இந்தியத் தமிழர்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டால் கண்டியின் சிங்களவர்களை அரசியல் ரீதியாக தமிழர்கள் பின் தள்ளிவிடுவர் எனப் பிரசாரம் செய்யப்பட்டது. 1928ம் ஆண்டில் டொனமூர் ஆணைக்குழு விசாரணையைத் தொடக்கியபோது மேற்கண்டவிதமான பிரசாரம் மேற்கொள்ளப்பட்டது. இலங்கையில் நிரந்தரமாகத் தங்கிவிட்ட இந்தியத் தோட்டத் தொழிலாளர்களுக்கு வாக்குரிமையை வழங்கும் முன்மொழிவை ஆணைக்குழு முன்வைத்தது. 1936ல் உள்ளூராட்சி தேர்தல்களில் இந்தியத் தமிழரின் வாக்களிக்கும் உரிமை நீக்கப்பட்டது. பின்னர் 1948ல் அவர்களின் குடியுரிமை அநீதியான சட்டங்கள் மூலம் பறிக்கப்பட்டது. 1947 தேர்தலின் பின் Red Perill என்ற கோஷம் எழுப்பப்பட்டது. இந்தியத் தோட்டத் தொழிலாளர்களின் ஆதரவைப் பெற்ற ஏழு சட்டசபை உறுப்பினர்களும் எல்லாவிடயங்களிலும் பாராளுமன்றத்தில் இடதுசாரிகளுடன் இணைந்து செயற்பட்டனர். 1947 நவம்பரில் ஆளுநர் உரை மீதான வாக்களிப்பில் இடதுசாரிகளுடன் ஏழு உறுப்பினர்களும் இணைந்து எதிராக வாக்களித்தனர். 1947 டிசம்பரில் இலங்கைக்குச் சுதந்திரம் வழங்கப்படுதலை வரவேற்று வாக்களிப்பு நிகழ்ந்தபோது வாக்களிப்பில் இவ் ஏழு உறுப்பினர்களும் கலந்து கொள்ளாது தவிர்த்தனர். 1948ல் இந்திய குடியுரிமைச் சட்டம் நிறைவேற்றப்பட்ட போது 52 வாக்குகள் ஆதரவாகவும் 32 வாக்குகள் எதிராகவும் இடப்பட்டன. லங்கா சமசமாஜக் கட்சி, இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (போல்ஷெவிக் லெனினிஸ்க் கட்சி), இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் என்பனவும், தனி அங்கத்தவர்கள் சிலரும் எதிராக வாக்களித்தனர்.

1948ன் குடியுரிமைச் சட்டம் இடதுசாரிகளின் அரசியலில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. இந்தியத் தமிழ் தொழிலாளர்கள் வாக்குரிமையை இழந்தமையால் பாராளுமன்ற அரசியலில் அவர்கள் முக்கியத்துவம் அற்றவர்கள் ஆயினர். சமசமாஜக் கட்சியின் தலைவர்களில் ஒருவரான கொல்வின் ஆர்.டி.சில்வா இது பற்றிச் சுட்டிக் காட்டியிருந்தார்.

*வாக்குரிமையைப் பறித்தமை 'இந்திய எதிர்ப்பு' நடவடிக்கையாகும். இதுவே அந்நடவடிக்கையின் பிரதான அம்சம் ஆயினும், தொழிலாளர் வர்க்கத்தின் அரசியல் இயக்கத்திற்கு அது பலமான ஒரு அடியாகவும் இருந்தது. இலங்கையின் தொழிலாளர் வர்க்கத்தின் மிகப் பெரிய அங்கமாக விளங்கிய இத்தொழிலாளர் பிரிவினர் பாராளுமன்ற அரசியலில் இருந்து நீக்கம் செய்யப்பட்டனர். அதன் மூலம் இலங்கைத் தொழிலாளர் வர்க்கத்தின் தேர்தல் அரசியலின் அடித்தளம் தகர்க்கப்பட்டது. இலங்கை முதலாளித்துவத்தின் எதிரியான தொழிலாளர் வர்க்கத்தின் பலம் குறைக்கப்பட்டு முதலாளிவர்க்கம் தன்னைப் பலப்படுத்திக் கொண்டது. (எளிமைப்படுத்திய தமிழாக்கம்).*

1948 ஐ அண்மித்த ஆண்டுகளில் பெருந்தோட்டத்துறைத் தொழி

லாளர்கள் தமக்கான தொழிற்சங்கங்களை அமைத்து அவற்றில் இணைந்து கொண்டனர். அத்தொழிற் சங்கங்களின் தலைவர்களாக இந்தியத் தமிழ்ச்சமூகத்தைச் சேர்ந்தவர்கள் விளங்கினர். தேசிய அரசியல் கட்சிகளான இடதுசாரிக் கட்சிகளின் தலைமைத்துவம் தமக்குத் தேவையில்லை என்ற நிலைப்பாடு பெருந்தோட்டத் தொழிலாளர்களிடம் வெளிப்பட்டபோது இடதுசாரிகளுக்கு அது பெரும் ஏமாற்றமாக இருந்தது. 'குறுகிய' நோக்குடைய 'இனவாதிகளான' தலைவர்களை இத்தொழிலாளர்கள் ஏற்றுக் கொண்டு, அரசியல் உணர்வும் வர்க்க உணர்வும் உடைய தேசியத் தலைமையை அவர்கள் கைவிட்டு விட்டதை இடதுசாரிகள் உணர்ந்தனர்.

### தேசியக் கொடி:

இடதுசாரிகள் தேசியம் பற்றிய ஏற்றுக்கொள்ளபட்ட வரையறைகளை மீறிச் சென்றதற்கு இன்னொரு உதாரணமாக தேசியக் கொடி என்ற விடயத்தைக் குறிப்பிடலாம். தேசியக் கொடி 'நாட்டுப்பற்று', 'தேசியவாதம்' போன்ற உணர்வுகளை உடையவர்களுக்கு மனஎழுச்சியை தூண்டும் விடயமாகும். இலங்கை சுதந்திரம் அடைந்தபோது ஏற்றுக் கொள்ளப்பட்ட தேசியக் கொடி ஒன்றைக் கொண்டிருக்கவில்லை. அவ்வேளை சிங்களவர் தமது சிங்கக் கொடியை தேசியக் கொடியாக ஏற்கவேண்டும் என்று அழுங்குப்பிடியாக வாதாடினர். சிறுபான்மை இனத்தவர்கள் இதற்கு இணங்கவில்லை. இந்த விடயம் முதன்முதலாக பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது பிலிப் குணவர்த்தன அவர்கள் 'சிங்களவர் டச்சுக்காரர், தமிழர்கள், முஸ்லிம்கள் என்று இனக்குழு அடிப்படையில் பேசப்படும் கொடிகளில் எதனிலும் எனக்கு விருப்புக் கிடையாது. அவற்றைப் பற்றி நான் அக்கறைப்படப் போவதில்லை' என்றார். அத்தோடு 'ஓர் இனக்குழுவின் தலைவர்கள் சிறுபான்மை மக்கள் மீது ஒரு குலக்குழுவின் கொடியைத் திணிக்க முயல்கிறார்கள். அது உண்மையில் ஒரு குறுகிய இனவாதத்தினை வெளிப்படுத்தும் கொடி ஆகும்' என்றும் கூறினார் (ஹன்சாட் தொகுதி 2, 1948 : 3, 493). 1951ல் மீண்டும் தேசியக் கொடி பற்றி விவாதிக்கப்பட்ட போது இடதுசாரிகள் பிலிப் குணவர்த்தன குறிப்பிட்டது போன்ற கருத்துக்களையே வெளிப்படுத்தினர். அவ்வாண்டில் சிங்கக் கொடியில் மஞ்சள், பச்சைக் கோடுகள் சேர்க்கப்பட்டு தேசியக் கொடியாக ஏற்கப்பட்டது. மஞ்சள் தமிழர்களையும், பச்சை முஸ்லிம்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் அடையாளங்களாக கொடியில் சேர்க்கப்பட்டன. அப்போது பிரேமலால் குமாரசிறி எள்ளி நகையாடும் வகையில் பின்வருமாறு கூறினார். அவரின் பேச்சில் இடதுசாரி கிளர்ச்சிவாதம் வெளிப்பட்டது.

*இக்கொடி சிங்களவர்களில் மிகவும் மோசமான இனவாதிகளின் ஆதரவுடன் ஏற்கப்பட்டுள்ளது. அவர்கள் திரிபுபடுத்தப்பட்ட பொய்யான வரலாற்றின்படி தம்மைச் சிங்கத்தின் வழி வந்தவர்கள் என நம்புகிறார்கள். இப்பொழுது வடிவமைக்கப்பட்டுள்ள கொடி சிங்களவர்களுக்குள் இருக்கும் இவ் இனவாதிகளுக்கு கொடுத்த விட்டுக் கொடுப்பு ஆகும். அவர்கள் பிரித்தானியரின் யூனியன் கொடியின் கீழ் வாழ விரும்புவார்கள். ஆனால் சிறுபான்மையினருக்கு நீதியான சலுகைகள் எதனையும் வழங்கமாட்டார்கள் (ஹன்சாட் தொகுதி 9, 1951 : 1670 - 1).*

1948 - 1951 காலத்தில் பிலிப் குணவர்த்தனவும், பிரேமலால் குமாரசிறியும் இனவாத எதிர்ப்புக் கருத்துக்களை உறுதியோடு எடுத்துக் கூறியதைக் காணலாம். இவ்விருவரும் சில ஆண்டுகளுக்கிடையில் சிங்களம் மட்டும் உத்தியோக மொழியாக இருக்க வேண்டும் என்ற கருத்தை தீவிரமாக ஆதரிப்போராக மாறிவிட்டனர்.

### இடதுசாரிகளும் சர்வதேசியமும் - 1940கள் காலம்:

மலையாளிகள், பெருந்தோட்டத் தொழிலாளர், தேசியக் கொடி போன்ற விடயங்களில் இடதுசாரிகளின் நிலைப்பாட்டை மேலே குறிப்பிட்டோம். இவற்றுக்கு அப்பால் சென்று சில விடயங்களில் இடதுசாரிகள் கறாரான மார்க்சிய - சர்வதேசிய நிலைப்பாடுகளை எடுத்திருந்ததையும் இங்கு குறிப்பிடுதல் வேண்டும். BLPI என்ற சுருக்க எழுத்துக்களால் குறிப்பிடப்படும் 'இந்திய போல்செவிக் லெனினிஸ்ட் கட்சி' (இலங்கைக் கிளை), இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி என்ற இருகட்சிகளும், 1940 களில் தேசிய இனப்பிரச்சினை (National Question) தொடர்பாக வெளியிட்ட கொள்கைகள், கருத்துக்கள் என்பன பற்றி இங்கு குறிப்பிடுதல் பொருத்தமானது. அக்காலத்தில் இவ்விரு கட்சிகளும் தேசிய இனப்பிரச்சினையை அரசியல் புறச்சூழலில் வைத்துப் பார்க்காமல், அருவமான கருத்தாக, கோட்பாட்டு நிலைநின்று நோக்கினர். போல்செவிக் லெனினிஸ்ட் கட்சி தாம் ரொட்ஸ்கிச கொள்கையில் பற்றுக் கொண்டவர்கள் என்று ரொட்ஸ்கிச நான்காவது அகிலத்தின் நிலைப்பாட்டை எடுத்தனர். கம்யூனிஸ்ட் கட்சி ஸ்டாலினின் மூன்றாம் அகிலத்தின் கொள்கையை ஆதரித்தனர். ஒரு கட்சி ரொட்ஸ்கிசத்தையும், மற்றக்கட்சி ஸ்டாலினிசத்தையும் ஆதரித்தன. இவ்வாறு இரு கட்சிகளும் தேசிய இனப் பிரச்சினையை சர்வதேசிய நிலையில் வைத்துப் பார்த்தனரே தவிர, இலங்கையின் பிரத்தியேகமான யதார்த்த நிலையில் வைத்துப் பரிசீலனை செய்யத் தவறினர்.

1940களில் கம்யூனிஸ்ட் கட்சி சோவியத் யூனியன், பிரித்தானியா, இந்தியா ஆகிய நாடுகளின் கம்யூனிஸ்ட் கட்சிகளுடன் தொடர்புகளை வைத்திருந்தது. இக்கட்சி குறிப்பாக 1942ல் தேசிய இனங்களின் பிரச்சினை குறித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சி எடுத்த நிலைப்பாட்டைப் பின்பற்றியது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி முஸ்லிம்கள் இந்தியாவின் தனித்துவமான தேசிய இனம் எனவும், அம்மக்களுக்குச் சுயநிர்ணய உரிமையும், பிரிந்து போவதற்கான உரிமையும் உள்ளது எனவும் கூறியது.

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியும் 1944ல் இந்தியக் கம்யூனிஸ்டுகளின் வழியிலேயே சிந்தித்ததோடு இலங்கைத் தமிழர்களுக்கும் அதே போன்ற உரிமைகள் (சுயநிர்ணய உரிமை) உண்டு என்ற கருத்தை உள்ளடக்கிய சீர்திருந்தங்களை சிபாரிசு செய்தனர். அக்காலத்தில் தமிழர்கள் கோராத உரிமையை இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி முன்வைத்தது. தமிழர் ஒரு தேசிய இனம் (Tamil Nation) என்ற கருத்தை சமஷ்டிக் கட்சி 1951ம் ஆண்டிலேயே முன்வைத்தது. ஆனால் 1944ல் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி முன்வைத்த திட்டம் இலங்கைக்கு சமஷ்டி முறையையும், சுதந்திரத்தையும் கோரியதோடு இலங்கையில் வாழும் 'சிங்களவர்களும் தமிழர்களும் தனித்துவமான தேசிய இனங்கள் அவை வரலாற்று ரீதியாக உருவான தேசிய இனங்கள்' என்றும் குறிப்பிட்டிருந்தது. (Distinct Nation... Distinct, historically Evolved Nationalities)- இக்கூற்றை மைக்கல் றொபர்ட்ஸ் 1979:15 மேற்கோள் காட்டியுள்ளார்.)

இலங்கையின் ரொட்ஸ்கிசவாதிகளிடம் 1940களில் சர்வதேசியம் செல்வாக்குப்பெற்றிருந்தது. சமசமாஜக் கட்சியின் ஒரு குறிப்பிட்ட பிரிவினர் கொல்வின் ஆர்.டி. சில்வா, லெஸ்லி குணவர்த்தன, டொரிக் டிசூசா ஆகியோர் தலைமையில் பிரிந்து சென்று, இந்திய போல்செவிக் லெனிலிஸ்ட் கட்சியை ஆரம்பிப்பதற்கு ஆதரவு வழங்கினர். இக்கட்சி நான்காவது அகிலத்தின் ஒரு பிரிவாக இருந்தது. மேற்குறித்த தலைவர்கள் இந்திய போல்செவிக் லெனினிஸ்ட் கட்சியின் இலங்கைக் கிளை அலகாக செயற்பட்டனர். 1946ல் போல்செவிக் லெனினிஸ்ட் கட்சி ஒரு அறிக்கையை 'இலங்கைக்கான திட்டம்' (Program for Ceylon) என வெளியிட்டது. இவ் அறிக்கை இலங்கை சமசமாஜக் கட்சியின் 1941ன் 'சமசமாஜக் கட்சியின் திட்டத்தை (Program of The LSSP) கண்டித்து விமர்சனம் செய்தது. சமசமாஜக் கட்சி 'இலங்கையில் தேசியப் புரட்சி பற்றிப் பேசுகிறது. இது கோட்பாட்டு ரீதியில் தவறான ஒரு கருத்து' என்று விமர்சிக்கப்பட்டது. சமசமாஜக் கட்சியின் 1941 திட்டத்தை விமர்சித்த போல்செலிக் லெனினிஸ்ட் கட்சி பின்வருமாறு தனது வாதத்தை முன்வைத்தது.

*இலங்கையின் புரட்சி ஏகாதிபத்திய ஆட்சியைத் தூக்கி வீசும் முறையில் இலங்கைக்குள் உள்ள சக்திகளின் முயற்சியினால் மட்டும் தனிமைப்பட்டு நின்று வெற்றியடைய முடியாது. இலங்கை இந்தியாவிற்கு மிக அருகில் உள்ளது. இப்புவியியல் பிணைப்பு மட்டுமல்லாமல் பொருளாதார பண்பாட்டு நிலையிலும் நெருங்கிய பிணைப்புகள் இரு நாடுகளுக்கும் இடையில் உள்ளன. அத்தோடு இவ்விரு நாட்டு மக்களும் பொது எதிரியால் அடிமைப்படுத்தப் பட்டுள்ளனர். பிரித்தானிய ஏகாதிபத்தியம் இந்தியப் புரட்சியில் இலங்கையின் வெகுஜனங்கள் பங்கு பெறுவதைத் தவிர்க்க முடியாத நியதியாக்கியுள்ளது. இலங்கை மக்கள் இந்திய மக்களுடன் சேர்ந்து பிரித்தானிய ஏகாதிபத்திய*

*நுகத்தடியை தூக்கி வீசுவது உறுதியாகிவிட்டது. (நான்காவது அகிலம் ஒக் 1946 : 316)*

'இலங்கை பிரித்தானியாவின் பலம் வாய்ந்த கோட்டையாக இருக்கும் வரை பிரித்தானியா கிழக்குலகை ஆதிக்கம் செய்யும்' என்றும் ஆகையால் இந்தியாவின் விடுதலையை இலங்கையின் விடுதலையில் இருந்து பிரித்துப் பார்க்க முடியாது என்றும் போல்செவிக் லெனினிஸ்ட் கட்சி கருதியது. ஆகையால் 'இலங்கையின் புரட்சிப் போராட்டம் இந்திய துணைக் கண்டத்தின் விடுதலைப் போரின் ஒவ்வொரு கட்டத்துடனும் பிணைக்கப்பட்டிருப்பதோடு இந்தியப் புரட்சியின் முழுமையான பரிமாணத்தின் பிராந்திய அம்சம் என்ற நிலையில் இந்தியப் புரட்சியோடு தொடர்புபட்டும் உள்ளது' (மேலது) எனக் கூறப்பட்டது.

மேற்குறித்த பின்னணியில் இலங்கை மக்களின் சுயநிர்ணய உரிமையையும் போல்செவிக் லெனினிஸ்ட் கட்சி வலியுறுத்தியதோடு, இலங்கை மக்களின் நலன்கள் இந்தியர்களின் நலன்களுக்குக் கீழ்ப்பட்டதாக இருக்க முடியாது என்றும் அக்கட்சி கூறியது.

*இந்தியப் புரட்சியினால் ஏகாதிபத்தியம் அழித்தொழிக்கப்பட்ட பின்னரே இலங்கை மக்கள் தமது சுயநிர்ணய உரிமையை நிலைநிறுத்த முடியும், அதன் பின்னர் இலங்கை மக்கள் தமது எதிர்காலம் பற்றித் தாமே முடிவு செய்வர். இந்தியாவுடன் சமஷ்டியின் ஒரு அலகாக இணைந்து கொள்வதா அல்லது அவ்வாறான சமஷ்டியில் இணைந்து கொண்ட பின்னர் அச்சமஷ்டியில் இருந்து ஏதேனும் ஒருகட்டத்தில் பிரிந்து செல்லவேண்டுமா என்பதையும் இலங்கை மக்களே தீர்மானிப்பார்கள். (மேலது பக். 317)*

போல்செவிக் லெனினிஸ் கட்சியின் நிலைமாறு காலத்திட்டம் 'இலங்கைத் தேசத்தின் பிரத்தியேகமான நிலைமைகள்' பற்றியும் பின்வருமாறு குறிப்பிட்டது.

*'இலங்கை இந்தியாவில் இருந்து அரசியல் நிலையில் பிரிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் பூஷ்வா வர்க்கத்திற்கும். அதன் குட்டி பூஷ்வா வர்க்கத்திற்கும் இடையே முரண்பாடுகள் வலுத்துள்ளன. இலங்கைக்கு தனியான தேசிய பண்பாட்டுப் பாரம்பரியமும் உள்ளது. இம்மூன்று காரணிகளும் ஒன்றிணைந்து இலங்கையில் இந்திய எதிர்ப்பு உணர்வையும் பலமான தேசியவாதப் போக்கையும் உருவாக்கியுள்ளது. இவ்இந்திய எதிர்ப்புத் தேசியவாதம் தொடர்ச்சியாக தொழிலாளி வர்க்கத்திற்குள்ளும் புகுத்தப்பட்டு வருகிறது. ஆகையால் இனவாதத்தை அதன் எல்லா வடிவங்களிலும் எதிர்க்க வேண்டியதும், விட்டுக் கொடுக்காது போராடுவதும், பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கு எதிரான புரட்சிப் போராட்டத்தில் இந்தியாவுடன் இலங்கை ஐக்கியப் பட்டு நிற்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துக் கூறுவதும் எமது கட்சியின் கட்டாய பணியாகும். அத்தோடு இலங்கை மக்களின் சுயநிர்ணய உரிமையை உரத்துக் கூறுவதும் போல்செவிக் - லெனினிஸ்டுகளின் கடமையாகும். (மேலது பக்: 319).*

### மொழிகளின் சமஅந்தஸ்து:

உத்தியோக மொழிகள் பிரச்சினை தொடர்பாக இடதுசாரிகள் 1956ம் ஆண்டளவில் அரசின் கொள்கைகளுக்கு மாறாக முன்னெடுத்த எதிர்ப்புப் போராட்டம் இனவாத எதிர்ப்பின் உச்சநிலையைத் தொட்டது. அவ்வேளை பாராளுமன்றத்தில் இவ்விடயம் விவாதிக்கப்பட்ட போது இடதுசாரிக் கட்சிகளின் உறுப்பினர்களிடையே பல மட்டங்களிலும் கொள்கை சார்ந்த சந்தேகங்கள் நிலவின. இருந்தபோதும் மக்கள் மத்தியில் தாம் செல்வாக்கு இழக்கப் போகிறோம் என்பதையும் பொருட்படுத்தாது. சிங்களம் மட்டும் சட்டத்தை, தமிழை ஒதுக்குவதை, எதிர்த்து பாராளுமன்ற விவாதத்தில் சமசமாஜக் கட்சியினதும், கம்யூனிஸ்ட் கட்சியினதும் தலைவர்கள் உரையாற்றினர். அவ்வேளை நாட்டில் இனவாதமும் மொழிவெறியும் தலைபிரித்து ஆடின என்பதையும் குறிப்பிடுதல் வேண்டும்.

1940ம் ஆண்டு சட்டசபையில் 'நியாயமான கால எல்லைக்குள் சிங்களத்தை இலங்கையின் உத்தியோக மொழியாக ஆக்கவேண்டும்' என்ற பிரேரணையை ஜே.ஆர்.ஜெயவர்த்தன முன்மொழிந்தார். அப்போது சட்டசபையில் இருந்த தமிழ் உறுப்பினர்கள் தமிழையும் உத்தியோக மொழியாக ஆக்கவேண்டும் என்ற திருத்தத்தைச் சிபாரிசு செய்தனர். அத்திருத்தத்துடன் கூடிய பிரேரணை, 27 வாக்குகள் எதிர் 2 வாக்குகளால் நிறைவேறியது. அவ்வேளை ஜே.ஆர். ஜெயவர்த்தனவால் பிரேரிக்கப்பட்ட பிரேரணை 'சிங்களம் மட்டும்' என்பதாகவே இருந்ததைக் கவனித்தல் வேண்டும். 1955ம் ஆண்டு வரை சிங்களம், தமிழ் ஆகிய இருமொழிகளும் உத்தியோக மொழிகளாக இருக்க வேண்டும் என்ற கருத்து ஏற்கப்பட்டிருந்தது. ஆயினும் சிங்கள மக்களிடையே நடைபெற்று வந்த 'சுய பாஷா' பிரச்சாரம் உண்மையில் சிங்கள மொழியை உத்தியோக மொழியாக ஆக்கவேண்டும் என்பதாகவே இருந்தது.

ஆசிரியர்கள், மாணவர்கள், ஊடகவியலாளர்கள், ஆயுர்வேத வைத்தியர்கள் சிற்றளவு உற்பத்தியாளர்கள் என்ற பல்வகையினரையும் உள்ளடக்கிய குட்டி முதலாளி வர்க்கம் மொழிக் கொள்கை விடயத்தில் உணர்வு ரீதியாக ஆழ்ந்த ஈடுபாட்டைக் கொண்டிருந்தது. சிங்கள மொழியில் கற்றவர்களுக்கு உயர் கல்வி வாய்ப்புக்கள் கிடைக்கும் என்றும் உயர்ந்த சம்பளத்தை பெறக் கூடிய பதவிகள் கிடைக்கும் என்றும் இவ்வர்க்கத்தினர் நம்பினர். இவ்வர்க்கத்தினரின் சிங்களமொழி இயக்கத்தை தலைமை தாங்கி நடத்துவதில் சிங்கள ஆசிரியர்கள், பௌத்த பிக்குகள் என்ற இரு பிரிவினர் முன்னணியில் நின்றனர். இவர்களுள் சிங்கள ஆசிரியர்களில் பெரும் எண்ணிக்கையினர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலும், இடதுசாரிக் கட்சிகளிலும் அங்கத்தவர்களாக இருந்தனர். பௌத்தபிக்குகள் பௌத்த சமயத்திற்கும், சிங்கள மொழிக்கும் இடையே நெருங்கிய பிணைப்பு இருப்பதாக நம்பினர். இப்பின்னணியில் 'சுயபாஷா பெரமுன' (சுயமொழி முன்னணி) என்ற இயக்கம் 'பாஷா பெரமுன' என மாற்றம் பெற்றமை கவனிக்கத்தக்கது.

1951ம் ஆண்டளவிலையே அகில இலங்கை சுயபாஷா ஆசிரியர் தொழிற் சங்கம் 'உத்தியோக மொழிப் பிரச்சினை' (ராஜ்யபாஷா பிரஸ்யை) என்ற பெயரில் சிங்களத்தில் ஒரு சிறுபிரசுரத்தை வெளியிட்டது. அப்பிரசுரத்தில் சிங்களம், தமிழ் என்ற இரு மொழிகளும் உத்தியோக மொழிகளாக இருக்க வேண்டும் என்ற கருத்துக் கூறப்பட்டிருந்தது. இவ்வாறு அவை உத்தியோக மொழிகளாக ஆக்கப்படுதல் மூலம் அவை கல்விக்கான பயிற்று மொழிகளாக ஆக்கப்படும். அதன் மூலம் தமது உயர் இலக்கு அடையப்படும் என ஆசிரியர் தொழிற் சங்கத்தினர் கருதினர். அவர்கள் மக்களைத் தமது இயக்கத்தில் அணிதிரட்டுவதற்காக பண்பாட்டு அடையாளத்தை அடிப்படையாகக் கொண்டனர். உத்தியோக மொழியாக ஏற்புடமை பெறுவதால் அரசாங்க நிர்வாகம் மக்களின் மொழியிலேயே நடத்தப்படும். அது ஒரு ஜனநாயகத் தேவையும் ஆகும். ஆயினும் இவ்வியக்கத்தினர் ஜனநாயகத் தேவை என்பதை மட்டும் தமது இலட்சியமாகக் கொள்ளவில்லை. உத்தியோக மொழி விடயம் தேசிய அடையாளத்தை நிறுவுதலும் அவ்வடையாளத்தை பாதுகாப்பதும் ஆகும் என்பதே அவர்களின் இலட்சியமாக இருந்தது. மேற்குறித்த 'ராஜ்ய பாஷா பிரஷ்யை' என்ற பிரசுரத்தில் பின்வருமாறு கூறப்பட்டிருந்தது. 'எமது இப்போராட்டம் அரசியல் போராட்டம் மட்டுமன்று, இது பண்பாட்டு உரிமைகளைப் பெறுவதற்குமான போராட்டமாகும். ஆகையால் இந்நாட்டின் எந்தவொரு குடிமகனும் இவ்வியக்கத்தில் பங்கேற்காது, விலகியிருப்பார் என்று நாம் கருதவில்லை! இப்பிரசுரத்தில் உபயோகிக்கப்பட்டிருக்கும் 'அந்நிய செல்வாக்கு' போன்ற சொற்பதங்களும், அந்நிய எதிர்ப்புச் சொல்லாடலும் குட்டி முதலாளித்துவக் கருத்தியலின் பண்புகளை வெளிப்படுத்துவனவாய் உள்ளன. ஆங்கிலம் பேசும் ஆட்சியாளர்களான உயர் குழாம் தமது கோரிக்கைக்கு எதிராக இருப்பதாகவும் இப்பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இலங்கையில் இனவாதத்தைத் தொடக்கிவைத்தவராக சிங்கள-பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்தின் தலைவரான அநகாரிக தர்மபாலவைக் குறிப்பிடலாம். அவரின் தந்தை தளபாடங்களை விற்பனை செய்யும் நிலையம் ஒன்றைக் கொழும்பில் நடத்தி வந்தார். இவர் அக்காலத்தின் கொழும்பு நகரின் சிங்கள வர்த்தகர்கள் சிலரில் ஒருவராவர். அநகாரிக தர்மபாலவின் சிங்கள - பௌத்த மறுமலர்ச்சி இயக்கம் பண்பாட்டு மறுமலர்ச்சி இயக்கமாகும். அது அந்நியப் பண்பாட்டுத்தாக்கத்திற்கு எதிரானது ஆயினும் அதன் எதிர்ப்பு ஏகாதிபத்தியத்தை நோக்கியதாக இருக்கவில்லை, மேற்குலகின் பண்பாட்டு ஊடுருவலை எதிர்ப்பதாகவே இருந்தது. அவ

ரின் சொல்லாடல் சிங்கள - பௌத்த வர்த்தகர்கள், கடைவியா பாரிகள், எழுதுவினைஞர்கள், குட்டி முதலாளித்துவ புத்திஜீவிகள் ஆகியோரைக் கவரும் மக்கள் வாதமாக (Populism) இருந்தது. அவரது கருத்துக்கள் நவீன காலத்தின் பெருந்தேசிய வாதம், அந் நியர்களுக்கும், சிறுபான்மை, இனத்தவர்களுக்கும் எதிரான இன வாதம் என்பனவற்றின் தோற்றத்தை எடுத்துக் காட்டுவன.

அவை பிறசமயங்களை ஒதுக்கும் இனவாதமாகவும் இருந்தது. அந்நிய பண்பாட்டு தாக்கங்களை எதிர்க்கும் இயக்கங்கள் வெகு ஜனங்களை அணிதிரட்டும் வல்லமை உடையனவேனும், அவை இனவாதமாகச் சீரழிவதும் உண்டு. பெரும்பான்மை இனக்குழுமத் திற்கு அல்லது சமயக் குழுமத்திற்கு வெளியே நிற்கும் அந்நிய ராக சிறுபான்மை இனமக்களை இனங்காட்டும் இவ்வியக்கங்கள் மக்கள் திரளை சிறுபான்மை இனத்தவர்களுக்கு எதிராகச் செயற்ப டத் தூண்டிவிடுகின்றன.

அந்நிய எதிர்ப்பு, சிறுபான்மை மக்கள் மீதான எதிர்ப்பு என்ற இரு போக்குகள் பண்பாட்டு 'மறுமலர்ச்சி' இயக்கத்தில் வெளிப்பட் டதை மேலே குறிப்பிட்டோம். 1920 களில் இலங்கையில் தீவிர வாத இளைஞர் குழுக்கள் ஏ.ஈ. குணசிங்க தலைமையிலும் பிற இயக்கங்களின் தலைமையிலும் அணிதிரண்டபோது, அக்குழுக் கள் அந்நிய எதிர்ப்பு, சிறுபான்மையினருக்கு எதிரான பகைமை உணர்வு என்ற இரு போக்குகளையும் வெளிப்படுத்தின குணசிங் கவின் மதிப்புக்குரிய வீரபுருஷராகவும், குருவாகவும் தர்மபால விளங்கினார். 1920 களில் குணசிங்க முன்னெடுத்த தொழிற்சங்க வேலை நிறுத்தங்கள் போன்ற போராட்டங்களின் போது அந்நிய எதிர்ப்புத் தீவிரவாதமும், சிறுபான்மையினருக்கு எதிரான இனவாத மும் வெளிப்பட்டன. காலனிய ஆட்சியாளர்களையும், முதலாளிக ளையும் தனது தொழிற்சங்கப் போராட்ட நடவடிக்கைகள் ஊடா கத் துணிச்சலோடு எதிர்கொண்ட ஏ.ஈ. குணசிங்க 1930 களில் தன் கொள்கைகளையும் நடைமுறைகளையும் தலைகீழாக மாற்றிக் கொண்டார். இனவாதத்தைக் கிளப்பியதோடு மட்டுமன்றி முதலா- ளிகளோடு கூட்டுச் சேர்ந்து தொழிலாள வர்க்கத்திற்குத் துரோகம் இழைக்கவும் ஆரம்பித்தார். இறுதியில் அவர் வலதுசாரி அரசிய லில் முக்கிய பங்காளி ஆயினார்.

1930 களில் இடதுசாரிகள் அரசியல் அரங்கிற்கு வந்தனர். அவர்க ளது வரவுடன் தொடக்க காலத்தின் தேசியவாதம், அந்நிய எதிர்ப் புத் தீவிரவாதம் என்பனவற்றில் சோஷலிசம் கலப்புற்றது. 1935ம் ஆண்டில் லங்கா சமசமாஜக் கட்சி வெளியிட்ட கொள்கைப் பிரக டனத்தில் சோஷலிசக் கலப்புடைய தேசியவாதமும், தீவிரவாதமும் கோரிக்கைகள் வடிவில் வெளிப்பட்டன. லங்கா சமசமாஜக் கட்சி யின் தலைவர்கள் கிராமப்புறக் குட்டி முதலாளிவர்க்கக் குடும்பங் களில் தோன்றியவர்கள், பௌத்த பாடசாலைகளில் கல்விகற்று தர்மபாலவின் பண்பாட்டு மறுமலர்ச்சிக் கருத்துக்களை உள்வாங் கியவர்களாயும், இந்தியாவினதும், ஆசிய நாடுகளினதும் தேசிய வாதங்களால் கவரப்பட்டவர்களாகவும் விளங்கினர். இலங்கையின் குட்டி முதலாளிவர்க்கத்தினரிடையே தேசியவாதம், பண்பாட்டு மறு மலர்ச்சி, இனவாதம், சோஷலிசம் ஆகியன தொடர்பாக 1930க ளில் மூன்றுவித போக்குகள் வெளிப்பட்டன. அவை.

**அ) ஏ.ஈ. குணசிங்கவின் இனவாதம்:**
ஏ.ஈ. குணசிங்க இனவாதத்தை வெளிப்படையாகப் பேசினார். அவ ரின் கருத்துக்களிற்கு சிங்கள புத்திஜீவி வகுப்பினரின் ஆதரவு கிடைத்தது. சிங்களவர்களான தொழிலாளர்களிடமும் அவரது இன வாதக் கருத்துக்கள் ஆதரவைப் பெற்றன.

**ஆ) எஸ்.டபிள்யு. ஆர்.டி பண்டாரநாயக்கவின் சிங்கள மகாசபை இயக்கம்:**
இவ்இயக்கம் சிங்களவர் என்ற அடையாள உணர்வை அழுத்திக் கூறியதோடு சிங்களவர்களின் நலன்கள் பாதுகாக்கப்படுதல் வேண்டும் என்ற கருத்தையும் வலியுறுத்தியது.

**இ. சோஷலிசம்:**
1935 தொடக்கம் லங்கா சமசமாஜக் கட்சியும், 1940 களில் இலங் கைக் கம்யூனிஸ்ட் கட்சியும் சோஷலிசக் கருத்துக்களை முன் வைத்தன. இக்கட்சிகள் குட்டி முதலாளிவகுப்பின் தீவிரவாதப் பிரி வினரை வர்க்கப் போராட்டத்தில் பங்கேற்க வைத்ததுடன் தமது அணியினருக்கு சர்வதேசியம் சார்ந்த கொள்கைத் திட்டத்தையும் வழங்கினர்.

1935 தொடக்கம் 1960 வரையான காலப்பகுதியில் இலங்கையின் இடதுசாரிகள் சர்வதேசியம் (Internationalism) என்ற கொள் கையை பின்பற்றினர். ஆயின் 1960களில் இடதுசாரிகளுக்குள் இருந்த குட்டி முதலாளித்துவப் பிரிவினரின் செல்வாக்கு மேலோங்கியது. அவர்களின் இனவாதக் கருத்துக்கள் அரசியல் அரங்கங்களில் வெளிப்பட்டன. தர்மபாலாவின் இனவாதச் சொல் லாடல் வெளிப்பட்டது. லங்கா சமசமாஜக் கட்சியில் இருந்து பிலிப் குணவர்த்தன பிரிந்து சென்று விப்ளவக்கார லங்கா சமசமா ஜக்கட்சி (VLSSP) என்னும் கட்சியை உருவாக்கினார். இதற்கு பின்னரும் 1963 - 1976 காலத்தில் இரு இடதுசாரிக் கட்சிகள் ஒன் றிணைந்து சிறீலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டமைத்து ஐக்கிய முன்னணி ஆட்சியை அமைத்தனர்!

சிறீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து ஐக்கிய முன்னணி ஆட்சியமைத்தமையை 'வலதுசாரித் திசைவிலகல்' என்று இலங் கைக் கம்யூனிஸ்ட் கட்சி பிற்காலத்தில் வருணித்தது. 1960 களி லும் 1970 களிலும் குட்டி முதலாளி வகுப்பைச் சேர்ந்த தனி நபர் கள் புகுந்து கொண்டு அவ்வர்க்கக் கருத்தியலை உள்நுழைத் ததே இதற்கான காரணம் என அக்கட்சி கூறியது.

*'எமது கட்சியில், ஆரம்பித்ததில் இருந்தே வலதுசாரி போக்குடை- யோர் சேர்ந்திருந்தனர். கட்சியின் கட்டமைப்பில் குட்டி முதலா- ளித்துவ சக்திகள் பலம் பெற்றிருந்தமையே இதற்கான காரணமா கும். சுயமொழியில் கல்வி கற்றவர்களான, கிராமப்புறத்துக் குட்டி முதலாளிகள் கடந்த இருபது ஆண்டு காலத்தில் முற்போக்கு இடதுசாரி இயக்கத்தின் அரசியல் தலைமைத்துவத்தைக் கைப் பற்றிக் கொண்டனர். நகரம் சார்ந்த ஆங்கிலம் கற்ற பிரிவினரி டம் இருந்து கட்சியின் தலைமைத்துவம் கிராமப்புறக் குட்டி பூர்ஷ்வாப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டது.'*

கம்யூனிஸ்ட் கட்சி ஐக்கிய முன்னணி இக்கால அனுபவம் பற்றி சுயவிமர்சன முறையிலான அறிக்கையை பின்னர் வெளியிட்டது (On our experience of work in the SLFP - LSSP - CPSL United front and its Government P.5). அவ்வறிக்கையில் இருந்து பெறப் பட்ட மேற்கோள் மேலே தரப்பட்டுள்ளது.

**இனவாதமும் ஐக்கிய முன்னணி தந்திரோபாயமும்:**
1950 களில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆரம்பிக்கப்பட்ட பின்னர் மக்களின் கவனத்தை ஈர்க்கும் இரு விடயங்களில் அக்கட்சி பிரசா ரத்தை மேற்கொண்டது.

- சமயம், மொழி என்பன சார்ந்த பண்பாட்டுப் பிரச்சினைகள்
- கைத்தொழில் வர்த்தக முயற்சிகளைத் தேசியமயமாக்கல், ஏகா திபத்திய இராணுவத் தளங்களை மீட்டு எடுத்தல் ஆகிய கிளர்ச்சிவாதக் கோரிக்கைகளை முன்னெடுத்தல்.

மேற்குறித்த இரு பிரச்சினைகளை அக்கட்சி முன்னெடுத்தபோது இடதுசாரிகளிடையே ஒரு தடுமாற்றம் ஏற்பட்டது. சிறிலங்கா சுதந் திரக்கட்சியுடன் தேர்தல் உடன்பாட்டை ஏன் வைத்துக் கொள்ளக் கூடாது? ஏன் அரசியல் களத்தில் அவர்களோடு கூட்டுச் சேர்ந்து நடக்கக் கூடாது என்பன போன்ற வினாக்கள் இடதுசாரிக் கட்சியி னரிடம் தோன்றியது. 1935ம் ஆண்டு முதல் லங்கா சமசமாஜக் கட்சி கிளர்ச்சிவாதக் கருத்துக்களைக் கூறிவந்தது. இக்கிளர்ச்சி வாத எதிர்ப்பு இயக்கத்தின் உச்சகட்டமாக 1953 'ஹர்த்தல்' என் னும் கதவடைப்பு நிகழ்வு அமைந்தது. ஆயினும் லங்கா சமசமா ஜக் கட்சியினால். உருவாக்கி வளர்க்கப்பட்ட கிளர்ச்சிவாதத்தை யும் முற்போக்கு நடவடிக்கைகளையும் 1950 களின் நடுப்பகுதி யில் சிறீலங்கா சுதந்திரக்கட்சி இலகுவாகவும், விரைவாகவும் லங்கா சமசமாஜக் கட்சியிடம் இருந்து அபகரித்துத் தனதாக்கிக் கொண்டது. குட்டி முதாளித்துவத்தின் மேலாண்மைக்கு உட்பட்ட தான அக்கட்சி கிளர்ச்சிவாதத்துடன், இனவாதக் கருத்தியலையும் கலப்புச் செய்தது. இக்கலவையான கருத்தியல் 1950 களின் சூழ லில் மக்களின் கவனத்தைத் திருப்புவதில் வெற்றி கண்டது.

1955இல் பிலிப் குணவர்த்தனவின் ‘VLSSP’ கட்சி ‘சிங்களம் மட்டும்’ என்ற கொள்கையை ஏற்றுக் கொண்டு 1956ல் ‘மஹாஜன எக்சத் பெரமுன’ (MEP) என்ற கூட்டணியில் இணைந்து தேர்தலில் போட்டியிட்டது. 1956 தேர்தலின்போது லங்கா சமசமாஜக்கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியும் இரு மொழிக்களுக்கும் சம அந்தஸ்து என்ற கொள்கையையே பின்பற்றியபோதும், ‘மஹாஜன எக்சத் பெரமுன’ வுடன் போட்டித் தவிர்ப்பு உடன்பாட்டைக் கடைப்பிடித்தன. போட்டித் தவிர்ப்பு உடன்பாட்டைச் செய்து கொண்ட கட்சி தேர்தல் முடிந்து 24 மணி நேரத்தில் ‘சிங்களம் மட்டும்’ சட்டத்தை இயற்றி நடைமுறைப்படுத்துவதாகப் பிரகடனம் செய்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இருமொழிகளுக்கும் சம அந்தஸ்து (Parity of Status) என்ற கொள்கையைத் கைவிட்ட அடுத்த கட்சியாக இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி விளங்கியது. 1956ல் தேர்தலின் போது இவ்விடயம் தொடர்பாக உட்கட்சிக் கருத்துபேதம் இருந்தது. அத்தேர்தலில் கம்யூனிஸ்ட் கட்சி மூன்று ஆசனங்களை வென்றது. அவற்றுள் ஒரு ஆசனம் தமிழரான (பொன்.கந்தையா) ஒருவரால் வென்றெடுக்கப்பட்டது. தேர்தலின் பிந்திய அரசாங்கத்தின் ‘சிங்களம் மட்டும்’ சட்டத்தை எதிர்த்து கம்யூனிஸ்ட் கட்சி வாக்களித்தது. ஆயினும் பஸ் போக்குவரத்து துறையைத் தேசியமயமாக்குதல், துறைமுகம், பெற்றோலியம் ஆகியவற்றை தேசியமயமாக்குதல், சோஷலிச நாடுகளுடன் இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்துதல், இலங்கையில் பிரித்தானியர் கையில் விடப்பட்டிருந்த இராணுவத் தளங்களைப் பொறுப்பேற்றல் போன்ற உள்நாட்டு வெளிநாட்டுக் கொள்கைகளில் கம்யூனிஸ்ட்கட்சி ‘மஹாஜன எக்சத் பெரமுன’ அரசுக்கு ஆதரவு வழங்கியது. ‘தேசிய முதலாளித்துவத்தின்’ முற்போக்குக் கொள்கைகளுக்கு ஆதரவு கொடுக்கலாம் என்ற கொள்கையை 1950களில் ஏற்றுக் கொண்ட கம்யூனிஸ்ட் கட்சிக்கு ‘மஹாஜன எக்சத் பெரமுன’வுடன் இணைந்து செயற்படுவதில் எவ்வித தடையும் இருக்கவில்லை.

1960ம் ஆண்டளவில் மொழிக்கொள்கை தொடர்பாக கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கை மாற்றம் அடைந்து, அவ்வாண்டில் நடைபெற்ற கட்சியின் 6வது மாநாட்டில் மொழி பற்றிய கட்சியின் முன்னைய கொள்கையை ‘பண்பாட்டு போராட்டம்’ தொடர்பான குறுங்குழுவாதம் எனக் கண்டிக்கப்பட்டது. சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளுக்கும் ‘சம அந்தஸ்து’ என்ற கொள்கை யதார்த்த நிலைமையை மார்க்சிய - லெனினிச அடிப்படையில் புரிந்து கொள்ளத் தவறியதால் ஏற்பட்டது என்று கண்டிக்கப்பட்டது. கம்யூனிஸ்ட் கட்சியின் 1960 தேர்தல் பிரகடனத்தில் ‘சிங்களம் மட்டுமே அரச மொழியாக இருக்கும்’ என்றும், தமிழர் வாழும் பகுதிகளிலும் கல்வி நிர்வாகம் அகியனவற்றிற்கான மொழியாக மட்டும் தமிழும் இருக்கும் என்றும் கூறப்பட்டது.

லங்கா சமசமாஜக்கட்சியும் இக்காலத்தில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியை நோக்கி நகரத் தொடங்கியது. 1960 தேர்தல் பிரகடனத்தில் அக்கட்சி இருமொழிகளுக்கும் சம அந்தஸ்து என்ற கொள்கையைத் தெரிவித்திருந்தது. ஆயினும் அக்கட்சி சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் போட்டித் தவிர்ப்பு உடன்படிக்கையைச் செய்து கொண்டது. சிறிலங்கா சுதந்திரக்கட்சி ‘சிங்களம் மட்டும்’ கொள்கையை அப்போது வலியுறுத்தி வந்தது என்பது குறிப்பிடத்தக்கது. 1963ல் கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக்கட்சி, பிலிப் குணவர்த்தனவின் VLSSP என்ற மூன்று கட்சிகளும் ஒன்றிணைந்து ஐக்கிய இடதுசாரி முன்னணி (U.L.F) என்ற கூட்டு முன்னணியை ஏற்படுத்தின. இவ்வாறு இக்கட்சிகள் ஒன்றிணைந்தமையினால் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சிங்கள தேசியவாத உணர்வை இவையும் உள்வாங்கிக் கொண்டன எனலாம். 1930களில் இடதுசாரிகளிற்கிடையே பிரிவினைகள் தோன்றின. அதன்பின் முதற்தடவையாக 1963ல் இக்கட்சிகள் ஐக்கிய இடதுசாரி முன்னணியாக ஒன்றிணைந்தன. இவ்வாறு ஒன்றிணைந்தமை மக்களிடையே பெரும் ஆர்வத்தையும் உற்சாகத்தையும் ஏற்படுத்தியிருந்தன. அவ்வாண்டு இக்கட்சிகள் நடத்திய கூட்டு மே தினக் கூட்டத்தில் இக்கட்சிகளின் தலைவர்களான பிலிப்குணவர்த்தன, என்.எம்.பெரரா, எஸ்.ஏ. விக்கிரமசிங்க ஆகிய மூவரும் ஒரே மேடையில் தோன்றி உரையாற்றினர். இடதுசாரிக் கட்சிகளின் ஐக்கியம் முன்னர் இக்கட்சிகள் மொழிக்கொள்கை தொடர்பாக எடுத்த மார்க்சிய விரோத நிலைப்பாட்டைத் திருத்திக் கொள்வதற்கு உதவுவதற்குப் பதிலாக அதற்கு எதிர்மறையான விளைவையே தந்தது. இக்கூட்டணி அமைக்கப்பட்ட பின்னர் லங்கா சமசமாஜக் கட்சி இருமொழிகளுக்கும் சம அந்தஸ்து என்ற தனது கொள்கையில் இருந்து பின்வாங்கியது. 1963ல் இடதுசாரி ஐக்கிய முன்னணியின் கொள்கைத் திட்டம் ‘சிங்களம் மட்டும்’ சட்டத்தை ஏற்றுக்கொண்டது. தமிழ்ப் பெரும்பான்மையுடைய பகுதிகளில் ‘நியாயமான அளவு தமிழ் உபயோகம்’ என்ற கருத்தை முன்னணியின் திட்டம் குறிப்பிட்டிருந்தது. (Kearney 1967:126 - 27)

1963ன் மே தினத்தில் வெளிப்பட்ட இடதுசாரி ஐக்கிய முன்னணியின் (U.L.F) ஒற்றுமை விரைவிலேயே மறைந்தது. 1964ல் லங்கா சமசமாஜக் கட்சி சிறீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கத்தில் இணைந்து கொண்டது. பின்னர் 1965ல் லங்கா சமசமாஜக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் ‘சிங்களம் மட்டும் சட்டத்தை’ ஏற்றுக் கொண்டது. இவ்வாறு லங்கா சமசமாஜக் கட்சி தனது கொள்கைத் திட்டத்தை மாற்றிக் கொண்டதால், அக்கட்சியில் பிளவு தோன்றியது. லங்கா சமசமாஜக்கட்சி (புரட்சிப்பிரிவு) (LSSP (R)) என்ற பெயரில் ஒரு குழுவினர் பிரிந்து தனித்து இயங்கினர். ல.ச.ச.க (புரட்சிப்பிரிவு) சிங்களம், தமிழ் ஆகிய இருமொழிகளுக்கும் சம அந்தஸ்து என்ற கொள்கையைத் தொடர்ந்து பின்பற்றியது. ல.ச.-ச.கட்சிக்கும், கம்யூனிஸ்ட் கட்சிக்கும் பின்னடைவான காலமான 1965-70 அமைந்தது. இந்த இருண்ட காலத்தில் இக்கட்சிகள் மிகக்கேவலமான இனவாதத்தில் இறங்கின. ஐக்கிய தேசியக் கட்சியும், தமிழர்களின் கட்சியான சமஷ்டிக் கட்சியும் இணைந்து ஆட்சி அமைக்க இக்காலத்தில், இவ்விரு இடதுசாரிக்கட்சிகளும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து கொண்டு முதலாளித்துவத்திற்கு எதிர்ப்பு என்ற போர்வையில் கத்தோலிக்கர், தமிழர், இந்தியர்கள், பறங்கியர்கள், முஸ்லிம்கள், ஆகிய சிறுபான்மை இனத்தவர்களின் மீது தமது காழ்ப்புணர்ச்சியை வெளியிட்டனர். சிங்கள பௌத்தர்களான முதலாளிகள் தவிர்ந்த பிற எல்லோர் மீதும் முதலாளித்துவ எதிர்ப்புக் கூச்சல் எழுப்பப்பட்டது.

இடதுசாரிக் கட்சிகளின் ‘அத்த’, ‘ஜனதின’, ‘ஜனசத்திய’, ‘ஜயமதய’ என்ற ஊடகங்கள் வெளிப்படையாகவே இனவாதத்தைக் கக்கின. இப்பத்திரிகைகளின் இனவாதம் சில தசாப்தங்களுக்கு முன்னர் அநகாரிக தர்மபால தன் பேச்சிலும் எழுத்திலும் கக்கிய இனவாதத்தை ஒத்ததாக இருந்தது. ‘தேர்தலின் போது ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவு கொடுத்து அதனை வெற்றியடையச் செய்தவர்கள் யார்’ என்ற கேள்வியை 1965 மார்ச் 28ம் திகதி ‘ஜனசத்திய’வின் ஆசிரியர் தலையங்கம் எழுப்பியது. அக்கேள்விக்கு அத்தலையங்கத்தில் அளிக்கப்பட்ட விடை பின்வருமாறு அமைந்தது.

‘உள்ளூர் முதலாளிகளும் அந்நிய முதலாளிகளும் கூட்டுச்சேர்ந்து இந்த அரசாங்கத்தை ஆட்சியில் அமர்த்தியிருக்கிறார்கள். தொண்டமான் தலைமையிலான இந்தியர்களும், பொன்னம்பலம் தலைமையிலான தமிழர்களும், கத்தோலிக்கத் திருச்சபையும் முஸ்லிம்களும் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் வர்த்தகக் கொள்கையை எதிர்த்தார்கள் அந்நிய கலாசாரத்தை ஏற்றுக்கொண்டவர்களாய் எமது சுதேசிய கலாசாரத்தை எதிர்த்தவர்களான குழுவினரும், முதலாளித்துவப் பத்திரிகைகளும், ஒன்றிணைந்து ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவு வழங்கினர்’ (வணசிங்க 1964: பக்.116).

20ம் நூற்றாண்டின் முற்பகுதியில் குட்டி முதலாளித்துவத்தைக் கவரும் இனவாதம், கிளர்ச்சிவாதம் என்ற போர்வையில் வெளிப்பட்டது. பின்னர் ஏறக்குறைய 40 ஆண்டுகள் கழித்து, 1960களின் கிளர்ச்சிவாதம் இனவாதக் கலவையுடன், 1920களின் கிளர்ச்சிவாதத்தின் உள்ளடக்கத்தையும் வடிவத்தையும் கொண்டதாக மீண்டும் வெளிப்பட்டது. காலச்சக்கரத்தின் சுழற்சியில் இனவாதம் இடதுசாரிகள் ஊடாக வெளிப்பட்ட கோலம் விநோதமானது. இடதுசாரிகள் குட்டி முதலாளித்துவ வகுப்பைக் கவரும் கிளர்ச்சிவாத, இனவாதக் கலவையை முன்வைத்தனர்.

இடதுசாரிகளின் புதிய கொள்கை உட்கட்சிப் பிரச்சினைகளைத் தோற்றுவித்தது. கட்சியின் உறுப்பினர்களில் கிளர்ச்சிவாதிகளாக

வும் தமிழர்களாகவும் இருந்தோரில் பலர் இனவாதத்தைக் கட்சி தழுவியதைப்பற்றிக் கடுமையாக விமர்சித்தனர். லங்கா சமசமாஜக் கட்சியின் (புரட்சிப்பிரிவு) இடதுசாரிகளின் இனவாதத்தைக் கண்டித்தது. சிட்டி வணசிங்கவினைப் பதிப்பாசிரியராகக் கொண்டு வெளிவந்த 'யங் சோஷலிஸ்ட்' (Young Socialist) சஞ்சிகையில் 1965, 1966ம் ஆண்டுகளில் வெளிவந்த கட்டுரைகளில் அக்கால கட்டத்தின் பிரச்சினைகள் பற்றி எழுதப்பட்டுள்ளன.

**கம்யூனிஸ்ட் கட்சிக்குள்,**

- 1964ன் சிறிமா - சாஸ்திரி உடன்படிக்கை.
- 1966ல் ஐக்கிய தேசியக்கட்சி அரசினால் முன்வைக்கப்பட்ட தமிழ்மொழி (விசேட ஏற்பாடுகள்) சட்டம்

என்ற இரண்டு விடயங்கள் தொடர்பாகக் கருத்து மோதல்கள் ஏற்பட்டன. சிறிமா - சாஸ்திரி உடன்படிக்கையின்படி இந்திய தோட்டத் தொழிலாளர்களை இந்தியாவிற்குத் திருப்பியனுப்புதல், நீண்டகாலப் பிரச்சினையொன்றுக்கான தீர்வாக அமையுமெனக் கருதிய கம்யூனிஸ்ட் கட்சி இதனை ஆதரித்தது. கம்யூனிஸ்ட் கட்சியின் தோட்டத்தொழிலாளர் சம்மேளனம் (The United Plantation Workers Union) இவ் உடன்படிக்கையை எதிர்த்தது. ஆயினும் கட்சியின் யாழ்ப்பாணத்துத் தலைவர்கள் உடன்படிக்கையை ஆதரித்தனர். தமிழர் பிரதேசங்களில் நிர்வாகத் தேவைகளுக்காக தமிழ்மொழியை உபயோகித்தல், அரசாங்கம் தமிழர்களோடு தொடர்புகளை மேற்கொள்ளும்போது தமிழைத் தொடர்பு மொழியாக உபயோகித்தல் ஆகிய இருவிடயங்களைச் சட்டபூர்வமானதாக ஆக்கும் வகையில் 1966ம் ஆண்டில் தமிழ்மொழி (விசேட ஏற்பாடுகள் சட்டம்) என்றும் சட்டத்தை முன்மொழிந்தது, சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து கம்யூனிஸ்ட் கட்சியும், லங்கா சமசமாஜக் கட்சியும் இச்சட்டத்தை எதிர்த்தன. இச்சட்டத்தை எதிர்த்து 1966ம் ஆண்டு ஜனவரி 6ம் திகதி நடைபெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் இவ்விரு இடதுசாரிக் கட்சிகளும் கலந்து கொண்டன. இந்த ஆர்ப்பாட்டத்தில் இனவாத வெறிக்கூச்சல்கள் முழங்கின் வன்முறை நிகழ்வுகள் இடம்பெற்றன. பொலிஸ் துப்பாக்கிச் சூட்டில் ஒரு புத்தபிக்கு கொல்லப்பட்டார். இதனையடுத்து அரசினால் அவசரகாலச்சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டு, எதிர்க்கட்சியினருக்கு எதிரான பழிவாங்கல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதனால் இனவாத உணர்வுகள் கிளர்ந்து எழுந்தன. 1966 மே தினத்தின் போது ஊர்வலத்தில் பங்குபற்றிய கம்யூனிஸ்ட் கட்சியினதும், லங்கா சமசமாஜக் கட்சியினதும் தொழிலாளர்கள் இனவாதக் கூச்சலிட்டனர்.

மேலே குறிப்பிட்ட நிகழ்வுகள் யாவும் 1968ம் ஆண்டில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி, லங்கா சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றிடையே ஐக்கிய முன்னணி (United Front) என்ற கூட்டணியை உருவாக்க வழிகோலின. இம்முன்னணி ஒரு பொதுவேலைத்திட்டத்தை முன்வைத்தது. அவ்வேலைத்திட்டம் எதிர்காலத்தில் தாம் அமைக்கப்போகும் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தினால் செயற்படுத்தப்படவுள்ள செயல்திட்டங்களைப் பற்றிய உறுதியுரையாக அமைந்தது. 1970ம் ஆண்டுத் தேர்தலில் ஐக்கிய முன்னணி பெரு வெற்றியை ஈட்டியது. இவ்வெற்றியின் பயனாக இடதுசாரிக் கட்சிகள் தமது பாராளுமன்ற ஆசனங்களின் எண்ணிக்கையை அதிகரித்துக் கொண்டன. லங்கா சமசமாஜக் கட்சிக்குப் பாராளுமன்றத்தில் 19 ஆசனங்களும், இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு 6 ஆசனங்களும் கிடைத்தன. லங்கா சமசமாஜக் கட்சிக்கு நிதி, பெருந்தோட்டத்துறை, போக்குவரத்து, ஆகிய மூன்று அமைச்சுப் பதவிகளும், கம்யூனிஸ்ட் கட்சிக்கு வீடமைப்பு அமைச்சு என்ற ஒரு பதவியும் வழங்கப்பட்டன. ஐக்கிய முன்னணி அரசில் லங்கா சமசமாஜக்கட்சி 1975 வரையும், கம்யூனிஸ்ட் கட்சி 1976 வரையும் இணைந்திருந்தன. இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் இணைந்திருந்த 5-6 ஆண்டுகாலம் இனப்பிரச்சினை தொடர்பாக இடதுசாரிக் கட்சிகள் இழைத்த தவறுகளைத் திருத்திக் கொள்வதற்கு உதவக்கூடிய காலமாக இருக்கவில்லை. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அரசாங்கத்தில் இடதுசாரிகள் இணைந்திருந்த காரணத்தினால் இனப்பிரச்சினை தொடர்பாகப் பல விட்டுக் கொடுப்புகளை இடதுசாரிகள் செய்தனர். 1972ம் ஆண்டின் குடியரசு அரசியல் யாப்பை கொல்வின் ஆர்.டி. சில்வா வரைந்தார். அவ் அரசியல் யாப்பு 'சிங்களம் மட்டும்' சட்டத்தை அரசியல் யாப்பின் அங்கமாக மாற்றியது. (பிரிவு 7ல் இலங்கையின் உத்தியோக மொழி சிங்களம் ஆக இருக்கும். (The Official Language of Srilanka shall be Srilanka) என்று குறிப்பிடப்பட்டது) அத்தோடு பௌத்த சமயத்திற்கு விசேட அந்தஸ்தினையும் அரசியல் யாப்பு வழங்கியது. பௌத்தத்திற்கு அரசியல் யாப்பு 'முதன்மையிடத்தை' வழங்கியமை 'சமயச்சார்பின்மை' என்ற கொள்கைக்கு எதிரான பேரடியாக விளங்கியது. 1972ன் அரசியல் யாப்பு பௌத்த சமயத்திற்கும், சிங்கள மொழிக்கும் விசேட சலுகையை வழங்கியமை முன்னைய அரசியல் யாப்பின் பிரிவு 29க்கு முரணானது. அப்பிரிவின் படி எந்தவொரு சமூகத்திற்கும் பிறசமூகங்களிற்கு வழங்கப்படாத சிறப்புச் சலுகைகளை வழங்குவதோ அல்லது பாதிப்புகளை ஏற்படுத்துவதோ தடைசெய்யப்பட்டிருந்தது. அரசியல் யாப்பின் படியான இன்னொரு வெளிப்படையான பாரபட்சமான ஏற்பாடு ஒன்றையும் குறிப்பிடலாம். அரசியல் யாப்பின்படியான சில அடிப்படை உரிமைகள் ஆட்களுக்கு (அல்லது நபர்களுக்கு) வழங்குவதற்குப் பதிலாக 'பிரஜைகளுக்கு' உரியது எனக்கூறப்பட்டது. (Certain Fundamental All rights only to 'Citizens' and not to 'Persons') இதன் மூலம் பிரஜைகள் அல்லாதவர்களான பெருந்தோட்டத் தொழிலாளர்களிற்கு சில அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டன. இப்பெருந்தோட்டத் தொழிலாளர்களே இலங்கையில் மிகவும் பாதுகாப்பற்ற ஒரு சமூகம் என்பதும் அவர்களுக்கு தேவையாக இருந்த பாதுகாப்பு மறுக்கப்பட்டமை அப்பட்டமான பாரபட்சமாகும்.

பெருந்தோட்டத் தொழிலாளர்கள் தொடர்பாக ஐக்கிய முன்னணி மேற்கொண்ட நடவடிக்கைகளும் திருப்தியற்றனவாகவே இருந்தன. 1972ம் ஆண்டில் உள்ளூர் முதலாளிகளின் பெருந்தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட்டன. பின்னர் 1975ல் அந்நிய தோட்டக் கம்பனிகளின் உடைமைகள் தேசிய மயமாக்கப்பட்டன. இவ்வாறு தேசியமயமாக்கப்பட்டபோது தோட்டத்தொழிலாளர்கள் பாதிப்புக்கு உள்ளாயினர். 1972ல் அமைக்கப்பட்ட காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் தொழிலாளர்களுக்கு பல்வகையான பாதிப்புக்களை உண்டாக்கின. அத்தோடு 1974ல் திடீர் எண்ணெய் விலை உயர்வால் ஏற்பட்ட பொருட்களின் விலை உயர்வு தோட்டங்களில் பஞ்சத்திற்கு ஒப்பான நிலையை ஏற்படுத்தியது.

இதற்குப் பிந்தைய காலப்பகுதியில் ஏற்பட்ட அசைவியக்கங்களையும் அவற்றின் தாக்கங்களையும் அடுத்த இதழில் பார்ப்போம்.



shanmugalingam@thaiveedu.com

**கோலங்கள்**

அரங்கேற்றம், கலைநிகழ்ச்சி, திருமணம், பூப்புனித நீராட்டு போன்ற வைபவங்களுக்கு கோலம் போட்டு அலங்கரிக்க, Floor Decoration for Arangetram Wedding and other Cultural Functions.

**Bhamini: 647 294 0736, 416 491 6057.**

# சொல்லியதை எழுத்தில் வைத்தார்

- த. சிவபாலு

முனைவர் செல்வம் ஸ்ரீதாஸ் அவர்கள், தமிழின் தொன்மையையும் அதன் வரலாற்றுப் பதிவுகளையும் சீராகக் கற்ற புலமையாளர். அனுபவம், ஆற்றல், தேடல் என்பனவற்றின் நிலைக்கழனாகத் தன்னை வரித்துக் கொண்டவர். தனது மனத்தில் ஆழப்பதிந்திருந்த எண்ணக்கருக் களுக்கு உருக்கொடுத்துள்ளார். எண்ணியதை எண்ணியவாறே எடுத்தியம்பும் ஆற்றலும் திண்மையும் கொண்டவர். மடமையை அகற்றி மனவெளுச்சி கொள்ளும் மனப்பக்குவம் கைவரப்பெற்றவர். தமிழ்மீது கொண்ட பேரார்வம் அவரைத் தமிழரின் எழுச்சிக்கான தடைக்கற்களை உடைத்தெறியவேண்டும் என்னும் மனத்திடத்தோடு செயற்பட வைத்துள்ளது. அதனால் அவர் நாடுகடந்த தமிழீழத்தின்




செயற்பாடுகளை வரவேற்று அதில் பங்குகொள்ளவும் முன்வந்தார். 'பண்பெனப்படுவது பாடறிந்தொழுகுதல்' எனும் தமிழர்தம் உயரிய சான்றாண்மையைத் தனது தாரகமந்திரமாக ஒழுகும் மனப்பக்குவம் கொண்டு அனைவரோடும் அன்பொழுகப் பழகும் மென்மைக் குணம் படைத்தவர். அனைத்து மக்களையும் சமத்துவமாகப் பார்க்கும் பாங்கினால் சமுதாயத்து ஏற்றத்தாழ்வுகளைச் சீர்தூக்கிப் பார்த்து அவற்றிற்கு நியாயம் கிடைக்கப் போராடும் ஒரு போராளி. தமிழ் இனத்தின் விடுதலை, தமிழ் எழுச்சி, பெண் விடுதலை என்பனவற்றை அடிநாதமாகக் கொண்டு செயற்படும் ஒரு வீராங்கனையாக அவரைக் காண்கின்றேன். தமிழை வளர்க்க வேண்டும் என்னும் நோக்கோடு அண்ணாமலைப் பல்கலைக்கழக வளாகத்தில் தன்னை நிலைப்படுத்தியதோடு, கலாநிதிப்பட்ட ஆய்வினையும் மேற்கொண்டு பட்டமும் பெற்ற ஒரு வியத்தகு குடும்பத்தலைவியாக அவர் விளங்குகின்றார். நம் அனைவருக்கும் ஒரு முன் உதாரணமாக அவர் வாழ்ந்து காட்டிவருகின்றார்.

தமிழே வாழ்வு என்னும் உணர்வோடு அவர் செயற்படுவதன் காரணமாகத்தான் அவர் தொல்காப்பிய மன்றத்தின் ஆலோசகர் குழுவில் இணைந்துகொண்டார். தொல்காப்பிய மன்றத்தில் நான் தலைவராக இருந்தபோதும் பின்னரும் அவரது ஒத்துழைப்பும் ஆலோசனைகளும் தொல்காப்பிய மன்றத்தின் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல உந்து சக்திகளாக விளங்கின என்பதனை மறுப்பதற்கில்லை. மாதாந்தம் மேற்கொள்ளப்பட்ட தொல்காப்பிய மன்ற சொற்பொழிவுகள், கருத்தரங்கங்களை வழி நடத்த ஆலோசனைகள் தந்ததோடு தானும் அக்கருந்தரங்குகளில் தவறாது பங்குகொண்டு ஊக்கம் கொடுத்தார். எமக்கு மாதாமாதம் கருத்தரங்கம் இடம்பெறவும் கூட்டங்களை நடத்தவும் இலவசமாகவே இடத்தைத் தந்துதவினார். மாணவர்களுக்கான போட்டிப் பரீட்சைக்காக பதிவுசெய்யப்பட்ட நகர மண்டபம் திடீரென இரத்துச்செய்யப்பட்ட போது நாம் செய்வதறியாது மனம் வேதனையில் ஆழ்ந்து, நிகழ்வை பின்போடுவோமா எனக் கலந்தாலோசித்தபோது அண்ணாமலைப் பல்கலைக்கழக வளாகம் உங்களுக்காக உள்ளது என எமக்கு ஆறுதல்கூறி, அவ்விடத்தில் போட்டி நிகழ்வுகள் நடைபெற தன்னாலான ஒத்துழைப்பை நல்கியமை இன்றும் எனது உள்ளத்தில் அவரது உயரிய பண்பைப் பதியவைத்து வியக்க வைக்கின்றது. தமிழ் மொழியை இளம் மாணாக்கருக்கு இலவசமாக நல்கவேண்டும் என அதற்கான முன்னெடுப்புக்களையும் மேற்கொண்டு அங்கு தமிழ் வகுப்புக்களை ஆரம்பித்து தொண்டர்களை வைத்து நடத்தித் தமிழை வளர்க்க அரும்பாடுபட்டதோடு மட்டுமல்லாது நவீன தொழில் நுட்பங்களையும், கற்பித்தல் முறைகளையும் கண்டறிந்து அவற்றைப் பயன்படுத்தவும் அவர் அனைத்து முயற்சிகளையும் செய்துதந்தார்.

சமூகத்தில் பெண்களின் நிலைமை என்ன என்பது பற்றித் தனது சிந்தனா ஓட்டத்தை செலுத்தி, இன்றுள்ள பெண்களோடு பண்டைக்காலத்தல் வாழ்ந்த பெண்கள் எவ்வித நிலையில் இருந்துள்ளனர் என்பதனை, தொல்காப்பியச் சான்றுகளோடும் சங்க இலக்கியப் புதையல்களோடும் இன்றைய நடைமுறைகளோடும் ஒப்பிட்டு, தனது ஆழ்ந்த அனுபவத்தின் அடிப்படையில் ஆய்ந்து நல்லதோர் பனுவலாகத் தந்துள்ளார். கனடாவில் தொல்காப்பிய மன்றம் ஆரம்பித்ததில் இருந்து இன்றுவரை அதன் செயற்பாடுகளில் மிகுந்த அக்கறையும் ஈடுபாடும் செலுத்திவருபவர். தொல்காப்பிய மன்றத்தின் வெளியீடுகளில் அவரது கட்டுரைகள் அவ்விதழ்களுக்கு மெருகூட்டுவனவாக அமைந்துள்ளன. 'தொல்காப்பியத்தில் நடனம்', 'தொல்காப்பியரது கடவுட் கொள்கை' போன்ற

கட்டுரைகள் அவரது அகண்டபார்வையை எடுத்துக்காட்டுகின்றன. தெளிந்த பார்வையை அவரது எழுத்துக்களில் காணமுடிகின்றது. தமிழகத்தில் இடம்பெற்றுவரும் அண்மைகால ஆய்வுகள்மீது தனது கூரிய பார்வையை அவர் வைக்கத் தவறவில்லை. கீழடி ஆய்வு மையம் போன்றவற்றிற்கு நேரடியாகச் சென்று அவைபற்றி அறிந்துள்ளமை அவரது ஆர்வத்தையும் ஆய்வின் ஆழத்தையும் புடம்போட்டுக் காட்டுகின்றன

தமிழ்மீது தீராத காதல் கொண்டவர் என்பதற்கு அவர் தந்துள்ள செல்வம்தான் 'தொல்காப்பியப் பொருளதிகாரமும் சங்க இலக்கியங்களும் காட்டும் பெண்களின் சமூகநிலை' என்னும் பனுவல், காலத்தின் தேவைகருதி எழுதப்பட்ட ஓர் அற்புதப்படைப்பு. பெண் விடுதலைபற்றி பாரதிக்கு முன்பே கால்கோள்களிடப்பட்டுள்ளமையை வெளிச்சம் போட்டுக்காட்டும் அரியதொரு படைப்பு இது என்று துணிந்து பேசவைக்கின்றது அவரது இவ்வாய்வு. வலாற்றுக் கண்ணோட்டத்தில் சிந்தித்து அதற்குச் செயல் வடிவம் கொடுக்கப் பட்டதே அவரது ஆய்வு நூல்.

***தாம் இன்புறுவது உலகின்புறக் கண்டு***
***காமுறுவர் கற்றறிந்தார்***

- குறள்: 399

என்பதற்கு அமைய, தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என தான் அனுபவித்தவற்றை மற்றவர்களும் அறிந்துகொள்ள வேண்டும் என்னும் நோக்கில் இந்த நூலை ஆக்கித்தந்துள்ளார்.

சங்க காலத்தில் நிலவிய சமுதாய அமைப்பையும் அச்சமுதாயத்தில் வாழ்ந்த பெண்களின் நிலைமையையும் முனைவர் செல்வம் ஸ்ரீதாஸ் அவர்கள் புடம்போட்டுக் காட்டியுள்ளார். அவரது ஆய்வின் சிறப்பிற்கும் அவரது நுண்மான் நுமைபுலத்திற்கும் கட்டியம் கூறி நிற்கின்றது அவரது ஆய்வுப் பனுவல்.

***கட்கினியாள், காதலன் காதல் வகைபுனைவாள்,***
***உட்குடையாள், ஊர்நாண் இயல்பினாள் - உட்கி***
***இடனறிந்து ஊடி இனிதின் உணரும்***
***மடமொழி மாதராள் பெண்***

- நாலடியார் - 384

தொல்காப்பியர் ஆணாதிக்கச் சமுதாயத்தைச் சார்ந்தவர் என்பது சிலரின் கருத்தாக உள்ளது. அக்காலச் சமுதாயத்தில் தோன்றிய ஆண், பெண்ணுக்கு இடையே ஏற்படும் காதலைக் கூறுகிறார். இல்லறத்தில் கணவன் மனைவியாக நுழையப்போகும் களவியல், காதலன் காதலிக்குத் தேவையான பத்து ஆளுமைப் பண்புகளைக் குறிப்பிட்டு களவு கற்பு இருகாலத்திலும் உணர்ச்சிவழிக் காதலை அறிவுவழி செலுத்தினால் நல்ல இல்லறத் தலைவர்களாக முடியும் என்கின்றார். பொதுவான ஆளுமைப் பண்புகளைக் குறிப்பிட்டு, இருவருக்கும் தேவையான தனிச்சிறப்பு ஆளுமைப் பண்புகளையும் குறிப்பிட்டு, பெண்ணுக்கு தேவையான கூடுதல் பொறுப்புகளையும் சுட்டிக்காட்டுகிறார். அவர் குறிப்பிட்ட குணநலன்களை உடைய ஆணும், பெண்ணும் வீட்டுக்கும் நாட்டுக்கும் தேவை என்னும் தன் விருப்பத்தை களவியல், கற்பியல் என்பன தலைவனுக்கும் தலைவிக்கும் இடையே, அதாவது ஆண், பெண் இருபாலாரையும் முதனிலைப்படுத்திக் குறிப்பிடுகின்றார். இப்பண்புகளை உடையோரின் காதல் வாழ்க்கை சிறக்கும் என்பது தொல்காப்பியரின் கருத்து. இக்கருத்துகளை இந்நூலாசிரியர் தந்திருப்பது தமிழ் உலகிற்கு ஒரு வரப்பிரசாதமே!

கனடாவில் இடம்பெற்ற நூல்வெளியீட்டு நிகழ்வை சற்று பார்க்க வேண்டிய கடப்பாடும் ஆதங்கமும் வாசகர்களின் மனதில் எழும் என்பதனால் இவற்றை இங்கு தருவது பொருத்தப்பாடுடையது என்பது எனது சித்தம்.

## நூல் வெளியீடு:

கடந்த ஜூன் 12, 2022 மாலை 5.00 மணிக்கு ஸ்காபுரோ தமிழ் இசைக்கலாமன்ற மண்டபத்தில் முனைவர் பட்டத்திற்காக மேற்கொண்ட ஆய்வு நூலான 'தொல்காப்பியப் பொருளதிகாரமும் சங்க இலக்கியங்களும் காட்டும் பெண்களின் சமூகநிலை' என்னும் நூல் வெளியீடு செய்யப்பட்டது. இந்த விழாவினை ஒருங்கிணைப்பாளர்களாக தொல்காப்பிய மன்றத்தைச் சார்ந்த வி. சுகந்தன், வாசுகி நகுலராஜா ஆகிய இருவரும் தொகுத்து வழங்கினர். தமிழர் சால்புக்கேற்ப மங்களவிளக்கை திருமதிகள் விமலா பாலசுந்தரம், யோகா அருள்சுப்பிரமணியம் ஆகியோர் ஏற்றிவைக்க எலிசபெத் மாலினியும் இளங்குமரனும் கனடா தேசியகீதத்தையும் தமிழ்த்தாய் வாழ்த்தையும் இசைத்ததோடு ஆரம்பமானது.

இந்நிகழ்வில் நூல்பற்றியும் நூலாசிரியர் பற்றியுமான நீண்டதொரு விபரணத்தை அறிவிப்பாளர் வாசுகி நகுலராசா நல்கினார். அவரைத் தொடர்ந்து பல்மருத்துவரும் மன்றத்தின் உறுப்பினருமான டாக்டர் மேரிக்குயுரி போல் அவர்கள் வரவேற்புரையை மிகக் கனகச்சிதமாக நிகழ்த்தியதைத் தொடர்ந்து. பேராசிரியர் இ. பாலசுந்




-தரத்தின் வாழ்த்துரை இடம்பெற்றது. எல்லாளன் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த அனுரதபுர நகரத்தில் பிறந்து ஆரம்பக் கல்வியை அங்கு கற்று பின்னர் இராமநாதன் கல்லூரியில் பயின்று பல்கலைக்கழகம் புகுந்தார். பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழியை சிறப்புப்பாடமாக கற்றுவந்தார். பேராசிரியர்கள் சோ. செல்வநாயகம், சு. வித்தியானந்தன், தனஞ்சயராஜசிங்கம், பூலோகசிங்கம், தில்லைநாதன், க. கைலாசபதி, சதாசிவம், சண்முகதாஸ் போன்ற தமிழ் ஆளுமைகளிடம் தமிழையும் சி. பத்மநாதனிடம் வரலாற்றையும் கற்றுக்கொண்டவர்.

தொடர்ந்து இந்தியாவிலிருந்து பேராசாரியர் பழ. முத்து வீரப்பன் அவர்களின் வாழ்த்து காணொளி மூலம் இடம்பெற்றது. இந்த ஆய்வுபற்றிய சிறப்புக்களை அவர் எடுத்துரைத்ததோடு முதிர்ந்த அனுபவ ஆற்றலோடு அவர் மேற்கொண்டுள்ள பல்வேறு கூறுகளையும் அவர் சிலாகித்துச் சிறப்பித்து உரையாற்றியிருந்தார்.

தொடர்ந்து இலங்கைப்பல்கலைக்கழ முன்னாள் பேராசிரியர் தில்லைநாதன் அவர்களின் வாழ்த்துரை காணொளி வாயிலாகக் காட்சிப்படுத்தப்பட்டது. இலங்கைப் பல்கலைக்கழகத்தில் அவர்

படித்த காலத்தை நினைவுகூர்ந்து இந்த ஆய்வுபற்றிய முக்கியத் துவத்தையும் சிறப்பித்துக் கருத்து வெளியிட்டு பாராட்டினார்.

கனடாத் தமிழ்ச்சங்கத் தலைவரும் தமிழார்வலருமான திரு. எஸ்.-இராஜரட்ணம், ரொறன்ரோ பல்கலைக்கழக தமிழ் இருக்கைக்கான குழுவைச் சேர்ந்து கணக்காளர் சிவன் இளங்கோ, கணக்காளர் புருசோத்மன், நாடுகடந்த தமிழீழ உறுப்பினர் நிமல் விநாயக-மூர்த்தி, மற்றும் யோக் கல்விச்சபை உறுப்பினர் ஜொனிற்றா-நாதன் ஆகியோர் வாழ்த்துரை நல்கினர். இதனைத் தொடர்ந்து டாக்டர் ஜானகிராமன் அவர்களின் வாழ்த்துச் செய்தி காணொளி வாயிலாக ஒளிபரப்பட்பட்டது.

தொடர்ந்து இடம்பெற்ற நூல் பற்றிய நிறைவுரையினை பேராசிரி யர் வண.பிதா. சந்திரகாந்தன் அடிகளார் நல்கினார். அவர் வீர சோழியத்தை முன்னிறுத்தி தொல்காப்பியத்தின் முக்கியத்துவம் ஏனைய மொழி இலக்கியங்களில் இருந்து எவ்விதம் வேறுபடுகின் றது என்பதனைக் குறிப்பிட்டு இந்த நூல் பல்கலைக்கழக முனை வர் பட்டத்திற்கான இரு பேராசிரியர்களால் ஆலோசனை நல்கப் பட்டு அதன்வண்ணம் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வு நூல், இதனை ஆய்வு செய்வது பொரத்தமற்றது. இதன் சிறப்புக்களை யும் இந்த நூலில் உள்ளவற்றையும் பற்றிக் குறிப்பிட்டுக்காட்டு வதோ பொருத்தமென குறிப்பிட்டு. அந்த நூலின் முக்கயத்துவம் அதன் அமைப்பற்றி உரையாற்றினார்.

அதனைத் தொடர்ந்து முனைவர் மைதிலி தயாநிதி அவர்கள் நூலைப் பற்றிய தனது கருத்துக்களை முன்வைத்து உரையாற்றி னார். சங்ககாலத்தில் நிலவி சமூதாய அமைப்பை நூல் தெளிவு படுத்துகின்றமையோடு அக்காலப் பெண்களின் நிலையையும் அவர்கள் எவ்விதம் வாழ்ந்தார்கள் அவர்களின் சமூநிலைபற்றி நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளவைபற்றி எடுத்துரைத்து பரத்தமை ஒழுக்கத்தை அக்காலப் பெண்கள் ஏற்றுக்கொண்டுள்ளமை சமுதா யத்தின் சீரமைப்பாக உள்ளதா? என்னும் ஐயத்தையும் முன் வைத்து உரையாற்றினார்.

தொடர்ந்து உரையாற்றிய சமூக சேவையாளரான செல்வி ராஜினி தாசீசியஸ் அவர்கள் தற்கால பெண்களின் நிலைமையையும் அவர்கள் சமூகத்தில் எதிர்கொளும் சவால்களையும் ஒப்புநோக்கி இன்றும் பெண்ணடிமைத்தனம் நிலவுவதனைப் பலமட்டங்களிலும் காணமுடிகின்றது. ஆணாதிக்கச் சமுதாயத்தில் பெண்களுக்கு போதிய உரிமையோ சமத்துவமோ கிடைத்திருக்குமா என்ற சங் தேகத்தையும் எழுப்பி உரையாற்றினார்.

நூலாளர் முனைவர் செல்வம் ஸ்ரீதாஸ் அவர்கள் ஏற்புரையை இரத்தினச்சுருக்கமாக, தனது ஆய்வுப் பணிபற்றி குறிப்பிட்டதைத் தொடர்ந்து, அவரது புதல்வி ஆனந்தி சசிதரன் அவர்கள் நன்றி யுரை நிகழ்த்தினார்.

தொடர்ந்து தொல்காப்பிய மன்ற உறுப்பினர் த. சிவபாலு நூலாசி ரியரின் சிறப்புக்களைக் குறிப்பிட்டதோடு நூலை வெளியீடு செய் துவைத்து நூலாசிரியையின் துணைவர் திரு. சிவசம்பு சிவதாஸ் அவர்களுக்கு முதலாவது பிரதியை வழங்கிவைத்தைத் தொடர்ந்து நூல் வழங்கப்பட்டதோடு ஆசிரியையின் மாணவர்கள், அன்பர்கள் பாராட்டுகளை கவிதைகளிலும் உரைகளிலும் கேடயங்களாகவும் வெளிப்படுத்தினர்.

'பேராளுமை' என்னும் நூல் முனைவர் திருமதி செல்வநாயகி-ஸ்ரீதாஸ் அவர்கள் பற்றிய, 154 பக்கங்களைக் கொண்டு தொகுப்பு நூல் பல்வேறுபட்டவர்களின் கருத்துக்களையும் ஆளுமையையும் வெளிப்படுத்தும் வரலாற்றுப் பதிவாக அன்னாரின் மாணவி திரு மதி கலா அவர்களால் வெளியீடு செய்துவைக்கப்பட்டது. இந் நூல் அனைவருக்கும் இலவசமான மாணவர்களினால் வழங்கப்பட் டமை சிறப்பிடம் பெற்றது.



sivapalu@thaiveedu.com


கவிதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா

தமிழ் நாடு நல்லழகம்மை செல்லப்பன் அறக்கட்டளை, திருவள்ளுவர் இலக்கிய மன்றம் இணைந்து நடத்திய மரபுக் கவிதை நூல் போட்டியில் (2021) முதற் பரிசு பெற்ற,

மாவிலி மைந்தன் சி. சண்முகராஜாவின்

'மனவெளி மேகங்கள்'

நூல் வெளியீட்டு விழா




சனிக்கிழமை, ஆகஸ்டு (August) 06, 2022
மாலை 5:00 மணி
தமிழிசைக் கலா மன்றம்
Unit # 3, 1120 Tapscott Road
Scarborough, M1X 1E8



விழாவுக்கு வருகை தந்து சிறப்பிக்குமாறு
தங்களை அன்புடன் அழைக்கிறோம்.

வெளியீட்டு உதவி: கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம்.

maavilimainthan@gmail.com 416 939 9171 / 905 201 7592

# சொல்லப்படாத கதைகள் சொல்லித் தீர்ந்தபொழுது

ஜூன் 18, 2022 சனிக்கிழமை ஸ்கார்பரோவில் ஆனந்தப்ரசாத்தின், 'சொல்லப்படாத கதைகள்' வெளியீட்டு விழாவும், 'வாழும் தமிழ்' புத்தகக் கண்காட்சியும் சிறப்பாக நடைபெற்றன.

முக்கிய இலக்கிய வாசகர்களும் ஆளுமைகளும் பங்குபற்றினர்.

சேரன் உருத்திரமூர்த்தி நூலை வெளியிட்டு வைக்க, த. சிவதாசன், மேரி கியூறி போல், காலம் செல்வம், பா.அ. ஜயகரன் ஆகியோர் உரையாற்றினார்கள்.

இவர்களுள், ஜயகரன், சிவதாசன், சேரன், செல்வம் ஆகியோர் ஆனந்தப்ரசாத்தின் நண்பர்கள். அவர்கள் நூலுக்கு உள்ளேயும் வெளியேயும் நின்று பேசினார்கள்.

ஆனந்தப்ரசாத்தின் இசைத் திறமையும் நட்பும் அவர்களுக்கு முக்கியம். சொல்லப்படாத கதையில் இருக்கும் வாழ்வை இதற்கூடாகத்தான் அவர்கள் பார்த்தார்கள் அவர்கள் உரைகள் மிகச் சுவாரசியமாகவும் நுட்பமாகவும் அமைந்தன.

மேரி கியூரிக்கு ஆனந்தப்ரசாத் புதியவர். அவர் இந்தப் புத்தகத்தின் மூலமாகத்தான் அவரை அறிந்திருந்தார்.

அத்தியாயம் அத்தியாயமாகத் திரும்ப திரும்பப் படித்து ஆக்க பூர்வமாகத் தன் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார். தமிழில் மிக முக்கிய நூல் எனப் பாராட்டினார். அவர் கருத்துக்கள் முக்கியமானவை தாம் என அதைப் படிக்கும் போது வாசகர்கள் உணரலாம்.

இனவெறித்தாக்குதலிலிருந்து தப்புவதற்கும், பொருளாதாரத்தில் முன்னேறுவதற்கும் கப்பலில் வேலைக்குப் போவது ஈழத்தமிழ் இளைஞர்களுக்கு ஒரு வழியாக இருந்தது. எல்லோருக்கும் இந்தச் சந்தர்ப்பங்கள் கிடைப்பதில்லை. அது இலகுவானது அல்ல, அப்படிக் கிடைத்த அந்த வாழ்வும் இலகுவானதல்ல. கரைதெரியாக் கடலில் தத்தளிக்கும் வாழ்வு. 'எப்படா கரை வரும்!' எனக் கனவுகளில் கரையும் நாட்களை பிரசாத் கவி கொண்ட மொழியில் எழுதியிருக்கிறார்.

கரையில் இருந்து கடலைப் பார்த்து வண்ண நிலவன் இரண்டொரு நாவல்கள் எழுதியிருக்கிறார். கடலில் இருந்து கரையைப் பார்த்து ஜோ.டி. குருஸ், இரண்டு நாவல்கள் எழுதியிருக்கிறார். இரண்டு நாவல்களும், தமிழ் இலக்கிய நாவல் வரிசையில் முக்கியமானவை.

வர்த்தகக் கப்பல்களில் வேலை செய்யும் அனுபவத்தை நரசையா, 'கடலோடிகள்' என்ற தலைப்பில் ஆனந்தவிகடனில் எழுதினார்.

அதன் பின் தேவகாந்தன், 'கலாபன் கதை' என்ற பெயரில் தாய்வீடு பத்திரிகையில் மிகச் சுவாரசியமாகத் தன் கப்பல் கதையை எழுதி, பின்னர் நூலாகவும் வெளியிட்டார்.




இப்போது ஆனந்தப்ரசாத், தாய்வீடு பத்திரிகையில் தொடராக எழுதிய தன் கப்பல் அனுபவங்களை நூலாக வெளியிட்டிருக்கிறார்.

இவர் ஓர் அற்புதமான இசைக் கலைஞன். அடிப்படையில் ஒரு கவிஞன். இவர் பார்வைகள் சற்று வித்தியாசமானவை. டி.சே.

தமிழன் எழுதிய விமர்சனத்தில் சொல்லியது போல், 'இந்நூல் ஒரு புதிய திசையை நமக்குத் திறக்கிறது. இதை எழுதிச் செல்கின்ற ஆனந்தப்ரசாத் தன்னை முழுமையாக எழுத்துக்குக் கொடுத்தி ருக்கிறார்.'

சொல்லப்படாத கதைகளைத் தொடராக வெளியிட்ட தாய்வீடு இல்லாவிட்டால் இப்புத்தகம் சாத்தியமல்ல, 'காலச்சுவடு' கண்ணன் புத்தகத்தின் முக்கியம் கருதி 2019-ஆம் ஆண்டு இதனை வெளியிட்டார். அவருக்கும் பாராட்டுகள்.

நிறைவில், ஆனந்தப்ரசாத் தன் இனிமை பொங்கும் குரலில் மூன்று பாடல்கள் பாடி நிகழ்வுக்கு வந்தவர்களைக் கலங்க வைத்தார். வந்தவர்கள் எல்லோரும் ஓவியர் கருணாவையும் கவிஞர் செழியனையும் இப்பாடல்கள் மூலம் நினைவு கூர்ந்து பழைய நினைவுகளில் மூழ்கினார்கள்.



















படம்: கிருபா கந்தையா

# ஒரு மருத்துவரின் மருத்துவமனை நாட்கள்

- செ. யோகராசா

இலங்கைத் தமிழ்ச்சூழலில் கல்வி, மருத்துவம், சட்டம், பொறியியல், ஊடகம் முதலான தொழிற்துறை சார்ந்த ஆக்க இலக்கியப் படைப்பாளர்கள் பலரிருப் பினும் தத்தமது தொழில்சார் அனுபவங்களை தமது கவிதை, சிறுகதை, நாவல் ஊடாக வெளிப்படுத்தி, நூல் வடிவில் வெளி யிடுபவர்கள் அரிதாகவே காணப்படுகின்றனர். அவ்வாறு எழுதுவ தன் முக்கியத்துவத்தை உணராமை. முன்னோடிப் படைப்புக-ளின்மை, உலக இலக்கிய வாசிப்பின்மை, வேலைப்பளு முதலா




னவை அதற்கு காரணமாதல் கூடும்.

மருத்துவத்துறைக்கும் இது பொருந்துவதே. கதை வடிவத்தில் (சிறுகதை வடிவத்திலன்று) மருத்துவக்கலாநிதிகள் எம்.கே. முரு-கானந்தன், நடேசன் ஆகியோர் எழுதியிருக்கின்றனர்.

கவிதைத் துறையைப் பொறுத்தவரையில் நவீன பாரம்பரிய மருத் துவம் சார்ந்த மருத்துவர்கள் சிவதாசன் ஆகர்ஷியா, மலரா, தாஸிம் அகமட், ஆஷாத் ஹனீபா, வாமதேவன், நஸிபுடீன், காலித், ஜின்னா முதலான பலர் கவிதைத் தொகுப்புகள் வெளி யிட்ட கவிஞர்களாவிருப்பினும் தமது துறைசார் அனுபவங்களை மட்டும் கொண்ட தனிக்கவிதைத் தொகுப்புகள் எவற்றையும் இன் றுவரை வெளியிட்டாரல்லர். இத்தகைய ஆரோக்கியமற்ற இலக் கியச் சூழலில் விதிவிலக்காக, புதிய தலைமுறையை சார்ந்த மருத்துவக் கலாநிதி இரா. முரளீஸ்வரன் முன்னோடி முயற்சியாக இக்கவிதைத் தொகுப்பினை வெளியிட்டு இலங்கை நவீன கவி தைத்துறை வளர்ச்சிக்கு காத்திரமான பங்களிப்பைச் செய்திருப் பது முக்கிய கவனிப்பிற்குரியது. பாராட்டுக்குரியது!

பட்டறிவு சார்ந்தும் கேள்வி ஞானத்தினூடாகவும் இக்கவிஞர் தான் பெற்ற அனுபவங்களை சமூக நோக்கு, உளவியல் நோக்கு, யதார்த்தப்பாங்கு, விமர்சனப் பார்வை, கற்பனைத்திறன் என்பன இழையோடிவர, பன்முகப் பார்வைகளோடு வெளிப்படுத்தியிருப் பது இத்தொகுப்புக் கவிதைகளின் சிறப்பியல்புகளுடன் முதலில் எடுத்துரைக்கப்பட வேண்டியதாகின்றது.

முதலில் நோயாளிகள் இக்கவிஞருக்கு தருகின்ற அனுபவங்கள் பற்றி நோக்குவோம். இவ்வாறான நோயாளிகளுள் சிலர் மறக்க முடியாதவர்கள். அத்தகையவர்களுளொருவன் சுண்டு அவன் எமக்கு வழங்கும் செய்தி முக்கியமானது.

*'குருதி ஏற்றி*
*விடுவிக்கும் நாள்வரை*
*அவன்*
*நோயாளியாய் இருப்பது குறைவு.*
*ஊழியனாய் மாறி*
*உதவுதல் அதிகம்.*

*கிடைத்த வாழ்வில்*
*கிடைக்காதவற்றுக்கு பலர் ஏங்க,*
*அவன்*
*கிடைத்த வாழ்வில்*
*கிடைத்த சந்தோசங்களை*
*அனுபவிக்கப்பழகினான்.*

*நோயின் தீர்வுக்கு*
*காத்துக் கிடக்காமல்*
*வாழ்ந்து கிடக்கலாம்*
*என்று*
*புரிந்தவன் அவன்'*

புதிதாக அனுமதிக்கப்படுகின்ற நோயாளிகள் எத்தகைய மனநி லையில் வருகின்றார்கள்? எவ்வாறு நடந்து கொள்கின்றார்கள்? எத்தகைய மனநிலையோடு வெளியேறுகின்றார்கள்? வெளியேறிய பின்னர் அவர்களது வாழ்க்கை எவ்வாறு கழிகின்றது? என்பன பற்றி வெளிப்படுத்துகின்ற கவிதைகளும் பலவுள்ளன. இவ்விதத் தில் 'விடுதி நாட்கள் ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு', 'மீள் பிறப் பின் ஆனந்தம்', 'சத்திரசிகிச்சை தழும்பு' 'ஒரு நோயுற்றவரின் கடி

தம்' என்பன கவனத்திற்குரியனவாகும்.

மருத்துவமனையுடன் - மருத்துவத்துடன் - தொடர்புபட்ட விடயங்கள் சிலவும் பேசுபொருள்களாகியுள்ளன. இவற்றுள் முக்கியமானதொன்று, மருத்துவமனை பற்றிய சமூகத்தின் பார்வை பற்றியது. இவ்விதத்திலான 'மரண வீடுகளில் கொல்லப்படும் மருத்துவமனைகள்' என்ற கவிதை பின்வருகின்றது:

*'அழுகை முடிந்த பின்னர்*
*சில உறவுகள்*
*அடுத்தது பற்றி ஆராயும்*
*சில உறவுகள்*
*நடந்தது பற்றி ஆராயும்*
*மரணத்தின் காரணம் கேட்கும்*
*மருத்துவமனை தரத்தை கேட்கும்*
*மருத்துவர் திறமை கேட்கும்*
*தாதியர் கவனிப்பு கேட்கும்*

*உண்மை பாதியும் பொய்மை பாதியும்*
*உறவுகள் கதைகளில் ஒன்றாய் வளரும்.*

*பாக்கு வெற்றிலை போட்டு*
*சிவந்த உதடுகளில்*
*சிகிச்சை முறைகளை*
*மென்று துப்பும்.*

*மருத்துவமனைக்கே பிரேதபரிசோதனை*
*மரணவீட்டில் நடந்து முடியும்.*

*கடைசி வரைக்கும் உயிரை மீட்க*
*போரிட்ட உண்மைகள்*
*மூச்சின்றி மடியும்'*

இவ்வாறே மருத்துவமனை, மருத்துவர் சார்ந்த விடயங்களும் கவனத்திற்குரியனவாகும். எடுத்துக்காட்டு: 'ஆம்புலன்ஸ்', 'ஸ்டெதஸ்கோப்', 'யாரொடும் பகைகொளாது', 'கடவுளாய் மாறுதல்', 'நோயுற்றவரின் கடிதம்.'



மருத்துவ உலகம் எதிர்நோக்கும் சவால்களுள் பலவும் எங்களால் அறிய முடியாதனவாகும். இவ்விதத்தில் 'மருத்துவமனை யுத்தங்கள்', 'மந்திரக் கோல் தேடும் மருத்துவம்' என்பன குறிப்பிடத்தக்கவை!

இறுதியாகக் குறிப்பிட்ட கவிதையின் சில பகுதிகள்:

*'இடை நடுவில்,*

*மனம் நடுங்கும் நோய்க்காடுகளில்*
*முடிந்தளவு போராடும் மருத்துவம்.*

*சில போர்களில் உயிர்கள் பிரிய*
*ஏங்கித் தவிப்போருக்கு*
*எப்படிச் சொல்வது?*

*மருத்துவர்களிடம்*
*மருத்துவம் உண்டு.*
*மந்திரக் கோல்*
*இல்லை என்பதை!'*

மரணம் சார்ந்த விடயங்கள் பற்றிய கவிதைகள் கவலையையும், சிந்தனைத் தூண்டலையும் ஏற்படுத்துவனவாகவுள்ளன. இவற்றுள் 'இறப்பு உறுதியான மருத்துவமனைக்கணங்களில்', 'மரண அறிவித்தலில் வந்தவர்கள்', 'கடல், நிலா, மலர் - கல்லறைத் தோட்டம்', 'இங்கே தீ எரிகிறது' என்பன ஒரு வகையின. இவ்வகைக் கவிதைகள் கற்பனை சார்ந்தவை என்றாலும் ஆக்கபூர்வமான கற்பனையாக வெளிப்பட்டு எமது சிந்தனையைத் தூண்டுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இத்தொகுப்பிலுள்ளவற்றில் அவசியமாக வாசிக்கப்படவேண்டிய கவிதைகளுள் இவை முதன்மை இடத்தைப் பெறுகின்றன என்று கூடக் கூறலாம். இவற்றுள் எனக்கு நன்கு பிடித்த - உங்களுக்கும் பிடிக்கக்கூடிய - இங்கே தீ எரிகின்றது என்ற கவிதையை மட்டும் முழுமையாக இவ்விடத்தில் தருகின்றேன்.

*'இங்கே நோயுற்ற என் மனத்தீ எரிகிறது*
*உன் வீட்டில் நீ*
*யோசித்துக் கொண்டிருகின்றாய்.*

*ஏன் வாசல்படி வரை*
*வந்து பார்த்திருந்தால்*
*நீ மனிதராயிருப்பாய்.*

*நீ இதை அணைக்கவந்திருந்தால்*
*மகாத்மாவாயிருப்பாய்.*

*அணைத்துவிட்டு*
*என்னை ஆறுதல்படுத்தியிருந்தால்*
*என்*
*கடவுளாயிருப்பாய்.*

*ஆனாலும்...*
*இங்கே தீ எரிகையிலும்*
*நீ சிந்தித்துக் கொண்டிருக்கின்றாய்.*
*வருவதைப்பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கின்றாய்.*

*நானும் சிந்திக்கத் தொடங்கினேன்*
*நான் விட்ட பிழைகள் பற்றி,*
*அத்தோடு*
*நீ*
*நண்பனா என்பது பற்றி'*

மேலுள்ள கவிதை மனிதம் என்ற வார்த்தையை இழந்துவிட்ட இன்றைய யுகத்து மனிதர்களுக்கு 'மரண அடி' தருவதாகக் காணப்படுகின்றது என்று கூறத்தோன்றுகிறது!

இந்த இளம் மருத்துவக் கவிஞரின் நேரடி அனுபவ வெளிப்பாடுகளாக இடம்பெற்றுள்ள கவிதைகளும் முக்கியமான கவனிப்பிற்குரியனவாகின்றன என்பதில் ஐயமில்லை. இவ்வகைக் கவிதைகளுள் முதலில் குறிப்பிடத்தக்கது கவிஞர் தனது மன ஆதங்கத்தினை வெளிப்படுத்தும் பின்வரும் கவிதை:

**வார்த்தைகளும் நேரங்களும் போதாமல்...!**

*'ஒரு நோயின் தீவிரம் சொல்ல*
*ஒரு வலிக்கு ஆறுதல் சொல்ல*
*பல தருணங்களில்*
*வார்த்தைகள் கிடைப்பதில்லை.*
*பல தருணங்களில்*
*நேரங்களும் கிடைப்பதில்லை.*

*சில வார்த்தைகள்*
*சொல்லப்படாமல் வாழ்க்கை முடிந்துவிடுகின்றது.*
*சில வார்த்தைகள்*
*கேட்கப்படாமல் வாழ்க்கை முடிந்துவிடுகின்றது.*

*இன்னும் அதிகளவு வார்த்தைகளால்*
*ஆறுதல் கூறியிருக்கலாம்*

*இன்னும் அதிகளவு நேரம்*
*ஆராய்ந்திருக்கலாம்*
*என்று ஆசைப்படும் மனம்*
*நிராசையாக்கும் காலம்.'*

'மரணங்கள் பழகிய மருத்துவம்' என்ற மற்றொரு கவிதையூடாக கவிஞர் முக்கியமானதொரு செய்தியையும் எமக்குத் தருகின்றார்:

*'... ...... .....*

*சுனாமிக்கு பழகிவிடுகிறது ஜப்பான்*
*சூறாவளிக்கு பழகிவிடுகிறது அமெரிக்கா*
*பட்டினிக்கு பழகிவிடுகிறது சோமாலியா*
*மரணத்திற்கு பழகிவிடுகின்றன*
*மருத்துவமனைகள்.*

*பழகிப்போகாமலிருக்கட்டும்*
*தவிர்க்க வேண்டிய*
*தாமதங்களும்,*
*தவிக்க வைத்துவிட்ட*
*தவறுகளும்.*

இக்கவிஞர் எழுதிய மறக்க முடியாத நோயாளிகள் மரணங்கள் பற்றிய வேறு சில கவிதைகளும் இத்தொகுப்பினைக் கனதியாக்கு கின்றன.

கவிஞர் தனக்குவரும் தொலைபேசி அழைப்புகள் தொடர்பாக எழுதப்பட்ட கவிதையும் குறிப்பிடத்தக்கதே. கவிஞர் வெளிப்படுத் தும் தனது உள்ளகப்பயிற்சி அனுபவங்களும் எமக்கும் புதிய அனுபவமாகின்றன!

அவ்வாறே, கவிஞரது பார்வையூடாக வெளிப்படும் 'பார்வையாளர் நேரங்கள்', 'காத்திருப்போர் கதைகள்' என்பனவும் புதிய சுவை பயக்கின்றன!

மருத்துவமனை நோயாளிகள் கவிஞருக்குப் புகட்டிய போதனைக ளும் சில கவிதைகளில் வெளிப்படுகின்றன. இவ்விதத்தில் அன் பின் மகத்துவம் அவசியம் வேண்டப்படுவதாக கவிஞர் கருதுகின் றார்: அதுபற்றி இரு கவிதைகள் எழுதியுள்ளார். தற்கொலைத் தடுப்பு முயற்சியிலும் கவிஞர் அக்கறை கொண்டுள்ளார். இக்க விதை ஆர்வத்தைத் தூண்டும் முறையில், வெளிப்பட்டுள்ளது.

*'மனம்*
*சஞ்சலப்பட்டுக்கொண்டிருக்கிறாய்.*
*விநாடிகளின் சப்த இடைவெளி*
*கேட்கிற அளவு*
*நிசப்தமாய்*
*கவலைகளை மீட்டிக்கொண்டிருக்கிறாய்.*

*என்றாலும் அந்த அறையை*
*எட்டிப்பார்க்காதே!'*

*'இது உன்முறை*
*உனது முடிவு ஏதென்று*
*எனக்குத்தெரியாது.*
*ஏனெனில்*
*கவிதைகள் மட்டும் என் வசம்*
*முடிவுகள் அல்ல.'*

என்று வித்தியாசமாக முடிவடைந்துள்ளது!

சுருங்கக்கூறின் பல்வேறு நோக்குகளில் மருத்துவமனை சார்ந்த பல்வேறு அனுபவங்களை வெளிப்படுத்தும் இக்கவிதை தொகுப்பு, ஈழத்திலிருந்து வெளிவந்துள்ள முதற் கவிதைத் தொகுப்பு என்ப தைக் குறிப்பிடும் அதே வேளை, நான் அறிந்தவரை தமிழ்நாட்டி லிருந்துகூட இவ்வாறானதொரு தொகுப்பு வெளிவரவில்லை என் பதும் குறிப்பிடத்தக்கது.



yogarajah.se@thaiveedu.com



# நீல. பத்மநாபனின் புனைவுலகு

நீல. பத்மநாபனின் படைப்புலகில் குறுக்குசால் ஓட்டிப் பார்க்கிற போது படைப்பாக்கச் செயல்பாடுகளில் சில விசயங்கள் தென்படுகின்றன. ஆரம்பகால ஆக்கங்களில் தன் மனம் கொண்டிருந்த ஆழமான உறவு சிறுகச்சிறுக மங்கிக் கொண்டு வந்திருப்பதை உணரமுடிகிறது. பிற்கால படைப்புகளில் தகவல்கள் இருக்கின்றன. சம்பவங்கள் இருக்கின்றன. பரிதவிக்க வைக்கிற சொல்ஜோடனைகள் இருக்கின்றன. உணர்வின் உயிர்ப்பான பகுதிகளைக் கண்டடைந்து எழுதுகிற செயல் மறைந்து வாசகருக்குள் உணர்ச்சியைத் தூண்டும் விதமான வார்த்தைக் குவியலாக மாறுகிறது. வாசகரை மறந்த முதல்கட்டப் படைப்புகள் அனைத்திலும் உறவுகளின் ஆழ்மனங்களில் தகிக்கும் வேதனைகளும் போதாமைகளும் முரண்களும், பகைமைகளும் குரூர எண்ணங்களும் அதனதன் வெம்மைகளோடு பிறந்திருக்கின்றன. வார்த்தைகள் கரைந்து சூட்சுமகுணத்தை உணர்த்திவிடுகின்றன. நம் மனக்கண்ணில் உருவங்கள் எழுந்து நடமாடுகின்றன. பிற்கால படைப்புகளில் நிகழ்வுகள், நிகழ்வுகளாக மட்டுமே வந்தடைகின்றன. பெரிய அனுபவத்தைத் தருவதில்லை. அத்தோடு பெரும்பாலான சிறுகதைகளுக்குள் ஒரு சம்பவத்தைப் புகுத்திதான் சொல்கிறார். சிறுகதை ஒரு தன்னியல்பான முகிழ்ப்பு. அந்த முகிழ்பிற்கு உருகொடுக்கிற வேலையில்தான் இருக்கிறது விந்தை. இதை 1. பிஞ்சு உள்ளம் 2. மூவந்தி 3. சண்டையும் சமாதானமும் 4. தண்டனை கதைகளில் நேர்த்தியாக செய்திருக்கிறார். 'மூவந்தி' மட்டும் பிற்காலத்தில் எழுதிய கதை. இக்கதைகள் நம் பொய்மைகளை நம்முன்னே ரத்தம் சதையுமாக புரட்டிப்போடுகின்றன. நம் யோக்கியதைகளும் நற்குணங்களும் இவைதான் என்று விமர்சிக்கின்றன. இவற்றில் நீல. பத்மநாபன் தன் உள்ளத்தை முன் நிறுத்திப் பேசுகிறார். தன் உள்ளம் என்பது பிறத்தியாரின் உள்ளமும்தான்.



புனைவு என்பது பொய்மை அல்ல. உண்மையில் வடிவங்கள்.

**- சு. வேணுகோபால்**

ஆழ்மனச் செயல்பாடுகளை மிகத்துல்லியமாக எழுத்தில் வடிக்கிற கலைதான் புனைவு. அதன் திசைவழிகளை எவ்விதத் தயக்கமும் இல்லாமல் கண்டடைந்து சொல்கிற முறை அது. ஒரு வகையில் அது ஒரு மனிதப்பிறவி. அல்லது ஜனத்திரள். அல்லது குடும்ப மனிதர்கள். புனைவின் மனிதர்கள் நம்மோடு விவாதிக்கிறார்கள். மனிதர்களின் பொய்மைகளை எள்ளி நகையாடுகிறார்கள். அபூர்வமனிதர்களை நம்முன் நிறுத்தி நம்மை தலைகுனிய வைக்கிறார்கள். கொஞ்சமேனும் அழுக்குகளை உதறிவிட்டு மேன்மையைக் கைக்கொள்ள செய்பவர்கள். அதுவே நேர்நின்று ஊடுருவும் அனுபவமாகவும் இருக்கிறது. படைப்பைப் போல நம் திருட்டுத்தனங்களைக் கையும் களவுமாக பிடிக்கிற சக்தி வேறொன்றில்லை. அந்தச் சக்தியைச் சரிவர உண்டாக்கிக் காட்டுகிறவனே கலைஞன். அந்தச் சக்தியின் முன் வாசன் பாவங்களைக் கழுவிக்கொள்கிறான். புதிய மனிதனாகிறான். மனிதனையும் புதியவனாக புனைகிறது மேலான படைப்பு. புனைவு என்பது கதையல்ல. நம் சமூகத்தின் ஒட்டுமொத்த சாராம்சத்திலிருந்து புனைவு உருவாகிறது. அதில் படைப்பாளியின் வேலை ஒன்றும் இருக்கிறது. அதில் வாழ்வின் தரிசனமாக ஒரு திறப்பை வைக்கிறான். வாசகனைவிட, சாதாரண வாழ்க்கையைவிட உயர்ந்து நிற்கிற இடம் அது. நீல-பத்மநாபனின் சில கதைகளும், 'யாத்திரை', 'பைல்கள்' முதலிய குறுநாவல்களிலும் 'பள்ளிகொண்ட புரம்' நாவலிலும் இந்த உச்சம் சித்தித்திருக்கிறது. அசிங்கங்களைச் சொல்வதென்பதென்ன? நம்மை நாமே செம்மைப்படுத்திக் கொள்கிற மறைமுக கிரியா ஊக்கித்தானே! கலை என்பது முரணை முன்வைத்தபடியே இருப்பதுதான். 'பதில் இல்லை' சிறுகதையில்கூட நம் ஆன்மபலத்தின் கதி என்ன என்பதைத்தான் முன்வைக்கிறது. இது இவர் எழுதிய முதல் சிறுகதை. பக்கத்துவீட்டுச்சிறுவனைச் சிகரெட் வாங்கிவர அனுப்புகிறான். குதியாளம் போட்டு ஓடியவன் லாரியில் அடிபட்டு சாகிறான்.

விபத்து நடந்ததைக் கேள்விப்பட்டு எல்லோரும் ஓடுகிறார்கள். அவனும் ஓடுகிறான். கொடுத்தனுப்பிய சில்லறை தூரமாக விழுந்து கிடக்கிறது. பையனை அனுப்பியது யாரென்று எல்லோரும் கேட்கிறார்கள். இவன் நான் தான் என்று சொல்லமுடியாமல் பதுங்குகிறான். இதுதான் கதை. நான் என்று சொல்லியிருக்க முடியும். முடியாது. நாமாக இருந்தாலும் சொல்லியிருக்கமாட்டோம். சமூகம் சாற்றும் பழியை ஏற்றுக்கொள்ள ஆன்மபலம் வேண்டும். அதுதான் இன்றளவும் நம்மிடம் இல்லாதிருக்கிறது. சமூகத்தின் கண்களுக்கும் நேர்மையின் கண்களுக்கும் இடையில் நடக்கும் போர் இது. இந்த நேர் நேரான மோதலை 'பதில் இல்லை' கதையாக பத்மநாபன் புனைந்துள்ளார். நாம் சமூகத்தின் திரைமறைவில் மறைந்து கொள்பவர்கள்.

டியூசனுக்கு வரும் பத்து வயது பெண்மீது சிறுசலனம் ஏற்படுகிறது. அதை அவளிடம் காட்டமுடியாது. தொடவேண்டும் போல் இருக்கிறது. அன்று அவள் கணக்கை சரிவர செய்யாமலும் இருக்கிறாள். சலனம் பொங்குகிறபோது 'என்னைய கல்யாணம் பண்ணிக்கிறங்களா' என்று கேட்கிறாள். சலனத்தின் பொக்களிப்பு உறைந்து மறைகிறது. சட்டென மனது வெண்மையாகிறது. அவன் சாதாரண டியூசன் மாஸ்டராக மாறுகிறான். 'இப்படியெல்லாம் பேசாதே. ஒனக்கு யாரு இப்பிடிச் சொன்னா' என்று கேட்கிறான். காமத்தின் பாதைகள் பற்றி தெரியாத இளம் உள்ளம் தன்னுடன் படிக்கும் மாணவிகள் தங்கள் மாமன்மார்களைக் கட்டப்போவதாக (எஞ்ஜினியர், டாக்டர்) சொல்கிறார்கள். நன்றாகப் படித்தால்தான் எஞ்ஜினியர் மாப்பிள்ளை கிடைப்பார்கள் என்று பிள்ளைகளின் பெற்றோர் ஊக்கப்படுத்திய விசயம் வீணாவின் மூலம் வருகிறது. அதைவிட 'சார் யாருகிட்டயும் சொல்ல மாட்டீங்கல்ல' என்று சத்தியம் வாங்கிக்கொண்டு, தான் தூங்குவதாக நினைத்து இரவில் அப்பா அம்மாவின், லீலையை சொல்ல முடியாமல் திணறுகிறாள். கல்யாணத்தின் தாத்பரியம் தெரியாத, தாம்பத்திய உறவுக-

ளின் திடுக்குகள் தெரியாத பிஞ்சு உள்ளம் ஒரு கற்பனையை முன்வைக்கிறது. சிறுமி டியூசன் மாஸ்டரின் உள்ளத்தின் கழிம்பைக் கழுவுகிறாள். பெற்றோர்களின் மேம்போக்குத்தனத்தை எள்ளுகிறாள். சலனமிக்கவனாக இருப்பதை கண்டடைந்துதான் கதை உருவாகிறது. வெறுமனே தூய்மை கதை பேசுபவர்களால் மனங்களை பாதிப்படைய வைக்கமுடியாது. குழந்தையின் வழி நமக்கொரு வெளிச்சம் கிட்டுகிறது. இருட்டிலிருந்து வெளியேறுகிறோம். பிஞ்சு உள்ளம் ஒரு தரிசனமாக மாறுகிறது. அதை நம்மால் கலங்கபடுத்திவிட முடியுமா? (பிஞ்சு உள்ளம்).

தகப்பன் - தாய் - மகன் மூவருக்கும் தெளிவற்ற அனுமானங்களால் உறவு சூழப்பட்டிருக்கிறது. ஜெர்மனிபோன மகன் இறந்துவிடுகிறான். 8 ஆண்டுகள் கழித்து மருமகள் தமிழகம் வருகிறாள். தன் பேரனைப் பார்த்துத் திரும்புகிறாள் பாட்டி. தாத்தா பேரனைப் பார்ப்பதை வெறுக்கிறார். மகனின் மனைவி இங்கு வர முடியாமைக்கு ஏதோ சால்ஜாப்பு சொல்கிறாள். மகனின் சாவில் புதிர் விடுவிக்கப்படுகிறது. விபத்தில் இறக்கவில்லை. கள்ளத் தொடர்பைக் கண்டதால் கொலை செய்திருக்கக்கூடிய வாய்ப்பைத் தகப்பன் ட்ரைவர் மூலம் தெளிகிறான். தன் மகனின் மகன் என நினைத்து பாட்டி பேரனைக் கொண்டாடும் நிலை கதையில் வெளிப்படுகிறது. மகன், தகப்பன், தாய், மருமகள் அவரவர்களுக்குத் தெரிந்தவகையில் வாழ்வை புரிந்திருக்கிறார்கள். ஒரு மயக்கநிலை. சந்தர்ப்பங்களைப் படையாக பயன்படுத்துகிற விளையாட்டு தீர்ந்தபாடில்லை. ஏன் இப்படி நடக்கிறது என்று இவ்விசயத்தில் தெளிவுபடுத்திட முடியாது. இதற்கு முன்னும் - இப்போதும் - நாளையும் மயங்கிய நிலைதான். கதையை ஒரு படிமமாக மாற்றுகிறார். (மூவந்தி).

இவருடைய எல்லா படைப்புகளிலும் அடிச்சரடாக ஓடுவது உறவு பிரச்சினைதான் எனலாம். அதிலும் குடும்ப உறவு பிரச்சினை-களை எல்லா துவாரங்களின் வழியும் சென்று பார்த்திருக்கிறார். 'சண்டையும் சமாதானமும்' கதையின் ரகசிய வழி ஒன்று கதையில் தெளிவாகிறது. தம்பி மனைவி தமிழ் கொடிக்கும் - செல்லையா-வுக்கும் இடையில் உள்ள கள்ளம் இல்லாதிருந்தால் அது நம் சமூகத்தின் பொதுத் தன்மையைப் பெற்றிருக்கும். உறவு இருப்பதாகக் காட்டுவதில் ஒரு வாசிப்பு கவர்ச்சி நம்மை சுழற்றி ஈர்க்கிறது. மாற்றான் மனைவியின் கொஞ்சல் சிரிப்புப் போதுமே, மனிதனின் நிலை மாறிவிடும். அதுவே ஒருவித இன்பம்தான். மேனி தொடாது மேயும் இச்சை. அதிலொரு கிலுகிலுப்பு. தார்மீக கோவங்கள் பெண்ணின் முன் வடிந்திறங்கி தெண்டனிட ஓடும். நம் இந்தச் சமூகத்தில் இப்படி புணர்ச்சியற்ற இச்சை பரந்தளவில் இருக்கிறது. இந்த பொதுத் தன்மையால் சொல்லியிருக்கலாம். செல்லையாவின் வீழ்ச்சி நான் சொல்லும் காரணத்தை விட வலுவாகவே இருக்கிறது. பொதுதளம் இதுவல்ல என்பதற்காக சொல்கிறேன். சண்டைக்குரிய காரணங்கள் அற்பமாக காமத்தின் முன் மடிந்து சாம்பலாகிறது. தாய் தன் அவமானங்களைச் சொல்லச் சொல்ல செல்லையாவிற்கு உள்ளம் கொதிக்கிறது. அடித்துத் துவசம் பண்ணத் தோணுகிறது. தன்மானத்திற்கும் - காமத்திற்கும் நடக்கும் போராட்டமாக கதையை உருவாக்கி விட்டிருக்கிறார் பத்-மநாபன். இதைத்தான் கண்டடைதல் என்கிறேன். அதனுடைய முடிவு காமத்தின் பக்கம் சாரத்தான் செய்கிறது. இரண்டு வலுவான புள்ளிகள்தான். தாய்மைக்கும் - சுகத்திற்கும் மத்தியில் நாம் எங்கு நிற்போம் என்ற கேள்வியை எழுப்பி பதிலையும் முன் நிறுத்துகிறது. தெய்வத்திற்கு நிகரானவள் தாய் என்பது ஒரு ஜோடனை பேச்சுதானே! நம்மால் நிராகரித்துவிட முடிகிறதா இந்த பதிலை. தாயைத் தெய்வமாகப் போற்றும் பண்பாடுடைய சமூகம் என்பவர்களுக்கு 'சண்டையும் சமாதானம்' போதும். பிளந்துகாட்ட.

துக்கவீட்டிலும் பெண்மீது 'சந்தேகம்' கொள்ளுதலை 'பட்டமரம் கதை'யிலும் பச்சைக்குழந்தையின் அழுகுரல்கூட காமத்திற்கு இடையூறாக இருப்பதை மறைக்க புதுகதைபுனைகிற அண்ணியை 'உயிர்' கதையிலும் காண்கிறோம். 'சுழிமாறிப் போனாலும்' கதை என்கிற அளவில் நேர்த்தியாகப் பின்னப்பட்டிருக்கிறது. பல்பிடுங்க வேண்டிய நிலையில் 'நீ இருக்கும்போதும், பிரிந்து செல்லும்போதும் இப்படியா என்னை அலைக்கழிக்கணும்' என்றொரு அற்புதவரி வருகிறது. அவ்வரி வாழ்வின் வேரின் ஒன்றைத் தொடாமல் பல்வலியை மட்டுமே குறித்ததாக நின்றுபோனது.

'கடிகாரம்', 'பசி', 'முக்தி', 'நாகம்மா' நான்கு கதைகளும் குறியீட்டுக் கதைகள். இவற்றில் 'பசி' பெரியளவில் வெற்றியடைந்திருக்கிறது. கண் தெரியாத ஒரு பிச்சைக்காரன். பேருந்து நிறுத்தத்தில் நின்று உருது மொழியில் பிரசங்கிக்கிறான். பாதையின் அர்த்தம் புரியவில்லை என்றாலும் இந்த உலகம் நல்லவழியில் உய்யவேண்டும் என்ற கருணையின் உயிர்ப்பை உணரமுடிகிறது. சிலபேர் பிச்சையிடுகின்றனர் சிலபேர் நகர்ந்து கொள்கின்றனர். அவன் கத்தி முடிந்ததும் தட்டைத் தடவிப் பார்க்கிறான். பன்னும் பழமும் இருக்கின்றன. கன்னத்தில் ஓங்கி ஓங்கி அறைகிறான். பின் பிட்டு உண்கிறான். அவனுடைய பசி என்பது என்ன? மக்களுக்கான நல்மொழி கூறுதலே தீராத பசியாக அவனுக்கு இருக்கிறது. திடுக்கென்று யேசு, முகமது நபி, புத்தன்போல மகானா நிற்கிறான். உழைக்காமல் பெற்றுக்கொண்டதற்காக தன்னை அறைந்து கொண்டானா? இருக்கலாம்? நம்மால் முடிகிறது? நமக்கு என்ன பசி இருக்கிறது? சுரண்டல் பசி! காமப்பசி வேறென்ன இருக்கிறது. பல்வித கேள்விகளையும் விடைகளையும் வெளிப்படுத்தும் வண்ணமாய் கதைப்புனைவு சாத்தியமாகியிருக்கிறது.

உடல் இயக்கத்திற்கும் சாவுக்கும் உள்ள தொடர்பை நோய் வாய்ப்பட்டு வலியால் அவதிப்படும் ஒருவனை முன்நிறுத்திச் சொல்கிறது 'கடிகாரம்' கதை. எத்தனை முறை ஆட்டிவிட்டாலும் நின்றுவிடுகிறது கடிகாரம். ஓடாத கடிகாரத்தைக் காணுகிற அவன் தன் உடல் இயக்கமும் இப்படி நின்று விடுமோ என்று அவனாக கற்பனை செய்து கொள்கிறான். கற்பனை விஷ்வரூபம் எடுக்கிறது. கடிகாரமும் முரண்டுபிடிக்கிறது. ஒருநிலையில் கடிகாரம் ஓட ஆரம்பிக்கிறது. இவன் மருத்துவமனை போய்வந்து பார்த்தபோது நின்றுவிட்டிருக்கிறது. இயக்கம் இயக்கமற்ற நிலையை குறியீடாக்கும் கதை. ஆனால் அது பெரிய அர்த்த தனத்தை சென்றடையாமல் நின்றுவிடுகிறது. இந்தக் கதைக்குள் மனித மேன்மைக்கான தேடலை நோக்கி நகர்த்தியிருந்தால் இதனுடைய வீச்சே வேறுமாதிரி ஆகியிருக்கும். அனுபவத்தைத் தாண்டிய தரிசனம் புனைவிற்குள் எழவில்லை.

குற்றாலநாதரை தரிசிக்க விரும்புகிற ஒரு கிழவி. மகனோ மருமகளோ சாக்குப்போக்கு சொல்லி நாட்களைக் கடத்துகின்றனர். கிழவியும் பேரப்பிள்ளையும் பிரிக்கமுடியாத இணையாக இருக்கின்றனர். பக்கத்து வீட்டுக்காரர்கள் குற்றாலம் கிளம்பும்போது கிழவியும் கிளம்புகிறாள். பேரன் அடம்பிடிக்கிறான். பேரனுக்காக போகாமல் இருப்பாள் என்றொரு கற்பனையை பெற்றோர் உருவாக்கிப் பார்க்கின்றார்கள். கிழவி விடுவித்துவிட்டுச் செல்கிறாள். குற்றாலத்தில் குளிக்கும்போதே மயக்கமும் படபடப்பும் வந்துவிடுகிறது. பேரனின் நினைவு வாட்டுகிறது. குற்றாலநாதரை வணங்குகிறாள். என்ன கேட்டிருப்பாள் குழந்தையும், தன் பிள்ளையும் நல்லபடியாக இருக்கணும் என்றுதானே. பழுத்த முதுமை வாழ்த்துக்களால் முக்தியடைகிறது.

'நாகம்மை' - கதை மீறிய கதையானாலும் குலத்தெய்வமான நாகம்மை நாக வடிவெடுத்து வந்து அவனைத் தழுவுவதும் பின் தெய்வப்பெண்ணாக மாறுவதுமான ஒரு கதை. பாம்பின் நடவடிக்கைகள் ஒரு இளம் நங்கையின் தோரணையில் கதையில் உலவுகிறது. ஒரு தொன்மக்கதை போல உருவாகியிருக்கிறது.

'பூக்களைப் பறிக்காதீர்' 'காக்கைகள்' 'எறும்புகள்' குறியீட்டைப் பளிச்செனு வெளிப்படுத்தாத கதைகள். 'அப்பாவின் கத்தி' 'டீலக்ஸ்' 'சர்ப்பசகவாசம்' 'திறந்த கடிதம்' அனுபவத்தை முன் நிறுத்துவதோடு நின்றுவிடுகிறது. இதில் 'டீலக்ஸ்' நம் கோமாளித் தனமான மொழிவெறியை கிண்டலடிக்கிறது. அத்தோடு பண்பாட்டையும். 'சோகம்' 'விட்டுக்கொடுத்தவன்' 'குழந்தையும் தெய்வமும்' 'விட்டகுறை தொட்டகுறை' கதைகளில் அடுத்தவர் பற்றிய சித்திரங்கள் வருகின்றன. ஒரு கதை சொல்லும் தொனியில் இருக்கின்றன புனைவு சாத்தியமாகவில்லை. இவற்றில் மொழி நடையும் ஆழமான உணர்வை ஏற்படுத்துவதில்லை. வினைச்சொல்லில் காலத்தையும் பாலையும் நீக்கிவிட்டு எழுதுவதால் பெரிய ஈர்ப்பொன்றும் கிட்டுவதில்லை. இளம்பருவத்து வாசகர்களுக்கு உவப்பான மொழிநடையாக இருக்கலாம். சென்டிமெண்டை உருவாக்க மொழியைத் துண்டுபடுத்தி பரிதவிப்பு நடையை உருவாக்கியுள்ளார். பாத்திரங்களின் உள் உலகங்களிலிருந்து பேசாமல் விளக்கமுறையில் கதை சொல்வதால் கதைகள் ஒட்டாமல் உதிர்கின்றன.

'பைல்கள்' குறுநாவல் இந்திய தேசத்தின் படிமக்கதையாக மாறி

இருக்கிறது. எந்த மாநிலத்து அலுவலகத்திற்கும் பொருந்தக்கூடிய கதை. சுரண்டல் உலகோடு ஒரு ஆன்மபலம் கொண்ட போரை நிகழ்த்துகிறது. ஒருவகையில் இந்த போரை நிகழ்த்தக் கூடிய நேர்மையாளன் ஒருவன் இன்று எந்த அரசு அலுவலகத்திலும் இல்லாமல் இருக்கலாம். இது ஒருவித தேய்வு. இக்கதை எழுதப்பட்டது அறுபதுகளில். லட்சிய நோக்கு அடிமனதில் தேங்கி இருந்த இளைஞர்களின் காலம் அது. அதனால் என்ன இன்றும் ஏதோ ஒரு அலுவலகத்தில் இந்தச் சமரை மனதளவில் ஓர் இளைஞன் நிகழ்த்தலாம் என்று நினைத்தபடி இருக்கலாம். வாசுதேவதம்பி அரசியல்வாதியின் குறியீடாகவும், (கச்சி மாறி ஆட்சி மோகம் ஒன்றே குறியில் செயல்படுதல்) சந்திரசேகரன் சுய நல அதிகாரிக்கு ஒரு குறியீடாகவும் மாறிவிட்டனர். இந்நாவலில் கதை சொல்லி 'நான்' அவனுடைய ஆதங்கமும், குமுறலும், கோவமும், மூர்க்கமும், பணிவும், பயமும், ரொம்ப அசலாக உருவாகி வந்திருக்கிறது ஒருநாள் காலையில் அலுவலகத்தில் நுழைந்து மாலையில் வெளியேறும் பணியாளனின் கதை. இந்த காலத்தில் கேரள அரசியல் வரலாறும் இடைமிடந்து வருகிறது. கீழ்நிலைப் பணியாளனின் மனஅவலங்களை ஜீவனோடு பெயர்த்துக்கொண்டு வந்திருக்கிறார். சந்திரசேகரனைத் தன் பள்ளித்தோழன் என்று பின்னியிருக்கத்தேவையில்லை என்றுபடுகிறது. உயரதிகாரியை மக்காக காட்டுகிறபோது கலை கீழிறங்குகிறது. அவனுடைய அயோக்கியத்தனங்களைப் பித்தலாட்டங்களைச் சுயநல செயல்பாடுகளை நீல. பத்மநாபன் ஒருவித மூர்க்கத்தோடு அணுகிப்பார்த்திருக்கிறார். ரவீந்திரனின் உள்ளக்குமுறல் குரல் எழாமல் கொதிப்பது அசலாக இருக்கிறது. உணர்வின் தாளகதியை படைப்பில் உருவாக்கிக்கொண்டே நம் அரசு பணிமையங்கள் சுரண்டல் கரங்களால் எப்படி பற்றியிருக்கிறது என்கிற சித்திரத்தைக் கண்முன் காட்டுகிறார். ராட்சசத்தனமான அதிகார துஷ்பிரயோக அரக்கனின் மாளிகையைச் சிறு குழந்தை தட்டி உள்நுழைவது போலவும் சிக்கியிருந்த பிடியிலிருந்து வெளியேறுவதுபோலவும் எழுதப்படாத படிமம் இக்கதையில் உறைந்திருக்கிறது. 'பைல்கள்' புனைவிலக்கியத்தில் ஒரு மைல்கல்.

சாவு பற்றியும் நோவு பற்றியும் ஏராளமான கதைகளை எழுதியிருக்கிறார். வாசகனை பரிதவிக்கச் செய்வதற்காக இப்படியொரு களத்தைத் தேர்ந்தெடுக்கிறாரோ என்று சில சமயம் பட்டிருக்கிறது. 'யாத்திரை' குறுநாவல் அந்த எண்ணத்தின் சாயலைக் கூட காட்டாத படைப்பு. நண்பனின் பிணத்தை சுமந்து செல்லும் நான்கு பேர்கள் சாவுக்கான காரணத்தை நான்கு கோணங்களில் சொல்கின்றனர். இது ஒரு புனைவுத்தி. பாலியல் நோயால் அவதியும் அவமானமும் பட்ட நிலையை ஒருவன் வாயிலாகவும், காதலியான விபச்சாரியை அபகரித்ததால் இவனைப் போலீசில் காட்டிக்கொடுத்தவனின் பார்வையிலும், நோய் முற்றிய நிலையில் சாவு குறித்த நூலைப் பற்றிய இன்னொருவனின் விவாதத்தின் வழியாகவும், மருந்துக்கடைக்காரன் பெத்தடின் கொடுத்து வீழ்த்திய கோலத்தின் வழியாகவும் கதைசொல்லப்பட்டிருக்கிறது. தற்கொலைக்கான காரணங்கள் நான்கு கோணங்களில் ஆராயப்பட்டிருக்கின்றன. இருப்பினும் மூன்று காரணங்களைத் தன்னால் விளைந்ததாக அறிய முடிகிறது. ஒரு காரணம் வஞ்சகத்தை வஞ்சகத்தால் வீழ்த்தவேண்டும் என்கிற குரூரபுத்தியால் விளைகிறது. மருந்துக்கடைகாரன் இவனுக்கு பெத்தடின் கொடுக்க மறுத்தவுடன் போலீசில் புகார் செய்கிறான். கடைக்காரனுக்கு நஷ்டமும் அவமானமும் ஏற்படுகிறது. நண்பனை அடிமைப்படுத்திவிடக்கூடாது என்று மறுத்த எண்ணம் தலைகீழாக மாறுகிறது. தன்னை சந்திக்கு இழுத்துவிட்ட நண்பனை கொல்லத்திட்டமிடுகிறான். இவன் கேட்கும் பெத்தடினைத் தாராளமாகத் தருகிறான். இறுதியில் தற்கொலை செய்கிறான். தீமையும் தீமையும் மோதிக்கொள்கிற சமரை மிக நுட்பமாக சித்தரித்திருக்கிறார். மற்றப் படைப்புகளில் மேன்மையையும் கீழ்மையையும் அருகில் அருகில் வைத்து வாசகனுக்கு மூன்றாம் பரிமாணத்தை ஏற்படுத்தியுள்ளபோது இங்கு வித்தியாசமான மோதலை அருகருகில் நிறுத்துகிறார். தீமையில் சூட்சுமமிக்க தீமை வெற்றிக்கொள்ளும் என்பதை லாவகமாக உருவாக்கிக் காட்டியிருக்கிறார். நடிப்பை நிஜமென நம்பும் மனம் நம்முடையது. நிஜமாகவே மாறிவிடுகிற நடிப்பு. அது நம் அரசியல் விதியிடம் எகிறித் ததும்புகிறது. நம்முடைய பயணம்கூட தீமையின் பார்க்கப்பட்டதோ என்று நெருண்டுகிறது இக்கதை. ஆ. மாதவனன் படைப்புலகோடு இக்கதை சேர்கிறது.

'பள்ளிகொண்டபுரம்', 'தலைமுறைகள்', 'உறவுகள்' மூன்றையும் தனித்து எழுதவேண்டும். இப்படைப்புகள் குறித்து எனக்கு மேலான எண்ணம் உண்டு.

மூத்தப்படைப்பாளிகளின் தரமான இலக்கியப் பகுதிகளாக கலைஞன் பதிப்பகம் 'படைப்புலக' வரிசையை வெளியிட்டது. அவ்வகையில் 'நீல. பத்மநாபனின் எழுத்துலக விழுதுகள்' முனைவர் சோமசுந்தரத்தால் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றன. மனம் ஒன்றமுடியாத சாதாரணப் பகுதிகளே இங்கு மிகுதி. 'கூண்டினுள் பட்சிகள்' நாவல் பகுதியும் 'ஆன்மாவை உணர்தல் - கலை இலக்கியங்கள் வாயிலா'க் கட்டுரையும் 'மூவந்தி' 'சண்டையும் சமாதானமும்' பிஞ்சுஉள்ளம்' சிறுகதைகளும் தவிர பிற பகுதிகள் சிறப்பாக இல்லை.

பத்மநாபன் அலுவலகம் சார்ந்த போலிமனிதர்களைச் சொல்கிறார். அவர்களின் தில்லாவாரித்தனங்களையும், சக ஊழியர்களை மதிக்காது - அவமதிக்கிற அதிகாரிகளைப் பற்றியும் சொல்கிறார். அந்தத் தில்லாவாரித்தனங்கள் எவ்விதமாய் அம்மனிதர்களுள் படிந்திருக்கின்றன என்று உணர்வோட்டத்தோடு பெயர்த்து வர முடியவில்லை. மோசமானவர்களை நியாயவாதியின் எல்லைக் கோட்டிலிருந்து பார்க்கிற பார்வைதான் இருக்கிறது. தீயவர்களை நல்லவர்களின் பகுதியில் நின்று பேசுவது யதார்த்தவாத கலை. இன்றைய தேதியில் ஒரு சிறை பற்றிய அயோக்கியத்தனங்களைச் சொல்வதை கட்டுரைப் பகுதிகள் பிடித்துக் கொண்டன. கட்டுரைத் தன்மையில் அடைபடாத - அடையாத இலக்கிய ஆன்மா ஒன்று உண்டு. அந்த அந்தரங்கத்தன்மையைக் கண்டடைந்து எழுதுவது தான் எழுத்து. வெளிப்புறமாக காட்டிக்கொள்ளாத வஞ்சகம். சூது, வினயம், குரோதம், அன்பு, வக்கிரம், காதல், மூர்க்கம், கோவம் போன்ற எண்ணற்ற மனவடிவங்களோடு தொடர்புடையனவாக இருக்கலாம். பொய் சொல்லியேனும் லஞ்சம் வாங்கியேனும், சுழி-மனையாலேனும் முன்னேறிவிட துடிக்கிற அரசு ஊழிய உள்ளம் என்ற ஒன்று இருப்பதாகப் படிகிறது. இது எதன் வேர்? கருணையற்ற ஒருவித வெறி. பித்து. இந்த வெறியின் தன்மையைக் கண்டு சொல்வது இலக்கியத்தின் சவாலாக இருக்குமென்று கருதுகிறேன். பத்மநாபன் அவலங்களைச் சொல்கிறார். அதுவும் ஒரு பார்வையாளனின் மனநிலையில், ஏமாற்றுப்பேர்வழிகள் நன்றாகவே அவரின் எழுத்தில் அடையாளமாகியுள்ளனர். வாசகனுக்கு அவர்கள் மீது ஒரு கோபத்தை உண்டு பண்ணுவதில்லை. ('பைல்கள்' குறுநாவல் மட்டுமே அத்தகைய உணர்வை எனக்கு அளித்தது.) மாறாக, ஏமாற்று உலகத்தை தெரிந்து கொள்ளுதல் புரிந்து கொள்ளுதல் என்றளவில் நின்றுவிடுகின்றன. அதே போல்தான் உறவுச்சிக்கல்களைச் சொல்லும் பிற படைப்புகளிலும், இவரின் எழுத்துமுறையில் வேதனைக்குரிய சொற்கள் இருக்கின்றன. கொட்டப்பட்டிருக்கின்றன. வார்த்தைகளை உதறிவிட்டு வாழ்தலில் உணரும் வேதனையை / சந்தோசத்தை / காதலை / அன்பை வெம்மையோடு உணரமுடியவில்லை. சம்பவத்திற்கும் உணர்விற்கும் பொருத்தமான மிகமிக தேர்ந்த வார்த்தைகளை நெஞ்சின் ஆழத்திலிருந்து எடுக்க வேண்டியிருக்கிறது. அந்தத் தொடர் அல்லது ஒரு சிறிய பத்தி நம் நெஞ்சை பிசைய வைத்துவிடக்கூடும். சிலிர்க்க வைக்கக்கூடும். காதல் செய்ய வைக்கலாம். அதற்குப் படைப்பாளி பிரச்சினைக்குள் மூழ்கி கதாபாத்திரமாக மாற வேண்டியிருக்கிறது. நம் நிலையிலிருந்தல்ல! பாத்திரத்தின் நிலையிலிருந்து வரும் வாசகம் நமக்குரிய வாசகமாக இருக்கலாம். அல்லது நமக்குத்தெரியாத உலகத்தின் பாடுகளை நம்பாடுகளாக பெற்றுக்கொண்டதாக மாறலாம்.

நீல. பத்மநாபன் விசுவிசுவென எழுதிமுடித்துவிடுகிறார். இதில் இவரின் ஆதங்கம் ரொம்பவும் உச்சமாக அமைத்துக் கொள்கிறது. அச்சம்பவமோ - நிகழ்வோ தன்னியல்போடு இருப்பதில்லை. தன்னியல்போடு படைப்பை உருவாக்கி அதனுள் படைப்பாளி வைத்திருக்கும் வெடிகுண்டை வாசகன் தொட்டுணரச் செய்ய வேண்டும். வாசித்து முடியும் தருவாயில் அவன் இதயம் பொங்கிப் பீரிடவேண்டும். வெடித்து மனக்காயங்களை உண்டாக்கவேண்டும். காயங்களை உண்டாக்காத படைப்பு வெகு விரைவில் மனதிலிருந்து மறைந்துவிடும்.



venugopal@thaiveedu.com

# ஆன்மாவும் புறத்தடங்களும்

- நாஞ்சில் நாடன்

சமஸ்கிருத கருத்தரங்கில் உரையாற்ற எனை அழைக்க வந்தவர்கள் காவித்துண்டொன்று போர்த்தினார்கள். பௌர்ணமி, பிரசாதம், பூரணம், சந்நிதி, சஞ்சீவினி, சந்தோசம் போன்ற தமிழாக்கப்பட்ட சொற்கள் தெரியுமே அன்றி, ரசம் எப்படி வைப்பது என்று சமஸ்கிருதத்தில் சொன்னால் என்னால் விளங்கிக்கொள்ளத் தெரியாது என்பதால் மறுத்தேன் பணிவாக. என்றாலும் அவர்கள் கொண்டு வந்து போர்த்திய காவி நிறத் துண்டு ஒன்றும் பகவத்கீதைப் பதிப்பொன்றும் கைவசம் ஆயிற்று. என்னிடம் இருக்கும் பகவத்கீதையின் பதினேழாவது படி ஆயிற்று அது. ஆனால் காவித்துண்டு ஒன்றே ஒன்றுதான்!

பத்தாண்டுகளாக ஈரோடு போனால் ஜகதீச அண்ணனைப் பார்க் காமல் வருவதில்லை. சில நாட்கள் வீட்டிலேயோ தோட்டத்திலே-யோ தங்கிவிடுவதும் உண்டு. திருமதி. சுப்புலட்சுமி அக்காவும் திருமிகு. ஜகதீச அண்ணனும் எங்கள் குடும்ப நலனில் அக்கறை யும் எம்மீது அன்பும் பரிவும் கொண்டவர்கள். நான் கோவைக்குத் திரும்பும்போது அண்ணன் ஒரு கட்டைப் பையில் அஞ்சாறு தேங் காயும் அப்போது விளைச்சலில் இருக்கும் காய்கறிகளும் போட்டு, அவற்றின் மேல் வாழைப்பழச் சீப்பும் அடுக்கி, அதன் மேல் பொத்தினாற்போல் புத்தம்புது கறுப்பு சிவப்புக் கரையுடைய துண்டொன்றும் போர்த்தி, காரில் ஏற்றிக் கொண்டு வந்து, பேருந்து நிலையத்தில் இறக்கி, கோவை செல்லும் பேருந்தில் ஏற்றி அனுப்புவார்.

நடுநாட்டு நவீன படைப்பாளி கண்மணி குணசேகரன் தந்தனுப்பு வார் முந்திரிப் பயிறு, எள், கொப்பரைத் தேங்காய். தகடூர் புத்த கப் பேரவை மொரப்பூர் தங்கமணி காணம் என்ற - முதிரை என்ற -கொள்ளு, துவரம்பருப்பு, கம்பு, காட்டு நெல்லி, மரச்சீனி - ஏழி லைக் கிழங்கு - குச்சிக்கிழங்கு - மரவள்ளி, மாம்பழம், கொய்யா, நாவல் பழம் என்று எவை அச்சமயத்து விளைச்சலோ அதை ரயில் பெட்டி வரை வந்து ஏற்றி அனுப்புவார். நாகர்கோயில் ராம் தங்கம் எனில் மார்த்தாண்டம் தேன், ஈத்தாமொழிக் கருப்பட்டி, மொரல் கருவாடு, நெத்திலிக் கருவாடு. காரைக்குடி போனால் சுநீல் கிருஷ்ணன் தந்தனுப்பும் செட்டிநாட்டுப் பலகாரங்கள் - சீப் புச் சீடை, மனகாவலம், முறுக்கு, அதிரசம். ஒருமுறை ஜார்க் கண்ட் மாநிலத்து ராஞ்சி சென்று திரும்பும்போது, கத்தோலிக்க கிறித்துவ கிளாரெட் சபை அருட்தந்தை இரண்டு குப்பி கடுகு எண்ணெயும், மூன்று கிலோ ராகிமாவும் தந்து ரயிலேற்றி அனுப் பினார்.

எங்கு சென்றாலும் கட்டைப் பை சுமந்து திரும்ப யாம் மடிப்ப தில்லை.

*‘நாள் என் செயும்? வினைதான் என் செயும்?*
*நமை நாடிவந்த கோள் என் செயும்?*
*கொடுங் கூற்று என் செயும்?’*

என்று கந்தரலங்காரத்தில் அருணகிரிநாதர் பாடியதைப் போல -

*‘எடை என் செயும்? இட நெருக்கடி என் செயும்?*
*வெயில் என் செயும்? தொலைவு தான் என் செயும்?’*

என்பது நமது மனோபாவம்.

சங்கிலி பூதத்தான், வண்டி மலைச்சி, சாத்தா, முப்பிடாரி, பன்றி-மாடன், கழுமாடன், புலைமாடன், மேலாங்கோட்டு இயக்கி, காளி, நீலி எல்லோரும் எமக்குத் தெய்வங்களே! அவர்களுக்குக் கொடையோ, சிறப்போ, படுக்கையோ நடக்கும் தெரு, ஊர், காடு, கரை வழியாக நடக்கும்போது பிரசாதம் தந்தால் திருநீறோ, குங்குமமோ, களபமோ நெற்றியில் இட்டுக் கொள்வோம். சற்று நீங்கி நின்று ஒருவர் வெண்கல உருளியில் இருந்து இலைத் துண்டிலோ, நீட்டிய வெறுங்கையிலோ அரிசிப் பாயசமோ, படப் புச் சோறோ தந்தால் கும்பிட்டு வாங்கி அங்கேயே தின்றுவிட்டு பக்கத்து மஞ்சணத்திச் செடி இலைகளில் கை துடைத்துவிட்டு வருவோம். வெளியே வந்ததும் நெற்றிக் குறியை இடக்கையால் அழிக்கும் பொய்மை, போலிமை, பாசாங்கு இருந்ததில்லை எம்மி டம்.

அதே சமயம் நெற்றியின் தீற்றல், கழுத்தின் டாலர் தொங்கல், தோளின் துண்டு, சட்டைப்பையில் தலைவர் படம், வேட்டியின் கரைகள், மோதிரத்தில் கொடி, இடக்கையில் மணிக்கட்டுக் கயிறு என்பன நம்புவதற்கான தடயம் ஆகலாம், காட்டுவதற்கான தட மும் ஆகலாம்.

பம்பாயில் வாழ்ந்த பதினெட்டு ஆண்டு காலத்தில், கூலி, உதவி யாளன், பண்டகக் காப்பாளன், அலுவலக நிர்வாகி, விற்பனை அதிகாரி எனப் பணிபுரிந்த தொழிற்சாலையில், ஆண்டுதோறும் சத்திய நாராயணா பூசை நடக்கும். பூசையில் பங்கேற்க தலைமை அலுவலகத்தில் இருந்து வரும் உயரதிகாரிகளில் மார் வாரி - இந்து, பார்சி மதத்தவர், கோவாக்காரர் - கத்தோலிக்கக் கிறித்துவர் மற்றும் தொழிற்சங்கத் தலைவர் மதராசி - இந்து என நால்வர் இருப்பர். மாற்று மதத்தவர் இருவரும் பூசை பீடத்தின் முன் மணையில் அமர்ந்து தீர்த்தம் வாங்கித் தலையில் தெளித்து, உறிஞ்சி, சந்தன் - குங்கும் நெற்றியில் தரித்து எழுவார்கள்.

என் உடன் பிறந்தான் ஒருவன் வாழ்க்கைச் சூழலில் பெந்த கொஸ்தே சபையின் விசுவாசி ஆகி, உபதேசியாரும் ஆகி பூசை வைக்கப்போவான். ஏதாவது குடும்பக் கொண்டாட்டங்களுக்காக ஊருக்கு வந்தால் முத்தாரம்மன் கோயில் அரிசிப் பாயசம், பஞ் சாமிர்தம், புட்டமுது என எதை நீட்டினாலும் விரலாலும் தீண்டான். எமக்கு முத்தாரம்மன் குடிகாக்கும் கோயில். அவனுக்கோ சாத்தா னின் வடிவம். ஆம்! அமுதென்றும் நஞ்சென்றும் ஒன்று!

வாழ்க்கையின் 67வது வயதில் வீடு கட்டிப் பால் காய்ச்சியபோது

நாம் முன்சொன்ன அருட்தந்தை செயபாலன், மாமல்லபுரம் போய் கருங்கல்லில் வடித்த விநாயகர் சிலையொன்று சுமந்து வந்து எமக்குப் பரிசளித்தார். இன்றும் யாம் அவ்விநாயகரின் காவலில் தான்.

நாகூர் தர்காவிலும், மும்பையின் ஹாஜி அலி முன்பும் தக்கலை பீர் முகம்மது அப்பா பள்ளியிலும், கோவா மட்காவ் தேவாலயங் களிலும், பம்பாய் கொலாபா ஆப்கன் சர்ச்சிலும், அன்னை வேளாங்கன்னி திருவுரு முன்பும் நின்று பிரார்த்தித்திருக்கிறேன். பண்டர்பூர் பாண்டுரங்கன், பூரி ஜகந்நாதன், உடுப்பி பாலகிருஷ் ணன், குருவாயூர் நாராயணன், வாரணாசி விஸ்வநாதன், சிதம்பரம் நடராசன், திருவண்ணாமலை அருணாசலேசுவரன் என நீண்ட பட் டியல் உண்டு. துல்ஜாம்பூர் பவானி, கோலாப்பூர் மகாலட்சுமி, கொல்கத்தா காளி, அன்னபூரணி, விசாலாட்சி, கால பைரவன் என வாரணாசியில், வணங்கியிருக்கிறேன். மதுரை சோமு பாடிய அத்தனை அம்மன்கள் முன்பும் நின்றிருக்கிறேன். கொடுங்கல் லூர், சோற்றாணிக்கரை, ஆற்றுகால், மீன்குளத்தி, பூக்குளத்தி, மண்டைக்காடு, முப்பந்தல் பகவதிகள் பரவசப்படுத்தியுள்ளனர். குன்றுதோறும் நிற்கும் குமரர்களைக் கும்பிட்டிருக்கிறேன்.

தேம்பாவணியும், இரட்சணிய யாத்திரீகமும், சீறாப்புராணமும், குணங்குடி மஸ்தான் பாடல்களும் பரிச்சயம் உண்டு. பன்னிரு திருமுறைகள் சிவனையும், நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் திருமா லையும் அடையாளப்படுத்தின. பட்டினத்துப் பிள்ளையும் தாயுமா னவரும் இராமலிங்க வள்ளலும் செங்கோட்டை ஆவுடையக்கா ளும் தமிழ்ச்சொல்தானே! பாடல்தானே! ஞான நெறிப் பாதை தானே! சிவவாக்கியர் முதலான பதினெண் சித்தர்கள் எம்மதத்தின் எம்மார்க்கத்தின் பகைவர்?

திருமூலரின் ஒரு பாடல் அறிய மாட்டோம்! ஒரேயொரு வரி திரு வருட்பா கேட்க மாட்டோம்! 'பெருந்தமிழன் நான்' எனப் பாடிய ஆழ்வார் பெயர்கூட செவிப்பட்டதில்லை. அப்பரையும் மணிவாசக ரையும் காரைக்கால் அம்மையையும் ஆண்டாளையும் அணுகிக் கண்டதில்லை. எனினும் தமிழில் எட்டுப் பத்து வரிகள் எழுதிவிட் டோம் எனும் கர்வத்தால் பெருமிதத்தால் பூரிப்பால் எவரையும் அடையாளங்களை வைத்து, தடயங்கள் தடவிப் பார்த்து, அனுமா னிக்க முயலாதீர் சமூகநீதி நாயன்மாரே!

எம் அடையாளம் உமக்கென்ன தொந்தரவு?

கட்டைப் பையில் பொதிந்து அனுப்பிய கருப்பு சிவப்புக் கரை யிட்ட துண்டைத் தூர எறிவது அறிவா? அல்லது முகம் துடைக்க, தோளில் போட, உடுத்துக் குளிக்க பயன்படுத்தவது அறிவா?

காவித்துண்டு என்றால் வெற்று மார்பை மறைக்காதோ? அரையில் சுற்ற ஆகாதோ?

உண்மை நாடுவது நோக்கமில்லை நமக்கு!
அனுமானங்களை நம்புவது இலகுவானது!

திரும்பத் திரும்பச் சொல்கிறேன். நீங்கள் தேடுவது எவராகவே னும் இருக்கலாம்! நாம் அவரில் ஒருவராக இருக்க நமக்கு ஒரு அரசாணையும் இல்லை!

இயற்கையின் கொடையான நிறங்களைக் கரவுத் தொழில் முனை யும் அரசியல்காரர்களின் முதலீட்டு நிறமாகக் கொள்வது என்பது பகை முரண்.

நிறங்கள் போலவே வாசனைகளும். புனுகு, சவ்வாது, சந்தனம், அத்தர், பன்னீர், அகில், சாம்பிராணி - சுராவை - தூவப் பொடி -குங்கிலியம் - குந்துருக்கம் - குந்திரிக்கம் எனும் பெயர்களில் வழங்கப்படும் மணப்புகைப்பொடி யாவுமே வாசனைத் திரவியங் கள். மாந்த குலத்துக்கானவை. மதச்சடங்குகளில் சில விரும்பிப் பயன்படுத்தப்பெறும் காரணத்தால் அவற்றின்மேல் மத அடையா ளம் ஏற்றுவது அறமா? வெளிப்படையாகக் கேட்டால் சந்தனம் இந்து அடையாளமும் அத்தர் இஸ்லாமிய அடையாளமுமா?

திருநெல்வேலியில் தங்கும் விடுதி வாசலில் கடை வைத்திருந்த ஒரு மேலப்பாளையம் பாய் என்னிடம் சொன்னார், 1989-ன் இறுதி யில், 'தம்பி, வாசனை கடவுள் அம்சம் அல்லவா!' என்று.

ஆம்! வாசனை இறை அனுபவம். இசையும் கடவுள் அம்சம். எனவே நாத உபாசனை என்கிறார்கள். நிறங்கள் தெய்வத்தன்மை கொண்டவை. மலர்கள் இறை ஏதாயினும் அர்ப்பணிக்கப்படுவதன் காரணம் - நிறம், வாசனை, அழகு! இறை - கடவுள் - பிதா - குதா - பஹவான் - பிரான் - ஸ்வாமி - சாமி எனும் சொற்கள் மீது அருசி உடையவர்கள் இயற்கை என்றே கொள்ளலாம் அப் பொருண்மையை.

மலர்கள் இறையம்சம் எனும்போது செந்தாமரையும் வெண்டாமரை யும் திருமகள், நாமகளின் இருக்கைகள் என்று இறும்பூது எய்தத் தேவையில்லை. எருக்கு நீலகண்ட சிவனின் தலையில் சூடப் பெற்ற மலர். 'வெள்ளெருக்கம் சடை முடியான்' என்பான் கம்பன், யுத்த காண்டத்தில்.



தாவரங்களில் அமைச்சர், மாமன்ற உறுப்பினர், மாவட்டச் செய லாளர், வட்டச் செயலாளர், ஊராட்சித் தலைவர் என உண்டா என்ன? வன்னி, கொன்றை, பாதிரி, மகிழம் அல்லது வகுளம், புன்னை, அரசு, அத்தி, எலுமிச்சை, வில்வம், பலா, ஆல், கடம்பு, நாவல், மருதம், பூளை, பராய், சண்பகம், இலுப்பை, புளி, மா, வெள்ளெருக்கு, பனை, காரை, புரசு அல்லது பலாசம், காட்டு முல்லை, அரளி, முல்லை, வஞ்சி, வஞ்சுளம், பாரிஜாதம்,

கல் ஆல், இலந்தை, கடுக்காய், குறும்பலா, கோங்கிலவு, ஆம ணக்கு, தில்லை, தேற்றா, செருந்தி, மல்லிகை, மந்தாரம், உத்தா லம் எனும் துருத்தி, வாழை, தருப்பை, நெல்லி, குருந்தம், மூங் கில், வேம்பு, புங்கம் எனும் புன்கு, சந்தனம், பாலை, வாகை, வீழி, விளா, காட்டு ஆத்தி, கிளுவை, பன்னீர், தென்னை, பிரம்பு, கோரை, கல்வாழை எனும் ஞீலி, ஊமத்தை, கண்டல், நாகலிங் கம், கருங்காலி எனும் ஈட்டி அல்லது தோதகத்தி, பிஞ்சிலம், பவ ளமல்லிகை, மாவிலங்கம், நார்த்தை, விழல் புல், துளசி, நந்தி யாவட்டம், வெள்வேல், குருக்கத்தி, சதுரக்கள்ளி, தாழை, அசோ கம், வடவால், வால்மிளகு, நொச்சி என எண்பத்தோரு தாவரங் கள் சிவ வைணவத் தலங்களின் தல விருட்சங்கள்.

இந்தத் தருணத்தில் இயல்பாக எனக்குள் எழும் கேள்வி! நம் தமிழ்த்துறைத் தலைவர் - பேராசிரியர்கள், தமிழாசிரியர்கள், திற னாய்வாளர்கள், படைப்பாளிகள், இமயம் தொட்ட சினிமா சிகரங் கள், பத்மஸ்ரீ முதல் பத்ம விபூஷண் வரை வாங்கியவர்கள், மேடை நாவலர்கள், பாவலர்கள் எனும் அருளாளர் கூட்டம் என் போர் இந்தத் தல விருட்சங்கள் எண்பத்து ஒன்றில் எத்தனை தாவ ரங்களை அடையாளம் காட்டுவார்கள்? தலவிருட்சம் என்றவுடன் சைவ-வைணவ-சாக்த-கௌமார-காணாபத்ய சமயங்களுடன் தொடர்புபடுத்திப் புறந்தள்ளல் வேண்டா!

அடையாளம் பற்றிப் பேசப் புறப்பட்டு ஆறலைக் கள்வன் போல அலைந்து கொண்டிருக்கிறேன்.

ஆடு - கோழி - மாட்டிறைச்சி பிரியாணி விரும்பித் தின்பவர் எல் லாம் இஸ்லாமியர் என்றும், அரவணை - சர்க்கரைப் பொங்கல் - அக்கார அடிசில் தின்பவரெல்லாம் வைணவர் என்றும் வரையறை செய்ய இயலுமா?

மார்ச் 23-ம் நாள், 2022-ம் ஆண்டு, சித்தூர் அரசுக் கல்லூரியில் எழுபத்தைந்தாம் ஆண்டுக் கொண்டாட்டங்களுக்காக அழைக்கப் பட்டிருந்த நான், பேராசிரியர், திறனாய்வாளர், எனது நண்பர் வேதசகாய குமார் உருவப்படமும் திறந்து வைக்கப் பணிக்கப் பட்டேன். விழா மங்கலம் முடிந்தபிறகு மதிய உணவுக்கு அழைத் துப் போனார்கள். பேராசிரிய நண்பர்களுடன் அமர்ந்து சட்டி பிரி யாணியும் மாட்டுக்கறியும் உண்டேன். எனவே நான் சைவ சமயத் தைச் சார்ந்தவன் இல்லை என்று ஆகிவிடுவேனா?

நானறிய என் இஸ்லாமிய நண்பர் சிலர் அசைவம் உண்ணாதவர். அது ஒவ்வாமை நோய்க் காரணங்களால் அல்ல. ‘சைவ’ என அடைமொழி பூண்ட இனத்தவர், எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண் டொழுகும் அந்தணர் சிலர் என்னுடன் அமர்ந்து கோழிக்கால் கடித்தவர்கள். அதுபோலவே நறை - நறவம் - தேறல் - மது - கள் அருந்துதலிலும். எனவே எதையும் பொதுமைப்படுத்திப் பார்த்து முன்முடிவு செய்யலாகாது. முன்முடிவு என்பதை Pre conceived Notion என்பர் ஆண்டவர் மொழியில்.

ஆகவே - பெரியோர்களே, தாய்மார்களே, உடன்பிறப்புக்களே, கண்மணிகளே, இரத்தத்தின் இரத்தங்களே - தோழர்களே - தம்பி களே தங்கையரே - சகாக்களே - நிறம், மணம், இசை, அழகு யாவும் அனைத்து உயிரினங்களுக்கும் ஆனவை.

காவியைப், பச்சையைக், கருப்பை, நீலத்தைச், சிவப்பை, வெள் ளையை, இந்நிறங்களின் இரண்டு அல்லது மூன்று அடுக்கினைப் போர்த்தியும் ஆட்டியும் திரிவதனால் அந்நிறங்கள் அறமற்ற, நேர் மையற்ற, தூய்மையற்ற, உண்மையற்ற அரசியல் இயக்கங்களின் நிறங்கள் ஆகிவிடா!

மாணிக்கவாசகரின் திருவெம்பாவையில், ‘ஏழில் இயம்ப இயம்பும் வெண்சங்கு எங்கும்’ என்பார். ‘வெண்ணாகக் கருங்கண் திரை சேர் மடந்தை’ என்றும் ‘பச்சையனே செய்ய மேனியனே’ என்றும், ‘பொங்கு அரவு அல்குல் செவ்வாய் வெண்ணகை கரிய வாள் கண் மங்கையோர் பங்க போற்றி! மால் விடை ஊர்தி போற்றி! என்றும் சொல்வார் திருச்சதகத்தில். ‘சோலைப் பசுங்கிளியே!’ என் பார் திருத்தசாங்கத்தில். சதம் வேறு தசம் வேறு என்பதை அறி- வோம்தானே! செந்திலாப் பத்து பகுதியில், ‘சேலும் நீலமும் நில விய வயல் சூழ் திருப்பெருந்துறை மேவிய சிவன்’ என்பார். நீலம் எனில் நீல நிறமுடைய குவளைப் பூக்கள் என்றும் சேல் எனில் கெண்டை மீன்கள் என்றும் பொருள். ‘சேல் பட்டு அழிந்தது செந் தூர் வயற் பொழில்’ என்று சீர்காழிப் பாடிக் கேட்கவும் கொடுத்து வைத்திருக்க வேண்டும்.

திருப்பொற்சுண்ணம் பாடும்போது,

*‘வையகம் எல்லாம் உரல் அதாக,*
*மா மேரு என்னும் உலக்கை நாட்டி*
*மெய்யெனும் மஞ்சள் நிறைய அட்டி*
*மேதகு தென்னன் பெருந் துறையான்*
*செய்ய திருவடி பாடிப்பாடிச் செம்பொன்*
*உலக்கை வலக்கை பற்றி*
*ஐயன் அணி தில்லைவாணனுக்கே*
*ஆடப் பொற்சுண்ணம் இடித்து நாமே’*

என்பார். யாவற்றுக்கும் மேலாக, மாணிக்கவாசகர் சிவபுராணம் பாடும்போது,

*‘கறந்த பால் கன்னலொடு நெய் கலந்தாற் போலச்*
*சிறந்த அடியார் சிந்தனையுள் தேன் ஊறி நின்று*
*பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்*
*நிறங்கள் ஓர் ஐந்துடையாய்!’*

என்பார்.

எனவே, நிறம், மணம், இசை, அழகு என்பன எம்மதமாயினும் அம்மதத்தின் பரம்பொருளுடன், இயற்கையுடன் இயைந்தவை. இதில் நிறக்குருடுகளின், மணமறிய இயலா நாசியரின், இசையு ணர்வு இல்லா செவியரின், அழகு எதுவெனத் தீர்மானிக்க இயலா மனமிலாதவரின் மதிப்பீடுகளைக் கொண்டு நாம் எதனையும் அள விடுதல் தகாது. நமது முன் தீர்மானங்களின் தாக்கத்தால் அற்பத் தனமான அர்த்தப்படுத்தல்களில் ஆட்பட வேண்டாம். ஆன்மா என்பது வெளி அடையாளங்களில், புறத்தோற்றங்களில் இல்லை நாயன்மாரே!

நாகூர் அனீபா விரும்பிக் கேட்பவன் நான். ‘இறைவனிடம் கையேந்துங்கள், அவன் இல்லை என்று சொல்வதுமில்லை’ என்ற பாடலை அறுபது ஆண்டுகளாகக் கேட்பவன். மதுரை சோமுவின் ‘என்ன கவி பாடினாலும், உந்தன் உள்ளம் இரங்கவில்லை’ பாடலை எப்போது கேட்டாலும் கண்கள் கலங்குகின்றன. ‘என்னப் பனல்லவா! என் ஐயன் அல்லவா! பொன்னப்பனல்லவா! பொன் னம்பலத்தவா!’ என்று தண்டபாணி தேசிகர் குரலிலும் பாவத்திலும் பரவசத்திலும் இறைஞ்சுதலிலும் ஒன்றுபடுபவன். உஸ்தாத் நுஸ் ரத் பத்தே அலிகான், ‘தம் மஸ்த் கலந்தர் மஸ்த் மஸ்த்’ எனப் பாடும்போது ஏன் மெய்ம்மறப்பு ஏற்படுகிறது?

அண்ணாமலையின் சாந்நித்தியத்தில் தியானம் கூடும் என்றும் கன்னி மேரி சந்நிதானத்தில் கூடாது என்றும் உண்டா? மனத்தடை- களைக் கடக்க மாட்டாதார்க்கு மதத் தடைகளையும் நீக்கல் அரிது.

பந்தி விளம்பும்போது அகப்பையில் வேறுபாடு காட்டுவார் எங்ஙனம் ஐயா ஆன்மீக வழிகாட்டிகளாக அமைய இயலும்? ‘ஞானமற்ற நெஞ்சகத்தில் நல்லதேது மில்லையே!’ என்பார் சிவ- வாக்கியர்.

எனவே திரும்பத் திரும்பத் திரும்பவும் சொல்வேன்: பனை மரத்து மூட்டில் நின்று எதைப் பருகினாலும் அது கள் என நம்புவது பொதுப்புத்தி. குறுகிய புத்தி. பொதுப்புத்தி உடையவர் சிலர் தம்மை மேதைகளாகக் கருதிக் கொண்டு அறவுரையும் அறிவுரை யும் ஆற்ற வருவது அற்ப புத்தி!



nanjilnadan@thaiveedu.com

# பத்துப்பாட்டில் பட்டினப்பாலை




## பூம்புகாரின் கொடிகள்...

- பொன்னையா விவேகானந்தன்

சங்ககால இலக்கியங்களில் கொடிச்சிறப்பு பலவாறாகப் போற்றப்பட்டிருக்கின்றது. கொடிகளின் வழியே இனம், நாடு போன்றவற்றின் அடையாளங்களும் ஆளுமைகளும் வெளிப்படுத்தப்பட்டன. கொடியேற்றும் வழக்கு சங்ககாலத்தில் பெரிதும் போற்றப்பட்டமைக்குப் பட்டினப்பாலை பெருஞ்சான்றாகத் திகழ்கின்றது.

பல்வகைக் கொடிகளின் சிறப்புகளைக் கூறும் பட்டினப்பாலை, தெய்வக்கொடியுடன் கொடி பற்றிய செய்திகளைக் கூடத் தொடங்குகின்றது.

குற்றமற்ற தெய்வம் வாழுகின்ற மலர்களால் அழகுபடுத்தப்பட்ட கோவிலின் வாசலில் பலராலும் வணங்கப்படுகின்ற கொடி பறந்து கொண்டிருக்கின்றது. அடுத்து வீரர்கள் வணங்கும் இடத்திலே ஏற்றப்பட்டிருக்கும் கொடிகள் பற்றிக் குறிப்பிடுகின்றார். இவை நடு கற்கள் நடப்பட்ட இடமாகவும் இருக்கலாம். பூசி மெழுகிய நிலத்தில் படையல் செய்யப்படுகின்றது அங்கு நடப்பட்டிருக்கும் வேல்களில் ஆறு சுமந்துவந்த கரும்பின் பூவைப் போன்ற மென்மையான துணிகளால் செய்யப்பட்ட கொடிகள் பறக்கின்றன.

கேட்டல் உள்ளிட்ட பல்வகை அறிவைப் பெற்ற சான்றோர்கள் வாதஞ்செய்வதற்கு கூடும் இடத்திலும் கொடிபறக்கின்றது. வாதஞ் செய்ய வருவோருக்கு அச்சம் ஊட்டுவதாகவும் இக்கொடி காணப்படுகின்றது. கட்டப்பட்டிருக்கும் தறிகளையே அசைக்கவல்லதான வணிகர்களின் பெரிய மரக்கலங்களிலும் வணிகர்களால் விரும்பப்படும் கொடிகள் பறக்கின்றன.

மீனை வெட்டியும் இறைச்சியை அறுத்தும் பொரிக்கின்ற ஒலியையுடைய, பலரும் செல்லும் கள்ளுக்கடைகளிலும் கொடிகள் பறக்கின்றன. இவை போன்று பல்வகைக் கொடிகள் காவிரிபூம்பட்டனத்தில் கதிரவனின் கதிர்க்கற்றைகள் உள்நுழையா வண்ணம் நெருங்கிப் பறந்தன என்கின்றார் புலவர்.

இதில் அரசகொடிகள் பறக்குமிடங்கள் தவிர்த்து மக்கள் கூடும் இடங்களான, வழிபாட்டிடங்கள் அறிவுசார் மண்டபங்கள், வணிகர் சிறக்கும் துறைமுகம், உள்ளம் களிக்கும் கள்ளுக்கடை போன்ற இடங்களில் பறக்கும் கொடிகளை மட்டுமே புலவர் குறிப்பிட்டுள்ளார். இது மக்களின் நிறைவான வாழ்வை வெளிப்படுத்தும் கொடிகளாகவே நாம் கருத வேண்டும்.

## தொழிற் சிறப்பு:

ஒரு நாட்டின் சிறப்புக்கு வழிவகுக்கும் தொழில்களாக உழவையும் வணிகத்தையும் குறிப்பிடலாம். தமிழர் வரலாற்றில் இவை இரண்டுக்கும் தொன்றுதொட்டே சிறப்பிடம் உண்டு. பட்டினப்பாலையும் இவ்விரு தொழில்சார் பிரிவுகளையுமே குறிப்பிடுகின்றது.

பட்டினப்பாலை ஏனைய சங்கவிலக்கியங்களை விடவும் சற்றே மாறுபாடாக உழவைப் போற்றுகின்றது.

பகைமை கருதாமல் நீரின் நடுவில் மீன் பிடித்தும் நிலத்தின் மேலும் மகிழ்ந்தும் சுற்றம் தழைக்க இனிமையாகத் துயிலும் மீனவர் முற்றங்களில் மீன் பாயும். இறைச்சியை குடிசைகளின் முன் விற்பவர்களின் குடிசைகளின் முன் விலங்குகள் திரண்டு நிற்கும். கொலை, களவு செய்வோர் இருக்க மாட்டார்கள். தேவர்கள் தவறாது போற்றப்படுவார்கள். வேள்விகள் செய்து படைக்கப்பட்ட உணவு உண்ணக் கிடைக்கும். இடையர்கள் நல்ல பசுக்களுடன் எருதுகளைப் பாதுகாப்பார்கள். நான்மறை வேதங்கள் ஓதும் மறையவர் புகழ் எங்கும் பரவும். பண்ணியம் எனப்படும் பண்டங்களை செய்து வருவோர் வேண்டிய உணவை உண்பார்கள். காவிரிப்பூம் பட்டனத்தில் இவ்வளவும் சிறப்பாக நடப்பதற்கு அனைவருக்கும் அடிப்படைத் தேவையாக அமையும் உணவாகிய அரிசியைக் கொடுத்து, அறங்குறையாது வாழ்வோர் உழவர்கள். அனைவரும் இன்பத்தையும் ஆறுதலையும் வழங்கும் குளிர்ந்த நிழலைப் போன்ற உழவர்கள் என்றும் வளைந்த கலப்பைகளையே விரும்புவர்.

மீன் பிடிப்போரும் ஊன் விற்போரும் பண்டங்கள் செய்வோரும் உணவுக்கே உதவுகின்றனர். எனினும் அவர்கள் அரிசிச் சோற்றையே முதன்மை உணவாகக் கொண்டுள்ளனர். அதனால்த்தான் மீனவர் முற்றத்தில் அச்சமின்றி மீனும் பாய்கின்றது. ஊன் விற்போர் முற்றத்தில் பயமின்றி விலங்குகளும் திரள்கின்றன. அடிப்படைத் தேவையான சோறு வேண்டியளவு கிடைப்பதால் பசிக்காக நடத்தப்படும் கொலைகளும் இல்லை களவுகளும் இல்லை. கோடை வெய்யிலில் வாடும் உயிர்களுக்கு குளிர்நிழல் கொடுக்கும் மரம்போல் உழவர்கள் பசிப்போர் அனைவருக்கும் உணவு கொடுக்கின்றார்கள்.

பட்டினத்தில் சிறப்புற்றிருக்கும் பல நிகழ்வுகளின் வழியே உழவின் சிறப்பைப் போற்றியிருப்பது வியத்தற்குரியது.

வணிகர் குடியிருப்புகளையும் அவர்கள் வணிகம் செய்யும் கடைவீதிகளையும் உவகைதரும் உவமைகளோடு வர்ணித்திருப்பதுடன் சில வரலாற்றுக் குறிப்புகளையும் உருத்திரங்கண்ணளார் தருகின்றார்.

காவிரிப்பூம் பட்டினம் பெருந்துறைமுக நகரம் ஆதலால் அங்கு வணிகம் சிறந்திருப்பது இயல்பே. அறம் தவறாத வணிகர்களா-லேயே வணிகத்தின் மேன்மை என்றும் சிறக்கும். புகார் நகரத்திலும் அறம் குன்றா வணிகர்கள் இருந்தனர் என்ற செய்தியைப் பட்டினப்பாலை தருகின்றது.

ஏர் பூட்டி உழும் கலப்பையிலே மாடுகள் கட்டப்பட்டிருக்கும் நீண்டதடியை இப்போது நுகத்தடி என்று கூறுவார்கள். அத்தடி முறையாக அளக்கப்பட்டு, நடுவிடத்தைத் தெரிந்து அவ்விடத்தே துளையிட்டு கலப்பையின் நீண்ட தடியைப் பொருத்துவார்கள். இந்த நடுவிடம் மிகச் சரியாக இருந்தால்தான் சுமையைக் காளைகள் சரிபாதியாகப் பங்கிட்டுக் கலப்பையை இழுக்கும். இந்த நடுவிடத்தைப் போல, நடுநிலைமை கொண்ட நெஞ்சத்தவர்கள் புகார் நகரத்து வணிகர்கள். 'நெடுநுகத்துப் பகல் போல நடுவு நின்ற நல் நெஞ்சினோர்' எனப் புலவர் சுருக்கமாகக் கூறிய உவமையையே இத்துணை விரிவாக எடுத்துரைக்க வேண்டியதாயிற்று. பின்னாட்களில் வள்ளுவர் பயன்படுத்திய நிறைகோல் என்ற உவமைக்கு முந்தைய உவமையிது.

பழிக்கு அஞ்சும் இயல்பு கொண்ட வணிகர்கள் என்றும் உண்மையையே உரைப்பர், தம்முடையதையும் பிறருடையதையும் ஒப்பாக எண்ணுவர். தாம் கொள்ளும் பொருட்களை மிகுதியாகக் கொள்ளார். கொடுக்கும் பொருட்களையும் குறைவாகக் கொடுக்கார். பல்வகைப் பண்டங்களையும் பொருத்தமான விலைகளை கூறி விற்பார்கள் பூம்புகார் நகரத்து வணிகர்கள்.

இவ்வாறான வணிகர்கள் வணிகம் செய்யும் கடைவீதிகளின் சிறப்புகள் மற்றுமொரு பாடலில் அழகுறக் கூறப்படுகின்றன.

குதிரைகள் தமிழ்நாட்டைத் தாயகமாகக் கொண்ட விலங்குகள் அல்ல. அரேபிய நாடுகளே குதிரைகளின் தாயகம். மரங்கலங்கள் வழியாக கொண்டுவரப்பட்ட நிமிர்ந்த நடைகளைக் கொண்ட குதிரைகள் அந்த வீதிகளிலே நிற்கின்றன.

வண்டிகளில் கொண்டுவரப்பட்ட கரிய மிளகு மூட்டைகளும் வடமலையில் இருந்து எடுத்துவரப்பட்ட பொன்னும் குடகுமலையில் தோன்றிய சந்தனமும் அகிலும் தென்கடலில் மூழ்கிப் பெறப்பட்ட முத்தும் கீழ்த்திசைக் கடலின் உயர் வளமான பவளமும் கங்கை ஆற்றில் வழியாக எடுத்துவரப்பட்ட பொருட்களும் காவிரி ஆற்றினால் விளைந்த பொருட்களும் ஈழத்தில் உள்ள பொருட்களும் காழகம் என்று அழைக்கப்பட்ட மியான்மார் நாட்டின் பொருட்களும் இன்னும் பல அரிய பொருட்களும் கனம் தாங்காமல் நிலமே நெளியும் வகையில் திரண்டும் ஒன்றோறொன்று கலந்தும் அந்த அகன்ற தெருவில் காணப்பட்டன.

*'காலின் வந்த கருங்கறி மூடையும்,*
*வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்*
*குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்*
*தென்கடல் முத்தும், குணகடல் துகிரும்*
*கங்கை வாரியும், காவிரிப் பயனும்*
*ஈழத்து உணவும், காழகத்து ஆக்கமும்..'*

ஈழம் உள்ளிட்ட பல்வகைப் பகுதிகளில் இருந்து கொண்டுவரப்பட்ட அத்தனை பொருட்களையும் பூம்புகார் கடைவீதியில் பெறலாம் என்ற செய்தியை இது ஆழமாகவும் அழகாகவும் பதிவு செய்கின்றது. எங்கெங்கு தோன்றிய என்னென்ன பொருள் சிறப்புடையன என்ற வரலாற்றுச் செய்திகளையும் இங்கே காண்கின்றோம்.

பிறநாட்டு மரக்கலங்களும் பூம்புகாரை வந்தடைந்து வணிகங்களை மேற்கொண்டிருந்தன. இந்த மரக்கலங்களில் வந்த பிற நாட்டு வணிகளர்களும் புகாரிலே கூடியிருந்தனர். இச்செய்தியைத் தவறாது பதிவு செய்கின்றது பட்டினப்பாலை.

பல்வேறு நாடுகளுக்கும் சென்று பல்வகை மக்கள் கூட்டங்களுடனும் பழகி, வெவ்வேறான உயர்ந்த அறிவுடைய சான்றோராகிய பலரும் தொன்மையான விழாக்கள் நடக்கும் ஊருக்குச் சென்று கூடுவார்கள். இதைப்போன்றே, பழிகள் ஏதுமில்லாத நாடுகளில் வாழும் பல்வகை மொழிகளை அறிந்து, புலம்பெயர்ந்து வந்த மக்களும் வணிகர்களும் ஒன்றாகவும் இனிமையாகவும் குறைவில்லாத சிறப்புடனும் வாழும் இடமே காவிரிப்பூம்பட்டினம் என்பதை

*'மொழி பல பெருகிய பழி தீர் தேஎத்துப்*
*புலம் பெயர் மாக்கள் கலந்து இனிது உறையும்,*
*முட்டாச் சிறப்பின் பட்டினம்..'*

என அழகுறக் கூறுகின்றார் உருத்திரங்கண்ணனார்.

தாயகத்தை விட்டகற்று பிறநாடுகளிலே வாழும் தமிழர்களைப் புலம் பெயர்ந்தோர் என்ற சொல்லால் அழைக்கின்றோம். இந்தச் சொல்லை எமக்கீந்தது பட்டினப்பாலையே. தமிழகத்துச் சான்றோர் ஒருவரே முதன்முதலில் ஈழத்தை விட்டகன்ற மக்களைக் குறிக்கப் புலம்பெயர்ந்தோர் என்ற சொல்லைப் பயன்படுத்தினார். அன்றைய நாட்களில் பூகார் நகரத்தில் பல்லினப் பண்பாட்டுச் சமூகம் இருந்திருக்கின்றது என்பதை நாம் இவ்விலக்கியம் வாயிலாக உணரலாம்.

இதுவரையில் கூறப்பட்ட சிறப்புகளும் செய்திகளும் காவிரிப்பூம்பட்டினத்தின் உயர் மேன்மைகளை உணர்துவதாக அமைந்தன. இத்துணைச் சிறப்புகள் பட்டணத்தில் நாமும் வாழ்ந்திருக்க வேண்டுமே என எண்ணத்தை எமக்குள் ஏற்படுத்துகின்றது பட்டினப்பாலை

## அகப்பொருட் சிறப்பு:

ஏற்கனவே குறிப்பிட்டதைப்போன்று, பூம்புகாரின் சிறப்புகளைக் குறிப்பிடுவதற்கு 218 அடிகளைப் பயன்படுத்திய புலவர், தொடரும் அடிகளில் திருமாவளவனின் சிறப்புகளை அழகுறக் கூறுகின்றார். இளமை, வலிமை, அறிவு, ஆளுமை என் பலநிலைகளில் திருமாவளவன் பெருமைகள் விதந்துரைக்கப்படுகின்றன.

இக்கட்டுரையானது பெரிதும் புகார் நகரத்தின் வர்ணனைகளையே சிறப்பித்து நிற்பதாலும் சுருக்கம் கருதியும் பட்டினப்பாலை கூறும் வளவன் சிறப்புகளை பெரிதும் எடுத்துரைக்கவில்லை எனினும் புறத்திணைச் சிறப்புகளை முன்னிலைப்படுத்திய பட்டினப்பாலை எவ்வகையில் அகத்திணை இலக்கியமானது என்பதை சிறிதே விளக்க முற்படுகின்றது.

தலைவனாவன், பொருள் தேடும் பொருட்டுப் பிரிவதற்குரியவன் என்று அகத்திணை மரபுகள் கூறுகின்றன. பிரிதல் என்பது பாலைத்திணைக்குரிய ஒழுக்கம். பிரிவுக்குட்பட்டு பொருள் தேடச் செல்லும் வழிகளும் பொருளைத் தேடியபின் திரும்பும் வழிகளும் கொடியவை. எனவேதான் இவை பாலைத்திணைக்குரியவையாகின்றன.

உருத்திரங்கண்ணனார் பாலை பாடுவதில் வல்லவர். அவர் பாடியதாக குறுந்தொகையிலும்(352) புறநானூற்றிலும் (167) சேர்க்கப்பட்டிருக்கும் பாடல் இரண்டும் பாலைத்திணைக்குரியவையே. தான் விரும்புரும் பாலைத்திணை ஒழுக்கத்தை மிக நேர்த்தியாகப் பட்டினச் சிறப்புடன் இணைத்துவிடுகின்றார்.

வளவன் பிரிவுற்றுச் செல்லும் காலம் நெருங்குகின்றது. நெஞ்சாளும் நெஞ்சத்தாளைப் பிரிதல் அரசனேயாயினும் எளிதன்று. பிரித்து பொருள்தேடச் செல்லுதல் ஆடவர்க்கு அழகு. மன்னனாயினும் பகையழித்துப் பொருள் தேடல் மரபு. பிரியத் தயங்கும் வளவனுக்கு இதை எடுத்துரைப்பது யார்? இதற்குப் பிற மானுடர் பொருத்தமாகார் எனக் கருதிய புலவர் அவன் நெஞ்சையே வினாக் கேட்கத் தூண்டி விடுகின்றார்.

வளவனைப் பார்த்து அவன் நெஞ்சே கேட்கின்றது.. 'பொருள் தேடப் பிரியலாமா?'

*'முட்டாச் சிறப்பின் பட்டனம் பெறினும்,*
*வார் இருங் கூந்தல் வயங்கு இழை ஒழிய*
*வாரேன், வாழிய நெஞ்சே'*

என்கின்றான் வளவன். 'பெருஞ் சிறப்புகளையும் கொண்ட பட்டினத்தையே எனக்குத் தந்தாலும் நீண்ட கரிய கூந்தலைக் கொண்டவளும் ஒளி சிந்தும் அணிகலன்களையுடைவளுமான என் தலைவியை விட்டுவிலகி நான் வரமாட்டேன். என் நெஞ்சே நீடு வாழ்வாயாக' என்பது வளவன் மறுப்பு.

இலக்கியத்தின் நிறைவில் மீண்டும் அகமரபைப் பொருத்தமுறக் கூறி இலக்கியத்தை நிறைவு செய்கின்றார் புலவர்.

219வது அடியில் 'தலைவியைப் பிரியேன்' என்று தலைவன் கூறியதற்குப் புலவர் 299வது அடியில் காரணம் கூறுகின்றார்.

வளவனின் பகைவர்களைக் கொல்லும் வேல் மிகக் கொடியது. பிரிவுற்றுச் செல்லும் கொடும் வெய்யில் மிக்க காடு அந்த வேலைவிடக் கொடியது. ஆனால் அவன் தலைவின் மென்தோள்கள் மிகக் குளிர்ச்சியானவை. குளிர்மை நிழலாகத் திகழும் செங்கோலை விடக் குளிர்மையானவை அவை. ஆகவே முட்டாச் சிறப்பின் பட்டனம் பெறினும், வார் இருங் கூந்தல் வயங்கு இழை கொண்ட தலைவியை அவன் பிரியான் என்கின்றார் கடியலூர் உருத்திரங்கண்ணனார்.

## நிறைவுரை:

சங்ககாலத்தே தோன்றிய இலக்கியங்களில் ஒரு நகரத்தின் சிறப்புகளை நேர்த்தி வழுவா நெறிநின்று தொகுத்துக் கூறிய முதல் இலக்கியமாகப் பட்டினப்பாலையைக் கருதலாம். உயர்வான உவமையணிகளையும் படிமங்கள் என்று கூறக்கூடிய கவிமரபுகளையும் நவிலும்தோறும் நயம் காணத்தக்க சொல்லாட்சிகளையும் இவ்விலக்கியம் கொண்டிருக்கின்றது.

அக்காலத்தோர் அணிந்த ஆடைவகைகள், அருந்திய மதுவகைகள், வணிகக்கடைகளில் கிடைக்கும் பொருட்கள், பன்நாட்டார் வருகை எனப் பல வரலாற்றுச் செய்திகளையும் இது குறிப்பிடுகின்றது.

பட்டினப்பாலை பின்னாட்களில் தோன்றிய இலக்கியங்களுக்கு வழிகாட்டியாகவும் திகழ்ந்திருக்கின்றது எனக்கருதலாம். வான்மழையைப் போற்றித் தொடங்கிய பண்பை நாம் திருக்குறளில் காண்கின்றோம்.

ஒரு நகரத்தின் அழகை வர்ணிப்பதில் பட்டினப்பாலை ஒரு தனித்துவமான மரபை முதன்முதலாகத் தோற்றுவித்தது எனக் கூறின் அது தவறாகாது. பின்னாட்களில் தோன்றிய வர்ணனை மரபுகளுக்கு இதுவே வழிகாட்டியாகின்றது.

வீதியிலே தலைவன் உலாச் செல்லும்போது ஏழு பருவத்துப் பெண்களும் தலைவனைக் கண்டு மகிழ்தல் உலா சிற்றிலக்கியத்தின் பண்பு. இதன் சாயலையும் நாம் பட்டினப்பாலையில் காண்கின்றோம்.

பட்டினத்தின் சிறப்புகளைக் கூறியும் பாலைத்திணையின் அகமரபைச் சுட்டியும் செல்வதால் இது பொருத்தமுறப் பட்டினப்பாலை எனப் பெயர் பெற்றது. இந்நூல் பற்றிய, சமகாலத்துக்கேற்ற மொழிநடையோடு கூடிய முழுமையான ஆய்வுநூல்கள் தோன்றுமாயின் இவ்விலக்கியத்தின் பயனை மேலும் துய்த்து இன்புற முடியும்.

நன்றி!



vivekanandan.p@thaiveedu.com

# இசைத் தமிழ்ப் பாடற்பரப்பும் சமகாலப் பயன்பாட்டு நிலையும்

18

- கௌசல்யா சுப்பிரமணியன்

இசைத் தமிழ்ப் பாடற்பரப்பினையும் அவற்றின் சம காலப் பயன் பாட்டு நிலைகளையும் ஆராயும் இத் தொடரில் 'மகாகவி சுப்பிரமணியப் பாரதியார்' பாடல்களுக்கு 'உந்துசக்தி'களாகத் திகழ்ந்தவர்கள் வரிசையில் திரிகூடராசப்ப கவிராயர் பற்றி நோக்கிவருகிறோம். இவ்வகையில் சென்ற கட்டுரையில் முதலில் திரிகூடராசப்ப கவிராயரின் வரலாறு பற்றிய குறிப்புகளை நோக்கினோம். அதன் தொடர்ச்சியாக அவ-ருக்குப் புகழ் ஈட்டிக்கொடுத்த ஆக்கமான 'திருக் குற்றாலக் குறவஞ்சி' என்ற பிரபந்தம் தொடர்பான தொடக்கநிலைக் குறிப்பு கள் முன்வைக்கப்பட்டன. அவ்வகையில் 'குறவஞ்சி' என்ற இலக்-கியவகையின் தோற்றம், தொடர்ச்சி ஆகியனசார்ந்த பல முக்கிய வரலாற்றுத் தகவல்கள் அக்கட்டுரையில் எடுத்துரைக்கப்பட்டன.

அதன் தொடர்ச்சியாக அமையும் இக்கட்டுரையிலே மேற்படி வர லாறுசார்ந்த மேலதிக தகவல்கள் சில முதற்கண் நோக்கப்படவுள் ளன. அவ்வகையில் முதலில், 'குறவஞ்சி' என்ற இலக்கியவகை யின் கதையம்சத்தின் இரண்டாவது பகுதி இங்கு கவனத்துக்கு வருகிறது. அதனையடுத்து, 'குறவஞ்சி' ஆக்கங்களில் பயன்படுத் தப்படும் பா-பாவின வடிவங்கள் மற்றும் அவற்றின் இசை-நடனப் பயன்பாட்டம்சங்கள் ஆகியன பற்றி சுருக்கமாக இங்கு முன்வைக் கப்படவுள்ளன. இவற்றையடுத்து நிறைவாக, திரிகூடராசப்ப கவி ராயரின் 'திருக்குற்றாலக் குறவஞ்சி'யின் பாடற்பகுதிகள் சில இங்கு நமது பார்வைக்கு இட்டுவரப்படவுள்ளன. 'குறவஞ்சி'யின் கதையமைப்பின் முதலாவது பகுதியானது, குறத்தியானவள் தலைவிக்குக் குறிசொல்லிப் பரிசும் பாராட்டும் பெறுவதுடன் நிறைவடைகிறது. அவ்வாறான பரிசு பாராட்டுகளால் மகிழ்வடைந் திருக்கும் குறத்தியைத்தேடி அவளது கணவனான குறவன் (சிங்கன்) வருவதிலிருந்து இரண்டாவது பகுதி தொடங்குகிறது. பொதுவாக, குறவஞ்சி நாடகங்களில் குறி சொல்லியதன் பின்னர் தலைவன், தலைவி, தோழி என்பவர்கள் மேடையினின்று மறைந்து விடுவார்கள். செவ்வியற் பண்புடனான பக்திச் சுவையுடைய முற்ப குதிக் கதையம்சம் இத்துடன் நிறைவடைந்துவிடும். இரண்டாவது பகுதியிலேயே குறவன் இக்கதையம்சத்தில் அறிமுகமாகிறான்.

குறவனுக்கு 'நூவன்' அல்லது 'குளுவன்' என்ற ஒரு தோழன் இருப்பான். 'குறவஞ்சி'ப் பாத்திரப் படைப்பில் சிங்கனுக்கு வேட் டையாடுவதில் துணையாக இருப்பவன் இவனே. இவ்விருவரும் பொதுவாகக் குறித்த பெயர்கள் சுட்டி அழைக்கப்படுவதில்லை. பொதுவான பெயரே இவர்களுக்கு அனைத்துக் குறவஞ்சி ஆக் கங்களிலும் காணப்படும்.

சில குறவஞ்சிகளில் சிங்கன் முதலில் தோன்றுவான், சிலவற்றில் தோழனான நூவனே முதலில் தோன்றுவான். இப்பாத்திரங்களின் இயல்புகள் பற்றி இவ்விடத்தில் முக்கியமாகக் கூறவேண்டும். நூவன் கையில் ஈட்டி வைத்திருப்பான். சிங்கனோ வாழ்வீச்சில் சிறந்தவனாக இருப்பான். நூவன் ஈட்டியால் பூனையைக் குத்திப் பிடிக்கும் நகைச்சுவைப் பாத்திரமாகவும் சில சமயங்களில் காட்சி தருவான். சிங்கன் சிங்கிக்கிடையில் ஏற்படும் பிணக்குகளைத் தீர்த்துவைப்பவனும் இவனே.

குறவனான சிங்கன் அழகனாகவும் பல்கலை வல்லவனாகவும் மந் திர தந்திரங்கள் தெரிந்தவனாகவும் காதலும் பக்தியும் தோழமை யும் கொண்டவனாகவும் தொழிலாற்றும் திறமையுள்ளவனாகவும் திகழ்பவன். பக்திச் சுவை மிக்க முன்பகுதிக்கு ஈடாகக் காதற் சுவை கொடுக்கும் பிற்பகுதிக்குரிய முக்கிய பாத்திரமாகத் திகழ்ப வன் இவனேயாவான். குறத்தியாகிய சிங்கி குறிசொல்லப் புறப்பட் டதன் பின்னர் நீண்ட நேரம் திரும்பிவராததால் பிரிவுத்துயரடைந் திருந்த சிங்கன் தனித்து இருக்கமாட்டாது கவலையுற்று 'கள்' குடித்து மயங்குவான். தன் தோழனிடம் அவள் அங்க அடையா ளங்களைக்கூறித் தேடிக்கண்டு பிடித்தால் சன்மானம் தருவதாகக் கூறுவான். சில சமயங்களில் தேடும் இடங்களைப் பட்டியலிட்டு நூவனிடம் தேடச்சொல்வான்.

இவ்வாறான முயற்சியில் பல இடங்களிலும் தேடியும் கிடைக்காத சிங்கியைப்பின்னர் இருவருமாகத்தேடி இறுதியில் பாட்டுடைத்த லைவன் ஊரில் அவளைச் சந்திப்பார்கள். அவ்வேளையில் சிங்க னுக்கேற்படும் மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்து கூத்தாடுவான். இவ் வாறான கூத்தாட்டக்காட்சியை 'திருக்குற்றாலக் குறவஞ்சி' பின்வ ருமாறு காட்சிப்படுத்துகிறது.

*'கொண்டாடுஞ் சுந்தரர்க்குத் தோழர்திரி கூடவெற்பிற்*
*திண்டாடி நின்ற சிங்கன் சீராடுஞ் சிங்கிதனைக்*
*கண்டாடித் துள்ளாடிக் கள்ளாடுந் தும்பியைப்போற்*
*கொண்டாடிக் கொண்டாடிக் கூத்தாடிக் கொண்டானே'*

- பாடல் இல:114

இவ்வாறு, சிங்கியைக்கண்டு மகிழ்ந்த சிங்கன் அவள் பெற்ற பரி சுப் பொருட்களையும் - அதாவது அவள் பரிசுகளாகப் பெற்ற ணிந்துள்ள அணிகலன்களையும் - அவற்றால் அவளுக்கேற்பட்ட தோற்றப் பொலிவையும் கண்டு வியப்பும் பெருமகிழ்ச்சியும் அடை வான். அவ்வணிகலன்கள் பற்றிய தகவல்களை அறிந்துகொள் ளும் ஆர்வத்துடன் பலவாறான ஐய வினாக்களையும் அவன் எழுப்புவான். இவ்வகைப்பாடல்கள் 'திருக்குற்றாலக் குறவஞ்சி' யில் 'சிங்கனுக்கும் சிங்கிக்கும் சமவாதம்'(பாடல் எண்:115,110) என்ற தலைப்பிட்டு முறையே 22, 20 கண்ணிகளில் காணப்படுகி றது. இவ்வாறான வினாக்களுக்கு குறத்தி தரும் பதில்களால் திருப்தியடைந்த பின்னரே அவளுடன் அவன் கூடி மகிழ்வான்.

சிங்கி மீது சிங்கன் கொண்டிருக்கும் காதல் மற்றும் அவளை நினைந்து அவன் புலம்புதல் ஆகியன குறவஞ்சி ஆக்கங்கள் பலவற்றில் விரிவாகவே காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக, 'விருத்தம்', 'கீர்த்தனை', 'கண்ணி' ஆகிய பாடல்வகைகளில் இவ் வுணர்வம்சங்கள் பாமர மக்கள் இரசனைக் கேற்றவகைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

இப்பகுதிக் கதையம்சத்திலே மேற்படி கதைமாந்தரின் உரையா டல்களினூடாகக் குறவர் சமூகத்தின் வாழ்வியல் அம்சங்கள் பல வாறாகப் பேசப்படும். பின்னர் குறவனும் குறத்தியும் பாட்டுடைத் தலைவனின் சிறப்புக்களைப் பாடி வாழ்த்துவதோடு குறவஞ்சி நாடகம் பொதுவாக நிறைவு பெறும்.

குறவஞ்சி ஆக்கங்கள் பலவற்றிலும் இவ்வாறான நிறைவுப் பகுதிகள் வெவ்வேறு முறைமைகளில் அமைவதையும் காணமுடிகிறது. 'திருக்குற்றாலக் குறவஞ்சி'யில் சிங்கன் - சிங்கி உரையாடலுக்குப்பின் வாழ்த்துப் பகுதியோடு கதை நிறைவுறுகிறது. ஆனால் 'கும்பேசர் குறவஞ்சி'யில் சிங்கன் - சிங்கி உரையாடலுக்குப்பின் 'கும்பேசர்' 'ஜெகன்மோகினி'யுடன் தோன்றி அருள்புரிவதுடனேயே கதை முடிவடைகிறது. 'சிதம்பரக் குறவஞ்சி'யில் குறத்தி குறி சொல்லி முடிந்தவுடனேயே 'அம்பலவாணர்' தோன்றி 'அதிரூப மோகினி'யை அணைத்து அருள்புரிகிறார் என நிறைவுறுகிறது.

'திரு மயிலைக் குறவஞ்சி', 'மாத்தளை முத்துமாரியம்மன் குறவஞ்சி' ஆகியவற்றில் சிங்கள் - சிங்கி உரையாடற் காட்சிகளுடனேயே கதையம்சங்கள் நிறைவுறுகின்றன. இவ்வுரையாடல் காட்சிகளிலே எடுத்துக்கொண்ட பாட்டுடைத்தலைவனின் பெருமைகள் மற்றும் தலப்பெருமைகள் என்பன கூறப்படுகின்றன. ஸ்ரீ ந. வீரமணி ஐயரின் 'திருக்கேதீஸ்வரக் குறவஞ்சி'யில் திருக்கேதீஸ்வரக் குறத்தியானவள் குறி சொல்கையில் திருக்கேதீஸ்வரநாதர் திருநாமத்தை தலைமகளான கேதாரவல்லியிடம் கூறியதும் அவள் ஆனந்தத்தால் கண்ணில் நீர்வழிய நாணமுற்று முகம் சிவக்கத் தலை குனிகிறாள். பின்னர் குறி சொன்ன குறத்திக்குப் பரிசளித்து மகிழும் காட்சியுடன் கதையம்சம் நிறைவுறுகிறது.

இத்தகவல்கள் யாவற்றையும் நோக்குகையில் குறவஞ்சிகளின் நிறைவுப் பகுதிகள் மக்கள் ரசனைக்கேற்பவும் புலவனின் கற்பனைத் திறனுக்கேற்பவும் வேறுபாடுகள் கொண்டனவாகத் திகழ்கின்றமையை அவதானிக்க முடிகிறது. மக்களை மகிழ்விப்பதாக நிறைவுப் பகுதி அமையவேண்டும் என்பதில் அவற்றின் ஆசிரியர்கள் கவனம் செலுத்தியுள்ளார்கள் என்பதையும் இவற்றால் நாம் அறிந்து கொள்கின்றோம்.

### குறவஞ்சியின் பா வகைகளும் அவற்றின் இசையும்:

குறவஞ்சிகளின் கதையம்சத்தின் முற்பகுதியானது பேரின்பநிலை சார்ந்தது, பிற்பகுதியானது சிற்றின்ப நிலை சார்ந்ததாகும். இவ்வாறான வேறபாடுகளுக்கு ஏற்பவே அவற்றின் பாடல்கள், இசையம்சங்கள் ஆடல்கள் மற்றும் மொழிநடை ஆகியன அமைந்துள்ளன. முற்பகுதிப் பாடல்கள் சாஸ்திரீயமான செவ்வியலிசையிலும் பரதநாட்டிய ஆடல்களுடனும் அமைய, பிற்பகுதிப் பாடல்கள் எளிமையான நாட்டுப்புற இசையில் கிராமிய நடனங்களுடன் அமைகின்றன. முற்பகுதியில் செந்தமிழின் பயன்பாடு கூடுதலாக இருப்பதையும் பிற்பகுதியில் நாட்டார் வழக்கியல்சார் மொழிப்பயன்பாடு கூடுதலாக இருப்பதையும் காண்கின்றோம்.

தொடக்க காலங்களில் கோயில்களில் குறவஞ்சி நாடகங்கள் நடிக்கப்பட்டு வந்ததற்கான சான்றுகள் உள்ளன. 1860களில் கோப்பு நடராஜச் செட்டியார் என்பவர் கும்பகோணம் தேவஸ்தான தர்மகர்த்தாவாக இருந்துள்ளார் எனவும், அவர் கும்பேசுவரரின் ஒவ்வொரு வருட மாசிமகத் திருவிழாக்களின் போதும் 'கும்பேசர் குறவஞ்சி' நாடகத்தை மிகச் சிறப்பாக நிகழ்த்துவித்துள்ளார் எனவும் அறிகிறோம். (தகவல்: 'கும்பேசர் குறவஞ்சி' பாயிரச்செய்யுள்) இதே போன்று 'தஞ்சை சரபேந்திர பூபாலக்குறவஞ்சி'யும் தஞ்சை பிரகதீச்வரர் ஆலய திருவிழாக்காலங்களில் (இதற்கு இசையமைத்த தஞ்சை நால்வர் தொண்டாற்றிய கோயில்) எட்டாம் நாள் திருவிழாவான 'அஷ்டக் கொடி' அன்று இதற்கென அமைக்கப்பட்டுள்ள மேடையில் இசைநாட்டிய நாடகமாக 19ம் நூற்றாண்டு தொடக்ககாலத்திலிருந்து சிறப்பாக நடத்தப்பட்டு வந்துள்ளது. சுதந்திரத்திற்குப்பின் 1947ல் தேவதாசி ஒழிப்புச் சட்டம் சென்னையில் கொண்டுவரப்பட்டதால் இந்துக்கோயில்களுக்குப் பெண்களை நேர்ந்து விடுவது சட்டத்திற்குப் புறம்பானதாக கருதப்பட்டது. இதனால் இந்நாட்டிய நாடகங்கள் கோயில்களிலும் அரண்மனைகளிலும் நடத்தப்படுவது நிறுத்தப்பட்டது. இவ்வாறு கோயில்களில் இவ்வகைச் செயற்பாடுகள் வழக்கொழிந்து போனதும் அவற்றின் இசையும் பேணப்படாது அழிந்துபட்டது.

1944ம் ஆண்டில் சென்னை அடையாறு பிரம்மஞானசபைத் தலைவர் திரு. அருண்டேல் துரையின் மனைவியான திருமதி ருக்மணி அம்மையார் அவர்கள் வீணை கிருஷ்ணமாச்சாரியாரைக் கொண்டு 'திருக்குற்றாலக் குறவஞ்சி'ப் பாடல்களுக்கு புதிதாக இசையமைத்து நாட்டிய நாடகமாக அரங்கேற்றினார். அந்நிகழ்வினை அனைவரும் கண்டு பாராட்டினர். (தகவல்: திருக்குற்றாலக் குறவஞ்சி: கோயில் வெளியீடு: பதிப்புரை, 1945)

இவ்வாறான மீட்டெடுப்பு நிகழ்வைத் தொடர்ந்து குறவஞ்சிகள்பல புதிதாக இசையமைப்புகள் செய்யப்பட்டு மேடையேற்றப்பட்டன. அவ்வகையில் ஸ்ரீ பாபநாசம் சிவன் அவர்கள் இசையமைத்த 'கண்ணப்பர் குறவஞ்சி' மற்றும் 'கிருஷ்ணமாரி குறவஞ்சி' என்பனவும் இசைவாணர் திரு. வி.வி. சடகோபன் அவர்கள் இசையமைத்த 'விராலிமலைக்குறவஞ்சி'யும் இசைக்கலைஞர் திருமதி எம்.எல். வசந்தகுமாரி இசையமைத்த 'கும்பேசர் குறவஞ்சி'யும் தஞ்சை நால்வர் வழித்தோன்றலில் ஒருவரான தஞ்சாவூர் திரு கே.பி. கிட்டப்பா அவர்களும் திருமதி ஞானா குலேந்திரன் அவர்களும் இணைந்து இசையமைத்து வெளியிட்ட 'தஞ்சை சரபேந்திர பூபாலக் குறவஞ்சி'யும் குறிப்பிடத்தக்க முக்கியத்துவமுடையன.

இவற்றில் பெரும்பாலான குறவஞ்சிகளின் மூல ஏட்டுப் பிரதிகள் மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்களால் பல இடங்களிலிருந்தும் சேகரிக்கப்பட்டு பின்னர் அவரது அனுசரணையுடன் நிறுவப்பட்ட நூல்நிலையத்தில் பாதுகாக்கப்பட்டு வந்தவைகளாகும். சில நூலுருவாக்கம் பெற்றவைகளாகும். 'திருக்குற்றாலக் குறவஞ்சி' போன்ற சில அவற்றின் ஆசிரியர்களின் மரபினரால் பேணப்பட்டு நூலுருவாக்கம் பெற்றவையாகும். அவ்வகையில் இது 1912ம் ஆண்டளவில் முதற்பதிப்பும் பின்னர் தொடர்ந்து (1925,1937,1945) திருத்திய நான்கு பதிப்புகளைக் கண்டதாகும். கோயில் வெளியீடாக அமைந்த இந்நூலின் நான்காவது பதிப்பானது மேலே நாம் குறிப்பிட்ட ருக்மணி அருண்டேல் அம்மையார் அவர்களின் மேடையேற்றத்திற்குப் பின்னர் பதிப்பிக்கப்பட்டதாகும்.

முன்னர் குறிப்பிட்ட 'தஞ்சை சரபேந்திர பூபாலக்குறவஞ்சி' தொடர்பான மேலதிக தகவலொன்றும் இங்கு பதிவுபெறவேண்டிய முக்கியத்துவமுடையதாகும். தஞ்சை நால்வர் காலத்தில் தஞ்சை சரபோஜி மன்னரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு இயற்றப்பட்ட இவ்வாக்கமானது அந்நால்வரால் அக்காலத்திலேயே இசையமைக்கப்பட்டதாகும். இடையிடையே 'சொற்கட்டுகள்', 'சொற்கட்டுக் கோர்வை'கள், 'சுரக்கோர்வை'கள் என்பன அழகுறச் சேர்க்கப்பட்டுச் சிறந்த இசைநாட்டிய நாடகமாக இசைவடிவம் கொடுக்கப்பட்டதோடு மரபு வழியாக இவை பேணப்பட்டும் வந்ததைக் காண்கிறோம். இதன் ஆசிரியரும் தஞ்சை சரபோஜி மன்னரின் அரண்மனை அவைப்புலவராக இருந்தவர். எனவே இக்குறவஞ்சி அரண்மனையிலும் தஞ்சை பிருகதீசுவரர் கோயிலிலும் நீண்ட காலங்கள் சிறந்த முறையில் பாவனையில் பயின்றதொன்றாகும் என்பதை அவர் மரபினர் வாயிலாக அறிந்து கொள்கிறோம். (பார்க்க: நாட்டியப் பாட்டிசை தஞ்சை சரபேந்திர பூபாலக் குறவஞ்சி, எமது மூதாதையர் வழி இசை மரபு, கே.பி. கிட்டப்பா, ப: xvii-xx, 1994)

இதன் 71 பாடல்கள் கொண்ட ஏட்டுப்பிரதிகளை உ.வே. சாமிநாதையர் அவர்கள் சேகரித்து உரிய இராக தாளக் குறிப்புகளுடனும் குறிப்புரைகளுடனும் முதற்கண் பதிப்பித்தார்கள். பின்னர் தமிழ்ப் பல்கலைக்கழக இசைத்துறையின் ஒரு பகுதியாக நிறுவப்பட்ட 'தமிழ்ப்பண்ணிசை பாதுகாத்தல் அறக்கட்டளை'யானது 1994ம் ஆண்டில் இவற்றிலிருந்து 41 பாடல்களை மட்டும் தேர்ந்தெடுத்து ஸ்வர தாளக் குறிப்புகளுடன் வெளியிட்டுள்ளது. (நாட்டியப் பாட்டிசை தஞ்சை சரபேந்திர பூபாலக் குறவஞ்சி, இசைத் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், 1994) இந்நூலில் கீர்த்தனை வடிவத்தில் 25 பாடல்களும் கண்ணிகளாக 10 பாடல்களும் காப்பு, விருத்தம், நேரிசை ஆசிரியப்பா முதலியனவாகச் சில பாடல்களும் காணப்படுகின்றன. இப்பாடல்களுக்கான இசையமைப்பினைச் செப்பனிட தஞ்சை நால்வர் மரபுவழிவந்த திரு கே.பி. கிட்டப்பா அவர்கள் உதவியுள்ளார்கள். இப்பதிப்பிற்கு அக்காலத்தில் இசைத்துறைத் தலைவராக இருந்த திருமதி ஞானா குலேந்திரன் அவர்களும் திரு. கே.பி. கிட்டப்பாவுடன்

சேர்ந்து பதிப்பாசிரியராக இருந்துள்ளார்கள். ஸ்வரக் குறிப்புக்கள் போன்றவற்றுடன் குறவஞ்சி நாட்டிய நாடகத்திற்கேற்ற வகையில் பாடல்கள் அமைந்திருக்கும் சிறப்பு இந்நூலுக்குரியதாகும்.

அடுத்துப் பொதுவாகக் குறவஞ்சிகளில் பயன்படுத்தப்பட்டு வந்த பா வடிவங்கள் மற்றும் அவற்றுக்குப் பயன்படுத்திய இராகங்கள் பற்றிய சில இசைக் குறிப்புகள் கவனத்திற்கு வருகின்றன. பொது வாகக் குறவஞ்சியை நாம் 'கவிதை நாடக'மாகவும் 'இசை நாடக' மாகவும் 'நாட்டிய நாடகமாக'வும் பயன்படுத்திக்கொள்கிறோம். 'அகவல்', 'விருத்தம்', 'வெண்பா', 'கட்டளைக்கலித்துறை', 'கண்ணி', 'சிந்து', 'தெம்மாங்கு', 'கொச்சகக் கலிப்பா' முதலிய பா-பாவினங்கள் இவற்றில் பயின்றுள்ளன.

'காப்பு', 'அவையடக்கம்', 'நூற்பயன்', 'மங்களம்' முதலிய பகுதி கள் அமைந்த 'சிறப்புப் பாயிர'ப்பகுதிகளில் பெரும்பாலும் 'அறு சீர்', 'எண்சீர்' ஆசிரிய விருத்தங்களே பயன்பட்டுள்ளன. கட்டியக் காரன் வருகை 'ஆசிரிய விருத்த'மாக அமைகிறது. குறவஞ்சியின் வருகை, அவள் தோற்ற வருணனை, குறவஞ்சியின் தெய்வ வணக்கம், குறத்தி அண்டகோளம் பற்றிக் கூறுதல் என்பன 'அகவ லி'ல் கூறப்பட்டுள்ளன. 'தென்றலின் வருகை', 'புள்வரவு', 'பறவை படுத்தல்' என்பன 'வெண்பா'விலும் ஏனைய பகுதிகள் பெரும்பா லும் இசைப்பாடல்களாக 'சிந்து', 'கண்ணி', 'தெம்மாங்கு', 'தரு', மற்றும் 'கீர்த்தனை' ஆகியவற்றிலும் காணப்படுகின்றன. சிங்கன் - சிங்கி உரையாடல் 'கண்ணி'களில் அமைகின்றன. மேற்கூறிய பாடல் வடிவங்கள் பொதுவாக அனைத்துக் குறவஞ்சிகளிலும் இடம்பெற்றுள்ளமையை நோக்கமுடிகிறது.

இவற்றிலமைந்த மேற்சுட்டிய இசைப்பாடல்கள் பெரும்பாலும் இராக தாளங்களுடனேயே பதிப்பிக்கப்பட்டுள்ளன. 'தோடி', 'கல் யாணி', 'பைரவி', 'காம்போதி', 'அடானா', 'முகாரி', 'பிலஹரி', 'நீலாம்பரி, 'எதுகுலகாம்போதி', 'தர்பார்', 'தன்யாசி', 'பேகட(பியா-கடை)', 'அடாணா' 'புன்னாகவராளி', 'பந்துவராளி', 'ஆகிரி', 'தோடி' முதலிய இராகங்கள் 'திருக்குற்றாலக் குறவஞ்சி'யில் பயன்படுத்தப்பட்டுள்ளன. 'பந்துவராளி', 'ஆரபி', 'சங்கராபரணம்', 'பைரவி', 'காம்போதி', 'முகாரி', 'தோடி' என்பவை 'சிதம்பரக்குற வஞ்சி'யிலும் 'ஹம்சத்வனி', 'சுருட்டி', 'நாட்டைக்குறிஞ்சி', 'ஆனந்த பைரவி', 'வசந்தா', 'செஞ்சுருட்டி', 'தோடி', 'மத்யமாவதி என்பவை 'திருமயிலைக் குறவஞ்சி'யிலும் பயன்படுத்தப்பட்டுள்ளதைக் காண்கிறோம். 'தஞ்சை சரபேசுவரர் பூபாலக் குறவஞ்சி'யின் கண் ணிப்பாடல்கள் 'பந்துவராளி', 'ஆகிரி', 'காம்போதி', 'பரசு', 'பௌளி', 'சாரங்கா', 'எதுகுலகாம்போதி' முதலிய இராகங்களிலும் விருத்தங்கள் 'சாவேரி'யிலும் நேரிசை ஆசிரியம் என்ற வகைப் பாடல் 'தோடி', 'காம்போதி', 'அடானா', 'பைரவி', 'கல்யாணி' ஆகிய இராகங்களிலும் காணப்படுகின்றன.

இப்பாடல்களில் பொதுவாக 'ஆதி', 'மிஸ்ரசாபு' ஆகிய தாளங்கள் 'திஸ்ர நடை', 'சதுஸ்ர நடை', 'மிஸ்ர நடை'களில் பயன்படுத்தப் பட்டு வந்துள்ளதைக் காண்கின்றோம். உ.வே.ச. அவர்களால் ஏட் டுப்பிரதிகளாகச் சேகரிக்கப்பட்ட 'கும்பேசர் குறவஞ்சி' 1944ல் பதிப்பிக்கப்பட்ட பொழுது அதிலுள்ள 44 இசைப்பாடல்களில் 16 இசைப் பாடல்களுக்கு இராகம் குறிப்பிடப்படவில்லை. இதனைப் பயன்படுத்துவோர் அவர்கள் விருப்பத்திற்கும் சுவைக்கும் ஏற்ப இசையமைத்துக்கொள்ள சுதந்திரம் கொடுக்கப்பட்டுள்ளது போலும். 'மத்தியமாவதி', 'பந்துவராளி', 'ஆரபி', 'சௌராஷ்டம்', 'நீலாம்பரி', 'சங்கராபரணம்', 'பைரவி', 'காம்போதி', 'அடாணா' முதலிய இராகங்கள் இவற்றில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

## திருக்குற்றாலக் குறவஞ்சி:

தமிழில் குறவஞ்சிகள் 100க்கு மேற்பட்டு இருந்தாலும் திருக்குற்றா லக் குறவஞ்சிக்கு நிகராக அவை அமையவில்லை என்பதே வர லாற்றாசிரியர்கள் பலரின் கருத்தாகும். பக்திச் சுவையும் நகைச்சு வையும் கவிநயமும் ஒருங்கு திரண்டதொரு நிறைவான வடிவத் தில் இக்குறவஞ்சி அமைந்ததே இதற்குரிய காரணமாகும்.

இதன் 'தற்சிறப்புப் பாயிரம்' என்ற பகுதியில் 'விநாயகர் துதி'யை அடுத்து 'முருகக் கடவுள்', 'திரிகூடநாதர்', 'குழல்வாய்மொழி யம்மை', 'சைவசமயாச்சாரியார் நால்வருள் மூவர்', 'அகத்திய முனிவர்', 'மாணிக்கவாசகர்', 'சரசுவதி' முதலிய' கடவுளர்களையும் சமயக்குரவர்களையும் துதிக்கும் பாடல்கள் காணப்படுகின்றன. பின்னர் 'நூற்பயன்', 'அவையடக்கம்' என்பன இடம்பெறுகின்றன. அடுத்துக் 'கட்டியக்காரன் வரவு'டன் குறவஞ்சியின் கதையம்சம் தொடங்குகிறது.

கட்டியக்காரன் தன்வருகையைத் 'தோடி' இராகத்தில் 'கண்ணி' வகைசார் பாடல்களில் வெளிப்படுத்தியதன் பின் 'திரிகூடநாதர் பவனி வருதல்' என்பது காட்சிப்படுத்தப்படுகிறது. இப்பகுதியில் 'விருத்தம்' மற்றும் 'கீர்த்தனை' ஆகிய வகைசார் பாடல்கள் இடம் பெறுகின்றன. இக்கீர்த்தனை 'பந்துவராளி' இராகத்தில் 'சாப்பு' தாளத்தில் 'பல்லவி', 'அநுபல்லவி'யைத் தொடர்ந்து எட்டுச் 'சர ணங்கள்' கொண்டதாக அமைந்துள்ளது. அக்கீர்த்தனையின் பகுதி வருமாறு,

**பல்லவி**

*'பவனி வந்தனரே மழவிடைப் பவனி வந்தனரே*

**அநுபல்லவி**

*அவனி போற்றிய குறும்பலாவுறை மவுனநாயகர் எவன நாயகர்*
*சிவனுமாயரி யயனுமானவர் கவனமால்விடை யதனிலேறியே*
*(பவனி)*

**சரணங்கள்**

*இடியின் முழக்கொடு படரு முகிலென யானைமேற்கன பேரி-முழக்கமுந்*
*துடியின் முழக்கமும் பரந்து திசைக்கரி துதிக்கை யாற்செவி புதைக்கவே*
*அடியர் முழக்கிய திருப்பலாண்டிசை யடைத்த செவிகளுந் திறக்க மூவர்கள்*
*வடிசெய் தமிழ்த்திரு முறைக ளொருபுறம் மறைக ளொருபுறம் வழங்கவே...' (பவனி)*

- பாடல்: 4

இதனைத் தொடர்ந்து தலைவியாகிய 'வசந்தவல்லி வருதல்' என்ற காட்சியும் அவள் பந்தடித்தலும் காட்சிப்படுத்தப்படுகின்றன. பந்த டித்தலில் இரண்டு பாடல்கள் அமைகின்றன. அவை முறையே 'பைரவி', 'காம்போதி' இராகங்களில் 'சாபு', 'ஆதி' தாளங்களில் அமைந்துள்ளன. இவை 'சந்தச்சுவை' மிக்கனவாக திகழ்வன. அப் பாடல்களின் ஒன்றில் இரு கண்ணிகள் வருமாறு,

*'செங்கையில் வண்டு கலின்கலி னென்று செயஞ்செய*
*மென்றாட இடை*
*சங்கத மென்று சிலம்பு புலம்பொடு தண்டை*
*கலந்தாட இரு*
*கொங்கை கொடும்பகை வென்றன மென்று குழைந்து*
*குழைந்தாட மலர்ப்*
*பைங்கொடி நங்கை வசந்த சவுந்தரி*
*பந்து பயின்றாளே' - 1*

*'இந்திரை யோவிவள் சுந்தரி யோதெய்வ ரம்பையோ*
*மோகினியோ மன*
*முந்திய தோவிழி முந்திய தோகர முந்திய*
*தோவெனவே உயர்*
*சந்திர சூடர் குறும்பல வீசுரர் சங்கணி*
*வீதியிலே மணிப்*
*பைந்தொடி நாரி வசந்தவொய் யாரிபொற்*
*பந்துகொண் டாடினளே' - 4*

- பாடல்: 11

இவ்வாறான வசந்தவல்லி பற்றிய காட்சிப்படுத்தலையடுத்து திரி கூடநாதர் மீது அவள் மோகம் கொள்வதும் அந்நிலையில் அவள் அடையும் அவஸ்தைகளைத் தோழியர் தணிக்க முற்படுவதுமான செய்திகளுடன் இக்கதையம்சம் தொடர்கிறது. இவை தொடர்பான காட்சிப்படுத்தல்களில் தொடர்ச்சியாக வசந்தவல்லிக்குக் குறிகூறி அவளது துயரை நீக்கும் பாத்திரமான குறத்தியின் வருகை இடம் பெறுகிறது. அவ்வாறு வரும் குறத்தி வசந்தவல்லி கேட்டுக் கொண்டதற்கிணங்க தனது நாட்டுவளம் மலை வளம் என்பவற் றைக் கூறுகிறாள். அவ்வாறு குறத்தி கூற்றாக அமையும் பாடலின்

ஒருபகுதி வருமாறு: (இது புன்னாகவராளி இராகத்தில் ஆதிதாளத்தில் அமைகிறது.)

*‘வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்*
*மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும் - 1*
*கானவர்கள் விழியெறிந்து வானவரை யழைப்பார்*
*கமனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பார் - 2*
*தேனருவித் திரையெழும்பி வானின்வழி யொழுகும்*
*செங்கதிரோன் பரிக்காலுந் தேர்க்காலும் வழுக்கும் - 3*
*கூடவிளம் பிறைமுடித்த வேணியலங்காரர்*
*குற்றாலத் திரிகூட மலையெங்கள் மலையே’*

- பாடல்: 44

இவ்வாறு தன்னுடைய மலை வளத்தைக் கூறியதன் பின்னர் வசந்தவல்லிக்குக் குறி கூறுகிறாள். அவள் விரும்பும் நாயகனை அடைவாள் என்பதை எடுத்துரைத்து மகிழ்வித்துப் பரிசில்களும் பெறுகிறாள்.

இவ்வாறமைந்த குறவஞ்சிக் கதையம்சத்தில் அடுத்துவரும் இரண்டாம் பகுதியில் குறவன் தனது மனைவியை நினைந்து புலம்புவதும் பின்னர் அவளைத் தேடி பல இடங்களில் அலைவதும் நூவனிடம் குறத்தியின் அடையாளங்களைக் கூறித் தேடச்சொல்லுதலும் எனக் கதையம்சம் தொடர்கிறது. இவ்விடத்திலமையும் பாடல்களில் தேடச்சொல்லும் இடங்களின் பெயர்கள் கோயில்களின் பெயர்களாக பட்டியலிடப்படுகின்றன. (உ.ம்: ‘திருவண்ணா மலை காஞ்சி திருக்காளத்திசீர்காழி சிதம்பரந் தென்னாரூர்காசி’ (பாடல்:100)

இறுதிப்பகுதியில் குறத்தியைக் காணுதலும் அவர்கள் இருவருக்குமிடையே நடைபெறும் உரையாடல்களும் காட்சிப்படுத்தப்படுகிறது. இவ்வாறான இரண்டாம் பகுதிக் கதையம்சத்தில் குறவன் குறத்தி உரையாடலாக அமைந்த பாடற்பகுதி ஒன்று வருமாறு,

(இப்பாடல் ‘தன்யாசி’ இராகத்தில் ‘ஆதி’ தாளத்தில் அமைந்துள்ளது.)

*‘இத்தனை நாளாக என்னுடன் சொல்லாமல்*
*எங்கே நடந்தாய்நீ சிங்கி (எங்கே நடந்தாய் நீ சிங்கி)*
*கொத்தார் குழலார்க்கு வித்தாரமாகக் குறிசொல்லப்*
*போனேனடா சிங்கா (குறிசொல்லப் போனேனடா)*
*காலுக்கு மேலே பெரிய விரியன்*
*கடித்துக்கிடப்பானேன் சிங்கி (கடித்து; சிங்கி)*
*சேலத்து நாட்டிற் குறிசொல்லிப்பெற்ற சிலம்பு*
*கிடக்குதடா சிங்கா (சிலம்பு – சிங்கா)*
*சேலத்தா ரிட்ட சிலம்புக்கு மேலே திருகு*
*முருகெனடி சிங்கி (திருகு... சிங்கா)*
*சேலத்து நாட்டாரி முறுக்கிட்ட தண்டை*
*கொடுத்த வரிசையடா சிங்கா (கொடுத்த... சிங்கா)*
*மாண்ட தவளையுன் காலிலே கட்டிய மார்க்கம்*
*தேதுபெண்ணே சிங்கி (மார்க்க... சிங்கா)*
*ஆண்டவர் குற்றாலர் சந்நிதிப் பெண்கள்*
*அணிமணிக் கெச்சமடா சிங்கா (அணிமணி... சிங்கா)’*

(பாடல்: 115)

நிறைவாக, அவர்கள் இருவரும் கூடிமகிழ்கின்ற செய்தியோடு திருக்குற்றாலக் குறவஞ்சி நிறைவுக்கு வருகின்றது. இவ்வாறான சிறப்புகளையுடைய குற்றாலக் குறவஞ்சிகள் சமகாலத்தில் மேடையேற்றும் மரபானது மிக அருகியே காணப்படுகிறது. இந்நிலை மாற வேண்டும். இசை மற்றும் நடனம் பயில்வோர் இவ்வாக்கத்தின் மீது உரிய கவனத்தைச் செலுத்தி மேடையேற்றங்களை நிகழ்த்துவதனூடாக மாற்றங்களை ஏற்படுத்தலாம்.

(தொடரும்)



kawsalya.s@thaiveedu.com



# அகழியில் விழுந்த முதலையாகாமல்...

- கிருங்கை சேதுபதி

எழுத்துக்கும் பேச்சுக்கும் அடிப்படையில் ஒரு நுண்ணிய வேறுபாடு இருக்கிறது. எழுத்து அட்சரம் பிசகாமல் அப்படியே கருத்துக்களை வெளிப்படுத்துவதில் தலைநிற்கும். ஆனால், பேச்சு அப்படியில்லை. கருத்தை உணர்த்திக் காட்டுவதற்காக, உடல் மொழியோடு உளமொழியையும் வெளிப்படுத்திச் சிறக்கும். அத்தகைய பேச்சை எழுத்தாக்கும் போது சில சிக்கல்களும் நேர்ந்துவிடுவதுண்டு. முற்று முழுக்க, பேசியதன் நுட்பத்தை அப்படியே சித்திரித்துக் காட்டிவிட முடியாது. சிதறல்களாக வந்து விழும் செய்தித்துணுக்குகளைக் கொண்டு சிந்தனையை ஒருங்கு திரட்டி, முழுமையாக உய்த்துணர்ந்து கொள்ள வேண்டும். அதை விட்டுவிட்டு, அரைகுறையாகக் கேட்ட சொல்லைப் பிடித்துத் தொங்குதல் இருக்கிறதே, அது அகழியில் விழுந்த முதலையின் நிலைப்பாடுதான்.

அது குறித்த விளக்கம்தான் இந்தக் கட்டுரை.

பம்பாய்த் தமிழ்ச் சங்கக் கூட்டத்தில் நடைபெற்ற பாரதி விழாவின் இரண்டாம் நாள் உரையில், பாரதி பற்றி மேலும் பேசிய தோழர் ஜீவா, ‘கவிதையின் உள்ளத்தை அறிவது வேறு, வெறும் கவிதைகளை மட்டும் படித்துப் பாண்டித்தியம் பெறுவது வேறு’ என்றார் எனச் செய்தியாளர் பதிவிட்டிருக்கிறார்.

இது பாரதி குறித்து மட்டுமல்ல, இலக்கியம் குறித்த எந்தப் பார்வையையும் புரிந்துகொள்ளச் சூத்திரம்போல் நின்று உதவக் கூடியது.

இந்த அடித்தளத்தில் முதலில் தோழர் ஜீவா, திருவள்ளுவரின் உள்ளக் கிடக்கையை எடுத்து விரிக்கிறார்.

‘வள்ளுவரை எடுத்துக்கொண்டால் அவர் தமிழன் என்று அவருடைய 1330 குறள்களில் எதிலும் குறிப்பிடவில்லை தமிழில் அது எழுதப்பட்டிருப்பதால்தான் திருவள்ளுவரைத் தமிழன் எனச் சொல்ல முடிகிறது. அவர் மனிதர் என்ற அந்த வர்க்கத்தைப் பற்றித்தான் பாடுகிறார். மொழி, நாடு இவற்றிற்கெல்லாம் அப்பால் போய்விட்டார் வள்ளுவர்.

திருக்குறள் ஒரு மானிட காவியம். உலகம் இதுவரை பார்த்திராத அளவில் நம் தமிழகம் முப்பெரும் புலவர்களைக் கம்பர், வள்ளுவர், இளங்கோ ஆகியோரைப் பெற்றிருக்கிறது’ என்று பாரதி மரபில், முப்பெரும் படைப்பாளிகளை முன்வைக்கும் தோழர் ஜீவா, திருக்குறளை ஒரு மானிட காவியம் என்கிறார். இது புதுப்பார்வை. அதற்கு முன் வரை, அது அறநூலாக மட்டுமே பார்க்கப்பட்டிருந்தது. தெய்வ நூலாகப் போற்றப்பட்டிருந்தது. ‘தேயமீது எவரோ சொல்லும் சொல்லினை, செம்மை என்று மனத்திடைக் கொள்வதாம் தீய பக்தி இயற்கையில் வாய்ந்திலேன்’ என்று பாரதி சொல்வாரே, அந்தத் தெளிவு, பாரதியிடமிருந்து ஜீவாவைப் பற்றிக் கொண்டது. அதனால்தான், மார்க்சியக் கண்ணோட்டம் முன்வைக்கும் விஞ்ஞானக் கண்ணோட்டத்தைக் கொண்டு வள்ளுவரை அளக்கிறார்.

‘அகழியில் விழுந்த முதலைக்கு அதுவே வைகுண்டம்’ என்பது போலின்றி,

***‘எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்***
***மெய்ப்பொருள் காண்ப தறிவு’***

என்றார் வள்ளுவர். திருவள்ளுவரின் கண்ணோட்டம் விஞ்ஞானக் கண்ணோட்டமாகும். அதனால்தான், இன்னும் திருக்குறள் அழியாதிருக்கிறது. காலத்துக்கேற்பக் கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருப்பதால்தான் வள்ளுவருக்குச் சிறப்பான இடம். அதனால்தான் கம்பருக்குச் சிறப்பான இடம். அதனால்தான் இளங்கோவடிகளுக்குச் சிறப்பான இடம்.’

இந்த விளக்கம், ஜீவாவின் சொந்த விளக்கம் என்றாலும், இங்கு அவர் சொல்லாமல் முன்னின்று விளக்கம் பெறுவது பாரதி பின்,

***‘யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல்இ வள்ளுவன் போல்***
***இளங்கோவைப் போல்***
***பூமிதனில் யாங்கணுமே பிறந்ததிலை உண்மை.***
***வெறும் புகழ்ச்சியில்லை’***

என்ற வரிகள்தாம். ஆனால், இந்த வரிகளை விளக்க வேண்டும் என்பதைவிட, பாரதியின் இலக்கியப் பார்வைக்கு உகந்த சூத்திரமாக இதனை முன்னிறுத்தியதுதான் ஜீவாவின் பேச்சு.

‘கம்பன் என்றொரு மானிடன் வாழ்ந்ததும்’ என்றார் பாரதி. இந்த இலக்கணத்தைக் கொண்டுவந்து திருவள்ளுவருக்கும் பொருத்துகிறார் ஜீவா.

‘திருவள்ளுவர் மனிதப் பண்புடையவர். மனிதரைப் போற்றினார். மனிதருக்கு முதலிடம் கொடுத்தார். ஆஸ்திகர்களாகிய வ.உ.சி.யும், கல்லாடம் எழுதிய சைவ சித்தாந்தவாதிகளும்கூட, திருவள்ளுவரை மனிதப் பண்புடையவர், மனிதரைப் போற்றியவர் என்பதை ஒப்புக் கொண்டுள்ளனர்’ என்று குறிப்பிடுகின்ற ஜீவா, அதற்கான வரையறையைப் பின்வருமாறு முன்வைக்கிறார்.

‘உலகம் முழுவதும் இன்புற்றிருப்பதில் இன்பம் காண்பவரே மனிதர் என்றால், திருவள்ளுவர் வெறும் தமிழகத்தையோ, பாரதத்



தையோ, பற்றி மட்டுமல்ல, அவர் பாடுகிறார். உலகம் முழுவதையுமே அவர் ஒரு கண் கொண்டு நோக்குகிறார். நல்லவரை, சான்றோரை அவர் போற்றினார்.

*'ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்*
*சான்றோன் எனக்கேட்ட தாய்'*

என்றதன் மூலம் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே பகுத்துண்பதன் அவசியத்தை உணர்த்தி ஊரிலுள்ள பணக்காரர்களையெல்லாம் கூப்பிட்டு வைத்து அவர்களிடம், 'ஓர் ஊரின் மத்தியிலே ஓர் ஊரு(ண்)ணி. அதில் அனைவரும் வேண்டிய அளவு தண்ணீரை மொண்டு செல்கின்றனர். பயன்தரும் மாமரமொன்றின் பழுத்துத் தொங்கிய பழங்களைப் பலரும் பறித்துச் செல்கின்றனர். பசியாறுகின்றனர். அடுத்தாற்போல் ஒரு வேப்பமரம் அதை வெட்டி அதன் பழம், கொட்டை, இலை, பட்டை எல்லாவற்றையுமே எடுத்துச் செல்கின்றனர் மக்கள். இப்படிப்பட்ட விதத்திலே எல்லோருக்கும் உதவும் விதத்தில் உங்கள் பணச்செழிப்பு இருக்கவேண்டும்' என்று சொல்கிறார் வள்ளுவர்.

தன் கையால் உழைத்துப் பாடுபடுபவர் என்றும் இரக்கமாட்டார் எனச் சொல்லி உழைப்பவரின் பெருமையை உணர்த்துகிறார் வள்ளுவர்.

வறுமையைவிடக் கொடியது எது?

'வறுமையைவிட வறுமையேதான் கொடியது' என்கிறார். வறுமையின் கொடுமைக்கு உவமானம் சொல்ல அவனுக்கு வேறு பொருள் அகப்படவில்லை. ஆகவேதான் வறுமையால் வாடி பிச்சையெடுத்து வாழும் நிலை ஏற்பட்டால், அந்நிலையை உண்டாக்கிய அரசன் நாசமாகப் போகட்டும் என்று சபிக்கிறான்.

*'இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து*
*கெடுக உலகுஇயற்றி யான்'*

உலகை இயற்றிய பிரம்மாவைச் சபிக்கிறான் என்பதாக வேதாந்திகள் அர்த்தம் கூறுகிறார்கள். ஆனால் திருவள்ளுவர் சமுதாயத்தின் கொடுமைகளை வறுமையைச் சாடுகின்றவர். எனவே அச்சமுதாய அமைப்பின் தலைவனாகிய மன்னனை ஒழிந்துபோ என்று தான் சொல்ல முடியுமே தவிர, பிரம்மாவை இங்கு இழுக்க வேண்டிய மதிப்பீடு அவசியம் இல்லை.

அதேபோல் பாரதியும் கண்ணனை ஏழைகளின் தோழன் என்றே

வருணிக்கிறார். பணம் படைத்தவனைக் கண்டு கண்ணன் சீறுவதா கக் கூறுகிறார்.

*‘இனி ஒரு விதி செய்வோம் அதை*
*எந்தநாளும் காப்போம்*
*தனி ஒருவனுக் குணவில்லையெனில்*
*ஜகத்தினை அழித்திடுவோம்’*

என்கிறான் பாரதி, ஆகவே திருவள்ளுவரும் பாரதியும் மனிதரைப் பற்றியே பாடினர். காக்கை, பன்றி இவைகளுக்கு இல்லாத குறை மனிதனுக்கு ஏற்படுவதைக் காண பாரதிக்குச் சகிக்கவில்லை.

வள்ளுவர் மனிதாபிமானம் படைத்த யதார்த்தவாதி என்றால் பாரதி அவர் வழி வந்தகவி வள்ளுவரின் வாரிசு' என்று தெளிவுபடுத்துகி-றார் ஜீவா. இந்தக் கருத்தும் முடிவும் போகிற போக்கில் அள்ளித் தெளித்த வாசகங்களின் புலப்பாடு அல்ல ஆழ்ந்திருக்கும் கவியு ளம் காண, நேர்ந்ததன் வெளிப்பாடு வள்ளுவத்தையும், பாரதியத் தையும் எழுத்தெண்ணி, அவை பிறந்த காலப் பின்புலத்தைக் கருத்திற்கொண்டு முன்வைத்த உறுதிப்பாடு.

‘பரந்து கெடுக உலகியற்றி யான்..’ என்ற தொடருக்கு, மணக்கு டவர், ‘உலக நடையை இவ்வாறாகக் கற்பித்த முதல்வன் மிகக் கெடுவானாக வேண்டும்’ என்றும், பரிப்பெருமாள், ‘உலக நடையை இவ்வாற்றல் கற்பித்த முதல்வன் மிகக் கெடுவானாக வேண்டும்’ என்றும் பொருள் விளக்கம் செய்கின்றனர்.

காலிங்கரோ, ‘இவ்வுலகினைப் படைத்தோன் தான் உயிர் வாழாது பரந்துகெட்டு விடுக’ என்கிறார் மேலும், அவர் தன் குறிப்புரை யில், ‘உலகத்துச் சிலரை உயர்ந்தோராகப் படைக்கும் விதாதா ஆகியும் பின்னும் அவர்கள் இயல்பாவதாயின் அவரும் இழந் தோரே ஆகலின் பெரிதும் வஞ்சனை உடைத்து இவன் படைப்பு என்றவாறு’ என்று குறிப்பிடுகிறார். (விதாதா என்பது பிரம்மனைக் குறிக்கும் சொல்).

ஆக, ‘உலகத்தைப் படைத்தவன் மிகக் கெட்டு அழிவானாக’ என்று பொருள் விளக்கம் செய்வதன் வாயிலாக, மன்னரைக் காப் பாற்றி, பிரம்மனைப் பழிக்கின்றனர் உரைகாரர்கள் ஆனால், ‘இயற்றலும் ஈட்டலும், காத்தலும் காத்த வகுத்தலும் வல்லதாகிய அரசு’தான் இந்தச் செயலை முறைமை ஆக்கியிருக்கிறது என் பதை, வள்ளுவ மரபில் நின்று விளக்கம் செய்கிறார் ஜீவா. (இதே கருத்தைத்தான் தவத்திரு குன்றக்குடி அடிகளாரும் தன் உரை யில் முன்வைக்கிறார். காண்க - எனது, ‘திருக்குறளில் தொல்காப் பிய மெய்ப்பாடுகள், பழனியப்பா பிரதர்ஸ் வெளியீடு, 2016).

‘அவனருளாலே அவன் தாள் வணங்கல் போல்’ திருக்குறளாலே, திருக்குறளைத் தெளிய வேண்டும். அப்படித்தான் பாரதியையும்.

பல இடங்களில் வேதாந்தச் செய்திகளை முன்வைக்கும் பாரதி யின் பாடல்கள் வெறுமனே வேதாந்தப் பொருள்களை மட்டும் விவரிக்கவில்லை. அவற்றின் பின்னணியில் தன் காலச் சமூக அநீ திகளைச் சாடுகிறார் என்பதைத் தெரிந்துகொண்டால்தான் பாரதி யைப் புரிந்துகொள்ள முடியும். சான்றாக, அவர்தம் மாயை பற் றிய விளக்கத்தைக் கொள்ளலாம்.

பாரதி பாடிய ‘பாஞ்சாலி சபத’த்துப் பாஞ்சாலி, இதிகாச காலத்துப் பாஞ்சாலி போல் தோற்றம் காட்டினாலும், அவள் பாரதி காலத்தவள் இளங்கோவடிகளின் கண்ணகி மரபில் வந்த வள். அதைத்தான் ஜீவா, தன் உரையில் மேல் விளக்கம் செய்கி றார்.

இது அவர்தம் மூன்றாம் பேச்சு. அதுவும் பம்பாய்த் தமிழ்ச் சங் கப் பேச்சுத்தான்.

‘பம்பாய்த் தமிழ்ச்சங்க மண்டபம் நிறைந்து நாலாபக்கமும் மக்கள் நின்று கொண்டிருக்க பாரதி விழாவின் இறுதி தினமாகிய இன்று ‘பாரதியைப் பற்றிய என் மதிப்பீடு’ என்ற பொருள் பற்றித் தோழர் ஜீவா பேசுகையில் கூறினார்’ என்று செய்தியாளர், ஜனசக்தி இத ழில் (16.9.1960) பின்வருமாறு பதிவிடுகிறார்.

‘அவர் மேலும் பேசுகையில் ‘தருமனை சத்தியவந்தன் எனப் போற்றி வர்ணித்துக்கொண்டே வருகிறார் பாரதி ஆனால் அவன் துரதிர்ஷ்டவசமாகத் துரியோதனனுடன் சூதாட்டத்தில் இறங்கி ஒவ் வொரு உடைமையாக இழந்து கடைசியில் நாட்டையே பணயம் வைத்துத் தோற்றுப் போகிறான். இதைக் கேட்டதும் பாரதிக்குக் கோபம் பொங்குகிறது. இவன் யார் நாட்டைப் பணயம் வைக்க? இவனுக்கு என்ன உரிமை? நாடு மக்களுடையது அதை அரசன் தன் இஷ்டம் போல் பணயம் வைக்க என்ன உரிமை? என்று கோபாவேசத்தில் கேட்கிறார். ஜனநாயகம் என்று சொல்கிறோமே, அதை அன்றே பாடினார் பாரதி’ என்று ஜீவா குறிப்பிடுகிறார். பின்னர் தன் தத்துவம் சார்ந்த பார்வைக்கு அடித்தளம் இட்ட பார தியை, ‘பொதுவுடைமைக் கவிஞன்’ என்று போற்றுகிறார். அதற் கான விளக்கத்தையும் அவர் விரித்துச் சொல்கிறார்.

‘புரட்சி புரட்சி என்று இன்று எங்கும் வழங்கப்படுகிறது பாரதியின் புரட்சி மணமற்ற மலர் போன்றது அல்ல. பாரதி ஒரு பொது உடைமைக் கவிஞர். தமிழிலே பொது என்ற சொல்லும் உடைமை என்ற சொல்லும் ஆதிகாலந் தொட்டே இருந்து வந்திருக்கின்றன. ஆனால் அவை இரண்டையும் ஒன்று சேர்த்து பொதுஉடைமை என அதற்கு உரிய அர்த்தத்தையும் கொடுத்தது பாரதியேதான். அவர் ஏழைகள் வாழவேண்டும். எல்லோரும் வாழவேண்டும் இந் திய மக்கள் எல்லோருக்குமே பொதுவுடைமை ஆட்சி வேண்டும் என்று பாடினார்’ என்கிற ஜீவா, ‘எட்டயபுரம் ஜமீனில் இரண்டாண் டுகள் அவரால் இருக்க முடியவில்லை. ஜமீன்தாரின் கிருஷ்ணலீ லைகளில் உதவி செய்ய அவர் தயாராகவில்லை. சின்னச் சங்க ரன் என எழுதிய புத்தகத்தில் முழுக்க முழுக்க ஜமீன்தாரின் அட் டூழியங்களை விவரித்தார். மதுரை பண்டிதர்களுடன் நான்கு மாதங்கள் கூட அவரால் இருக்கமுடியவில்லை. அகழியில் விழுந்த முதலைக்கு அதுவே சொர்க்கம் என்பது போல் தமிழை விட்டு வெளியில் எந்த நல்ல கருத்தையும் நாட மறுத்த மதுரை பண்டிதர்களின் கூட்டத்தில் அவரால் இருக்க முடியவில்லை’ என்று பாரதியின் வாழ்வியல் கலந்து விளக்கம் கொடுக்கிறார்.

அதேசமயம் பிறரைப் போல், பாரதியைத் தன் கட்சிக்கு உரிய வராகக் காட்டவும் முனையவில்லை. அதற்குப் பின்வரும் விளக் கம் துணைசெய்யும்.

‘தத்துவ ஞானம் அறிவுச் செல்வம் இவைகளோடு அவர் பொதுவு டைமை பேசினார். பாரதியை நான் பொதுவுடைமை வாதி (com-munist) எனச் சொல்லவில்லை. ஏனென்றால் அவர் வாழ்ந்தகா லத்தில் இந்திய நாட்டில் தொழிற்சங்க இயக்கம் ஏற்படவில்லை. ஆனால் பாரதியின் அடிப்படைப் போக்கு பொது உடைமையைத் தொட்டது. நாடு சுதந்திரமடைந்தபின் எவ்வாறு இருக்கும் என்ப தைப் பாரதி அன்றே கற்பனை செய்து சொல்லிவிட்டார்.

பெரிய புரட்சிக்காரர்களெல்லாம் பூனையாகப் பதுங்கி இருந்த அந்தக் காலத்தில் பாரதி புலியாகச் சீறி நின்றார்.

பெண்கள் உரிமைக்காகப் பாரதிபோல் பாடியவர் யார்?

*‘பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்*
*பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்*
*எட்டு மறிவினில் ஆணுக் கிங்கே பெண்*
*இளைப்பில்லை காணென்று கும்மியடி!*

ஆணோடு பெண் சரிநிகர் சமானமாக நிற்க வேண்டுமெனப்

பெண்ணுக்கு உபதேசம் செய்கிறான்'.

அன்று தீர்க்கதரிசனமாகப் பாடினார் பாரதி. இன்று விஜயலட்சுமி பண்டிட்டைப் பாருங்கள். ஐ.நா.சபையில் ஆண்களோடு சமானமாக வீற்றிருக்கவில்லையா? ரஷ்யாவிலே பெண்கள் இயந்திரம் ஓட்டுவது, ஆண்கள் பிரபல தொழில்களையும் திறமையாகச் செய்யவில்லையா?

*'இரும்பைக் காய்ச்சி உருக்கிடுவீரே!*
*யந்திரங்கள் வகுத்திடுவீரே!*
*பெரும்புகழ் நுமக்கே யிசைக்கின்றேன்*
*பிரம தேவன் கலையிங்கு நீரே'*

பாட்டாளிகளை பிரமதேவனின் என்று கூறுகிறார் பாரதி. கம்பரின், இளங்கோவின், வள்ளுவரின், பைரனின், ஷெல்லியின் வாரிசாகப் பாரதி தோன்றினார். புதிய கருத்துகளைச் சிருஷ்டிக்க பாரதி வேண்டுகிறார்.

*'கள்ளையும் தீயையும் சேர்ந்து - நல்ல*
*காற்றையும் வான வெளியையும் சேர்த்துத்*
*தெள்ளு தமிழ் புலவோர்கள் பல*
*தீஞ்சுவைக் காவியம் செய்து கொடுத்தார்*

எளிய தமிழில் யாரும் புரிந்துகொள்ளும் விதத்தில் உயர்ந்த கருத்துகளைச் சொன்ன தமிழ்ப் புலவர் பாரதிக்கு முன் யாரும் இருந்ததில்லை இன்றுமில்லை.

இதுவரை சொல்லாத கருத்துகளையும், சொன்ன கருத்துகளைக் காலத்திற்கேற்ற புதிய கருத்துகளுடன் கலந்து நமக்குத் தந்தான் பாரதி, அவன் நடை சர்வ சாதாரணமானது எளிய நடை" என்று புரிய வைத்த, ஜீவா, பாரதி குறித்து அன்று சொன்னது இன்றைக்கும் தேவையாக இருக்கிறது. அது இதுதான்.

## பார்ப்பான் என்று தூற்றுவதா?

சின்னச்சாமி ஐயர் வயிற்றில் பிறந்துவிட்ட குற்றத்திற்காகப் பாரதியைப் பார்ப்பான் எனத் துவேஷத்தில் தூற்றுவோரும் தமிழகத்தில் இல்லாமலில்லை.

'பார்ப்பானை ஐயர் என்ற காலமும் போச்சே' என முதன் முதலில் தமிழகத்தில் சொல்லிய ஒரு 'மீசை வைத்த பார்ப்பான்' பாரதி தான் என்பதைக் காண மறுக்கிறார்கள் அவர்கள். பாரதி ஜாதிகளைப் பற்றிச் சொல்லி வரும்போது,

*'வேத மறிந்தவன் பார்ப்பான் பல*
*வித்தை தெரிந்தவன் பார்ப்பான்*

*நீதி நிலை தவறாமல் - தண்ட*
*நேமங்கள் செய்பவன் நாய்க்கன்*

*பண்டங்கள் விற்பவன் செட்டி - பிறர்*
*பட்டினி தீர்ப்பவன் செட்டி*
*தொண்டரென்றோர் வகுப்பில்லை - தொழில்*
*சோம்பலைப் போல் இழிவில்லை'*

பார்ப்பான், நாய்க்கன், செட்டி ஆக மூன்று ஜாதிகளைச் சொல்லி விட்டார். தொண்டரென்றோர் வகுப்பில்லை' என்றும் சொல்லிவிட்டார். ஆனால் அடுத்த அடியிலே 'நாலு வகுப்பும் இங்கொன்றே..' என்கிறார். மூன்று ஜாதிகளைத்தான் குறிப்பிட்டார். தொண்டரென்றோர் வகுப்பில்லை' என்றும் சொல்லிவிட்ட பிறகு நாலும் இங்கொன்றே, என்கிறார். அவனுக்கு சூத்திரன்' வகுப்பும் என்று சொல்ல நான் வரவில்லை இந்தப் பாரதியைத்தான், 'பாரதி, ஒரு பச்சைப் பார்ப்பான்' என்று ஒரு பத்திரிகையில் எழுதியிருந்ததைச் சமீபத்தில் பார்த்தேன்' என்று குறிப்பிட்டு, அக்கால அரசியல் பின்புலத்தை, நகைச்சுவையோடு சாடியிருப்பார் ஜீவா. இதனை அக்காலத்திலும், இக்காலத்திலும் யார் சொல்லியிருப்பார் என்று ஆராயத் தேவையில்லை. யார் சொல்லியிருந்தாலும், அது அபாண்டமான குற்றச்சாட்டு. பொருத்தமற்ற புனைவு என்பது தெளிவு.

பார்ப்பான் குறித்தும், ஆரியம் குறித்தும், பாரதி சொல்லிய கருத்துக்களின் பின்புலம் உணராமல், அங்கொன்றும் இங்கொன்றுமாய் எடுத்துக்கோர்த்து, நிரல்படுத்திக் காட்டி, உண்மைக்கு மாறான வற்றை உறுதியாகக் காட்டும் போக்கு இன்று மீளவும் தலைதூக்குகிறது. உண்மையில், பாரதி அப்படிப்பட்டவர் அல்லர் என்பதைப் புரிந்துகொள்ள ஜீவா போன்றோரின் உரைச் செய்திகளே பெரிதும் துணைநிற்கும். இந்த முயற்சி, பாரதியையோ, ஜீவாவையோ பாதுகாக்க வேண்டிச் செய்கின்ற ஒன்றல்ல. தவறான புரிதலில் இருந்து நம் சிந்தனையை விடுவித்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான். ஏனென்றால், 'இதுவரை சொல்லாத கருத்துகளையும், சொன்ன கருத்துகளைக் காலத்திற்கேற்ற புதிய கருத்துகளுடன் கலந்து நமக்குத் தந்தார் பாரதி' என்று ஜீவா பேசியது உண்மை. வெறும் புகழ்ச்சியில்லை என்று புரிந்து கொள்வதற்காகத்தான்.

இந்த உரைகளில் சொந்தக் கண்ணோட்டம் வேண்டும் என்பதற்காக, ஜீவா எடுத்துக் காட்டும் இரண்டு உவமைகள் இங்கு கருதத்தக்கன.

- ரயில் என்ஜினும் மோட்டாரும்
- அகழியில் விழுந்த முதலைக்கு அதுவே வைகுண்டம்.

முதலாவது, ரயில் என்ஜினும் மோட்டாரும். ஜீவா சொல்கிறார் 'ரயில் என்ஜினைத் தொடர்ந்து செல்லும் பெட்டியானது எப்படி என்ஜின் கவிழ்ந்ததும் தானும் கவிழ்ந்துவிடுகிறதோ அதுபோலின்றி ஒரு மோட்டாரைத் தொடர்ந்து செல்லும் மற்றொரு மோட்டார் முன் செல்லும் மோட்டாரை நம்பியிராது செல்கிறது. அவ்வாறானதொரு சொந்தக் கண்ணோட்டம் வேண்டும். அது வள்ளுவரிடமிருந்தது பலமொழி இலக்கியங்களிலும் அவர் பாண்டித்தியம் பெற்றிருந்தார். ஆனால் அவருடைய சொந்தக்கண்ணோட்டத்தில் அவற்றை எழுதினார்' என்று சொல்லுகிற வழியில் திருவள்ளுவரை அடுத்து, பாரதியும் தலைநிற்கிறார்.

அடுத்தது, அகழியில் விழுந்த முதலைக்கு அதுவே வைகுண்டம். இது அக்காலத்திய சொலவடை. அகழியில் சிக்கிக் கொள்ளும் முதலை ஆகிவிடாமல், அகண்ட கடலில் கலக்கும் நதிபோன்ற சிந்தனை நமதாக வேண்டும்.

'கொண்டது விடாது' என்ற குற்றச்சாட்டுக்கும் நாம் ஆளாகாது இருக்க வேண்டும் எனில், எழுத்தோ, பேச்சோ, எதுவாக இருந்தாலும், அவை எது குறித்து அமைந்திருந்தாலும் அதனுள் ஆழ்ந்திருக்கும் கவியுளம் காணவும் கண்டு காட்டவும் தெரிந்திருந்தால் போதும்.

அதைத்தான் தோழர் ஜீவாவின் பேச்சு நமக்கு அடையாளம் காட்டுகிறது.

இதழியல் தேவை கருதி, பேச்சை எழுத்தாக்கும்போது, இடம், காலம், சூழல் கருதி, சில விடுபாடுகள் இருக்கத்தான் செய்யும். அவற்றை, தெரிந்தது கொண்டு, தெரியாததை விளங்கிக்கொள்ள வேண்டும். அப்படியான விளக்கத் தெளிவு, அவர்தம் பேச்சில் அமைந்திருப்பது கண்கூடு. அதற்குக் காரணர் மகாகவி பாரதியார்.



sethupathi@thaiveedu.com

# தமிழியல் ஆய்வுகள் - வரலாறும் வளர்ச்சியும் 28

- நா. சுப்பிரமணியன்

இத்தொடரிலே கடந்த சில கட்டுரைகளிலே தொல்காப்பியம் மற்றும் சங்கஇலக்கியங்கள் ஆகியன தொடர்பாக நிகழ்ந்துள்ள முக்கிய ஆய்வுகள் கவனத்துக்கு இட்டுவரப்பட்டன. குறிப்பாக, மேற்படி ஆக்கங்கள் தொடர்பான பார்வைகள் ஆழமும் அகலமும் பெற்றவந்துள்ளமையை முன்னைய கட்டுரைகளிலே விரிவாகவே நோக்கியுள்ளோம். மேற்சுட்டிய வாறான ஆய்வுநிலைசார் வளர்ச்சிகளை அடையாளப்படுத்தி நிற்கும் சில முக்கிய பதிவுகள் என்றவகையில் சென்னைப் பல்கலைக்கழக வெளியீடான டாக்டர் கோ. கிருட்டிணமூர்த்தியவர்களின் தொல்காப்பிய ஆய்வின் வரலாறு(1990) என்ற ஆக்கமும் சென்னை, உலகத்தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடுகளான தொல்காப்பிய இலக்கியக் கோட்பாடுகள் (1998) மற்றும் சங்க இலக்கியம் கவிதையியல் நோக்கு - சிந்தனைப்பின்புல மதிப்பீடு(1998) ஆகிய கருத்தரங்கக் கட்டுரைகளின் தொகுப்புகளும் கடந்த ஐந்து கட்டுரைகளில் நுனித்து நோக்கப்பட்டன.

தொல்காப்பியம் மற்றும் சங்க இலக்கியங்கள் ஆகியன தொடர்பான ஆய்வுகள் பற்றிய பார்வைகள் மேற்சுட்டிய கட்டுரைகளுடன் நிறைவுபெற்றுவிட்டதாக நாம் கருத முடியாது. அவ்வாக்கங்கள் தொடர்பான அண்மைக்காலம்வரையான வளர்ச்சிநிலைகள் பற்றித் தொடர்ந்து மேலும் விரிவாகவே பேசவேண்டும் என்பதான ஆர்வம் உளது. ஆயினும் இத்தொடரின் தேவை கருதி மேற்படி தொல்காப்பியம் மற்றும் சங்க இலக்கியங்கள் ஆகியன தொடர்பான பார்வைகளை(தற்காலிகமாக) நிறுத்தி, அடுத்தசில விடயப் பரப்புகளில் அடிபதிக்க முற்படுகிறேன்.

அவ்வகையில் குறிப்பாக, மேற்படி ஆக்கங்களுக்கு நிகராகத் தமிழியலாளர்களால் நுனித்து நோக்கப்பட்டுவந்துள்ள வேறு இரு முக்கிய ஆக்கங்களை நோக்கித் தாய்வீடு வாசகர்களின் கவனத்தை ஈர்க்க விழைகிறேன். அவ்வாறு இங்கு கவனத்துக்கு இட்டுவரப்படும் ஆக்கங்கள் திருக்குறளும் சிலப்பதிகாரமும் ஆகும்.

'தமிழ்மறை' எனவும் 'உலகப் பொது மறை' எனவும் மதித்துப் போற்றப்பட்டும் பேணப்பட்டும் வருவதான திருக்குறளானது ஒரு அறநூலாக மட்டுமன்றி கவிதையாக்கமாகவும் திகழ்வதாகும். அத்துடன் இது, 'தமிழர் சிந்தனை மரபின் செழுமை'க்கான தொன்மையானதும் வலுவானதுமான ஒரு சான்றாதாரமாக முன்னிறுத்தப்பட்டு வருவதுமாகும். இவ்வாறான கணிப்பின் அடிப்படையில் இந்நூலைப் போற்றிப் பேணும் வகையில், 'தமிழ்மறைக் கழகம்', 'திருக்குறள் பேரவை', 'குறளாயம்', 'உலகத் திருக்குறள் மையம்' முதலான பெருந்தொகையான சமூக இயக்கங்களும் உருவாகி இயங்கி வந்துள்ளன. இவற்றுட்பல தொடர்ந்து இயங்கி வருகின்றன என்பதும்கூட பொதுவாக நாமறிந்த செய்திகளேயாம்.

சிலப்பதிகாரத்தின் முக்கியத்துவம் மூவகைப்பட்டதாகும். முதல் வகை முக்கியத்துவம், அதுவே 'தமிழின் முதலாவது பேரிலக்கியம்' என்பதாகும். அதாவது தமிழிலே இலக்கியம் என்பது தனிநிலைப்பாடல்களாக உருவாகிவந்த வரலாற்றுச் செல்நெறியிலே கதையம்சங்கொண்ட இலக்கியக் கட்டமைப்பாக வெளிப்பட்டதாக நமக்குக் கிடைத்துள்ள முதலாவது இலக்கிய ஆக்கமாக இது திகழ்கிறது.

இரண்டாவதாகக் குறிப்பிடப்படவேண்டியது அது, 'இயல்', 'இசை', 'நாடகம்' எனப்படும் முத்தமிழும் இணைந்த உருவாக்கம்' என்பதாகும். இதனை முத்தமிழ்க் காப்பியம் என அடையாளப்படுத்தும் வழக்கமும் நிலவிவருகின்றது என்பதையும் நாமறிவோம். மூன்றாவதான அதன் முக்கியத்துவம், 'பண்டைத்தமிழரின் குடும்ப-சமூக வாழ்வியல்', 'அற-ஒழுக்க மரபுகள்', 'வழிபாட்டுநெறிகள்', 'அரசியல்' மற்றும் 'நீதிமுறை' ஆகிய பலவற்றையும் கதை வடிவில் காட்சிப்படுத்தும் வகையிலமைந்த ஒரு பண்பாட்டுப்பிரதியாக அது திகழ்கின்றமை' ஆகும். குறிப்பாக, தமிழ்ப் பெண்மையின் பெருமை மற்றும் பண்டைய நீதிமுறையின் சிறப்பு முதலியவற்றை அடையாளங்காட்டும் பண்பாட்டுப்பதிவாக இவ்வாக்கம் இன்றுவரை மதித்துப் போற்றப்பட்டுவருகின்றமை வெளிப்படை.

மேற்சுட்டிய திருக்குறள் மற்றும் சிலப்பதிகாரம் ஆகிய இரு ஆக்கங்களின் காலகட்டங்களை இலக்கிய வரலாற்று நோக்கில் அணுகுபவர்கள் இவ்விரண்டையும் பொதுவாகச் சங்கஇலக்கியங்களின் காலத்துக்குப் பிற்பட்டனவாகவே காண்பர். குறிப்பாக, சங்கத் தொகுப்புகளில் ஒன்றான எட்டுத்தொகையில் இடம்பெற்றுள்ள எட்டுத் தொகுப்புகளில் புறநானூறு, குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு, ஐங்குறு நூறு, பதிற்றுப்பத்து ஆகிய ஆறு தொகுப்புகளின் பாடல்களுக்கும் சங்கத்தொகுப்புகளில் இன்னொன்றான பத்துப்பாட்டு தொகுப்பின் திருமுருகாற்றுப்படை தவிர்ந்த ஏனைய ஒன்பது ஆக்கங்களுக்கும் பிற்பட்ட ஆக்கங்களாகவே திருக்குறள், சிலப்பதிகாரம் ஆகிய இவ்விரு ஆக்கங்களும் கருதப்பட்டு வருகின்றன.

மேற்சுட்டிய சங்கப் பாடற்பரப்பானது கி.பி. 3ம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலப்பகுதியில் எழுந்தவை என்பது ஆய்வாளர் பலராலும் பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்ட கருத்தாகும். அவ்வகையில் கி.பி. மூன்றாம் நூற்றாண்டுக்குப் பின்னரான காலப்பகுதி சார்ந்த ஆக்கங்களாகவே இவ்விரண்டும் கருதப்பட வேண்டியனவாகின்றன. அவ்வகையில் இவையிரண்டும் இலக்கியவரலாற்று நிலையில் சங்கமருவிய கால ஆக்கங்களாகவே கொள்ளப்படுகின்றன.

இவ்விரு ஆக்கங்களின் உள்ளடக்கநிலை மற்றும் வெளிப்பாட்டு முறைமை முதலியன தொடர்பான எனது திறனாய்வுநிலைசார் பார்வைகளை இத்தாய்வீடு இதழிலேயே ஏற்கெனவே சில ஆண்டுகளுக்கு முன்னர் விரிவாகவே பதிவுசெய்துள்ளேன் என்பது இங்கு குறிப்பிடவேண்டிய முக்கிய தகவலாகும். இவ்விதழில் சில ஆண்டுகளுக்கு முன் என்னால் எழுதப்பட்ட 'இலக்கியத் திறனாய்வியலின் இயங்குநிலை' என்ற தொடரிலே 2015 ஜுன் மாதம் முதல் 2016 ஜனவரி மாதம் வரையான வெளியீடுகளில் சிலப்பதிகாரத்தையும் அதனுடன் கதைத் தொடர்புடைய இன்னொரு பேரிலக்கியமான மணிமேகலையையும் பற்றிய எனது திறனாய்வுப் பார்வைகள் விரிவாகவே பதிவாகியுள்ளன. திருக்குறள் பற்றிய எனது பார்வைகளை இவ்விதழின் 2016 மார்ச் முதல் 2017 மார்ச் வரையான காலப்பகுதியில் - சில மாதங்கள் நீங்கலாக ஒன்பது மாதங்கள் சார் வெளியீடுகளில் - நோக்கலாம்.

இப்பொழுது இத்தொடரில் பேசப்படவுள்ளவை அவ்வாக்கங்கள் தொடர்பாக நிகழ்ந்துவந்துள்ள ஆய்வுகள் பற்றியன மட்டுமேயா கும். அவ்வகையில் இங்கு நாம் நோக்கவுள்ளவை முன்னைய பார்வைகளினின்று 'நோக்குநிலை'களிலும் 'உள்ளடக்க நிலை'களி லும் குறிப்பிடத்தக்க அளவு வேறுபாடுகள் கொண்டவையாகும்.

இவ்விரு ஆக்கங்கள் பற்றியும் நிகழ்ந்துள்ள ஆய்வுகளின் வரலா றுகள் பலநூறு பக்கங்களிலான தனித்தனி நூல்களாக விரிவு-பெறக்கூடியன என்பதை ஆய்வுலகம் அறியும். எனவே அவற்றை விரித்துப்பேசுதல் இத்தொடரில் சாத்தியமாகாது என்பதறிவேன். எனவே மேற்படி ஆக்கங்கள் சார்ந்த ஆய்வுகளுக்கு உந்துசக்திக ளாக அமைந்திருந்த நோக்குநிலைகள், சிந்தனைப் பின்புலங்கள் மற்றும் அவைசார்ந்து உருவான மதிப்பீடுகள் ஆகியவற்றைக் கோடிட்டுக் காட்டும் வகையிலான சில தொகுநிலைக் குறிப்பு களை மட்டுமே இங்கு இயன்றவரை சுருக்கமாக முன்வைக்க முயல்கிறேன். அவ்வகையில் முதலிலே திருக்குறள் பற்றிய ஆய் வுகளின் வரலாறு இங்கு நமது கவனத்துக்கு வருகிறது.

## திருக்குறள் பற்றிய ஆய்வுகள் - வரலாற்றுப் பார்வை:

திருக்குறள் பற்றிய ஆய்வுகளின் வரலாறு தொடர்பாக நோக்கமுற் படும் பொழுது முதலிலே அவ்வாய்வுகளுக்கான தரவுகள் மற்றும் அவற்றுக்கான சூழல்சார் அம்சங்கள் ஆகியன பற்றிய பொது வான செய்திகளை இங்கு வரலாற்றுமுறையில் பதிவுசெய்வது அவசியமாகிறது. மேற்படி தரவுகள் இருவேறு காலகட்ட நிலைகள் சார்ந்தனவாக நோக்கப்படவேண்டியவையாகும்.

இவற்றுள் முதலாவது காலகட்ட நிலை சார்ந்த தரவுகள், அவ் வாக்கம் உருவானகாலம் முதல் பண்டைய அறிஞர் பலரால் மதிப்பிடப்பட்டும் உரைகள் எழுதப்பட்டும் ஏடுகளில் பேணப்பட்டு வந்து அச்சேற்றம்பெற்ற காலப்பகுதிகள் வரையான ஆய்வுநிலை கள் தொடர்பானவையாகும். இரண்டாவது காலகட்டநிலை என்பது அந்நூல் புத்துரைகள் எழுதப்பட்டும் ஆய்வுகள் பல மேற்கொள் ளப்பட்டும் பேணப்பட்டு வருகின்ற பிற்கால - அதாவது கடந்த இருநூறாண்டுகளுக்குட்பட்ட காலப்பகுதிகள்சார் ஆய்வுச்சூழல் களை மையப்படுத்தியவையாகும். இவ்விரு காலகட்ட நிலைகள் சார் தரவுகளையும் இங்கு சுருக்கமாக நோக்கலாம்.

## முதலாவது காலகட்ட நிலைசார் தரவுகள் - சுருக்க அறிமுகம்:

திருக்குறள் கி.பி 3ம் நூற்றாண்டையடுத்து எழுந்திருக்கலாம் என் பதை முன்னரே நோக்கினோம். இவ்வாக்கம் தமிழ் அறிஞர் சூழ லின் ஆய்வுநிலைசார் கவனத்தைப் பெற்றுவந்துள்ளமை தொடர் பான சான்றுகளின் வரலாறானது அந்நூல் எழுந்தகாலத்திலிருந்து ஏறத்தாழ எண்ணூறு ஆண்டுகளின் பின்னிருந்தே தொடங்குகின் றது. இவ்வகையில் நமக்குக் கிடைப்பவற்றுள் ஒருவகையின திருக்குறள் பற்றிய 'மதிப்பீடுக'ளாக அமைந்த பாடல்களாகும். இப்பாடல்கள் திருவள்ளுவமாலை என்ற தலைப்பில் ஒரு நூலா கத் தொகுக்கப்பட்டுள்ளன. கி.பி 11ம் நூற்றாண்டு சார்ந்ததாக அறியப்படும் இப்பாடல் தொகுப்பானது வெண்பாயாப்பிலமைந்த 55 பாடல்கள் மற்றும் அவற்றுக்கான உரைகள் என்பவற்றை உள் ளடக்கியதாகும்.

மேற்படி காலப்பகுதி சார்ந்தனவாக நமக்குக் கிடைக்கும் திருக்கு றள் பற்றிய ஆய்வுத்தரவுகளில் இன்னொரு வகையின அந்நூலுக் கெழுந்த உரைகளாகும். தருமர், மணக்குடவர், தாமத்தர், நச்சர், பரி(ரு)தியார், பரிமேலழகர், திருமலையார், மல்லர், கவிப்பெரு-மாள், காலி(ளி)ங்கர் முதலான பண்டைத்தமிழறிஞர் பதின்மர் இந் நூலுக்கு உரையெழுதியுள்ளனர்.

*'தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர்*
*பருதி பரிமே லழகர் - திருமலையார்*
*மல்லர் கவிப்பெருமாள் காளிங்கர் வள்ளுவர் நூற்*
*கெல்லையுரை செய்தா ரிவர்'*

என்ற பழைய பாடல் தரும் தகவல், இது.

மேற்சுட்டிய பலரின் உரைகளிலே கி.பி 13ம் நூற்றாண்டைச் சேர்ந் தவராக ஊகிக்கப்படும் பரிமேலழகரின் உரையே உயர்வானது என்ற கருத்து பல்லாண்டு காலமாக நிலவிவருகின்றதென்பது பொதுவாகப் பலருமறிந்த செய்தியேயாம்.

மேற்சுட்டியவாறாகப் பலநூறு ஆண்டுகளுக்கு மேலாக உரைகள் எழுதப்பட்டு ஏடுகளில் பேணப்பட்டுவந்துள்ள திருக்குறளானது 1812ம் ஆண்டிலேயே முதலில் அச்சேறியது. தொண்டை மண்ட லம் சென்னைப் பட்டினத்தில் தஞ்சை நகரம், மலையப்ப பிள்ளை குமாரன் ஞானப்பிரகாசன் என்பாரால் இது அச்சிற் பதிக் கப்பட்டது. (தகவல்: இ. சுந்தரமூர்த்தி. 'இரு நூற்றாண்டுகளுக்கு முன் அச்சான இரு செவ்வியல் நூல்கள்' உங்கள் நூலகம் ஆய் விதழ். ஜனவரி-2014, சென்னை.) மேற்படி அச்சேற்றமானது இந்நூ லின் மூலபாடப்பகுதியை மட்டும் கொண்டதாகும். இதன் பின்ன ரும் மூலப் பதிப்புகள் பல வெளிவந்துள்ளன- வெளிவந்துகொண் டிருக்கின்றன.

உரைகளுடன் கூடிய திருக்குறள் பதிப்புகள் 1838ம் ஆண்டிலி ருந்தே வெளிவரத்தொடங்கின. முதலில் வெளிவந்த உரையுட னான பதிப்பானது பரிமேலழகருரையுடன் அமைந்ததாகும். இத னைப் பதிப்பித்தவர் திருத்தணி சரவணப்பெருமாளையர் ஆவார். இவரைத்தொடர்ந்து ம.ரா. இராமானுச கவிராயர் என்பார் 1840ல் பரிமேலழகருரையுடனான பதிப்பொன்றை வெளியிட்டார். இவரை யடுத்து ஈழத்தவரான ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் 1861ல் பரிமே லழகருரையுடனான பதிப்பொன்றை வெளியிட்டார். அது மீண்டும் 1888லும் அச்சேறியது. இவ்வாறாக 19ம் நூற்றாண்டில் நிகழ்ந்த உரையுடனான திருக்குறள் பதிப்புகளாக அறியப்படும் பலவும் பரிமேலழகருரையுடனான பதிப்புகளாகவே அமைந்திருந்தன.

பண்டைய உரையாசிரியர்களுள் ஒருவரான மணக்குடவரின் உரையை திரு.வ.உ. சிதம்பரம் பிள்ளை(கப்பலோட்டிய தமிழன்) அவர்கள் 1917லும் திரு. க. பொன்னுசாமி நாட்டார் அவர்கள் 1925லும் இராஜ சாம்பசிவ சர்மா அவர்கள் 1955லும் பதிப்பித்த னர். (தகவல்: வள்ளுவம் ஆய்விதழ். சனவரி - பிப்பிரவரி 2000 மற்றும் செப்டம்பர் - அக்டோபர் 2000 வெளியீடுகள். பக்: 94-95, 92-94)

பண்டைய உரைகளாக அறியப்படுபவற்றுள் பேணப்பட்டவற்றைத் தொகுத்து திருக்குறள் - உரைக்கொத்து என்ற தலைப்புடன் பதிப் பிக்கும் முயற்சியானது தமிழகத்தின் திருப்பனந்தாள் ஆதீனத்தின் ஸ்ரீகாசி மடத்தினால் 1950களில் தொடங்கப்பட்டது. இவ்வகை முயற்சிகள் பின்னர் வேறுபல நிறுவனங்கள் சார்ந்தும் மேற்கொள் ளப்பட்டன. மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகரின் திருக்குறள் உரைக்களஞ்சியம் என்ற நூலாக்கமானது ஏழு தொகுதிகளாக மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தால் வெளிக்கொணரப்பட்டது. முனைவர் இரா. சாரங்கபாணியின் திருக்குறள் உரைவேற்றுமை என்ற நூலாக்கம் மூன்று தொகுதிகளாக அண்ணாமலைப் பல்க லைக்கழகத்தின் வழி வெளிவந்தது. இவ்வாறான நூலாக்கங்கள் தமக்கு முற்பட்ட தொகுப்பாய்வுகளின் விரிநிலைகளாக அமைந்த வையாகும்.

இவ்வாறு பல உரைகளின் தொகுப்புகளாக அச்சேறிவந்தநிலையி லும் பரிமேலழகரின் உரைசார் பதிப்புகள் பல தொடர்ந்து வெளி வந்துகொண்டிருந்தன. இதனால் திருக்குறள் என்றால் அது பரிமே லழகருரையுடனான ஒரு ஆக்கமே என்பதான ஒரு மனப்படிம மொன்று தமிழ்ச் சூழலின் பொதுவான கல்வியாளர் மத்தியில் உருவாகி நிலைத்துவிட்டது.

இவ்வாறு இவ்வுரை தமிழ்ச்சூழலில் பெரு வரவேற்பை எய்தியநி லையில் இவ்வுரை பற்றிய ஆய்வுகள் பல நிகழ்ந்துள்ளன. இவ் வாய்வுகள் பலவற்றுள் நூல்வடிவிலே வெளிவந்தவற்றுள் டாக்டர் இ. சுந்தரமூர்த்தி அவர்களின் பரிமேலழகரின் திருக்குறள் உரைத் திறன்(1985) என்ற நூல் முக்கியமானது. (இது 1977லே சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு அளிக்கப்பட்ட இத்தலைப்பிலான டாக்டர் பட்ட ஆய்வேட்டின் நூல்வடிவமாகும்.)




## இரண்டாவது காலகட்டநிலைசார் தரவுகள் - சுருக்க அறிமுகம்:

மேற்கண்டவாறான பண்டைய அறிஞர் பலரின் உரைகளுடன் பேணப்பட்டுவந்த திருக்குறளுக்கு புத்துரைகள் எழுதிப்பேணிக் கொள்ளும் மரபு 19ம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து தொடங்குகிறது. இன்றுவரை அது தொடர்கிறது. இவ்வாறு புத்துரை எழுதும் மரபைத் தொடக்கிவைத்தவர் களத்தூர் வேதகிரி முதலியார் ஆவார். இவர் 1850ல் வெளியிட்ட திருக்குறள் மூலமும் உரையும் என்ற ஆக்கமே இவ்வகையில் முதல் முயற்சியாகும். இதனை அடுத்து, 19ம் நூற்றாண்டிலே இராமானுச கவிராயர்(1873), சுகாத்தியர்(1889), சுந்தரமுதலியார்(1893) முதலியவர்களின் முயற்சிகளாக மூன்று புத்துரைப் பதிப்புகள் வெளிவந்துள்ளன என அறிகிறோம். (தகவல்: வள்ளுவம் ஆய்விதழ் சனவரி-பிப்ரவரி 2000 சென்னை. ப: 94-95)

20ம் நூற்றாண்டிலே திருக்குறளுக்குப் புத்துரைகள் எழுதுவதிலே புதிய ஆர்வமுனைப்புக் காணப்பட்டது. இவ்வகையில் நிகழ்ந்த உரையாக்கச் செயற்பாடுகளில் ஒருவகையானவை அந்நூல் மீதான பொதுவான ஈடுபாட்டாலும் தத்தம் புலமைத்திறனைப் புலப்படுத்தும் ஆர்வங்களாலும் மேற்கொள்ளப்பட்டவையாகும். இவ்வகையாக்கங்களுக்கான சான்றுகளாக ஈழத்தவரான சேர்.-பொன்னம்பலம் இராமநாதன், அரசன் சண்முகனார், டி.ஆர். திரு-வேங்கடம்பிள்ளை, கி. குப்புசாமி முதலியார், மு.ரா. அருணாசலக் கவிராயர், பி.எஸ். சுப்பிரமணிய சாஸ்திரி, கி.வா. ஜகந்நாதன் மற்றும் பேராசிரியர் சாலமன் பாப்பையா முதலிய பலரின் புத்துரையாக்கச் செயற்பாடுகளைக் குறிப்பிடலாம்.

20ம் நூற்றாண்டுப் புத்துரை முயற்சிகளுள் இன்னொருவகையின குறிப்பாகத் தமிழுணர்வு மற்றும் திராவிட அரசியல் ஆகிய சிந்தனைத்தளங்கள் சார்ந்த புலமைச் செயற்பாடுகளாக வெளிப்பட்டவையாகும். இவை குறிப்பாகப் பரிமேலழகருரை மீதான விமர்சனங்களாக வெளிப்பட்டவையாகும். 'பரிமேலழகருரையானது வைதிக சமயமரபு சார்ந்ததாக - குறிப்பாக வடமொழியின் மனுதர் மசாஸ்திரத்தின் கருத்தியலுக்கு நெருக்கமானதாகத் திகழ்வது' என்பதே இவ்வகை உரை முயற்சிகளின் முக்கிய விமர்சனமாகும். குறிப்பாக, 'பரிமேலழகர் திருக்குறளைப் புரிந்து கொள்ளத் தவறிவிட்டார்' என இவர்களுட் பெரும்பாலானோரின் கருத்துநிலையாகும்.

இத்தொடர்பிலே தமிழுணர்வாளர்களுள் ஒருவரான நாமக்கல் கவிஞர் வே. இராமலிங்கம்பிள்ளை அவர்கள் தாம் எழுதிய, 'திருவள்ளுவர் திடுக்கிடுவார்'(1954) என்ற நூலிலே தந்துள்ள கருத்தொன்று இங்கு சுட்டத்தக்க முக்கியத்துவமுடையது.

'பரிமேலழகருக்கு முன்னால் ஒன்பது பேர் திருக்குறளுக்கு உரை எழுதியிருந்தார்கள். அவை எல்லாவற்றினும் சிறந்ததாகப் பரிமே-லழகர் உரை ஏற்றுக்கொள்ளப்பட்டதால் மற்ற உரைகளெல்லாம் வழக்கிழந்துவிட்டன. அதனால் கடந்த அறுநூறு ஆண்டுகளாகத் தமிழ் மக்கள் பரிமேலழகர் உரையைப் பின்பற்றித்தான் திருக்குறளை அனுபவித்து வருகிறார்கள். ஆனால் போற்றற்குரிய உரையாசிரியரான பரிமேலழகர் பலவிடங்களில் திருவள்ளுவருடைய கருத்துக்குப் பொருந்தாத உரைகளையும் சிலவிடங்களில் திருவள்ளுவர் கருத்துக்கு முற்றிலும் விரோதமான உரைகளையும் செய்துவிட்டார்.' (வே. இராமலிங்கம்பிள்ளை. திருவள்ளுவர் திடுக்கிடுவார். 3ம் பதி. கவிஞர்பதிப்பகம் கோயம்புத்தூர். 1963.பக்.7)

20ம் நூற்றாண்டுப் புத்துரை முயற்சிகளுள் மற்றொரு வகையானவை திருக்குறளைச் சராசரி பொது வாசகர்களுக்கு நெருக்கமாக இட்டுச்செல்லும் முயற்சிகளாக அமைந்தனவாகும். இவ்வகை சார்ந்து மேற்கொண்ட பெருந்தொகையானவர்களுள் முக்கியமானவர் 'மு.வ' என வழங்கப்பட்டு வரும் பேராசிரியர் மு. வரதராசனார் ஆவார். 1960களில் வெளிவந்த அவருடைய கையடக்க வடிவிலமைந்த திருக்குறள் தெளிவுரை என்ற நூலானது பலபதிப்புகளைக் கண்டுள்ளது என்பதைத் தமிழுலகம் நன்கறியும்.

திருக்குறளின் உரைகள் தொடர்பாக கணக்கெடுத்த ஆய்வாளர்களில் ஒருவரான முனைவர் பா. வளன் அரசு அவர்கள் 2001 வரையான காலகட்ட உரையாசிரியர்களாக 84 பேரின் பட்டியலைத் தந்துள்ளார். 'மணக்குடவர் முதல் முனைவர் சந்திரன் வரையான பலரை உள்ளடக்கியதாக இப்பட்டியல் அமைந்துள்ளது. இதில் பரிமேலழகர் வரையான பண்டையவர்கள் பதின்மர் போக, புதியவர்கள் தொகை 74 ஆகும். (பார்க்க: வள்ளுவம் - ஆய்விதழ் - இல. 13. 2001. ப.94)

ஆனால் தமிழ் விக்கிபீடியா இன்னொரு கணக்கெடுப்பை முன்வைத்துள்ளது.

1901-1910: 3 உரையாசிரியர்கள்
1911-1920: 1 உரையாசிரியர்
1921-1930: 6 உரையாசிரியர்கள்
1931-1940: 7 உரையாசிரியர்கள்
1941-1950: 13 உரையாசிரியர்கள்
1951-1960: 24 உரையாசிரியர்கள்
1961-1970: 13 உரையாசிரியர்கள்
1971-1980: 3 உரையாசிரியர்கள்
1981-1990: 24 உரையாசிரியர்கள்
1991-2000: 63 உரையாசிரியர்கள்

ஆக 2000ம் ஆண்டுவரையான உரையாசிரியர்கள் தொகை 157 என அதன் கணிப்பு அமைகிறது. எனவே மேற்சுட்டிய முனைவர் பா. வளன் அரசு அவர்கள் தந்துள்ள கணக்கெடுப்பானது மறு பரிசீலனைக்குரியதென்பது தெரிகிறது.

மேலே நாம் நோக்கிவரும் புத்துரையாக்கச் செயற்பாடுகள் 21ம் நூற்றாண்டிலும் புதிய வேகத்துடன் தொடர்கிறது என்பது வெளிப் படையாகவே தெரிகின்றது. முழுநூலுக்கான உரைகளாக மட்டு மன்றித் தனித்தனியதிகாரங்களுக்கும் தனிக் குறள்களுக்கும் கூடப் புத்துரைகள் எழுதும் முயற்சிகளும் இன்றுவரை தொடர்கின்றன. (இக்கட்டுரையை எழுதிக்கொண்டிருக்கும் போதேகூட தனிக் குற ளுக்கான புத்துரை முயற்சியொன்று பார்வைக்கு வந்துள்ளது. 'கழாஅக்கால்; என்ற 840ம் குறளுக்கு ஜெயமோகன் அவர்கள் தந் துள்ள புத்துரையே, அது. (பார்க்க: jeyamohan.in - 08-06-2022)

இவ்வாறாக 21ம் நூற்றாண்டில் தொடரும் புத்துரைகளின் தொகை தனியான கணக்கெடுப்புக்குரியதாகும்.

மேலே நோக்கியவாறான புதியவகை உரையாக்க முயற்சிகளாக மட்டுமல்லாமல் விளக்க நூல்கள் மற்றும் ஆய்வு நூல்கள், ஆய் வேடுகள், ஆய்வுக்கட்டுரைகள் மற்றும் மொழிபெயர்ப்புகள் எனப் பல்வேறு வகைகளிலும் ஆயிரக்கணக்கான ஆக்கங்கள் திருக்கு றள் சார்ந்து வெளிவந்துள்ளன. வெளிவந்து கொண்டுமிருக்கின் றன. தமிழகத்தின் பல்கலைக்கழகங்களில் - குறிப்பாக, சென் னைப் பல்கலைக்கழகத்திலும் மதுரைக் காமராசர் பல்கலைக்கழ கத்திலும் - திருக்குறளாய்வுக்கான தனி ஆய்விருக்கைகள் அமைந்துள்ளன என்பதும் இங்கு கவனத்துக்கு இட்டுவரவேண்டிய முக்கிய தகவல்களாகும்.

திருக்குறள் தொடர்பான இவ்வாறான நமதுகால ஆய்வுச்சூழலிலே கவனத்துள் கொள்ளவேண்டிய மேலுமிரு ஆக்க முயற்சிகள் பற்றி யும் இங்கு குறிப்பிடுவது அவசியம். அவற்றுளொன்று வள்ளுவம் என்ற ஆய்விதழாகும். இரண்டாவது ஆக்கம் பேராசிரியர் அரங்க. இராமலிங்களாரின் பெருமுயற்சியில் அண்மையில் -2022 சித்திரை யில் - வெளிவந்துள்ள திருக்குறள் களஞ்சியம் என்ற ஆய்வுக்கட் டுரைகளின் பெருந்தொகுப்பாகும்.

1999-2004 காலப்பகுதியில் தமிழகத்தில் இருமாத இதழாக வெளி வந்துகொண்டிருந்த வள்ளுவம் என்ற ஆய்விதழானது திருக்குறள் தொடர்பான கருத்துப் பகிர்வுகளுக்கான முக்கிய களமாகத் திகழ்ந்ததாகும். திரு. பல்லடம் மாணிக்கம் மற்றும் பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி (பரிமேலழகரின் திருக்குறள் உரைத்திறன் என்ற ஆய்வுநூலின் ஆசிரியர்) ஆகிய இருவரின் ஆசிரியத்துவத்தில் வெளிவந்த இவ்விதழில் தமிழின் சமகால ஆய்வாளர்கள் மற்றும் படைப்பாளிகள் உள்ளிட்ட பலர் கட்டுரைகள் எழுதினர். மேற்படி ஐந்தாண்டுக் காலப்பகுதியில் வள்ளுவத்தின் இருபதுக்கு மேற் பட்ட இதழ்கள் வெளிவந்துள்ளன. இவற்றில் சமகாலத் தமிழறிஞர் கள் மற்றும் எழுத்தாளர்கள் ஆகியோரின் ஆக்கங்களாக ஏறத் தாழ 400 கட்டுரைகள் வரை பதிவாகியுள்ளன.

மேற்படி வள்ளுவம் ஆய்விதழின் வரலாற்று முக்கியத்துவம் என்ற வகையில் இங்கு குறிப்பிட வேண்டிய முக்கிய அம்சம், அதிலே கி.பி 2000 வரை திருக்குறள் சார்ந்து நிகழ்ந்துள்ள ஆய்வுகள் மற் றும் மொழிபெயர்ப்பு முயற்சிகள் முதலான பலவும் இதில் மதிப் பீடுகளுக்கு உள்ளாக்கப்பட்டன என்பதாகும். அத்துடன் திருக்கு றள் தொடர்பான ஆய்வுத்தரவுகள் பலவும் இவ்விதழில் தொகுத்த ளிக்கப்பட்டுள்ளன என்பதையும் இங்கு குறிப்பிடுவது அவசியமா கும். (இவ்வாறான தரவுகளுள் சில இக்கட்டுரையிலே மேலே எடுத்தாளப்பட்டுள்ளன.)

(திருக்குறள் களஞ்சியம் என்ற பெருநூல் பற்றிய தகவல் மட்டுமே கிடைத்துள்ளது. இதன் முக்கியத்துவம் இத்தொடரிலே பின்னர் நோக்கப்படவுள்ளது.)

தமிழகத்துக்கு - இந்திய மண்ணுக்கு - அப்பால் ஈழத்திலும் தமி ழர் வாழும் வேறு பல நாடுகளிலும்கூட திருக்குறள் பற்றிய சிந்த னைகள் மிக விரிவான நிலைகளில் பரவியுள்ளன என்பதையும் நாமறிவோம். திருக்குறளை மையப்படுத்தி உலகளாவிய நிலைக- ளில் மாநாடுகளும் பன்னாட்டுக் கருத்தரங்குகளும் நிகழ்ந்துவந் துள்ளன - நிகழ்ந்துவருகின்றன. இன்றைய 'கொரோனா ஊரடங்கு' சூழலின் இணையவெளி உரையாடல்களிலும்கூட திருக்குறள் முக் கிய கவனத்தைப் பெற்றுவருகின்றமை தமிழியலாளர்கள் பலரும் அறிந்தசெய்தியேயாம்.

திருக்குறள் தொடர்பான ஆய்வுத்தரவுகள் என்றவகையில் இது வரை நாம் நோக்கியவை அவ்வாக்கம் பற்றிய ஆய்வுத்தளமானது கடந்த காலங்களில் எந்த அளவுக்கு விரிந்து பரந்து சென்றுள் ளது என்பதையும் அதற்கமைந்த சூழல்களையும் ஓரளவாவது உணர்த்தவல்லன எனக் கருதுகிறேன். இவ்வாறான தரவுகள் தொடர்பான பார்வைகளை அடுத்து, அந்நூல் தொடர்பாக நிகழ்ந் துள்ள ஆய்வுகளில் நாம் நேரே கவனத்தைத் திருப்பலாம். இவ்வ கையில் நமது முதற் கவனத்துக்கு வருவது 'திருக்குறளின் மூல பாடம்' தொடர்பாக நிகழ்ந்துள்ள ஆய்வுகளாகும்.

## திருக்குறளின் மூலபாடம் தொடர்பான பார்வைகள்:

குறித்த ஒரு நூலாக்கம்பற்றிய ஆய்வுப்பார்வையில் முதற்கவனத் துக்குரிய அம்சம் 'அவ்வாக்கத்தின் இயல்பு எத்தகையது?' என் பதை உறுதியாக நிறுவிக் கொள்ளுதலேயாகும். இவ்வாறு நிறு விக்கொள்ளும் ஆய்வுமுறையாக உருவானதே 'மூலபாட ஆய்வு' ஆகும். இதனை 'மூலபாடத் திறனாய்வு' (Textual Criticism) என வும் வழங்குவர். அவ்வகையில் திருக்குறளை மையப்படுத்தி நிகழ்ந்துள்ள மூலபாடம் தொடர்பான பார்வைகளே இங்கு கவனத் துக்கு வருகின்றன.

திருக்குறள் என்றவுடன் உடனடியாக நமது நினைவுக்கு வருவது 133 அதிகாரங்களில் 1330 குறட்பாக்களைக்கொண்ட அதன் பொது அமைப்பாகும். மேற்படி 133 அதிகாரங்களும் 'அறத்துப் பால்', 'பொருட்பால்' மற்றும் 'காமத்துப்பால்' என்பதான முப் பெரும் பகுப்புகளில் முறையே 38, 70, 25 என்பதான எண்ணிக் கைகளில் வகைப்படுத்தப்பட்டுள்ளன. மேற்படி 'பால்' என்ற தலைப்பிலான பெரும்பிரிவுகளில் 'இயல்' என்ற உட்பிரிவுகள் உள்ள. 'அறத்துப்பா'லில் 'பாயிரவியல்', 'இல்லறவியல்', 'துறவற வியல்', 'ஊழியல்' என நான்கியல்களும் 'பொருட்பா'லில் 'அரசி யல்', 'அங்கவியல்', 'ஒழிபியல்' என மூன்றியல்களும் 'காமத்துப் பா'லில் களவியல், கற்பியல் என இரு இயல்களும் உள்ளன.

திருக்குறளின் ஆசிரியரான திருவள்ளுவர் மேற்சுட்டியவாறான அமைப்பு முறையிலேயே இந்நூலைப் படைத்தளித்துள்ளார் என் பதே தமிழ் உலகின் பொதுவான நம்பிக்கை சார்ந்த கருத்தாகும். தமிழ்க் கல்வியாளர்கள் பலர் மத்தியிலும்கூட இக்கருத்தே பொது வாக நிலவிவருகிறது. ஆயினும் உண்மையில் இந்த அமைப்பு முறையானது திருக்குறளின் உரைகார்களிலொருவரான பரிமேலழ- கரின் உரையுடன்கூடிய 'மூலபாடநிலை'யேயாகும். 'இவ்வாறான 'மூலபாடநிலை'யானது திருவள்ளுவருடையது தானா? அல்லது பரிமேலழகரோ அல்லது அவர்போன்ற ஒரு சாராரோ பின்னாளில் வகுத்தமைத்துக் கொண்ட ஒன்றா?' என்பன போன்ற வினாக்கள் எழுந்த சூழ்நிலையே இந்நூலின் மூலபாடம் பற்றிய ஆய்வுக்கான மூலகாரணியாகும்.

மேற்படி வினா எழுந்தமைக்கான முக்கிய காரணிகளாக அமைந் தவை மேலே நோக்கிய திருவள்ளுவமாலைப் பாடல்கள் சிலவும் திருக்குறளின் சில உரைகளும் திருக்குறளின் அமைப்பு தொடர் பாகத் தந்துள்ள குறிப்புகளில் காணப்படும் வேறுபாடுகளாகும். இவ்வகை வேறுபாடுகள் குறிப்பாக, 'பால்', 'இயல்', 'அதிகாரம்' ஆகியவற்றின் தலைப்புகள் மற்றும் குறட்பாக்களின் வைப்புமுறை ஆகியவற்றிலே காணப்படுகின்றன. மேற்படி வேறுபாடுகள் தொடர்பான சில தகவல்கள் மட்டும் வருமாறு:

திருவள்ளுவமாலையில் அமைந்துள்ள பாடல்களிலே போக்கியார் மற்றும் மோசிகீரனார் ஆகியோரின் பாடல்கள் மேலே நாம் நோக்

கிய இயலமைப்புகளினின்று வேறுபட்ட இயலமைப்புகளை அறி யத்தருகின்றன.

போக்கியார் பாடல்:

***'அரசியல் ஐயைந்(து) அமைச்சியல் ஈரைந்(து)***
***உருவல் அரணிரண்டொன்(று) ஒண்கூழ் - இருவியல்***
***திண்படை நட்புப்பதினேழ் கடிபதின்மூன்(று)***
***எண்பொருள் ஏழாம் இவை.'***

- திருவள்ளுவமாலை பாடல் : 26

மோசிகீரனார் பாடல்:

***'ஆண்பாலே ழாறிரண்டு பெண்பால் அடுத்தன்பு***
***பூண்பா லிருபாலோ ராறாக - மாண்பாய***
***காமத்தின் பக்கமொரு மூன்றாகக் கட்டுரைத்தார்***
***நாமத்தின் வள்ளுவனார் நன்கு.'***

- திருவள்ளுவமாலை பாடல் : 27

மேற்படி போக்கியார் பாடலானது பொருட்பாலின் இயல்களை 'அரசியல்', 'அமைச்சியல்', 'அரணியல்', 'பொருளியல்', 'படையி யல், 'நட்பியல்', 'குடியியல்' என ஏழாக வகைப்படுத்தப்பட்டிருந்த நிலையைச் சுட்டிநிற்கின்றது. பின்னைய மோசிகீரனார் பாடலா னது, 'வள்ளுவர் காமத்துப்பாலின் இயலமைப்பை, 'ஆண்பால் கூற்று', 'பெண்பால் கூற்று', 'இருபால்கூற்று' என மூன்றாக வகைப் படுத்தியுள்ளார்' என்பதான தகவலைத் தருகிறது.

திருக்குறளின் பரிமேலழகருரையுடனான பதிப்பின் கட்டமைப்பிலே 'பொருட்பால்' மூன்றியல்களையும் 'காமத்துப்பால்' இரண்டியல்க ளையும் கொண்டதென்பதை மேலே நோக்கியுள்ளோம். எனவே இங்கு இவ்விருவரின் கூற்றுகளாகத் திருவள்ளுவமாலை தரும் வேறுபட்ட தகவல்கள் அப்பாடல்களெழுந்த காலப்பகுதியில் வழக்கிலிருந்த திருக்குறளின் வேறுபட்ட கட்டமைப்புகள் பற்றியன வாகலாம் என்பதை உய்த்துணரமுடிகிறது.

திருக்குறளுக்கு எழுந்த உரைகளிற் சிலவற்றிலே மேற்படி இயல் வைப்புமுறைகளில் மட்டுமன்றி அதிகாரங்களின் வைப்புமுறை ஆகியவற்றிலுங்கூட வேறுபாடுகள் காணப்படுகின்றன. குறிப்பாக மணக்குடவர், பரிப்பெருமாள் ஆகியோரின் உரையுடனான கட்ட மைப்புகளிலே பொருட்பாலானது 'அரசியல்', 'அமைச்சியல்', 'பொருளியல்', 'நட்பியல்' 'துன்பியல்', 'குடியியல்' என ஆறு இயல்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. காலிங்கர் உரையுட னான பதிப்பிலே பொருட்பாலானது 'அரசியல்', 'அமைச்சியல்' என இரு இயல்கள் மட்டுமே உள்ள.

பரிமேலழகர் 'இல்லறவிய'லுள் வைத்துள்ள இனியவை கூறல், அடக்கமுடைமை, அழுக்காறாமை, வெஃகாமை, புறங்கூறாமை ஆகிய அதிகாரங்களையும் மணக்குடவர் 'துறவறவிய'லிலே வைத் திருக்கிறார். பரிமேலழகர் 'துறவறவிய'லுள் வைத்திருக்கும் வாய்மை, வெகுளாமை முதலிய சில அதிகாரங்கள் மணக்குடவரு ரையுடனான பதிப்பிலே 'இல்லறவிய'லுள் அடக்கப்பட்டுள்ளன. (திருக்குறளின் இவ்வாறான பாடவேறுபாடுகள் சார்ந்த தகவல் களை மேலும் விரிவாக அறியவிழைவோர் பார்க்கவேண்டிய நூல்: பேராசிரியர் சாலமன் பாப்பையா அவர்களின் திருக்குறள் தெளி- வுரை, ஜெயா பதிப்பகம் மதுரை. 1999. இதன் முகவுரைப்பகுதி மேற்படி பல தகவல்களையும் தொகுத்தளித்துள்ளது.)

திருக்குறளின் மூலபாடம் தொடர்பான மேற்சுட்டியவாறான பிரச்சி- னையம்சங்கள் பலவும் தமிழறிஞர்கள் பலரால் அவ்வப்போது அவதானிக்கப்பட்டு வந்துள்ளன. பல ஆய்வுகளும் மேற்கொள் ளப்பட்டுள்ளன. அவற்றுள் குறிப்பாக பேராசிரியர்கள் தி. முருக- ரத்தினம், செ.வை. சண்முகம் ஆகிய இருவரின் அவதானிப்பு களை மட்டும் இங்கு சுருக்கமாகச்சுட்ட விழைகிறேன். பேராசிரியர் முருகரத்தினம் அவர்களின் 'வள்ளுவரை அறிந்தோமா?', செ.வை. சண்முகம் அவர்களின் 'குறளின் மூலபாடம்' ஆகிய கட்டுரைகளே இங்கு கவனத்துக்கு இட்டுவரப்படுகின்றன. இவ்விருகட்டுரைகளும் மேலே நாம் நோக்கிய வள்ளுவம் ஆய்விதழில் 2ம் மற்றும் 7ம் வெளியீடுகளில்(1999, 2000) பதிவானவையாகும்.

பேராசிரியர் முருகரத்தனமவர்களின் மேற்படி கட்டுரையானது வடி வநிலையில் மிகவும் சிறியது. அதனை ஒரு ஆய்வுக்கட்டுரை என் பதைவிட, திருக்குறளின் மூலபாட நிலைதொடர்பான விடைகளை நாடுவதற்கு அடிப்படைகளான வினாக்களின் தொகுப்பு என்றே கூறிவிடலாம். அதன் தலைப்பானது 'வள்ளுவரை - அதாவது திருக்குறளை - நமது கல்விச்சமூகம் முழுநிலையில் அறிந்து கொள்ளவில்லை' என்பதான அவருடைய அவதானிப்பை உணர்த் திநிற்கின்றமை வெளிப்படை. இதிலே அவர் திருக்குறளின் மூல பாட நிலை தொடர்பாக புலப்படுத்தியுள்ள கருத்துகளுக்கு எடுத் துக்காட்டாக கொள்ளக்கூடிய ஒரு கூற்றை - அதாவது வள்ளுவத் தின் மூலபாட நிலையை அறிவதிலுள்ள சிக்கல் பற்றிய அவதா னிப்பொன்றை - மட்டும் இங்கு முன்வைக்கவிழைகிறேன்.

'முப்பாலுக்கு மன்னர்ப் பதின்மர் உரை எழுதினர் என்ற மரபு உண்டு. சென்ற நூற்றாண்டு வரை எட்டுப்பேர் முப்பாலுக்கு வரைந்த உரைகள் கிடைத்துள்ளன - வெளிவந்துள்ளன. மணக்கு டவர் பரிமேலழகர் முதலான எட்டுப்பேரும் 133 அதிகாரத்துள் குறட்பாக்களை வைத்தமுறை - வைப்புமுறை - ஒரு முறையாக இல்லை. எவர் வைப்பும் பிறர் வைப்போடு எந்த அதிகாரத்திலும் ஒத்துவரவில்லை. வைப்புமுறைக்கு ஒரு பொருளுண்டு - தகுதி யுண்டு. வள்ளுவர் வைத்த குறட்பா வைப்புமுறை இன்னது என விளங்கவில்லை. அது விளங்காதவரையில் முப்பால் விளங்குமா? வள்ளுவரைத்தான் அறிந்தோம் ஆவோமா?' (வள்ளுவம் ஆய் விதழ் -2.1999.ப.71)

பேராசிரியர் செ.வை. சண்முகம் அவர்கள் இவ்விடயத்தைச் சற்று விரிவாக அணுகியுள்ளார். திருக்குறளின் மூலபாடம் தொடர்பான ஆய்வின் வரலாற்றை இவர் விரித்துரைத்துள்ளார். இத்தொடர்பில் அவருடைய அவதானிப்புகள் சிலவற்றை மட்டும் சுருக்கமாக நோக்கலாம். இருபதாம் நூற்றாண்டில் குறள் ஆய்வில் மூன்று பெரிய பிரச்சினைகள் எழுப்பப்பட்டுள்ளன என்பதே அவருடைய முக்கிய அவதானிப்பாகும்.

அவற்றுள் முதலாவதாக அவர் குறிப்பிடுவது 'திருக்குறள் தனி நூலாக ஆக்கப்பட்டதா? அல்லது தொகைநூலா?' என்பதாகும். இத்தொடர்பில் ஆய்வறிஞர்களான நாவலர் சோமசுந்தர பாரதி யார் மற்றும் தண்டபாணி தேசிகர் ஆகியோரின் சிந்தனைகளை நோக்கி நம்மை அவர் ஆற்றுப்படுத்தகிறார்.

இரண்டாவதாக அவர் குறிப்பிடுவது 'திருக்குறளின் பால் பாகு பாடு வள்ளுவர் செய்ததா?' என்பதாகும். இத்தொடர்பில் ஆய்வா ளர்கள் ஆனந்தன், காசிபாண்டியன், ஆகியோரின் பதிவுகளை அவர் நமது கவனத்துக்கு இட்டுவருகிறார்.

மூன்றாவதாக அவர் குறிப்பிடுவது 'பாயிரம் என்ற பகுதியில் உள்ள நான்கதிகாரங்களில் முதல் மூன்று அதிகாரங்கள் செருக லாக அதாவது முதல் செருகலாக இருக்குமா? என்பதாகும். இக் கருத்து வ.உ. சிதம்பரம்பிள்ளை மற்றும்(மேற்சுட்டிய) பேராசிரியர் முருகரத்தனம் ஆகியோரது சிந்தனைகள் சார்ந்ததாகும். (விளக் கத்திற்குப் பார்க்க வள்ளுவம் ஆய்விதழ்-7. 2000. பக். 7-14 )

இவ்வாறு திருக்குறளின் மூலபாடம் தொடர்பான சிந்தனைகளை வரலாற்றுமுறையில் விரிவாக எடுத்துரைத்தவகையில் - குறிப்பாக மூலபாட ஆய்வில் உள்ள சிக்கல்களைச் சுட்டிச்சென்ற வகையில் பேராசிரியர் செ.வை.ச. அவர்களின் இக்கட்டுரை முக்கியமானது என்பதே எனது கணிப்பாகும். அதேவேளை திருக்குறளின் மூலபா டம் யாது? என்ற வினாவானது இன்றுவரை விடை காணப்படாத நிலையிலேயே தொடர்கிறது என்பதையும் கூட இங்கு நினைவில் இருத்துவது அவசியமாகிறது.

(தொடரும்)



subramanian.n@thaiveedu.com


உங்களுக்கு சேமிக்க உதவும்
தள்ளுபடிகள் பற்றி என்னிடம் கேளுங்கள்
Allstate
You're in good hands.
தனிப்பட்ட சேவைக்கும் ஆலோசனைக்கும்
என்னைத் தொடர்பு கொள்ளுங்கள்
Raji Linghan
Ajax Agency
15 Westney Road, N
(289) 275-8795
rlinghan@allstate.ca
பயணக் காப்புறுதி
கனடாவுக்கு வருபவர்களுக்கான காப்புறுதி
செல்லப் பிராணிக் காப்புறுதி
ஆயுள் காப்புறுதி
முதலீடுகள் மற்றும் நிதித் திட்டமிடல்
Trademark owned by Allstate Insurance Company used under licence by Allstate Insurance Company of Canada. ©2020 Allstate Insurance Company of Canada. 011E | 201316


வீடு | வணிகம்
★ வாங்க ★ விற்க ★ வாடகைக்கு...
Residential | Commercial
★ BUY ★ SELL ★ LEASE
$985,000 TORONTO 3 | 2
$849,000 AJAX 4+2 | 4
$899,000 MARKHAM 3 | 3
$689,900 OSHAWA 3 | 3
$649,900 TORONTO 4 | 2
Sell Your House for Highest Price - Here Are Some Recent Proven Results
SOLD OVER ASKING 119% $131,000 SOLD OVER ASKING Mornigside & Stains 3 | 3 Town house
SOLD OVER ASKING 118% $180,000 SOLD OVER ASKING Rossland & Chrch 5+2 | 7- Detached
SOLD OVER ASKING 106% $30,000 SOLD OVER ASKING Middlefield & Finch 2+1 | 2 Condo
SOLD OVER ASKING 103% $26,000 SOLD OVER ASKING Rossland & Chrch 3+1 | 3 Town House
CALL YOUR PROFESSIONAL SERVICE
Rave
P. Raveenthiran
Sales Representative
Dir: 416-567-2462
Email: realtor.rave@gmail.com
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife G1 Realty Inc.
HomeLife/Future
Realty Inc.,Brokerage
205-7 Eastvale Dr,Markham ON. L3S 4N8
Bus: 905.201.9977
MLS
MULTIPLE LISTING SERVICE
List your property with me...
FREE!
* Home Evaluation
* Home Staging
* Professional Photography
* Social Media Marketing
* Just Listed & Feature Sheet

# கம்பனின் கருவூலம் திறந்து...

## 06

- மாவிலி மைந்தன்
சி. சண்முகராஜா

முன்னர் வெளிவந்த 6 இதழ்களில் கம்பராமாயணம், பாலகாண்டத்தின் நான்கு படலங்களிலும் அயோத்தியின் நாட்டு வளம், நகர்ச் சிறப்பு, அயோத்தியை வளமாக்கும் சரயூ ஆற்றின் சிறப்பு ஆகியவற்றைக் கம்பனின் அழகுக் கவிதைகளில் படித்து அனுபவித்துக் களித்தோம். இந்த இதழில் வெளிவரும் பகுதி 6ல் 5வது படலமாகிய திருவவதாரப் படலத்தில் இராமன், இலக்குவன், பரதன், சத்துருக்கன் ஆகிய திருக்குமாரர்களைத் தயரத மன்னன் பெற்றெடுத்த வரலாறு பற்றிக் கம்பர் கட்டுரைத்த கவிதை நயங்களின் வாயிலாக அறிந்து மகிழ்வோம்.

பிள்ளைப் பேறு இல்லாத குறை தயரதனை வாட்டுகிறது. பல்லாயிரம் ஆண்டுகள் யாதொரு குறையுமின்றி நல்லாட்சி புரிந்த தனது குல மன்னர்களின் ஆட்சி தனக்கு வாரிசுகளில்லாமையால் தன்னுடனே முடிவடைந்து விடுமோ என்று தயரதன் கவலையுறுகிறான். தனது நாட்டை ஆளுவதற்கும் மக்களை எவ்விதக் குறையுமின்றிப் பாதுகாத்தற் பொருட்டும் தனக்குள்ள பிள்ளையில்லாக் குறையைப் போக்குவதற்காக அமைச்சர்களுடன் ஆலோசித்து வசிட்டர் முதலிய குருமார்களை அழைத்துத் தனது விருப்பத்தைத் தெரிவிக்கிறான்.

*எங்குலத் தலைவர்கள் இரவி தன்னிலும்*
*தங்குலம் விளங்குறத் தரணி தாங்கினார்*
*மங்குந ரில்லென வரம்பில் வையகம்*
*இங்குன தருளினால் இனிதி னோம்பினேன்.*

- கம்ப. பால. 182

எமது குலத்து மன்னர்கள் கதிரவனைக் காட்டிலும் தங்களது குலம் புகழால் உயர்ந்து விளங்கும்படி ஆட்சி புரிந்தார்கள். ஒளி மழுங்கியவர்கள் என்று எவருமில்லை எனச் சொல்லத்தக்க வகையில் இவ்வுலகத்தைப் பாதுகாத்தார்கள். எல்லையில்லாத நிலவுலகத்தை தங்களைப் போன்ற ஆன்றோர்களின் அருளினால் இக்காலத்திலும் இனிமையாகப் பாதுகாத்தேன் என வசிட்ட முனிவரிடம் கூறிய தயரதன்,

*அருந்தவ முனிவரும் அந்த ணாளரும்*
*வருந்துத லின்றியே வாழ்வின் வைகினர்*
*இருந்துய ருழக்குவ ரெற்பி னென்பதோர்*
*அருந்துயர் வருத்துமென் அகத்தை யென்றனன்.*

- கம்ப. பால. 184

அரிய தவத்தையுடைய முனிவர்களும் அருளுடைய அந்தணர்களும் துன்பம் ஏதுமின்றி இற்றை நாள்வரை நல்வாழ்வில் தங்கியிருந்தார்கள். அப்படியிருந்தவர்கள் எனது காலத்துக்குப் பின்பு அவர்களைக் காத்தற் பொருட்டு யாருமில்லாமல் துன்பத்தை அனுபவிக்கப்போகின்றார்களே என்னும் பெருந்துயரே என்னை வருத்துகின்றது என வசிட்ட முனிவரிடம் தெரிவிக்கிறான். அப்போது முன்னாளில் அரக்கர்களின் அச்சுறுத்தல் தாங்காமல் அமரர்கள் திருமாலிடம் அடைக்கலமடைந்தபோது அவர்களுக்குத் திருமால் ஆறுதலளித்துத் தயரதனுக்குத் தாம் புதல்வனாக வருவோமெனக் கூறிய வார்த்தைகள் வசிட்ட முனிவரின் நினைவுக்கு வருகின்றன. அச்சமயம் வசிட்டர் தயரதனை நோக்கி அசுவமேத யாகம் என்னும் வேள்வியைச் செய்தால் பிள்ளையில்லாத குறை தீருமெனக் கூறுகிறார். இருசியசிங்கன் என்னும் முனிவரை அழைத்து வந்து வேள்வி செய்யப்படுகிறது. வேள்விக் குண்டத்தினின்று பூதமொன்று அமுதம் போலும் சுதைப் பிண்டமொன்றை ஏந்தியபடி எழுந்து வருகிறது. அந்தச் சுதைப் பிண்டத்தை எடுத்துத் தயரதனின் பட்டத்து அரசிகளுக்குப் பகிர்ந்தளிக்குமாறு முனிவன் பணிக்கிறான். முனிவனின் ஆணைப்படி தயரதன் அந்தச் சுதையில் ஒரு பங்கை முதலில் கோசலைக்கு அளிக்கிறான், பின்னர் இன்னொரு பங்கைக் கைகேயிக்கு அளித்துவிட்டு மீதமிருந்த இரண்டு பங்கு சுதையையும் சுமித்திரைக்கு அளிக்கிறான். தொடர்ந்து பட்டத்துத் தேவியர் மூவரும் கருவுருகின்றார்கள். இந்தப் புராணச் செய்திகளை இதனுடன் தொடர்புடைய சில கிளைக் கதைகளுடன் நூறு பாடல்களில் திருவவதாரப் படலத்தில் கம்பர் எடுத்துக் கூறியுள்ளார்.

*ஒருபகல் உலகெலாம் உதரத் துட்பொதிந்து*
*அருமறைக் குணர்வரு மவனை அஞ்சனக்*
*கருமுகிற் கொழுந்தெழில் காட்டும் சோதியைத்*
*திருவுறப் பயந்தனள் திறங்கொள் கோசலை.*

- கம்ப. பால. 283

நற்குணங்களைக் கொண்ட கோசலையானவள் ஒருகாலத்தில் எல்லா உலகங்களையும் தனது வயிற்றினுள்ளே மறைத்து வைத்தவனும், அருமையான வேதங்கட்கும் அறிவதற்கு அருமையானவனும், மையையும், கருமேகத்தையும் தன்னிடத்தே காட்டுகின்ற சுடர் வடிவானவனுமான திருமாலை மங்கலம் பொருந்தக் குழந்தையாகப் பெற்றனள் எனப் பாடுகின்றார் கம்பர். கோசலையைத் தொடர்ந்து கைகேயி பரதனையும், சுமித்திரை இலக்குவனையும் சத்துருக்கனையும் பெற்றெடுத்த செய்திகள் கூறும் பாடல்கள் இடம் பெறுகின்றன. நான்கு திருக்குமாரர்கள் அவதரித்ததை அறிந்த நகரமக்கள் களிப்படைந்ததைக் பின்வருமாறு கம்பர் பாடுகிறார்.

*ஆர்த்தனர் முறைமுறை யன்பி னாலுடல்*
*போர்த்தன புளகம்வேர் பொடித்த நீள்நிதி*
*தூர்த்தனர் எதிரெதிர் சொல்லி னார்க்கெலாம்*
*தீர்த்தனென் றறிந்ததோ அவர்தஞ் சிந்தையே.*

- கம்ப. பால. 296

நகரத்து மக்கள் யாவரும் அன்பின் மிகுதியால் ஆரவாரித்தார்கள். அவர்கள் அடைந்த புளகாங்கிதத்தால் அரும்பிய வியர்வை நீர்த்துளிகள் அவர்களது உடல்களை மூடிப் போர்த்தன. இந்த மகிழ்ச்

சியான செய்திகளைச் சொன்னவர்களுக்கெல்லாம் மிகுந்த திரவியங்களையெல்லாம் அள்ளிச் சொரிந்தார்கள். இவ்வாறு மக்களின் உள்ளங்கள் மகிழ்வுற்றது எல்லாம் திருமால் கோசலையின் குழந்தையாக அவதரித்தான் என்பதனை அறிந்ததனாற் போலும் என அழகான எதுகை மோனைத் தொடைகள் அமைந்த பாடலில் எடுத்துரைக்கிறார் கம்பர். நால்வரும் அவதரித்ததை அறிந்து மண்ணுலகத்துள்ளோர் மட்டுமன்றி விண்ணுலகத்தோரும் பெருமகிழ்ச்சி கொண்டனர் என்பதைக் கம்பர் வருணிக்கும் பாடல்களில் ஒன்று கீழ்வருமாறு.

*ஆடினர் அரம்பையர் அமுத வேழிசை*
*பாடினர் கின்னரர் துவைத்த பல்லியம்*
*வீடின ரரக்கரென் றுவக்கும் விம்மலால்*
*ஓடின ருலவினர் உம்பர் முற்றுமே.*

- கம்ப. பால. 287

அரக்கர்கள் வீழ்ந்து அழிந்தார்கள் என்னும் மகிழ்ச்சிப் பூரிப்பினால் தேவ மங்கையர்கள் கூத்தாடினார்கள். கின்னரர்கள் அமுதம் போலும் இனிய ஏழிசைகளில் பாடி மகிழ்ந்தனர். பல்வகையான வாத்தியக் கருவிகள் இசைக்கப்பட்டன. தேவர்கள் மகிழ்ச்சியில் ஓடி உலவித் திரிந்தார்கள் என இப்பாடலில் கம்பர் தனது மகிழ்ச்சியையும் வெளிப்படுத்துகின்றார். குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்னும் ஏழிசைகள் தமிழில் வழங்கப்பட்டமை பற்றிச் சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்படுகிறது. இவற்றையே சப்த ஸ்வரங்கள் என வடமொழியாளர் அழைக்கின்றனர். கின்னரர்கள் இவ்வேழிசையையும் இசைத்து மகிழ்ந்தார்கள் என்கிறார் கம்பர்.

குழந்தைகளைப் பெற்றெடுத்த மகிழ்ச்சியினால் அயோத்தி மன்னன் செய்த சிறப்பான செயல்கள் பற்றி மூன்று பாடல்களில் குறிப்பிடுகின்றார் கம்பர். சிறையில் அடைத்து வைக்கப்பட்டுள்ள பகை நாட்டு அரசர்களை விடுதலை செய்யவும், ஆலயங்களைப் புதுப்பித்துக் கடவுளர்க்கு நாள்தோறும் இருகாலங்களும் தீபங்களும், மாலைகளும் சமர்ப்பிக்கவும், சிறப்பு விழாக்கள் நடத்தவும், அந்தணர்களுக்குத் தானம் வழங்கவும் மன்னன் பணிக்கின்றான். இவற்றைக் கூறும் மூன்று பாடல்களில் ஒரு பாடல்,

*இறைதவிர்ந் திடுகபா ரியாண்டோர் ஏழ்நிதி*
*நிறைதரு சாலைதா ணீக்கி யாவையும்*
*முறைகெட வறியவர் முகந்து கொள்கென*
*அறைபறை யென்றனன் அரசர் கோமகன்*

- கம்ப. பால. 292

சாலைகளைப் புதுப்பிக்கவும், ஏழாண்டுகளுக்கு வரி அறவிடுவதைத் தவிர்க்கவும், கருவூலங்களைத் திறந்து அங்குள்ள செல்வங்களை வறியவர்களுக்கு வாரி வழங்கவும் பறையறைந்து செய்தி தெரிவிக்குமாறு தயரதன் கட்டளையிடுகிறான். குடியாட்சி நடைபெறுகின்ற இக்காலத்திலும் ஒரு நாடு பெருமகிழ்ச்சியுடன் கொண்டாடுகின்ற ஒரு சிறப்பான நாள் வரும்போது அந்நாட்டரசு இவை போன்ற சில சிறப்பான செயல்களை அறிவிப்பதும் குறிப்பாக நோக்கத்தக்கது.

நான்கு குழந்தைகளுக்குத் தந்தையாகும் பேறு பெற்ற தயரதன் இராமனின் மீது அளவற்ற அன்பு கொண்டிருந்தமை பற்றிக் கம்பர் குறிப்பிடுகிறார். இராமன் பிறந்த நாளிலிருந்தே தயரதன் அவன்மீது கொண்டிருந்த பேரன்பினைப் பின்னர் கைகேயி சூழ்வினைப் படலத்தில் கம்பர் மிகச் சிறப்பாகவே வெளிப்படுத்துகிறார்.

*காவியு மொளிர்தரு கமலமு மெனவே*
*ஓவிய வெழிலுடை யொருவகை யலதோர்*
*ஆவியு முடலமு மிலதென வருளின்*
*மேவின னுலகுடை வேந்தர்தம் வேந்தன்.*

- கம்ப. பால. 304

நீலோற்பல மலர்களும், அவற்றினிடையே விளங்குகின்ற செந்தாமரை மலர்களும் என்று சொல்லும் படியாகவே ஓவியமாகச் சித்திரித்தது போன்ற ஒப்பற்ற அழகையுடைய இராமனை அல்லாது தனக்கு ஒருயிரும் உடலும் வேறில்லை எனும்படி உலகம் முழுவதையும் ஆளுகின்ற மன்னர் மன்னனாகிய தயரதன் இராமனிடம் பேரன்பு பொருந்தியிருந்தான் என்கிறார் கம்பர். நீலோற்ப மலர்களிடையே விளங்குகின்ற செந்தாமரை மலர்கள் என்று நீலோற்ப மலர்களை இராமனின் கரிய திருமேனிக்கும், செந்தாமரை மலர்களை அவனது செவ்விய உறுப்புகளுக்கும் உவமை கூறும் கம்பரின் அழகான கற்பனை உத்தி நயம்மிக்கது.

வசிட்ட முனிவரால் நால்வருக்கும் பெயர் சூட்டப் பெற்றதும் குமாரர்கள் நால்வரும் இனிதே வளர்ந்துவர வசிட்டரால் இளவரசர்களுக்கு வேண்டிய கலைகள் யாவும் பயிற்றுவிக்கப்பட்ட செய்திகள் பல பாடல்களில் நயம்படச் சொல்லப்படுகின்றன. நான்மறைகளையும் அறுபத்திநான்கு கலைகளையும் கற்றதோடு போர்க் கலைகளையும் நால்வரும் கற்றுத் தேர்ந்தனர்.

*யானையு மிரதமும் இவுளியும் முதலா*
*ஏனைய பிறவுமவ் வியல்பினி னடையுற்று*
*ஊனுறு படைபல சிலையொடு பயிலா*
*வானவர் தனிமுதல் கிளையொடு வளர*

- கம்ப. பால. 307

தேவர்களுக்கும் ஒப்பற்ற முதல்வனாகிய இராமன் தனது தம்பிமார்களுடன் யானையேற்றம், தேரேற்றம், குதிரையேற்றம் போன்ற பல போர்க் கலைகளையும் முறைப்படி கற்று வில்வித்தையிலும் மற்றும் பல்வேறு படைக் கலன்களைக் கையாள்வதிலும் தேர்ச்சியுற்று வளர்ந்து வருகையில் இராமனும் இலக்குவனும் எப்போதும் ஒருவரையொருவர் பிரியாதிருக்கிறார்கள் என்பதைக் கம்பரின் பாடல் ஒன்று இனிமையாக எடுத்து வருகிறது.

*ஐயனும் இளவலும் அணிநில மகள்தன்*
*செய்தவ முடைமைகள் தெரிதர நதியும்*
*மைதவழ் பொழில்களும் வாவியு மருவி*
*நெய்குழ லுறுமிழை யெனநிலை திரிவார்*

- கம்ப. பால. 309

இராமனும் அவன் தம்பி இலக்குவனும் அழகிய நிலமகள் தான் செய்த தவத்தின் பயன்களை உணரும்படி நதிக்கரைகளிலும், மேகங்கள் தவழ்கின்ற சோலைகளிலும், தடாகங்களின் பக்கங்களிலும், நெய்கின்ற குழலுடனே சேர்ந்து பொருந்திய நூலிழை போல ஒருவரையொருவர் விட்டுப் பிரியாது உலாவித் திரிவார் எனக் கூறுகிறார். அவ்வாறே பரதனும் சத்துருக்கனும் ஒருவரையொருவர் பிரியாதிருப்பதையும் ஒருபாடலில் கம்பர் எடுத்துரைக்கிறார். தனது குமாரர்கள் நல்வித்தைகள் கற்று நாடும் மக்களும் மகிழும் வண்ணம் இனிதே வளர்ந்து வருவது கண்டு தயரதன் பெருமகிழ்ச்சியடைந்து அரசாட்சியைத் தொடர்கின்றான்.

*அரசர்தம் பெருமகன் அகிலம் யாவையும்*
*விரசுறு தனிக்குடை விளங்க வென்றிசேர்*
*முரசொலி கறங்கிட முனிவ ரேத்துறக்*
*கரைசெய வரியதோர் களிப்பின் வைகுநாள்.*

- கம்ப. பால. 317

அரசர்க்கரசனாகிய தயரதன் உலகம் முழுவதும் தனது ஒப்பற்ற வெண்கொற்றக் குடை நிழலில் விளங்கவும், வெற்றி பொருந்திய பேரிகைகளின் ஓசை முழங்கவும், முனிவர்கள் ஏத்திப் போற்றவும் கரைகாண முடியாத களிப்போடு மகிழ்சிக் கடலில் மூழ்கித் திழைத்தவாறு ஆட்சிபுரிகிறான் எனத் திருவவதாரப் படலம் முற்றுப் பெறுகிறது. கம்பனின் கவிதை வளம் தொடர்கிறது.

(வளரும்)



shanmugarajah@thaiveedu.com

# தமிழ்வலை - 81

'தாய்வீடு' சமூகத்துள் தாய்மொழியின் சொல்வளத்தை வலியுறுத்தும் நோக்குடன் முன்வைக்கப்படும் 'தமிழ்வலை'யை முற்றிலும் சரிவர நிரப்பி அனுப்புவோருள் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவருக்கு தமிழ் நூல்களும் சஞ்சிகைகளும் பரிசாக வழங்கப்படும்.

**பெயர்:**

**முகவரி:**

**தொலைபேசி எண்:**

**மின்னஞ்சல்வரி:**



## தமிழ்வலை-81 வினா

**இடமிருந்து வலம்**

1 சுய அரசுரிமை

3 கொள்கை

5 தோணி

6 உளநிலை

8 ஒரு மரம்

9 தலைப்பாரம் அகற்றி வைத்து ஓய்வதற்கான கற்கட்டு

10 இலங்கையில் ஓர் ஊர்

12 கூறுபடுத்து

15 அவா

18 பிரதிநிதிகள் சபை

**மேலிருந்து கீழ்**

2 புகழ்பெற்ற சுவடிப் பதிப்பாளரின் முதல் எழுத்துகள் (1-1-1)

3 கல்யாண்குமார் - தேவிகா நடித்த வெற்றிப்படம் (4-2-4)

4 அந்தேகம்

7 மெருகிட்ட மட்பாண்ட வகை

11 விறல்

13 மொட்டையடி

14 ஒரு விலங்கு

16 இற

17 அவதிப்படு

தமிழ்வலை போட்டிக்கான விடையை இம்மாதம் 23-ம் தேதிக்கு முன்னர் அஞ்சல் அல்லது மின்னஞ்சல் அல்லது தொலைநகல் வாயிலாக அனுப்பிவைக்கவும். அதற்கு தமிழ்வலையைப் பிரதிசெய்து அல்லது படப்பிரதியெடுத்து அல்லது கதிர்ப்பிரதியெடுத்து பயன்படுத்தவும். பெறுபேறுகள் நடுவர்களின் முடிபுக்கமைய அடுத்த மாத தாய்வீட்டில் வெளிவரும்.

**விடைகளை அனுப்பவேண்டிய முகவரி**
**மினன்னஞ்சல் முகவரி:**
**thamilvalai@thaiveedu.com**
**தொலைநகல்: 416 849 0594**

**Thaiveedu**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

## தமிழ்வலை - 80க்கான விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 அ | 2 க | தி | 3 க | ள் |
| | 4 கா | ன | க | ம் | | னி | | ந் | |
| 5 வா | லி | | | | 6 தா | | | 7 த | ளை |
| | 8 மு | ள் | ளி | வா | ய் | க் | 9 கா | ல் | |
| | க | | | | ம | | ந் | | 10 ஆ |
| 11 அ | ம் | 12 மா | னை | | னை | | 13 த | வ | று |
| | | து | | 14 நு | | | ள் | | மு |
| 15 ப | து | ளை | | ண் | | 16 ம | | | க |
| ர | | | | ம | | ணி | | 17 கோ | ன் |
| 18 வை | ஜ | ய | ந் | தி | மா | லா | | | |

## தமிழ்வலை-80 பெறுபேறுகள்

### முன்னணிப் போட்டியாளர்

த.செ. நடராசா, ரொறன்ரோ.
சண்முகநாதன் சபேசன், மார்க்கம்
தவமணி சண்முகம், ஸ்கார்பரோ
விசுவநாதன் தாமரை, ரொறன்ரோ
சுமதி சிவகரன், ரொறன்ரோ

### பரிசுபெறும் போட்டியாளர்

**பவளராணி அழகரத்தினம்,**
**நோத் யோர்க்.**

thamilvalai@thaiveedu.com



# ஒத்த மரம்



**நிரேஷ் ரட்ணம்**

இன்னொரு நாள். உனக்காக இன்னும் இந்த ஒத்த மரத்துக்குக் கீழே நான் தனியா காத்துகிட்டு இருக்கேன். அது ஒரு பெரிய மரம். ஒரு மேசைய தவிர சுத்தி எதுவுமே இல்ல. தரையில மண்ணும், புல்லும், கொஞ்சம் கிளாஸ் துண்டுகளும் இருந்துச்சு. உன்ன கடைசியா பாத்தது இங்கதான். நீ போறதுக்கு முன்னாடி என்ன இறுக்கி கட்டிபுடிச்சதும் இங்கதான். உன் வாசம் இங்கதான் பலமா இருக்கு. அந்த வாசத்திலேயே நான் உன்ன நினைச்சு நினைச்சு இங்கேயே இருக்கேன். அந்த மரத்துல ஏகப்பட்ட கிளைகள் இருக்கு. நீ போகும் போது எல்லாக் கிளைகளிலும் இலைகள் இருந்தது. நீ போனதுக்கு அப்புறம், எல்லா இலைகளும் கொட்டி, திருப்பியும் புது இலை எல்லாம் வந்துடுச்சு. ஆனா உன் வாசம் மட்டும் மாறாம அப்படியே இருக்கு. நீ போறதுக்கு முன்னாடி, உன் குட்டி விரலால என் காதத் தடவிக்கொடுத்த. அப்புறம் காதுக்கு கீழ வந்து என் நாடிய தடவுன. அப்படியே என் பின் மண்டைய தொட்ட. இது எல்லாம் பண்ணும் போது உன் முகத்த என்

பக்கத்திலேயே வச்சிருப்ப. உன் விரல என் முகத்திலிருந்து எடுக்கும்போது உன் கையப்பாத்து சொன்ன...,

'என்னடா ஆச்சு, ஏன் இவ்வளவு முடி கொட்டுது உனக்கு?'

நான் உன் கையப் பார்க்கும் போது அவ்வளவு முடி. வெள்ளி நிறத்தில நீள நீளமா உன் விரலுக்கு நடுவுல தொங்கிச்சு. எனக் குத் தெரியாது அப்பதான் நான் உன்ன கடைசியாப் பார்ப் பேன்னு. நான் ரொம்ப கோவக்காரன், ஆனா உன்னோட வாசம் மட்டும்தான் என்ன ரொம்ப சாந்தப்படுத்தும். அம்மா சொன்னா நான் இப்ப நிலையா இல்லன்னு. நீ தொட்ட இடத்த மத்தவங்க தொட எனக்கு, கோவம் ரொம்ப அதிகமா வருது. அந்தக் கோவத் துல அவங்கள ஏதாவது பண்ணிடறேன். எல்லாரையும் கத்துறன். எல்லாமே வெறுத்துப் போச்சு எனக்கு. உன்கூடப் படுத்தது, உன் கூட விளையாண்டது, எப்பவுமே உன் நினைப்பாவே இருக்கு எனக்கு. எனக்கு சாப்பாடுன்னா ரொம்பப் பிடிக்கும். அம்மா சமைக்கிறது எல்லாமே நல்லா இருக்கும். நான் ஒண்ணும் ஒழுங்கா சாப்பிடுறவன் கிடையாது. நான் சாப்பிட்டதும் என் பிளேட்டை சுத்தி சாப்பாடு எல்லாம் கொட்டிக் கிடக்கும். அம்மா கத்துவா, ஆனா நீ கத்த மாட்ட. இப்ப என்னப் பாத்துக்கிறத் துக்கு நீயும் இல்ல அம்மாவும் ரொம்ப கவலையில தான் இருக்கா. இப்ப எனக்கு பெருசா பசிக்கிறதும் இல்ல, சாப்பாடு மேல விருப்பமும் இல்ல. இவ்வளவு நாளா அம்மா கவலைப் பட்டா, அப்புறம் அவளுக்கு வேலை, அப்பா, பொண்ணு... அப் படி அவ நேரம் போச்சு. இப்ப சிலநேரம் கவலப்படுவா, ஆனா உடனேயே வேற வேல பாக்கப் போயிடுவா. நான் வீட்டில இருந்தாதானே அம்மாவ பாத்துக்கிறதுக்கு. உன் ஞாபகாத்தமா இருந்த எல்லாப் பொருளையும் அப்பா எடுத்துட்டு போயிட்டாரு. கடைசியா உன் வாசம் வர்ற ஒரே இடம் இந்த ஒத்த மரத்தடி தான். அம்மா சொன்னா, நீ போனதிலிருந்து நான் சாப்புடுறதில்ல தண்ணி குடிக்குறது இல்லன்னு. என் வயிறு சுருங்கி எலும்போட அப்படியே ஒட்டிப் போச்சு. ஆனா உன் பிரிவு தார வலியவிட இது ஒண்ணும் பெருசு இல்ல. நீ எங்கே இருக்கிறனு தெரிஞ்சா உன்கிட்ட ஓடி வந்திடுவேன். நான் தேடுனதுல கண்டுபிடிக்க முடி யல. அதப் பத்தி தெரிஞ்சவங்களும் எனக்கு சொல்ல மாட்டேங் கிறாங்க. உனக்குத் தெரியும், நீ இல்லாம என்னால சந்தோஷமா வாழ முடியாதுன்னு. உனக்காக நீ தடவிய நாடிய என் ரெண்டு கை மேல வச்சு நான் இந்த ஒத்த மரத்துக்குக் கீழ உனக்காகக் காத்துகிட்டு இருக்கேன்.

முன்னாடி ஒரு மரத்துல செஞ்ச மேசை இருக்கு. அந்த மேசை யில தான் நீ கடைசியா நிறைய நேரம் உட்கார்ந்து இருந்த. உன் மடியில நான் படுத்து இருந்தேன். என் தலையக் கோதி விட்டுட்டு இருந்த. அந்த மேசையே நான் பாத்துட்டு இருக்கேன் நீ வரு வேன்னு. இந்த மரத்துக்கு பின்னாடி அடர்த்தியான புதரும், நீள மான செடியும் நிறைய இருக்கு. அங்க போனா காணிக்காரன் அடிப்பான்னு சொன்ன. நீ சொன்னதாலையே நான் அந்தப் பக் கம் போகாம இங்கயே காத்துகிட்டு இருக்கேன். அங்க இருந்து சோளன் வாசம் சில நேரம் வரும். எனக்கு அந்த வாசம் தெரியும். அம்மா எனக்கு சோளன் தருவா. அது பத்தாதுன்னு நீ சாப்புட்ட திலும் கொஞ்சம் எனக்கு தருவ. அதையும் ருசிச்சு சாப்புடுவேன். அந்த சோளக் காட்டுக்கு எதிர பெரிய ரோடு இருக்கு. இந்த பக் கத்துல இருந்து அந்த பக்கம் ஓட எனக்கே நிறைய நேரம் எடுக் கும். நடுவுல வேற பெரிய பெரிய வண்டி எல்லாம் ஓடும். நான் எத்தனையோ தடவ அந்த ரோட்ட கடக்கப் பார்த்தேன். ஆனா நீ என்ன புடிச்சு வச்சு பார்த்துப்போடா, பார்த்துப்போடான்னு சொல் லுவ. நானும் நீ சொல்லுவேன்னு ரோட்டு ஓரமாப் போய் நிப்பேன். நீ என்ன பாக்காட்டிக்கு நான், சத்தம் போட்டு கூப்புடுவன். அப்ப நீ என்னப் பாத்து என் கிட்ட ஓடி வருவ. நானும் உனக்காக காத் துட்டிருப்பன். இப்பவும் அந்தப் பக்கம் போக உன்னையே பாத்தி ருக்கேன்.

நான் அந்த ரோட்டப் பார்த்திட்டு இருக்கும்போது, நிறையப் பேர் கூட்டமா சத்தம் போட்டுட்டு நடந்து வாராங்க. கூட்டத்துக்கு ரெண்டு பக்கத்திலேயும் கொஞ்சப் பேர் நீளமா தடி எதையோ ஊதி ஊதி தலையை ஆட்டி ஆட்டி நடந்து வாராங்க. அவங்க ளோட கொஞ்சப் பேர் வயித்தில பெருசா என்னமோ கட்டிட்டு அதோட ரெண்டு பக்கத்தையும் அடிச்சு அடிச்சு வாராங்க. அவங்க பின்னாடி ஏதோ ஒரு பெரிய பொம்மைய கொஞ்சப் பேர் பல்லக்குல வச்சு தூக்கிட்டு வாராங்க. நான் ஓட்டப்போட்டியில முதலிடம் எடுக்கும்போது என்னை நீ எப்படி தோளில தூக்கிட்டு வந்தியோ, அப்படித்தான் அவங்க அந்த பொம்மையத் தூக்கிட்டு வாராங்க. பல்லக்குல இருந்து பூ வாசம் வந்திச்சு. அங்க வந்த ஆம்பளைங்க யாருமே மேல சட்ட போடல. அப்படியே அந்த பொம்மையைப் பார்த்துட்டு இருக்கும் போது ஒரு சின்ன பையன் அவன் காலால என்ன உதைச்சான். நான் வலியில கத்தி அந்த ஒத்த மரத்துக்குப் பின்னாடி ஒளிஞ்சுக்கிட்டேன். அவங்க போன துக்கு அப்புறம் தான் நான் நீ இருந்த இடத்துக்குத் திரும்பி வந் தேன். அவங்க ரொம்ப நேரம் எடுத்துகிட்டாங்க போறதுக்கு.

அப்பிடியே காத்தோரமா உன் வாசனையத் தேடி, நீ இருந்த இடத்தச் சுத்தி வர, எங்கையோ இருந்து ஒருத்தன் இந்த ஒத்த மரத்துக்கிட்ட ஓடி வந்து அந்த பெரிய மரத்துக்குப் பின்னாடி ஒளிஞ்சுக்கிட்டான். அவன் நெத்தியில இருந்து வேர்வை வழிஞ் சிச்சு. முகத்தில பயம் பெருசா எதுவும் இல்ல. அவன் கண்ணு ரெண்டுமே அங்கயும் இங்கயும் பாத்துச்சு. நான் கண் சிமிட்டுற துக்குள்ளேயே அவன் வந்த ஒரு வண்டி மேல பாஞ்சான். அந்த வண்டி அடிச்சு அவன் ரோட்டுக்கு அந்தப் பக்கம் தூரமா விழுந் தான். நல்ல வேள ரோடு ஒண்ணும் பெருசா சிவப்பாகல. கொஞ்ச நேரத்துலேயே நிறைய வாகனம் அவனச் சுத்தி வந்துடுச்சு. சத்தம் ரொம்ப அதிகமாக, திருப்பியும் அந்த ஒத்த மரத்துக்குப் பின் னாடி ஒளிஞ்சுக்கிட்டேன். நிறைய நேரம் ஆச்சு. கடைசியா யாருமே அந்த இடத்தில இல்ல. திருப்பியும் நீ உக்காந்த இடத் துக்கு வந்து உன் வாசத்தத் தேடுனன். நல்ல வேள அது கொஞ் சம் கூட குறையல. அப்படியே உன் வாசத்துல உனக்காகக் காத் திருந்து காத்திருந்து நான் தூங்கிட்டேன்.

அந்தத் தூக்கக் கலக்கத்துல உன் வாசம் போய் வேற என்னமோ ஒரு வாசம் வந்திச்சு. கடைசி முறை இந்த வாசம் வந்தப்ப நீ சொன்ன... 'வாடா, வீட்டுக்குப் போயிடலாம். இங்க இனிமேட்டு இருக்கக் கூடாது'. இப்ப அதே வாசம் பெருசா வந்துச்சு. நான் கண்ணத் திறந்து பாத்தா, ஒரு இளம் பையன் உன் இடத்துல உக்காந்திருந்து கையில ஒரு சின்னக் குச்சிய வச்சு புக புகையா விட்டிட்டு இருந்தான். எனக்கு உடனே கோவம் வந்துருச்சு. அவன் மேல கத்துனேன் நான். சொக்கிட்டு போன அவன் சத்தம் கேட்டுத் திடீருன்னு முழிச்சிகிட்டான். அவன் கண்ணு அந்த பொம்மை-யோட கண்ண விட சிவப்பா இருந்திச்சு. எனக்கு பயம் இல்ல. திருப்பியும் சத்தம் போட்டேன். 'ரிலாக்ஸ்.. ரிலாக்ஸ்..'ன்னு சொல் லிட்டுத் தள்ளாடித் தள்ளாடி எழும்பினான். நான் விடலையே. விடாம சத்தம் போட்டேன். அவன் மெதுவா மரத்தத் தாண்டிப் போய்ட்டான். அவன் போற வரைக்கும் கத்துனேன்.

நான் அவனப் பார்த்து சத்தம் போட்டுட்டு இருக்கும் போது, என் பின்னாடி ஒரு வண்டி வந்து நின்னுச்சு. அதுல இருந்து ஒரு பொண்ணு இறங்கி வந்தா. என் கிட்டத் தான் வரான்னு நெனச்சு அவளப் பாத்தேன். என்னத் தாண்டி எனக்குப் பின்னாடி நின் னுட்டு இருந்த ஒரு பையன் கிட்டப் போனா. அவங்க பேசுனது ஒண்ணும் புரியல்ல, ஆனா அவ அவனக் கட்டிப் புடுச்சு ஒரு முத்தம் கொடுத்தா. உடனே அந்த ஒத்த மரத்துக்கு பின்னாடி அவனக் கூட்டிட்டுப் போனா. நான் திருப்பியும் உன் இடத்தப் பாத்துக்கிட்டு கையில நாடிய வச்சுப் படுத்தேன். கொஞ்ச நேரத் துல அவன் அந்தப் பக்கமும், இவ இந்தப் பக்கமும் உடைய சரிப் படுத்திட்டு வந்தாங்க. இவ சந்தோசமா என்னப் பாத்து வந்தா. என் தலையில கை வைக்க வந்தா. இவ என்ன தொடுற

துக்குள்ள, இவள மொறச்சுப் பாத்தேன். இவ கைய எடுத்துட்டு ‘சரி சரி’ன்னு அந்த வண்டியில ஏறி அங்க இருந்து போனா.

அவ வண்டி ஒத்த மரத்தத் தாண்டிப் போக, அவ பின்னாடியே ஒரு கூட்டம் வெள்ளச் சட்டை, வேஷ்டி, சேலை போட்டு வந்தாங்க. முன்னாடி வந்தவங்கள விட இவங்க நிறைய பேரா இருந்தாங்க. இவங்கள சுத்தி நிறைய போலீஸ்காரங்களும் நடந்து வந்தாங்க. அவங்க போலீஸ்காரங்கதான். நீ போனதுக்கு அப்புறம் அவங்க அடிக்கடி வீட்டுக்கு வருவாங்க. அம்மா உன்னதான் கொற சொல்லுவா. உன்னாலதான் அவங்க மூஞ்சியில முழிக்க வேண்டி இருக்குன்னு திட்டுவா. அவங்க போனதுக்கு அப்புறம், என்ன மாதிரியே கவலப்பட்டு அழுவா. உடனேயே கண்ணீரத் தொடச்சிட்டு அடுப்படிக்கு சமைக்கப் போயிடுவா.

அந்த வீட்டுக்கு வந்த போலீஸ்காரங்க மாதிரி இல்லாம, இந்தப் போலீஸ்காரங்க, பெரிய பெரிய குச்சியா கையில வச்சு இருக்கிறாங்க. அந்தக் கூட்டத்தில எல்லாரும் என்னவிட ரொம்ப சத்தமா கத்துனாங்க. நானும் அவங்களோட சேந்து கத்துனன். ஆனா அதுல இருந்த ஒரு போலீஸ்காரர் அந்தப் பெரிய குச்சியால ஒரு அடி, பளீரென்னு. அந்தப் பையன் உதைச்சதவிட வலி அதிகமா இருந்திச்சு. வலியில கத்திட்டு அந்த ஒத்த மரத்துக்கு பின்னாடி ஓடினேன். அந்தக் கூட்டம் போறத்துக்கே ரொம்ப நேரம் எடுத்துச்சு. நான் பயத்துல அவங்க எல்லாரும் போன பின்னாடிதான், உன் இடத்துக்குத் திரும்பி வந்தேன்.

போலீஸ்காரர் அடிச்ச அடி வலிச்சது. ஆனாக் கொஞ்ச நேரத்துல அந்த வலி போயிருச்சு. நீ இல்ல அப்படிங்கற வலி மட்டும் போகவே மாட்டேங்குது. அந்த மேசையச் சுத்தி உன் வாசத்தத் தேடி அங்கயும் இங்கயும் நடந்தேன். ஒரு இடத்துல கிடைச்சது. அத அப்படியே புடிச்சு அங்கேயே உட்கார்ந்தேன். அப்போ ஒரு வண்டி வந்துச்சு. அந்த வண்டியில இருந்து ஒரு அப்பா இறங்கி அந்த ஒத்த மரத்துக்குப் பின்னாடி போனார். மத்தக் கதவத் திறந்து அம்மா இறங்கினா. ஒரு குட்டிப் பொண்ணு அவ கூட இறங்கினா. அவ என் கிட்ட ஓடி வந்தா. அந்தக் குட்டிப் பொண்ணு கையில இருந்த ‘சான்விச்’ச என் பக்கத்துல வச்சுட்டு அவ அம்மாக் கிட்ட ஓடிப் போனா. அவ பின்னாடியே அப்பாவும் போய், வண்டியில ஒத்த மரத்தத் தாண்டிப் போனாங்க. அந்த சான்விச் வாசம் என் பசியத் தூண்டிச்சு. என்னதான் பசியத் தூண்டினாலும் உன் நெனப்புனால சாப்புட முடியல.

உன் நெனப்புல உட்கார்ந்திருக்க திருப்பியும் ஒரு கூட்டம் பெரிய சத்தத்தோட வருது. ஒரு பொண்ணு கூட அதுல இல்ல. இந்தக் கூட்டத்துல கொஞ்சப் பேர் வெள்ளையா ஒண்ண வயித்துல வச்சு ரெண்டு குச்சியால அடிச்சு அடிச்சு வந்தாங்க. அவங்க பின்னாடி ஒரு பல்லக்குல ஒருத்தன் அசையாமப் படுத்து இருந்தான். அந்தப் பல்லக்கத் தூக்கிட்டு நாலு பேர் நடந்து வந்தாங்க. அவங்களச் சுத்தித் தான் அந்தக் கூட்டமே நடந்து வந்துச்சு. மத்தக் கூட்டங்கள மாதிரி கத்தவும் இல்ல என்ன அடிக்கவும் இல்ல. பல்லக்குல இருந்து வெறும் பூ வாசமே வந்திச்சு. அவங்களுக்கு முன்னாடி ஒருத்தன் எதையோ பத்த வச்சான். ‘பட.. பட.. பட.. பட..’ன்னு பெரிய சத்தத்தோட வெடிச்சது. பயத்தில திருப்பியும் ஒத்த மரத்துக்குப் பின்னாடி ஒளிஞ்சேன். இவங்க சீக்கிரமாவே என்னக் கடந்து போய்ட்டாங்க.

பொழுதும் சாய்ஞ்சிருச்சு. தெரு விளக்கு வெளிச்சம் மட்டும் இங்க இருக்கு. இந்த ஒத்த மரத்துக்குக் கீழ அவ்வளவு வெளிச்சம் இல்ல. உன் இடத்துக்குப் பக்கத்துலயும் பெரிய வெளிச்சம் இல்ல. நான் திருப்பியும் உன் வாசத்தோட உன் இடத்துப் பக்கம் உக்காந்து இருந்தேன். கொஞ்சப்பேர் மெதுவா அசைஞ்சு அசைஞ்சு உன் இடத்த நோக்கி வந்தாங்க. அவங்கக் கிட்ட இருந்து ஒரு நாத்தம் வந்துச்சு. எல்லாரும் உன் இடத்தச் சுத்தி உக்காந்தாங்க. நீ தான் அடிக்கடி சொல்லுவ இந்த மாதிரித் தள்ளாடித் தள்ளாடி நாத்தத்தோட வாரவங்கக் கிட்ட அதிகமா வச்சுக்கக் கூடாதுன்னு. நானும் எதுவும் பேசாம அப்படியே படுத்து இருந்தேன். அதுல இருந்து ஒருத்தன் கையில இருந்த பாட்டில படார்ன்னு கீழ போட்டு உடைச்சான். உடைஞ்ச கிளாஸ் துண்டுகள் சில என் முகத்தில பாஞ்சு கிழிச்சுது. நான் கத்தி அந்த ஒத்த மரத்துக்குப் பின்னாடி ஓடினேன். அதுல ஒருத்தன் ‘எங்க ஓடுற, எங்க ஓடுற’ன்னு என் பின்னாடியே வந்தான். ரத்தக் கீறலோட அவனப் பார்த்துக் கத்தினேன். அவன் கையில இருந்த பாட்டுல அந்த ஒத்த மரத்தில அடிச்சு உடைச்சு, ‘இந்தா.. இந்தா..’ன்னு உடைஞ்ச பாட்டிலோட என்னத் தொரத்தினான். நான் பயத்தில வீட்டுக்கு ஓடியே போயிட்டேன்.

நான் வீட்டுக்குப் போன உடனே அம்மா என் முகத்தப் பார்த்துக் கேட்டா, ‘எங்கடா அடி வாங்கிட்டு வர்ற, காலையில இருந்து உன்னக் காணோம். அப்படி எங்கதான் போன?’

அப்படியே சொல்லிச் சொல்லி என் காயத்துக்கு மருந்து போட்டு எனக்கும் கொஞ்சம் சாப்பாடு கொடுத்தா. அடுத்த நாள் காலையில எழுந்தவுடனே உன் வாசத்தத் தேடினேன். வீட்ல எங்கேயும் உன் தடையமே இல்ல. உன் வாசம் எனக்கு எங்க கிடைச்சுதோ அங்கேயே ஓடினேன்.

இன்னொரு நாள் போச்சு. நீ தடவிய நாடிய என் ரெண்டு கை மேல வச்சு நான் இந்த ஒத்த மரத்துக்குக் கீழ உன் இடத்துக்கு பக்கத்துல, அந்த மேசையில, உனக்காகத் திருப்பியும் தனியாக் காத்துகிட்டு இருக்கேன்.



niresh.ratnam@thaiveedu.com


## சிந்தனைக் களம்
## (இசை, நடனம்)

இணையவெளி உரை நிகழ்வும் கலந்துரையாடலும்.

**Zoom ID: 830 3566 3702 Passcode: 413518 )**

**09 ஜூலை2022 (சனிக்கிழமை)9:00pm-11:30pm (கனடா- ரொறன்ரோ)**

**(இலங்கை, இந்தியா - 10 ஜூலை 2022 ஞாயிற்றுக்கிழமை6:30am-9:00am)**
**(சிட்னி - 10 ஜூலை 2022 ஞாயிற்றுக்கிழமை 11:00am-1:30pm)**

உரைத்தொடர் - 19

உரைப் பொருள்
***‘ஸ்வரங்களின் உறவு முறைகளும் இராகங்களின் உருவாக்க நிலைகளும்’***

உரையாளர்
***திருமதி ஹம்சத்வனி பிரசாந் குருக்கள்***



**இசைக்கலைஞர், போதனாசிரியர்**
**சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம்,**
**கிழக்குப்பல்கலைக்கழகம், இலங்கை.**

# சாம்பரில் திரண்ட சொற்கள்




**- தேவகாந்தன்**

மார்கழி பிறந்திருந்தது. இன்னும் இரண்டு வாரங்களில் கலண்டர்ப் படியான குளிர் காலம் தொடங்கிவிடும். குளிரிருந்தது. ஆனாலும், குளிர் காலத்துக்கான குளிராக வெளி இருக்கவில்லை. ஜாக்கெற்றைப் போட்டுக்கொண்டு சுந்தரம் யாழ்ரன் தமிழ்க் கடைவரை போய்வர நடையில் கிளம்பினார்.

பின்முற்றத்தின் சாய்வுப் பாதைவழி மேலேறி அவர் முன்புற தெருவுக்குவர, பள்ளி முடிந்து பள்ளிவேனில் வரும் மகனுக்காகக் காத்திருந்த சாந்தரூபிணியை வீட்டு வாசலில் கண்டார். முன்பெல்லாம் அவளேதான் மகனை பள்ளியில் விட்டும், திரும்ப வீட்டுக்கு அழைத்தும் வந்துகொண்டிருந்தாள். அப்போது அவளுக்கென்றொரு கார் இருந்தது.

குளிர்கோட்டும், தலையில் கம்பளித் தொப்பியுமாக நின்றவளை முதலில் இனங்காண அவருக்குச் சிரமமாக இருந்தது. அவள் புன்முறுவல் காட்டியபோது அடையாளம் கண்டுகொண்டார்.

அவ்வாறான சமயங்கள் அபூர்வமானவை. ஒரே வீட்டில் கீழும் மேலுமாக இருப்பவர்களானாலும் அவரவரையும் வாழ்வின் விசைகள் தத்தம் திசையில் இழுத்துச் சென்றவாறிருக்கையில், அவ்வாறான தருணங்களை தம் குறைநிறைகளைத் தெரிவிக்கவோ, குறைந்தபட்சம் ஓர் உசாவலைச் செய்துகொள்ளவோ வீட்டுக்காரரும் குடியிருப்பவரும் தவற விட்டுவிடுவதில்லை.

அவரும் நின்று நலம் விசாரித்ததோடு, பேச்சு வாக்கில்போல பத்து பதினொரு மணிக்கு மேலேயும் மேலே நடந்துதிரியும் தொம்... தொம் நிலவதிர்வெழுவதைச் சொல்லி, ‘எனக்கொண்டுமில்லை, அன்ரிதான் பாவம், நித்திரை குழம்பினா விடிய விடிய நித்திரை வராமல் கிடந்து கஸ்ரப்படுவா’ என குறைவிளக்கமும் செய்தார்.

இரண்டு மூன்று நாட்களுக்குப் பின்னால் இரவு எட்டு மணிக்கு மேலே நிலமதிர்ந்த நடையும் பேச்சுத் தொனியும் வழக்கத்தைவிட கூடுதலாகக் கேட்டன. சினத்தின் வரிகள் அதிலேயே எழுதியிருந்தன. சுந்தரம் செவிப்புலன் தீட்டினார்.

‘ராவில நடைச் சத்தம் பெரிசாய்த்தான் கேக்கும் அதை அட்ஜஸ்ற் பண்ணிப் போகவேணும் என்ன தேவையோ, அவசரமோவெண்டு யோசிக்கவேணும். அதை விட்டிட்டு... அன்ரிக்கேலாது, அதால எல்லாரும் பதனமாய் நடவுங்கோவெண்டா... எப்பிடி? விருப்பமில்லாட்டி வேறவீடு பாக்கச் சொல்லு.’

ரவீந்திரநாதனின் குரல்தான். கீழே கேட்கவேண்டுமென்று பேசியது போல பலமாக இருந்தது.

அப்போதுதான் சாந்தரூபிணி தன் முறைப்பாட்டை கணவனுக்குத் தெரிவித்திருக்கிறாளென்பதை சுந்தரம் ஊகித்துக்கொண்டார். தான் சாந்தத்தைச் சுமந்துகொண்டு ரவீந்திரனைக் கொதிக்க வைத்துவிட்டாளேயென்று பெரிய கவலையாகிப்போனது அவருக்கு. அவர், தானே வாழ்வுப் பிரச்சினைகளில் சிக்குண்டும், சிவயோகமலர் சார்ந்த கடந்த கால எண்ணங்களால் வதைப்புண்டும் இருந்ததில், எந்தளவு சிறிய முரணையும் வீட்டு உரிமையாளரோடு எதிர்கொண்டுவிட முடியாதளவு களைத்துப் போயிருந்தார்.

ரவீந்திரனுக்கான மறுநாளின் எதிர்வினைபற்றி அவர் யோசித்தே ஆகவேண்டும்.

குளிர் விரவியிருந்த இரவையும் பொருள்செய்யாது அவர் பின்விறாந்தைக் கதிரையில் போய் அமர்ந்தார்.

வெளியே பூப்போல் வெண்நீலப் பனி தூறிக்கொண்டிருந்தது. வரப்போகும் குளிர் காலத்தின் முதல் பனியாக இருக்கவேண்டும். பனித் தூறலில் வெளியெங்கும் வழக்கத்தைவிட கூடிய ஒளிச் சிதறல்.

அவர் மனம் நிலைமையை நன்கு சீர்தூக்கும் நிதானமடைந்தது.

எவ்வளவோ பிரயத்தனத்தில் யார் யாரையோ தொடர்புகொண்டு, வாடகை உத்தரவாதம் அளித்து அந்த வீட்டை வாடகைக்குப் பெற, தான் பட்ட அவஸ்தைகளை அவர் மறந்துவிட முடியாது.

அதற்கு முன்னாலும், ஒரு வருஷம்கூட ஒரு வீட்டில் நிலையாய்த் தங்கமுடியாமல் நான்கு வருஷங்களாய் பல சீரழிவுகளைப் பட்டவர் அவர். வீடு மாறுதலென்பது ஒரு குடும்பத்தின் பெயர்ச்சி. சாமான்களை ஏற்றி இறக்கி உடைத்து நொருக்குவதோடு அந்தச் சிரமம் முடிந்துவிடுவதில்லை. தள்ளுவதைத் தள்ளி, கொள்ளுவதைக் கொண்டு புதுவீடு வருவதென்பது பெரும் பிரயத்தனத்தை வேண்டிநிற்பதாகும். பின்னால் அவற்றை அடுக்கி ஒழுங்குபடுத்துவதென்பது இன்னும் கூடிய அலுப்பைக் கொண்டது.

அத்தனை சிரமங்களுக்குள்ளும் இருக்கும் ஒரேயொரு ஆசுவாசம், வாடகை வீடெடுப்பவர்கள் வீடெடுத்துக் கொடுக்கும் ஏஜன்ஸிக்கு பணம் கொடுக்கவேண்டி இருப்பதில்லை என்பதுதான். அது வீட்டுச் சொந்தக்காரர் தலையில் ஏறிவிடுகிறது.

வீட்டை, வாழ்தலின் மகா அவசியமான அம்சமாக எல்லா மக்களுமே கொள்வரெனினும், அதை வாழ்க்கையினதும் பண்பாட்டினதும் முக்கியமான புள்ளியாகக் கொண்டவர்கள் கிழக்காசிய மக்கள், குறிப்பாக தமிழர்கள், என்பதில் அவருக்குச் சந்தேகமில்லை. அந்த நிருமாணத்தின்மீது விழும் ஒவ்வோர் அடியும், ஒவ்வோர் அதிர்வுமே அதனதன் வேகத்துக்கும் உறுதிக்கும் தக பாதிப்பை ஒரு குடும்பத்தின்மேல் சுமத்திவிடுகிறது. அவர் உணர்ந்தேயிருக்கிறார்.

தமது நாட்டிலுள்ள வீட்டைத் துறந்து உயிரபயம் காண மேற்கு நோக்கி ஓடிவந்தவர்களுக்கு, உடனடி அவதி தீர்ந்த கணத்தில் வீடு தேவையாக மாறியது. ஏற்கனவே வாடகை வீட்டில் குடியிருந்தவர்களுக்கும் சொந்தவீடு கனவாக வெகுகாலம் செல்லவில்லை. அதற்காக அவர்கள் தமக்குத் தெரிந்த, தெரியாத வேலைகள் அனைத்திலும் நுழைந்து ‘இரண்டடி’, ‘மூன்றடி’யென மாய்ந்தார்கள்.

நண்பர்களுடனான உரையாடலில், குறிப்பாக அவருடன் ஒரே கல் லூரியில் பணியாற்றி 83 ஆடிக் கலவரத்துடன் கனடா வந்து சேர்ந்த பூகோள பாட ஆசிரியர் சோமசுந்தரத்தின் மகன் ஸ்ரீரஞ்ச-னின் தொடர்பில், கனடாவில் வீடு வாங்குதல் விற்றல் வாட கைக்கு எடுத்தல், தொடர்ந்து தளவமைப்பு வர்ணம் பூசுதல் புதி தாக்கல் மற்றும் பின் முன் புற்றரை அமைத்தல், நடைவழிக் கல் பதித்தலுடன் அவற்றின் பராமரிப்புபோன்ற பல விஷயங்களை சுந்தரமும் அறிந்திருந்தார்.

அவருக்கே ஒருபோது வீடு விற்பனை முகவராகும் ஆசை தோன்றி ஓரிரு மாதங்கள் அதற்கான பரீட்சையெடுக்க வார விடு முறை இலவசப் பயிற்சி வகுப்பு ஒன்றுக்கும் போய்வந்துகொண்டு இருந்தார். லட்சங்களைக் குவிக்கும் தொழிலாக பலபேரை ஈர்த்த அந்தத்துறை தன்னையும் வாரியெடுத்து அலைக்கழித்த விதத்தை எண்ண அவருக்கு கொடுப்புக்குள்ளாய் இப்போதும் சிரிப்பு வந்து கொள்கிறது.

அக்காலப் பகுதியில் நூற்றுக்கணக்கான வீடு விற்பனை முகவர் கள், உபமுகவர்கள் தமிழரிடையே தோன்றினார்கள். பஞ்சாபி, உருது, இந்தி, தெலுங்கு, சிங்கள, தமிழ் முகவர்களின் அலுவல கங்கள் ஸ்கார்பரோ, ரொறன்ரோ, மார்க்கம், மிஸிஸாகுகாபோன்ற நகர்களின் மய்யக் கட்டடங்களில் தோற்றம் பெற்றன. அவற்றில் பணியாற்ற பன்னூறு பல்லின அலுவலக நிர்வாகம் தெரிந்த பெண்கள் உருவாகினார்கள். முகவர்களின் பெயர்களை தமிழ்ப் பத்திரிகைகளில் அவர்கள் செய்யும் விளம்பரங்கள் நாடளாவி சமூகத்தவர் வீட்டு வாசல் கடந்து உள்நுழைந்தன. தமிழ்ப் பத்தி ரிகைகளின் இருத்தலே அவர்களின் விளம்பர பலத்தாலென்றும் ஆகிப்போனது. தன் சமூகத்தில் வாய்வல்லபமும் விஷய விளக்க மும் உள்ளதாகப் பேர்பெற்ற முகவன் லட்சம் லட்சம் டொலர் களை அனாயாசமாகச் சம்பாதித்தான். மெக்ஸிக்கோ, கியூபா வென்று குடும்பங்களுடன் உல்லாசப் பயணங்கள் மேற்கொண் டான். இன்னும் வெகுசிலர் தத்தம் அலுவலகப் பெண்களுடன் அல்லது அறிமுகமாகிய வேறு பெண்களுடன் தாய்லாந்தென்றும் தென்கொரியாவென்றும் ரகசிய விடுமுறைகளை அனுபவித்தார் கள். அது குடும்ப அமைப்புக்களில் விரிசலை விழுத்தியதில் குடும்பமுமின்றி கடைசியில் குட்டிகளுமின்றி பலபேர் வாழ்வு சிதி லமாகிப்போனதற்கு அவரிடத்தில் நிறைந்த சாட்சியங்கள் உண்டு. மேற்குலகின் புலம்பெயர் சமூகங்களிடையே அதுவொரு புரட்சி யின் எழுச்சிகொண்டிருந்ததென சரியாகவோ தவறாகவோ சுந்தரம் எண்ணினார்.

அவரது வீட்டுச் சொந்தக்காரனான ரவீந்திரன்கூட வீடு விற்பனை முகவனாகயிருந்தான். வீட்டுப் பெறுமதி சடுதியில் சரிந்திருந்த காலமாக அது இருந்ததில், வீடு விற்பனை மட்டுமன்றி, அது சார்ந்த அனைத்துத் தொழில்களிலும் மந்தநிலை நிலவியது. அத னால் பாதிக்கப்படாத வீடு விற்பனை முகவன் எவனுமிருக்க வில்லை. அந்த வருமானக் குறைவின் வாழ்நிலை அந்தரம், தன் குறைவிளக்கத்தை மனைவி சொல்லக் கேட்ட ரவீந்திரனை சினப் பித்தம் கொள்ள வைத்திருக்குமென எண்ண... சுந்தரத்தின் மனம் மேலும் தணிந்தது.

அவர் அவ்வாறான முரண்கள் எழாது தவிர்த்தேயாகவேண்டும். அவர் நிறைய சூடுபட்டவர். சூடுகண்ட பூனை அடுப்படிக்குச் செல்லாது! தானே பலபேருக்குச் சொன்ன உதாரணமாக அவரே ஆகிவிடமுடியாது.

2010ல் அவர் ஒரு சொந்த செமி ரவுண் ஹவு(Semi Town House) ஸில் குடியிருந்தார். வங்கியில் ஈட்டுக் கடனெடுத்து வாங்கியது. கடனுக்கான மாத வட்டியும், கடனில் மாதத் தவணைக்கான தொகையும் மாதம் மாதம் செலுத்தவேண்டியிருந்தது. வீட்டுக் கடன் வட்டி விகிதம் மிகக் குறைவாயிருந்த காலத்தில் வங்கிக்கு ஈடு சென்றதில் செலுத்தவிருந்தது சிறிய தொகையாகயிருந்தது. தன் சிறிய ஊதியத்திலேயே அதைச் சிரமமின்றிச் செலுத்த அவ ராலும் முடிந்திருந்தது.

அடுக்கு மாடி வீடு (Condominium), ரவுண் ஹவுஸ் (Town house), செமி ரவுண் ஹவுஸ் (Semi - Town house), பங்களா ஹவுஸ் (Bangalow House) என அவ்வவ்விடங்களில் பெயர்பெற் றிருந்த வீட்டு வகைப்பாடுகள் யாவும் கட்டுமானமும் முன் பின் நிலவுரிமையும் சார்ந்தவை. அவற்றிற்கான விதிகளும், குறிப்பாக நிலவரி, நீர்வரி, சொத்துவரிபோன்றவை, வித்தியாசமானவை.

ஒருநாள் அவரது மகள் அபிநயவல்லி இங்கிலாந்திலிருந்து திடீ-ரென ஸ்கார்பரோ வந்தாள். தனக்கு லட்சம் ஸ்ரேர்லிங் பவுண் தேவையென நின்றுகொண்டாள். கனடா வந்த புதிதிலேயே ஒரு பயிற்சிபெற்ற ஆசிரியருக்குரிய வேலை தேவையென மினக்கெடா மல், கிடைத்த தொழிற்சாலை வேலையொன்றில் நுழைந்து கொண்டு அன்றாடச் செலவீனங்களை ஒப்பேற்றி வந்தவருக்கு எந்த உபாயமும் தென்படவில்லை. அவள் கேட்ட அந்தத் தொகை அவருடைய கனவின் எல்லைக்கும் அப்பாற்பட்டதாய் இருந்தது.

ஆனால் அபிநயவல்லி தன் அண்ணனோடு முன்னரேயிட்ட திட் டத்தோடுதான் வந்திருந்தாளென்பது நடராஜசிவம் தலையிட்ட போதுதான் தெரியவந்தது.

'லட்சம் லட்சமாய்ச் செலவழிச்சு, நகை செய்துபோட்டு, காணி வீடெண்டு சீதனம் குடுத்து அவளுக்கு நாங்கள் கலியாணம் கட்டி வைக்கேல்ல. தானாய்க் கலியாணம் செய்தாளெண்டாலும் நல்லா யிருந்தாள். இப்ப ஒரு அந்தரம் அவளுக்கு வந்திட்டுது. நாங்கள் தான் எதாவது செய்யவேணும். எங்களைவிட்டால் அவளுக்கும் வேற ஆர் இருக்கினம்? அந்த வீடும் உங்களுக்குப் பெரிசுதான, ஐயா? அதால வீட்டை வித்திடுங்கோ. இப்ப வீடு கனடாவில நல்ல விலைக்குப் போகுதாம், அவளின்ர காசைக் குடுத்தாலும் மிச்சக் காசை வைச்சு சின்னனாய் கொண்டோவிலயாச்சும் ஒரு வீடு வாங்கலாம்' என்றான்.

அதனால் அபிநயவல்லியின் தேவையென்னவோ நிறைவேறிய தென்றாலும், சுற்றிவர பூந்தோட்டம், அழகிய பின்புற புல்வெளி, மாபிள் பதித்த நடைபாதையாக இருந்த தன் கனவு வீட்டை அவர் இழந்துதான்போனார்.

ஒரு வாடகை வீட்டில் குடியிருந்துகொண்டு ஸ்கார்பரோ நகர விளிம்பில் வசதிகள் பெரிதாயற்ற ஒரு பழைய வீட்டை அவர் வாங்கினார். அதற்கும் அங்கே இங்கே வேலைசெய்வதாக பொய்ப் பத்திரங்கள் சமர்ப்பித்து ஒருவன் வங்கிக் கடனுக்கு ஏற் பாடு செய்துகொடுத்தான். இந்தச் சுத்துமாத்து வேலைகளைக்கூட தொழிலாக வைத்துக்கொண்டு, அலுவலகமும் விளம்பர மகிமைக ளும் பெற்றுக்கொண்டு இருக்கிறார்களேயென்பது சுந்தரத்துக்கு அதிர்ச்சியாகவே இருந்தது.

அங்கேகூட அயல் வீடுகளோடு முரணேதும் கொண்டுவிடாமல் மிகுந்த அவதானமாய்தான் அவர் குடியிருந்தார். தளர்ந்தும் நோயாளியும் ஆகிப்போன மனைவியின் பராமரிப்பைச் செய்து கொண்டு அவரது காலம் அங்கே நகர்ந்து கொண்டிருந்தது.

ஆனால் அக்காலப் பகுதியில் கனடாவின், பொதுவாக வடஅமெ ரிக்காவின், பொருளாதாரத்தைக் குறிப்பாகத் தாக்கிய அச்சீணத் தில் அவரும் தவறிப் போகவில்லை. வாரத்திற்கு ஐந்து வேலை நாட்களில் மூன்று நான்கு நாட்களே வேலை கிடைத்தது. வங்கிக் குக் கட்ட வேண்டிய தவணைத் தொகையை ஒழுங்காகச் செலுத்த அவ்வப்போதாயினும் அவரால் முடியாது போனது. வீட்டை வாங்க பிள்ளைகளூடாய் அவரை அவசரப்படுத்திய மனைவியால் ஒரு கனடிய டிம்முக்குப் பிரயோசனமிருக்கவில்லை. தொலை பேசி, தொலைக்காட்சி பில்களிலும் நிலுவை விழத் தொடங்கியது. உரிய காலத்தில் கட்டப்படாத வங்கித் தொகைக்கும் பில்களுக் குமான தண்டத் தொகை மாதத்திற்கு நாற்பது, அறுபது டொலர்க ளென எகிறியது. அவரால் முடியவேயில்லை.

பில்கள் நிலுவையாக, அவை கடன் வசூலிக்கும் கொம்பனிகளி டம் பொறுப்பளிக்கப்பட்டதில், நாளுக்கு பத்து தொலைபேசி அழைப்புகளாவது மிரட்டும் தொனியில் வரத்தொடங்கின. அவர் உண்மையில் மிரண்டே போனார்.

சிவயோகமலரின் உடல்நிலையும் வரவர மோசமாகிக்கொண்டு வந் தது. வாகனமற்ற நிலையில் குடும்ப வைத்தியரிடமென்றும், ஆஸ் பத்திரியென்றும், சிறுநீரக சிறப்புக் கிளினிக்குகளென்றும் அவ ளைக் கொண்டுசெல்வதற்கான நேரத்திற்காய் அவர் பட்ட சிரமங் கள்..! அவர் திணறினார்.

மனைவியைப் பராமரிப்பதா அல்லது 'இரண்டடி' அடித்தாவது தவணை முறையிலேனும் கடனை அடைப்பதாவென அவருக்குத் தெரியவில்லை. கடைசியில் எஞ்சியிருந்த ஒரேவழியில் நுழைய அவர் தீர்மானித்தார்.

மகனைத் தொடர்புகொண்டு தன் அபிப்பிராயத்தைத் தெரிவித்தார். மகனிடமிருந்து மறுப்பாக ஒரு வார்த்தை பிறக்கவில்லை. நிலைமையை அவனும் உணர்ந்திருப்பான்போலும். சிறிதுநேரத்தில் 'சரி, அய்யா. வேற வழி இப்போதைக்கு உங்களுக்கும் இல்லைத்தான். வீட்டை வித்திடுங்கோ' என்றான். அவரும் வீட்டை விற்று கடன்களை அடைத்துவிட்டு வாடகை வீடொன்றுக்கு குடிபோனார்.

இது நடந்தது 2014ல். அன்று பிடித்த சனியன்தான். மூன்று வீடுகள் மாறிவிட்டார். அப்போது வேலையுமில்லாத நிலையில் முதியோர் ஒய்வூதியப் பணத்தை வைத்துக்கொண்டு ஸ்கார்பரோவில் அல்லது மார்க்கத்தில் வீடெடுக்கிறது எவ்வளவு சிரமமென்று கேள்வியில் பட்டிருந்ததை தானே அனுபவித்தார். இரண்டாவது வீட்டிலிருந்து, மலரின் இரவு நேர தொண தொணப்புகளால் தமது நித்திரை குழப்ப முறைப்பாட்டில் மலருக்கும் வீட்டுக்காரருக்குமிடையே வாக்குவாதம் மூண்டதும், கடைசியில் பொலிஸ் வந்து அவரை விரைவில் வெளியேறப் பணித்ததும் அவருக்கு கனவில் நடந்தவையல்ல.

எல்லாம் சமாளித்து இந்த வீட்டுக்கு குடிவந்ததுவரை ஒரு பெருங் கதையே அவரிடத்திலுண்டு.

நரை திரை மூப்புகள் தந்த அனுபவத்தின் மேலாக தன் இயல்பான பொறுதிக் குணமும் சேர்ந்து பூரண சமாதானம் மனத்தில் நிலைபெற்றவராக சுந்தரம் எழுந்தார்.

அப்போது நீல வெண்பனித் தூறல் நின்றிருந்தது. சடங்களில், கீழே புற்றரையில் இறங்கியிருந்த ஓரங்குலத்திற்கும் மேலான பனிப் பஞ்சு நிலச் சூட்டிலும் காற்றின் உரசலிலும் மறையத் துவங்கியிருந்தது.

அன்றிரவு ரவீந்திரன் விளைத்த சூறாவளிபோல் எதுவும் சம்பவித்துவிடவில்லை என்பதுமாதிரியே நாளை அவர் நடந்துகொள்வார்!

அன்று மாலை வீடு திரும்ப வழக்கத்துக்கு முன்னதாக ரவீந்திரனுக்கு முடிந்திருந்தது. மூன்று மணியளவில் கதவைத் திறந்து கொண்டு வந்தவனைக் கண்ட சாந்தியை, அவர்களுக்கு இடையிலிருந்த உறவின் முறுகலை மீறியும், அது சிறிது திகைப்படையச் செய்தது.

இருட்டுவதற்கு முன்னால் அவன் வீடு திரும்பிய வெள்ளிக்கிழமை கடந்த நான்கு வருஷங்களில் அபூர்வம். கடந்த இரண்டாண்டு வெளியில், வெள்ளிகளிலேயே அதிகமும் போதையுடன் வருகின்றவன், அன்றைக்கு போதையின்றித் திரும்பியது இன்னும் அபூர்வம்.

உள்ளே வந்தவன் ஏதாவது கேட்பானாவென அவனையே பார்த்தபடியிருந்த சாந்தியிடம் தேநீர் கேட்டான். 'சீனி குறைச்சு.'

வெள்ளிக்கிழமைகளில் அவன் தேநீரும் அருந்துவானாவென்ற அதிசயத்தின் மெல்லிய படபடப்பு அவளது கண்களிலடித்தது. தாமதமின்றி போட்டுவந்து கொடுத்தாள்.

ஒளி மறைப்பு பிளாஸ்ரிக் சட்டரை மேலே சுருக்கிவிட்டு பெரிய கண்ணாடி ஜன்னலின் ஓரம் ஒரு கதிரையை இழுத்துவந்து போட்டு தெருவைப் பார்த்தபடி கூடத்துள் அமர்ந்துகொண்டு அவன் தேநீர் அருந்த ஆரம்பித்தான்.

ஒவ்வொரு வீட்டின் முன்னாகவும் அம்பாரமாய்க் குவிக்கப்பட்டிருந்தது, கடந்த இரண்டு நாட்களாக பகலிரவாய்க் கொட்டிய நீல வெண் பனி. வீடுகளின் கூரைகளிலும், இன்னும் இலையுதிர்த்தாது நின்றிருந்த குளிர்கால மரங்களிலும் அது அப்பியிருந்தது. எங்கும் பனியாகயிருந்தது வெளி.

காற்று வீசாததில் பனித் தூவல் இறுகாது இன்னமும் மெதுமை கொண்டிருந்தது. அந்த மெதுமை தனக்குள் ஒரு கணகணப்பை இன்னும் கொண்டிருந்ததை, காற்றுவெளியில் வியாபித்திருந்த கதகதப்பு உணர்வித்தது.

சிறுவர்கள் பனிப் பந்து உருட்டி ஒருவர்மீது ஒருவர் எறிந்தும், பனிக்குன்றில் சறுக்கி விழுந்தும் விளையாடிக்கொண்டு இருந்தார்கள். பள்ளி விடுமுறைக் காலத்தில் நத்தாருக்கு முன்பாகவே சிறுவர்களை மகிழ்விக்க வந்த நீலவெண் பனிப் பொழிவு, வெளியில் வீசிவிட்டிருந்த மனோகரத்தில் பெரியவர்களும் குதூகலமடைந்தார்கள். சிறுவர்களைப் பராமரிக்கும் சாக்கில் அவர்களும் பனி விளையாடினார்கள். அவர்களின் வெட்கத்தின் சிரிப்பலைகள் நாலாபுறமும் ஒலித்தன. அத்தனை ரம்மியங்களிலும் ரவீந்திரனின் மனம் அசைய மறுத்து, நினைவின் புதைகுழியில் ஆழ்ந்துகிடந்தது.

அப்போதைய அவனது கவலைகள் உடனடித்தனம் வாய்ந்தவை. ஆயினும் அவை பழையவற்றுடன் தொடர்பும் பூண்டவை. அவற்றினால் அவன் வதைபட்டிருக்கிறான் கடந்த சில நாட்களாக.

அந்த வாரம் முழுக்க அவனை அலைவித்துக்கொண்டிருந்த நினைவு சுந்தரத்தினதாக இருந்தது. சுந்தரம் சொன்னதாக சாந்தி தெரிவித்த தகவலில், தான் அன்று மிகைக் கோபம் காட்டிவிட்ட தற்காய் தன்னுள்ளேயே அடக்கமுடியா வெகுட்சியின் அலைகள் கொண்டவனாய் அவன் இருந்தான். அன்றைய நாள் வெள்ளிக் கிழமையாய் அமைந்து, அந்த உணர்வை மேலும் இரண்டு மடங்காய்ப் பெருக வைத்ததோடு, விரும்பாத வேறு நினைவுகளையும் உடனிழுத்து வந்துவிட்டது.

ஒரு மாயத்தின் கதவு அகலத் திறந்ததுபோல் வெள்ளிகள்தான் அவனை அவனில்லையாய் ஒழுகவைத்தன. அவையே சுடு சாம்பராய் சாந்திமீதும் படிந்து அவளை அவனுடன் பின்னமுற்றுப் போக வைத்தன. அந்த நாளின் நினைவுதான் சுந்தரத்தின்மீது காட்டமான சொற்களை வீசவும் அவனைச் செய்திருந்தது.

நியூ சென்சரி ஹோம்ஸ் நிறுவனத்தில் கூட்டுப் பணியாற்றத் துவங்கிய ஆரம்ப காலத்தை அவன் நினைத்துப் பார்த்தான். நிறைந்த வருமானமும், பெரிய கியாதியுமாக ஒரு பொற்காலத்தை அவன் தொழில் அவனுக்கு நல்கியிருந்தது. அந்தக் காலத்திலிருந்து யாரினுடைய பலப் பிரயோகமுமற்று அவன் தானேயாகத் தான் வழுகி கீழே விழுந்தான்.

அந்தக் காலத்தின் சீணம் மெல்லமெல்லத்தான் உருப்பட்டது. முதலில் ஒரு வீட்டைக்கூட விற்கமுடியாத நிலை ஏற்பட்டது. பொருளாதாரரீதியாக மிகவும் நொடிந்த நிலைக்கு ரவீந்திரன் தள்ளப்பட்டான். நிறைந்த உல்லாசங்களை குடும்பத்துக்கு வெளியில் அனுபவிக்கக்கூடியதாயிருந்த வசதிகள்மாறி, வீட்டுச் செலவீனங்களைக்கூட நிறைவேற்றத் திணறும் நிலை உருவாகிற்று. அது இன்பத்தின் ஊற்றெனக் கொண்டாடிய களிப்பிடத்தையும் துன்பத்தின் விளைநிலமாக்கிற்று.

வசதிகள் அவனைத் திசைமாற்றி இழுத்துச்சென்ற வழியில் அவன் எதிர்கொண்ட அனுபவங்கள் கடூரமானவை. வாழ்க்கையில் வசதிகளோடு வாழ்வதிலும் வெகுத்த அவதானம் தேவையென்பதை அவனுக்குணர்த்திய ஞானபாடங்கள் அவை.

தன் புது லெக்ஸஸ் காருக்கு பூஜைபோட ரவீந்திரன் ஒரு வெள்ளியில் கோயிலுக்குப் போயிருந்தான். அங்கேதான் முதன்முறையாக சிவானியைக் கண்டான். மழை பெய்துகொண்டிருந்ததில் அவளையும் அவளது தாயையும் வீட்டில் இறக்கிவிட தானேயாக முன்வந்தமை இரக்கத்தின் நிமித்தமாகவே விளைந்தது. ஆனால் அது மெல்ல மெல்ல களவுறவாய் முகிழ்த்து, இன்னொரு குடும்பமாய் அந்த இளவேனில் பருவ காலம் கோடையாய் மாறுவதின் முன்னமே திரண்டுபோனது.

வெள்ளிகளில் சிவானியை, தாயையும்தான், கோவிலுக்குக் கூட்டிச் சென்றான் புதிய தமிழ்ச் சினிமாக்கள் பார்க்க தியேட்டர்களுக்கு ஏற்றிப்போனான் நடன இசை நிகழ்ச்சிகள், கலைவிழாக்கள், களியாட்ட விழாக்கள், ஊர் ஒன்றுகூடல்கள் எதையும் அவன் அவர்களுடன் தவறவிடவில்லை. விளம்பரத்திற்காக ஆயிரக் கணக்கில் செலவிட்ட அவ்விழாக்களிலேயே தனது சிறப்பான தொழிலதிப பிம்பம் நொறுங்கிக்கொண்டிருந்ததை அவன் காண முடியாதவனாகயிருந்தான்.

அயலை, தன் சமூகத்தை, தன் மனைவி பிள்ளைகளைக்கூட, அவன் எண்ணவேயில்லை. மாநகர சபையில் ஒரு கவுன்சிலராகும் தன் அடிமனத்தே கிடந்துறங்கிய கனவைக்கூட பொருள்செய்ய



வில்லையே!

அவ்வாறான ஒழுகலாறு காரணமான கியாதியின் சீணத்திற்கு படி முறை வளர்ச்சி இருந்தது. அது இறுகிவருவதான புரிதலேற்பட்ட சந்தர்ப்பத்தில் அந்த வலையிலிருந்து அவன் மீள நினைத்தான். முடியவில்லை. வலையும் கோணல்மாணலாய்ச் சுற்றி அவனை விலகிப்போக விட்டுவிடாததாகயிருந்தது.

அந்த உறவு அறுபடவிருந்த தருணம் அவனுக்கு மிக மிக இக் கட்டானது.

இருந்தபோதையவிட கழரும்போது மிக்க வலி கொடுக்கும் கழ லையாய்ப் போனாள் சிவானி. வீட்டை எழுதிவை, கார் வாங்கித் தா, இல்லாட்டி பேப்பரில போடுவன், பொலிசுக்குப் போவன், வழக்குப் போடுவனென தாயின் அறிவுரைப்படியான அவனுக் குள்ள தேர்வினை தன் மொழியில் அவள் முன்வைத்தபோது ரவீந் திரன் கலங்கிப்போனான்.

அவர்களை இழப்பில்லாமல் அவனால் கழற்றமுடியவில்லை. கடைசியில் ரவீந்திரன் வீட்டைக் கொடுத்தான் காரைக் கொடுத் தான் கேட்ட அனைத்தையுமே கொடுத்தான். அது பொருணிலை யாவற்றையும் இழந்துபெற்ற விடுதலை.

ஆனால் அந்த விடுதலையின் அனுகூலத்தை இரண்டு வருஷங் களாகிக்கூட கண்ணிலும் காணாதவனாய் அவனிருந்தான். இன் னும் விடுபடாச் சோகத்தின் வரைபடத்தில் அந்தத் துயரும் ஒன் றாகச் சேர்ந்துகொண்டது.

ஆரம்பத்திலேயே நண்பன் ஈஸ்வரன் அந்தத் தொடுப்பில் எழக்கூ டிய அபவாதங்களை அவமானங்களை ஏமாற்றங்களை சம்பந்தப் பட்டவளின் முன்கதைகள் சில தெரிந்திருந்தவகையில் சுட்டி எச்ச ரிக்கவே செய்தான். அவன்தான் அதைப் பொருள்செய்யாது முற் றிலுமாய் அந்தச் சேற்றில் அமிழ்ந்துகொண்டான். ரவீந்திரனுக்கு என்றும் தீராத நினைவின் உறைப்பு அது.

நேரம் கழித்து வீடு திரும்புகைகளும், அளவுமீறிய குடியும், மனை வியுடனான அந்நியோன்யத்தில் விழுந்த வெடிப்பும் தன் மீட்சி யைக்கூட அனுபவிக்க முடியாதவனாய் அவனை ஆக்கியிருந்தன.

ஒரு வெள்ளிக் கிழமையில் விழுந்த நாசகாரத் தொடுப்பு, மீண்ட காலத்தின் வெள்ளிகளையுமே வெறுக்கும்படி அவனைச் செய்தது.

அவனளவில் அவளே வெள்ளியாக இருந்தாள். எரிந்து விழுந்து அவன் வானத்திலிருந்து மறைந்ததிலும், அவன் பசுமைகளைக் கருக்கியதிலும் அந்த நிகர்ப்பு.

அந்த இருள் அவனை சமூகத்திலிருந்து ஒதுங்கப்பண்ணியது. ஒழிந்துகொள்ளச் செய்தது. அச்சப்படவைத்தது. எதனையும் எவ ரையும் அவன் அஞ்சினான். எவரின் உரத்த குரலும், எந்த நிர்ப் பந்தமும் தன் பலவீனம் தெரிந்ததிலான மிரட்டலாகவும் அதட்ட லாகவும் அவனுக்குத் தோன்றச் செய்தன. சுந்தரம்மீதான அவனது வெகுட்சியின் மூலமது.

அது அவனை பெருவலி செய்தது.

வித்துவான் வீரகத்தியின் மருமகன் சுந்தரமும் மகளும் வீடு தேடி கஷ்ரப்படுகிறார்களென்று கேள்விப்பட்டபோதே வெறுமனே கிடந்த தனது இரண்டு அறை வோக் அவுட் பேஸ்மென்ரின் நினைவு உட னடியாக அவனுக்கு வந்தது. உதவி செய்கிறபோதே, அப்போதி ருந்த பணக் கஷ்டத்தில் ஆயிரம் டொலர் வாடகையாக வருமென் பதையும் அவன் யோசிக்கவே செய்தான். ஆனால் அதை ஊர வர்க்கு வாடகைக்குக் கொடுப்பதில், தனது கடந்த கால அபகீர்த்தி கனடா கடந்து வடமராட்சிவரை சென்றுசேரக்கூடிய சாத்தியத்தால் தயங்கினான்.

அந்தத் தயக்கத்தையும் ஒரு கட்டத்தில் கடக்கவிருந்தபோது, ஏற் கனவே முரண்கொண்ட சமூகத்தவரானாலும், பகைகொண்ட குடும் பத்தவராய் நிலைத்துப் போன தன் மனிதர்கள் என்ன எண்ணுவார் களோவென அவனுக்குக் குழப்பம் வந்தது.

அதை அவனது பெரியப்பா பலவும் சொல்லி நிவர்த்தித்தார்.

'ஆர்ட் மாஸ்ரரென்று ஏன் சொல்லுறாய்? பேர் சுந்தரம்... யாழ்ப்பா ணப் பக்கம்... இல்லாட்டி தீவுப் பக்கமெண்டு சொல்லியிடு, ஒருத் தருக்கும் தெரியப்போறேல்ல. அவை கீழ இருக்கப்போகின, நீ மேல இருக்கப்போறாய் அவ்வளவுதான்' என அவர் உபாயம் சொன்னார். 'எங்கள, தங்கட வீட்டு முத்தத்தில மட்டுமில்லை, றோட்டுக் கேற்றடியிலகூட கால்வைக்க விடாத அந்த ஆக்களிட்ட யிருந்து, இப்ப ஓராள் உதவிகேட்டு வருகுதெண்டா, அது எங்க ளுக்கொரு வெற்றியெல்லோ, ரவி! அதை முதல்ல நீ யோசிக்க வேணும்' என மேலும் காரணங்களை இறக்கினார்.

அவரது வலிதான காரணங்களைக் கேட்ட பின்னரும், 'வேலையில் லாத ஆள் பென்சன்மட்டும்தான் வருமானம் அதையும் யோசிக்க வேணும், பெரியையா' என்று மறுபடி ரவீந்திரன் நழுவப்பார்த்தான்.

பெரியப்பா விடவில்லை. 'பென்சனெண்டாப்போல...? அது நிரந்தர வருமானமெல்லோ? அதோட, அவையின்ர பிள்ளையள் மூண்டும் வெளியில. இஞ்சயும் ஒரு பெடியன் ஒட்டோவாவில இருக்கிறான். அவையை நல்லாய்த் தெரிஞ்ச ஆள் விநாயமூர்த்தி சொல்லித் தான் நான் உன்ர பேஸ்மென்ரை கேட்டது. விநாயமூர்த்தியைத் தெரியும்தானே? இஞ்ச... மூர்த்தி அங்கிளெண்டு சொல்லுவின. வேணுமெண்டா சொல்லு, அவரை வந்து கதைக்கச் சொல்லுறன். அவற்ர கறன்ரி போதுமெல்லோ உனக்கு?' என விடாப்பிடியாய் நின்று அவனைச் சம்மதிக்கவைத்தார்.

பழைய குடும்பப் பிரச்சினைகளில் நேரடிச் சம்பந்தமுள்ள அவன் மனைவி சாந்தரூபிணியும் எல்லாம் கேட்டு உம்மென்று முகத்தை வைத்திருந்தாலும் மறுப்பாயேதும் சொல்லாததில், மேலே சுணக்க மின்றி ரவீந்திரன் சம்மதித்துவிட்டான்.

அவ்வாறு பெரியப்பா சொன்ன அத்தனை நியாயங்களையும் அந்த ஒற்றை இரவில் தான் மறந்திருக்கக்கூடாதென அவனுக்குத் தோன்றியது. 'விருப்பமில்லாட்டி வீட்டைவிட்டு வெளிக்கிடலா' மென்றும் சொன்னானே. நல்லவேளை, அந்த மனிதர் அதுபற்றி அன்றுவரை வாய் திறக்கவில்லை. கண்டார்தான். வழக்கம்போல தலையைக் குனிந்துகொண்டு அப்பால் நகர்ந்தார். அடுத்தமுறை நேர்ப்படும்போது அவரின் மனம் சமாதானமாகும்படி ரண்டு வார்த் தைகள் சொல்லவேண்டுமென தீர்மானித்துக்கொண்டான்.

எல்லாம், தன் மகனை எதிர்வீட்டுப் பிள்ளைகளுடன் பனி விளை யாடவிட்டு பார்த்துக்கொண்டிருந்த சாந்தி கண்டுகொண்டுதான் இருந்தாள். அவனது இருப்பின் நிலைத்த ஸ்திதியில், அவன் மனத்திலோடிய எண்ணங்களை பெரிதும் பிழையற யூகிக்க முடிந் திருந்தது அவளால்.

சுந்தரத்தின்மீதோ, வித்துவான் வீரகத்தியின் மகள்மீதோ அவ ளுக்கு எந்தக் கோபமும் கிடையாது. இருவேறு சமூகங்களின் இரண்டு குடும்பங்கள் சம்பந்தப்பட்டதும், முப்பது வருஷங்க ளுக்கு முந்தியதுமான அந்தப் பிரச்சினையில் அவளது குடும் பமே நேரடியாகப் பாதிப்படைந்ததானாலும், அவளுக்கு மூத்த தலைமுறை மனிதர்களால் விளைக்கப்பட்ட கெடுதியின் பழியை, அதே சமூகத்திலுள்ள வேறு தலைமுறை மனிதர்கள்மீது சுமத்தி விட அவளால் முடியாது. அதனாலேயே சுந்தரம் யாரென்ற விப ரம் தெரிந்திருந்தும், பெரியமாமன் பேஸ்மென்ரை அவர்களுக்கா கக் கேட்டபோது, ஒரு வார்த்தை எதிர்வினையாற்றாமல் பார்த்துக் கொண்டு மௌனமாயிருந்தாள். அது கருணையின் வகைப்படு மென்ற ஓர் எண்ணமுமிருந்தது அவளுக்கு.

ரவீந்திரன்தான் தடுமாறினான். தலைமுறை முந்திய அச்சம்ப வத்தை யோசித்து அவன் தயங்குகிறானென்பதை அவன் தன் னைப் பார்த்த விதத்திலே அவளால் புரிய முடிந்திருந்தது. அவர் களுக்குள் இருந்த உள்வெடிப்பு அவளை நேரடியாக எதையும் சொல்வதைத் தடுத்ததாயினும், சுந்தரத்துக்கு பேஸ்மென்ரைக் கொடுப்பதில் அவளுக்கு ஆட்சேபம் இருந்திருக்கவில்லை. மேலும், போன வெள்ளி இரவின் ரவீந்திரனது கத்தலைக்கூட, தடுக்காதபோதும், அவள் விரும்பாதேயிருந்தாள்.

இரண்டு குடும்பங்களின் காதல்-கல்யாணப் பிரச்சினை அது. தெளிவாகச் சொன்னால் 'காதலியை உடன்கொண்டோடுதல்' வகைப்பட்ட அறத்திணை அது. சமூகத்தின் தள பேதங்களில்விட, சாதி பேதங்களில்தான் அது முதன்மைப்பட்டிருந்தது. அது 1960 களில் பெரும் சாதிக் கலவரமாய் அனல்வெடித்திருந்த வடமாகா ணத்தின் வடகரையில், 1980களில்கூட பாரிய விளைவுகளை ஏற்ப டுத்தவே செய்தது.

1981ல் தாழ்ந்த சாதிப் பையனொருவன் உயர்சாதிப் பெண்ணொ ருத்தியை இரவுக் கூட்டங்களின் விளைவாக எழுந்த விளைவின் பின்னால், நண்பர்களுடன் ஆலோசித்து வேறு மார்க்கம் இல்லை- யெனக்கண்ட பின், அவளை ஓர் அந்திப்பொழுதில் சைக்கிளில் ஏற்றிக்கொண்டு தன் வீட்டுக்கு கொண்டுபோய்விட்டான்.

அடிபாடுகள், சிலரின் விசாரணைக் கைதுகளின் பின்னாக, எம்.பி. மற்றும் அரசியல் சமூக அமைப்புக்களின் சில தலைவர்களது தலையீட்டில் பிரச்சினை சிறிதுகாலத்துள் கட்டுக்குள் அடங்கியது.

ஆனால் ஒரு முன்னிரவில் உயர்சாதிச் சமூகத்தின் குடிமனைப் பகுதியை சைக்கிளில் கடந்துவந்தபோது சாந்தரூபிணியின் தந்தை வல்லிபுரம் கத்தியால் தோளிலே வெட்டப்பட்டார். கழுத் துக்கு வைத்த குறி, தோளிலே பாய்ந்திருந்ததால் ரத்தம் ஒழுக ஒழுக ஆள் நடமாட்டமற்ற வீதியில் சைக்கிளை ஓடியே வீடுவரை அவரால் வர முடிந்திருந்தது.

அவரது வேட்டியின் மேல்பாதி முழுவதும் ரத்தச் சிவப்பில் தோய்ந்திருந்ததை அவளே கண்டாள். வீட்டிலிருந்த எல்லோருமே குழறிக்கொண்டு ஓடிப்போய் அவரைத் தூக்கி வீட்டுத் திண்ணை யில் கிடத்தினார்கள்.

அயல் கூடியது. பெரியாஸ்பத்திரிக்கு கொண்டுசென்று, பிழைப் பாரா மாட்டாரா என்ற நிலையில் மூன்று நாட்களாக ஆஸ்பத்திரி வாசலில் காத்திருந்தது. அந்த பத்து பதினைந்து பேரடங்கிய கூட் டத்தில், அய்யாவைப் பாக்காமப் போமாட்டனென்று அடம்பிடித் துக்கொண்டு ஆறேழு வயதான சாந்தியும் இருந்திருந்தாள்.

அம்மா அவளுக்கு அவள் பிறந்திருக்காத காலத்தின் சாதிக் கல வரக் கதைகளெல்லாம், அப்போதைய பிரச்சினையின் மூலக்கதை களெல்லாம் சொன்னாள். இன்னும் சுபத்திரன் கவிதைகளும், பசு பதி கவிதைகளும், மகாகவி கவிதைகளும்கூட புரியும்படியான விளக்கங்களுடன் அவள் சொன்னாள்.

'போன வருஷம் நடந்த ஆறுமுகம் மாமாவின்ர கலியாணத்துக் காண்டியோ, இப்ப அவை அய்யாவை வெட்டினவை?' எனவொரு நியாயம் பிசகாத வினாவை, அந்த வயதிலேயே அம்மா ஆச்சரி யம் படும்படியாக அவள் கேட்டாள்.

அம்மாவுக்கே இப்போது அந்தக் கோப தாபங்கள் மனத்தி லில்லை. ஐயாகூட தன்னை வெட்டியவரை இறுதிவரை காட்டிக் கொடுக்கவில்லையே. அவள் ஒரு குரோதத்தைக் கொள்வது எங் ஙனம்?

முன்புபோல் சீவல், மரம்வெட்டவென்று சுழன்று சுழன்று தொழில் செய்ய முடியாதவராய்ப் போனாலும், தன்னுழைப்பில் நிலம் கல் வீடென்று கட்டி வாழ்ந்து அனுபவித்துத்தான் வல்லிபுரமும் கால மாகியிருந்தார்.

அந்தச் சமூகத்துள், அந்த அயலுக்குள், அந்த உறவுக்குள் அவள் இருந்திருந்தாள். ரவீந்திரன்தான் வேற்றூர்க்காரன் மந்துவி லான். அவனைவிடவுமே வீரகத்தியின் குடும்பத்தையும், அவர்க ளது சமூகத்தையும், நடந்த சம்பவங்களையும் அவளுக்குத் தெரி யும். அவளால் சம்பவ விடுபடுதல்களின்றி ஒரு குறுகிய வட்டத் துள் வெடித்தடங்கிய 1981ன் அச்சாதிப் பிரச்சினையது மூலக்க தையை வார்க்கமுடியும்.

வித்துவான் வீரகத்தியின், அவரது தம்பியின், தங்கையின் குடும் பக் கதைகளைக்கூட.

(தொடரும்)



devakanthan@thaiveedu.com


Mega Financial Group
WE ARE PROVIDING A LIFETIME
FAMILY PROTECTION
SAVE BIG
ON COVERAGE FOR YOUR MOST PRECIOUS ASSET
OUR PRODUCTS AND SERVICES
Life Insurance products
Critical Illness Insurance
Disability Insurance
Dental & Drug Insurance
Travel Insurance
Non-Medical Insurance
Mortgage Insurance
RRSP's Investments
RESP-Education Saving Plan
Final Expense Products
(Through Funeral Homes)
INDUSTRIAL ALLIANCE
Canada Life
Sun Life Financial
UL Mutual
La Capitale
Assumption Life
RBC Insurance
Empire Life
Desjardins
Manulife Financial
www.megafinancial.ca
RAJ NADARAJAH
President & CEO
Dir: 416-666-1120
raj@megafinancial.ca
Office: 416-293 5559 • Fax: 416-293 9409
PH28 -4168 Finch Ave. E., Scarborough, ON., M1S 5H6

# தோப்புக்குள்



## - றியுனோசுகே அகுராகாவா
## தமிழில்: என்.கே. மகாலிங்கம்

**காவல்துறை உயர் ஆணையாளரால் விசாரிக்கப்பட்ட மரம் வெட்டுபவனின் சாட்சியம்:**

ஓம், ஐயா. உண்மையாகவே நான்தான் அந்த உடலைக் கண்டேன். இன்று காலை வழக்கம்போல எனக்குரிய பங்குக்கு தேவதாரு மரங்களை வெட்டப் போனேன். அப்போது அந்தத் தோப்புக்குள்ளிருந்த மலைகளுக்குள் ஆழமற்ற குழியில் அந்த உடலைக் கண்டேன். அந்த இடம்? யமாஷினா தெருவில் இருந்து சரியாக 50 மீற்றர் தூரத்தில் இருக்கிறது. மூங்கில்களும் தேவதாருக்களும் உள்ள அந்தத் தோப்பு பிரதான தெருவிலிருந்து தள்ளி இருக்கிறது.

அந்த உடம்பு குப்புறக் கிடந்தது. நீல நிறப் பட்டுக் கிமோனா அணிந்திருந்தது. அத்துடன் தலையில் கியோட்டோ பாணியில் சுருக்கம் விழுந்த கவசமும் அணிந்திருந்தது. மார்பைத் துளைத்து ஒரேயொரு வாள் வெட்டும் இருந்தது. உடலைச் சுற்றி மூங்கில் தண்டுகள் கிடந்தன. அவற்றில் இரத்தக் கறைகள் படிந்திருந்தன. ஆனால் இரத்தம் வழியவில்லை, காய்ந்துவிட்டது. காயம் உலர்ந்து போய் விட்டது. அதோடு அதில் பூச்சி ஒன்று ஒட்டியிருந்தது. என் காலடிச் சத்தத்தைக் கேட்டும் அது கவலைப்படாமல் குந்தியிருந்தது.

வாளையோ அதைப் போன்ற ஒன்றையோ அங்கே நான் கண்டேனா என்று நீங்கள் கேட்கிறீர்கள்?

இல்லை, ஒன்றையும் நான் காணவில்லை, ஐயா. ஆனால் தேவ

தாரு மரத்தின் அடியில் கயிறு ஒன்றைக் கண்டேன். கயிற்றுடன் ஒரு சீப்பையும் கண்டேன். அவ்வளவுந்தான். அவனைக் கொல்ல முந்தி அவன் சண்டை பிடித்திருக்க வேண்டும் என்பது வெளிப் படையாகவே தெரிந்தது. ஏனென்றால் அவனைச் சுற்றியுள்ள புல் லும், மூங்கில் கம்புகளும் மிதிபட்டுக் கிடந்தன.

பக்கத்தில் ஒரு குதிரை நின்றதா?

இல்லை, ஐயா. அந்த இடத்துக்குள் எந்த மனிதராலும் புக முடி யாது. ஒரு குதிரையால் துப்பரவுக்கு அதற்குள் புகவே முடியாது.

**பயணித்துக் கொண்டிருந்த ஒரு புத்த துறவியை காவல் துறை உயர் ஆணையாளர் விசாரித்தபோது கிடைத்த சாட்சியம்:**

நேரம்?

நிச்சயமாக அது நேற்று மதிய நேரம், ஐயா. துரதிஷ்டம் நிறைந்த அந்த மனிதன் யக்கினாவிலிருந்து யமாஷினாவா போகும் தெரு வில் செக்கியாமா நோக்கி ஒரு பெண்ணுடன் நடந்து சென்று கொண்டிருந்திருக்கிறான். அவள் குதிரையில் சென்றிருக்கிறாள். அவள் அவனுடைய மனைவி என்றுதான் நான் அறிகிறேன். அவ-ளுடைய தலையில் ஒரு தலைத்துண்டு முகத்தை மறைத்து முகம் மூடப்பட்டிருந்தது. நான் கண்டது அவளுடைய உடைகளின் நிறத்தை மட்டும்தான். அதுவொரு இளஞ்சிவப்பு நிற உடை. அவ ளுடையது இளம் பழுப்பு நிறக் குதிரை. அதற்கு அழகான பிடரி மயிர்.

பெண்ணின் உயரம்?

ஓ, ஒரு நாலடி ஐந்து அங்குலம் இருக்கும். நான் ஒரு புத்த துற வியானபடியால் அவளின் உடல் அமைப்பின் விபரங்களை அதி கம் கவனிக்கவில்லை. சரி, அந்த மனிதன் வாள் ஒன்றை வைத்தி ருந்தான். அதோடு அம்பு வில்லும் வைத்திருந்தான். இருபது அம் புகள்வரை அவன் தன் அம்பறாத்தூளியில் வைத்திருந்தான் என்ப தும் எனக்கு நினைவிருக்கிறது.

அவனுக்கு அப்படியான விதி அமையும் என்பதை நான் எதிர் பார்க்கவே இல்லை. மனித வாழ்வு காலை பனித்துளி போல அல் லது மின்வெட்டுப் போல மறைந்து போகும் என்பது உண்மை. உண்மையில் என்னுடைய வார்த்தைகள் அவனின் மேல் காட்டும் என் அனுதாபத்தை வெளியிடப்போதாது.

**காவல்துறை உயர் ஆணையாளர் விசாரித்த காவலன் ஒருத்தனின் சாட்சியம்:**

நான் கைது செய்த அந்த மனிதன் யார்? அவன் பெரும் வசைப் பெயர் எடுத்த ஒரு கொள்ளைக்காரன். ரஜோமாறு என்பது அவன் பெயர். அவனை நான் கைது செய்தபோது அவன் குதிரையிலி ருந்து விழுந்திருந்தான். அவன் அட்டாகுச்சியில் இருந்த பாலத் தில் அனுங்கிக் கொண்டு கிடந்தான்.

நேரம்?

நேற்று முன்னிரவு. ஆவணப்படுத்தலுக்காகச் சொல்லுகிறேன், அதற்கு முதல் ஒருமுறை அவனை கைதுசெய்ய முயன்றேன். துர திஷ்டவசமாக அவன் தப்பி விட்டான். கரு நீலப் பட்டு கிமோனா வும் சாதாரணமான ஒரு வாளும் அவன் அணிந்திருந்தான். அவ-னிடம் ஒரு வில்லும் பல அம்புகளும் இருந்தன என்பதை உங்க ளால் பார்க்க முடியும். இறந்தவன் வைத்திருந்த அம்புகளும் வில் லும் நான் சொன்னதைப் போல இருந்தன என்று சொன்னீர்கள். அப்படியானால் ரஜோமாறுதான் அந்தக் கொலைகாரன். தோல் துண்டால் இழுத்துக் கட்டப்பட்ட ஒரு வில்லும், கறுப்பு அரக்குச் சாயம் பூசப்பட்ட அம்பறாத்தூளியும், பருந்து இறகுகள் கட்டப் பட்ட பதினேழு அம்புகளும் அவனிடம் இருந்தன என்றுதான் நான்



றியுனோசுகே அகுராகாவின் (1892-1927) புனைப்பெயர் சோகோடோ சுஜின். இவ ரின் தாயார் மனநோயால் பாதிக்கப்பட்டி ருந்தபடியால் இவர் தாய்மாமனாரால் வளர்க்கப்பட்டார். ஆங்கில இலக்கியத் தில் பட்டம் பெற்று சில காலம் ஆங்கில ஆசிரியராகவும் வேலை செய்தார். பின் முழு நேர எழுத்தாளர் ஆனார். இவர் பள்ளியில் படிக்கும்போதே இவரின் வகுப்பு நண்பர்களு டன் சேர்ந்து இலக்கிய முயற்சிகளில் ஈடுபட்டார். வெளியே வந்த பின்னும் அவர்கள் அனைவரும் எழுத்தாளர்களானார் கள். இவருக்கு மூன்று குழந்தைகள். ஒருவர் நடிகராகவும் இன்னொருவர் இசையமைப்பாளராகவும் மூன்றாமவர் மாணவராகவும் இருக்கும்போதே இறந்தும் விட்டார். இவர் யப்பான் சிறுகதை ஆசிரியர்களின் தந்தை என்று அழைக்-கப்படுகிறார். யப்பானின் முதன்மையான அகுராகாவா விருது இவரின் பெயரால் கொடுக்கப்படுகிறது. இவர் தன் 35வது வயதில் தற்கொலை செய்து கொண்டார்.

இவர் நவீனத்துவ எழுத்தாளர். இயல்புவாத எழுத்துக்கு எதிரானவர். இவரின் எழுத்து செவ்வியல் படைப்புகளையும் வரலாற்று நிகழ்வுகளையும் வெளிப்படுத்துவன. இலக்கியம் உலகளாவியது என்பதில் நம்பிக்கை உடையவர். அதனால் மேற்கத்திய யப்பானியப் பண்பாடுகளை முரணில்லாமல் கையாளலாம் என்று நம்பினார். உள்ளடக்கத்திலும் பார்க்க, எப்படி கதை சொல்லப்படுகிறது அதாவது வடிவம் முக்கி யமானது என்பது இவர் கருத்து. முப்பத்தைந்து வயதிற் குள் மறைந்து விட்டபோதிலும் 150க்கு மேற்பட்ட சிறுகதை களை எழுதியிருக்கிறார். ஹைக்கு கவிதைகளும் எழுதி யுள்ளார். இவரின் In a Grove, Rashoman, Hana போன்ற சிறுகதைகள் புகழ்பெற்றவை. புகழ்பெற்ற சினிமா இயக்-குநரான அகிரா குருஷோவா இவரின் மேற்படி சிறுகதையை ரஷோமான் என்ற சினிமாப் படமாக இயக்கியுள்ளார்.

நம்புகிறேன்.

ஓம் ஐயா, நீங்கள் சொன்னது போல அழகான பிடரி முடியுள்ள இளஞ்சிவப்பு நிறக் குதிரை, கல்லுப் பாலத்திற்கு சற்று அப்பால் தெரு ஓரம் மேய்ந்து கொண்டிருந்ததை நான் கண்டேன். நீண்ட கடிவாளம் ஒன்று அதன் பக்கத்தில் தொங்கிக் கொண்டு கிடந் தது. குதிரையிலிருந்து அவன் வீசப்பட்டு விழுந்ததற்கு நிச்சய மாக ஏதோவொரு இறை செயல் இருந்திருக்கிறது.

கியோற்றோவில் கள்ளத்தனமாய்த் திரியும் எல்லாக் கொள்ளைக் காரர்களிலும் பார்க்க இந்த ரஜோமாறுதான் அந்த நகரத்திலுள்ள பெண்களுக்கு மிகவும் அதிக துயரத்தைக் கொடுத்தவன். கடந்த இலையுதிர் காலத்தில் பின்டோரியாவிலுள்ள மலையிலுள்ள ரொறிபா ஆலயத்திற்கு ஒரு பெண் ஒரு சிறுமியுடன் தரிசிக்க வந் தபோது அவள் கொல்லப்பட்டிருக்கிறாள். அதை அவன்தான் செய்திருக்க வேண்டும் என்று சந்தேகப்பட்டார்கள். இந்தக் குற்ற வாளி ஒரு ஆணைக் கொலை செய்திருந்தால் அவன் அந்த ஆணுடைய மனைவிக்கு என்ன செய்திருப்பான் என்று எவராலும் சொல்ல முடியாது. இந்தப் பிரச்சினையையும் விசாரியுங்கள் பிர புவே.

**காவல்துறை உயர் ஆணையாளரால் விசாரிக்கப்பட்ட ஒரு முதியவளின் சாட்சியம்:**

ஓம், ஐயா. இறந்து கிடந்த அவன் தான் என்னுடைய மகளை மணம் புரிந்தவன். அவன் கியோட்டோவிலிருந்து வந்தவன் அல்ல. அவன் வகாசா மாகாணத்திலுள்ள கொகுஃபு நகரத்தி லுள்ள ஒரு சாமுராய். அவனுடைய பெயர் கனாஸாவா. ரெகெ ஹகோ அல்ல. அவனுக்கு வயது இருபத்தாறு. அவன் மென்மையான சுபாவம்

உள்ளவன். அதனால் அவன் மற்றவர்களின் கோபத்தைத் தூண்டும் ஒரு ஆளாக இருக்க முடியாது என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும்.

என் மகள்? அவளுடைய பெயர் மசாகோ. அவளுக்குப் பத்தொன்பது வயது. அவள் துடிப்பான, வேடிக்கை விளையாட்டுக்களை விரும்பும் ஒரு சிறுமி. அவளுக்கு ரகெஹிகோவைத் தவிர வேறெவரையும் தெரியாது என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும். அவள் சிறிய கருமையான நீள்வட்ட முகமுடையவள். அவளின் இடது கண் மூலையில் ஒரு மச்சமும் உண்டு.

நேற்று ரகெஹிக்கோ என் மகளுடன் வக்காசாவுக்குப் போனான். என்ன துரதிஷ்டம். காரியங்கள் எல்லாம் இப்படியான சோக முடிவுக்கு வந்துள்ளன! என்னுடைய மகளுக்கு என்ன நடந்தது? என்னுடைய மருமகன் தொலைந்து போனான் என்று நான் எடுத்துக் கொண்டு விட்டேன். ஆனால் என் மகளுடைய விதி எனக்குக் கவலையைத் தருகிறது. ஆண்டவனே, என்னுடைய மகளைக் கண்டுபிடிப்பதற்கு எல்லா முயற்சிகளையும் செய்யுங்கள். அந்தக் கள்ளன் ரஜோமாறுவை நான் வெறுக்கிறேன். அதுதானே அவனுடைய பெயர். அது எதுவாக இருந்தாலும். என்னுடைய மருமகன் மட்டுமல்ல, என்னுடைய மகளும்... (அவள் அடுத்து சொன்ன வார்த்தைகள் எல்லாம் கண்ணீரில் அமிழ்ந்து விட்டன.)

**ரஜோமாறுவின் வாக்குமூலம்:**

நான்தான் அவனைக் கொன்றேன். ஆனால் அவளைக் கொல்லவில்லை.

அவள் எங்கே போனாள்?

எனக்குத் தெரியாது. ஓ, ஒரு நிமிசம் பொறுங்கள். எனக்குத் தெரியாதது எதையும் எந்த சித்திரவதையாலும் என்னைச் சொல்ல வைக்க முடியாது. இப்பொழுது எல்லாம் ஒரு நெருக்கடி நிலையை அடைந்து விட்டபடியால் உங்களிடமிருந்து நான் எதையும் ஒளிக்கப் போவதில்லை.

நேற்று மதியம் முடிந்து சிறிது நேரத்தில் அந்த இணையர்களை நான் சந்தித்தேன். அப்போது ஒரு சிறு காற்று வீசி அவளுடைய தலையிலிருந்து அவள் அணிந்திருந்த சிறிய துணியை விலக்கியது. அப்போது அவளுடைய முகக்தை ஒரு கணம் கண்டேன். உடனடியாக என் பார்வையிலிருந்து அவள் தன் முகத்தை மூடி விட்டாள். அவள் ஒரு போதிசத்துவரைப் போலத் தோன்றியதற்கு அதுவொரு காரணமாக இருந்திருக்கலாம். அந்தக் கணத்தில் அவனைக் கொன்றாவது அவளைப் பிடிக்க வேண்டும் என்று என் மனதில் எண்ணிக் கொண்டேன்.

ஏன்?

நீங்கள் நினைக்கிறது போல ஒருவனைக் கொல்லுவது எனக்குப் பெரிய விளைவுகளைத் தரப்போவதில்லை. ஒரு பெண்ணை சிறைப்படுத்திவிட்டால் எப்படியென்றாலும் அவளுடைய கணவனைக் கொல்லத்தான்வேணும். கொல்லுவதற்கெல்லாம் என் இடுப்பில் வைத்திருக்கும் வாளைத் தான் உபயோகிப்பேன். மனிதர்களைக் கொல்லுவது நான் மட்டுந்தானா? நீங்கள் வாளை உபயோகிப்பதில்லை. ஆனால் உங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தி பணத்தைப் பயன்படுத்தி ஆட்களைக் கொல்லுகிறீர்கள். சில வேளை அவர்களுக்கு நன்மை செய்கிறோம் என்ற சாக்கில் அவர்களைக் கொல்லுகிறீர்கள். நீங்கள் கொல்லும்போது அவர்கள் இரத்தம் சிந்துவதில்லை என்பது உண்மை. அவர்கள் தங்கள் உடல்நலத்தின் உச்சத்தில் இருப்பார்கள். ஆனாலும் அவர்களை கொன்று விடுவீர்கள். பெரும் பாவம் செய்தவன் யார் என்று சொல்வது கஷ்டம், நீங்களா நானா? (அவன் வாயில் ஏளனமான புன்னகை ஒன்று தவழ்ந்தது)

ஆனால் ஒருத்தியுடைய கணவனைக் கொல்லாமல் அவளைச் சிறைப்படுத்தினால் நல்லது. அதனால் அவளை நான் சிறைப்படுத்தவும் அவனை முடிந்தளவு கொல்லாமலும் இருக்க என் மனதை ஆயத்தப்படுத்திக் கொண்டேன். ஆனால் யமாஷிமாவின் வண்டிப் பதையில் அதைச் செய்ய முடியாது என்பது தெரிந்தது. அதனால் அந்த இணையர்களை மலைக்குள் கவர்ந்திழுத்தேன்.

அது மிகவும் எளிது. நான் அவர்களுடைய பயணச் சகாவாக இணைந்து கொண்டேன். மலையில் பழைய சிறுமேடு ஒன்று உள்ளது என்றும் அதை நான் தோண்டிப் பார்த்தபோது அதற்குள் பல கண்ணாடிகளும் வாள்களும் இருந்தன என்றும் சொன்னேன். மலைக்குப் பின்னால் தோப்புக்குள் அவற்றைப் புதைத்து வைத்திருக்கிறேன் என்றும் தொடர்ந்து சொன்னேன். அவற்றை வைத்திருக்க விரும்பும் எவருக்கும் குறைந்த விலையில் அவற்றை விற்பேன் என்றேன். பின். பேராசை என்பது மிகவும் பயங்கரமானதல்லவா? அவன் என் கதையைக் கேட்டு நன்றாகச் சிந்தித்து முடிவெடுக்க வருவதற்கு இசைந்து வர வெளிக்கிட்டான். அரை மணி நேரத்திற்குள்ளேயே அவர்கள் அந்த மேட்டுக்கு தங்கள் குதிரையை ஓட்டிக் கொண்டு வந்தார்கள்.

அவன் அந்த தோப்பின் முன்னால் வந்தவுடன், புதையலை அதற்குள் தான் புதைத்து வைத்திருக்கிறேன் என்று சொன்னேன். உள்ளே வந்து அவற்றைப் பார்க்கும்படி அழைத்தேன். அவன் அதற்கு எந்த மறுப்பும் தெரிவிக்கவில்லை. பேராசை அவன் கண்களை மறைத்து விட்டது. தான் குதிரையில் மேல் அமர்ந்து காத்திருப்பதாக அந்தப் பெண் சொன்னாள். அடர்ந்த அந்தத் தோப்பைப் பார்த்து அவள் அப்படி சொல்வது இயல்பு தானே. உண்மையைச் சொல்வதென்றால் நான் விரும்பியது மாதிரியே என்னுடைய திட்டம் நிறைவேறியது. அவளை அங்கே விட்டு விட்டு, அவனுடன் அந்தத் தோப்புக்குள் போனேன்.

தோப்பில் சிறிது தூரம்வரை தனி மூங்கில் மரங்கள் மட்டும் நின்றன. ஐம்பது யாருக்கு அப்பால் பெருவெளியில் தேவதாரு மரங்கள் நின்றன. அந்த இடம் என் நோக்கத்திற்கு வசதியான இடம். தோப்புக்குள் நுழைந்த பின் தேவதாரு மரத்தின் அடியில் அந்தப் புதையலைப் புதைத்து வைத்திருக்கிறேன் என்று நம்பத் தகுந்த பொய் ஒன்றைச் சொன்னேன். நான் அதைச் சொன்னவுடன் தோப்புக்குள் புகுந்து அதற்குள் தெரிந்த மெலிந்த ஒரு தேவதாரு மரத்தை நோக்கிச் சென்றான். கொஞ்சத் தூரத்துக்கு அப்பால் மூங்கில் காடு முடிவுக்கு வந்தபோது தேவதாரு மரங்கள் வரிசையாக நின்றன. அவ்விடத்திற்கு வந்தோம். அவ்விடத்திற்கு நாம் வந்தவுடன் அவனை நான் பின்னாலிருந்து கட்டிப் பிடித்துக் கொண்டேன். அவன் பயிற்சி பெற்ற வாள் வைத்திருக்கும் வீரனாக இருந்தபடியால் மிகுந்த பலசாலியாகவும் இருந்தான். ஆனால் நான் பிடித்ததை அவன் எதிர்பார்க்கவில்லை. அதனால் அவனால் ஒன்றும் செய்ய முடியவில்லை. உடனே அவனை தேவதாரு மரத்தில் கட்டினேன். கயிற்றை எங்கே எடுத்தேன்? கடவுளே, நான் ஒரு கொள்ளைக்காரனாக இருந்தபடியால் எந்த நேரத்திலும் சுவர் ஏறுவதற்காக ஒரு கயிற்றை என்னுடன் வைத்திருப்பேன். கீழே விழுந்து கிடந்த மூங்கில் இலைகளை அவனுடைய வாய்க்குள் அடைசினேன். அதனால் அவன் சத்தம் போடுவதை எளிதில் தடுக்க முடிந்தது.

அவனை அப்படி அகற்றிய பின் அவளிடம் சென்று அவன் சடுதியாக நோய்வாய்ப்பட்டுவிட்டான், அதனால் அவனைப் பார்க்க வரும்படி சொன்னேன். அந்தத் திட்டமும் சரியாக வேலை செய்தது என்பதைச் சொல்லத் தேவையில்லை. அவள் ஒரு முக்கோணத் தொப்பி அணிந்திருந்தாள். அதைக் கழற்றினாள். அதன் பின் தோப்பின் உள்ளே வந்தாள். அவளைக் கையில் பிடித்து அழைத்துச் சென்றேன். கணவனை கண்டவுடனே சிறியதொரு வாளை உருவி எடுத்தாள். அவளைப் போன்ற கடுங்கோபம் கொண்ட வன்முறையான ஒரு பெண்ணை நான் கண்டதே

இல்லை. நான் தயார்நிலையில் இல்லாமல் இருந்திருந்தேன் என்றால் என் பக்கவாட்டில் குத்தியிருப்பாள். நான் அதைத் தடுத்தேன். ஆனால் அவள் என்னை வெட்டிக் கொண்டே இருந்தாள். அவள் என்னை ஆழமாகக் காயம்பட வெட்டி இருப்பாள் அல்லது கொன்றிருப்பாள், ஆனால் நான் ஒரு ரஜோமறு. அவளுடைய சிறிய வாளை என் பெரிய வாளை உருவித் தடுத்து விட்டேன். மிகவும் உற்சாகமான ஒரு பெண், ஆயுதமில்லாமல் பாதுகாப்பற் றவள்தான். அவளுடைய கணவனின் உயிரை எடுக்காமல் குறைந் தது என் ஆசையை நிறைவேற்றியிருக்கலாம்.

ஓம், அவனுடைய உயிரை எடுக்காமல். அவனைக் கொல்ல வேண்டும் என்ற விருப்பம் எனக்கு இருக்கவில்லை. அவள் அழுது கொண்டே என்னுடைய கையைப் பிடித்து வெறித்தனமாகத் தொங்கிக் கொண்டிருந்தாள். அப்போது நான் அந்தப் தோப்பை விட்டு ஓடிவிட முயன்றேன். துண்டு துண்டாக உடைந்த வார்த்தைகளில் அவளுடைய கணவன் அல்லது நான் சாக வேண்டும் என்று சொன்னாள். எவர் பிழைத்து இருக்கிறார்களோ அவனுக்கு அவள் மனைவியாக இருக்க விரும்பினாள் என்று திணறித் திணறிச் சொன்னாள். அதன் பின் அவனைக் கொல்ல வேண்டும் என்ற வெறித்தனமான ஆசை என்னைப் பற்றிக் கொண்டது. (அவனில் மகிழ்ச்சியற்றதொரு உற்சாகம் தெரிந்தது)

இப்படிச் சொல்லுவதால், உங்களைவிட நான் கொடூரமானவன் என்பது போலத் தோன்றும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அதற்குக் காரணம் நீங்கள் அவளுடைய முகத்தைப் பார்க்கவில்லை. விசேடமாக, அந்த நேரத்தில் இருந்த அந்த எரியும் கண்களை.. அவளுடைய கண்களும் என்னுடைய கண்களும் சந்தித்தன. அப்போது என்னை ஒரு மின்னல் வந்து தாக்கினால் கூட அவளை நான் என் மனைவியாக ஆக்கி இருப்பேன். அந்த ஒரே ஆசைதான் என் மனதை நிரப்பி இருந்தது. நீங்கள் நினைப்பது போல அது காமம் மட்டுமல்ல. அந்தக் கணத்தில் காமத்தை விட வேறு ஆசைகள் இல்லாமல் இருந்திருந்தால், அவளை கீழே விழுத்திவிட்டு நிச்சயமாக ஓடி இருப்பேன். அவனுடைய இரத்தத்தால் என்னுடைய வாளைக் கறைப்படுத்தி இருக்க மாட்டேன். ஆனால் அவளுடைய முகத்தை இருண்ட அந்தத் தோப்புக்குள் பார்த்தபோது அவனைக் கொல்லாமல் அவ்விடத்தை விட்டு அகலக் கூடாது என்று அந்தக் கணமே தீர்மானித்துக் கொண்டேன்.

ஆனால் நேர்மையற்ற வழியில் அவனைக் கொல்லவும் விரும்பவில்லை. அவனுடைய கட்டுக்களை அவிழ்த்து விட்ட பின் என்னுடன் வாள்ச் சண்டை பிடிக்க வருமாறு அவனிடம் சொன்னேன். (தேவதாரு மரத்தின் அடியில் கிடந்த கயிறுதான் நான் போட்ட கயிறு). கடும் சீற்றத்துடன் அவன் தன் வாளை உருவினான். ஒரு வார்த்தையும் பேசாமல் எண்ணத்தைப் போல விரைவாக மூர்க்கத்துடன் என்னில் பாய்ந்தான். அந்தச் சண்டை எப்படி முடிந்தது என்பதை உங்களுக்கு நான் சொல்லத் தேவையில்லை. இருபத்து மூன்றாவது வெட்டில்.. இதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். இருபத்து மூன்றாவது வெட்டில். அது இன்னும் என் மனதில் பதிந்துள்ளது. இந்த உலகத்தில் இருபத்து மூன்று வெட்டுக்கள் கொண்ட சண்டையை யாரும் என்னுடன் ஒருபோதும் பிடித்ததில்லை. (உற்சாகமாக புன்னகைத்தான்)

அவன் விழுந்தபோது நான் என்னுடைய வாளைத் தாழ்த்தி அவள் பக்கம் திரும்பி அவளை நோக்கினேன். பெரும் ஆச்சரியம் என்னவென்றால் அவள் அங்கிருந்து போய் விட்டிருந்தாள். அவள் எங்கே ஓடி இருப்பாள் என்று நான் வியந்தேன். தேவதாரு மரங்களிடையே அவளைத் தேடினேன். காது கொடுத்துக் கேட்டேன். இறந்து கொண்டிருந்த மனிதனின் தொண்டையிலிருந்து வந்த முனகல் சத்தம் தவிர வேறெதுவும் கேட்கவில்லை.

நாங்கள் வாள்ச்சண்டை ஆரம்பித்தவுடனே எவரையாவது கூப்பிடத் தோப்பின் ஊடாக அவள் ஓடி இருப்பாள். அதை எண்ணியவுடன் வாழ்வா சாவா என்ற எண்ணத்தை எனக்கு அது தந்தது. ஆகவே, அவனுடைய வாளையும் அம்பு வில்லுகளையும் எடுத்துக் கொண்டு மலைத் தெருவை நோக்கி ஓடினேன். அங்கே அவளுடைய குதிரை அமைதியாக மேய்ந்து கொண்டிருந்தது. அதன் பின் நடந்தவற்றை உங்களுக்கு விபரமாகச் சொல்வது வார்த்தைகளை வீணாக்குவதாகும். ஆனால் நகரத்தை நான் அடைவதற்கு முன் வாளை எறிந்து விட்டேன். அவ்வளவுந்தான் என்னுடைய வாக்குமூலம். என்னுடைய தலை எப்படியும் சங்கிலியில் தொங்கப் போகிறது என்பது எனக்குத் தெரியும். ஆகவே உச்சபட்சத் தண்டனையை எனக்குத் தாருங்கள். (எதிர்ப்பு உளப்பாங்கு)

### ஷிம்சு ஆற்றுக்கு வந்த பெண்ணின் வாக்குமூலம்:

நீல கிமோனாவிலுள்ள அவன் தன் விருப்பத்துக்கு என்னை விட்டுக் கொடுக்கச் சொல்லிக் கட்டாயப்படுத்திய பின் கட்டி வைக்கப்பட்டிருந்த என் கணவனைப் பார்த்து ஏளனமாகச் சிரித்தான். அப்போது என்னுடைய கணவன் எப்படிப் பயந்திருப்பான்? என் கணவன் வேதனையில் எவ்வளவு கடுமையாக போராடியபோதும் கட்டியிருந்த கயிறு மேலும் இறுக்கமாகி அவனை வெட்டியது. நான் இருந்த நிலையிலும், அவனை நோக்கி தட்டுத்தடுமாறி ஓடினேன். அல்லது அவனை நோக்கி ஓட முயன்றேன். ஆனால் உடனே அந்த மனிதன் என்னைக் கீழே தள்ளி விட்டான். அந்தக் கணத்தில் என் கணவனின் கண்களில் நம்பமுடியாத ஓர் ஒளி தோன்றியது. வெளிப்படுத்த முடியாத ஏதோ ஒன்று. அவனுடைய அந்தக் கண்கள் இப்பொழுதும் என்னை நடுங்கச் செய்கின்றன. ஒரு வார்த்தையும் பேச முடியாத என் கணவனின் அந்த ஒரு கண நேரப் பார்வை அவனுடைய இதயத்திலிருந்த அனைத்தையும் எனக்குச் சொன்னது. கண்களிலிருந்து வெளிப்பட்ட மின்வெட்டொளி பயத்தையோ துயரத்தையோ வெளிப்படுத்தவில்லை. அதுவொரு விறைத்த ஒளி மட்டுமே. வெறுப்பின் பார்வை அது. கள்ளனின் அடியால் தாக்கப்பட்டதிலும் பார்க்க என் கணவனின் கண்களில் தெரிந்த அந்தப் பார்வையால் நான் அதிகம் தாக்கப்பட்டேன். அதனால் நான் இருந்த நிலையிலும் உதவி கோரி கூவிக் கொண்டு மயங்கி விழுந்து விட்டேன்.

நான் மூர்ச்சை தெளிந்து எனக்கு நினைவு வந்தபோது நீலப்பட்டு உடுத்தியிருந்த அந்த மனிதனை அங்கே காணவில்லை. தேவதாரு மரத்தில் கட்டப்பட்டிருந்த என் கணவனை மட்டுமே அங்கே கண்டேன். மூங்கில் மரத்துண்டுகளில் கிடந்த நான் சிரமப்பட்டு எழுந்து அவனுடைய முகத்தைப் பார்த்தேன். அவன் கண்களிலிருந்த அந்த வெளிப்பாடு முன்பு போல அப்படியே இருந்தது.

‘ராகேஜிரோ, இப்படியான நிலைமை ஏற்பட்டு விட்டபடியால் இனிமேல் உன்னுடன் என்னால் வாழ முடியாது. நான் இறக்கத் தீர்மானித்துவிட்டேன்.. நீயும் சாகத்தான் வேணும். நான் பட்ட அவமானத்தை நீ பார்த்தாய் அல்லவா? உன்னை இப்படி உயிருடன் விட்டு விட்டு என்னால் செல்ல முடியாது’

அதைத் தான் என்னால் சொல்ல முடிந்தது. இருந்தும் அவன் என்னை உற்றுப் பார்த்துக் கொண்டே இருந்தான், வெறுப்புடனும் அவமதிப்புடனும். என் இதயம் உடைந்து நொருங்கிக் கொண்டிருந்தது. அவனுடைய வாளைத் தேடினேன். அதை அந்தக் கொள்ளைக்காரன் எடுத்துச் சென்றிருக்க வேண்டும். அவனுடைய வாளோ வில் அம்புகளோ தோப்புக்குள் இல்லை. அதிஷ்டவசமாக என்னுடைய சிறிய வாள் என் காலடியில் கிடந்தது. அதை என் தலைக்கு மேலே தூக்கிக் கொண்டு திரும்பவும் சொன்னேன், ‘இப்போது உன் உயிரைத் தா, உன்னுடன் உடனடியாகவே நானும் வருவேன்.’

இந்த வார்த்தைகளை அவன் கேட்டவுடன் தன் உதடுகளை சிரமப்பட்டு அசைத்தான். வாய் இலைகளால் அடைக்கப்பட்டு இருந்ததால் அவனுடைய குரலைத் துப்புரவாக என்னால் கேட்க முடியவில்லை. ஆனால் அவனுடைய வார்த்தைகளை அவனைப் பார்த்தவுடன் நான் புரிந்து கொண்டேன். ‘என்னைக் கொல்’ என்று அவன் பார்வை சொன்னது. பிரக்ஞையுடனோ இல்லாமலோ,

இளஞ்சிவப்பு நிற கிமோனா ஊடாக அவனுடைய நெஞ்சில் சிறிய வாளால் குத்தினேன்.

அந்த நேரம் திரும்பவும் நான் மயங்கி விட்டேன் என்று நினைக் கிறேன். ஒரு மாதிரியாக சமாளித்துக் கொண்டு அவனைப் பார்த்த போது ஏற்கெனவே அவன் தன் கடைசி மூச்சை விட்டு விட்டான். அவன் இன்னும் கட்டுப்பட்ட நிலையிலேயே நின்றான். தேவதாரு மரங்கள் ஊடாகவும் மூங்கில்கள் ஊடாகவும், அமிழ்ந்து கொண்டு போகும் சூரிய வெளிச்சத்தின் கீற்றுக்கள் அவன் முகத்தில் விழுந்து கொண்டிருந்தன. என் தேம்பல்களை விழுங்கிக் கொண்டு, அவனுடைய இறந்த உடலிலிருந்து கயிற்றை அவிழ்த் தேன். எனக்கு என்ன நடந்தது? எனக்கு உங்களிடம் சொல்ல சக்தி இல்லை. எல்லாம் முடிந்த பின் என்னிடம் இறப்பதற்கும் கூட சக்தி இருக்கவில்லை. சிறிய வாளால் என்னுடைய கழுத்தில் குத்தினேன். மலையின் அடிவாரத்தில் இருந்த குளத்தில் குதித் தேன். அப்படிப் பல வழிகளில் என்னைக் கொல்ல முயன்றேன். ஆனால் மானம் கெட்டு இன்னும் நான் உயிர் வாழ்கிறேன். (முகத் தில் ஒரு தனிமையான புன்னகை) மதிப்பிழந்து போன என்னை மிகவும் கருணையுள்ள குவானொன் கூட கைவிட்டு விட்டான். என் னுடைய கணவனைக் கொன்றேன். அந்தக் கொள்ளைக்காரனால் அத்துமீறப் பட்டேன். என்னால் இனி என்ன செய்ய முடியும்? எதைச் செய்ய முடியும்.(படிப்படியாக கடுமையாக விம்மல் அதிக ரித்தது)

**கொலையுண்டவனின் கதையைச் சொன்ன அவன் ஆவி:**

என் மனைவியை அவன் மானபங்கம் செய்த பின் அங்கே இருந்து அவளிடம் ஆறுதல் வார்த்தைகள் பேச ஆரம்பித்தான். உண்மையில் என்னால் பேச முடியவில்லை. என் முழு உடம்பும் தேவதாரு மரத்தில் இறுக்கமாகக் கட்டப்பட்டிருந்தது. 'கொள்ளைக் காரனை நம்பாதே' என்று சொல்லுவதற்காக பலமுறை அவளிடம் கண்காட்டினேன். அவளுக்கு அப்படி உணர்த்துவதற்கு விரும்பி னேன். ஆனால் என் மனைவி மூங்கில் இலைகளில் மனம் சோர்ந்துபோய் தன் மடியையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவ ளைப் பார்த்தால் அவன் சொன்ன வார்த்தைகளை அவள் கேட் டுக் கொண்டிருந்தாள் போலத் தோன்றியது. நான் பொறாமையால் துடித்துக் கொண்டிருந்தேன். அந்த நேரத்தில் கொள்ளைக்காரன் ஒரு கதையிலிருந்து இன்னொன்றுக்கு தாவித் தாவி சாமர்த்தியமா கப் பேசிக் கொண்டிருந்தான். இறுதியில் தன் துணிகரமான அதே வேளை வெட்கக்கேடான கருத்தை முன்வைத்தான். 'உன்னுடைய ஒழுக்கம் ஒருமுறை மாசுபட்டு விட்டபடியால் நீ உன் கணவனுடன் இனிமேல் தொடர்ந்து வாழ முடியாது. அதனால் நீ என் மனைவி யாக இருக்க முடியாதா? உன்மேல் எனக்கிருந்த காதலால் தான் உன்னைத் தாக்கினேன்.'

அப்படி அந்த குற்றவாளி பேசிக் கொண்டிருந்தபோது என் மனைவி சுயநினைவிழந்த நிலையில் இருப்பது போல தன் முகத்தை மேலே தூக்கினாள். அந்த வேளையில் இருந்தது போல அழகாக அவள் என்றுமே இருந்ததில்லை. நான் கட்டுப் பட்டிருந்த அந்த நேரத்தில் என் அழகான மனைவி ஏன் அவ னுக்கு பதில் சொல்ல வேண்டும்? நான் குழம்பி விட்டேன். ஆனால் அவளுடைய பதிலை கோபத்தாலும் பொறாமையாலும் மனம் எரியாமல் என்னால் எண்ணிப் பார்க்கவும் முடியவில்லை. உண்மையாகவே அவள் சொன்னாள். 'அப்படி என்றால் நீ போகும் இடத்திற்கு எல்லாம் என்னையும் கூட்டிக் கொண்டு போ.'

இதுதான் அவள் செய்த மொத்தப் பாவமும் அல்ல. அவை மட் டுந்தான் என்றால் இருட்டிலிருந்து இத்தனை தூரம் நான் மனவேத னைப்பட்டிருக்க மாட்டேன். கனவில் இருந்தது போல அவள் தோப்புக்குள் இருந்து வெளியேறிப் போனபோது அவள் கை கொள்ளைக்காரனின் கையைப் பற்றியிருந்தது. அவள் சடுதியாக வெளிறிப் போய் நான் தேவதாரு மரத்தில் கட்டப்பட்டிருந்ததைச் சுட்டிக் காட்டி, 'அவனைக் கொன்று விடு. அவன் வாழும்வரை உன்னை என்னால் மணம் முடிக்க முடியாது,' என்றாள். 'அவ னைக் கொன்று விடு' என்று அவள் பலமுறை சொன்னாள், பைத் தியம் பிடித்தது போல. இப்பொழுது கூட அந்த வார்த்தைகள் அடிநுனி தெரியாத ஆழமான இருளுக்குள் என்னை வீசி விடுகின் றன, அச்சுறுத்துகின்றன. அப்படியான வெறுப்பான வார்த்தைகள் ஒரு மனித வாய்க்குள்ளிருந்து என்றாவது வந்திருக்கின்றனவா? அப்படியான சபிக்கப்பட்ட வார்த்தைகள் ஒரு மனித செவியை ஒருமுறையாவது அறைந்துள்ளதா? அப்படியான... (சடுதியாக வெறுப்புடன் தோன்றிய அழுகை ஒன்று வெளிப்பட்டது)

இந்த வார்த்தைகளைக் கேட்ட கொள்ளைக்காரன் கூட வெளிறிப் போனான். 'அவனைக் கொன்று விடு' என்று அவனுடைய தோள் களில் தொங்கிக் கொண்டே அவள் கத்தினாள். அவளை அவன் கடுமையாகப் பார்த்துக் கொண்டே இருந்தான். ஆனால் அதற்கு ஓமோ இல்லையோ என்று அவன் சொல்லவில்லை. அதற்கு அவன் என்ன பதில் சொல்லுவான் என்று யோசித்துக் கொண்டி ருக்கையில் மூங்கில் இலைகளின் மேல் அவள் விழுத்தப்பட்டிருந் ததைக் கண்டேன். (திரும்பவும் அவனிடமிருந்து வெறுப்புடன் கூடிய அழுகை ஒன்று வெளிவந்தது) தன் கைகளை அமைதியா கக் கட்டிக் கொண்டு என்னைப் பார்த்து, 'அவளை நீ என்ன செய் வாய்? கொல்லுவாயா அல்லது காப்பாற்றுவாயா? உன் தலையை மட்டும் ஆட்டு. கொல்லவா?' இந்த வார்த்தைகள் கேட்டு அவன் செய்த குற்றத்தை மன்னித்துவிடலாம் என்று நினைத்தேன்.

நான் தயங்கிக் கொண்டிருந்தபோது அவள் கிறீச்சிட்டுக் கத்திக் கொண்டே தோப்பின் ஆழத்துக்குள் ஓடி விட்டாள். அவன் அவளை எட்டிப் பிடிக்க முயன்றான். ஆனால் அவளுடைய சட் டைக் கையைக் கூட அவனால் பிடிக்க முடியவில்லை.

அவள் ஓடியதன் பின் என்னுடைய வாளையும் வில்லையும் அம்பு களையும் எடுத்துக் கொண்டான். ஒரு வெட்டில் என் கட்டில் ஒன்றை வெட்டிவிட்டான். அவனுடைய முணுமுணுப்புக் கூட எனக்கு நினைவில் இருக்கிறது, 'அடுத்தது என் விதி' என்றான். அதன் பின் அவன் தோப்பிலிருந்து மறைந்து விட்டான். பின் எல் லாமே அமைதியாகி விட்டது. இல்லை. யாரோ அழும் சத்தம் கேட்டது. மற்றக் கட்டுக்களை அவிழ்த்துக் கொண்டு, நான் அதைக் கவனமாகக் கேட்டேன். அது என்னுடைய அழுகைதான் என்பதைக் கண்டேன்.

நீண்ட அமைதி

நான் என்னுடைய களைத்துப் போன உடம்பைத் தேவதாரு மரத்த டியிலிருந்து தூக்கினேன். எனக்கு முன்னால் என் மனைவி கீழே போட்ட பளபளக்கும் ஒரு சிறிய வாள் கிடந்தது. நான் அதை எடுத்து என் நெஞ்சில் குத்தினேன். இரத்தக் கட்டி ஒன்று என் வாய்க்குள் சென்றது. ஆனால் நான் எந்த வலியையும் உணர வில்லை. என் நெஞ்சு குளிர்ந்தபோது எல்லாம் அமைதியானது, இறந்தவர்கள் சவக்குளிக்குள் கிடப்பது போல, எத்தனை ஆழ மான அமைதி! மலைப் பள்ளத்திலிருந்த இந்தச் சவக்குழிக்கு மேலுள்ள ஆகாயத்தில் எந்தவொரு பறவையின் ஒலி கூடக் கேட் கவில்லை. ஒரு தனிமையான ஒளி மட்டும் மலைகளிலும் தேவ தாரு மரங்களின் மேலும் நின்று ஒளிர்ந்தது. படிப்படியாக அந்த ஒளியும் மங்கியது. தேவதாருக்களும் மூங்கில்களிலும் மறையும் வரை ஆழமான அமைதியால் மூடப்பட்டு அங்கே கிடந்தேன். பின் யாரோ ஒருவர் என்னை நோக்கி ஊர்ந்து வந்தார். அவர் யார் என்று அறிய முயன்றேன். ஆனால் அதற்கு முன் இருள் என்னைச் சுற்றித் திரண்டு விட்டது. யாரோ அந்தச் சிறிய வாளை என் மார்பிலிருந்து தன் மறைகரத்தால் மென்மையாகப் பிடுங்கி எடுத்தார். அதேவேளை என் வாய்க்குள் திரும்பவும் குருதி பாய்ந் தது. இறுதியில், இருள் வெளியில் நான் மூழ்கிப் போனேன்.



mahalingam.k@thaiveedu.com



# பனிவிழும் பனைவனம்

**- செல்வம் அருளானந்தம்**

சகாயநாதனைச் சந்தித்த அந்த மாலை, அன்றைய நாளின் சந்தோசத்தை குலைத்தது.

சிவமோகனை எங்கையோ தற்செயலாகச் சந்தித்த சகாயநாதன் நான் ஜெர்மனி வந்திருப்பதை அறிந்து என்னுடைய தொலைபேசி இலக்கத்தை அவரிடம் வேண்டியிருக்கின்றார். பிறகு என்னைக் கூப்பிட்டு, தன்னட்டை வரும்படி வில்லங்கமாக அழைத்தார். எனக்கு சகாயநாதனைச் சந்திக்க விருப்பம் இல்லையெண்டாலும் வேறு வழியில்லாமலிருந்தது.

நான் அவரிட்டை போனவுடன் அவர் கேட்ட முதல் கேள்வி, 'சிவமோகன் ஆட்களுக்கு ஏன் என்னை உன்ரை சொந்தக்காரன் என்டு சொன்னனீ…?'

நான் திடுகிட்டு 'ஏன்ராப்பா நீ என்ரை சொந்தக்காரன்தானே. அதிலை என்ன பிழை' என்றன்.

அவன் கண்ணையும் வாயையும் சுழிச்சுக் கொண்டு. நீ ஒரு பனியன், அவங்களை சந்திச்சுவுடனேயே நீ என்ன சாதி எண்டு சொல்லியிருப்பாய் என்ன? எண்டான்.

'சொன்னா என்ன? ஏதோ ஒரு கதையிலை நான் என்ரை சாதியைச் சொன்னான்தான். அதை அவங்கள் ஒன்றும் வித்தியாசமாய்ப் பார்க்கேல்லை. அவங்கள் நல்ல பெடியள், அதைவிட பல ஆயிரம் மைல் கடந்து வந்து எல்லா இனத்தோடையும் கலந்து அகதியாய் வந்து வாழுற ஊரிலை சாதியெல்லாம் பார்த்து கொண்டு இருப்பாங்களோ?' நான் அலட்சியமாய்ச் சொன்னன்.

'அதாலைதான் சொல்லுறன், நீ ஒரு பனியன்' குரலை உயர்த்திக் கத்தின சகாயநாதன் தேத்தண்ணியும் தராமல் கதைக்கத் தொடங்கினான்.

'நான் உன்னை என்னர பிரண்ட் என்றுதான் அவங்களுக்குச் சொல்லியிருக்கிறன். ஏதோ ஒரு கதையிலை நான் அவங்கட சாதிதான் எண்டும் சொல்லியிருக்கிறன். இப்ப என்னைப் பொய்யன் எண்டும் குறைஞ்ச சாதிக்காரன் எண்டும் உறுதியாக நினைப்பாங்கள். சே… இப்ப என்ன செய்ய?' சுவரைப் பார்த்துச் வாயைச் சுழிச்சபடி 'சூ… சூ…' எண்டு சொல்லிக் கொண்டு நிண்டான்.

எனக்கு சரியான கோபம் வந்தது. திரும்பி என்ரை அறைக்குப் போனால் என்ன? எண்டு நினைச்சன்.

எனக்கு அவன் ஒன்றவிட்ட மாமாவின் மகன், மச்சான் முறை.

மாமா எங்கடை ஊரிலை துணிவாகவும் நேர்மையாகவும் வாழுற மனுசன். ஒரு தடவை ஊரிலை உயர்ந்த ஆட்கள் என்று சொல்லப்படுகின்றவர்கள் வாழ்கின்ற ஒரு ஒழுங்கைக்கால வரேக்கை ஒரு நாய் அவரைப் பார்த்து பெரிசாய்க் குரைத்தபடி கடிக்க வந்திருக்கு. அவர் வேலியில் இருந்த ஒரு பூவரசம் தடியை முறித்து கையிலை வச்சுக் கொண்டு, நாயை பார்த்து 'ஒக்காமல் மாறு' என சத்தம் வச்சிருக்கிறார்.

இது வீட்டுக்காரன்ர காதிலை விழுந்திருக்கு. வெளிய வந்த அவன் மாமாவைப் பார்த்து சாதியைச் சொல்லி 'நீயொரு எளிய நாய், என்ரை நாயைப் பார்த்து தூசணம் கொட்டுகிறாய்' எண்டு சத்தம் வைக்க, மாமா 'நாயை என்ன..? இப்ப உன்னையே சொல்லுறன், ஓக்காமல் மாறு' எண்டு சொல்ல, அது கைகலப்பாய் மாறத் தொடங்க, அயலட்டையில இருக்கின்ற நல்ல மனிதர்கள் சிலர் வந்துதான் இரண்டு பேரையும் விலத்தி விட்டார்கள்.

ஒரே ஊரிலை இருக்கிற நாங்கள் ஒரு நாயாலை சண்டை பிடிக்கப்படாது' எண்டு சொன்ன அந்த நல்லவர்கள், வீட்டுக்காரனைப் பார்த்து நீ கடிக்கிற நாயை வீட்டுக்குள்ள கட்டி வைச்சிருக்க வேணும். ஒழுங்கை எல்லோருக்கும் பொதுதானே' எண்டு சொல்லி இருவரையும் சமாதானப்படுத்தி அனுப்பினார்கள்.

அப்படிப்பட்ட ஒரு மாமாவின்ரை மகன் கண்டம் விட்டுக் கண்டம் வந்த பிறகும் இப்படி தாழ்வுச் சிக்கலிலை இருந்து விடுபடாமல் இருக்கிறதை நினைக்க எனக்குக் கோபமும் எரிச்சலும் வந்தது. தேவையில்லாமல் இவனட்டை வந்து ஒரு பொன்னான மாலையை வீணடிச்சுக் கொண்டிருக்கிறன் எண்ட எண்ணம்தான் வந்தது.

சகாயநாதன் பிறகு ஓரளவு சமாதானமாகி, 'உவங்கள் எல்லாம் வெள்ளையும் சொள்ளையுமாயத்தான் கதைப்பாங்கள், ஆனா மனசுக்குள்ளை அந்தச் சாதித் திமிர் இருக்கும். வெளிநாட்டுக்கு வந்து நாங்கள் கொஞ்சம் மாற வெளிக்கிட்டாலும் இது இரத்தத்தோடை கலந்தல்லோ... எப்படி மாறும்? எங்களை இளக்கமாய்ப் பார்க்கும் மனநிலை இப்பவும் இருக்கும்' எண்டான்.

குரலிலை ஒரு விரக்தி தெரிஞ்சுது.

'எல்லோரையும் நீ அப்படிச் சொல்லாதே. சிலபேற்ரை மனசுக்குள்ளை இருக்கிற திமிரை நாங்கள் ஒண்டும் செய்யேலாது. அவங்கள் இஞ்சை நல்லாய்த்தானே பழகுகிறாங்கள். ஊரக்காரங்கள் மாதிரி தீண்டாமைப் போக்கு அவங்களிட்டை இங்க இல்ல. ஒண்டாய் சாப்பிடும்போது அவங்கள் எங்களுக்கு வேறை பீங்கான் தாறதில்லை.' நான் விளங்கிக் கொண்ட உண்மையை அவனுக்குச் சொன்னன்.

'அவங்கள் மாறினாலும் உன்னைப் போல ஆட்கள் மாற மாட்டீங்கள்' எண்டு இன்னும் கோபத்தோடை சத்தமாய்ச் சொன்னான்.

சரி 'நாளைக்குப் போய் சிவமோகன் ஆட்களிட்டை நீ என்னர சொந்தமில்லை, தெரிந்த பிரண்ட்தான் எண்டு சொல்லி விட்ட பிழையைத் திருத்திறன்' எண்டன்.

இதுக்குப் பிறகுதான் சகாயநாதன் கொஞ்சம் சமாதானம் ஆனான்.

'சரியடாப்பா... ஏதோ சொல்ல வேணும் போல இருந்தது... சொல்லிட்டன். நீ இருந்து சாப்பிட்டிட்டு நாளைக்குப் போ' எண்டான்.

இல்லை... நாளைக்கு எனக்கு அலுவல்கள் இருக்கு, சாப்பிட்டிட்டு கடைசி றெயினிலை போறன் எண்டு சொல்லத்தான் எங்கடை சொந்தக்காரர் இராயப்பு அண்ணன் இறந்த செய்தியைச் சொன்னான்.

'ஐயோ நல்ல மனுசனாச்சே... ஏற்கனவே கஸ்ரப்பட்ட ஆள், அவர் இறந்து போனா அந்த குடும்பம் என்ன பாடுபடப் போகுதோ?' எண்டு நான் கலங்கிப்போய், அவருக்கு 'என்ன நடந்தது' எண்டு கேட்டன்.

ஏன் உனக்கு தெரியாதோ? எண்ட சகாயநாதன், அவரைப் பத்திச் சொல்லத் தொடங்கினான்.

ஓம்... நீ ஊராலை வெளிக்கிட்டு ஒன்றரை வருசத்துக்குப் பிறகு தானே இங்க வந்து சேர்ந்தனி. அதுக்குள்ள நடந்த விசயங்கள் உனக்குத் தெரியாதுதான்.

இராயப்பர், சந்தியிலைதானே காரை வச்சுக்கு கொண்டு நிற்பார். காலையிலை ஆறுமணி தொடக்கம் பின்னேரம் ஆறுமணி வரை நிண்டாலும் நல்லதாய் இரண்டு அயர் கிடைக்கிறது கஸ்ரம். எங்கையாலும் அவசரமாய் ஆஸ்பத்திரிக்குப் போறத்துக்கு வாற ஏழைகளிட்டையும் வயித்துக்குத்தோடை பிள்ளை பெறுவதற்காக வரும் வறுமைத் தாய்மாரிடமும்தான் இவர் பெரும்பாலும் மாட்டுப் படுவார். இப்படி வாற பலரிட்டை உடனடியாய் காசு வாங்க முடியாது.

எவ்வளவு காலம் போனாலும் கால் தேய நடந்து திரிஞ்சுதான் பணத்தை வாங்குவார்.

அப்ப எங்களுக்குள்ளை உண்மையாகவோ பொய்யாகவோ அவரைப் பற்றின ஒரு கதை உலாவினது.

விளாத்தியடிக் குடும்பம் ஒன்று பிள்ளை பெறுவதற்காக இவற்ரை காரைப் பிடித்ததாகவும் பிறந்த பிள்ளை பெரிதாக வளர்ந்த பிறகும் அந்த கார் காசு 15 ரூபாவை அவர்கள் கொடுக்கவில்லை. இவர் வழமைபோல அவையின்ர வீட்டைபோய் காசைத் தரச் சொல்லி கொஞ்சம் கடுமையாய்க் கேட்டிருக்கிறார். அதைப் பார்த்த அந்தப் பிள்ளை, தாயைப் பாரத்து, 'இவர் ஏன் இப்படிப் பேசுகிறார்' எண்டு கேட்டிருக்கு. அதுக்குத் தாய் 'உன்னைப் பெத்துக் கொள்ளுறத்துக்காக ஆஸ்பத்திரிக்குப் போன கார்க் காசை இன்னும் குடுக்கேல்லை. அதுக்குத்தான் மனுசன் பேசுறார்' எண்டு சொல்ல, பிள்ளை, 'நான் பிறக்கிறதுக்கு ஆஸ்பத்திரிக்குப் போறதுக்கு உந்தப் பழங்காரையோ பிடிச்சனீங்கள்? காசுக்கு இப்படி அவசரப்படுத்திற ஆட்களட்டை ஏன் அம்மா காரை பிடிக்கிறத்துக்குப் போறீங்கள்? எண்டுதாம்.

இப்படித்தான் ஒருநாள் கார் பிடிப்பார் இல்லாமல் வீரகேசரி பேப்பரை 32ம் முறை படிச்சுக் கொண்டு இருக்கேக்கை திடீரென்று மூன்று பெடியள் வந்து இவரட்டை 'ஒரு அவசரம் கார்த் திறப்பைத் தாங்கோ' எண்டு கேட்டிருக்கிறாங்கள்.

'தம்பியவை எங்கை போறதெண்டாலும் நான் கூட்டிக்கொண்டு போறன், ஆனா திறப்புத்தர இயலாது' எண்டு இராயப்பு அண்ணர் சொல்ல, 'அண்ணை, இது நாட்டு விடுதலை சம்பந்தப்பட்ட விசயம். உங்களைப் போல மக்களின்ரை உதவியால்தான் நாடு கிடைக்கப் போகுது' எண்டு சொல்லிக் கொண்டே அவற்றை பொக்கெற்றுக்கை இருந்த திறப்பை எடுத்துக்கொண்டு அந்த சேமசெற் காரை புரட்சிக்குக் கொண்டு போனார்கள்.

பதறிப்போய் நிண்ட இராயப்பு அண்ணருக்கு எந்த நாட்டு விடுதலை எண்டும் விளங்கேல்லை. தன்ரை பழைய சோமசெற்றாலை எந்தளவுக்குப் புரட்சி செய்ய முடியும் எண்டும் விளங்கேல்லை.

இரவு பத்துமணி மட்டும் சந்தியிலை நிண்டு பார்த்தார். காரைக் கொண்டு போனவங்கள் வரவில்லை. வீட்டுக்குப் போன அவர், நித்திரை வராமல் விடிய விடிய நட்சத்திரங்களை எண்ணிக் கொண்டிருந்தார்.

அதிகாலையிலை தொழிலாலை வந்த இவரின்ரை பெறாமகன் தான் மாசியப்பிட்டி சந்தியடியிலை உங்கடை கார் அநாதையாக நிக்குதெண்டு சொன்னான்.

இவர் விழுந்தடிச்சு ஓடிப்போய் காரை வீட்டுக்குக் கொண்டு வந்தார். நல்லாய் கழுவி ஊதுபத்தி கொழுத்தி ஒன்றும் நடவாத மாதிரி திரும்பவும் சந்தியில் போய் நிண்டார்.

காரைக் கொண்டு போன பெடியள், எதுக்குக் காரை பயன்படுத்தினார்கள் என்பது இராயப்பருக்குத் தெரியாது. வாடிக்கையாளருக்காகக் காத்து நிண்ட இவரைத் தேடி பொலீஸ்காரர் தான் வந்தார்கள். ஏன் எதற்கு என்ற விளக்கங்களைச் சொல்லாமல் விலங்கை மாட்டி இழுத்துக் கொண்டு போனாங்கள்.

நாட்டில் விடுதலை போராட்டங்கள் ஆரம்பித்த காலத்திலை அதுக்கு அத்திவாரம் போட்டது உள்ளூர் வங்கி கொள்ளைகள் தான். அப்படியொரு வங்கி கொள்ளைக்கு அந்தக் காரை பயன்படுத்தி போட்டு தங்கடை அலுவல் முடிய எம்பிட்ட இடத்தில் அதை விட்டிட்டுப் போய்ட்டாங்கள்.

அந்த வங்கிக் கொள்ளைக்கும் இராயப்புவுக்கும் ஒரு தொடர்பும் இல்லை எண்டு பொலீசுக்குத் தெரிந்தாலும் அவரை அடியடியெண்டு அடிச்சு, கொழும்பு நாலாவது மாடிக்கும் அனுப்பி மேலும் வதைத்தார்கள்.

அவர் அரைகுறை உயிராய்த்தான் திரும்பி வந்தார். காரில இருந்த கைரேகையை பொலிஸ் எடுக்காமல் இருக்கத்தான் திட்டமிட்டு இவர் காரைக் கழுவியதாகவும், அந்த பெடியங்களை இவருக்கு நல்லாத் தெரியும் எண்டும், அவங்கள் யார் எனக் கேட்டும்தான் தன்னைத் துவைத்தெடுத்தார்கள் எண்டும் அவர் சொன்னார்.

இராயப்பு கடும் வருத்தமாகி ஆஸ்பத்திரியிலை படுத்திருக்கேக்கை ‘கார் கேட்டு வந்த பெடியளை உண்மையிலேயே உங்களுக்குத் தெரியாதோ எண்டு அவற்றை மனுசி கேட்டிருக்கிறா.

வந்தவங்களிலை இரண்டு பேரை எனக்குத் தெரியும். ஆனா என்ரை உயிர் போனாலும் அவங்களின்ரை தகப்பன்மார் பற்றியோ அவங்கள் இருக்கிற இடம் பற்றியோ எதுவும் சொல்லுறதில்லை எண்ட முடிவோட இருந்தன் எண்டிருக்கிறார்.

கடுப்பான மனிசி, ‘நீங்கள் அவங்கள் யார் எண்டு சொல்லியிருந்தால் இப்படி அடிச்சிருப்பாங்களோ?’ எண்டு சொல்ல, அடிமைப்பட்டு இருக்கிற இனம் விடுதலையாகிறதுக்கு இது என்ர சின்ன பங்களிப்பாக இருக்கட்டுமே எண்டாராம்.

விடுதலையாகி இரண்டு மாதத்திலை இராயப்பு நிமோனியா வந்து இறந்து போனார். இதை சொல்லும்போது சகாயநாதன் ஓரளவுக்கு கலங்கியிருந்தான். எங்கள் இரண்டு பேருக்கும் அவர் நெருங்கிய உறவினர்தான். ஆனா நான் கலக்கம் நீங்கித் தெளிவாக இருந்தேன்.

பின்னொரு நாளில் நான் அழுதன், இராயப்பு அண்ணையை நினைச்சு மட்டுமில்ல, எங்கள் உறவினரான அரிச்சிக்கடை அல்பிரட் அண்ணையின் மகள் மல்லிகாவையும் நினைச்சு. நிறைமாசக் கர்ப்பிணியான மல்லிகா நந்திக்கடலுக்குப் பக்கத்திலை சாப்பாடு இல்லாமல் போசாக்குக் குறைவால் இறந்து போனாளாம். அப்போது யாழ்பாணத்தில் அல்பிரட் அண்ணையின் அரிசிக் கடையில் குறைஞ்சது 25 மூட்டை அரிசியாவது இருந்திருக்கும்.

முள்ளிவாய்க்கால் பேரவலம் முடிந்த அந்த மே மாதத்தில் 20ம் திகதி நான் வாழும் பட்டணத்து பாராளுமன்றத்துக்கு அருகே பெருமளவில் தமிழர் கூடி காற்றாகிப் போன இலட்சக்கணக்கான தங்கள் உடன் பிறப்புகளுக்கு அஞ்சலி செய்து கொண்டிருந்தனர். நானும் என் நண்பர்கள் சிலரும் அங்க போயிருந்தோம்.

இவ்வளவு பெருந்தொகையில் தமிழர் கூடி பெருமூச்சுகள் விட்டும் பெரும் குரல் எழுப்பி அழுததையும் என் வாழ்வில் நான் மறக்க முடியாதது.

அது கடும் துயர் கவிந்த பெரும் இரவு. இந்த நாட்டு பொலிசார் குதிரைகளிலும் மோட்டார் சைக்கிளிலும் சுற்றிவர நின்றார்கள். மக்களோடு மக்களாகக் கலந்தும் நின்றார்கள்.

எங்கோ தொலைதூரத்தில் இருந்து தங்கள் நாட்டில் அடைக்கலம் தேடி வாழ வந்த மக்களின் துயரில் பங்குபற்றுவதைப் போல எங்கும் அவர்கள் அமைதியாக நின்று கொண்டிருந்தார்கள்.

மனம் கனத்தது. நான் என் நண்பர்களை விட்டு நழுவிப்போய் ஒரு மரத்தின் கீழ் நின்றேன்.

என் உறவுகளை நினைத்தேன். நான் பிறந்து வாழ்ந்த என் ஊரை நினைத்தேன். அல்பிரட் அண்ணனின் மகள் மல்லிகாவையும் கார்கார இராயப்புவையும் நினைத்து பெரும் குரல் எடுத்து அழுதேன். என் அழுகை அங்கு புதினமாகப் பார்க்கப்படவில்லை. எல்லோரும் அழுது கொண்டிருந்தார்கள்.

என் பின்புறமாகத் தோளில் ஒரு கை விழுந்தது. மறுகை என்னை ஆதரவோடு அணைத்தது, திரும்பினேன். ஒரு கறுப்பினப் பெண் பொலீஸ் அதிகாரி கருணை ததும்பும் விழிகளுடன் என் னைப் பார்த்தாள்.



selvam.a@thaiveedu.com





# சர்வதேச உறவு

**- அகரன்**

பிரீத்தியின் பெயரில் தீ இருப்பது போல அவள் இளமை செழித்திருந்த நாட்களில் தீ பிடித்திருக்கிறது. கால் நூற்றாண்டை நெருங்கிவிட்ட அவளின் உடலெங்கும் நெருப்பு பூத்திருப்பது போல் இருந்தது. என்ன முடிவெடுப்பது என்பது அவளுக்கு தெரியவில்லை.

இருவீட்டாரும் குணராசா மாமா தலைமையில் இன்று மாலை தீர்ப்பாயத்தில் தன் வீட்டில் ஒன்றுகூடும்போது அவள் ஹரிசாந் தோடு வாழுகிறேன்! அல்லது இல்லை! இந்த இரண்டு முடிவில் ஒன்றை அவள் சொல்லியே ஆகவேண்டும்.

அவள் வாழ்க்கை இன்று மாலை தான் தீர்மானமாகப்போகிறது. நாசமாய்ப்போன தமிழ்ப்பெடியனைக் காதலித்து பிரீத்தி பட்ட வேதனைகள் ஆறோ ஏழோ ஜென்மம் நரகத்தில் படும் வேத னையை ஒத்திருந்தது. இத்தனையும் நடந்த பிறகும் அந்த லூசன் ஹரிசாந்

'பிரீத்தி இல்லாவிட்டால் செத்திடுவன்.'

என்று ஏதோ இலங்கையில் பிறந்து வளர்ந்தவன் போல் எல்லோரிடமும் சொல்லித்திரிந்து அளிச்சாட்டியம் பண்ணுகிறான்.

உந்த விசரனோட நான் எப்படி என்ர வாழ்நாளெல்லாம் வாழமுடியும்? எங்க வேலைக்குப் போனாலும் ஆறுமணிக்கு வந்திடவேண்டும். இரவில் எங்கும் செல்லக்கூடாதாம்! மலாத் (விசர், நோய்) ஓ...ல...லா... விசரன்... விசரன்! இவன் பிரான்சில் பிறந்தவன் போலயா இருக்கிறான்? ஆளும் அவற்ற கண்டிசன்களும்... மடையன். என்ர சம்பளத்தில பாதி சம்பாதிச்சுக்கொண்டு அவற்ற கதையள்... என்று, பிரெஞ்சில் கோபக்கனல்களை கக்கிக்கொண்டிருந்தது அவளது பலங்கொண்ட மூளை.

பிரீத்தி தனது பல்கலைக்கழக ஐந்தாண்டு படிப்பில் மூன்று ஆண்டுகளைப் பரிசிலும் மீதி இரண்டு ஆண்டுகளை ஐரோப்பிய அமெரிக்கக் கண்டத்தில் உள்ள முக்கியமான பல்கலைக்கழகங்களில் படித்தாள். படித்த படிப்பின் பெயர் 'சர்வதேச உறவு'. அதன் பெயருக்கேற்றபடி பிரெஞ்சு, ஆங்கிலம், ஸ்பானிஸ் மொழிகள் எல்லாம் அத்துப்படி. தமிழை விளங்கிக்கொள்ளவும், தாய், தந்தையோடு பேசவும் தெரிந்திருந்தது. எழுத வராது. சர்வதேச உறவில் தமிழ் இல்லாததால் பிரீத்திக்கு அது ஒரு சங்கடமான விசயம் இல்லை. பல மொழிகளை பேசும் நண்பர்களுடன் அவள் மாறி மாறி அலைபேசும்போது அவளது அப்பா நவரத்தினராசாவிற்கும் அம்மா சிவபதம்மாளுக்கும் பெரிய புளுகு தொற்றிக்கொள்ளும். அவர்களுக்கு தமிழைத் தவிர எந்த மொழியும் தெரியாது. முப்பது வருசமாய் பாரிசில் வசித்தாலும் அவர்கள் பிரெஞ்சு மொழியைக் கிஞ்சித்தும் மதிக்கவில்லை. ஆனால் பிரெஞ்சு தெரியும் என்பது போல் பாவனையாலும், புன்னகையாலும் கண்டபடி தலையாட்டியும் சமாளித்துக் கொள்வார்கள்.

பிரீத்தியின் அப்பா கடந்த முப்பத்திரெண்டு வருடங்களாக ஓர் பிரெஞ்சுக் குசினியறையில் வேலை செய்கிறார். அவரின் உழைப்பை மதிக்கும்பொருட்டு அவரின் முதலாளி பிரோன்சுவா தமிழை அவருடன் உரையாடுமளவு கற்றுவிட்டார். அதனால் நவரத்தினராசாவுக்கு வசதியாகப் போய்விட்டது.

தாய் சிவப்பதம்மாள் இருபது வருடமாக அதிகாலையில் ஐந்து மணி நேரம் ஒரு தங்குமிட விடுதியில் துப்பரவுப் பணியை ஆற்றுகிறார்.

பிரீத்தி என்ன படிக்கிறாள் என்பதைப்பற்றி அவர்கள் ஆர்வப்படவில்லை. ஆனால் அவள் பெரிய படிப்புப் படிக்கிறாள் என்பது மட்டும் அவர்களுக்குத் தெரியும்.

அவள் வேறு நாடுகளுக்குத் தனியே சென்று படித்து வரும்போது அவர்கள் அலைபேசிகள் பெருமைகளைக் கடத்தி நிறைந்து கிடந்தன. பல்கலைக்கழகம் படித்து அவள் கையில் பட்டம் வந்து சேர முதல் அவளுக்கு ஐரோப்பிய பெரு நிறுவனம் ஒன்றில் வேலை கிடைத்தது. கிடைத்த வேலை ஒன்றும் சாதாரணமானது இல்லை. ஒரு பெரு நிறுவனம் நிறையக் குட்டி நிறுவனங்களை வேறு வேறு பெயர்களில் ஐரோப்பா எங்கும் வைத்திருக்கிறது. அந்தக் குட்டி நிறுவனங்கள் ஒவ்வொன்றுக்குமிடையே நல்லுறவைச் சமநிலையில் பேணும் அதிகாரிகளில் ஒருத்தி.

இந்தச் சின்ன வயதில் நிறைந்த சம்பளத்தைத் தரும் அந்தஸ்துள்ள வேலையை திறமையற்ற ஒருத்திக்கு வழங்குவதற்கு அந்த நிறுவனம் ஒன்றும் மக்கு நிறுவனமல்ல. பிரீத்தி நாகரீக உடையில் நடந்துபோனால் அவளை எந்தக் கொம்பனும் களவாகவேனும் திரும்பிப் பார்ப்பான். நடையின் வேகமும், முகத்தில் தெரியும் வசந்த காலமும், பேசும்போதே குழி விழுந்த சிரிப்பும், அதிகாரங்களை குழைத்து எறியும் அன்புப்பீரங்கி போன்ற மொழியும் அவளைப் பெரியவரிலிருந்து சிறு குழந்தைகள் வரை பார்த்துக்கொண்டே இருக்க ஆசைப்படுவர். அவளின் அசைவுகளில் ஐரோப்பிய நகரங்கள் சேர்ந்து செயற்பட்டன.

16ம் லூயி மன்னனை 1793ல் புரட்சிப்படை கழுத்தை வெட்டிக் கொள்வதற்கு முதல், இந்தியாவில் பாண்டிச்சேரியில் இருந்து 17 மாதங்கள் பயணம் செய்து திப்புசுல்தானின் தூதுக்குழு வெர்சாய் (பிரான்ஸ்) வந்து மன்னனை சந்தித்தார்களாம். அத்தூதுக்குழுமூலம் பிரெஞ்சு அரசனின் உதவி திப்புசுல்தானிற்கு கிடைத்ததாம். அத்தூதுக்குழுவில் மொழிபெயர்ப்பாளர்கள், தமக்கான சமையாளர்களென ஒரு பட்டாளமே வந்தனராம். அப்படி வந்தவர்கள் சிலர் பிரான்சிலேயே தங்கிவிட்டனராம் அப்படி தங்கிவிட்ட தலைமுறையின் 200 ஆண்டுகளின் தொடர்ச்சிபோல் இருப்பாள் பிரீத்தீ. தெரியாதவர்கள் அவளை இலங்கை, இந்தியப் பெண்ணென்று கிஞ்சித்தும் எண்ணமாட்டார்கள்.

இப்படிப்பட்டவள் ஒரு தமிழ்ப்பெடியனைக் காதலிக்கப்போய் வந்த இளவுகள் சொல்லி மாளாதவை. கடந்த ஆறு மாதமாக ஏழரைச்சனிபோல் அவளை ஆட்டிவைக்கிறது.

பிரீத்தியின் மச்சாளுக்கு திருமணம் நடந்தது. அந்தத் திருமண வீட்டில் எடுப்பாக இருந்த பெடியன் ஹரிசாந்த் முருங்கைக்காய் போல் நீண்டும், திரள வேண்டிய இடத்தில் கைகால்கள் திரண்டும் அடிமட்டம் வைத்து வரைந்த தாடியேடும், அவன் நடந்து திரிந்தபோது பிரீத்தி பார்த்துவிட்டாள். அவளாகத்தான் அவனிடம் சென்று, 'சலூ! உன் உடல் சரியான அழகோடு உள்ளது.' என்றுவிட்டு அவள் போய் விட்டாள். அப்படியே காருக்குள் சென்று தன்னைப் பார்த்து பெருமை கொண்டு வெக்கங்களை இறக்கி வைத்துவிட்டு அவளைத் தேட ஆரம்பித்தான். அவள் கிடைக்கவில்லை. பின்பு மாலை எல்லோரும் மொய் வைத்து புகைப்படம் எடுப்பதற்கு நிவாரணக்கடையில் நிற்பது போல் வரிசையில் நிற்கும் கலாச்சார விழுமியத்தின் உச்சத்தில் இருந்தபோது, பிரீத்தி மட்டும் ஓரமாக அமர்ந்திருந்தாள். அவளிடம் நெருங்கியபோது அவளே, 'நான் பிரீத்தி, என் இலக்கத்தைக் குறித்துக்கொள். பிறகு எனக்கு அழை' என்றாள்.

அவனால் தன் உணர்வுகளை, அங்கங்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியவில்லை.

தமிழ்ப்பெண் இவ்வளவு இயல்பாக, இருப்பாள் என்பதை அவனால் நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. அவனும் பாரிசில் பிறந்த தன் போன்ற பல தமிழ்ப்பிள்ளைகள் இத்தனை இயல்பாக இருப்பவர்களைப் பார்க்கவில்லை. அவர்களிடம் ஒரு தயக்கம் எப்போதும் இருக்கும். 'நான் கட்டினால் இவளைத்தான் கட்டுவேன்' என்று அந்த நிமிடமே முடிவெடுத்துவிட்டான்.

மறுநாளே அவர்கள் ஒரு பிரபல்யமான உணவு விடுதியில் சந்தித்தார்கள். ஏழு ஸ்வரங்களில் முதலாவதிலிருந்து ஏழாவது ஸ்வரத்தைப் பாடுவதுபோல் அவர்கள் காதல் முன்னேறியது. எல்லாவற்றையும் வஞ்சகமில்லாமல் பரிமாறிக்கொண்டார்கள். அதில் முக்கியமானது கடந்த கால எக்ஸ் காதல்கள் பற்றியது.

மனம் திறந்து காந்தியின் சத்தியசோதனைபோல் ஒழிவற்று எக்ஸ் கதைகளைப் பரிமாறினர். ஹரிசாந் இதில் வறுமையானவன். பிரான்சில் வைன் தயாரிப்பில் உலக இடம் பிடித்த பொர்தோவைச் சேர்ந்த பிரெஞ்சுப் பெண்ணுடன் இரண்டு வருட இணைப்பு அவனுக்கு இருந்தது. உதட்டோடு அவள் தன் உடலை நிறுத்திக் கொண்டாள். ஹரிசாந்த் பலமுறை அழைத்தும் விரால் மீன்போல நழுவி விடுவாள். ஒருநாள் 'நீ பணத்துக்காகவா என்னுடன் இருக்கிறாய்? என்று அவன் கேட்டதிலிருந்து அவள் உறவு போயிற்று.

இப்போது தமிழ்ப்பெண் கிடைத்தது ஹரிசாந்திற்கு கடற்கரை மணலில் இரத்தினக்கல் கிடைத்தது போலானது.

இருவரும் கடந்த காலங்களின் வெளிப்படையில் இருந்து தங்கள் நம்பிக்கைகளை உறுதிப்படுத்த பாரிசில் உள்ள விலை உயர்ந்த விடுதியில் வாழ்ந்து பார்க்க முடிவெடுத்தனர். அந்த இரவை இருவரும் கண்டுபிடிக்கப்படாத தீவை கண்டுபிடிக்கும் ஆர்வத்தில்

முடித்துக்கொண்டிருந்தபோது பிரீத்தி தூக்கத்தை நெருங்கியிருந் தாள். ஹரிசாந்த் வெற்றிக்களிப்பில் இருந்தான்.

அப்போது பிரீத்தியின் கைபேசியில் ஓர் செய்தி வந்திருந்தது. அவளது நிறுவனத்தின் அதிகாரி 'ஐந்து நாட்களுக்கு கோஸ்தா ரிக்காவில் நடைபெறும் நிறுவன அதிகாரிகள் கூட்டத்தில் பங்கெ டுக்கிறாயா?' என்று அந்தச் செய்தி இருந்தது.

உடனே ஹரிசாந்த் அந்தக் கைபேசியை எடுத்து பதில் எழுதி னான். 'தனிப்பட்ட காரணத்தால் என்னால் பங்கு பெற முடியாது.'

தூக்கத்தில் இருந்து அருண்ட பிரீத்தி தன் அத்தியாவசிய ஆடை-களை அணிந்துகொண்டு கைப்பேசியைத் தேடினாள். அது ஹரி சாந்தின் பக்கத்தில் கிடந்தது. அவசரமாகத் தன் செய்திப்பெட் டியை ஆராய்ந்தாள். தன் நிறுவன அதிகாரியிடமிருந்து வந்த செய்திக்கு ஹரிசாந்த் பதில் போட்டிருப்பது தெரிந்தது. அவளின் கண்கள் சிவந்தன.

'ஏ... ஹரிசாந்த்..!' என்று கத்தினாள்.

திடீரென விழித்தவன் பாண்டிய மன்னன் முன் உள்ளாடையுடன் நின்ற கண்ணகியைக் கண்டான்.

'டேய்! தமிழ் பண்டி! உன்ர வேலையை காட்டிற்றாய் எனக்கு வந்த செய்திக்கு நீ எப்படி பதில் போடலாம்?'

'பிரீத்தி! நீ என்னோடு இருப்பதென்றால் இனி இரவு தங்கும் இடங்களுக்கு செல்ல முடியாது. வீட்டைத் தவிர எங்கும் தங்க முடியாது'

'அதை நீ எப்படி எனக்கு சொல்லலாம்? என்னை வளர்த்த அம்மா, அப்பாவே எனக்கு வைக்காத சட்டத்தை எனக்கு சொல்ல நீ யார்?'

'நான் உன் காதலன்! இன்றிலிருந்து கணவன்!'

'இத்தோடு நிறுத்து! நீ ஒரு சரியான... மிகச்சரியான தமிழ் பண்டி!'

'நீ அப்படிச் சொன்னால் எனக்கு கோபம் வரும்'

'கோவம் வந்தா என்னடா செய்வாய்?'

அவனது நெஞ்சை தள்ளினாள். ஒரு வெறிகொண்ட முளாவின் தாக்குதலால் அன்று இரவை இந்திரலோகத்தில் கழித்தவர் அதே இடத்தில் மல்லாக்காய் விழுந்து கிடந்தார்.

அவள் தன் உடைகளை உறுதிப்படுத்தி தன் பையை எடுத்துக் கொண்டு கிளம்பினாள்.

அவள் பின்னால் சென்ற ஹரிசாந் 'கோவப்படாத நாம் பேசு வோம்' என்றவாறு அவளுக்கு பின் சென்றான். 'நீ எனக்கு பின் னால் வராத' என்று அவள் கத்தியபடி வெளியேறிய போது அந்த விடியும் வேளையில் தூக்கக்கலக்கத்தில் இருந்த விடுதி வரவேற் பாளன் அந்த அழகிய நாளை தனக்குப் புரியாத மொழியின் கூக் குரலோடுதான் முழு விழிப்படைந்தான்.

அவர்கள் விடுதியின் வாசலில் பிரஸ்தாபப்பட்டபடி இருந்தபோது பிரீத்தியின் தாயார் அந்த விடுதியை சுத்தம் செய்யும் பணிக்கு வந்து அதன் வாசலை அடைந்தார்.

அந்த அதிகாலையில் ஒரு தாய்க்கு அரிதாகக் கிடைக்கும் காட்சி அங்கு காத்திருந்தது.

தன் மகள் ஒரு இளைஞனுடன் பிரஸ்தாபப்பட்டு கொண்டிருப்ப தைப் பார்த்து பதறிப் போனாள்.

தனது தாயார் சுத்தம் செய்யும் விடுதியில் தான் ஒருவனுடன் இர வைக் கழித்துவிட்ட ஏக்கத்தில், அது ஒரு தமிழ் பண்டி என்ற வெறுப்பிலும் மிரட்சியுடன் மூவரும் நின்றனர்.

தாயார் மகளின் கையைப் பிடித்தவாறு 'என்ன பிள்ள இங்க நிக் கிறாய்' என்றதும் முதல் முறையாக தாயின் தோளில் சாய்ந்து பிரீத்தீ அழுதாள். பின்பு அங்கு நடந்ததெல்லாம் அந்த விடுதி எக்காலத்திலும் பார்க்காத காட்சி. ஒரு சிறிய மரணச்சடங்கு நடந் ததுபோல அந்த இடம் மாறிற்று.

'பிள்ளை இதை உன்ர அப்பா அறிந்தால் உடைந்துபோவார். உனக்கு நாங்கள் என்ன குறைவைத்தம்?' என்று கண்களை துடைத்தவாறு இருந்தாள்.

அன்றைய வேலையை நிறுத்திவிட்டு மகளை அழைத்தவாறு வீடு ஏகினாள். 'ஒரு தமிழ்ப்பெடியனைத் தானே என்ர பிள்ள காதலிக் குது' என்ற சமாதானத்தை தனக்குத்தானே உள்ளுக்குள் சொல் லிக்கொண்டாள்.

இரு வீட்டாருக்கும் செய்தி சென்று சேர்ந்தது. இரு வீட்டாரும் முத லில் பதட்டமடைந்தனர்.

'அவை யார் ஆக்களோ தெரியாது!' என்பதற்காக.

பிரீத்தியின் கணிப்பின் உச்சம் அங்கு வெளிப்பட்டது. பன்றிகள் குடும்பத்தை விட மோசமான நிலமை அங்கு உச்சம்பெற்று பின்பு ஓய்ந்தது.

ஹரிசாந் தன் பெற்றோரிடம் பெண் கேட்டுச் செல்லுமாறு அரி யண்டப்படுத்தினான். திருமணம் ஆகி இருந்த தன் தமக்கையிடம் சென்று 'அவள் இல்லாவிட்டால் நான் செத்துடுவேன்!' என்றான். அருவருப்பாக அவனை பார்த்துவிட்டு 'போடா நான் அம்மா அப் பாவிடம் பேசுகிறேன்' என்றாள்.

பிரீத்தியின் அம்மா நாசூக்காக தன் கணவரிடம் காதல் பற்றி பேசினார். ஆனால் பிரீத்தி 'அவன் வேண்டாம்!' என்றாள். ஹரி-சாந் முகப்புத்தகம், இன்ஸ்ரக்கிறாம் என்று பல வழிகளில் அவளி டம் தொடர்பு கொண்டாலும் அவள் பூச்சிக்கு கொடுக்கும் மரியா தையைகூட கொடுக்கவில்லை. அதன்பிறகு அவளின் வீட்டுக்க ரையோரம் காரில் மம்மல் பொழுதில் வந்து இரவிரவாக காதல் பாடல்களை போட்டுவிட்டு பன்றிக்காவலுக்கு இருப்பவன்போல பிரீத்திக்காவலில் ஈடுபட்டு செய்தியை பரவலாக்கினான்.

அவனிடம் பிரீத்தி பத்தினித்தெய்வம்போல் குடிகொண்டுவிட்டாள். அதற்காக தனக்குமட்டும்தான் தெய்வம் என்றால் எந்தத்தெய்வம் ஏற்றுக்கொள்ளும்? அதிலும் சர்வதேச உறவில் அருள்பாலித்து அனுபவம்பெற்ற தெய்வங்களால் தேசியச்சட்டங்களை கிஞ்சித்தும் மதிக்கமுடியாது என்பது தமிழ்பண்டிக்கு தெரியாமல்போனதே வியப்பு.

ஹரிசாந்தின் மோசமான நிலைக்கு ஒரு முடிவுகட்டி இருவரையும் பேசிப்பிரித்து விடுவதென இரு வீட்டுப் பெரியவர்களும் பேசி முடிவு எடுத்தனர்.

இன்று மாலை அவர்கள் பிரீத்தியின் வீட்டில் ஒன்று கூடுகின்றனர். இறுதி முடிவை சம்மந்தப்பட்ட இருவரும் எடுக்க வேண்டும் என்ப தில் இரண்டு குடும்ப பெரியோர்கள் உறுதியோடு இருந்தனர். இரு குடும்பபெரியவர்களுக்கும் மறைமுகமாக இந்த பேச்சு வார்த்தை மூலம் இருவரையும் பிரித்துவிடுவதே அவர்கள் முஸ் தீபு. ஹரிசாந் தவிர்ந்த எல்லோரும் பேசாமலே ஒன்றுபட்டிருந்த னர். தனக்கு எதிராக இரு குடும்பமும் பேச்சுவார்த்தை குண்டை வீசுமென்று அவன் எதிர்பார்க்கவில்லை. ஆனால் சம்மேளனத்தை

பொறுத்த இடத்தில் புரட்டிப்போடும் பிரீத்தியின் சர்வதேச சந்தை வெடிகுண்டை அவன் வைத்திருந்தான்.

மரியாதைக்குரிய குணராசா மாமா ஊரில் விதானையாராக இருந் தவர். அகதியாக பாரிசுக்கு வந்ததும் அப்படியான வேலைகளை பார்த்து காலத்தை கடவானுக்குள் நிறுத்தி வைத்திருந்தார்.

அரசாங்கத்திடமிருந்து இப்படி பணம் பெறுவது? வேலைக்கு போகாமல் எப்படி வாழ்வது? என்பதை ஜெகோவாவின் சாட்சிகள் போல ஊழியம் செய்பவர். உடல் உழைப்பில்லாமல் செழித்து நிற்கும் உடலுக்கு தேசிய கொடி போல் நிற்கும் கறுப்புக்குண்டு சிகள் போன்ற மீசை. பலகையடிக்கப்பட்ட வயலில் வரம்பில் மட் டும் இருக்கும் பச்சை புற்கள் போல் பிரடியோரம்மட்டும் மூன்றாம் பிறையை நினைவூட்டும் வெண்முடி அவரின் முதிர்ந்த சமூகப் பணிக்கு அடையாளம் காட்டி நிற்கும். மீசை மட்டும் வெட்டி எடுத்த இருட்டுப்போல் இருப்பதற்கு இயற்கை காரணமல்ல. கறுப்பு மீசை அவரின் தன்மானமும் ஆண்மையும் அச்சடித்த குறி யீடுகள் என்பதற்கு அடிக்கடி அவர் மீசையை தொட்டுப்பார்ப்ப தில் இருந்து தெரிந்துகொள்ளலாம்.

கருப்பு வெள்ளை கார்கள் பிரீத்தியின் படலையை நிறைத்தது. அந்த வீதியில் தமிழர்கள் அதிகம் குடி இருக்கிறார்கள் என்ப தற்கு ஆங்காங்கே வீட்டுக்கொடிகளில் தொங்கும் கைலியும், சேலைகளும், பாவாடைகளும் உறுதிப்படுத்தின. அந்த வீதியில் திடீரென ஒருவரை இறக்கிவிட்டால் அவரால் இது பிரான்ஸ் என ஒருபோதும் கண்டுபிடிக்க முடியாது.

குணராசா மாமாவிற்கு பின்னால் ஹரிசாந்தின் அப்பா, அம்மா தொடர்ந்து அக்கா, அத்தான் இறுதியாக வாடிய முகத்தில் முளைத்திருந்த இளம் தாடியுடன் ஹரிசாந் என அவர்கள் வீட்டுக் குள் நுழைந்து கொண்டிருந்த நேரம்... அவள் வீட்டின் மாடியில் இருந்த சன்னல் ஊடாக பார்த்துக்கொண்டிருந்தாள். அவளுக்கு தன்மீதே வெறுப்பு ஏற்பட்டது. அவனைப் பார்க்கவே அவள் மூளை கொதித்தது. தான் எத்தனை நாடுகள் சென்று எத்தனை மனிதர்களை பார்த்தேன்? இத்தனை உயர்ந்த மனிதர்களுடன் சரிக்கு சமமாக இருந்தேன்? இறுதியில் இந்த கழிசடை தமிழ் பண்டியுடன் சமனாக இருக்கும் நிலை வந்துவிட்டதே! என்று புலம் பினாள். சன்னலால் குதித்து ஓடி விடலாமா? என்று யோசித்தாள். பின்பு அவன் தானே மோசமான செயலை செய்தவன். இவனிடம் இருந்து விடுதலை பெறும் மாலையாக இதை மாற்ற வேண்டும் என்று உறுதி கூட்டினாள். 'இவன் எனக்கு வேண்டாம்' என்று உறு தியோடு சொல்லவேண்டும் என்று மனதுக்குள் சொல்லிப் பார்த் தாள். பின்பு படிகளில் இறங்கிச் சென்று எல்லோருக்கும் 'வணக் கம்' சொல்லி அமர்ந்தாள். அவனை பார்க்கவில்லை. அவன் அவ ளையே பார்த்தபடி இருந்தான்.

குணராசா மாமா மீசையை தடவியபடி ஆரம்பித்தார்.

'பிள்ளையள் வடிவாக்கேளுங்க... உங்களுக்குள்ள நடந்த பிரச் சினை எல்லோருக்கும் தெரியும். பேசி ஒரு முடிவுக்கு கொண்டு வரவேண்டும். வாழ்க்கை காலகாலம் வாழுற விசயம். அதை சண் டையிலேயே செலவழிக்க முடியாது. அது வாழ்க்கை இல்லை. நீங்கள் இருவரும் இன்று ஓர் முடிவுக்கு வரவேண்டும்.

தம்பி, பிள்ளையை அங்கே போகாதே! இங்க போகாதே! இரவில் வீட்டில் இருக்கவேண்டும்! என்று நீர் சட்டம்போட்டால் எந்தப் பிள்ளை ஏற்றுக்கொள்ளும்?'

குணம் மாமா பேசிய தமிழ் இருவருக்கும் அரைவாசியோடு விளங்காமல் போய்விட்டது. அது ஹரிசாந்தின் கண்ணில் நன்றா கவே தெரிந்தது. அதை உணர்ந்த அவன் அக்கா அவற்றை பிரஞ்சில் சொன்னாள். அப்போது பிரீத்தி முகத்தில் வெளிச்சம் தெரிந்தது. குணத்தாருக்கு அப்போது மவுசு கூடி இருந்தது. சண் டையிட ஆரம்பிக்கும் இவர்கள் எவ்வளவு காலம் ஒன்றாக வாழ முடியும்? என்பதும் வேறு காரணங்களும் இருவரையும் பிரித்து விடுவதில் இறைச்சிப்பொருளாக இருந்தது. அடுத்து ஹரிசாந்தின் அக்கா பேசினார். அவர் பேச்சு மிக எளிமையாகவும் இப்படி சட் டம் போடும் ஹரிசாந்துடன் எப்படி வாழலாம்? என்று அவள் முடித்தாள். சண்டாளி பொறுத்த நேரத்தில் தன் வாழ்க்கையில் அலவாங்கை செருகுகிறாள் என்பதை ஹரிசாந்தின் பார்வை அப் படியே சொன்னது. அவன் அக்கா அவனைப்பார்த்து.. 'நீ உன்ர சட்டத்தை விடு! அல்லது பிரீத்தியை விடு!' என்றாள்.

அவன், 'நீ என்ர அக்கா என்றுதான் நம்புறன். என்னால் சட்டத்தை யும் விடமுடியாது. பிரீத்தியையும் விடமுடியாது.' என்றான். 'நீ உண்மையான விசர்' என்று பிரஞ்சில் அவள் சொன்னாள்.

'நான் போய் சாகப்போகிறேன்': என்று இருக்கையைவிட்டு அவன் எழுந்தான். பெரியவர்கள் நடுங்கிப்போனார்கள். குணத்தார் தன் உடலை அவன்மீது மோதி அணைத்து' 'வாடாமேனை' என்று தன் னருகில் அமர்த்தினார்.

பின்பு முறையே ஹரிசாந்தின் அம்மா, அப்பா மாறிமாறி புத்திமதி கூறினர். போதாக்குறைக்கு பிரீத்தியின் அப்பா, அம்மாவும் அவ னுக்கு புத்திமதி கூறினர்.

சற்றுநேரம் சபை அமைதிபேணியது. ஹரிசாந் மீண்டும் 'நான் சாகப்போறன் என்று கிளம்பினான்' பாய்ந்தெழுந்த அவன் அக்கா அவன் கன்னத்தில் அறைந்து 'போடா போய் சாவு' என்றுவிட்டு பிரெஞ்சில் மோசமாகத்திட்டினாள். அதில் கெட்டவார்த்தைகள் வந் துபோனது. அவள் களைத்துப்போய் பிரீத்தியின் அருகே சென்று அமர்ந்தாள். ஹரிசாந் மீண்டும் பெருமூச்சொன்றை வெளியிட்டு அமர்ந்தான். அவன் சாகப்போகவில்லை.

சபை முடிவெடுக்கமுடியாத முட்டுச்சந்தில் வந்துநின்றது. இப்படி யான தருணத்தை வென்றெடுக்கும் கேள்விகளை கேட்பவர்கள் சபையை தலைமை தாங்கத்தகுதி உள்ளவர்கள். அதை உறுதிப் படுத்தும்படி குணராசா மாமா...

'தம்பி, இரவில் எங்கும் தங்கக்கூடாது! வீட்டிலே இரவில் இருக்க வேண்டும்! என்ற உன் கட்டளை உனக்கு பிள்ளையில் நம்பிக்கை இல்லை என்பதைத்தான் கூறுகிறது? பிள்ளையிடம் நம்பிக்கை இல்லாமல் எப்படி வாழ்வது? என்றார்.

ஹரிசாந் அவளின் முகத்தையே பார்த்தவாறு இருந்தான். அவ னுக்கு வேறு வழி தெரியவில்லை. காரணங்களை ஒவ்வொன்றாக கூறினான். அவை வார்த்தையில்கூட தணிக்கையில்லாத பிரீத்தி சர்வதேச ரீதியில் உறவுவைத்த அவளின் கடந்தகால ஐந்து ஓ கதைகள்.

அதன்பிறகு அங்கு யாரும் பேசவில்லை. குணத்தார் கைவிரல் களை ஒன்று.. இரண்டு.. என்று ஆறுவிரல்களை தொட்டு எண்ணிப் பார்த்தார். பிரீத்தியின் அப்பா அந்த இடத்தைவிட்டு எழுந்து சென்றார். பிரீத்தியின் அம்மாவின் முகம் இருண்டு மழை வந்து விட்டிருந்தது.

குணராசா மாமா தன் மீசையை தடவியபடி 'பிள்ளை நீ நல்லா படிச்சு உயர்ந்த தொழில் பார்க்கிறாய். முடிவாய் சொல்லு ஹரி சாந்துடன் வாழ்கிறாயா? என்றார்.

பிரீத்தி 'ஓம்!' என்றாள்.

அந்தமுடிவு அவள் மெத்தப்படித்த 'சர்வதேச உறவுக்கு' எதிராக அவளே போட்ட ஆயுள் சிறை.



akaran@thaiveedu.com


BUYERS
If Yathavann Doesn't Negotiate at Least
$10,000 Off The List Price,
He'll Give You $2000
Cash on Closing.
FREE Home Inspection When You Buy With Us.
Sellers
Your Home SOLD in 60 Days
Guaranteed!
OR I'LL SELL IT FOR FREE**
**SOME CONDITIONS MAY APPLY
For More Information On My
Exclusive Guaranteed Sales Program
ORDER A FREE REPORT BY VISITING
WWW.HOUZZVALUE.CA
Free Home Evaluation.
No Cost. No Obligations
RE/MAX
Crossroads Realty Brokerage Inc.
Independently Owned & Operated
Off:416.491.4002
YATHAVANN
SELVARAJAH
Sales Representative
416-992-4474


BUYING OR SELLING
Residential, Commercial, Land & Investment Properties
For Sellers:
Free Market Evaluation Available
Competitive Commission Packages Available
Will pay for Staging & Condition
WIll pay the Professional Photographer
Virtual Tour
Color Brochure
Will do open house until house get sold
Will market your home with social medias
SATHY & NITHY REAL ESTATE TEAM
For Buyers:
Will find the home in any area within your budget
Get you the lowest mortgage. rate
NITHY SATHYAKUMAR
Sales Representative
Dir: 416.728.2454
Email: realtornithy@gmail.com
SATHY SIVASUBRAMANIAM
Broker
Dir: 416.624.5044
Email: realtorsathy@gmail.com
16th Avenue / 9th Line $1,550
FOR LEASE BEDROOMS:2 WASHROOMS:1
Morningside / Finch $1,200
FOR LEASE BEDROOMS:1+1 WASHROOMS:1
Pharmacy Ave/Lawrence Ave $1,600
FOR LEASE BEDROOMS:3 WASHROOMS:1
Victoria Park / Ellesmere $2,000
FOR LEASE BEDROOMS:2 WASHROOMS:1
Rossland/Wilson $599,900
FOR SALE BEDROOMS:3+2 WASHROOMS:2
Crowder Blvd / Leslie St $549,900
FOR SALE BEDROOMS:3+1 WASHROOMS:2
Simcoe/Britannia $509,000
FOR SALE BEDROOMS:4 WASHROOMS:3
Yonge/Front $659,000
FOR SALE BEDROOMS:1+1 WASHROOMS:1
King/Blue Jays $699,000
FOR SALE BEDROOMS:1 WASHROOMS:1
Lawrence Ave E/Orton Park $699,000
FOR SALE BEDROOMS:3+1 WASHROOMS:3
Finch / Victoria Park $759,000
FOR SALE BEDROOMS:3 WASHROOMS:2
Hoover Park/Tenth Line $769,900
FOR SALE BEDROOMS:3+1 WASHROOMS:3
Brock/Hwy 2 $799,000
FOR SALE BEDROOMS:3 WASHROOMS:4
Dufferin/Summeridge $889,000
FOR SALE BEDROOMS:3 WASHROOMS:4
Markham/Sheppard $799,000
FOR SALE BEDROOMS:4+2 WASHROOMS:3
Pharmacy/N.Eglinton $838,000
FOR SALE BEDROOMS:3+2 WASHROOMS:2
RE/MAX
Remax Realtron Realty Inc., Brokerage
Independently Owned And Operated
Bus: 905 470 9800
Web: realtorsathy.com



# வீடு வாங்க விற்க...

**18 வருட வீட்டுப்பரிசோதனை அனுபவத்துடன்**

## வீட்டுப் பரிசோதகர் வீடு விற்பனை முகவரானால்...

| **வாங்கப் போகிறீர்களா?** | **விற்கப் போகிறீர்களா?** |
|---|---|
| ☞ தரமான வீடு தவறிப்போகாது | ☞ இலவச வீட்டுப் பரிசோதனையும் ஆலோசனைகளும் |
| ☞ பிடித்த வீடு மலிவாய் கிடைக்கும் | ☞ விற்றபின் வரும் தடங்கல்கள் தவிர்ப்பு |
| ☞ வாங்கியபின் ஏமாற்றங்கள் இல்லை | ☞ சந்தை விலைக்குக் குறையாத பெறுமதி |
| ☞ பெருவருவாய் தரும் முதலீடு | ☞ உச்சப் பெறுமதிக்கான உபாயங்கள் |




**Best Choice**
**4 BR+ 3 WR**
**Fully upgraded**

www.vela4homes.com

$ Cash
incentive
for referrals







**Bungalow**
3 +2 BR
2.5 WR
Separate Ent.
Legal apartment
Best Location




**Best investment**

3+2 Bedrooms, 1+1 Kitchen
4 WR + Walkout Bsmt
Fully Renovated
Separate Entrance
Dual Units (city approved)




**Estate Home**

Deer Creek
Over 9,000 Sft,
Fully Renovated
1.45 Acre




**Bungalow**
3 +1 BR
2 WR
Separate Ent.
Legal apartment
Best Location

HOMELIFE HIGHER STANDARDS — HomeLife/Future Realty Inc. Brokerage — GRAND MASTER CLUB 2021

Chairman's Club Award Winner 2015

Chairman's Club Award Winner 2017

Chairman's Club Award Winner 2016

HOMELIFE HIGHER STANDARDS

## Vela Subramaniam

Experienced Home Inspector
Sales Representative

Dir: **416-786-0760**
**info@vela4homes.com**
**www.vela4homes.com**

**Homelife/Future Realty Inc.** Brokerage
Independently Owned and Opereated
Bus: 416-264-0101 Fax: 905-201-9229
205-7 Eastvale Dr., Markham, ON L3S 4N8




1ST MORTGAGE SPECIALS
5 Year Variable 2.35%
5 Year Fixed 3.24%
*Some Conditions Applied, Please Call For More Details
2ND MORTGAGE SPECIALS
Up To 80% in GTA. 75% on other major cities.
No Income Verification.
No Minimum Credit Score.
Quick Closing
Rates from 7.99% to 12.99%
BonaFide Mortgage Solutions Inc.
the true freedom...
Brokerage Lic# 10216
TD Canada Trust
Scotiabank
STREET CAPITAL
FIRST NATIONAL FINANCIAL LP
MCAP
ICICI Bank
MERIX
Suren Nathan AMP
Mortgage Broker
License# M08004479
Dir. 416-436-1111
Office. 416-548-7475 Fax: 416-548-7496
suren@bonafidemortgage.ca,
7 Eastvale Drive,Unit 203, Markham, ON, L3S 4N8
-digi Media Creations-


FOR SALE/ LEASE
FOR ALL YOUR REAL ESTATE NEEDS
கனவு இல்லம்
கைகளில் வர...
உங்கள் வீடு விற்பனை முகவர்...
#1
RE/MAX
Outstanding Agent
for Outstanding Results.
RE/MAX
Excel Realty Ltd., Brokerage
Bus: 905.475.4750 Fax: 905.475.4770 50 Acadia Ave. Suite 120, Markham, ON L3R 0B3
RAJ NADARAJAH
SALES REPRESENTATIVE
DIR: 416.333.6115
nanohomes@gmail.com

# கடன் தொல்லையா?




பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

**Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ் இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்**

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

## Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive
Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**
Cell: **416.450.5011**
Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com






BRING YOUR PARENTS AND GRANDPARENTS WORRY FREE

Visit your one stop solution center
for all your super visa insurance needs...

SuperVisa.Today

www.supervisa.today #416 321 6000


BUY OR SELL
PYRAMID GROUP
REAL ESTATE PROFESSIONALS
www.pyramidgroup.com
POWER BROTHERS REAL ESTATE
UTHAYAN SIVARAJAH BROKER 416.301.5555
RAJ SIVARAJAH BROKER 416.843.3333
KUMAR SIVARAJAH SALES REPRESENTATIVE 416.453.7777
@uthayansivarajah @uthayansivarajah
ROYAL LEPAGE ignite Realty, Brokerage
795 Milner Avenue, Toronto, ON M1B 3C3
Office: 416-282-3333 | Fax: 416-272-3333
INDEPENDENTLY OWNED AND OPERATED
INTEGRITY | KNOWLEDGE | SUCCESS | TEAMWORK

# மோட்கேஜ்

புதிய, முதல் தரம் வீடு வாங்குவோருக்கான மோட்கேஜ்.
1ஆம், 2ஆம், 3ஆம், Bridge, Private மோட்கேஜ்
சுய தொழில் புரிவோருக்கான மோட்கேஜ்
பழுதடைந்த கிரடிற் உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கான மோட்கேஜ்



# MORTGAGE NESAN 416-908-5656

## Residential / Commercial / Industrial / Investment Properties

1st, 2nd and 3rd Mortgages · Refinance · Secured Line of Credit · New House Commitment, Pre-approval · Home Equity Loan

### 1st Mortgage ('A' lender) Majaor, Under write Banks

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 698,000 | 659.62 | 1319.25 | 1429.19 | 2858.37 |
| 546,000 | 515.98 | 1031.96 | 1117.96 | 2235.92 |

### 1st Mortgage ('B' lender) Under write Banks, Trust, Cridit Union

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 698,000 | 765.04 | 1530.08 | 1657.59 | 3315.17 |
| 546,000 | 598.44 | 1196.88 | 1296.62 | 2593.24 |

### Private Mortgage ('C' lender) Private lender

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 698,000 | 1059.81 | 2119.62 | 2296.26 | 4592.52 |

### 2nd Mortgage ('D' lender) Private lender

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 98,000 | 179.15 | 358.29 | 388.15 | 776.30 |

### 3rd Mortgage ('E' lender) Private lender

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 49,000 | 113.72 | 227.43 | 246.39 | 492.77 |

### Secure Line of Credit & Loan

| Mortgage Amount | Secure Line of Credit | Home Equity Loan |
|---|---|---|
| 225,000 | 1005.95 / per month | 1276.51 / per month |


MORTGAGE ALLIANCE
Thavanesan Subra
Independently Owned and Operated
Brokerage # 10530

1585 Markham Rd, Unit # 407,
Toronto, ON. M1B 2W1
www. nesan.ca
mortgage@nesan.ca

SUBRA MORTGAGE SOLUTIONS INC.
Office: 1-844-878-2721
Fax: 647-351-3099


LIFE, HEALTH & TRAVEL INSURANCE
InforceLife™
Sutharshan Sirinivasan
Advisor
416-854-6768
10 Milner Business Ct. Unit-707 | Scarborough


Finding Homes to Fit Your Lifestyle
Suba Aynkharan
Broker
Cell: 416-722-4444
E-mail: suba_ay@hotmail.com
1265 Morningside Ave, Suite 203
Toronto, ON M1B 3V9
Tel: 416-287-2222
Fax: 416-282-4488
RE/MAX COMMUNITY REALTY INC., Brokerage
Each Office Independently Owned and Operated


NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law


சொர்க்கமே என்றாலும் அது சொந்த வீடு போல வருமா...
Uthayan Alex Sivasambu B.Sc. (Hons), M.B.A
Broker
Ottawa: 613.276.SALE (7253)
Toronto: 416.659.SELL (7355)
alex-sivasambu@coldwellbanker.ca, www.sivasamburealty.com
COLDWELL BANKER


பிராணஜீவ
சர்வ ரோக நிவாரணி
200 வருடங்களுக்கு மேலான மரபார்ந்த மூலிகை மருந்து. இதய வியாதிகள், சலரோகம், உயர் இரத்த அழுத்தம், புற்றுநோய் போன்ற வியாதிகளுக்கான நிவாரணியாகவுள்ளது.
Pranajeewa is a traditional herbal medicine that has passed down from generation to generation. It is over 200 years old and is a proven cure for many kinds of diseases including Heart disease, Diabetes, hypertension, Cholesterol and Cancer. Sethsuwa Pranajeewa's miraculous properties has made it the ideal cure for a multitude of other ailments and conditions, known among them are paralysis, Asthma, Catarrh, Skin diseases.
எலும்பு, மூட்டு ஆரோக்கியத்திற்கு!!
NanoCal is a supplement that has been approved by the US FDA as a CURE for osteoporosis and osteoarthritis.
NanoCal can actually reverse and cure these conditions!
NANOCAL
Ervamatin Hair Lotion
The ERVAMATIN™
முடி உதிர்வை தடுப்பதுடன் புதிய முடி வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கிறது. கபாலத்தில் பொடுகைப் போக்குவதுடன் முடியை செழிப்பாக வைத்திருக்க எவமாட்டின் மூலிகைக் கலவை உதவுகிறது.
jayacs • 416-275-0070
Amazon Organic Shampoo is for all hair types is rich yet mild, cleans well and leaves hair full bodied lustrous and manageable. முடி உதிர்வை தடுப்பதுடன் புதிய முடி வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கிறது.
மூலிகைகள் கொண்டு தயாரிக்கப்பட்ட தலைமுடி மை.
Dreamron Semi-Permanent Eco Hair Color is the newest innovation that is specially formulated for the people who are allergic to normal oxidative hair colorants which contain PPD & Ammonia. This is a gentle blend of unique herbal powders with HC colorants.
Turmeric & Sandalwood Day Cream
Turmeric & Sandalwood Day Cream Whiter and Beautiful Skin.Protects the skin year round from the elements Prevents pimples and acne Removes blemishes and evens skin tone. Brightens skin Works as an antiseptic.
சருமத்தை பாதுகாப்பாகவும் பொலிவாகவும் பேண நம் மூதாதையர் பாரம்பரியமாக பயன்படுத்திய கஸ்தூரி மஞ்சள் கொண்டு தயாரிக்கப்பட்ட முக சரும பராமரிப்பு!!
Kasturi
SABONA & Gift
2466, Eglinton Ave East Unit 12A (@ Midland) Scarborough, ON. www.sabona.ca 416•264•8787


அரிய சந்தர்ப்பத்தைத் தவற விடாதீர்கள்!
முற்றிலும் இலவசமான சேவை!
12வருடத்திற்கு மேற்பட்ட
உங்கள் Gas Furnace இற்கான CO அளவீடு
வீட்டிற்கு வந்து பரிசோதிக்கப்படும்.
AATEK
$2100 Rebate Available Now
call us 416-414-2280
FREE Inspection in GTA
Over 10 yrs in Business Experience
Flat Rate Pricing
Parts and Labour guarantee
Guaranteed Repairs
Professional Service
Fully Insured
Gas Furnaces, Air Conditioners,
Thankless Water Heater, Gas line install
10 வருடங்களுக்கு மேலாக ஒராண்டோவின் முன்னணி நிறுவனங்களில் பணியாற்றிய அனுபவத்துடன்
ELENGO THIYAGARAJAH
ALL MAJOR APPLIANCES E : aatekcanada@gmail.com
We Are Specialists in customs homes Ductwork System
We Are Professional trouble shooters for all major gas appliances
416.414.2280


Buy, Sell Invest
RE/ON
Homes Realty Inc.
Brokerage
Gnani & Judy
Real Estate
www.reongtahomes.com
www.reongtacondos.com
Judy
Gnanendra
Gnanendran
Realtor
416.629.9797
(905) 209 8080
25 KARACHI DR, UNIT #15
MARKHAM, ON L3S 0B5
Narasinghan
Realtor
416.937.809


OUR FREE SERVICES
WHY? REALTOR KATHIR
For Home Owners
Home Staging
Newspaper & Flyer Advertisement
High Resolution Picture & Virtual Tour
Four Page Colour Feature Sheets
Weekends Open House
Guaranteed Weekly Feedback
Social Media Marketing
Full MLS Listing Service
Sale Sign & Direction Signs
Market Evaluation
Radio & Web Tool Advertisement
Professional & Friendly Service
LOW Commission
Over 10 yrs Experience Realtor
Multi Award Winner Since 2006
Excellent Negotiation Skill
Quick Sale with Low Commission
Professional & Friendly Services
Home Sellers' Programme
Home Buyers' Programme
Mortgage Brokers, Lawyers, Inspector Team.
Getting Low Rate Mortgage
SELL WITH KATHIR
& GET MAX. PRICE
Buy with Kathir & Get Dream Home
HomeLife/Future Realty Inc.,
Brokerage
O: (905)201-9977 F: (905)201-9229
205-7 Eastvale Dr., Markham,Ont, L3S 4N8
Kathir Kathirgamanathan B.A.
Real Estate Broker
Dir: 416-230-6462


Ceycan Transhipping Inc.
INTERNATIONAL FORWARDING LOGISTICS
EXCLUSIVE SOLE AGENTS FOR CEYLON SHIPPING LINES IN CANADA
REGULAR PERSONAL EFFECTS SHIPMENTS BY SEA & AIR TO SRI LANKA
OUR AGENTS ACROSS CANADA
For Shipping Schedule Visit
www.ceycantranship.com
For further information contact
Kumar (905) 673-9873
SRI LANKA'S BEST CLEARING FACILITIES
COLOMBO
KANDY
BATTICALOA
United Kingdom :
Atlas Shipping 430 High Rd
Willesden London NW10 2HA
1981 Boylen Road, Unit #5, Mississauga, Ontario L5S 1R9
sales@ceycantranship.com web: ceycantranship.com


Bringing Your Dreams To Life!
மனையும் மனை சார்ந்த நிலமும்
மகிழ்வுற மக்கள் பெற்று விற்றிடவும்
மனமுறப் பணிவதே மகேசனின் பணி
RE/MAX
REAL ESTATE CENTRE INC. BROKERAGE
INDEPENDENTLY OWNED AND OPERATED
Mahesan Subramaniam
BROKER
Free Home Evaluation with No Obligation
416-816-0141
141-1140 Burnhamthorpe Road West, Mississauga, ON L5C 4E9
Office : 905-270-2000 Fax : 905-270-0047
* Not intended to solicit properties already listed for sale, or buyers under contract.


Daniels FirstHome at Markham & Sheppard
Starting from $299,000
OPENING ON NOVEMBER 6TH
ஒரு வீட்டை வாங்க விரும்புகிறீர்களா?
CONTACT ME FOR
REGISTRATION & MORE INFO
416-556-4881
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife/Champions Realty Inc, Brokerage*
Office :416-281-8090
E-mail: raveenvi@gmail.com
RAVEEN
VINAYAKAMOORTHY
SALES REPRESENTATIVE


Allstate.
You're in good hands.
உங்களுக்கு சேமிக்க உதவும்
தள்ளுபடிகள் பற்றி என்னிடம் கேளுங்கள்
தனிப்பட்ட சேவைக்கும் ஆலோசனைக்கும்
என்னைத் தொடர்பு கொள்ளுங்கள்
Raji Linghan
Ajax Agency
15 Westney Road, N
(289) 275-8795
rlinghan@allstate.ca
பயணக் காப்புறுதி
கனடாவுக்கு வருபவர்களுக்கான காப்புறுதி
செல்லப் பிராணிக் காப்புறுதி
ஆயுள் காப்புறுதி
முதலீடுகள் மற்றும் நிதித் திட்டமிடல்


வீடு வியாபாரம் காணி வாங்க விற்க அழையுங்கள்!
BUY & SELL HOMES, BUSINESSES, LAND & MORE!
REAL ESTATE HALL OF FAMER
PAT PUSHPAKANTHAN
FULL-TIME BROKER | 20 YEARS OF EXPERIENCE
416-894-1187
WWW.PATPUSH.COM
FREE BUY & SELL DEALS*
FREE STAGING*
FREE HOME MARKET ANALYSIS
NEW CONDO VVIP PRIORITY ACCESS
FREE HOME INSPECTION*
FREE HOME SELLING SERVICES*
FREE INVESTMENT STRATAGIES CONSUTING*
RESIDENTIAL & COMMERCIAL RENTAL SERVICES &
PROPERTY MANAGEMENT SERVICES AVAILABLE *
COMMITMENT | RELIABILITY | PROFESSIONALISM
CENTURY 21 Century21 Affiliate Realty Inc.
The dependable realtor you've been looking for.
nhome2025@gmail.com


NO MEDICAL
UP TO $500,000
$0 first month's premium
No medical exams
Simple and straightforward
18-80 years can apply
MEDICAL INUSRANCE FOR
SUPER VISA
100%
REFUND IF VISA DENIED
Sritharan Thurairajah
Chartered Life Underwriter, Certified Health Insurance Specialist
Direct: 416.918.9771
Business: 416.321.2500
MDRT
Member of Million Dollar Round Table
Life100
INSURANCE & INVESTMENTS INC.
10 Milner Business Court, Suite 208, Scarborough, ON M1B 3C6
Web: www.life100.ca, E-mail: info@life100.ca
LaCapitale
iA Financial Group
Are you getting Million Dollar advice


Residential Mortgages | Commercial Business Loans | 1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation | No Down Payment Confirmation
Call me more details...
வீட்டுக்கடன்
வியாபாரக்கடன்
முதலீட்டுக்கடன்
வருமான உத்தரவாதம்
இல்லாமலே
பெற்றுக் கொடுக்கப்படும்
கடன் தேவையா?
என்னை அழையுங்கள்
ரம்போ தர்மலிங்கம்
KAPITAL CARE
MORTGAGE INC.
Rambo
Tharmalingam
Mortgage Agent
5200 Finch Ave. E. Unit 306, Scarborough, ON. M1S 4Z5
647-290-3416 / 416-543-1111


Call Me First and Say "YES"
to Get Your Dream Home at a
Dream Rate!
For all your Mortgage needs
சகல Mortgage தேவைகளுக்கும்
தமிழில் உரையாட என்னை அழையுங்கள்
Peter Sober
Manager, Mobile Mortgage Specialist
Paragon Sales Award
Dir: 416-275-3571
Pager: 1-866-767-5446 | Fax: 905-240-3882
Email: peter.sober@td.com
Your Smile Is My Best Return!
Purchase, Pre-Approvals, Refinances, Renewals and Switch, Builder Purchase, Home Line Of Credit, Self Employed, New Immigrants, Multi Rental Properties.
2019 Platinum Sales Award "Top 70 in the country"
2018 Gold Sales Award "Top 100 in the country"
2017 Paragon Sales Award "top 35 in the country"
2016 Gold Sales Award
2015 Platinum Sales Award
2014 Gold Sales Award
TD
Banking can be this comfortable.
Five Branch Locations to serve you better
Scarborough, Markham, Ajax, Brampton & Mississauga


நியூ
ரங்கனாஸ் நகைமாடம்
சிங்கப்பூர் நகைகளை மிகக் குறைவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்
பழைய தங்க நகைகள் அதிகூடிய விலைக்கு வாங்கப்படும்
தங்க நகை அடகு சேவை குறைந்த வட்டி வீதம்
புதிய தங்க நகை சேமிப்பு திட்டம் ஆரம்பம்
647-702-2159
MARKHAM & STEELES
YELLOW BUILING
6055 STEELES AVE ESCARBOROUGH, ON M1V 5P6


COMMITTED TO EXCELLENCE
Call me now to get your HOME SOLD 416-725-7284
CENTURY 21.
Percy Fulton Ltd.
Ravi Kana
Broker
Cell 416.725.7284 (RAVI)
ravikana33@gmail.com
www.ravikana.com
2911 Kennedy Rd. Toronto, ON M1V 1S8 Office 416.298.8200


"Serving With Dignity,
Compassion and Excellence"
WELL GUARD INSURANCE
220 Commerce Valley Dr W Suite 480,
Thornhill, ON L3T 0A8
LOTUS
Funeral and Cremation Centre Inc.
121 City View Dr, Etobicoke,
ON M9W 5A8.
Patricia Peter BBM
Licenced Funeral Preplanning Director & After Care Advisor
Licenced Insurance & Investment Advisor
Direct: 416-834 5753
Email: advisorpat10@gmail.com


Residential Mortgages | Commercial Business Loans
1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation
Call us more details...
KAPITAL CARE
MORTGAGE INC. Lic#12623
Rambo
Tharmalingam
Mortgage Agent
647-290-3416
Kethes
Sivasubramaniyam
Mortgage Agent
416-873-5780
5200 Finch Ave. East, Unit 306, Toronto, ON. M1S 4Z5


DEVADAS LAW
PROFESSIONAL CORPORATION
Real Estate
HST
Tax Law
Family law
Immigration
Business law
Employment Law
Estate Planning and Last Wills
Vasuki Devadas
Barrister, Solicitor & Notary Public
vasuki@vdlaw.ca
Vinayagamoorthy Devadas CPA, CMA, MBA
Barrister & Solicitor
devadas@vdlaw.ca
1415 Kennedy Road, Unit 3 | Toronto, Ontario | M1P 2L6
Tel: (416) 266-1234 | Fax: (416) 266-2000 | www.vdlaw.ca
Contacting us should be easy as 1,2,3,4 Just remember "266"

NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law

RAMAN HOME COMFORT INC
HEATING
Quality Products, Certified Technicians, Reliable Service & Reasonable Prices
எமக்கூடாக Furnace வாங்கும்போது ஒன்ராரியோ அரசு வழங்கும் Rebateஐப் பெற்றுக்கொள்ளலாம்
SAVE $2000 WHEN PURCHASING A NEW HIGH-EFFICIENCY FURNACE
LENNOX
Raman Chelliah
Sales Person
647-893-4414
Tel: 416-332-2989
Email: info@ramanhomecomfort.com
Scarborough : C105-6055 Steeles Ave. East, Scarborough, ON M1X0A7

15 years of Success
500+ Agents
Selva Vettyvel
Broker of Record
HomeLife/Future Realty Inc., Brokerage
416.568.4301
VettyvelLaw
Professional Corporation
Rishani Vettyvel
BARRISTER AND SOLICITOR
BBA, LLB, LLM
Real Estate Law
416.261.1544

AEREN Thiyagarajah BEng
Realtor
aeren.realtor@gmail.com
Dir: 647-888 3500
DILEEP Thangavel
Realtor
dileep.realtor@gmail.com
Dir: 416-666 2300
BUS: 905 201 9977 | FAX: 905 201 9229
HomeLife/ Future Realty Inc., Brokerage
Independently Owned And Operated
205 - 7 Eastvale Drive, Markham, ON L3S 4N8

அனைத்து மோட்கேஜ் தேவைகளுக்கும்
BonaFide Mortgage Solutions Inc.
Brokerage Lic# 10216
Suren Nathan AMP
Mortgage Broker
License# M08004479
Dir. 416-436-1111
Office. 416-548-7475 Fax: 416-548-7496
suren@bonafidemortgage.ca, 7 Eastvale Drive,Unit 203, Markham, ON, L3S 4N8

ALL YOUR REAL ESTATE & MORTGAGE NEEDS
வீடு என்பது தொடுவானம் அல்ல
கலங்கரை விளக்கு...
Thana Yoganathan
Sales Representative
416.418.5749 www.thanahomes.com
HOMELIFE LANDMARK REALTY INC.BROKERAGE* OFFICE: 905-305-1600

வீடு வியாபார நிலையம்
வாங்க விற்க
HomeLife Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6
Bus: 416-298-3200, Fax: 416-298-3440,
E-mail: kuna@kunahomes.ca
*Independently Owned and Operated.
Kuna Nagalingam
Sales Representative
Sujatha Kunasegar
Sales Representative
416.402.4545

RL RAMACHANDRAN LAW
PROFESSIONAL CORPORATION
CIVIL LITIGATION
REAL ESTATE
FAMILY
CORPORATE
EMPLOYMENT
WILLS & ESTATE
VITHU RAMACHANDRAN
J.D., B.Com (Honours)
Barrister & Solicitor
416-902-8225
VITHU@RAMACHANDRAN.LAW | FAX: 416-391-6056

Ahilan Thanabalasingham
Sales Representative
416.617.1767
RE/MAX Royal Properties Realty Ltd., Brokerage
Office: 905.471.0002
7595 Markham Road, Unit 19 Markham, ON L3S 0B6

UTHAYAN SIVARAJAH
416.301.5555
SUGAN SIVARAJAH 416.890.9999
RAJ SIVARAJAH 416.843.3333
SIVAKUMAR SIVARAJAH 416.453.7777
ROYAL LEPAGE ignite
795 Milner Avenue, Toronto, ON M1B 3C3
PYRAMID GROUP
REAL ESTATE PROFESSIONALS

LIFEPLAN INVESTMENTS
Ahilan Balachandran, CFP, CLU, CHS, EPC
Founder and CEO
WE CAN HELP BUILD YOUR FUTURE
Insurance • Investments • Tax and Estate Planning
905-294-PLAN (7526)
www.lifeplaninvestments.ca
416-894-2009
Download Free
MyLIFEPLAN App
App Store
Google Play

Your Lifelong Realtor
Nanda Kandasamy
Broker
DIR: 416 457 4509
OFF: 416 270 1111
nandakandasamy@gmail.com
RE/MAX ACE REALTY INC., BROKERAGE

Mega Financial Group
உங்கள் அனைத்து விதமான காப்புறுதித் தேவைகளுக்கும்.
Call Now
Raj Nadarajah
416-666-1120

நீங்கள் வீடு வாங்கும்போது
$8475⁰⁰
வரை அரச வரிச்சலுகை
பெற்றுக்கொள்ள தகுதியானவரா?
விபரங்களுக்கு 416-888-9492
Swapna Chari, Broker HomeLife Galaxy Realestate Brokerage, Ltd.
301-111 Grangeway Ave, Toronto, Ontario, M1H 3E9 tel: 416-284-5555

Rathiga Thillaivannan BCom
Sales Representative
Buying / Selling/ Leasing/ Investing
Dir: 647.839.0079
rathiga24@hotmail.com
Homelife/Future Realty Inc,Brokerage*
Bus: 905.201.9977 Fax: 905.201.9229
205-7 Eastvale Dr, Markham ON. L3S 4N8
*Independently owned And Operated

GAJAN
MAHAKANAPATHY
416.999.2777
RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
Realtorgajan.com
905.239.9222 info@realtorgajan.com

Sri Vallipuranathar
Certified Insolvency & Bankruptcy Counsellor
CSC Credit Solution Centre
309-80 Corporate Drive
Scarborough, ON M1H 3G5
Tel: 416.439.0224
Cell: 416.450.5011
Fax: 416.439.0226
www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com

Vaheesan Jeyaveerasingam
Sales Representative
Re/Max Ace Realty Inc. Brokerage
3-1286 Kennedy Road, Scarborough, Ontario. M1P2L5
Dir:
Bus:416-270-1111 | Fax:416-270-7000
www.vaheesanrealtor.com.
Email:gvaheesan@hotmail.com
RE/MAX ACE REALTY INC., BROKERAGE

BUY / SELL / INVEST
Please Contact
RAVI PARAMU
Broker
Dir : 416-262-4176
Bus : 416-298-3200
rparamu1558@gmail.com
HomeLife Today Realty Ltd., Brokerage* 31 Progress Ave, Suite 210,Toronto ON, M1P 4S6

NOW HIRING
JOIN OUR DYNAMIC TEAM
iNFORCE LIFe Financial Services Inc.
10 Milner Business Court, Suite 707
Scarborough, ON M1B 3C6
Dir: 416-909-0400 Bus: 416-321-6000 x400
career@inforcelife.com www.inforcelife.com
QUALITY ADVICE YOU CAN TRUST
CHANDRAN RASALINGAM CHS
President & CEO

Tharma Iyathurai
Sales Representative
HomeLife/GTA Realty Inc., Brokerage*
5215 Finch Ave. E., Suite: 203
Toronto, Ontario
Cell: 416 505 8532
Office: 416 321 6969
Fax: 416 321 6963
tharma11@yahoo.com
5215 Finch Ave. E., Suite: 203, Toronto, Ontario

DR. YALINI ARAVINTHAN BDS. DDS.
DENTIST
YA Smiles Dental Clinic
ALL YOUR DENTAL NEEDS...
CALL US: 905-554-5524
7475 MCCOWAN RD, MARKHAM, ON L3S 3J6 WWW.YASMILES.CA

உலகின் முன்னணி காணி,
வீடு விற்பனை நிறுவனமான
RE/MAX முதல் தடவையாக
யாழ் மண்ணில்
RE/MAX NORTH REALTY
077 566 0000
www.remaxnorth.lk
info@remaxnorth.lk
83 Kannathiddy Road, Jaffna
LATHAN VARATHARAJAH
Broker Owner
+94 76 493 3331
+1 416 230 7007
lathan@remaxnorth.lk